# சோவியத் பொருளாதார வளர்ச்சி

SOVIET ECONOMIC DEVELOPMENT

எம்.ஜே.கே.தவராஜ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவ

த. பா. நி. (க. வெ.) வரிசை. எண் —2

# சோவியத் பொருளாதார வளர்ச்சி

டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், எம்.ஏ., பிஎச்.டி.,
நிதி நிருவாகப் பேராசிரியர்,

இந்தியப் பொதுத்துறை நிருவாக நிலையம்,
புது டெல்லி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1962
Second and Enlarged Edition—January, 1979
Number of Copies—2000

T.N.T.B.S.(C.P.) No. 2

© Government of Tamilnadu

# SOVIET ECONOMIC DEVELOPMENT

Dr. M. J. K. Thavaraj

*Price Rs. 4-80*

Published by the Tamilnadu Text-Book Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by

Sri Rajarajeswari Combines & Printers,
12, Badrian Street, Madras-600 001.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்விமொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டு கள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், மெய்ப்பொருளியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய பல துறைகளில் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **சோவியத் பொருளாதார வளர்ச்சி** என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளி யான **2** ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினு லும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத் தினுலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனை யாகி விட்டன. ஆதலின் இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளிவரு கிறது. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின் கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும். தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

# நூன்முகம்

தமிழ்நாட்டின் கல்லூரிகளில் தமிழன்னைக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டும் என்ற எனது கனவு நனவாவதைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன். அவளைக் கொலுவேற்றுவதில் எனக்கும் பங்கு அளித்த கல்லூரித் தமிழ்க் குழுவினருக்கு என் இதய பூர்வமான நன்றி உரியது.

இது முதல் நூலன்று. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட சிறந்த நூல்கள் பலவற்றைத் தழுவி எழுதப்பட்ட வழிநூல். குறிப்பாக, பேராசிரியர் மாரிஸ்டாப், பாய்காவ், ஸ்குவார்ட்ஸ் ஆகியோருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

சோவியத் சமுதாயத்தில் அரசியலும் பொருளாதாரமும் ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பது கண்கூடு. ஆதலின், அதன் பொருளாதாரத்தைப் பற்றி எழுதுபவர்களில் பலர் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஏதாவது ஒரு குறிப்பிட்ட கருத்தினைத் தழுவி, அந்தக் கண்ணோட்டத்தில் சோவியத் பொருளாதார வளர்ச்சியை ஆராய முன்வருவர். அத்தகைய உணர்ச்சிகளுக்கு ஆளாகாமல், கூடியவரை நடுநிலையில் நின்று சோவியத் பொருளாதார வளர்ச்சியை விளக்க முயலுவது இந் நூல். அதன் பொருட்டு, சோவியத் சமுதாயம் தன் முன்னால் வைத்துள்ள குறிக்கோள்கள் எவை? அவற்றை அடைவதற்கு என்னென்ன முறைகளைக் கையாண்டது? எத்துணை வெற்றி கண்டது? —என்னும் கேள்விகளை எழுப்பி அவற்றுக்கு விடை காண முயலுகிறது.

ஏனைய பொருளாதாரங்களில் காணப்படாத பல சிறப்பான அம்சங்கள் சோவியத் பொருளாதாரத்தில் உள்ளன. எனவே, முதன் முதலாக அதைப் பயிலுவோருக்குச் சோவியத் கொள்கைகளும்-கோட்பாடுகளும் சற்றுக் கடினமாகவே தோன்றும். ஆனால், கடினமான பொருளையும் எளிய நடையில் கவர்ச்சிகரமான வகையில் வெளியிட முடியும் என்ற நம்பிக்கையில் எழுதப்படுவது இந் நூல். பி. ஏ. மாணவர்களுக்கென்றே எழுதப்படுவதாயினும் எம். ஏ. மாணவர்களும் படித்துப் பயனடையத் தக்க பல அம்சங்களையும் இந் நூல் கொண்டுள்ளது.

இந் நூலை ஆக்கிய ஒவ்வொரு பருவத்திலும் எனக்குப் பக்க பலமாக இருந்து உதவிய எனது தங்கைக்கு எனது பாராட்டுகள் உரியன. பல்லாண்டுகளாகத் தமிழ்நாட்டுத் தொடர்பற்ற நிலையில் எழுதத் துணிந்த எனது தமிழைத் திருத்தி உதவி ஆலோசனைகள் தந்து உற்சாக மூட்டிய எனது நண்பர் திரு. சாலை இளந்திரையன் அவர்களுக்கு நான் பெரிதும் கடப் பாடுடையேன். அத்துடன் இந் நூலைச் சிறப்புடன் அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கம்பைன்ஸ் அண்டு பிரிண்டர்ஸ் அச்சகத்தாருக்கு எனது பாராட்டுகள் உரித்தாகுக.

**M. J. K. தவராஜ்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை ... | 3 |
| 2. | ரஷ்யாவின் வளம் ... | 8 |
| 3. | புரட்சிக்கு முந்திய பொருளாதாரத்தின் வரலாறு .. | 13 |
| 4. | போல்ஷவிக் புரட்சி ... | 44 |
| 5. | இடைக்காலப் பிரச்சினைகள் .. | 56 |
| 6. | புதுப் பொருளாதாரக் கொள்கை ... | 75 |
| 7. | முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் ... | 112 |
| 8. | சமதர்மத்தின் அடித்தளம் பலம்பெறுதல் ... | 133 |
| 9. | தாய்நாட்டுப் பாதுகாப்புக்கேற்ற பொருளாதார மாற்றம் ... | 150 |
| 10. | பொருளாதாரச் சீரமைப்பும் சமதர்மத்தின் இறுதி வெற்றியும் (1946–1958) ... | 164 |
| 11. | பொது உடைமைச்சமுதாயத்தை நோக்கிய பயணம் ... | 177 |
| 12. | திட்ட அமைப்பு முறை ... | 200 |
| 13. | தொழிற்சங்கங்கள் ... | 215 |
| 14. | உலகப் பொருளாதார உறவுகள் ... | 229 |
| 15. | முடிவுரை ... | 242 |
| | கலைச்சொற்கள் ... | 255 |
| | பொருட்குறிப்பகராதி ... | 263 |

# அட்டவணைகள்

பக்கம்

1. 1770-1860 வரை ரஷ்யாவிலுள்ள தொழிற்சாலைகளும் தொழிலாளரும் ... 33
2. குறிப்பிட்ட ஒரு சில ரஷ்யத் தொழில்களின் பொருள் உற்பத்தி (1860-1913) ... 38
3. அரசாங்கத்தின் வரவு செலவு ... 66
4. விவசாய உற்பத்தியும் விற்பனைக்குரிய உபரிப் பொருளும் ... 82
5. ஆலைகளும் ஆலைத் தொழிலாளரும் (1923) ... 85
6. ஆலைப் பொருள் உற்பத்தி ... 91
7. வெளிநாட்டு வாணிபம் ... 102
8. அரசாங்கத்தின் வரவு செலவு ... 108
9. நாட்டு வருவாயும் அரசாங்க வருவாயும் ... 110
10. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் ... 122
11. குறிப்பிட்ட சில பொருள்களின் உற்பத்தி வளர்ச்சி (1913-1940) ... 148
12. சோவியத் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் ... 161
13. குறிப்பிட்ட சில பொருள்களின் உற்பத்தி வளர்ச்சி (1940-1958) ... 171
14. பொது உடைமையை நோக்கிய பயணத்தில் சில மைல் கல்கள் ... 197
15. இந்தோ-சோவியத் வாணிபம் ... 236
16. இந்தியா சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களில் சில ... 238

**படங்கள் :**

1. இயற்கைப் பகுதிகள் ... 1
2. மூலப் பொருள்களும் தொழில் வளர்ச்சியும் ... 2
3. வரைபடம்: கத்தரிப்போக்கு ... 96




1. காஸ்பியன்
2. கருங்கடல்
3. கியவ்
4. மாஸ்கோ
5. வால்கா
6. யூரல்
7. ஒப்
8. லெனின்கிராட்
9. டாஷ்கெண்ட்
10. ஏனிசை
11. லேனு
12. வ்லாடிவாஸ்டாக்

## கனிப் பொருள்கள்




1. மாஸ்கோ
2. வால்கா
3. டோன்பாஸ்
4. லெனின்கிராட்
5. ஸ்டாலின்கிராட்
6. கஸாக் குடியரசு
7. உஸ்பெக் குடியரசு
8. டாஷ்கென்ட்
9. பால்டிக் ஏரி
10. கிர்கிஸ் குடியரசு
11. மக்னிடோ கோசைக்
12. இர்டுஷ்
13. நோவோசிபிர்ஸ்க்
14. ஆல்டாய் மலைகள்
15. ஏரல்
16. டோம்ஸ்க்
17. பாய்கால் ஏரி
18. யாகுட்ஸ்க்
19. லேனா
20. கருங்கடல்

# 1. முன்னுரை

'எழுந்தது பார் யுகப்புரட்சி' என்று பாடினர் மகாகவி பாரதி. 'ரஷ்யப் புரட்சியைப்' பற்றிய இந்த வருணனை எவ்வளவு பொருத்தமானது என்பது ரஷ்யப் பொருளாதார மாணவர்களுக்கு நன்கு விளங்கும். கி.பி. 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி எழுந்தது ரஷ்யப் புரட்சி.[1] புரட்சிக்கு முன்னர் ரஷ்யப் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தது. குறைந்த வருவாய்; பிற்போக்கான விவசாயம்; மிகப் பழைய உழவு முறை—ஆகவே மிகக் குறைந்த விவசாய உற்பத்தி. ஆனல் நிலத்தை நம்பி வாழும் மக்களுக்குக் குறைவில்லை; போதுமான தொழில் வளர்ச்சி இல்லாமையால் தேவைக்கு அதிகமான மக்கள் உழவையே நாடி நின்றனர். ஆலைகள் இருக்கத்தான் செய்தன; ஆசிய நாடுகளைப்போல் (ஜப்பான் நீங்கலாக) அவ்வளவு அவலநிலை இல்லை. துணி ஆலைகள் போன்ற ஒரு சில தொழில்கள் ஓரளவு வளர்ந்திருந்தன. ஆயினும் கனரகத் தொழில்கள் (heavy industries) வேரூன்றவில்லை. இருந்த ஓரிரு ஆலைகளும் இருப்புப் பாதை அமைக்கும் பணியிலேயே ஈடுபட்டிருந்தன. சுரங்கத் தொழில் ஒருவாறு வளர்ந்திருந்தது. அதுவும் நாடெங்கும் பரவி யிருக்கவில்லை. உக்ரெயினில் (Ukrain) 'டான்பாஸ்' (Donbas) பகுதியில் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. யூரல் (Urals) மலைத் தொடரின் கிழக்கே கொஞ்சம் பொன்னும் வெள்ளியும் கிடைத்தன. எனினும் அப் பகுதியில் ஆலைவளர்ச்சி என்பது அபூர்வமாயிருந்தது. ரஷ்ய விவசாயம் பெரும்பாலும் ஏற்றுமதியையே நம்பியிருந்தது. முக்கியத் தொழில்கள் பல அன்னியரின் பிடிப்பில் இருந்தன. அத்தியாவசியப் பொருள்கள் பலவும் வெளிநாடுகளிலிருந்தே இறக்கு மதியாக வேண்டியதிருந்தது. ஆகவே நிலத்தாலும், வளத்தாலும், மக்கள் தொகையாலும் பெருமைபெற்ற ரஷ்ய சாம்ராஜ்யம், பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரை மத்திய ஐரோப்பாவிலும், மேற்கு ஐரோப்பாவிலுமுள்ள சில நாடுகளைவிடப் பின்தங்கிய நிலையிலிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனல், அதே நாடு இன்று (சற்றேறக்குறைய 42 ஆண்டு களுக்குப் பின்னல்) சோவியத் ஆட்சியின்கீழ், வியக்கத்தக்க அளவு

1 பழைய முறைப்படி அக்டோபர் 20-லும், புதிய முறைப்படி நவம்பர் 8-லும் புரட்சி நடந்ததாகக் கூறப்படுகிறது.

முன்னேறியிருக்கிறது. விஞ்ஞானத்தின் துணையால் ரஷ்யாவின் பூகோளமே மாறிவிட்டது. வனுந்தரமாக வறண்டு போயிருந்த மத்திய ஆசியா இன்று பிரமாண்டமான நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் 'தண்ணீர்த் தடாகமாக' மாறிவருகிறது. 'நாடுகடத்தப்படும் கைதிகளே வாழத் தகுந்தது' என்று கருதப்பட்ட சைபீரியா (Siberia) இன்று புத்தம் புதிய ஆலைகளின் கேந்திரமாகத் திகழ்கிறது. அரும்பெரும் அணைகள் அமைப்பதும், கால்வாய்கள் வெட்டுவதும், ஆலைகளின் உயிர்நாடியான மாபெரும் மின்சாரத் திட்டங்களை மேற்கொள்வதும் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. நாகரிகமற்ற நாடோடிகளின் உறைவிடமாயிருந்த காசாக்ஸ்தான் (Kazakhstan), கிர்கிஸ்தான் (Kirghistan), துருக்கிஸ்தான் (Turkmenstan) போன்ற பகுதிகள் இன்று பொருளாதாரத்தில் உயர்ந்து நாகரிகத்தில் மேம்பட்டு வருகின்றன. விவசாயத்தை எடுத்துக்கொண்டால் நிலப்பிரபுத்துவமும், தனி உடைமையும் பழங்கதைகளாகி வருகின்றன; பதிலாக, கூட்டுப் பண்ணைகள் நாடெங்கணும் பரவிவிட்டன. 'பத்தாம் பசலி' உழவு முறைகள் போய் உழவு, விதைப்பு, அறுப்புப் போன்ற எல்லா வேலைகளையும் இயந்திரங்களே செய்கின்றன. 'உணவுப் பிரச்சினை முழுவதுமாகத் தீர்ந்துவிட்டது' என்று சொல்வதற்கில்லை. எனினும் கிராமங்களையும், விவசாயப் பண்ணைகளையும், சின்னஞ் சிறு தொழிற்சாலைகளாக மாற்றுவதன் மூலம் உணவுப் பிரச்சினைக்கு முடிவுகாண முனைந்துள்ளனர். ஆலைத்தொழிலின் அபிவிருத்திதான் மிகவும் ஆச்சரியகரமானது. 1913ஆம் ஆண்டோடு 1975ஆம் ஆண்டை ஒப்பிட்டுப் பார்ப்போமானல், ரஷ்யாவின் சாதனை தெற்றென விளங்கும். இந்தக் காலத்தில் ரஷ்யாவின் ஆலைப்பொருள் உற்பத்தி கிட்டத்தட்ட 150 மடங்காக உயர்ந்திருக்கிறது. கனரக இயந்திரங்களை மட்டும் எடுத்துக் கொண்டால், உற்பத்தி ஏறக்குறைய 360 மடங்காகப் பெருகி யிருக்கிறது. தனது தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான இயந்திரங்களுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்த்திருந்த நிலைமை போய், பெரிய அளவில் இயந்திரங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலைமை வந்திருக்கிறது. இயந்திரத்தின் துணைகொண்டு ரஷ்யத் தொழிலாளி தனது ஆக்கசக்தியைப் (Productivity) பன்மடங்காகப் பெருக்கியுள்ளான். அன்றாட வாழ்க்கையில் பயன்படு பொருள்களின் (நுகர்வுப் பொருள்களின்—Consumer goods) உற்பத்தியும் சுமார் 50 மடங்காகப் பெருகி யுள்ளது. இத்தகைய சாதனையின் காரணமாக, ரஷ்ய தேசிய (நாட்டு) வருமானம் (National income) கிட்டத்தட்ட 90 மடங்காக வளர்ந்துள்ளது. ஆனல், புரட்சிக்குப்பின் சோவியத் மக்கள்தொகை இரண்டு மடங்காகக்கூட அதிகரிக்கவில்லை, அதன்

காரணமாக, பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய நாடு என்ற நிலை மாறி உலகப் பொருளாதாரத்தின் முன்னணியில் நிற்கும் மாபெரும் நாடுகளுள் ரஷ்யா இரண்டாம் இடம் வகிக்கிறது. விஞ்ஞானம், இயந்திர நுணுக்கம், கல்வி, வைத்தியம் முதலிய துறைகளில் ஏற்கெனவே ரஷ்யா முதலிடம் பெற்றுவிட்டது. குறிப்பாக அணுசக்தி ஆராய்ச்சியிலும், விண்வெளியைத் துருவி யறியும் துறையிலும் ரஷ்யா அமெரிக்காவைக் காட்டிலும் பல படிகள் முன்னேறிவிட்டதாக அறிகிறோம். சுருங்கச் சொன்னால் இங்கிலாந் தும், அமெரிக்காவும் சுமார் 150 வருடங்களில் சாதித்ததை ரஷ்யா **50** ஆண்டுகளில் சாதித்துள்ளது. அதோடு, பொருளாதாரப் போட்டியில் ஈடுபட்டுள்ள இதர வல்லரசுகளையெல்லாம் மிஞ்சிவிடும் நிலையில் ரஷ்யப் பொருளாதாரம் முன்னேறி வருகிறது. இதைப் பாராட்டித்தான் ஆங்கிலப் பேராசிரியர் மாரிஸ் டாப் (Maurice Dobb),[1] 'இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை மகத்தான மாறுதல்கள் இத்துணை மாபெரும் நிலப் பகுதியைப் பாதிக்கக் கூடியவகையில் இதற்குமுன் என்றுமே ஏற்பட்டதாகத் தெரியவில்லை' என்று குறிப்பிட்டார் போலும்.

ரஷ்யாவில் ஏற்பட்ட இந்தப் பொருளாதார மாறுதல் உலக மக்கள் அனைவரின் கருத்தையும் கவர்ந்துள்ளது. ஆனால், ரஷ்யப் பொருளாதார வளர்ச்சியைப் பயிலும் அனைவரும் ஒரே கண்ணோட் டத்தில் அதை அணுகுகிறார்கள் என்று சொல்ல முடியாது. சான்றாக, கார்ல் மார்க்ஸின் (Karl Marx) கம்யூனிசத் தத்துவங் களைக் (Communist ideology) கடைப்பிடிப்பவர்கள் ரஷ்யாவைச் சமதர்ம சமுதாயத்தின் (Socialist Society) தாயகமாகக் கருதுகின் றனர். ரஷ்யப் புரட்சியின் காரணமாக ஒரு புதுயுகம் தோன்றி யிருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். காரணம், உலக வரலாற் றிலேயே முதன் முதலாக ரஷ்யாவிலேதான் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் (Dictatorship of the proletariat) நிறுவப்பட்டது. தனி உடைமை ஒழிந்து பொது உடைமை நிலைநாட்டப்பட்டு வருகிறது. ஆகவே, ரஷ்யப் பொருளாதாரம் அடையும் ஒவ்வொரு வெற்றியையும் கம்யூனிஸ்டுகள் சமதர்மவாதத்தின் (Socialism) வெற்றியாகக் கருதுகின்றனர்.

அதேசமயத்தில், தனி உடைமை விரும்பிகளும், பார்லி மென்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்டவர்களும் சர்வாதி காரப் பிடிப்பின் கீழுள்ள பொருளாதாரம் மேலும்மேலும் பலம்

[1] Dobb (Maurice), 'Soviet Economic Development Since 1917'. p.i. 1948.

பெறுவதை விரும்பவில்லை. 'கம்யூனிஸம் அடையும் ஒவ்வொரு வெற்றியும் ஜனநாயக சக்திகளுக்குக் கிடைக்கும் அடி' என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே ஒருசாரார், சோவியத் பொருளாதார முறையில் (Soviet Economic System) என்னென்ன ஊழல்கள் உள்ளன? தனிநபர் வருவாயில் எவ்வளவு ஏற்றத் தாழ்வுகள் உண்டு? அதிகாரவர்க்கம் எத்துணைப் பலம் பெற்றிருக்கிறது? மக்களின் விடுதலை வேட்கை எவ்வளவு தூரம் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளது?-என்பனபோன்ற கேள்விகளுக்குப் பதில் காண முயலுகின்றனர். மற்றொருசாரார், 'சோவியத் அரக்கனின்' பலம் எதிலுள்ளது?—கனரகத் தொழிலிலா? விஞ்ஞானத்திலா? கல்வி முறையிலா? இத்துணை வளர்ச்சி வேகம் (rate of growth) எப்படி வந்தது? என்பனபோன்ற வினாக்களுக்கு விடைகண்டு, அதற்கேற்பத் தங்கள் பொருளாதார, இராணுவ பலத்தைக் கட்டி வளர்க்க வேண்டுமென்ற கவலை கொண்டுள்ளனர்.

அரசியல், இராணுவக் காரணங்களுக்காக மட்டுமன்றி, பாரபட்சமற்ற முறையில் ரஷ்யப் பொருளாதாரத்தைப் பயில முயலுவோரும்கூடப் பல்வேறு குறிக்கோள்களை மனத்தில் கொண்டிருக்கலாம். பொருளாதாரக் கோட்பாடுகளிலே (Economic Theory) மட்டும் கண்ணும்கருத்துமாய் இருப்பவர்கள் சோவியத் முறைக்கும், அங்காடியில் ஏற்படக்கூடிய போட்டியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய முற்படுவர். அதேபோல், ஒரு பொருளாதார முறையின் நுட்பங்களை அறிய முயலுவோர், ரஷ்யத் திட்டங்களின் வினை நுட்பமுறை (Planning technique) என்ன? பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளும் எவ்வகையில் ஆட்சி செய்யப்படுகின்றன என்று காண விழைவர். இத்தகைய ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தில் மட்டும் எழுதப்படுவதன்று இந் நூல். நம் நாட்டு அரசியல், பொருளாதாரக் கோட்பாடுகளைக்கொண்டு சோவியத் பொருளாதார வளர்ச்சியை நாம் கணிக்கவில்லை. அதற்குமாறாக, சோவியத் சமுதாயம் என்னென்ன குறிக்கோள்களை முன்னால் வைத்து இயங்கியது? அவற்றை அடையும் பொருட்டு அவர்கள் கையாண்ட முறைகள் யாவை? எத்தகைய சிக்கல்கள் அவர்களை எதிர் நோக்கின? எவ்வகையில் அவற்றை மேற்கொண்டனர்? எந்த அளவுக்கு வெற்றி கண்டனர்? என்ற பல கேள்விகளை முன் வைத்து அவற்றிற்கு விடைகாண முயல்வோம்.

ரஷ்யப் பொருளாதார வளர்ச்சியைக் காலவாரியாகப் பாகுபாடு செய்வோமாயின், புரட்சிக்கு முந்திய நிலை, சோவியத் முறை வேரூன்றிய இடைக்காலம், 'புதுப் பொருளாதாரக் கொள்கை'யின் (New Economic Policy or NEP) காலம், திட்ட

மிட்ட பொருளாதார வளர்ச்சிக் காலம், இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற காலம், பொருளாதாரச் சீரமைப்பு ஏற்பட்ட காலம், அபரிமிதமான பொருட்பெருக்கக் காலம் என்று பலவாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு காலப் பகுதிக்கும் சிறப்பான பிரச்சினை களும், குறிக்கோள்களும், கொள்கைகளும் உண்டு. இவற்றுள், இரண்டாம் உலகப்போர் வரையுள்ள காலம் ஆழ்ந்து கவனிக்கற் பாலது. ஒவ்வொரு காலப் பகுதியையும் ஆராயுமிடத்து, குறுகிய காலக் கொள்கைகளுக்கும் நீண்ட காலக் கோட்பாடுகளுக்கும் உள்ள நெருங்கிய உறவை மனத்திற் கொண்டு, ரஷ்யா எப்படித் தட்டுத் தடுமாறிப் பலம் பெற்று வளர்ந்து, தான் முன்வைத்துள்ள குறிக்கோள்களை நோக்கி முன்னேறி வருகிறது என்பதைக் காண வேண்டும்.

இத்தகைய ஆராய்ச்சி, தற்போது வேகமான பொருளாதார வளர்ச்சியில் வேட்கைகொண்டு தனது சக்திகளையெல்லாம் அம் முனையில் ஈடுபடுத்த முனைந்துநிற்கும் நாடுகளுக்கு எத்துணை அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும். இதை மனத்திற் கொண்டுதான் பேராசிரியர் மாரிஸ் டாப், 'ரஷ்யப் பொருளாதார வளர்ச்சி பின்தங்கிய பல ஆசிய நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது' என்று குறிப்பிட்டார் போலும்.[1]

ரஷ்யப் புள்ளிவிவரங்களைப்பற்றி ஒரு சில கூறவேண்டும். சிலர் அப் புள்ளிவிவரங்களைப் 'பொய்', 'சரடு' என்று கூறி ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். காலின் கிளார்க் (Colin Clark) என்பவர், 'ரஷ்யப் புள்ளிவிவரங்களின் அடிப்படையே தவறு. ஆகவே, அவை ரஷ்யாவின் சாதனைகளை மிகவும் மிகைப்படுத்திக் காட்டுகின்றன'[2] என்று அபிப்பிராயப்படுகிறார். ஆனால் மாரிஸ் டாப்,[3] ஹாரி ஸ்வார்ட்ஸ் (Harry Schwartz),[4] அலெக்ஸாண்டர் பாய்க்காவ் (Alexander Baykov),[5] போட்கோலின் (Podkolzin)[6] முதலானோர் 'அடிப்படையில் சோவியத் புள்ளிவிவரங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையே' என்று கருதுகின்றனர். நாமும் அதே கருத்தைக் கொண்டு, பெரும்பாலும் டாபும் (Dobb), பாய்க்காவும் (Baykov) கையாண்டுள்ள சோவியத் அரசாங்கப் புள்ளிவிவரங்களையே இந் நூலில் மேற்கொள்ளுகிறோம்.

1 Dobb (Maurice), op. cit., p. 2.
2 Clark (Colin), 'Critique of Russian Statistics.'
3 Dobb (Maurice), op. cit., p. 262.
4 Schwartz (Harry), 'Russia's Soviet Economy,' 1951, Preface, p. xvi.
5 Baykov (Alexender), 'The Development of the Soviet Economic System,' 1946.
6 Podkolzin (A), A Short Economic History of the USSR,' 1968.

# 2. ரஷ்யாவின் வளம்

[ நிலவளம்—கனிப் பொருள்கள்—மக்கள்—கலாசாரம்—ஜனநெருக்கம்]

'இயற்கையின் தாக்குதல்களால் துன்புறும் நாடு ரஷ்யா' என்று கூறினர் ஒரு பொருளியற் புலவர். இக் கூற்று ரஷ்யாவின் தட்பவெப்ப நிலையைப் பொறுத்த அளவில் மட்டுமே பொருத்த மானது. உலகிலேயே மிகக் குளிர்ந்த பகுதிகள் ரஷ்யாவில் உள்ளன. உஷ்ண வியாப்தி அதிகமான இடங்களும் அங்கேதான் உண்டு. மழை மிகக் குறைவு. பல பகுதிகளில் பயிர் வளர்ந்து முதிர்வதற்குப் போதிய வெயில் கிடையாது. ஆகவே, தட்பவெப்ப நிலை ஓரளவு ரஷ்யாவுக்குப் பாதகமாகவே அமைந்துள்ளது என்னலாம்.

**நிலவளம்**

இயற்கையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளும் அங்கே மிகுந்து காணப்படுகின்றன. வானளாவிய மலைகளும் உண்டு; தாழ்ந்த சமவெளிகளும் உண்டு; வறண்ட சோலைகளுமுண்டு; ஜீவ நதிகள் பாயும் தீரங்களுமுண்டு; அடர்ந்த காடுகளுமுண்டு; பரந்த புல்வெளிகளுமுண்டு.

ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்ற காரணத்தால் ரஷ்யா வளம் குன்றிய நாடு என்று கருதிவிடக் கூடாது. ரஷ்யா வளமிக்கதொரு நாடு. பயன்படாத பல பகுதிகள் இருப்பினும், ரஷ்யா உலகிலேயே மிகப் பெரிய நாடு. கிட்டத்தட்ட $8\frac{1}{2}$ மில்லியன் சதுரமைல் நிலப் பரப்பு உண்டு. அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் (United States of America) போன்று 3 மடங்கு பெரியது. உலக நிலப்பரப்பில் ஏழில் ஒரு பாகம் ரஷ்யாவைச் சார்ந்தது. அதில் மூன்றில் ஒரு பகுதி அடர்ந்த காடு. பர், பைன், சிந்தூரம் போன்ற உயர்ந்த ரக மரங்கள் அங்கே செழித்து வளருகின்றன. உலகில் உள்ள காடுகளில் ஐந்தில் ஒரு பகுதி ரஷ்யாவில் உள்ளது.

உலகிலேயே வளமிக்க மண், மத்திய ஆசியாவிலுள்ள ஸ்டெப்புப் புல்வெளிகளில் (Steppes of Central Asia) உள்ளது. இங்கே மழை சற்றுக் குறைவு எனினும் பிரமாண்டமான நீர்ப் பாசனத் திட்டங்களின்மூலம் இதுவும்—இதையொட்டிய வறண்ட

நிலங்களும் விளைச்சல் மிகுந்த பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. ரஷ்யாவின் கீழ்க்கோடிப் பகுதிகளில் போதிய மழையுண்டு. ஆகவே அரிசி, சோயாபீன்ஸ் முதலான உணவுப் பொருள்களை விளைவிக்க முடியும். வால்கா (Volga), டான் (Don), நீப்பர் (Dnieper) முதலிய நதிகள் உள்நாட்டுப் போக்குவரத்தின் உயிர்நாடியாக விளங்குவதுடன், அவை பாயும் தீரத்தின் செழிப் புக்குக் காரணமாகவும் இருக்கின்றன. ரஷ்யாவின் தானியக் களஞ்சியமான உக்ரெயின் இப் பகுதியில்தான் உள்ளது. பயிர்த் தொழிலுக்குப் பயன்படாத புல்வெளிகள் ஆடுமாடுகள் வளர்ப்பதற் கேற்ற பகுதிகளாகத் திகழுகின்றன. நீர்ப்பாசனம், காடு வளர்த்தல் போன்ற நடவடிக்கைகளின்மூலம் கோடிக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு வளமூட்டப்படுகின்றது.

**கனிப் பொருள்கள்**

நிலவளத்தைப் போன்றதே கனிப்பொருள் வளமும். ரஷ்யாவில் கிடைக்காத கனிப் பொருள்களோ கச்சாப் பொருள்களோ இல்லை என்னலாம். வேகமாக ஓடும் ஆற்று நீரிலிருந்து மிகுதி யான மின்சார சக்தியை உருவாக்க வசதியுண்டு. தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தினுல் ரஷ்யா, அமெரிக்காவைவிட மூன்றரை மடங்கு அதிக மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். 1975-ல் ரஷ்யா 1038 பில்லியன் கிலோவாட் மணி (Billion Kiliowatt Hours- 1 billion = 1000 million) மின்சார சக்தியை உற்பத்தி செய்தது. இச் சக்தியில் பெரும்பகுதி இன்று வால்கா, நீப்பர் நதித் திட்டங்களிலிருந்து கிடைக்கின்றது.

இரும்பு உருக்கப் பயன்படும் உயர்ந்த ரக நிலக்கரி உக்ரெயி னிலுள்ள டோனஸ்ட், சைபீரியாவிலுள்ள குஸ்னெட்ஸாவ் (Kuznetzov), யூரல் மலை முதலிய பகுதிகளில் மிகுதியாகக் கிடைக் கின்றது. உலகின் மொத்த நிலக்கரிச் செறிவில் பாதிக்குமேல் ரஷ்யாவில் உள்ளது. 1975-ல் மொத்தம் 700 மில்லியன் மெட்ரிக் டன் (Metric ton) எடையுள்ள நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரும்புக் கனிகளில் 40 சத விகிதம் ரஷ்யாவில் உள்ளது. அவற்றில் பெரும்பகுதி உக்ரெயி னிலும், எஞ்சியது யூரல் மலைச்சாரலில் சைபீரியா, காசாக்ஸ் தான் ஆகிய பகுதிகளிலும் உள்ளது.

சோவியத் யூனியனில் ஏராளமான பெட்ரோலியச் செறிவும், 60 டிரில்லியன் (1 டிரில்லியன் = மில்லியன் மில்லியன்) கன மீட்டர் எரிவாயுச் செறிவும் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் அவை காஸ்பியன் கடற்கரையிலும், சைபீரியா

விலும் உள்ளன. 1975ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 490 மில்லியன் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது. அதில் பெரும்பகுதி பாகு (Baku) என்ற இடத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கிடைத்தது. அத்துடன் அதே ஆண்டில் சுமார் 290 பில்லியன் கன மீட்டர் எரிவாயுவும் கிடைத்துள்ளது.

உயர்ந்த ரக எஃகு செய்வதற்கு உறுதுணையாக இருக்கும் மாங்கனீஸ் போன்ற உலோகங்கள் ஜார்ஜியாவில் (Georgia) மிகுதியாக உள்ளன. யூரல், காசாக்ஸ்தான், காக்கஸஸ் முதலிய இடங்களில் செம்பு மிகுதியாகக் கிடைக்கின்றது. ஈயம், துத்தநாகம், அலுமினியம், நிக்கல், தங்கம், வெள்ளி, தகரம், பிளாட்டினம்—இன்னும் பல உலோகங்கள் யூரல் மலைச்சாரலிலும், அதற்குக் கிழக்கேயுள்ள சைபீரியாபோன்ற பகுதிகளிலும் போதுமான அளவில் கிடைக்கின்றன. அணுசக்தி உற்பத்திக்கு அடிப்படை உதவியாக இருக்கும் யுரேனியம்போன்ற தாதுப் பொருள்கள், மத்திய ஆசியாவில் பல இடங்களிலும் கிடைப்பதாக அறியக் கிடக்கிறது. ஆகவே, உயர்ந்த நாகரிக வாழ்க்கைக்கு அடிப்படையான அத்தனை மூலப்பொருள்களையும் இயற்கை அன்னை ருசிய மக்களுக்கு அள்ளி வழங்கியிருக்கிருள் என்று சொல்லலாம்.

**மக்கள்**

வேறுபட்ட இயற்கை அமைப்புகளைப் போன்றே அங்கு வாழும் மக்களும் இனம், கலாசாரம் முதலியவற்ருல் பெரிதும் மாறுபட்டிருக்கிருர்கள். 1725-ல் ரஷ்யாவில் பதின்மூன்று மில்லியன் மக்கள் வாழ்ந்து வந்தனர். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் இத் தொகை பதின்மடங்காகப் பெருகி, 1897-ல் சுமார் 126 மில்லியனுக உயர்ந்தது. 1975-ல் மக்கள் தொகை 240 மில்லியனைத் தாண்டிவிட்டதாக மதிப்பிடப்படுகிறது. இவர்களில் 90 மில்லியனுக்கு அதிகமானவர்கள் பல்வேறு அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். உழைப்பாளரில் பாதிக்குமேல் மகளிராவர்.

ரஷ்ய மக்களிடையே சுமார் 150 இனப்பகுதியினர் இருப்பதாக அறிகிருேம். இவற்றுள் 20 இனங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவர்களில் பெரும்பான்மையினர் ரஷ்யர்கள் (Great Russians). சோவியத் யூனியனின் மொத்த மக்கள்தொகையில் பாதிக்குமேல் ரஷ்யர்கள். பெருவாரியாகவுள்ள இந்த இனத்தவரின் பெயரையே முதலாம் உலகப்போர் முடியும்வரை இந் நாடு சூடியிருந்தது. அடுத்த பெரிய இனத்தவர் யுக்ரேனியர். இவர்கள் இன்று சுமார் 48 மில்லியனுகப் பெருகியுள்ளனர். ஆகவே ரஷ்யரும், யுக்ரேனியரும் சேர்ந்து சோவியத் யூனியனின் மொத்த

மக்கள்தொகையில் முக்கால் பகுதிக்கு மேலுள்ளனர். இவ்விரு சாராரும் பெரும்பாலும் ஸ்லாவ் (Slavs) இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஆரியர், மங்கோலியர், கிரேக்கர், ஸ்காண்டிநேவியர் முதலாஞேருடன் கலந்தும் கலவாமலும் பல இனத்தவர்களாக இருந்துவருகின்றனர். இத்தகைய இனங்களே ஆதாரமாகக்கொண்டே சோவியத் யூனியன் இன்று 15 குடியரசுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**கலாசாரம்**

இனத்தையொட்டிக் கலாசாரமும் ஓரளவு மாறுபடுவது இயல்பு. அடிப்படையில் யூரல் மலேத்தொடருக்கு மேற்கேயுள்ள பகுதிகள் ஐரோப்பிய நாகரிகத்தையும், கிழக்கேயுள்ள பகுதிகள் ஆசிய நாகரிகத்தையும் தழுவி நின்றன. மதம் என்று எடுத்துக்கொண்டால், ஐரோப்பிய ரஷ்யாவில் வாழ்ந்து வந்தவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவ மதத்தைத் (அதாவது, வைதிக கிரேக்க சபை) தழுவினர். தொழில்வழியாகப் பார்த்தால் இப் பகுதி பெரும்பாலும் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியற்றை நம்பி வாழ்ந்து வந்தது. ஆசியப் பகுதியில் ஆடு மாடு மேய்க்கும் நாடோடிகளும், மலேவாசிகளும் மிகுதியாகக் காணப்பட்டனர். இவர்களில் பலர் இஸ்லாமிய மதத்தைத் தழுவலாயினர். ரஷ்ய சாம்ராஜ்யத்தின் தலேநகரமாகிய மாஸ்கோவும் அதைச் சார்ந்த பகுதிகளும் நாகரிகத்தின் பீடமாகத் திகழ்ந்தன. ஆனல் இயற்கை விதித்த தடைகளின் காரணமாக, பல தனித்தனிப் பகுதிகளாகப் பகுக்கப்பட்ட மக்கள், நாகரிகத்தில் முன்னேற இயலாமல் பின்தங்கி நின்றனர். இப்படி வரலாறு, தொழில், மதம், இயற்கையமைப்பு முதலியவற்ருல் மாறுபட்ட ரஷ்ய மக்களிடையே பலதரப்பட்ட கலாசாரங்கள் நின்றுநிலவுவதில் வியப்பொன்றுமில்லே. நாடெங்கும் இயந்திரமயமாகி, போக்குவரத்துச் சாதனங்கள் பெருகியுள்ள இக்காலத்திலும் இத்தகைய கலாசார வேறுபாடு தொனித்து விளங்குவது கண்கூடு.

**ஜன நெருக்கம்**

இயற்கை அமைப்பில் உள்ள வேறுபாடுகளுக்கேற்ப ஜன நெருக்கம் இடத்துக்கிடம் மாறுபட்டுள்ளது. பொதுவாக அதிகக் குளிரும் அதிக வறட்சியுமான பகுதிகளே ஒதுக்கி இதரப் பகுதிகளிலேயே மக்கள் குடியேறினர். நிலவளமும் தொழில் வளமும் மிக்க பகுதிகளில் மக்கள் குவிந்துகிடந்தனர். உதாரணமாக, மாஸ்கோவிலும் அதைச் சுற்றியுள்ள பல பகுதிகளிலும் சதுர மைலுக்கு 100 பேருக்கு மேல் வசிக்கிருர்கள். ஆனல், ஆசியப் பகுதியிலோ (குறிப்பாக, குளிர்மிகுந்த ஆர்க்கேஞ்சல்ஸை

—Archangel— ஒட்டி) ஒரு சதுர மைலுக்கு இரண்டு பேர்கூட இல்லை. இன்னெருவிதமாகப் பார்த்தால், ரஷ்யாவின் மக்கள் தொகையில் கிட்டத்தட்டப் பாதிப்பேர் ஆறு சதவிகித நிலத்தில் குடியிருக்கின்றனர். பரந்துகிடக்கும் ஆசியப் பகுதியில் 10 சதவிகித மக்களே வாழ்கின்றனர். இருப்பினும், சமீப காலத்தில் விஞ்ஞானத்தின் துணைகொண்டு இயற்கையின் கொடுமைகளை ஓரளவு மட்டுப்படுத்தி, பெருவாரியான மக்கள் ஆசியப் பகுதிகளில் குடியேறி ரஷ்யப் பொருள்வளத்தைப் பெருக்கி வருகின்றனர்.

புரட்சியின்போது ரஷ்ய மக்களில் ஐந்திலொரு பகுதியினர் நகரவாசிகளாக இருந்துவந்தனர். ஆனால், இன்று சுமார் 57 சதவிகித மக்கள் பட்டினவாசிகளாகக் கணக்கிடப்படுகின்றனர்.

## மேற்கொண்டு படிக்க


Schwartz (H), 'Russia's Soviet Economy,' 1951., Chps. 1 and 2.

Roger A. Clark, 'Soviet Economic Facts 1917—1970,' MacMillan—1972.

# 3. புரட்சிக்கு முந்திய பொருளாதாரத்தின் வரலாறு

[1. வாணிபப் பரம்பரை.

2. பண்ணையடிமைமுறை—தோற்றம்—வளர்ச்சி—அமைப்பு—குறைபாடுகள்—விடுதலை இயக்கம்—அரசாங்கத்தின் தலையீடு—விடுதலைப் பிரகடனம்; திட்டம்—சில குறைபாடுகள்—ஏற்றத்தாழ்வுகள்.

3. விவசாயத்தின் நிலை—ஸடோலிப்பின் சீர்திருத்தங்கள்.

4. தொழில் வளர்ச்சி—விடுதலைக்கு முன்—மெர்க்கண்டலிஸம்—நால்வகைத் தொழில் முறைகள்—விடுதலைக்குப் பின்—இருப்புப் பாதைகள்—தொழில் வளர்ச்சி—காப்பு வரி—அயல்நாட்டு மூலதனம்.

5. வெளிநாட்டு வாணிபம்.]

நிலவளமும், மக்கள் வளமும் ஒருங்கே பொருந்திய ரஷ்யா ஏன் நெடுங்காலம் பொருளாதாரத்தில் பின்தங்கிப் போயிருந்தது என்ற கேள்வி எழுவது இயல்பு. இக் கேள்விக்கு விடைகாண வேண்டுமாயின், ரஷ்ய மக்கள் தொன்றுதொட்டுக் கையாண்டுவந்த சமூக, பொருளாதார அமைப்புகளையும், விவசாய, தொழில், வாணிப முறைகளையும் ஆராய்வது அவசியம்.

## 1. வாணிபப் பரம்பரை

கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ரஷ்ய வரலாறு ஆரம்பமாவதாக அறியக்கிடக்கிறது. ஆதி ரஷ்யர்கள் உழுதுண்டு வாழ்ந்தவர்களல்லர்; வாணிபத்தை நம்பி வாழ்ந்தவர்கள். ஸ்லாவியா இனத்தைச் சேர்ந்த இந்த வணிகக் கூட்டத்தினர் ஆங்காங்கே நதிக்கரையோரங்களில் பல வியாபார ஸ்தலங்களை நிறுவினர். அந்த வட்டாரங்களில் அடர்ந்த காடுகள் பல இருந்தன. அவற்றிலிருந்து தேன், பிசின், மெழுகு, மிருதுவான உரோமமுள்ள தோல் முதலிய செல்வங்கள் கிடைத்தன. இச் செல்வங்கள் ஆற்றோரங்களில் அமைந்த வியாபார ஸ்தலங்களில் வந்து குவிந்தன. அங்கிருந்து இப் பொருள்கள் வால்கா, நீப்பர் நதிகளின் மார்க்கமாகக் கருங்கடலை நோக்கிப் பயணமாகிப் பின் அங்கிருந்து மேற்கு ஆசியா, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பிற நாட்டு

வணிகர்களும் ரஷ்ய வணிகர்களுடன் தொடர்புகொண்டு, அவர்களிடமிருந்து தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பண்டமாற்றுச் செய்தனர். பணமும் புழங்கியது.

அக்கால நாகரிகத்தின் கேந்திரமாக விளங்கிய கான்ஸ்டான்டிநோபிளுடன் (Constantinople) ரஷ்யா கொண்டிருந்த தொடர்பு குறிப்பிடத்தக்கது. இத் தொடர்பின் காரணமாகக் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்ய மக்கள் கிரேக்கச் சம்பிரதாயத்தை ஒட்டிய கிறிஸ்தவ மதத்தைத் (Greek Orthodox Church) தழுவலாயினர். இன்றும் ரஷ்யாவில் இம் மதம் நின்று நிலவுகிறது. மதத்தால் மட்டுமன்றி மொழி, எழுத்து, இலக்கணம், கலாசாரம் முதலியவற்றிலும் ரஷ்யா கிரேக்க நாட்டுக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கின்றது.

கிரேக்க நாட்டுடன் ஏற்பட்ட இந்த நெருங்கிய உறவு ரஷ்ய வாணிபம் செழித்து ஓங்குவதற்குப் பெரிதும் உதவியது. வாணிப வளம் பெருகப் பெருகப் பல பகுதிகளிலும் பட்டினங்களும் நகரங்களும் தோன்றியது இயற்கையே. கீயவ் (Kive), மாஸ்கோ முதலிய நகரங்கள் இவற்றுள் முக்கியமானவை. கொள்ளைக்கூட்டங்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இந் நகரங்கள் கோட்டைகள் அமைத்துச் சின்னஞ்சிறு படைகளை நிறுவிப் படிப் படியாக வளர்ச்சி பெற்றன. இத்தகைய வாணிபம் கி.பி. 12ஆம் நூற்றாண்டுவரையிலும் நிலைத்திருந்தது. அதன்பின் டார்ட்டாரியரும் (Tartars), மங்கோலியரும் (Mongols) அலையலையாகப் படையெடுக்கலாயினர். ஆகவே அமைதி குலைந்தது; கொள்ளைகள் மலிந்தன; வாணிபம் சீர்குலைந்தது. வாணிபத்தை நம்பி வாழ்ந்த மக்கள் வளங்குன்றினர். வாழ்வுக்கு வேறு வழியில்லாததால் அவர்கள் நிலத்தைத் திருத்திப் பயிரிட ஆரம்பித்தனர். பதினோராம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்த மாறுதல் பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் நாடெங்கும் பரவியது. பெரும்பாலான மக்கள் நகரங்களை விட்டுவிட்டு மேலும்மேலும் விவசாயத்தையே நாடலாயினர்.

## 2. பண்ணையடிமை முறை

**தோற்றம்:** ஆரம்பத்தில் மக்கள் அனைவரும் அடிமைப்பட்டுக் கிடக்கவில்லை. ஒரு சில அடிமைகள் இருக்கத்தான் செய்தனர். பெரும்பாலோர், 'தன் கையே தனக்குதவி' என்ற முறையில் சுதந்திரமாக உழைத்து வாழ்ந்து வந்தனர். ஆனால், இந்தச் சுதந்திரம் நீடித்து இருக்கவில்லை. தக்க பாதுகாப்பு இல்லாமையே அதற்குக் காரணம். பாதுகாவலை நாடிய மக்கள் நாளடைவில் தங்கள்

விடுதலை வேட்கையை விட்டுக்கொடுக்கலாயினர். அமைதியை விரும்பி, ஆங்காங்கே இருந்த போர்வலிமிக்க தலைவர்களின் ஆதரவை நாடினர். பாதுகாவலுக்குப் பதிலாகப் பணிவிடை செய்யவும் முன்வந்தனர். இப்படி எழுந்ததுதான் பண்ணை அடிமை முறை (Serfdom). இம் முறையால் உழவனுக்குப் பாதுகாப்புக் கிடைத்தது; அதற்கு ஈடாகத் தன் உழைப்பின் ஒரு பகுதியை அவன் காவலுக்குக் காணிக்கையாக அளித்தான். அதன் பலனாகப் பலவான் பண்ணையாரானார்; உழவன் பண்ணை அடிமையானான்.

நாளடைவில் சின்னஞ்சிறு மன்னர்களெல்லாம் ஒரு பேரரசின் கீழ் ஒன்றுபடலாயினர். அன்னியரின் படையெடுப்புகளே அதற்கு அடிப்படைக் காரணம். சிறிதுகாலம் கீயவ், மாஸ்கோ முதலிய பகுதிகள், 'யார் பலவான்?' என்ற போட்டியில் ஈடுபட்டிருந்தன. இப் பலப் பரீட்சையின் இறுதியில் மாஸ்கோவின் கை ஓங்கியது. ஆகவே, அங்கிருந்த மன்னன் ரஷ்ய நாட்டின் பேரரசனானான். இவன்தான் பிற்காலத்தில் சார் அரசன் (Tsar, Czar) என்று அழைக்கப்பட்டான். அவன் ஆணையை ஏற்றுக்கொண்ட சிற்றரசர்கள், பிரபுக்கள் (Nobles) என்று பெயர் பெற்றனர்.

சட்டப்படி நாட்டின் நிலம் அனைத்தும் சார் அரசனையே சார்ந்தது. அவன் ஆணையை ஏற்றுக்கொண்டு, அவசியம் ஏற்படும்போது படைபலம் கொடுத்து உதவும் பிரபுக்கள் தங்கள் ஆதிக்கத்தின் கீழுள்ள நிலபுலங்களைத் தங்கள் விருப்பம்போல் ஆண்டு அனுபவிக்க முடிந்தது. நடைமுறையில் இச் சொத்துகள் நிலப்பிரபுக்களின் தனி உடைமைகளாக மாறின. சார் அரசனும், இளவரசனும், ஏனைய அரச குடும்பத்தினரும் பெரும் நிலம் படைத்திருந்தனர். தனிநபர்களைப் போலவே பல கோயில்களும் மடங்களும் நிலமானியம் பெற்றிருந்தன. ஆகவே, ரஷ்யச் சமுதாயம் பெருநிலம்படைத்த பிரபுக்களையும், அந் நிலத்தில் உழைத்துவந்த பண்ணை அடிமைகளையும்கொண்ட விவசாய நாடாக விளங்கிற்று.

இம் மாறுதல் ஓரிரு ஆண்டுகளில் ஏற்பட்டதன்று; பல நூற்றாண்டுகளில் ஏற்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய இம்முறை, வேரூன்றி வளர்ந்து நாடெங்கணும் பரவி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதிவரை நிலைத்திருந்தது. இந்த நான்கு நூற்றாண்டுக் காலத்தில் ரஷ்ய மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் பண்ணை அடிமைகளாக

உழன்று தவித்தனர் என்பது கவனிக்கற்பாலது. ரஷ்ய வரலாற்றை நன்கு ஆராய்ந்தறிந்த மேவர் (Mavor-J.) கொடுத்துள்ள புள்ளி விவரங்களின்படி 1762-66ஆம் ஆண்டுகளில் ரஷ்யாவின் மக்கள் தொகை 19 மில்லியன் என்றும், அதில் கிட்டத்தட்ட 14.8 மில்லியன் பேர் பண்ணையடிமைகள் என்றும் அறிகிறோம். அதாவது அக் காலத்தில் வாழ்ந்த மக்களில் நூற்றுக்கு எண்பது பேர் பண்ணை அடிமைகள் என்பது புலனாகிறது.[1] காலஞ் செல்லச் செல்ல நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டே வந்தது. 1815ஆம் ஆண்டில் எடுத்த ஒரு கணக்குப்படி ரஷ்யாவில் 14,000 பிரபுக்களின் குடும்பங்கள் இருந்தன. நாட்டிலுள்ள நிலத்தில் பத்தில் ஒன்பது பகுதி இப் பிரபுக்களுக்கும் அரச குடும்பத்தினருக்கும் சொந்தமா யிருந்தது. ஆனால் அதே சமயத்தில், அரசாங்கப் பண்ணையில் வேலை செய்த பண்ணை அடிமைகள் மட்டும் 16 மில்லியன் பேர் என்று தெரிய வருகிறது.[2]

**அமைப்பு:** சார் தனது நிலத்தைத் தனது உத்தியோகஸ் தரைக் கொண்டு மேற்பார்வை செய்து வந்தான். அந் நிலங்களில் வேலை செய்த பண்ணையடிமைகள் மூன்று வகையான பளுக்களைச் சுமக்கவேண்டியிருந்தது. முதலாவது, அவசியம் ஏற்படும்போது அவர்கள் அரசன் திரட்டும் படையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். இரண்டாவது, அரசனின் பண்ணையைப் பருவம் செய்து அதிலிருந்து கிடைக்கும் வரும்படியில் அரசனுக்குக் குத்தகை செலுத்தவேண்டும்; அரசன் விதிக்கும் வரிச்சுமைகளையும் தாங்க வேண்டும். நிலத்தை மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்கள் பண்ணையடிமைகளைப் பலவாறாகத் துன்புறுத்தியதுமுண்டு. ஆனால் வரி வசூலிப்பது அவர்களது வேலையன்று. கிராமப் பஞ்சாயத்து அல்லது ஊர்ப் பொதுச்சபை அவ் வேலையை மேற்கொண்டிருந்தது. இச் சபைக்கு மிர் (Mir) அல்லது 'உலகம்' என்று பெயர். கிணற்றுத் தவளைகளான பண்ணையடிமைகளுக்கு இச் சபை உலக மாகக் காட்சியளித்ததில் வியப்பொன்றுமில்லை. நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் வரியும் குத்தகையும் கட்டியது போக மீந்ததைக்கொண்டு மக்கள் வயிறு வளர்த்து வந்தனர்.

பெரிய பிரபுக்களின் பண்ணைகள் இரண்டு கூறுகளாக்கப் பட்டன. ஒன்று பிரபுவின் சொந்த உபயோகத்துக்கென்றும் மற்றது பண்ணை அடிமைகளின் சொந்த ஜீவனத்துக்கென்றும் ஒதுக்கப்பட்டது. பண்ணை அடிமைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட

[1] Mavor-(J), 'Economic History of Russia' 1925-Vol. I.p.192.

[2] Ogg and Sharp, 'Economic Development of Modern Europe' 1925-p. 306.

நிலம் ஊர்ப்பொதுவில் கண்காணிக்கப்பட்டு, பயிரிடும்பொருட்டு அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஊர்ப் பொதுச்சபை இவ் வேலையை மேற்கொண்டது. ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள உழைக்கும் தகுதி படைத்த ஆண், பெண், குதிரைகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்கேற்ப நிலம் பங்கிடப்பட்டது. பங்கிடுகையில் நிலத்தின் வளம், இடம், குடும்பத்தில் உள்ள பிள்ளை குட்டிகள் முதலிய பல அம்சங்களை மனதிற் கொண்டிருந்தனர். இப் பங்கீட்டு முறையால் பண்ணை அடிமைகளிடையே ஒருவகையான சமத்துவம் நிலவியது. நாளடைவில் ஏற்றத்தாழ்வுகள் வளராமலிருக்கும் பொருட்டு 12 அல்லது 15 ஆண்டுகளுக்கொரு முறை மறுபங்கீடு (redistrifution) நடைபெற்றது. சில இடங்களில் அதைவிடக் குறுகிய காலத்தில் மறுபங்கீடு நடைபெற்று வந்தது. இத்தகைய சமத்துவம், உழவர்களிடையே அதிருப்தியோ புரட்சி மனப்பான்மையோ தோன்றுமல் தடுக்கக்கூடிய சிறந்த சாதனம் என்று பலர் கருதினர். இக் கருத்தை ரஷ்ய வரலாறு பொய்ப்பித்துவிட்டது என்று கூறலாம்.

**குறைபாடுகள்**

பங்கீட்டு முறையினுல் கிடைத்த நிலம் தனி உடைமையுமன்று; பொது உடைமையுமன்று. நிலப் பிரபு, தன் நிலத்தில் உழைக்கும் பண்ணையடிமைகளுக்கு உணவளிக்கும் பொருட்டே அந் நிலத்தை ஊர்ச்சபையின் கண்காணிப்பில் விட்டுவைத்தான். மேலும் பங்கீட்டினுல் நிலம் அடிக்கடி கைமாறியது. அதன் காரணமாக உழவன் அதில் முனைந்து உழைக்க மனங்கொள்ளவில்லை. உழைக்கும் சக்தியும் அவனுக்குக் கிடையாது. பலவிதச் சுமைகளைத் தாங்கி, பல கொடுமைகளுக்கு உள்ளான பண்ணையடிமை உயிரற்று, உழைக்கும் சக்தியற்றிருந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. அவன் என்னென்ன சுமைகளைத் தாங்கினுன், எத்தகைய கொடுமைகளுக்கு ஆளானுன் என்று ஆராய்வது அவசியம்.

முதற்கண், நிலப்பிரபு தன் சொந்த அனுபவத்துக்கென்று வைத்திருந்த நிலங்களில் பண்ணையடிமைகள் வாரத்தில் கிட்டத்தட்ட மூன்று நாட்கள் அடிமை வேலை செய்ய வேண்டியிருந்தது. ஊர்ப் பொது வேலைகளையும் அவர்கள் மொத்தமாகக் கவனிக்க வேண்டியிருந்தது. இதுபோக அறுவடை, உழவு முதலிய காலங்களில் அவனிடமிருந்து அதிக வேலைவாங்கும் அதிகாரமும் சக்தியும் படைத்திருந்தான் நிலப்பிரபு. மீந்த நாட்களில்தான் தனது குடும்பத்துக்கென்று ஒதுக்கப்பட்ட நிலத்தில் உழைக்க வேண்டும். உழைப்போடும் அவனது கடமை தீர்ந்துவிடவில்லை. ஊர்ப்

பொது மொத்தமாக ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை நிலப்பிரபுவுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. இதை ஊர்ப் பொதுச்சபை நிலப்பிரபுவின் சார்பில் வசூலித்தது. அரசாங்கம் பல சமயங்களில் தலை வரி (Poll tax) போன்ற வரிகளை விதித்தது. அரசாங்கத்துக்கும், பண்ணை அடிமைக்கும் நேரடித் தொடர்பு இல்லாததால் இத் தொகை நிலப்பிரபுவிடமிருந்து வசூலிக்கப் பட்டது. நிலப்பிரபு அதை ஊர்ப் பொதுச்சபையின் மூலம் பண்ணை அடிமைகளிடமிருந்து வசூலித்தான். இதுபோக அப் போதைக்கப்போது இராணுவத்துக்கு ஆள் சேகரித்து அனுப்பு வதும் நிலப்பிரபுவின் கடமையாக இருந்தது. இன்ன பல செலவு களைத் தங்களுக்குக் கிடைத்த குறைந்த வருவாயிலிருந்து பண்ணை யடிமைகள் செலுத்த வேண்டியதிருந்தது. எஞ்சிய வருவாயைக் கொண்டு குடும்பத்தைப் பராமரிப்பது பெரும்பாடாக இருந்தது. பண நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு, பெரும்பாலான பண்ணையடிமைகள் நிலப்பிரபுவிடம் கடன்பட்டிருந்தனர். இப்படிப் பரம்பரைக் கடனாளிகளாயிருந்த பண்ணையடிமைகள் விவசாயத் தைச் சிறந்த முறையில் செய்யும் சக்தியற்று இருந்ததில் வியப் பொன்றுமில்லை.

மனிதன் மனிதனாக நடத்தப்படாதது பண்ணையடிமை முறை யின் ஒரு பெருங்குறையாக இருந்தது. பெரும்பாலும் அவன் ஒரு உரிமையற்ற மிருகமாகவே கருதப்பட்டான்; நடத்தப்பட்டான் என்றால் அது மிகையாகாது. நிலப்பிரபு வைத்ததே சட்டம். 'இம் என்றால் வனவாசம், ஏன் என்றால் சிறைவாசம்' என்ற வாக்கு அவர்களின் நிலைக்கு அப்படியே பொருந்தும். பண்ணையடிமை நிலப்பிரபுவின் சொந்தச் சொத்து. ஆகவே ஆடுமாடுகளைப் போன்று அவர்கள் விற்கப்பட்டனர்; வாங்கப்பட்டனர். விலங்கினும் கீழானது அவர்கள் நிலை. வேட்டை நாய்களுக்குப் பதிலாகத் தங்கள் அடிமைகளை மாற்றியது, முயல்குட்டியைக் கவனியாத குற்றத்துக்காக மரணதண்டனை விதித்தது போன்ற நிகழ்ச்சிகள் ரஷ்ய நிலப்பிரபுத்துவ வரலாற்றில் காணக் கிடக்கின்றன.

குடும்ப வாழ்க்கையிலும் பலவாறாக நிலப்பிரபுக்கள் குறுக்கிட் டார்கள். நிலப்பிரபு, தான் விரும்பியவனை தான் விரும்பியவளுக்கு மணம் செய்விக்கலாம். காதல் புரிந்த இளைஞனுக்கு இருபத்தைந் தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இக் கொடுமை களைக் கடவுளைத் தவிர வேறு யாரிடமும் முறையிடும் வழி பிறக்க வில்லை. நிலப்பிரபுவே அவர்களின் கண்கண்ட தெய்வம். சார் அரசன் தனிப்பட்ட நிலப்பிரபுவின் பண்ணை விவகாரங்களில் தலையிட விரும்பவில்லை. அதன் காரணமாக நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்த விவசாயி

களைக் காட்டிலும் ரஷ்ய விவசாயிகள் படுமோசமான நிலைமையிலிருந்ததில் ஆச்சரியமில்லை. 1807-ல் ரஷ்ய விவசாயியின் நிலை 1789-ல் ஃபிரான்ஸிலிருந்த நிலையைக் காட்டிலும் படுமோசமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**விடுதலை இயக்கம்**

'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்பது பண்ணையடிமைக்கும் பொருந்துவதாகும். பல நூற்றுண்டுகளாகத் தாங்கொணுக் கொடுமைகளுக்கு ஆளான பண்ணை அடிமைகளிடையே அதிருப்தி அலைகள் குமுறி எழுந்தன. பிரெஞ்சுப் புரட்சி (French Revolution) உலகுக்கு ஓதிய மந்திரங்களான 'சுதந்திரம், சமத்துவம்' என்பன ரஷ்ய நாட்டின் எட்டுத் திக்குகளிலும் எதிரொலித்தன. மாஜினியும் (Mazzini), கரிபால்டியும் (Garibaldi) இத்தாலி நாட்டில் எழுப்பிய சுதந்திரச் சங்கநாதம் ரஷ்ய மக்களின் காதுகளிலும் ஒலித்தது. 'கரிபால்டி வந்தால்தான் வழி பிறக்கும்' என்று மக்கள் நம்பினர். நாடெங்கணும் பல புரட்சிச் சங்கங்கள் தோன்றின. கொடுமைமிக்க பல நிலப்பிரபுக்களைத் தனித்தனியாகக் களைந்தெறிவதையே தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டு இயங்கிவந்தன அச் சங்கங்கள். சாரும் அவன் குடும்பத்தவர் பலரும் அவைகளின் தாக்குதலுக்கு இலக்காயினர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகுமுன்னரே அணையிட்டுத் தடுக்க விரும்பிய சாரரசர் அதற்கான சீர்திருத்தத் திட்டங்களைத் தீட்டலானர்.

பொங்கிவரும் புரட்சி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துவது மட்டுமின்றி, பல பொருளாதார இராணுவ நோக்கங்களும் சீர்திருத்தம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தன. 'மனமில்லாக் கொட்டம் இழைவராது' என்பதற்கேற்ப, பண்ணையடிமைகள் மனமற்ற உழைப்பு வழங்கியதன் காரணமாக விவசாயம் சீர்கெட்டு உற்பத்தி குன்றியிருந்தது கண்கூடு. இக் குறைவை நீக்க வேண்டுமாயின் பண்ணை முறை ஒழியவேண்டும்; விவசாயிகள் விடுதலை பெற வேண்டும்; பரம்பரையாகத் தாங்கிவந்த பலவிதச் சுமைகளும் நீங்கவேண்டும் என்று பலர் கருதினர்.

பண்ணையடிமை முறையின் பலவீனம் கிரிமியப் போரின் (Crimean war 1854) போது தெற்றென விளங்கிற்று. ரஷ்யப் படையில் ஏராளமான பண்ணையடிமைகள் இருந்தனர். இவர்களிடையே அதிருப்தி தாண்டவமாடியது. ஆகவே, அவர்கள் ஒருமனப்பட்டு எதிரிகளை எதிர்த்துப் போரிடும் தன்மையற்றிருந்தனர். படையை விட்டு ஓடுதல், எதிரியிடம் சரண் புகுதல், ஆயுதங்களை எதிரியிடம் கொண்டு சேர்த்தல் போன்ற பல நிகழ்ச்சிகள் சர்வசாதாரணமாயிருந்தன. ஆகவே, கிரிமியப்

போரில் ஏற்பட்ட தோல்விகளும் கஷ்ட நஷ்டங்களும் சாரரசனின் கண்களைத் திறந்தன என்னலாம்.

**அரசாங்கத்தின் தலையீடு**

பிரெஞ்சுப் புரட்சி (1789) ஏற்பட்டதிலிருந்தே பண்ணையடிமை ஒழிப்புப் பிரச்சினை சாரரசர்களின் கவனத்தைக் கவர்ந்து வந்தது. இம் முயற்சியில் முதன் முதலாவது முனைந்தவர் முதலாம் அலெக்சாண்டர் என்ற சாரரசன் (Tsar Alexandar I, 1801-25). இவர் 1819-ல் பால்டிக் (Baltic) பகுதியைச் சார்ந்த மூன்று மாகாணங்களில் இருந்த அடிமைகளை விடுதலை செய்தார். ஆனால் நிலம் முழுவதும் பிரபுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் காரணமாக அப் பகுதியில் நிலமற்ற விவசாயிகள் மிகுந்து காணப்பட்டனர். அவருக்குப் பின் வந்த முதலாம் நிக்கெலாஸ் (Nicholas I, 1825-55) அத்தகைய சீர்திருத்தங்களை விரும்பவில்லை.

ஆனால், கிரிமியப் போர் முடிந்ததும் (1856) சீர்திருத்தத்துக்கான வேலைகள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டன. 1857-ல் இரண்டாம் அலெக்சாண்டர் (1855—81) ஒரு குழுவை அமைத்து, பண்ணை முறை ஒழிப்புக்கானதொரு திட்டத்தை வகுக்குமாறு பணித்தான். தனக்கிருந்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது துணிந்து செயலாற்றிய காரணத்தால் இவன் 'விடுதலை வீரன்' (Liberator) என்ற புகழ் மாலையையும் சூடினான்.

அக்காலத்தில் ரஷ்யாவில் சுமார் 47 மில்லியன் பண்ணையடிமைகள் இருந்தனர். அவர்களில் 20 மில்லியன் பேர் சார் அரசனின் நிலத்தைச் சார்ந்தவர்கள்; 4·7 மில்லியன் பேர் அரச குடும்பத்தினரின் நிலத்தில் உழைத்தவர்கள். 21 மில்லியன் பேர் தனிப்பட்ட பிரபுக்களுக்குச் சொந்தமாயிருந்தனர். 1·4 மில்லியன் பேர் வீட்டடிமைகளாகப் பணியாற்றினர். இவர்களில் சாரரசனையும் அவன் குடும்பத்தினரையும் சார்ந்திருந்த அடிமைகளை விடுதலை செய்வது எளிதாக இருந்தது. இத் திட்டம் இரண்டு அம்சங்களைக் கொண்டிருந்தது. முதலாவது பண்ணை அடிமை விடுதலை பெற்றான். இரண்டாவது, அவன் பரம்பரையாக உழுது பயிர் செய்த நிலமெல்லாம் அவனுக்குச் சொந்தமாக்கப்பட்டது. ஆகவே, இத் திட்டம் அடிமைக்கு விடுதலையும் நிலமும் ஒருங்கே அளித்து அவனை ஒரு சிறிய நில விவசாயி (small peasaent) ஆக்கியது எனலாம். இத் திட்டம் 1866-ல் முழுமை பெற்றது.

**விடுதலைப் பிரகடனம்—திட்டம்**

ஆனால் தனிப்பட்ட பிரபுக்களின் கீழிருந்த பண்ணை அடிமைகளை விடுதலை செய்வது அவ்வளவு எளிதாக இல்லை,

இருப்பினும் சாரர்சன் அதற்கானதோர் திட்டத்தைத் தக்க முறையில் தயாரித்து 1861-ல் வெளியிட்டான். இதற்குத்தான் விடுதலைப் பிரகடனம் (Edict of Emancipation) என்று பெயர். அதன்படி, கிட்டத்தட்ட 23 மில்லியன் விவசாயிகளுக்கு விமோசனம் பிறந்தது. விடுதலை கிடைத்ததெனினும் நிலம் முழுவதும் அவர்கள் கைக்கு மாறவில்லை. வீடும் வீட்டைச் சார்ந்த தோட்டமும் தனி உடைமையாயின. ஆனால் உழுநிலம் முழுவதும் தனி உடைமையாகவில்லை. அதற்குப் பதிலாக அது ஊர்ப்பொதுவில் விட்டு வைக்கப்பட்டது. அச் சபை நிலத்தை ஒவ்வொரு குடும்பத்தின் தகுதிக்கும் தேவைக்கும் ஏற்பப் பங்கீடு செய்தது. பங்கிடுகையில் நிலத்தின் தராதரத்தையும் மனதிற் கொண்டிருந்தது. ஆகவே தான் வளமிகுந்து, மக்கள் தொகை நெருக்கமும் மிகுந்திருந்த தெற்குப் பகுதியில் ஒரு குடும்பத்துக்குச் சுமார் 5-5 ஏக்கரும், வளங் குன்றி ஜன நெருக்கம் குறைந்த வடக்கிலே சுமார் 22·5 ஏக்கரும் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால் சராசரியாகக் குடும்பத்துக்கு 14 ஏக்கர் நிலம் வீதம் கிடைத்தது. இப்படிக் கிடைத்த நிலம் குடும்பத்துக்குச் சொந்தமானதன்று; அந் நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயை அனுபவிக்கும் உரிமைதான் உழவனுக்கு உண்டு. பால்டிக் நாடுகளும், போலந்தும் இதற்கு விதிவிலக்காக அமைந்தன. இப் பகுதிகளில் உழவனுக்கு நிலமும் கிடைத்தது. ஆகவே, விடுதலைப் பிரகடனம் விவசாயிகளின் விடுதலை வேட்கையைத் தணித்தது; ஆனால் அவர்களது உடைமை வேட்கையைத் தணிக்கவில்லை.

விடுதலைப் பிரகடனத்தின் மூலம் கிட்டதட்ட 350 மில்லியன் ஏக்கர் நிலம் நிலப்பிரபுக்களிடமிருந்து கை மாறியது. இப்படி விட்டுக்கொடுத்த நிலத்துக்கு நஷ்ட ஈடு அளிக்க வேண்டியது அவசியமாயிற்று. யார் கொடுப்பது? எவ்வளவு? எப்படி...?என்ற கேள்விகள் எழுந்தன. முதற் கேள்விக்கு, பிரகடத்தினால் பயன் பெற்ற விவசாயிகளே நஷ்டஈட்டைச் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் எவ்வளவு?எப்படி? என்று நிர்ணயம் செய்வது கடுமையான வேலையாக அமைந்தது. உதாரணமாக, ஓர் அடிமையின் ஓராண்டு உழைப்பு **9** ரூபிள் மதிப்புடையதென்று வைத்துக்கொண்டு 6 சத விகிதத்தில் அதன் மொத்த மதிப்பை 150 ரூபிள் என்று கணிக்கலாம். அப்படிக் கணிக்கப்பட்ட தொகையில் 30 ரூபிளை விவசாயியே நேரடியாக நிலப்பிரபுவுக்குச் செலுத்திவிட வேண்டும். மீதியுள்ள 120 ரூபிளை அரசாங்கம் விவசாயின் சார்பில் முன்பணமாகக் கொடுத்து உதவும். அத் தொகைக்கு விவசாயி 6 சதவிகிதம் வட்டி கட்டி வரவேண்டும். அரசாங்கம் அதைவிடக் குறைந்த வட்டிக்குக் கடன்வாங்க

முடியுமாதலால் (5 சத விகிதம்) விவசாயிடமிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு கிட்டத்தட்ட 49 ஆண்டுகளில் முழுக் கடனையும் தீர்த்துவிட முடியுமென்று கருதப்பட்டது. இக் கடனை மீட்பதற்காக விவசாயி ஆண்டுதோறும் செலுத்திவந்த தொகைக்குக் கடன்மீட்சி ஆண்டுத்தொகை (redemption annunities) என்று பெயர். இப் பணத்தையும், மேற்கொண்டு அரசாங்கம் விதிக்கும் வரிப்பணத்தையும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் பொறுப்பு ஊர்ப் பொதுச்சபையிடம் (Mir) கொடுக்கப் பட்டிருந்தது. இப்படி ஆண்டுதோறும் விவசாயி செலுத்திவந்த பணம், விடுதலைப் பிரகடனத்துக்கு முன்னர் விவசாயி நிலப்பிரபு வுக்கு அளித்த உழைப்பின் மதிப்பைவிடக் குறைந்தது என்று எண்ண இடமுண்டு.

**சில குறைபாடுகள்**

இருப்பினும் இன்னொரு கோணத்தில் நோக்கினுல் விடுதலைப் பிரகடனம் ஓர் 'இரண்டுங் கெட்டான்' திட்டம் என்பது புலனுகும். நிலப்பிரபுவும் இத் திட்டத்தால் பெரும்பயனடைய வில்லை; உழவனின் நிலப்பசியும் தீரவில்லை. சராசரி ஒரு குடும்ப அனுபோகத்துக்கென்று 14 ஏக்கர் நிலம் கிடைத்தது. ஆனுல் இந்தக் கணக்குப்படி விவசாயிகளில் பாதிப்பேருக்கு மேல் போதிய வருவாயின்றித் திண்டாடினர். ஆகவே, அவர்கள் தங்கள் தேவைக்குப் போதுமான நிலம் வேண்டு மென்று துடிதுடித்ததில் வியப்பொன்றுமில்லை. அவர்கள் தேவைக்குத் தக்க நிலம் கிடைத்திருந்தால் அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பயிரிடுவதிலேயே தங்கள் முழு நேரத் தையும் செலவிடுவார்களேயன்றி, நிலப்பிரபுவின் நிலத்தில் கூலி வேலை செய்ய முன்வர மாட்டார்கள். ஆகவே உழவனுக்கு நிலமும் கொடுக்கவேண்டும்; போதிய நிலம் கொடுக்கவும் கூடாது என்ற இரண்டுங்கெட்ட நிலையிலேயே விடுதலைத் திட்டம் தயாரிக்கப் பட்டது.

பலவகைகளில் விவசாயி பாதிக்கப்பட்டான். விடுதலைக்கு முன்னர் விவசாயி பெரும்பாலும் தன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து வந்தான். செலவினங்கள் மிகக் குறைவு. விறகு, புல் எல்லாம் இலவசமாகக் கிடைத்தன அவசரத்துக்கு நிலப்பிரபுவிடம் கடன் வாங்கவும் வழியுண்டு. விடுதலைத்திட்டம் இவைஅனைத்தையும் உடைத்தெறிந்து விட்டது. எதற்கெடுத்தாலும் பணம்; பல புதுச் செலவினங்கள் தோன்றின. அரசாங்கமும் அதிக வரி விதிக்க ஆரம்பித்தது; வரி வசூலிப்பும் கண்டிப்பாக இருந்தது. ஆகவே, விவசாயியைப் பொறுத்தவரையில் பழைய சுமை போய் புதுச் சுமை வந்தது என்னலாம்.

‘மழை விட்டும் தூவானம் விடவில்லை’ என்ற பழமொழி ரஷ்ய விவசாயியின் நிலைக்கு அப்படியே பொருந்தும். நிலப்பிரபுவிடமிருந்து அவன் விடுதலைப் பெற்றான்; ஆனால், ஊர்ப் பொதுச்சபையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள இயலாது தவித்தான். இச் சபை ஊர்வாசிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளானது. அதன் தலைவர் மேயர் (Mayor) என்று அழைக்கப்பட்டார். விடுதலைக்கு முன்னர், இச் சபை வரிப் பணம், நிலப்பிரபுவுக்கு செலுத்தவேண்டிய கூட்டுப் பணம் ஆகியவற்றை வசூலித்தல், நிலப்பங்கீடு செய்தல் முதலிய வேலைகளைச் செய்துவந்தது. சட்டம் அமைதி ஒழுங்கு முதலியவற்றை நிலப்பிரபு அமுல் நடத்தி வந்தான். ஆனால், விடுதலைக்குப் பின்னர் நிலப்பிரபு செய்துவந்த அலுவல்களையும் ஊர்ப் பொதுச்சபையே மேற்கொண்டது. இதன் காரணமாக இச் சபையின் பலமும், முக்கியத்துவமும், அது ஊர் மக்களின்மீது வைத்திருந்த பிடிப்பும் அதிகரித்தன. இப் புதுக் கட்டுப்பாடு விவசாயிக்குப் பல இன்னல்களை இழைத்தது.

நிலப் பங்கிட்டு முறையைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். விவசாயிகளிடையே உள்ள ஏற்றத்தாழ்வு அதிகரிக்காமல் இருக்கும் பொருட்டு 12 அல்லது 15ஆண்டுகளுக்கொரு முறை நிலம் மறுபங்கீடு செய்யப்பட்டது என்றும் கண்டோம். இதன் விளைவைப் பற்றியும் சிறிது ஆராய்வது அவசியம். காலப்போக்கில் மக்கள் தொகை பெருகிக்கொண்டே இருந்தது. ஆனால், அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நிலம் அதற்கேற்ப அதிகரிக்கவில்லை. ஆகவே, நாள் செல்லச் செல்ல ஒவ்வொரு குடும்பத்தின் சம்ரட்சணைக் கென்றும் கொடுக்கப்பட்ட நிலம் குறுகிக்கொண்டே வந்தது. 1870-ல் மூன்றில் இரு பகுதியினருக்கு உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத குறைந்தபட்ச வருவாய் (Subsistence) கூடக் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. 1897-ல் எடுத்த இன்னொரு கணக்குப்படி மொத்தம் 45 மில்லியன் விவசாயக் குடும்பங்களிருந்தன. அவர்களில் 10 சதவிகிதத்தினருக்கு மட்டுமே, தங்களுக்கும் தங்கள் ஆடுமாடுகளுக்கும் போதிய வருவாய் கிடைத்ததென்று கூறப்படுகிறது.

வயிற்றுக்கு உணவில்லாத விவசாயிகள் வரிப்பளுவினால் அழுந்தினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாங்கம் பொருளாதாரத்தில் அதிமாகத் தலையிட்டது. ஆலைகள் அமைத்தல், இருப்புப்பாதைகள் ஏற்படுத்துதல்,இராணுவ பலத்தைப் பெருக்குதல் போன்றபல வேலைகளில் அரசாங்கம் முனைந்துநின்றது. இதன் காரணமாக ஏற்பட்ட செலவுகளை ஈடுசெய்ய மக்கள்மீது அதிக வரிச்சுமையை விதித்தது. ஏற்கெனவே குறைவயிறுயிருந்த விவசாயியை இவ் வரிச்சுமை ஒடுக்கி அரைவயிறுக்கியது.

வருவாய் போதாத காரணத்தால் வெளியிடங்களுக்குச் சென்று ஏதாவது தொழிலை மேற்கொண்டு பொருளீட்டலாம் என்றால் அதற்கும் பல தடைகள். அரசாங்கம் வரிகளை மொத்தமாக ஊர்ப் பொதுச்சபை மூலம் வசூலித்தது. ஊர்ப் பொதுச்சபை அத் தொகையைத் தனிப்பட்ட விவசாயக் குடும்பங்களிடமிருந்து வசூலித்தது. இப்படியிருக்க,வரி செலுத்தக்கூடியவர்களின் எண்ணிகைக் குறைந்தால் எஞ்சியவர்களின்மீதுள்ள வரிச்சுமை அதிகமாகும். ஆகவே விவசாயிகள் தொழில் நாடி, கிராமங்களை விட்டுப்போவதை ஊர்ப் பொதுச்சபை விரும்பவில்லை. சரியான உத்திரவாதங்கள் இல்லாமல் கிராமங்களை விட்டுக் கிளம்புவதென்பது இலகுவான காரியமல்ல. விடுதலைக்கு முன்னராவது பிடிக்காத ஒரு நிலப்பிரபுவிடமிருந்து தப்பி வேறொரு நிலப்பிரபுவிடம் தஞ்சமடைவது அவ்வளவு கடினமல்ல. விடுதலைக்குப் பின்னரோ ஊர்ப் பொதுச்சபையின் அனுமதியின்றி ஊரைவிட்டுக் கிளம்புவது கடினமாக இருந்தது. ஆகவே, விடுதலைப்பெற்ற விவசாயி நிலத்தோடு பிணைக்கப்பட்டான். சுருங்கச் சொன்னால் வருவாய் குறைந்தது; வரிச்சுமை மிகுந்தது; செலவினங்கள் பெருகின. வெளியூர் சென்று பொருளீட்டும் உரிமை இல்லை. இவைதான் விடுதலைப் பிரகடனம் அவனுக்களித்த உரிமைகள்.

**ஏற்றத்தாழ்வுகள்**

'சுதந்திரமும் சமத்துவமும் ஒருங்கே வாழா' என்பர். இதுவும் ரஷ்ய விவசாயிகளைப் பொறுத்தவரையில் உண்மையாயிற்று. சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு ஊர்ப் பொதுச்சபை அப்போதைக்கப்போது நிலப்பங்கீடு செய்துவந்தது என்பது உண்மை. ஆனால், இந்த முறை விடுதலைப் பிரகடனத்தின் மூலம் நிலப்பிரபுக்களிடமிருந்து எடுக்கப்பட்ட நிலத்துக்கே பெரும்பாலும் பொருந்தும். அதில்கூட பால்டிக், போலந்து பகுதிகளிலுள்ள மாகாணங்களில் தனி உடைமை நிறுவப்பட்டது என்று அறிந்தோம். அரசனையும் அவன் குடும்பத்தினரையும் சார்ந்த நிலமும் அவ்வாறே தனிஉடைமை என்ற அடிப்படையில் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவைபோக, ஒரு சில விவசாயிகள் தனிப்பட்ட முறையில் தங்கள் சொந்த முயற்சியால் பரிவர்த்தனை (Commutation) செய்து விடுதலை பெற்றதுமுண்டு. விடுதலைக்குப் பின்னர் சில நிலப்பிரபுக்கள் தங்களுக்குக் கிடைத்த நஷ்ட ஈட்டை ஆடம்பரச் செலவுகளில் வீண் விரயம் செய்து ஓட்டாண்டிகளாயினர்; சிலர் வேலையாள் கிடையாததால் தங்கள் நிலங்களைப் பயிரிட முடியாது இருந்தனர். சிலர் கோலாகல வாழ்க்கையை விரும்பிக் கிராமங்களை விட்டுவிட்டுப் பட்டணங்களில் குடிபுக எண்ணினர். இத்தகைய காரணங்களால் அவர்கள் தங்கள் நிலங்களை விற்க முன்வந்தனர். 1877 முதல் 1905 வரை சுமார்

66·4 மில்லியன் ஏக்கர் நிலத்தை பிரபுக்கள் விற்றுவிட்டதாகத் தெரிகிறது. விவேகமுள்ள சில விவசாயிகள் இவற்றை வாங்கினர். இத்தகைய நிலங்கள் நிலப் பங்கீட்டு முறையில் அடங்கியவையல்ல. ஆகவே, அந்த நிலத்துக்கு உரியவர்கள் தங்களிஷ்டம் போல் நிலத்தை விற்கவும் வாங்கவும் உரிமை பெற்றிருந்தனர். இத்தகைய உரிமையின் காரணமாக ஒரே நிலையில் ஆரம்பித்த பல விவசாயிகளிடையே ஏற்றத்தாழ்வுகள் தோன்றலாயின. வலிமையும், உழைப்பும், சிக்கனமுமுள்ள விவசாயிகள் உயரலாயினர். பலவீனமும், ஊதாரித்தனமும், சோம்பேறித்தனமும் நிறைந்தவர்கள் ஓட்டாண்டிகளாயினர். பஞ்சம், வியாதி முதலிய இயற்கைத் தீங்குகளால் அழிந்த குடும்பங்களும் பல உண்டு. இப்படி முளைத்த ஏற்றத்தாழ்வுகள் நாளடைவில் வளர்ந்ததால், பணக்கார விவசாயி (Kulak or rich peasant), நடுத்தர விவசாயி (middle peasant), சிறு நில விவசாயி (small peasant), நிலமற்ற விவசாயி (agricultural proletariat) என்ற பல வர்க்கங்கள் (classes) வளரலாயின.

கொடுக்கல் வாங்கலும் ஏற்றத்தாழ்வுக்கு ஒரு முக்கிய காரணம். 'குலாக்குகள்' இத் தொழிலில் முனைந்து நின்றனர். கொடும் வட்டி வாங்குவது சாதாரணமாயிருந்தது. சராசரி 40 சதவிகிதம் வட்டி வாங்கப்பட்டது. 60 முதல் 100 சதவிகிதம் அசாதாரணமல்ல. சில இடங்களில் 1200 முதல் 2500 சதவிகிதம் வரைகூட வட்டி வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. லேவாதேவியில் பணம் திரட்டியதுபோலவே குலாக்குகள் கள்ளுக்கடை போன்ற தொழில்களின் வாயிலாகவும் பொருளீட்ட முயன்றனர். இப்படிக் கொடும் வட்டி வாங்கி, கள்ளுக்கடை வைத்துப் பொருளீட்டியவர்களுக்கு ஊர்ப் பொதுச்சபையிலும் செல்வாக்கு உயர்ந்தது. இதன் காரணமாகப் பொதுமக்கள் இவர்களை வெறுத்து 'முஷ்டிகள்' (fists), மிர் விழுங்கிகள் (mir-eaters) என்று அழைத்தனர். ஆகவே, நிலப்பிரபுவிடமிருந்து விடுபட்ட விவசாயி ஈவிரக்கமற்ற 'குலாக்கு'களின் கையில் சிக்கினன் என்றால் மிகையாகாது. 1890-ல் அரசாங்கப் பொருளாதாரக் குழு (Imperial Economic Society) குறிப்பிட்டதுபோல் ஏழை விவசாயிகள் வாரத்தில் சுமார் 4 நாட்கள் பிறருக்காகப் பாடுபட்டு மீந்த நாட்களையே தமக்காகச் செலவிட முடிந்தது. இதிலிருந்து ஏழை விவசாயியின் நிலைமை முன்னிலைமையிலும் மோசமாய் இருந்தது என்பது தெளிவு.

## விவசாயத்தின் நிலை

இப்படிப்பட்ட சூழ்நிலையில் விவசாயம் எப்படி வளரமுடியும்? ஊர்ப் பொதுவில் கண்காணிக்கப்பட்ட நிலம் அளவில் சிறியது. அதுவும் பல கோணங்களில் சிறுசிறு துண்டுகளாகச் சிதறிக்

கிடந்தது. அவை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற ஆவலோ, சக்தியோ விவசாயிகளுக்கில்லை. ஆகவே அவர்கள் தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த 'மூன்று-வயல்-சாகுபடி' (Three-field-system) முறையையும், பழமையான விவசாயக் கருவிகளையும் கையாண்டனர். அதன்காரணமாக அந் நிலங்களின் ஆக்கசக்தி மிகவும் குன்றிப்போயிருந்தது.

தனி உடைமை நிலவிய நிலங்களிலோ ஏற்றத்தாழ்வு மிகுந்திருந்தது. நிலமற்ற விவசாயிகள் வறுமையால் வாடினர். சிறு நிலம் படைத்தோர் போதிய பணவசதி இல்லாமையால இலாபகரமாக விவசாயம் நடத்த இயலவில்லை. ஆனல் நடுத்தர விவசாயியும், பணக்கார விவசாயியும் 19-ஆம் நூற்றுண்டின பிற்பகுதியில் ரஷ்யப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பல மாறுதலால் பெரிதும் பயனடைந்தனர். இக் காலத்தில் ஆலைத்தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் ஆவல்கொண்டது. அதன்பொருட்டு அது உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளுக்கு ஊக்கமளித்து வந்தது. அரசாங்கமும் ஆலைகளை நிறுவுதல், இருப்புப்பாதைகளை அமைத்தல் போன்ற ஆக்கவேலைகளில் முனைந்து நின்றது. இப்படி வளர்ந்த ஆலைகள் தங்களுக்குத் தேவையான உணவுக்கும், கச்சாப் பொருள்களுக்கும் விவசாயிகளை எதிர்நோக்கி நின்றன. அதையொட்டி உள்நாட்டு வாணிபமும் வளர்ந்தது.

ஆலைகளை நிறுவுதற்கும், இருப்புப்பாதைகள் அமைப்பதற்கும் தேவையான இயந்திரங்களும், இதர சாதனங்களும் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டியதிருந்தது. அவற்றிற்குப் பதிலாக ரஷ்யா தன்னிடமுள்ள பல பொருட்களை ஏற்றுமதி செய்வது அவசியமாக இருந்தது. இவற்றுள் மரம், சணல், கோதுமை முதலியன முக்கியமானவை. இப் பொருட்களும் பெரும்பாலும் விவசாயிகளிடமிருந்தே வரவேண்டியதிருந்தது. ஆகவே ஆலை வளர்ச்சியும், வாணிபப் பெருக்கமும் விவசாயத்தைத் தூண்டின; அத் தூண்டுதலுக்கு இசைந்த விவசாயிகள் பெரிதும் இலாபமடைந்தனர். காலப்போக்கில் விவசாயம் வாணிபத்தையொட்டி வளரலாயிற்று.

நிலப்பிரபுக்களில் சிலர் சல்லாபத்தை நாடி விவசாயத்தைப் புறக்கணித்தனர் என்று கண்டோம். ஆனல் சிலர் விதிவிலக்காக அமைந்தனர். ஆலை வளர்ச்சியினுலும், வியாபாரப் பெருக்கத்தினுலும் ஏற்பட்ட வாய்ப்பை இவர்கள் தக்கமுறையில் பயன்படுத்தினர். மாதிரிப் பண்ணைகள் அமைத்தனர். நவீன விவசாய முறைகளைக் கையாண்டனர். விலையுயர்ந்த விவசாயக் கருவிகளையும் இயந்திரங்களையும் இறக்குமதி செய்தனர். இன்ன பல

முயற்சிகளால் இத்தகையோர் மேற்கொண்ட விவசாயம் செழித்தது. விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியும் உயர்ந்தது. உதாரணமாக, 1860-ல் ரஷ்யா 1·5 மில்லியன் டன் தானியங்களை ஏற்றுமதி செய்தது. ஆனால், 1900-ல் ஏற்றுமதி 6 மில்லியன் டன்னாக உயர்ந்தது.

ஆகவே, பொதுவாக ரஷ்ய விவசாயம் பின்தங்கிய நிலையிலிருந்தது. பெருவாரியான விவசாயிகள் போதிய நிலமோ, வருவாயோ இன்றித் தவித்தனர். அதேசமயத்தில் ஆங்காங்கே வளர்ச்சி பெற்ற சில விவசாயத் திட்டுகள் (பண்ணைகள்) செழித்திருந்தன. இதன்காரணமாக, பெரும்பாலான விவசாயிகள் போதிய உணவின்றி வாடிய காலத்தில் ரஷ்யா அதிகமான உணவுப் பொருளை ஏற்றுமதி செய்ய முடிந்தது. ஆனால், அதன் அடிப்படைப் பலவீனம் ரஷ்யப் பொருளாதார வளர்ச்சிக்குப் பல வகையிலும் முட்டுக்கட்டையாக இருந்தது.

முதலாவது, வளர்ந்துவரும் ஆலைகளில் வேலை செய்யத் தொழிலாளர் தேவைப்பட்டனர். ஆனால், கிராமங்களில் உபரியாக இருந்த மக்கள் விவசாயத்தை விட்டுவிட்டு வேறு வேலைகளை நாடிப் பட்டணங்களுக்குச் செல்லவிடாமல் ஊர்ப் பொதுச்சபை தடுத்தது. அதன்காரணமாக வறுமையில் வாடிய விவசாயிகளுக்கு விமோசனம் பிறக்கவில்லை; ஆலைகளுக்கும் தேவையான தொழிலாளர் கிடைக்கவில்லை. இரண்டாவது, நிலப்பசி மக்களை வாட்டியது. விடுதலைப் பிரகடனத்தின் மூலம் கிடைத்ததோ கொஞ்ச நிலம்; அதுவும் மக்கள் பெருக்கத்தால் நாளடைவில் தேய்ந்து சிறுத்தது. போதிய வருவாயில்லாததால் மக்கள் பட்டினி, பஞ்சம், நோய் அறியாமை ஆகியவற்றிற்கு ஆளாகினர். இந் நிலையில் அவர்களிடையே அதிருப்தி அதிகரித்துப் புரட்சி மனப்பான்மை வேரூன்றியது. மூன்றாவது, கிராமங்களில் குலாக்குகளின் கொடுமை பெருகியது. அதற்கு ஆளான ஏழை விவசாயிகளிடையே வெறுப்புணர்ச்சி வளர்ந்தது. அரசாங்கம் வாளாவிருந்ததைக் கண்டு மக்கள் வெகுண்டனர். நான்காவது, வரிச்சுமை. பல கிராமங்களால் வரியைச் சரிவரச் செலுத்த இயலவில்லை. ஆகவே, வரிப்பாக்கி குவிந்துகொண்டு வந்தது. 1900-ல் 75 மில்லியன் ரூபிள் வரிப் பாக்கி இருந்ததாகக் கணக்கிடப்பட்டது. இதில் பெரும்பகுதியை அரசாங்கம் 1904-ல் ரத்துச் செய்தது. ஆனால் அடிப்படையில் மாறுதல் எதுவும் இல்லை. இன்ன பல காரணங்களால் 1905-06-ல் விவசாயிகளின் புரட்சி (peasant revolt) ஏற்பட்டது. அப் புரட்சி அரசாங்கத்துக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்தது. 1905-ல் நிலப்பிரபுக்கள் தங்கள் நிலத்தில் நாலிலொரு பாகத்தை விவசாயிகளுக்கு விற்றனர். இத்தகைய மேற்போக்கான முயற்சிகள்

விரும்பிய பலனளிக்கவில்லை. ஆகவே, அரசாங்கம் சில அடிப்படைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இச் சீர்திருத்தங்கள்தான் ஸ்டோலிப்பின் (Stolypin) சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**ஸ்டோலிப்பின் சீர்திருத்தங்கள்**

1906-ல் அரசாங்கம் ஒரு பிரகடனம் வெளியிட்டது. அதன்படி கிராமங்களிலுள்ள நிலமெல்லாம் ஊர்ப் பொதுச்சபையின் கண்காணிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு உழுது பயிர் செய்த உழவனுக்குச் சொந்தமாக்கப்பட்டது. இரண்டாவது, விவசாயிகள் ஊரைவிட்டு வெளியேருமல் தடுத்து நிறுத்திய கட்டுப்பாடுகள் உடைத்தெறியப்பட்டன. அதன்மூலம் விவசாயி தங்குதடையின்றித் தன்னிஷ்டம் போல் எங்கு வேண்டுமானுலும் போக வர உரிமை பிறந்தது. மூன்ருவது, 1907-ல் வெளியிட்ட மற்ருெரு பிரகடனத்தின்படி, ஊர்ப்பொதுவில் வரி வசூலிக்கும் முறை ஒழிந்தது. அத்துடன் ஊரார் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிப்பாக்கி முழுவதுமாக ரத்துச் செய்யப்பட்டது. வரி கொடுக்க முடியாத ஏழைகளைத் துன்புறுத்தும் வழக்கமும் ஒழிந்தது. நான்காவது, தனிப்பட்ட நபர்கள் அதிகப்படியாக எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்று நிர்ணயித்து, மீதியை ஏழை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய நினைத்தது. அதன்படி கிட்டத்தட்ட 20 மில்லியன் ஏக்கர் நிலம் விநியோகமாயிற்று. மேலும், நிலமில்லாத விவசாயிகள் பலர் சைபீரியா போன்ற வளமிக்க ஆசியப் பகுதிகளில் போய்க் குடியேறுமாறு தூண்டப்பட்டனர். 1907-15 வரை, கிட்டத்தட்ட 2.5 மில்லியன் விவசாயிகள் இத் திட்டத்தின் மூலம் பயனடைந்ததாக அறியப்படுகிறது. இவை போக, கடன் நிவாரணம், வரிக்குறைப்பு, கூட்டுறவு முறையைப் பரப்புதல், விவசாயப் பாங்கு ஏற்படுத்துதல், வாக்குரிமை அளித்தல், கல்வியைப் பரப்புதல் போன்ற பல சீர்திருத்தங்களையும் ஸ்டோலிப்பின் சர்க்கார் செய்ய முன்வந்தது. ஆனுல் இத் திட்டங்களுக்கு எதிர்ப்பு வலுத்தது. அரசாங்கம் அவசரப்படுகின்றது என்றனர் ஒரு சிலர்; மேற்பூச்சு பூசுகிறது என்றனர் வேறு சிலர். நிர்வாக இயந்திரமோ ஊழல் நிறைந்ததாக இருந்தது; இராணுவமும் புரட்சி செய்ய முற்பட்டது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் முதலாம் உலகப் போர் மூண்டது. ஆகவே, இத் திட்டங்கள் முழுவதுமாக அமுல் நடத்தப்படவில்லை. அதன்காரணமாக அவை விவசாயியின் வாழ்க்கையில் திருப்திகரமான மாறுதல் எதையும் ஏற்படுத்த முடியவில்லை. அவர்களது வருவாயைப் பார்த்தால் இது தெற்றென விளங்கும். 1900-ல் ரஷ்யாவில் தனிநபர் வருவாய் 63 முதல் 73 ரூபிள்களாக இருந்ததென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் விவசாயிகளின் சராசரி வருவாய் 34 ரூபிள்தான். 1900-ல் ரஷ்யா இருந்த நிலை 1700-ல் இங்கிலாந்து இருந்த நிலையை ஒத்தது என்னலாம்.[1]

## தொழில் வளர்ச்சி

### விடுதலைக்கு முன்

மகாபீட்டர் (Peter the Great, 1672-1725) என்ற சார் அரசன் ரஷ்யத் தொழில் வளர்ச்சியின் தந்தை என்றுஅழைக்கப் பட்டான். இவன்தான் ரஷ்யாவுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியவன். இத் தொடர்பின் சின்னமாக பீட்டர்ஸ்பர்க் (Petersburg) என்ற நகரை அமைத்து, அதை ஐரோப்பாவின் பலகணி (Window of Europe) என்று அழைக்கலாயினன்.

### மெர்க்கண்டலிஸம் (Mercantilism)

அக்காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே கடுமை யான பொருளாதாரப் போட்டி இருந்து வந்தது. ஒரு நாடு பலம் பெற்று விளங்கவேண்டுமாயின் அதன் பொருளாதார அடிப்படை பலம் பெற வேண்டும் என்று அவர்கள் நம்பினர்கள். ஆகவே, ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்கள் நாடுகளின் பொருளாதாரத்தில் தலையிட்டு அதைப் பலவகையிலும் தூண்ட முயன்றன. காப்பு வரிகளின் (Protective tariffs) மூலம் உழவுக்கும் தொழிலுக்கும் பாதுகாப்பளித்தன. பலவிதச் சலுகைகள் வழங்கின. பண உதவியும் ஈந்தன. ஏற்றுமதிக்கு ஆதரவளித்து இறக்குமதியைத் தடுத்தன. நாடு பிடிக்கும் ஆசையைத் தூண்டி அதன்மூலம் தங்கள் வாணிபத்தையும், பலத்தையும் பெருக்கின. வியாபாரி களுக்குப் பலவிதச் சலுகைகளும் ஏகபோக உரிமைகளும் (Monopolies), சாசனங்களும் (Charters) வழங்கின. வியாபாரக் கப்பல் களையும், கடற்படையையும் கட்டி வளர்த்தன. இத்தகைய முயற்சி களால் தொழில் வளம் பெருகி, வாணிபம் வளர்ந்து, பொன்னும் வெள்ளியும் வந்து குவியும் என்று அவர்கள் நம்பினர்கள். இப் பொருளாதாரக் கொள்கைதான் மெர்க்கண்டலிசம் என்று அழைக்கப்பட்டது.

ஐரோப்பாவுடன் தொடர்புகொண்ட மகாபீட்டரை மெர்க் கண்டலிஸக் கருத்துகள் கவர்ந்தன. ரஷ்யாவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போன்று தொழில் வளமும் வாணிப வளர்ச்சியும் பெறவேண்டுமென்று அவன் விரும்பினன். ஆயின் பல்வேறு இடர்ப்பாடுகள் அவனை எதிர்நோக்கின. முதலாவது, கடல் கடந்து உலக நாடுகளுடன் வாணிபம் செய்வதற்கேற்ற கடற்

[1] Day (c), Op. cit., p-513.

கரையோ, கப்பல்களோ ரஷ்யாவிடம் இல்லை. உள்நாட்டிலும் போக்குவரத்துச் சாதனங்கள் வளர்ச்சி பெறவில்லை. ஆகவே வாணிபம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை. இரண்டாவது, பெரும் வணிகர்களோ முதலாளிகளோ ரஷ்யாவில் இல்லை. அயல் நாட்டு வாணிபம் பெரும்பாலும் வடஐரோப்பாவிலுள்ள ஹான்ஸ் வாணிகக் குழுவிடமே (Hanseatic League) இருந்தது. உள்நாட்டிலோ, ஆண்டோராயினும் அடிமைகளாயினும் நிலத்தையே சார்ந்திருந்தனர். இடைப்பட்ட வகுப்பினரான வணிகரையும், முதலாளிகளையும் உருவாக்க வேண்டுமென்று அரசன் விரும்பினான். ஆயினும் இவ் விருப்பம் ஈடேறவில்லை. வாணிபமோ தொழிலோ இன்றி மூலதனம் (Capital) சேர்வதெப்படி? ஆகவே தொழில் வளர்ச்சிக்கு வழியில்லாதிருந்தது. கிட்டத்தட்டப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலும் ரஷ்யாவில் முதலாளித்துவம் வேரூன்றவில்லை என்னலாம்.

**நால்வகைத் தொழில் முறைகள்**

இக் குறையை நீக்க அரசாங்கம் பல தொழில்களை நிறுவ ஆரம்பித்தது. இவை அரசாங்கத் தொழிற்சாலைகள் State-factories அல்லது Proprietory factories என்று அழைக்கப்பட்டன. இத் தொழிற்சாலைகள் பெரும்பாலும் ராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டே நிறுவப்பட்டன. ராணுவத்துக்கான உடை, செருப்பு, வெடி மருந்துகள், துப்பாக்கி போன்ற பல ஆயுதங்களும் கப்பலுக்கு வேண்டிய பாய்கள் முதலியனவும் அங்கு உற்பத்தி செய்யப்பட்டன. அரசாங்கம் தனது பண்ணைகளிலுள்ள அடிமைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தியது. இதுபோக, பிச்சைக்காரர், சிறை செய்யப்பட்ட குற்றவாளிகள், அனாதைகள், யுத்தக் கைதிகள், போர்வீரரின் மனைவிகள், முதலானோரும் ஆலைகளில் அமர்த்தப்பட்டனர். இத் தொழிற்சாலைகளில் சில பிற்காலத்தில் தனிப்பட்ட முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

தனிப்பட்ட நிலப் பிரபுக்களும் சில தொழிற்சாலைகளை அமைத்தனர். இவற்றிற்குப் பண்ணைத் தொழிற்சாலைகள் (Estate factories) என்று பெயர். இத் தொழிற்சாலைகளிலும் பண்ணை அடிமைகளே பணியாற்றி வந்தனர். நிலத்தில் வேலை செய்வதற்குப் பதிலாக இப் பண்ணை அடிமைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். ஆகவே, அக்காலத்தில் அரசாங்கமும், நிலப் பிரபுக்களுமே பெரும்பாலான தொழிற்சாலைகளைச் சொந்தமாகக் கொண்டிருந்தனர். தொழிற்சாலைகள் நடத்திய பிரபுக்களுக்கு இராணுவ சேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

இவைபோக இன்ஞெரு வகையான தொழிற்சாலைகளும் தோன்றின. இவைகளும் தனி நபர் முயற்சியினுல் தோன்றியவையே. ஆனுல், இவை அரசாங்கத்திடமிருந்து பல சலுகைகளையும், மானியங்களையும் பெற்றன. சிலருக்கு நிலம், கட்டடம், பணம் முதலியன மானியமாக வழங்கப்பட்டன. இன்னும் சிலவற்றில் அரசாங்கத்தைச்சார்ந்த பண்ணையடிமைகள் வேலைக்கமர்த்தப்பட்டனர். இவ்வகைத் தொழிற்சாலைகள் Possession Factories என்று அழைக்கப்பட்டன. இங்கு வேலை செய்த தொழிலாளிகள் முதலாளிக்குச் சொந்தமானவர்களல்லர்; ஆலைக்குச் சொந்தமானவர்கள். அரசாங்க உதவி பெற்ற தொழிற்சாலைகளாதலால், அங்குள்ள தொழிலாளரின் நலன்களை ஒரளவு அரசாங்கம் கண்காணித்து வந்தது.

பண்ணையடிமைகள் ஏதோ கடமையைக் கழிப்பதற்காக மனமில்லாமல் வேலை செய்துவந்தனர். அதன்காரணமாக ஆக்க சக்தி குன்றியிருந்தது. பொருட்களின் தரமும் மட்டமாக இருந்தது. சுதந்திரமாகக் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர் திறமையாய் வேலை செய்யமுடியும் என்று நம்பப்பட்டது. ஆனுல், நிலப்பிரபுக்கள் தங்கள் அடிமைகளை விடுவிக்கத் தயங்கினர். ஓடி விடுவார்களென்று பயந்தனர் போலும். ஊர்க்கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக்கிடந்த விவசாயிகளும் நிலத்தைவிட்டு வெளியேற இயலாமல் இருந்தனர். ஒரு சிலர் மட்டுமே பொருள் கொடுத்து பிரபுக்களிடமிருந்து விடுதலை பெற்றனர். இவர்களின் தொகை நாளடைவில் பெருகியது எனினும் எல்லாத் தொழிற்சாலைகளும் அவர்களால் பயன்பெற முடியவில்லை.

வேலைத்திறனை மேம்படுத்தும் பொருட்டுச் சில பிரபுக்கள் பண்ணையடிமைகளிடம் சில குறிப்பிட்ட வேலைகளைக் கொடுத்து, அவர்களது குடிசைகளில் வைத்து அவ் வேலையைச் செய்துகொண்டு வரும்படித் தூண்டினர். இம்முறையால் நாளடைவில் பண்ணை அடிமைகளின் குடும்பங்களிலுள்ள பலருக்கும் கைத்தொழிலில் பயிற்சி ஏற்பட்டது. அவர்கள் தங்கள் ஓய்வுநேரங்களில் தங்களுக்குத் தேவையான துணி, செருப்பு, படுக்கை, மேசை, நாற்காலி, சட்டி, பானை மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களையும் உற்பத்தி செய்யக் கற்றுக்கொண்டனர். இப்படி வளர்ந்த, தொழில்கள் குடிசைக் கைத்தொழில்கள் (Kustar Industries) என்று அழைக்கப்பட்டன. சில சமயங்களில் ஊரிலுள்ள இளைஞர்கள் ஒரிடத்தில் கூடி நூல் நூற்பதும், துணி நெய்வதும் வழக்கமாயிருந்தது. இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் தொழிலாளிகளல்லர்; விவசாயிகள். அவர்கள் தொழிலை ஓய்வுநேர வேலையாகக் கொண்டிருந்தனர்.

அதன்மூலம் கிடைத்த வருவாய், வறுமையால் வாடிய விவசாயி களுக்குப் பக்கபலமாக அமைந்தது. நாளடைவில் ஒரு சில வணிகர்கள் தொழிலாளரை ஒருங்கு திரட்டிப் பெரிய அளவில் பொருளுற்பத்தி செய்யலாயினர். குறிப்பாக துணி உற்பத்தியில் இம்முறை வேரூன்ற ஆரம்பித்தது. நெப்போலியனது படையெடுப் பால் 1812-ல் மாஸ்கோ அழிக்கப்பட்டதன் காரணமாக, அங்கிருந்த தொழிலாளர் சுற்றியுள்ள கிராமங்களில் போய்ப் புகுந்தனர். ஆகவே, அவர்களது தொழிலனுபவத்தால் குடிசைக் கைத்தொழில் வளர்ந்தது.

மேற்கண்ட நான்கு வகையான தொழிலமைப்புகளும் கைத் தொழிலின் அடிப்படையிலேயே அமைந்தன. பெரிய தொழிற் சாலைகள்கூட இயந்திரங்களை நிறுவவில்லை. ஒரு சில பருத்தி ஆலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருந்தன. நாட்டை இயந்திரமாக்க வேண்டுமென்ற ஆர்வம் அரசாங்கத்திடம் குடி கொண்டிருந்தது. குறிப்பாக, நெப்போலியனது படையெடுப்புக்குப் பின்னர் இயந்திரத்தின் அவசியத்தை ரஷ்யா நன்கு உணர்ந்தது. ஆகவே, நாட்டில் தொழிலறிவைப் பெருக்குவதற்காக அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து தொழில்நிபுணர்களை வருவித்தது; தொழிற் கல்வி பயிலும் பொருட்டுப் பல ரஷ்ய இளைஞர்களை மேல்நாடு களுக்கு அனுப்பிவைத்தது. தொழிற்சாலைகள் நிறுவியவர்களுக்கு நிலம், பணம், காப்பு வரி முதலியன கொடுத்து ஊக்குவித்தது. தானும் பல ஆலைகளை நிறுவ முன்வந்தது. ஆனால் மூலதனம் இல்லாதது பெருங்குறையாக இருந்தது. பத்தொன்பதாம் நூற் றாண்டின் பிற்பகுதிவரை வெளிநாட்டு மூலதனம் கிடைக்க வழி யில்லை. உள்நாட்டிலோ முதலாளிகள் இல்லை. மூலதனம் திரட்டும் பொருட்டு அரசாங்கம் பல வரிகளை விதித்தது. தாடி வரி, வெள்ளரிக் காய் வரி போன்ற விநோதமான வரிகள்கூட விதிக்கப்பட்டன. போதாகுக்றைக்குத் தரங்குறைந்த நாணயங்களும் வெளியிடப் பட்டன. சில மடங்களின் வருவாய்கூடப் பறிமுதல் செய்யப் பட்டது. இருப்பினும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ரஷ்யாவில் இயந்திரங்கள் அபூர்வமாகவே இருந்தன. ஆனால், இயந்திரங்களின் உதவியின்றித் தொழிலுற்பத்தி ஓரளவு வளர்ந்தது. 18ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ரஷ்யாதான் உலகிலேயே அதிகமான இரும்பையும் பித்தளையையும் உற்பத்தி செய்வதென்று அறிகிறோம். 1800-ல்கூட ரஷ்யா இங்கிலாந்துக்கொப்ப இரும்பு உற்பத்தி செய்துவந்தது. ஆனால், 1800-1850 வரையுள்ள காலத்தில் இங்கிலாந்து ரஷ்யாவைவிடப் பல படிகள் முன்னேறி விட்டது. இக்காலத்தில் ரஷ்யாவின் இரும்பு உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்தது; இங்கிலாந்தின் இரும்பு உற்பத்தியோ

10 மடங்காக உயர்ந்தது. ஆகவே, 1860-ல் ரஷ்யா ஆலைத் தொழில் வளர்ச்சியில் 10ஆவது இடத்தை அடைந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. எந்த அளவுக்கு அங்கு தொழில் வளர்ச்சி ஏற்பட்டது என்பதைப் பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

அட்டவணை 1

**1770-1860 வரை ரஷ்யாவிலுள்ள தொழிற்சாலைகளும் தொழிலாளரும்**

| ஆண்டு | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | தொழிலாளரின் எண்ணிக்கை ('000) |
|---|---|---|
| 1770 | 190-க்கு மேல் | 60 (சுமார்) |
| 1804 | 2399 | 95·2 |
| 1811 | 2421 | 137·8 |
| 1820 | 4578 | 179·6 |
| 1830 | 5453 | 253·9 |
| 1840 | 6863 | 435·8 |
| 1850 | 9843 | 501·6 |
| 1860 | 15,338 | 565·1 |

Source: Schwartz (H), opt. cit., P.57

நெப்போலியனது படையெடுப்பிலிருந்து ரஷ்யத் தொழில் வளர்ச்சி எவ்வளவு துரிதமாக இருந்தது என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரியவரும்.

**விடுதலைக்குப் பின்**

நாட்டை இயந்திரமயமாக்குவதில் பல இடர்ப்பாடுகளிருந்தன என்று கண்டோம். மூலதனம் படைத்த முதலாளிகளோ, உரிமை பெற்ற தொழிலாளரோ இல்லை; பண்டங்களைப் பல்வேறு இடங்களுக்கும் பரிமாறும் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லை; அப்படிக் கொண்டுசெல்லப்படும் பொருட்களைப் பணம் கொடுத்து வாங்கும் சக்தி படைத்த பொதுமக்களும் இல்லை, இக் குறைகளைப்

போக்குவதில் ரஷ்யா எந்த அளவுக்கு வெற்றி கண்டது என்று காண்போம்.

1861-ல் வெளியிடப்பட்ட விடுதலைப் பிரகடனம் விவசாயிகளுக்கு நிலம் வழங்க விரும்பியதேயன்றி உரிமை பெற்ற தொழிலாளி வர்க்கத்தை உருவாக்க முயலவில்லை. உண்மையில் பெரும்பாலான விவசாயிகள் நிலத்தோடு பிணைக்கப்பட்டனர். அப்போது வழக்கிலிருந்த வரி வசூலிப்பு முறையினால் விவசாயிகள் ஊரடிமைகளாயினர். இம்முறை 1905ஆம் ஆண்டுவரை நீடித்ததெனினும், 1890-க்குப் பின் வரி செலுத்துவதிலிருந்த பரஸ்பர உத்தரவாதம் (mutual guarantee) ஓரளவு தளர்த்தப்பட்டதன் காரணமாக, ஒரு சில ஏழை விவசாயிகள் தொழிற்சாலைகளை நோக்கி நகர ஆரம்பித்தனர். ஆனால் தொழிற்சாலைகள் அவ்வளவு கவர்ச்சிகரமாக இல்லை. அதிக வேலை, குறைந்த ஊதியம். ஆகவே தங்கள் விடு நேரங்களைக் குடிசைக் கைத்தொழில் அல்லது கூட்டுறவுக் கைத்தொழில்களில் (Artel) செலவிட்டனரேயன்றித் தொழிற்சாலையை நாடி ஓடவில்லை. எனவே, வளர்ந்து வரும் ஆலைகளுக்கு அவசியமான தொழிலாளர் போதிய அளவில் கிடைத்தனர் என்று சொல்ல இயலாது. அதற்கு மாறாக, விடுதலை கிடைத்த காரணத்தால் ஆயிரக்கணக்கான பண்ணையடிமைகள் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளை விட்டு வெளியேறினர். இப்படி நிலத்திலே குவிந்துகிடந்த விவசாயிகள் வறுமையால் வாடிய காரணத்தால் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்கும் சக்தியில்லாதிருந்தனர்.

விடுதலைப் பிரகடனத்தால் விளைந்த நன்மைகளும் உண்டு. முக்கியமாகக் கிராமங்களின் சுயதேவைப் பூர்த்தியும், பண்டமாற்று முறையும் ஒழிந்து, பெரும்பாலான மக்களிடையே பணப்புழக்கம் அதிகரித்தது. இது வாணிபம் வளருவதற்கு வழி வகுத்தது. விவசாயிகள் சன்னஞ்சன்னமாகத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்க முற்பட்டனர். அப்படி வாங்கிய பொருட்களுக்குப் பதிலாக விவசாயிகள் தங்களிடம் உபரியாக இருந்த உணவுப் பொருட்களையும், கச்சாப் பொருட்களையும் விற்றுப் பணமாக்க வேண்டியதிருந்தது. மிக எளிய விவசாயிகள் அதிகமாக விற்கவோ வாங்கவோ முடியாமல் இருந்தனர். எனினும் நடுத்தர, பணக்கார விவசாயிகளும், பிரபுக்களும் உபரிப் பொருட்களை அதிகமாக விற்கத் தலைப்பட்டனர். இப்படி விற்கப்பட்ட விவசாயப் பொருட்கள் ஆலை வளர்ச்சிக்கும் அயல்நாட்டு வாணிபத்திற்கும் அடிப்படையாக அமைந்தன. பணப்புழக்கம் பெருகப் பெருக விவசாயம் மேன்மேலும் வியாபாரத்தையும் தொழிலையும் ஒட்டி வளரலாயிற்று.

**இருப்புப்பாதைகள்**

ஆதியிலிருந்தே போதிய போக்குவரத்துச் சாதனங்களில்லாமை ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருந்து வந்தது. கப்பல்கள் செல்லக்கூடிய ஆழமான நதிகள் இருக்கத் தான் செய்தன. ஆனல் அவற்றின்மூலம் நாடு முழுவதும் பிரயாணம் செய்ய முடியாது. மேலும் ஆண்டில் பல மாதங்கள் இந் நதிகள் உறைந்து போயின. ஆகவே நிரந்தரமான போக்குவரத்துக்கு அவை உதவவில்லை. ரஷ்யாவிலுள்ள ஒரு சில கால்வாய்களும் அவ்வளவு பயனுள்ளவையாக இல்லை. அமெரிக்காவில் உள்ளது போல் அத்தனை கடற்கரையும் இல்லை. இக் குறை போக்குவரத்திற்கும், வியாபார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருந்துவந்தது. இருப்புப்பாதைகள் அமைப்பதன் மூலம் அரசாங்கம் இக் குறையை நிவர்த்தி செய்ய முன்வந்தது.

இருப்புப்பாதைகள் அமைப்பதென்றல் இலகுவான காரியமல்ல. தண்டவாளங்கள், எஞ்சின்கள், வண்டிகள், பாலங்கள் முதலிய விலையுயர்ந்த உபகரணங்களுக்காக ஏராளமான மூலதனம் வேண்டும். இத்தனை பெரிய தொகையை நீண்ட காலம் ஈடுபடுத்தும் சக்தியோ, துணிவோ கொண்ட முதலாளிகள் ரஷ்யாவில் இல்லை. அரசாங்கமும் பணமுடையால் திணறியது. இந் நிலையில் அது அயல்நாட்டு மூலதனத்தை விரும்பி வரவேற்றது. 1836-லிருந்தே இருப்புப்பாதைகள் பல அமைக்கப்பட்டனவெனினும் 1856 வரை இம் முனையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை. இக் காரணத்தால் கிரிமியப்போரில் ரஷ்யா திறமையுடன் போரிட முடியவில்லை. ஆகவே, அதன்பின்னர் இத் துறையில் துரிதமான முன்னேற்றம் காண முனைந்தனர். 1878 வரை ஆண்டொன்றுக்கு 600 மைல் வீதம் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன. 1881-லிருந்து அரசாங்கமும் இவ் வேலையில் நேரடியாக ஈடுபட்டது. ஆகவே, 1885 முதல் 1905 வரை போக்குவரத்து விறுவிறுப்பாக வளர்ந்தது. 1885 வரை மொத்தம் 16,155 மைல் தூரம் மட்டுமே இருப்புப்பாதைகளால் இணைக்கப்பட்டிருந்தது. ஆனல் 1905-ல் இது 40,500 மைலாக நீடிக்கப்பட்டது. ஆசியப் பகுதிகளை ஊடுருவிச் செல்லும் சைபீரிய ரயில் பாதை (Trans Siberian Railway) 1891-ல் தொடங்கி 1905-ல் முற்றுப்பெற்றது. அதன் நீளம் 5500 மைல். நாளடைவில் இருப்புப்பாதைகள் அமைப்பதில் அரசாங்கத்தின் பங்கு அதிகரித்தது. 1900-ல் மொத்த இருப்புப்பாதையில் 60 சதவிகிதம் அரசாங்கத்துக்குச் சொந்தமாக இருந்தது. 1914-ல் அந்த விகிதம் 70 ஆக உயர்ந்தது. 1914-ல் இருந்த இருப்புப்பாதைகளின் மொத்த நீளம் 47,479 மைல்.

அதில் 33,928 மைல் அரசாங்கத்திடமிருந்தது. எஞ்சியவற்றின்மீது அரசாங்கத்தின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் நாளுக்கு நாள் வளரலாயின.

போக்குவரத்துச் சாதனங்களின் ராணுவ, அரசியல் முக்கியத்துவங்களை விவரிக்க அவசியமில்லை. ஆனால், பொருளாதார வளர்ச்சிக்கு அது எவ்வளவு அடிப்படையானது என்று அறிவது அவசியம். முதலாவது, போக்குவரத்துச் சாதனங்கள் பொருட்களைக் குறைந்த செலவில் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டு செல்ல உதவுகின்றன. ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களையும், கனிப்பொருட்களையும் குறைந்த செலவில் வெகுதூரம் கொண்டு செல்வதால் ஆலைகளின் உற்பத்திச் செலவுகள் கணிசமாகக் குறைய வழியுண்டு. உற்பத்திச் செலவுகள் குறைந்தால் பொருட்களின் விலை குறையும். மலிவான பொருட்களை மக்கள் விரும்பி வாங்குவர். தேவை அதிகரிக்கும். சந்தை வளரும். ஆகவே பொருட்களை இயந்திரங்களின் துணைகொண்டு பெரிய அளவில் உற்பத்தி செய்ய முடியும். உள்நாட்டுத் தேவை மட்டுமன்றி வெளிநாட்டுத் தேவையும் அதிகரிக்கும். ஆகவே வாணிபம் பெருகும். இரண்டாவது, இருப்புப்பாதைகளுக்கே பல தேவைகள் ஏற்படும். பாதைகளமைக்க வேண்டிய கல், மரம், தண்டவாளம் முதலியனவும், அதன்மீது ஊர்ந்து செல்லும் வண்டிகளும்; அவற்றை இழுத்துச் செல்லும் எஞ்சின்களும், அவற்றை இயக்க உதவும் நிலக்கரி முதலியனவும் தேவைப்படும். அதன் காரணமாக அவற்றை உற்பத்திசெய்யும் ஆலைகளும், பழுதுபார்க்கும் எஞ்சினியரிங் ஆலைகளும் மிகவும் பயனடையும். இப்படி நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடிய போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, ரஷ்யாவின் தொழில் வளர்ச்சிக்கும் வாணிபப் பெருக்கத்துக்கும் பெருமளவில் துணை புரிந்தது.

### தொழில் வளர்ச்சி

போக்குவரத்துச் சாதனங்கள் அமைப்பதற்கு மட்டுமன்றி ஏனைய தொழில்கள் வளர்வதற்கும் அயல்நாட்டு மூலதனம் அவசியமாக இருந்தது. மூலதனமும், துணிவுமிக்க முதலாளிகளும் இல்லாக் குறையால் அரசாங்கம் பிறர் உதவியின்றித் தன்னிந்தனியாக ஆலை வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் திறனற்று இருந்தது. ஆகவே அயல்நாட்டு மூலதனம், இரும்பு, நிலக்கரி, எண்ணெய், துணி முதலிய சகல துறைகளின் உற்பத்தியிலும் ஈடுபடலாயிற்று. மூலதனம் மட்டுமன்றி தொழில் நிபுணர்களும், இயந்திரங்களும், இதர சாதனங்களும் வெளிநாடுகளிலிருந்தே

வரவேண்டியிருந்தது. பரந்த அடிப்படையிலே தொழில்களை வளர்க்க விரும்பிய ரஷ்யா எதற்கெடுத்தாலும் இறக்குமதியை நம்பி வாழ விரும்பவில்லை. இறக்குமதி செய்த பொருட்களை அயல் நாட்டவரின் உதவிகொண்டு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய விரும்பியது. இக் குறிக்கோளை அடையும் பொருட்டே காப்பு வரி (Protectionist duties) முறையைக் கையாள முற்பட்டது.

**காப்பு வரி**

உதாரணமாக, 1875 வரை இருப்புப்பாதைகள் அமைக்க வேண்டிய சகல சாதனங்களும் பெரும்பாலும் இறக்குமதி செய்யப் பட்டன. இதைக் கண்ட அரசாங்கம் இரும்பின்மீது கடுமையான காப்பு வரியை விதித்தது. அதன் காரணமாக 1876-க்குப் பின் இருப்புப்பாதைகள் பயன்படுத்திய இரும்பிலும், எஃகிலும் பாதிக்குமேல் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. அதைப் போலவேதான் இதர தொழில்களும். 1880-க்குப் பின் இத்தகைய வரிகள் அதிகமாக்கப்பட்டன. ஆகவே, வெளிநாட்டு மூலதனம் காப்பு வரிகளின் பாதுகாப்பின்கீழ் உள்நாட்டிலேயே ஈடுபடுத்தப் பட்டது. இதன் காரணமாக ஆலை வளர்ச்சி துரிதப்படுத்தப் பட்டது. 1893-க்குப் பின்னர் கவுண்ட் செர்ஜியஸ் விட்டி (Count Sergius Witte) என்பவர் நிதிமந்திரியானபோது ஆலைத்தொழில் வளர்ச்சியில் அரசாங்கத்தின் பங்கு அதிகரித்தது. 'அதிக வட்டி கொடுத்தாலும் பரவாயில்லை; முதற்கருவிப் பொருட்களை இறக்குமதி செய்யவேண்டும்' என்பது அவரது கொள்கை. அதற்கிணங்க அரசாங்கம் அயல்நாடுகளிடமிருந்து கடன் வாங்கி இருப்புப் பாதைகள், இரும்பு, ரயில் எஞ்சின்கள். இரசாயனப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிக்கவும், மரம் அறுத்தல் முதலிய தொழில் களை நிர்மாணிக்கவும் தொடங்கியது. 1894-1914 வரை கிட்டத்தட்ட 200 மில்லியன் ரூபிள் அயல்நாடுகளிடமிருந்து அரசாங்கம் கடன் வாங்கியதென்று தெரிகிறது. அதைப் பின்பற்றி ஒரு சில ரஷ்ய முதலாளிகளும் தங்கள் மூலதனத்தை ஆலை வளர்ச்சியில் ஈடுபடுத்த ஆரம்பித்தனர்.

துணி ஆலைகள்தாம் எல்லாவற்றிலும் முதலிடம் வகித்தன. 1850-க்கு முன்னரே இது ஓரளவு வளர்ந்திருந்தது. அதன் பின்னர் இயந்திரங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நூலைக்கொண்டே துணி நெய்யப் பட்டது. பின்னர், நூற்பதும் நெய்வதும் உள்நாட்டிலேயே நடைபெறலாயிற்று. நாளடைவில் சணல், கம்பளி, பட்டு முதலி யனவும் உற்பத்தி செய்யப்பட்டன. பருத்தி ஆலை வளர்ச்சியிலும் அயல்நாட்டு மூலதனத்துக்குப் பங்குண்டு. ரஷ்ய முதலாளிகளும்

நாளடைவில் பருத்தி ஆலைகளை நிறுவ முன்வந்தனர். அதன் காரணமாக நூல் சுற்றும் கதிர்களின் எண்ணிக்கையும், நெசவுத் தறிகளின் எண்ணிக்கையும் உயர்ந்தது. 1914-ல் கிட்டத்தட்ட 8·5 மில்லியன் கதிர்களும், 220,000 தறிகளும் இருந்தன. அவற்றிலிருந்து கிடைத்த துணி பெரும்பாலும் சுய தேவையைப் பூர்த்தி செய்தது. ஒரு சில உயர்ந்த ரகத் துணிகள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டன. ஆலைகள் இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்தியபோதிலும், கைத்தறிகள் உடனடியாக அழிந்து போகவில்லை. குறிப்பாக முரட்டுரகத் துணிகளை உற்பத்தி செய்து கிராம மக்களிடையில் விற்பதில் அவை வெற்றி கண்டன.

விடுதலைக்குப்பின் நிலக்கரி, எண்ணெய், இரும்பு முதலியவற்றின் உற்பத்தி நவீன இயந்திர சாதனங்களுடன் முன்னேறியது. இத் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியை அட்டவணை 2 நன்கு விளக்கும்.

அட்டவணை 2

**குறிப்பிட்ட ஒருசில ரஷ்யத் தொழில்களின் பொருள் உற்பத்தி 1860—1913**

| பொருள் | அளவை | 1860 | 1870 | 1880 | 1890 | 1900 | 1913 |
|---|---|---|---|---|---|---|---|
| நிலக்கரி | மில்லியன் பூட் (Pood) | 18·3 | 42·4 | 200·9 | 367·2 | 995·2 | 2214·0 |
| எண்ணெய் (Petroleum) | ” | — | 1·8 | 34·0 | 241·0 | 632·0 | 561 |
| வார்ப்பிரும்பு | ” | 19·6 | 20·7 | 26·1 | 55·2 | 176·8 | 283 |
| இரும்பும், எஃகும் | ” | 12·4 | 14·5 | 35·3 | 48·4 | 134·4 | 247 |

குறிப்பு: 1 பூட் (Pood) = 36·1 பவுண்டு (lbs.)
Source; Schwartz (H), opt. cit., P. 61

**அயல்நாட்டு மூலதனம்**

மேலேகண்ட தொழில் வளர்ச்சி பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூலதனம், தொழிலறிவு முதலியவற்றின் அடியாகப் பிறந்ததேயாகும். 1890-ல் ரஷ்யாவில்

இருந்த கூட்டுப் பங்கு கம்பெனி (Joint Stock Company) களின் மொத்த மூலதனத்தில் மூன்றில் ஒரு பகுதி அயல்நாட்டுக்குச் சொந்தமாக இருந்தது. 1900-லோ அயல்நாட்டின் பங்கு பாதியாக உயர்ந்துவிட்டது. ஃபிரான்சு, இங்கிலாந்து, பெல்ஜியம், அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து இம் மூலதனம் வந்தது. ஒரு கணக்குப்படி 1916-17-ல் ரஷ்யாவிலிருந்த அயல்நாட்டு மூலதனத்தின் மொத்த மதிப்பு 2·2 பில்லியன் ரூபிள்கள். அதில் ஃபிரான்சுக்கு 32 சதவிகிதமும், இங்கிலாந்துக்கு 22·6 சதவிகிதமும், ஜெர்மனிக்கு 19.7 சதவிகிதமும், பெல்ஜியத்திற்கு 14·3 சதவிகிதமும், அமெரிக்காவுக்கு 5·2 சதவிகிதமும் சொந்தமாக இருந்ததாகத் தெரிகின்றது.[1]

சில குறிப்பிட்ட துறைகளில் முதலீடு செய்வதில் அயல் நாட்டினர் அதிகக் கவனம் செலுத்தியதாகத் தெரிகிறது. உதாரணமாக, சுரங்கத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தில் 91 சதவிகிதம் வெளிநாட்டிலிருந்து வந்தது. இவ் விகிதம் ரசாயனத் தொழிலில் 50 ஆகவும், உலோகத் தொழிலில் 42 ஆகவும், மரத் தொழிலில் 37 ஆகவும், துணி ஆலைகளில் 28 ஆகவும் இருந்தது. அதுமட்டுமின்றி. ஒவ்வொரு துறையிலும் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் பெரும்பகுதி ஒரு சில ஆலைகளின் கையிலேயே குவிந்துகிடந்தது என்றும் அறிகிறோம். 1914-ல் 500-க்கு மேற்பட்ட தொழிலாளரைக்கொண்ட பெரிய ஆலைகளில் மொத்தத்தில் 53 சதவிகிதம் தொழிலாளர் வேலை செய்து வந்தனர். அதேகாலத்தில் அமெரிக்காவில் 31 சதவிகிதம் தொழிலாளரே பெரிய ஆலைகளில் வேலை செய்தனர். மேலும் மொத்த இரும்பில் 50 சதவிகிதம் 9 ஆலைகளால் உற்பத்தி செய்யப்பட்டது. தண்டவாள உற்பத்தியில் பத்தில் ஒன்பது பகுதி ஏழே ஆலைகளிலிருந்து கிடைத்தது. குறிப்பாக, டோன்ட்ஸ் பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களும், கிரிவாய் ராக் (Krivoy Rog) இரும்புச் சுரங்கங்களும் பிரிட்டிஷ் முதலாளியான ஜான் ஹக்ஸ் (John Hughes) கையிலிருந்தது. அதேபோல் ஸ்வீடனைச் சேர்ந்த நோபலும் (Nobel), ஒருசில பிரெஞ்சு, பிரிட்டிஷ் முதலாளிகளின் உதவியுடன் பாகு (Baku) எண்ணெய்க் கிணறுகளைத் தமதாக்கினர். துணி ஆலைகளில் ஜெர்மனியைச் சேர்ந்த லட்விக் நூப் (Ludwing Knoop) மிகவும் பலம் பெற்று விளங்கினர்; மான்செஸ்டரிலுள்ள பல தொழில் நிபுணர்களை அவர் வேலையில் அமர்த்தியிருந்தார். பல இருப்புப்பாதைகள் பிரெஞ்சுக்காரரின் கையில் இருந்தன. மேற்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து எப்படி ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பல ஆலைகள் அயல்நாட்டு முதலாளிகளிடம் சிக்கி இருந்தன என்பது விளங்கும்.

[1]Schwartz (H), Opt, Cit., P. 63

**வெளிநாட்டு வாணிபம்**

போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல் ஆலைத்தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது என்று கண்டோம். இனி அயல்நாட்டு வாணிபத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் என்ன? இதில் அரசாங்கத்தின் பங்கென்ன? என்பவற்றைப் பார்ப்போம்.

**மெர்க்கண்டலிஸம்**

மகாபீட்டர், கால்பர்ட்டின் (Colbert) பரம்பரையை ஒட்டிய மெர்க்கண்டலிஸக் கருத்துக் கொண்டிருந்தான். எனவே, இறக்குமதியைத் தடுத்து ஏற்றுமதியைப் பெருக்கி நாட்டின் செல்வத்தை வளர்க்க எண்ணினான். அவனுக்குப்பின் வந்தவர்கள் தடுப்பு முறைகளையும் சுங்க வரிகளையும் ஓரளவு தளர்த்த முயன்றனரெனினும், நெப்போலியப் போரின்போது பீட்டரின் அடிச்சுவட்டையே பின்பற்ற வேண்டியதாயிற்று. ஆனால் இந்தத் தடுப்பு முறையால் பல இடையூறுகள் ஏற்பட்டன. முதலாவது, இலாப வேட்கைகொண்ட வியாபாரிகள் பலர் தடுக்கப்பட்ட பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்த முயன்றனர். அதன்காரணமாக, அரசாங்கத்துக்குக் கிடைக்கக்கூடிய சுங்க வரியும் கிடைக்காது போயிற்று. இரண்டாவது, ரஷ்யாவைப் போன்றே இதர நாடுகளும் இறக்குமதிக்குத் தடைகள் விதித்தன. அதனால் நாடுகளிடையே வாணிபம் குன்றியதேயன்றி நன்மை எதுவும் ஏற்படவில்லை. ஆகவே, 1824ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஷ்யா இறக்குமதியைத் தடுப்பதை விடுத்து, வளர்ந்துவரும் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்தது. 1844-க்குப் பின் இங்கிலாந்து மெர்க்கண்டலிஸத்தைக் கைவிட்டு, தங்குதடையற்ற வாணிபமுறை (free trade) யைக் கடைப்பிடிக்கலாயிற்று. இதையொட்டி ரஷ்யாவும் தனது சுங்க வரிகளைத் தளர்த்தியது. குறிப்பாக, கிரிமியப் போருக்குப் பின் கொஞ்சங் கொஞ்சமாகச் சுங்க வரிக் குறைப்புச் செய்யப்பட்டது. இந்தப் போக்கு 1877 வரை நீடித்தது என்னலாம். உதாரணமாக, 1851-56-ன் இறக்குமதியின் மொத்த மதிப்பில் கிட்டத்தட்ட நாலிலொரு பகுதி, பெறுமான விகித (advalorem) வரியாக அமைந்தது. இந்த வரி 1869-766-ல் 12·8 சதவிகிதமாகக் குறைந்தது.

வரி குறைந்ததன் காரணமாக ஏற்றுமதியும் இறக்குமதியும் வளரலாயின. இறக்குமதியில் இருப்புப்பாதைகள் அமைப்பதற்கு வேண்டிய உபகரணங்களும், ஆலைகள் நிறுவுவதற்கான சாதனங்களும் முக்கிய இடம்பெற்றன. அத்துடன் விடுதலைப் பிரகடனத்தின்

படி நஷ்டஈடு பெற்ற பிரபுக்களின் ஆடம்பர நுகர்வுப் பொருட்களும், இதர பொறிசெய் பொருட்களும் இறக்குமதியாயின. இறக்குமதியை ஈடுசெய்ய ஏற்றுமதியும் அதிகரித்தது. கோதுமை, பார்லி, ரை, எண்ணெய் வித்துக்கள், சணல், நார், மரம், சர்க்கரை, பீட் முதலிய விவசாயப் பொருட்களும், கச்சாப் பொருட்களும், ஏற்றுமதியில் முக்கிய இடம் வகித்தன. இப்படி வளர்ந்த ஏற்றுமதியின் காரணமாக விவசாயமும் வாணிபத்தை யொட்டி வளரலாயிற்று.

இப்படி வளர்ந்துவந்த வாணிபம் திருப்திகரமானதாக இல்லை. முதலாவது, குறைந்த வரியின் காரணமாக அனுவசியமான ஆடம்பரப்பொருள்கள் பல இறக்குமதியாயின. இரண்டாவது. அயல் நாட்டு முதலாளிகளின் உதவியால் அமைக்கப்பட்ட ஆலைகளும், இருப்புப்பாதைகளும் தங்களுக்குத் தேவையான உபகரணங்களை யெல்லாம் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக வெளி நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்ய முயன்றன. இக் காரணங்களினுல் ரஷ்யாவின் தொழில் வளர்ச்சி பலவகையில் தடையுற்றது. முதற்கண், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான சேமிப்பு, ஆடம்பரப் பொருட்களில் வீண்விரயம் செய்யப்பட்டது. இரண்டாவது, ரஷ்யாவிலேயே இலகுவில் உற்பத்தி செய்யக்கூடிய பல பொருள்கள் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அதன் காரணமாக ரஷ்யா விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து பொறிசெய் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடாக மாறி வந்தது.

**காப்பு வரி**

ஆகவே, அனுவசியமான இறக்குமதிகளைக் குறைக்கவும், உள் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குப் பாதுகாப்பு அளிக்கவும் காப்பு வரிகள் விதிக்க வேண்டியது அவசியமாயிற்று. இத் துறையில் ரஷ்யா, ஜெர்மனியைச் சேர்ந்த பிரெடரிக் லிஸ்ட் (Frederick List) என்பவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியது. அதன்காரணமாக 1877-லிருந்து ரஷ்யாவின் சுங்க வரி உயர்ந்தது. குறிப்பாக கவுண்ட் செர்ஜியஸ் விட்டி (Count Sergius Witte) இம் முனையில் மிகவும் துணிவுடனும், திறமையுடனும் செயலாற்றினர். அதன்விளைவாக, 1900-ல் பெறுமான விகித வரி சராசரி 33 சதவிகிதமாக உயர்ந்தது. இது 1850-ல் இருந்ததைக் காட்டிலும் அதிகமாகும். ஒருசில நாடுகளுடன் பரஸ்பர வரிக் குறைப்பு (Reciprocal tariff reductions) நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதிலும், துரிதப் பொருளாதார வளர்ச்சியிலேயே அரசாங்கம் கண்ணுயிருந்தது.

இத்தகைய நடவடிக்கைகளால் பொதுமக்கள் பலர் நுகர்வுப் பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியதாயிற்று. விவசாய இயந்திர இறக்குமதியும் ஓரளவு தடைப்பட்டது. இறக்குமதியைக் கட்டுப்படுத்திய அரசாங்கம் ஏற்றுமதியையும் தூண்டியது. உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்தது. 1862-66-ல், மொத்த ஏற்றுமதியில் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி 4·6 சதவிகிதமாக இருந்தது. 1893-97-லோ இது 15·7 சத விகிதமாக உயர்ந்தது. இந்த ஏற்றுமதி, விவசாயிகள் பலர் பட்டினி கிடந்த காலத்தில் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், 1875-1894 வரை உணவுப் பொருட்களின் விலை உலக மார்க்கெட்டில் குறையலாயிற்று. இது ரஷ்ய விவசாயிகளுக்குப் பாதகமாக இருந்தது. இத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் இக் காலத்தில் ரஷ்யா பொருளாதாரத்தில் கணிசமான முன்னேற்றம் கண்டது என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் லியோன் லெவி (Prof. Leone Levi)யின் கணக்குப் படி 1860-ல், ரஷ்யாவின் தனிநபர் வருவாய் 40 ரூபிளாக இருந்தது. பின்னல் புரோகோ போவிச் (Proko povitch) என்பவர், தனிநபர் வருவாய் 1900-ல் 77 ஆகவும், 1913-ல் 102 ஆகவும் இருந்ததென்று கணக்கிட்டிருக்கிருர். இதிலிருந்து 1860-க்குப் பின் ரஷ்யாவின் பொருளாதாரம் வளர்ந்து வந்ததென்பது தெளிவாக விளங்குகிறது. இதை மனதிற்கொண்டுதான் அமெரிக்கப் பேராசிரியர் ராஸ்டா வும் (Rostow), ரஷ்யா 1890-1914-க்குள் தானுக இயங்கி வளரும் தன்மையை எய்தியது (take-off) என்று குறிப்பிட்டார் போலும்.[1] துரிதமான வளர்ச்சி இல்லையெனினும், ரஷ்யா இக் காலத்தில் வளர்ந்து வந்தது என்பதில் ஐயமில்லை. ஆனுல் இந்த வளர்ச்சி பரவலாக இருக்கவில்லை; ஒரு சில திட்டுகளிலேயே அடங்கியிருந் தது. அதுவும் அயல்நாட்டவரின் பிடிப்பிலே இருந்தது. ஆகவே தான், ரஷ்யா 1917-க்கு முன் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடாகவே கருதப்பட்டு வந்தது. ஆங்கிலப் பேராசிரியர் நௌல்ஸ் (Knowles) கூறுவதுபோல், முதல் உலகப் போருக்கு முன் ரஷ்யா அமெரிக்காவைவிட 50-100 ஆண்டுகள் பொருளாதாரத்தில் பின் தங்கிப் போயிருந்தது என்ருல் மிகையாகாது.[2]

1 Rostow (W.W.), 'The Stages of Economic Growth'-Cambridge, 1960., pp. 37-38.

2 Knowles (L.C.A.), 'Economic Development in the 19-th century', London, 1932., p 87.

## மேற்கொண்டு படிக்க


Day (Clive), 'Economic Development in Europe' 1942., Chs. XXII—XXVI.

Knowles (L.C.A.), 'Economic Development in the Nineteenth Century.'

Lenin (V. I), 'The Development of Capitalism in Russia,' Foreign Language Publishing House, Moscow. 1956.

Part II. Ch.4; Part III, Ch. 3;

Part IV. Ch. 3; Part V Ch. 3.

Mavor (J), 'Economic History of Russia,' 2 Vols., 1925.

Miller (M.S.), 'Russia Economic Development,' 1905-1914-1926.

Ogg. (F.A.) & Shart (W.C.), 'Economic Development of Modern Europe,' (Revised) 1944., Ch. Xv.

Podkolzin (A), 'A Short Economic History of the USSR,' 1968., Chs. I—III.

# 4. போல்ஷெவிக் புரட்சி

## (Bolshevik Revolution)

1. *மார்க்ஸீயக் கோட்பாடுகள்:— மார்க்ஸும்—எங்கல்ஸும்—சூழ்நிலை—கோட்பாடுகள்: முரண்நிலைத் தருக்கச் சடவாதம்—வரலாற்று விளக்கம்—பொருளாதாரக் கருத்துகள்—எதிர்காலம்.*
2. *ரஷ்யாவில் எப்படிப் பரவியது?—இறக்குமதியான சமதர்மம்—சமதர்ம ஜனநாயகக் கட்சியின் தோற்றம்—லெனினும் அவரது கருத்துகளும்—போல்ஷெவிக் கட்சி.*
3. *புரட்சி—உலகப் போரும் பொருளாதார சீர்குலைவும்—இடைக்கால அரசாங்கம்: பிரச்சினைகள்—புரட்சி.*

ரஷ்யப் புரட்சிக்கு அடிகோலிய தலைவர்கள் ஒருசில அடிப்படைக் கொள்கைகளைத் தங்கள் முன்னால் வைத்து இயங்கி வந்தனர். தாங்கள் வாழ்ந்துவந்த சமுதாயத்திலுள்ள ஊழல்களையும் அநீதிகளையும் களைந்தெறிந்துவிட்டுப் புதியதோர் சமுதாயத்தை உருவாக்குவதே அவர்களது அடிப்படை நோக்கம். இத்தகைய நோக்கம் உருவாவதற்குக் காரணமாயிருந்தவர்கள் யார்? அவர்கள் வெளியிட்ட கருத்துகளென்ன? அக் கருத்துகள் எப்படி ரஷ்யாவில் வேரூன்றின? ரஷ்யப் புரட்சிக்கு அவை எவ்வகையில் வழிவகுத்தன என்பவைகளை ஆராய்வது அவசியம்.

## மார்க்ஸீயக் கோட்பாடுகள்

### மார்க்ஸும்-எங்கல்ஸும்

ரஷ்யப் புரட்சி ஒரு கம்யூனிஸ்ட் புரட்சி. நாட்டிலுள்ள பொருளாதார உற்பத்தி, விநியோகம், பரிவர்த்தனை ஆகியவற்றில் தனி உடைமையை ஒழித்துப் பொது உடைமையை நிலைநாட்ட வேண்டும் என்பதே கம்யூனிஸத்தின் அடிப்படை. இக் கருத்தின் காரணகர்த்தாவாக இருநதவர்கள் கார்ல் மார்க்ஸும் (Karl Marx-1818-1883), அவருக்கு உறுதுணையாக இருந்து பலவகையிலும் உதவிய பிடெரிக் எங்கல்ஸும் (Fredeiric Engles) ஆவர். இவர்களில் கார்ல் மார்க்ஸே மிக முக்கியமானவர்.

கார்ல் மார்க்ஸ் ஜெர்மனியைச் சேர்ந்தவர். யூத இனத்தவர். இளமையில் ஜெர்மன் தத்துவ அறிஞரான ஹெகலின் (Hegel)

கருத்துகள் அவரைக் கவர்ந்தன. பின்னர் சில காலம் பத்திரிகை எழுத்தாளராகப் பணியாற்றி வந்தார். அவரது பேனா முனையி லிருந்து கிளம்பிய புரட்சிக் கருத்துகளின் காரணமாக அவர் ஜெர்மனியிலிருந்து வெளியேற்றப்பட்டார். சிறிது காலம் பாரிஸில் காலங் கழித்தார். அங்கேயும் பல புரட்சி நடவடிக்கைகளில் ஈடு பட்டார். ஆகவே, அங்கிருந்து கிளம்பி இங்கிலாந்து செல்ல வேண்டியதாயிற்று. இங்கிலாந்தில் எங்கல்ஸின் தொடர்பு கிடைத் தது. இத் தொடர்பு அவரது ஆயுள் காலம் முழுவதும் நீடித் திருந்தது. பொருளும் அறிவும் ஒருங்கே படைத்தவர் எங்கல்ஸ். ஆகவே, ஆழ்ந்த ஆராய்ச்சியிலும் வறுமையிலும் முழுகியிருந்த மார்க்ஸுக்கு அவர் சிறந்த பக்கபலமாக இருந்து உதவ முடிந்தது.

### சூழ்நிலை

சூழ்நிலை கார்ல் மார்க்ஸின் கருத்துகளைப் பெரிதும் பாதித்தது என்னலாம். பிரெஞ்சுப் புரட்சி அவரது மனத்தில் ஒரு கிளர்ச் சியை ஏற்படுத்தியது. வரலாற்றை ஆராயும் முறையை ஹெகலிட மிருந்து கற்றார். தொன்மைப் பொருளாதாரத் துறையினரிட மிருந்து (Classical Economists) பல பொருளாதாரக் கோட்பாடுகளை மேற்கொண்டார். யூத மதம் அவருக்கு எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை அளித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, தொழில் புரட்சியும் அதனால் பலம்பெற்று வளர்ந்த முதலாளித்துவமும் அவரது கருத்தைத் தூண்டின.

தொழில் புரட்சிக்கு மூலாதாரமாயிருந்த மூலதனம் ஒரு சில முதலாளிகளின் கையில் குவிந்துகிடந்தது. அவர்களது இலாப வேட்கைக்குப் பலியான பாட்டாளி மக்கள் (Proletariat) பலவிதக் கொடுமைகளுக்கு ஆளாயினர். குறைந்த சம்பளம், நீண்டநேர வேலை, சுகாதாரமற்ற சூழ்நிலை, போதிய உணவோ உடையோ உறைவிடமோ இல்லாமை; அறியாமை, பிணி, கடன் முதலிய பீடைகள். இப்படி பணம் ஓரிடத்திலும், பட்டினி ஓரிடத்திலுமாக இருந்த நிலையைக் கண்டு கார்ல் மார்க்ஸ் துடித்தார். ‘இதற்கெல் லாம் தனி உடைமைதான் காரணம்; ஆகவே, தனி உடைமை ஒழிந்து பொது உடைமை வந்தால்தான் பாட்டாளி வர்க்கத்துக்கு விமோசனம் பிறக்கும்’ என்று நம்பினார். இத் துறையில் இவருக்கு முன்னோடிகளாக விளங்கிய பல சமதர்மவாதிகள் உண்டு. குறிப் பாக, ஃபிரான்சைச் சேர்ந்த போரியரும் (Fourier), இங்கிலாந்தைச் சேர்ந்த சர் ராபர்ட் ஒவனும் (Sir Robert Owen) மார்க்ஸுக்கு ஓரளவு வழிகாட்டிகளாக விளங்கினார்கள். ஆனால் மார்க்ஸ் இவர்களைப் போன்று கனவுலகில் சஞ்சரிக்க விரும்பவில்லை. நடை முறையில் சாத்தியமான தத்துவங்களையும், கொள்கைகளையும்

சாஸ்திரீய முறைப்படி அமைக்க முயன்றுர். இம் முயற்சியின் பயனுக எழுந்ததுதான் கம்யூனிஸ்ட் அறிக்கை (Communist Manifesto 1848). இவ்வறிக்கையில் அடங்கிய அரசியல் கோட்பாடுகளுக்கு உறுதியானதொரு பொருளாதார விளக்கம் கொடுக்க விரும்பிய கார்ல் மார்க்ஸ், லண்டன் பொருட்காட்சிச் சாலையிலுள்ள நூல்களைப் பயின்று தன்னகத்தே சுடர் விட்டெரிந்த கருத்துகளுக்கு உருவம் கொடுத்து 'மூலதனம்' (Capital) என்ற நூலில் வெளியிட்டார். இந் நூலின் முதற் பகுதி 1868-லும், இரண்டாம் பகுதி 1893-லும் வெளியிடப்பட்டன. மூன்றும் பகுதி முற்றுப்பெறுமுன் மார்க்ஸ் புகழுடம்பெய்திஞர். ஆகவே, அது எங்கல்ஸின் முயற்சியால் 1894-ல் வெளியிடப்பட்டது. கம்யூனிஸ்ட் அறிக்கையை எங்கல்ஸும், மார்க்ஸுடன் சேர்ந்து கூட்டாக வெளியிட்டனர். இதுபோக எங்கல்ஸ் தனியாக 'டூரிங்குக்கு எதிர்ப்பு,' (Anti-Duhring), 'லட்விக் பாயர்பாக்' (Ludwig-Feuerbach), 'கனவுலகச் சமதர்மமும் சாஸ்திரியச் சமதர்மமும்' (Socialism-Utopain and Scientific) என்ற, சிறந்த நூல்களையும் வெளியிட்டார். ஆகவேதான், மார்க்ஸும்-எங்கல்ஸும் கம்யூனிஸக் கருத்துகளின் சிற்பிகள் என்று கருதப்படுகின்றனர்.

### கோட்பாடுகள்

மார்க்ஸீயக் கோட்பாடுகளை முரண்நிலைத் தருக்கச் சடவாதம் (Dialectical Materialism), வரலாற்றில் சடவாத விளக்கம் (Materialist interpretation of History or Historical Mateialism), மார்க்ஸீயப் பொருளாதாரம் (Marxian Economics), வருங் காலத்தைப்பற்றிய முன்னறிவிப்புகள் என்ற தலைப்புகளில் பாகுபடுத்தலாம்.

### முரண்நிலைத் தருக்கச் சடவாதம்

சடப்பொருளை முதலாகக்கொண்டு இயற்கையை அறியும் இயல்பே சடவாதம் (Materialism) எனப்படும். விளங்கக்கூறின் இயற்கையே உண்மை; அதை மிஞ்சிய சக்தியே இல்லை; பொருளின் பிரதிபிம்பமே கருத்து. ஐம்புலன்களின் உதவியினுலேயே கருத்து உருவாகிறது; சூழ்நிலை மாறினுல் கருத்தும் மாறும். ஆகவே, பொருளே கருத்தின் அடிப்படை என்று கூறுவதே சடவாதம். இது கருத்து முதல்வாதத்துக்கு (Idealism) நேர்முரணுனது. சடவாதத்தைக் கார்ல் மார்க்ஸ் முரண்நிலைத் தருக்க முறையால் (Dialectical Method) விளக்க முற்படுகிருர். ஆதியில் இம்முறையை சாக்கிரட்டிஸ் (Socrates) போன்றவர்கள் அளவை இயலிலும்(Logic) தர்க்க சாஸ்திரத்திலும் பயன்படுத்தினர். கருத்து (thesis), எதிர்க்கருத்து (antithesis), இணைக்கருத்து (synthesis) என்ற

அடிப்படையில் உண்மையை அல்லது முழுக்கருத்தை நோக்கி முன்னேறுவதே இம் முறையின் சிறப்பு. இக் கருவியின் உதவியால் சடவாதத்தின் துணைகொண்டு இயற்கையையும், மனித சமுதாயத்தின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்தும் இயக்க விதிகளை (Laws of Motion) விளக்கிய பெருமை கார்ல் மார்க்ஸைச் சாரும். இம் முயற்சிதான் முரண்நிலைத் தருக்கச் சடவாதம் (Dialectical Materialism) எனப்படும்.

**வரலாற்று விளக்கம்**

ஒரு சமுதாயத்தின் கலாசாரம், பண்பாடு, அரசியல், சட்டம், மதம், தத்துவம் முதலியன அதன் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப மாறும் தன்மையன. சமுதாயத்தில் ஏன் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டும் பலம்பெற்று விளங்குகின்றனர்? ஒரு சில கருத்துகள் மட்டும் அங்கே மேலோங்கி நிற்பதன் காரணம் என்ன?-என்று அறிய வேண்டுமாயின், அங்கே, பொருளுற்பத்தி எவ்வாறு நடைபெறுகின்றது? உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் எப்படிப் பகிரப்படுகின்றன?-என்பவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, நிலப்பிரபுத்துவ (படைமான்ய-Feudal) முறையில் நிலமே முக்கியமான உற்பத்திச் சாதனம். அதை உடையவன் நிலப்பிரபு. நிலபலத்தால் அவனும் அவனுக்குச் சாதகமான கருத்துகளும் மேலோங்க முடிகிறது. நிலத்தில் உழைப்பவன் உழவன். அவனுக்கு உரிமையோ உடைமையோ இல்லை. அவனது உழைப்பின் ஒரு பகுதியை நிலப்பிரபு தனதாக்கு கிறான். அதன்காரணமாக உடையவனுக்கும் உழைப்பவனுக்கும் போராட்டம் ஏற்படுகிறது. இதுதான் வர்க்கப் போராட்டம் (class struggle). இப் போராட்டத்தின் காரணமாக நாளடைவில் நிலப்பிரபுத்துவம் ஒழிகிறது. பொருளாதார அடிப்படை மாறுகிறது. நிலப்பிரபுத்துவம் மறைந்து முதலாளித்துவம் நிலைபெறுகிறது.

இப் புதிய சமுதாயத்தின் பொருளுற்பத்திக்கு அடிப்படையாக அமைவது மூலதனம். இது முதலாளிகளின் கையில் குவிகிறது. மூலதனத்தின் உதவியால் ஆலைகள் நிறுவப்படுகின்றன. இந்த ஆலைகளில் உழைப்பவர்கள் தொழிலாளர். உடைமை எதுவும் இல்லாத காரணத்தால் இவர்களைப் பாட்டாளிகள் (proletariat) என்று அழைக்கலாம். அன்றுடம் உழைத்து வயிறு கழுவ வேண்டிய நிர்ப்பந்தமிருப்பதால் தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் பெறும் வலிமை அவர்களிடமில்லை. ஆகவே, அவர்களது உழைப்பின் ஒரு பகுதி முதலாளியைச் சேருகிறது. மூலதனம் பெருகுகிறது. அதே சமயத்தில் 'நாம் சுரண்டப்படுகிறோம்' என்ற உணர்ச்சி பாட்டாளி மக்களிடையே பரவுகிறது. ஆகவே, அவர்கள்

சுரண்டலை எதிர்த்துப் போராடுகின்றனர். இத்தகைய வர்க்கப் போராட்டம் உலகில் இதுவரை தோன்றியுள்ள அத்தனை சமுதாயங்களுக்கும் பொதுவான அம்சமாகும். பொருளாதார அமைப்பிலுள்ள முரண்பாடுகளின் காரணமாக வர்க்கப் போர் மூளுகிறது; வர்க்கப்போரின் விளைவாகப் பொருளாதார அடிப்படை மாறுகிறது. ஆகவேதான், அடிமைச் சமுதாயத்தி லிருந்து நிலப்பிரபுத்துவமும் அதிலிருந்து முதலாளித்துவமும் தோன்றலாயின. இத்தகைய வர்க்கப்போராட்டத்தின் காரணமாக ஏற்படும் சமுதாய வளர்ச்சியைத் தொகுப்பதே வரலாறு. வரலாற்றின் அடிப்படை பொருளாதாரம். இப்படி உலக வரலாற் றையும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியையும் முரண்நிலைத் தருக்கச் சடவாதத்தின் உதவியால் விளக்குவதே வரலாற்றுச் சடவாதம் (Historical Materialism) என்று அழைக்கப்படுகிறது.

### பொருளாதாரக் கருத்துக்கள்

முதலாளித்துவம் அநீதி நிறைந்தது என்பது கார்ல் மார்க்ஸின் கருத்து. ஆகவேதான் முதலாளித்துவத்துக்கு எதிராக வெளியிட்ட கம்யூனிஸ்ட் அறிக்கையில் கோபக்குரல் தொனிக்கிறது. முதலாளித்துவத்தின் அநீதிகளை அம்பலப்படுத்துவதுதான் அவரது பொருளதாரக் கோட்பாடுகளின் அடிப்படை நோக்கம். அப் பொருளாதாரக் கோட்பாடுகளைச் சுருக்கமாக இங்கு ஆராய்வோம். நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு, நிருவாகம் முதலிய உற்பத்திக் காரணிகளில் உழைப்பே மூலாதாரமானது என்பது கார்ல் மார்க்ஸின் கருத்து. ஏனெனில் நிலமும் அதில் அடங்கிய செல்வங்களும் இயற்கையின் அன்பளிப்பு. முன்னுள் உழைப்பின் திரட்சியே மூலதனம். நிருவாகமும் ஒருவகை உழைப்புத்தான். ஆகவே, ஒரு பொருளின் மதிப்பை அதிலடங்கிய உழைப்பின் அளவைக் கொண்டு கணிக்கலாம். ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் ஒருசில முதலாளிகளின் கையில் சிக்கியுள்ளன. தொழிலாளியோ, அன்றாடம் பாடுபட்டு வயிறு வளர்க்கவேண்டிய நிலையில் உள்ளான். ஆகவே, அவன் தனது உழைப்பின் சக்தியைக் (Labour power) குறைந்த விலையில் விற்கிறான். அப்படிக் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு அவனும், அவனது குழந்தைகுட்டிகளும் உயிர் வாழ வேண்டிய குறைந்த பட்சத் தேவைகளைத்தான் பூர்த்திசெய்ய முடியும். அவனது உழைப்புச் சக்தியின் முழு மதிப்பும் அவனிடம் சேருவதில்லை. கூலி போக உபரியாக உள்ள மதிப்பு முதலாளியிடம் குவிகிறது. இதைப் பொதுவாக நாம் முதலுக்குக் கிடைக்கும் இலாபம் என்கிறோம். மார்க்ஸ் அதைச் சுரண்டல் (exploitation) என்கிறார்.

மேலும் மேலும் சுரண்டுவதே முதலாளியின் வேலை. அதன் பொருட்டு, அதிக வேலை, குறைந்த கூலி, வேலைப்பளு அதிகரிப்பு முதலிய முறைகளைக் கைபாளுகின்றான். எனவே, மூலதனம் ஒரு சிலரின் கையில் போய்க் குவிகிறது. அதே சமயத்தில் தொழிலாளி வறுமையின் அடித்தளத்தை நோக்கிச் செல்லுகிறான். பலவித இன்னல்களுக்கு ஆளாகிறான். அதிகக் கூலி கேட்டால் வேலையை இழக்க நேரிடும். வேலையில்லாது திண்டாடுபவர்கள் அவனது வேலைக்காக வட்டமிடுகின்றனர். ஆகவே, எளிதில் அவனுக்கு விமோசனம் கிட்டுவதில்லை.

வளர்ந்துவரும் மூலதனத்துக்குப் பல சிக்கல்கள் ஏற்படுவது முண்டு. வறுமையுற்ற தொழிலாளி பொருள்களை வாங்கும் சக்தி அற்றிருக்கின்றான். ஒரு திட்டத்துக்குள் அமையாததால் பொருளா தாரத்தின் உறுப்புகளிடையே பல முரண்பாடுகள் தோன்று கின்றன. ஆகவே, பொருளாதார மந்தமும் வியாபாரச் சுழல்களும் ஏற்படுகின்றன. அதன் பயனாகக் குவிந்துவரும் மூலதனத்தின் இலாப விகிதம் குறைகிறது. இத்தகைய சிக்கல்களால் ஏற்படும் பொருளாதார நெருக்கடி முதலாளித்துவத்தின் அடிப்படையையே அசைப்பதாக அமைகிறது.

**எதிர்காலம்**

சுரண்டல் ஒழியவேண்டுமாயின் சுரண்டப்பட்ட சொத்துகள் பறிமுதல் செய்யப்படவேண்டுமென்பது மார்க்ஸின் துணிபு. சுரண்டு பவர் ஒரு சிலர்; சுரண்டப்படுபவர் பலர். தொழிலாளர் ஒன்று பட்டால் சுரண்டலை எதிர்த்துப் போராட முடியும். போராட்டத்தில் வெற்றியும் காணமுடியும். வெற்றியின் காரணமாகச் சிலகாலம் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் (Dictatorship of the proletariat) நிறுவப்படும். இக் காலக்தில் முதலாளி வர்க்கத்தின் கொட்டத்தை ஒடுக்கி அவர்களுக்கு வால்பிடிக்கும் அதிகார வர்க்கத்தையும் மட்டந்தட்ட முடியும். உற்பத்திச் சாதனங்கள் பொதுஉடைமை ஆக்கப்படும். அதனடியாக ஒரு சமதர்ம சமுதாயம் நிர்மாணிக்கப்படும். அங்கே 'சக்திக்கேற்ற வேலை; வேலைக்கேற்ற கூலி'' என்ற நியதி நிலவும். நாளடைவில் உற்பத்திச் சாதனங்களின் பெருக்கத்தால் பொருள் வளமிகுந்து 'சக்திக்கேற்ற வேலை—தேவைக்கேற்ற வருவாய்' என்ற அடிப்படையில் அமைந்த பொதுஉடைமைச் சமுதாயம் மலரும். அங்கே வகுப்புகளுக்கு இடமில்லை; சுரண்டல் என்பது பழங்கதையாகிவிடும். ஆகவே, சுரண்டலின் கருவியாகிய அரசாங்கமும் வாடி உதிர்ந்துவிடும் என்று கார்ல் மார்க்ஸ் உலகுக்கு ஓதினர்.

## ரஷ்யாவில் எப்படிப் பரவின?

மார்க்ஸிஸக் கோட்பாடுகள் சரியா, தப்பா என்ற சர்ச்சையில் நாம் இறங்கவில்லை. ஆனால், அவரது கருத்துகள் எப்படி ரஷ்யாவில் பரவின? ரஷ்யப் புரட்சி ஏற்படுவதற்கு அவை எவ் வகையில் காரணமாக இருந்தன என்று அறியவேண்டியது அவசியம்.

### இறக்குமதியான கருத்துகள்

அரசியல் காரணங்களுக்காக நாடுகடத்தப்பட்ட ரஷ்யர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்து வந்தனர். அக் காலத்தில் ஐரோப்பாவில் பரவி வந்த மார்க்ஸீயக் கோட்பாடுகள் அவர்களது கருத்தைக் கவர்ந்தன. எனவே, சமதர்மக் கருத்துகளை வெளியிடும் பல நூல்களை அவர்கள் பயின்றனர்; அறிஞர் பலருடன் பல்வேறு பிரச்சினைகளையும்பற்றி விவாதித்தனர். தாங்கள் கற்றதைத் தங்கள் நாட்டவரிடையே பரப்பவேண்டும் என்று ஆவல் கொண்டனர். அதன் காரணமாகப் பல நூல்கள் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. மைக்கல் பாகுனின் (Mikhail Bakunin) என்பவர் கம்யூனிஸ அறிக்கையை 1870-க்கு முன்னரே மொழி பெயர்த்தார். மூலதனத்தின் முதற்பகுதி 1872-ல் மொழிபெயர்க்கப் பட்டது: ஒருசில ஆண்டுகளின், கற்றோர் பலர் மூலதனத்தைப் படிக்கலாயினர். 1883-84-ல் ஜியார்ஜ் பிளெக்னேவ் (George Plekhanov) என்ற பொருளாதார வல்லுநர் மார்க்ஸீயக் கருத்துகளைத் தமது நூலில் வெளியிட்டார்.

இப்படிப் பரவி வந்த மார்க்ஸீயக் கருத்துகள் நாடெங்குமிருந்த இளைஞரிடையே வேரூன்ற ஆரம்பித்தன ஆங்காங்கே பல தனிப் பட்ட குழுக்கள் தோன்றி சமதர்மக் கருத்துகளை ஊன்றிப் படிக்கலாயின. 1880-94 வரை இக் குழுக்கள் தாங்கள் கண்டறிந்த உண்மைகளை மக்களிடையே பரப்புவதற்கான பிரசாரத்தில் முனைந்து நின்றன. இக் காலத்தில்தான் ரஷ்யாவில் தொழில்கள் வேரூன்றித் துரிதமாக வளர்ந்து வந்தன. அதையொட்டித் தொழிலாளரின் எண்ணிக்கையும் வளர்ந்தது. 1860-ல் ஒரு மில்லியனுக்கும் குறைவாக இருந்த எண்ணிக்கை கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து, முதல் உலகப் போருக்கு முன் 4.5 மில்லி யனாக உயர்ந்தது. பல பிரச்சினைகள் அவர்களை எதிர்நோக்கின. 1897 வரை அவர்கள் நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலைசெய்து வந்தனர். பின்னர் அது 10 மணியாகக் குறைக்கப்பட்டது. போதுமான விடுமுறைகள் கிடையா; குறைந்த கூலி; தக்க பாது காப்பு இல்லை; இயற்றப்பட்ட ஒரு சில தொழிற்சாலைச் சட்டங்களும்

ஏற்றவகையில் அமுல் நடத்தப்படவில்லை. இத்தனை பிரச்சினைகள் இருந்தும் ரஷ்யத் தொழிலாளர் போராட்டங்களில் ஈடுபடவில்லை. தொழிலாளர் தலைவர்கள் பிரசாரத்தில் முனைந்து நின்றனரே அன்றி, தொழிலாளரின் இயக்கங்களிலும் போராட்டங்களிலும் கவனம் செலுத்தவில்லை. எழுந்த ஒரு சில போராட்டங்களும் அரசாங்கத்தால் ஆங்காங்கே அடக்கி ஒடுக்கப்பட்டன.

**சமதர்ம ஜனநாயகக் கட்சியின் தோற்றம்**

ஒன்றுபட்டதொரு தொழிலாளர் கட்சி தோன்றுவதற்குப் பல்லாண்டுகள் ஆயின. 1883-ல் பிளெக்கனேவ் தொழிலாளரின் விடுதலைக் கூட்டத்தை (Emancipation of Labour Group) அமைத்தார். இது ஒரு கட்சி அல்ல. ஆனல், சமதர்ம ஜனநாயகக்கட்சி தோன்றுவதற்கு அடிகோலியது என்னலாம். தொழிலாளருடன் ஏற்பட்ட இந்தத் தொடர்பு நாளடைவில் வளர்ந்தது. அதன் பின்னர் 1895-ல் பீட்டர்ஸ்பர்க்கில் லெனின் (V. I. Lenin—1879-1924) தலைமையில் தொழிலாளர் விடுதலைப் போராட்டக் குழு (League of struggle for the Emancipation of Workers) தோன்றியது. விரைவில் இது இதர நகரங்களுக்கும் பரவியது. 1898-ல் லெனின் ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற் கட்சியை (Russian Social Democratic Labour Party) அமைக்க முயன்ருர்; இம் முயற்சி வெற்றிபெற வில்லை. 1900-01-ல் லெனின் இஸ்க்ரா (Iskra)என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். சமதர்ம ஜனநாயகக் கட்சியைத் தோற்றுவிப்பதற்கு இது பெரிதும் உதவியது. அதன் பயனுக 1903-ல் சமதர்ம ஜனநாயகக் கட்சி (RSDLP) தோன்றியது.

**லெனினும் அவரது கருத்துகளும்**

லெனின், தாம் வாழ்ந்து வந்த காலத்துக்கும், சூழ்நிலைக்கும், அன்றிருந்த ரஷ்யாவுக்கும், உலகுக்கும் ஏற்றவகை மார்க்ஸீயக் கோட்பாடுகளை மாற்றி அமைக்கலானுர். மார்க்ஸ் வகுத்த கோட்பாடுகள் அவரது காலத்தில் ஐரோப்பாவில் காணப்பட்ட முதலாளித்துவ சமுதாயத்தின் குணநலன்களை அடிப்படையகக் கொண்டவை. ஆனல், ரஷ்யாவில் முதலாளித்துவம் பின்தங்கிய நிலையில் இருந்தது. அயல்நாட்டு மூலதனம் பலம் பெற்று விளங்கியது. மேலும், மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ முறையில் ஒருசில மாறுதல்கள் ஏற்பட்டுவந்தன. மார்க்ஸ் அறிந்த முதலாளித்துவத்தில் பல சிறு முதலாளிகள் நிறைந்திருந்தனர். ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டில் இறுதியிலோ முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரம் ஒருசில ஏகபோக முதலாளிகளின் கையில் இருந்தது. பெருநிதி படைத்த ஒருசிலர் பல்வேறு தொழில்களையும் தங்கள் பிடிப்பில் வைத்திருக்க முடிந்தது.

போதிய இலாபம் கிடைக்காத காரணத்தால் மூலதனம் பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதியானது. அதன் காரணமாக ஏகாதிபத்தியங்கள் பலம் பெற்றன; அவைகளிடையே போட்டிகளும் பூசல்களும் வளர்ந்தன. இத்தகைய மாறுதலை நன்கு உணர்ந்த லெனின் தமது கருத்துகளை 'முதலாளித்துவத்தின் உச்சநிலை ஏகாதிபத்தியம்' (Imperialism, the highest stage of Capitalism) என்ற நூலில் வெளியிட்டார்.

**போல்ஷவிக்குகள்**

மாறிய இந்தச் சூழ்நிலைக்கேற்பத் தமது போர் முறைகளையும் போர்த் தந்திரங்களையும் வகுக்க முயன்றார் லெனின். சமதர்ம ஜனநாயகக் கட்சி அவரது கொள்கைகளைச் செயற்படுத்தும் கருவியாக அமைந்தது. 1903-05 வரை பல வேலைநிறுத்தங்களும் கிளர்ச்சிகளும் நடைபெற்றன. 1905-ல் ஒரு பொது வேலைநிறுத்தம் நடந்தது. இவை அனைத்தையும் அரசாங்கம் அடக்கி ஒடுக்கியது. அதன் காரணமாக ரஷ்யத் தொழிலாளரிடையே வர்க்கபோதம் வளர்ந்து. 1905-14 வரை தொழிலாளர் இயக்கம் பலம் பெற்று வளர்ந்தது. ஆனால், லெனின் பல எதிர்ப்புகளை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. முதற்கண், பொருளாதார அபிவிருத்தியே பிரதானமானது என்ற கருத்தைக்கொண்ட நார்டோனிக்குகளை (Nordonics) அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது, நாளடைவில் சமதர்ம ஜனநாயகக் கட்சியிலேயே இரு பிரிவுகள் தோன்றலாயின. ஒன்று பொருளதாரத் துறையினரைப் பின்பற்றி மிதவாதத்தை நாடியது. கடுமையான கட்சிக் கட்டுப்பாடு கூடாது என்று வாதாடியது. ஆயினும் சிறுபான்மையோரே இக் கருத்தை ஆதரித்ததால் அவர்கள் மென்ஷவிக்குகள் (Mensheviks) என்று அழைக்கப்படலாயினர். ஏனையோர் லெனினைப் பின்பற்றிய தீவிரவாதிகள்; புரட்சிகரமான போக்கை விரும்பியவர்கள். இவர்கள் பெரும்பான்மையாக இருந்ததால் இவர்கள் போல்ஷவிக்குகள் (Bolsheviks) என்ற பெயரைப் பெற்றனர். அதையொட்டியே ரஷ்யப் புரட்சி போல்ஷவிக் புரட்சி என்று அழைக்கப்படுகிறது. மார்க்ஸீயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அது பிறந்தது. அதை முன்நின்று நடத்திய பெருமை லெனினைச் சாரும். ஆகவேதான், அவர் சோவியத் சமுதாயத்தின் சிருஷ்டி கர்த்தா என்று போற்றப்படுகிறார்.

## புரட்சி

**உலகப்போரும் பொருளாதாரச் சீர்குலைவும்**

புரட்சிக்கு முன்னால் பொருளாதார வளர்ச்சி அவ்வளவு திருப்தி இல்லை என்று கண்டோம். உழவனின் நிலப்பசி தீரவில்லை.

தொழிலாளியும் புரட்சிப் பாதையை நோக்கி நடக்கலானுன். இந் நிலையில் முதலாம் உலகப்போர் மூண்டது. போரில் புகுந்த ரஷ்யாவின் பொருளாதாரம் சொஞ்சம் கொஞ்சமாகச் சீர்குலைய ஆரம்பித்தது. குறிப்பாகப் போக்குவரத்துச் சாதனங்கள் சரிவர வேலை செய்யவில்லை; போர்மூண்டதால் எஞ்ஜின் இறக்குமதி தடைப்பட்டது; மிஞ்சிய குளிரால் பல பழுதுபட்டன; ஏற்ற வகையில் பழுது பார்க்கவும் வசதிகளில்லை. ஆகவே, போக்கு வரத்துத் தடைப்பட்டது. ஆலைகளுக்கு வேண்டிய நிலக்கரி போதிய அளவு கிடைக்கவில்லை. ஆகவே, அவைகள் தங்கள் முழு சக்தியையும் பயன்படுத்த முடியவில்லை. இரும்பு ஆலைகள் பல மூடப்பட்டன. ராணுவ வெடிமருந்துகளின் உற்பத்தியும் குறைய லாயிற்று. 1916-17-ல் ஆலைப்பொருள் உற்பத்தி போருக்குமுன் இருந்ததில் முக்கால் பகுதிகூட இல்லை.

கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் ராணுவத்தில் சேர்ந்தனர். அதன் காரணமாக ராணுவத்தின் தேவைகள் அதிகரித்தன. ஆனுல், பொருளுற்பத்தி குறைந்தது. உணவுப்பொருள் தட்டுப்பாடும் ஏற்பட்டது. போதிய அளவில் பொருள்கள் கிடைக்கவும் வழி இல்லை; கிடைப்பவற்றைக் கொண்டுசெல்லப் போதிய போக்குவரத்து வசதிகளும் இல்லை. ஆகவே, பஞ்சம் ஏற்பட்டது; விலைவாசிகள் ஏறின; தொழிலாளரிடையே அதிருப்தி பெருகியது; அமைதி குலைந்தது; வேலை நிறுத்தங்கள் மிகுந்தன; கலகங்களும், கொள்ளை களும் மலிந்தன. புரட்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அரசாங்கத்தால் அணையிட்டுத் தடுக்கமுடியவில்லை. ஆகவே, ஆட்சி பீடத்திலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. இதுதான் பெப்ருவரிப் புரட்சி எனப்படுவது.

### இடைக்கால அரசாங்கம்-பிரச்சினைகள்

1917 மார்ச்சில் கெரனஸ்கி (Kerensky) யின் தலைமையில் ஒரு தற்காலிக அரசாங்கம் அமைக்கப்பட்டது. போர் முனைக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்க வேண்டியது அதன் முதல் வேலையாக இருந்தது. அதன் பொருட்டு அரசாங்கம் உணவுப் பொருள் வியாபாரத்தைத் தனதாக்கி, தனிப்பட்ட வியாபாரிகள் அதில் தலையிடாமல் தடுத்தது; தானியத்தின் விலையை அரசாங்கமே நிர்ணயம் செய்தது; அந்த விலையில் தங்கள் உபரி தானியங்களை எல்லாம் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று விவசாயி கள் வற்புறுத்தப்பட்டனர். இதைக்கண்டு வெகுண்டு எழுந்தனர் விவசாயிகள். தானியங்களை அரசாங்கத்திடம் விற்க மறுத்தனர். அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யவும் ஆரம்பித்தனர். இடதுசாரி சமூகப் புரட்சிக் கட்சியினர் (Left Social Revolutionary

Party) அப்புரட்சிக்குத் தலைமை தாங்கினர். போல்ஷவிக்குகளும் அவர்களுக்குப் பக்க பலமாக இருந்தனர். கிராமங்கள்தோறும் சோவியத்துகள் (Soviets) தோன்றின. அவற்றின் துணை கொண்டு நிலமற்ற விவசாயிகளும், சிறுநிலம் படைத்தோறும் நிலப்பிரப்புக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்யமுற்பட்டனர்; பல உயிர்கள் பலாத்காரத்துக்குப் பலியாயின; சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டது. கிராமாந்தரங்களில் நிலவிய இந்த அராஜகத்தைத் தடுக்க வேண்டி அரசாங்கம் 'உழவனுக்கே நிலம்' என்ற அமைப்படையில் நிலச் சீர்திருத்தம் செய்ய முன்வந்தது. ஆனால் 'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது' என்பதே உண்மையாயிற்று.

நிலப் பிரச்சினையில் தோல்வியுற்ற அரசாங்கம் உணவுப் பிரச்சினையையும் தீர்க்க முடியாமல் திணறியது. உணவுப் பஞ்சத்தால் விலைவாசிகள் மேலும்மேலும் உயர்ந்தன. 1917 கோடை முடிவதற்குள் ரொட்டியின் விலை போருக்கு முன் இருந்ததைப் போல் மூன்று மடங்காகவும், பால் வெண்ணெய் இவற்றின் விலை 5 மடங்காகவும், மாமிசத்தின் விலை 7 மடங்காகவும் உயர்ந்தன. அதன் பயனாக ஏற்கெனவே அதிருப்தி தாண்டவமாடிய தொழிலாளரிடையே புரட்சி வேகம் பொங்கி எழுந்தது. கூலியோ உயரவில்லை. பெட்ரோகிராடில் (Petrograd) வேலை நேரம் 8 மணியாகக் குறைக்கப்பட்டது. ஆனால், மாஸ்கோவில் குறையவில்லை. முதலாளிகளும் காலப் போக்கை உணர்ந்து காரியம் செய்வதாக இல்லை. 'விடாக்கண்டர்' களாகவே இருந்தனர். பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் ஒரு பொருளாதாரக் குழுவை (Economic Committe) அமைத்தது. ஆனால், முதலாளிகள் அக்குழுவுடன் ஒத்துழைப்பதாக இல்லை. அவர்களைக் கட்டுப்படுத்தும் சக்தியும் அரசாங்கத்திடம் இல்லை. ஆகவே, தொழிலாளர் கை ஓங்கியது. லெனின் தலைமையில் அவர்கள் திரண்டெழுந்தனர். ஆலைகள்தோறும் குழுக்கள் அமைத்தனர். அவற்றின்மூலம் தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்குமாறு முதலாளிகளை வற்புறுத்தினர். ஆலை நிர்வாகத்தில் தலையிட்டனர்; கணக்குகளையும் பரிசீலனை செய்தனர். ஒத்துவராத நிருவாகிகளை வேலையிலிருந்து நீக்கினர். இத்தனை வலிமை பெற்றிருந்தும் தொழிலாளர் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். ஆகவே, தன்னந்தனியாக அவர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றவோ, அதை நிருவாகம் செய்யவோ சக்தியற்றிருந்தனர். இதை நன்கு உணர்ந்தார் லெனின். ஆகவே, தொழிலாளரின் தலைமையில் பெரும்பாலான விவசாயிகளை ஒன்று திரட்ட எண்ணினர். அதன் பொருட்டு விவசாயிகளிடையே செல்வாக்குப் பெற்றிருந்த இடதுசாரி சமூகப் புரட்சிக் கட்சியினருடன் ஒரு கூட்டணி (Smytchka) அமைத்தார்,

**நவம்பர் புரட்சி**

சூழ்நிலை லெனினுக்குப் பெரிதும் உதவியது. அரசாங்கத்தின் இயலாத்தனத்தினால் ராணுவத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களிடையே அதிருப்தி வளர்ந்தது. பலர் லெனினை ஆதரிக்கலாயினர். போல்ஷிவிக் கட்சியின் செல்வாக்கு ராணுவத்திலும் பரவியது. அரசாங்கத்தை எப்போது கவிழ்க்கலாம் என்று எதிர்பார்த்திருந்த லெனின் இத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். டிராட்ஸ்கியும் (Trotsky), ஸ்டாலினும் (Stalin) அவருக்குத் துணை நின்றனர். மக்களை ஒன்று திரட்டப் பல கோஷங்களை எழுப்பினர். 'கொடுங் கோலன் சார் ஒழிய வேண்டும்' என்றனர். 'உழவனுக்கே நிலம்,' என்று பறை சாற்றினர். கிராம சோவியத்துகளின் நடவடிக்கை களால் பல நிலப்பிரபுக்கள் தங்கள் நிலங்களைப் பறிகொடுத்தனர். எங்குப் பார்த்தாலும் வேலை நிறுத்தம். ஆலைகள் பல முதலாளி களிடமிருந்து பிடுங்கப்பட்டன. அரசாங்கம் செயலற்று இருந்தது. இந் நிலையில் போல்ஷிவிக்குகள் கிரெம்லினைத் (Kremlin) தாக் கினர். மாஸ்கோவில் மட்டுமின்றி நாடெங்கும் புரட்சி பரவியது. ராணுவம் அதற்குத் துணை செய்தது. நிலைமையைச் சாமளிக்க முடியாத அரசாங்கம் தோல்வியுற்றது. சாரின் ஆட்சிக்கு முடிவு வந்தது. போல்ஷிவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதுதான் நவம்பர் புரட்சி (November Revolution) என்று அழைக்கப்படுவது. இப் புரட்சியின் விளைவாகப் பிறந்ததுதான் சோவியத் ஆட்சி.

## மேற்கொண்டு படிக்க

Burns (Emile), 'Marxism To-day.'

Engels (F), 'Anti-Du hring'

Engels (F), 'Ludwig Feuerbach.'

Engels (F), 'Socialism, Utopian and Scientific.'

History of the Communist party of the Soviet Union (B) Foreign Languages Publishing House, Moscow, 1948, Chapters I-VII.

Lenin (V. I), 'Imperialism, the Highest Stage of Capitalism.'

Lenin (V. I), 'State and Revolution.'

Marx (K), Engels (F) 'Communism Manifesto.'

Podkoizin (A), 'A Short Economic History of the USSR,' Ch. IV.

Schwartz (H), 'Russias' Soviet Economy.' Ch. III.

# இடைக்காலப் பிரச்சினைகள்

1. முதல் எட்டு மாதங்கள்:— நிலப்பங்கீடு—ஆலைக் கொள்கை—ஆலை நிருவாகம் —வாணிகம் —பாங்குகள் —பிரச்சினைகள்—உள்நாட்டுப் போர்.

2. போர்க்காலப் பொருளாதாரம்:—சிக்கல்கள்—பண வீக்கம்—விவசாயிகளின் இன்னல்கள் — அரசாங்கத்தின் தலைவலி — மருந்து — ஆலைப் பிரச்சினைகள்—குறைபாடுகள்—புதுப் பொருளாதாரக் கொள்கை ஏன்?

புரட்சி வென்றது. பொருளாதாரச் சூழ்நிலை மாறியது. ஆயினும் பிரச்சினைகள் மறையவில்லை. அவற்றின் உருவம் மட்டுமே மாறியது. புதிய சிக்கல்கள் பல தோன்றின. எனவே, புரட்சியால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களெவை? அவற்றின் அடியாகப் பிறந்த பிரச்சினைகள் எவை? என்னென்ன சிக்கல்கள் அரசாங்கத்தை எதிர்நோக்கின? அவற்றை மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்கங்கள் கையாண்ட முயற்சிகள் என்ன? எந்த அளவுக்கு அவை வெற்றிபெற்றன? என்பன ஆராய்ச்சிக்குரியவை.

## முதல் எட்டு மாதங்கள்

பொது உடைமைக் கோட்பாடுகளால் உந்தப்பட்ட போல்ஷ விக்குகள் அவற்றை அவசரப்பட்டு அமுல் நடத்த விரும்பவில்லை. புரட்சியின் பயனாக எழுந்தது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம். அப் புரட்சியின் முன்னணியில் நின்ற பாட்டாளிகள் எண்ணிக் கையில் குறைந்தவர்கள்; அதிகாரம் வகிக்கும் அனுபவம் அற்ற வர்கள். எனவேதான் டிராட்ஸ்கி (Trotsky) 'உலகப் புரட்சி இன்றி ஒரு நாட்டில் மட்டும் சமதர்மம் அமைப்பது இயலாது' என்று வாதாடினர். ஆனல், லெனின் டிராட்ஸ்கியின் கருத்துக்குச் செவி சாய்க்கவில்லை. அதற்கு மாருக, கிடைத்த அதிகாரத்தைக் கைநழுவ விடாது பாதுகாப்பதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். பொது உடைமைக் கோட்பாடுகளில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் லெனின். எனினும், பொது உடைமை நீண்டகாலக் குறிக்கோள்; அதை நோக்கி முன்னேற வேண்டுமாயின் பாட்டாளியின் சர்வாதிகாரம் நின்று நிலவ வேண்டும்; அதற்கான வழிவகைகளை வகுப்பதே உடனடித் தேவை என்பது அவரது துணிபு. இன்னதான் செய்யவேண்டு

மென்ற தெளிவு இல்லை. எனினும், சூழ்நிலைக்கேற்பத் தமது கொள்கைகளை மாற்றி அமைக்கும் திறன் லெனினிடம் மிகுந்து காணப்பட்டது.

## நிலப் பங்கீடு

புரட்சியின்போது பாட்டாளிகளின் பக்கபலமாக விளங்கிய வர்கள் ஏழை விவசாயிகள். நிலப்பசியால் வாடிய அவர்களை, 'உழவனுக்கே நிலம்' என்ற உறுதிமொழி கவர்ந்தது. தனி உடைமையின்பால் உள்ள வெறுப்பால் எழுந்த இக் கோரிக்கை பொது உடைமைக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது. இருப் பினும் ஏழை விவசாயிகளின் ஆதரவை நாடி போல்ஷவிக்குகள் இக் கோரிக்கையை மேற்கொண்டனர். அந்த அடிப்படையில் ஆங்காங்கே சோவியத்துகள் அமைத்தனர். அவற்றின்மூலம் நிலப்பிரப்புக்களின் நிலங்களைப் பிடுங்கி நிலமற்றவர்களிடையே பகிர்ந்து அளிப்பது அவர்களது நோக்கம். ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது போல் நிலப்பங்கீடு ஒழுங்காகவும், கட்டுப்பாட் டுடனும் நடந்தேறவில்லை. நவம்பர் புரட்சிக்கு முன்னரே ஆங்காங்கிருந்த விவசாயிகள் நிலப்பிரப்புக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்ய ஆரம்பித்தனர். சார் மன்னனின் நிலங்களும், மடங்கள் கோவில்கள் ஆகியவற்றைச் சார்ந்த நிலங்களும், பிடுங்கப்பட்டன. நிலத்தோடு ஆடு, மாடுகள், உற்பத்திச் சாதனங்கள், கட்டடங்கள் முதலிய பலவும் பறிமுதலாயின. இப்படிப் பறிமுதலான சொத்துகளைத் தங்கள் விருப்பம்போல் விவசாயிகள் பங்கிடலாயினர். இத்தகைய அராஜகத்தை நீக்கி ஒழுங்கை நிலை நாட்டுவதே புரட்சி சர்க்காரின் முதல் வேலையாக அமைந்தது. பொதுவாக, பழத்தோட்டங்கள், மாதிரிப் பண்ணைகள், மாட்டுப் பண்ணைகள், ஆராய்ச்சிப் பண்ணைகள் முதலியவற்றைப் பங்கீடு செய்யாமல் அரசாங்கப் பண்ணைகளாக மாற்றி, பாக்கி யுள்ள நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பியது அரசாங்கம். இதை மனத்திற் கொண்டு நில உடைமை சம்பந்த மான தனது ஆணையைப் பிறப்பித்தது. அதன்படி நிலப்பிரபுத் துவம் அடியோடு ஒழிக்கப்பட்டது. நிலத்தை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு கிடையாது. நிலப்பிரபுக்கள், சார், அவனதுகுடும்பத்தவர், மடங்கள், கோவில்கள் முதலியவற்றைச் சார்ந்த நிலமும் இதர சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அப்படிப் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை நிருவகிக்கும் பொறுப்பு மாவட்ட கிராமக் குழு (District Rural Committee) அல்லது மாவட்ட சோவியத் பிரதிநிதிகளிடம் (District Soviets of Peasant Representatives) ஒப்படைக்கப்பட்டது. பறிமுதலான சொத்துக் களுக்குத் தீங்கிழைப்பவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாவர்

என்று அறிவிக்கப்பட்டது. இந்த ஆணை நிலப்பிரபுக்களைப் பாதித்ததே அன்றி விவசாயிகளை அல்ல. ஆனால், சட்டத்தை யாரும் சட்டை செய்வதாக இல்லை. நிலப்பறிமுதலும் பங்கீடும் அரசாங்கத்தின் அனுமதியுடன் நடைபெறவில்லை. மாவட்டக் கிராமக் குழுவையோ மாவட்ட சோவியத்தையோ மதிக்கவும் இல்லை. அகப்பட்டதைச் சுருட்டும் வேலையிலேயே பெரும்பாலோர் கருத்தாக இருந்தனர். பல பிரபுக்களைக் கொன்று விவசாயிகள் பழி தீர்த்தனர். சொத்துகள் அழிக்கப்பட்டன. ஆடு மாடுகள் பல கொல்லப்பட்டன. இத்தகைய சூழ்நிலையில் அரசாங்கம் பெப்ருவரி 1918-ல் வேறு ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. அதன்படி நாட்டிலுள்ள நிலம் முழுவதும் தேசியமயமாக்கப் பட்டது. நிலத்தில் உழைக்க விரும்பும் அனைவருக்கும் நிலம் வழங்கப்பட்டது. எனவே, இச் சட்டம் நிலத்தில் தனி உடமையை நிலைநாட்டியது. விவசாயிகளின் நிலப்பசி தணிந்தது. ஆனால் அரசாங்கத்தின் தலைவலி அதிகரித்தது.

### ஆலைக் கொள்கை

நிலப்பிரபுத்துவம் அடியோடு ஒழிந்தது. ஆனால், அதன் பங்காளியான முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் சற்றுத் தயங்கியது. முதலாளித்துவத்தைத் தங்குதடையின்றி வளர விடுவதால் ஏற்படும் அபாயத்தை அரசாங்கம் நன்கு உணர்ந் திருந்தது. எனினும், அவர்களின் உதவியின்றிப் பொருளாதாரத்தை நிருவகிக்கும் சக்தியோ அனுபவமோ அரசாங்கத்திடம் இல்லை. எனவே, பொருளாதாரத்தின் கேந்திர ஸ்தானங்களைத் தன் கையில் வைத்துக்கொண்டு மீந்ததில் முதலாளித்துவத்தின் ஒத்துழைப்பைப் பெற எண்ணியது. அத்துமீறி வளராவண்ணம் அரசாங்கம் முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்த முயன்றது. அதன் பொருட்டு ஆங்காங்கே நிறுவப்பட்ட சோவியத்துகளின் அதிகாரத்தை அதிகரித்தது. கிராமங்களிலும் ஆலைகளிலுமுள்ள சொத்துகளைத் தங்கள் கண்ணின் மணிபோல் பாதுகாக்க வேண்டுமென அவைகளுக்கு வேண்டுகோள் விடுத்தது. 1917ஆம் ஆண்டு நவம்பர் 14-ல் வெளியிட்ட ஆணையின்படி, ஆலைகளி லுள்ள தொழிலாளர் குழுக்களுக்குப் (Workers Committee) பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அக் குழுக்கள் ஆலையின் நிருவாகத்தைக் கண்காணிக்கலாம்; கணக்குகளைப் பரிசீலனை செய்யலாம்; உற்பத்தி கிரமமாக நடக்கிறதா? ஒழுங்கீனங்கள் இல்லாமல் இருக்கிறதா? என்று கவனிக்கலாம். ஆனால், நிருவா கத்தில் தலையிடக்கூடாது. தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட் டாலும்கூட மேலதிகாரிகளின் அனுமதி இன்றி எதுவும் செய்ய லாகாது.

இந்த அடிப்படையில் முக்கியமான பல ஆலைகள் நஷ்டஈடு இன்றித் தேசியமயமாக்கப்பட்டன. இவை தவிர இன்னும் பலவும் நாட்டு உடைமை ஆயின. அவையாவன: 1. இராணுவ முக்கியத்துவம் உடையவை. 2. தொழிலாளரின் மேற்பார்வையை ஏற்றுக்கொள்ள மறுத்தவை. 3. அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்து மூடப்பட்டவை. 4. புரட்சிக்குப் பயந்து ஓடியவர்களுக்குச் சொந்தமானவை. 5. நாசவேலைகளில் ஈடுபட்டவர்களுடையவை. பெரும்பாலும் கனரகத் தொழில்கள்தான் நாட்டு உடமை ஆயின. அவற்றுள்: உலோகங்கள், எண்ணெய், நிலக்கரி முதலியன முக்கியமானவை. சுரங்கத் தொழில் ஒரு பகுதி முதலாளிகளின் கையிலேயே விட்டுவைக்கப்பட்டது. சிறு தொழில்களிலும் அரசாங்கம் தலையிட விரும்பவில்லை. சில துறைகளில் அரசாங்கம் தனிப்பட்ட முதலாளிகளுடன் சேர்ந்து கலப்பு உடைமையையும் கலப்பு நிருவாகமும் அமைக்க முயன்றது. ஆனால், இம் முயற்சி விரும்பிய பலனை அளிக்கவில்லை. அயல்நாட்டு மூலதனத்தையும் அரசாங்கம் விரட்டியடிக்கவில்லை. அதற்கு மாறாக, சைபீரியாவிலும் டோனட்ஸ் பகுதியிலும் இருப்புப்பாதைகள் அமைக்க இசைந்த அயல்நாட்டு மூலதனத்துக்குப் பல சலுகைகள் வழங்கியது.

### ஆலை நிருவாகம்

நாட்டு உடைமையாக்கப்பட்ட ஆலைகளை நிருவகிக்கும் பொருட்டு அரசாங்கம் தலைமைப் பொருளாதாரக் குழுவை (Supreme Economic Council or Vesenkha) நிறுவியது. அரசாங்கம், தொழிற் சங்கங்கள் இவற்றின் பிரதிநிதிகளும், பல பொருளாதார-தொழில் நிபுணர்களும் இக் குழுவில் அங்கம் வகித்தனர். கனரகத் தொழில்களை நிருவகிக்கும் பொருட்டு இக் குழுவில் பல உட்பிரிவுகள் இருந்தன. அவசியமான தொழில்களைக் கட்டுப்பாடான முறையில் நாட்டுடைமை ஆக்குவதும் அவற்றைத் தக்கமுறையில் திருத்தி அமைத்து நிருவாகம் செய்வதும் அக் குழுவின் முக்கிய வேலைகள், அத்துடன் நாட்டின் பொருளாதார நிதி நிலைமைகளைப் பரிசீலனை செய்து கட்டுப்பாடான முறையில் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான வழி வகைகளை வகுப்பதும் அக் குழுவின் வேலை. தனது வேலைகளைத் திறம்படச் செய்யும் பொருட்டுச் தலைமைப் பொருளாதாரக் குழு பல கிளைகளைத் தாங்கி நின்றது. இக் கிளை ஸ்தாபனங்கள் கிளாவ்கி (Klavki) என்று அழைக்கப்பட்டன. தனி முதலாளிகளைக் கட்டுப்படுத்தல், உற்பத்திச் சாதனங்களை வினியோகம் செய்தல், விலைகளை நிர்ணயம் செய்தல், புதிய தொழில்களை நிறுவுதல், நாட்டுடைமை ஆக்கப்பட்ட சிறு தொழில்களுக்கு வேண்டிய நிருவாகிகளை நியமித்தல், உற்பத்தி, போக்குவரவு, வினியோகம் முதலியவற்றைக்

கண்காணித்தல், கூலி நிர்ணயம் செய்தல் முதலிய பல்வேறு வேலைகளையும் கிளாவ்கி செய்து வந்தது.

**வாணிபம்**

தொழில்களைப் போன்றே வாணிபத்துறையிலும், அரசாங்கம் குறைந்தபட்சத் தலையீடு என்ற கொள்கையைக் கடைபிடித்து வந்தது. வெளிநாட்டு வாணிபத்தைப் போருக்கு முன்னுலிருந்த வணிக ஸ்தாபனங்களிடமே தற்காலிகமாக விட்டுவைக்க விரும்பியது. ஆனால், வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபடுவோர் அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுவது அவசியம்; அனுமதியின்றி இறக்குமதி செய்யும் கள்ள வியாபாரிகள் தண்டிக்கப்படுவர். அரசாங்கத்தின் இந்த முயற்சியை வணிகர்கள் ஆதரிக்கவில்லை. எனவே, வெளிநாட்டு வாணிபத்தை அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1918 ஏப்ரலில் வெளிநாட்டு வாணிபத்துக்கான சோவியத் (Soviet for Foreign Trade) நிறுவப்பட்டது. ரஷ்யப் பொருளாதாரத்திலும் நிதி விவகாரத்திலும் வெளியாரின் தலையீட்டைத் தடுப்பதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்ததாகக் கூறப்பட்டது. ஆயினும், வெளியாரின் தலையீட்டை அரசாங்கத்தால் தடுக்க இயலவில்லை. அதன்காரணமாக அயல்நாட்டு வாணிபம் அடியோடு குறைந்தது.

உள்நாட்டு வாணிபத்தையும் உடனடியாக நாட்டு உடைமையாக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. சீனி, நெருப்புப் பெட்டி, காப்பி, வாசனைப் பொருள்கள், நூல் முதலிய ஒரு சில பொருள்களை மட்டும் அரசாங்கம் தன் கையில் வைத்துக்கொண்டு ஏனைய பொருள்களின் வினியோகத்தைத் தனிப்பட்ட வணிகர்களிடம் விட்டுவைக்க விரும்பியது. இருப்பினும் மெதுவாக உள்நாட்டு வாணிபத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை அரசாங்கத்திடம் இருந்தது. ஆனால், அரசாங்கமும் தனி வணிகரும் நெடுநாள் ஒருமித்து வாழ முடியவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளை அடித் தளத்திலிருப்போர் அனுசரித்து நடவாதது ஒரு காரணம். அரசாங்கத்தின் ஆணைகளை மீறி வணிகர்மீது வரிவிதிப்பது, பயமுறுத்துவது, பண்டங்களைப் பறிமுதல் செய்வது போன்ற அந்துமீறிய பல செய்கைகளில் சிலர் ஈடுபட்டனர். அத்துடன் அரசாங்கத்தின் தலையீட்டையும் கட்டுப்பாட்டையும் விரும்பாத வணிகர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன்வரவில்லை. எனவே, அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று.

**பாங்குகள்**

சிறு தொழில்களுக்கும் வாணிபத்துக்கும் காட்டிய சலுகைகள் பாங்குகளுக்குக் கிடைக்கவில்லை. நாணய முறையை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்ற மார்க்ஸீயக் கருத்து அப்படியே அமுல் நடத்தப்பட்டது. புரட்சி ஏற்பட்ட ஒரு சில தினங்களில் 20 மில்லியன் ரூபில் தருமாறு அரசாங்கம் அரசாங்க பாங்கைப் (State Bank) பணித்தது. அதற்கு இணங்க மறுத்ததால் அரசாங்கம் உடனடியாக அதை நாட்டுடைமை ஆக்கியது. அதையும் அதன் கிளைகளையும் நிருவகிக்கப் பல புது நிருவாகங்களை அரசாங்கம் அமர்த்தியது. தனிப்பட்ட பாங்குகளின் (Private Bank) ஆயுள்காலம் மேலும் சில தினங்கள் நீடித்தது. இந்தக் குறுகிய காலத்தில், அந்தப் பாங்குகள் தங்களிடமிருந்த பணத்தைக் கள்ளத்தனமாக நாடுகடத்தாமல் இருக்கும் பொருட்டும், அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமல் இருக்கும் பொருட்டும் கண்டிப்பான கட்டுப்பாடுகளை அமுல் நடத்தியது. முடிவில் டிசம்பர் 1917-ல் எல்லாப் பாங்குகளும் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அத்துடன் நில பாங்கு முறையும் ஒழிந்தது. இன்சூரன்ஸையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அதுமட்டுமின்றி, அரசாங்கம் அயல்நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களில் பெரும் பகுதியை ஏப்பமிட்டது. இவ்வாறு 1917 முடிவதற்குள் பாங்குகளும் அவை சம்பந்தப்பட்ட இதர நிதிநிலையங்களும் அரசாங்கத்துக்குச் சொந்தமாயின.

எனவே, புரட்சியின் காரணமாக ரஷ்யப் பொருளாதார அடிப்படையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. நிலப்பிரபுத்துவம் ஒழிந்து நிலத்தில் தனி உடைமை நிலைநாட்டப்பட்டது. பாங்குகளும் வெளிநாட்டு வாணிபமும் அரசாங்க உடைமை ஆயின. உள்நாட்டு வாணிபத்தில் அரசாங்கம் தனி வணிகருடன் ஒருமித்து வாழ விரும்பியது. தொழில்துறையிலும் அரசாங்கம் முதலாளிகளின் ஒத்துழைப்பைப் பெரிதும் நாடியது. இத்தகைய மாறுதல்கள் மார்க்ஸீயக் கோட்பாடுகளை முற்றிலுமாகப் பிரதிபலிக்கவில்லை என்பது கண்கூடு. இதைப் பயன்படுத்தித்தான் டிராட்ஸ்கி போன்ற இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் அரசாங்கம் மிதவாதப் போக்கில் போகிறது என்று குறை கூறலாயினர். 'முதலாளித்துவத்தைக் கிள்ளி எறியாது அதனுடன் பேரம் பேசுகிறது; அயல்நாட்டு மூலதனத்துடன் சம்பந்தம் கொள்ளுகிறது; ஆலை நிருவாகத்தில் தொழிலாளர் தலையீடு கூடாது என்பதன்மூலம் முதலாளித்துவச் சுரண்டலுக்குத் தூபம் போடுகிறது' என்ற பல குற்றச்சாட்டுக்களை அவர்கள் அரசாங்கத்தின்மீது சுமத்தினர்.

இத்தகைய குற்றச்சாட்டுகளைக் கண்டு லெனின் மலைக்கவில்லை. 'முதலாளித்துவத்திலிருந்து சமதர்மத்தை நோக்கி ஒரே பாய்ச்சலில் தாவிவிட முடியாது. பல படிகள் ஏறித்தான் சமதர்மத்தை எட்டிப்பிடிக்க முடியும். அரசாங்கம் தனது நடவடிக்கைளால் சமதர்மத்தை நோக்கி முன்னேறி உள்ளது. ஆனால் இடைப்பட்ட காலத்தில் தனி உடைமையும், நாட்டுடைமையும் ஒருமித்து வாழ்வது தவிர்க்க முடியாதது. பொருளாதாரத்தின் கேந்திர ஸ்தானங்கள் அரசாங்கத்திடமிருக்கும்போது முதலாளிகள் என்ன செய்துவிட முடியும்? முற்றுகையிடப்பட்ட முதலாளித்துவத்தைக் கண்டு பீதி அடைய அவசியமில்லை. மேலும் உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமை ஆக்கிவிட்டால் போதுமா? அவைகளை நிருவகிப்பது யார்? போதிய தொழிலறிவு இல்லாத நிலையில் அத்தகைய கொள்கை விரும்பிய பயன் தருமா? எனவே, அவசரப் பட்டு முதலாளித்துவத்தை ஒழிக்க முற்படுவது விவேகமான செயலல்ல' என்று லெனின் தம்மைக் குறை கூறியவர்களுக்குப் பதிலிறுத்தார்.

**பிரச்சினைகள்**

ஆனால், அரசாங்கம் செய்ய நினைத்தது ஒன்று; நடந்தது வேறு. ஆங்காங்கே உள்ள சோவியத்துக்கள் அரசாங்கத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை. கிராமங்களிலே விவசாயிகள் தங்கள் இஷ்டம்போல் நிலங்களைப் பறிமுதல் செய்து பங்கிட ஆரம்பித்தனர். உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் நிறையச் சேதம் ஏற்பட்டது. ஆலைகளிலே தொழிலாளரின் அட்டூழியம் அளவுக்கு மிஞ்சியது. 'ஆலை நிருவாகத்தில் தொழிலாளர் தலையிடக்கூடாது; நிருவாகத்தை மேற்பார்வை மட்டும் செய்யவேண்டும்' என்பது அரசாங்கத்தின் ஆணை. ஆனால், தொழிலாளர் அதற்குச் செவி சாய்ப்பதாக இல்லை. அத்துமீறி ஆலை நிர்வாகத்தில் தலையிட்டனர். இதை அரசாங்கம் விரும்பவில்லை, ஆனால் அதைத் தடுத்து நிறுத்தும் சக்தியும் அதனிடமில்லை. தலையீட்டை விரும்பாத நிருவாகிகள் பலர் தொழிலாளரின் தலையீட்டை எதிர்த்துப் போராடினர். தொழிலாளரின் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்தனர். சிலர் தொழிலாளர் தலைவர்களை லஞ்சம் கொடுத்துக் கைவசப்படுத்தினர். தொழிலாளரின் தொல்லை பொறுக்காமல் சிலர் தொழிலைவிட்டு வெளியேறினர். அவற்றைத் தொழிலாளர் கைப்பற்றினர். ஆனால், நிருவகிக்கத் தெரியவேண்டுமே! ஆகவே, பல ஆலைகளில் இரட்டை ஆட்சி நடந்தது. சிலவற்றில் அராஜகம் நிலவியது. அதுமட்டுமல்ல, சில தொழிலாளர்கள் அரசாங்கத்தின் அனுமதியின்றி, ஆலைகளை முதலாளிகளிடமிருந்து பறிமுதல் செய்தனர். உதாரணமாக, ஜூலை 1918 வரை சுமார் 500 ஆலைகள்

முதலாளிகளிடமிருந்து பிடுங்கப்பட்டன. இவற்றில் 100 ஆலைகளே அரசாங்கத்தின் ஆணையின்படி நாட்டுமயமாக்கப் பட்டவை. முதலாளிகளைப் போன்றே உள்நாட்டு வணிகரும் பல இன்னல் களுக்கு உள்ளாயினர். இத்தகைய தலையீடுகளையும் அத்துமீறிய செயல்களையும், டிராட்ஸ்கி போன்ற இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரித்தனர். அதன் காரணமாக அரசாங்கம் தனது கொள்கைகளை நடைமுறையில் கொண்டு செலுத்த இயலாது திணறியது.

**உள்நாட்டுப் போர்**

இத்தகைய சூழ்நிலையில்தான், 1918 கோடையில் ரஷ்யாவில் உள்நாட்டுப் போர் மூண்டது. ஒரு வயதுகூட நிரம்பாத சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் பல சக்திகள் வேலை செய்தன. சோவியத் அரசாங்கத்தையும், அதைத் தாங்கி நின்ற செம்படை யையும் (Red Army) முறியடிக்க வேண்டுமென்று நாலாபக்கங்களி லிருந்தும் பலர் படை எடுத்தனர். இவை வெண்படைகள் (White Armies) என்று அழைக்கப்பட்டன. 1918 ஆகஸ்டில் ஜெனரல் டெனிகினின் (General Denikin) கீழ் ஒரு வெண் படை உருவாகியது. அதேசமயத்தில் வால்காவின் தென்பகுதியில் ஜெனரல் க்ராஸ்னோவின் (General Krasnov) தலைமையில் கோசாக் (Cossack) படை நிறுவப்பட்டது. விரைவில் இவை இரண்டும் ஜெனரல் டெனிகினின்கீழ் ஒன்றுபட்டன. செப்டம்பர் ஆரம் பத்தில் அப் படை லெனினைக் கொல்ல முயன்றது; முடிய வில்லை. காஸான் (Kazan) பகுதி கலகக்காரரின் கையில் விழுந்தது. செக் படைகள் (Czeck) அதற்கு உதவி செய்தன. அதற்கும் கிழக்கே கோல்சாக் (Kolchak) என்ற கப்பற் படைத் தலைவன் யூரல், சைபீரியா முதலிய பகுதிகளைக் கைப்பற்றினான். இம் முயற்சியில் அவனுக்குக் கானடா, பிரான்ஸ், ஜப்பான் முதலிய நாடுகளின் படைப்பலம் கிடைத்தது. அத்துடன், பிரெஸ்ட் லிட்டாவ்ஸ்க் (Brest Litovsk) உடன்பாட்டின்படி உக்ரெயினில் தங்கியிருந்த ஜெர்மன் படைகளும் உள்நாட்டுப் போரில் தலையிட லாயின. ஜெர்மானியருக்குத் தப்பி மர்மான்ஸ்க் (Murmansk) பகுதியில் தஞ்சம் புகுந்திருந்த நேசநாட்டுத் துருப்புகளும், தங்கள் துப்பாக்கிகளை சோவியத் அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்பின. ஆங்கிலப் படையும் வடக்கே உள்ள ஆர்க்கேஞ்சலில் (Archangel) வந்து குவிந்தது. பால்டிக் பகுதியிலிருந்து கலகம் செய்த ஜெனரல் யுடெனிச்சிக்கு (General Yudenich) பிரிட்டிஷ் கடற்படை பக்க பலமாக இருந்தது. இப்படிப் பல கோணங்களிலுமிருந்து தாக்குண்ட சோவியத் அரசாங்கம் தனக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டுப் பல அசாதாரணமான கொள்கைகளைக்

கடைபிடிக்க வேண்டியதாயிற்று. அதுவே போர்க்காலப் பொது உடைமை (War Communism) எனப்படுவது.

## போர்க்காலப் பொருளாதாரம்

உள்நாட்டுப் போரின் காரணமாக முதலாளிகளின் மனப் பான்மை ஓரளவு மாறியது. முதலாளிகள் பலர் கலகக்காரருக்கு அனுதாபம் காட்டலாயினர். வெளியாரின் தலையீடு அவர்களுக்கு ஒருவகைத் தெம்பை அளித்தது. தொழிலாளரின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து முதலாளித்துவத்துக்குப் புத்துயிர் அளிக்கலாம் என்று அவர்கள் கனவு கண்டனர். அரசாங்கத்துடன் மனமார ஒத்துழைக்க மறுத்தனர். தொழிலாளரின் தலையீட்டை எதிர்த்துப் போராடினர். சிலர் நாச வேலைகளில் ஈடுபடலாயினர். இத்தகைய சூழ்நிலையில் பொருளாதாரத்தின் கணிசமான பகுதியை அவர்கள் கையில் விட்டுவைப்பது அபாயமானது என்று அரசாங்கத்துக்குப் பட்டது. அத்துடன் 'உக்ரெயினிலுள்ள ஜெர்மானியப்படைகள் பல தொழில் துறைகளையும் பலாத்காரமாகத் தங்கள் கைவசப் படுத்தத் திட்டமிடுகின்றனர்' என்ற வதந்தி அரசாங்கத்தின் காதில் விழுந்தது. இத்தகைய சதித்திட்டங்களை உடைத்தெறியும் நோக்குடன் அரசாங்கம் அவசர அவசரமாக ஆலைகளை நாட்டுமய மாக்க விரைந்தது. அதனடியாகப் பிறந்ததுதான் 1918 ஜூன் மாதம் வெளியான நாட்டுடைமைச் சட்டம் (General Nationalisation Decree).

அதன்படி ஒரு மில்லியன் ரூபிளுக்கு அதிகமான மூலதனத்தை உடைய கம்பெனிகளெல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. குறிப்பாகச் சுரங்கங்கள், உலோகங்கள், துணி, கண்ணாடி, தோல், சிமெண்டு, மரம், மின்சாரப் பொருள்கள் முதலிய துறைகள் யாவும் நாட்டுடைமையாக்கப்பட்டன. 1918ஆம் ஆண்டு முடிவதற்குள் கிட்டத்தட்ட 1000 பெரும் ஆலைகள் அரசாங்கத் துக்குச் சொந்தமாயின. இத் தொகை 1919 இலையுதிர் காலத் துக்குள் சுமார் 5000 ஆக உயர்ந்தது. அரசாங்கத்தின் கைவசமான ஆலைகளின் உற்பத்தியும் வினியோகமும் அரசாங்கத்தின் கையில் இருந்தன. இதுபோக தனியாரின் முயற்சியினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் பரிவர்த்தனையையும் வினியோகத் தையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டியதாயிற்று. எனவே, நவம்பர் 1918-ல் உள்நாட்டு வாணிபம் முழுவதும் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. இந்த வாணிபம் உணவு அமைச்சவையின் (Food Commissariat of Narkomprod) கீழ் நடைபெறலாயிற்று. பொது மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்கள் அனைத்தையும்

அரசாங்கமே வாங்கி விநியோகம் செய்ய முற்பட்டது. அரசாங்கக் கடைகளும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் விநியோகத்தின் உயிர் நாடிகளாக விளங்கின. விவசாயப் பொருள்களும் இதற்கு விதிவிலக்கல்ல. 1919ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து விவசாயப் பொருள்களனைத்தும் அரசாங்கத்தின் மூலமே பரிவர்த்தனை ஆயின. ஏன் இந்தத் தலையீடு என்பது கண்கூடு. ஐரோப்பிய-ரஷ்யாவில் பத்தில் ஒன்பது பகுதி உள்நாட்டுப் போரால் பாதிக்கப் பட்டது. நாட்டின் வளமிக்க பகுதிகள் பல கலகக்காரரின் கையில் சிக்கின. முதலாளிகளோ வணிகரோ அரசாங்கத்துடன் முழு மனத்துடன் ஒத்துழைப்பதாக இல்லை. இப்படி நெருக்கடியான கட்டத்தில் வாழ்வா, சாவா என்ற நிலையில் உயிருக்காகப் போராடியது அரசாங்கம். எனவே, தனது ராணுவத்துக்கு அத்தியாவசியத் தேவையான பொருள்களைப் பெறும் பொருட்டுப் பொருளாதாரத்தின் பல முனைகளிலும் அது தலையிட்டதில் வியப்பொன்றுமில்லை.

### சிக்கல்கள்

பிரச்சினைகள் அதோடு தீர்ந்துவிடவில்லை. மேன்மேலும் பல சிக்கல்கள் முளைத்தவண்ணமாக இருந்தன. நாடெங்கும் பஞ்சம் தாண்டவமாடியது. நகர வீதிகளிலே பட்டினிஊர்வலம் வந்தது. மனிதனைப் போன்றே ஆலைகளும் அரைவயிருக இருக்கவேண்டிய தாயிற்று. கனிப் பொருள்களுக்கும் கச்சாப் பொருள்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. டோன்பாஸ் பகுதி எதிரி களின் வசமாயிற்று. பாகுவிலுள்ள எண்ணெயைக் கொண்டுவர வழியில்லை. எனவே, எரிபொருள் பஞ்சம் ஏற்பட்டது. புரட்சிக்கு முன் கிடைத்த அளவில் பாதி எரிபொருள்தான் 1919-ல் கிடைத்தது. ரஷ்யாவின் இருப்புக்கனிகளில் முக்கால் பகுதி டோன்பாஸில் இருந்தது. யூரலும், டோன்பாஸும் முக்கால் பகுதி இரும்பை உற்பத்தி செய்தன. இவை எதிரிகளின் கையில் சிக்கி விட்டன. மத்திய ஆசியாவிலிருந்து கச்சாப் பருத்தி வர வழியில்லை. நிலக்கரித் தட்டுப்பட்டின் காரணமாக இரும்பு எஃகுத் தொழிற் சாலைகள் தங்கள் முழுச் சக்தியையும் பயன்படுத்த முடியவில்லை; பல மூடப்பட்டன. எரிபொருள் இன்மையால் இருப்புப் பாதைகள் இயங்க வழியில்லை. இயங்கிய ஒரு சிலவும் இராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே கண்ணுயிருந்தன. எனவே, ஆலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களையும், கனிப் பொருள்களையும், அவைகளால் கொண்டு செல்ல இயலவில்லை. எஞ்சின்களோ ஓயாது வேலைசெய்து களைத்தன; வேலை செய்யத் தகுதியற்றுப் போயின. புரட்சியின் போது 30 சதவிகிதம் எஞ்ஜின்கள் பழுது பட்டிருந்தன. 1920-ல் அவ் விகிதம் 70 ஆக உயர்ந்தது. பழுது

பார்க்கும் வசதிகள் இல்லை. அதுமட்டுமா? இருப்புப்பாதைகள் பல எதிரிகளால் பிடுங்கப்பட்டன. 1920-ல் இருந்த இருப்புப்பாதை களில் கிட்டத்தட்ட 70 சதவிகிதம் கலகக்காரர்கள் கையில் இருந்தது. பாலங்கள் பல உடைத்தெறியப்பட்டன. எனவேதான், உள்நாட்டுப் போரை 'இரயில்வேப் போர்' என்று அழைத்தனர். சுருங்கக் கூறின், எரிபொருள் தட்டுபாடு, கச்சாப் பொருள்-கனிப் பொருள் பற்றுக்குறை, இருப்புப் பாதைகளின் சீர்குலைவு இவற்றால் ஆலை உற்பத்தி சடசடவென்று கீழே சரிந்தது.

உற்பத்தி குறுகியதற்கு இன்னும் பல காரணங்களுண்டு. போதிய உணவில்லாத காரணத்தால் தொழிலாளர் பலர் நகரங்களை விட்டுவிட்டுக் கிராமங்களை நோக்கிப் பயணமாயினர். 1920-ல் வேலைசெய்தோரின் எண்ணிக்கை, போருக்கு முன்பு இருந்த தொகையில் பாதியாகக் குறைந்தது. இருந்த ஒரு சிலரும் ஒழுங்காக வேலைக்குச் செல்லவில்லை. பசியும் பட்டினியுமாய் இருந்த காரணத்தால் தொழிலாளியால் முனைந்து வேலை செய்ய

அட்டவணை 3

**அரசாங்கத்தின் வரவு, செலவு**

(மில்லியார்ட் ரூபிளில்)

| வருஷம் | வரவு | செலவு | பற்றுக்குறை | செலாவணி வெளியீடு |
|---|---|---|---|---|
| 1914 | 3·0 | 4·9 | 1·9 | 1·3 |
| 1915 | 3·0 | 11·6 | 8·6 | 2·7 |
| 1916 | 4·4 | 18·1 | 13·7 | 3·5 |
| 1917 | 5·0 | 27·6 | 22·6 | 16·4 |
| 1918 | 15·6 | 46·7 | 31·1 | 33·5 |
| 1919 | 49·0 | 215·4 | 166·4 | 164·2 |
| 1920 | 159·6 | 1215·2 | 1055·6 | 943·6 |
| 1921 | 4139·9 | 26076·8 | 21936·9 | 16375·3 |

1 மில்லியார்ட் = 1000 மில்லியன் = 1 பில்லியன்

Source : Baykov (A) 'Soviet Economic System' Ch. II- Tables 4 & 5.

இயலவில்லை. எனவே, அவனது, ஆக்க சக்தி போருக்கு முன் இருந்ததில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்தது. வேலை செய்த தொழிலாளரின் எண்ணிக்கையும், அவர்களது ஆக்கசக்தியும் குன்றியதன் காரணமாக ஆலைப்பொருள் உற்பத்தி போருக்கு முன் இருந்ததில் 15 சதவிகிதங்கூட இல்லை.

### பணவீக்கம்

பொருளில்லாக் குறைவைப் பணவீக்கம் (Inflation) பல மடங்காக மிகைப்படுத்திக் காட்டியது. உள்நாட்டுப் போர் அரசாங்கத்தின் உயிரை உறிஞ்சியது, செலவினங்கள் எக்கச்சக்க மாக அதிகரித்தன. அதற்கொப்ப வரவினங்கள் பெருகவில்லை. எனவே, உலகப் போரின் ஆரம்பத்திலிருந்தே வரவுக்கு மிஞ்சிய செலவு சர்வசாதாரணமாக இருந்தது. உள்நாட்டுப் போரின்போது நிலைமை முன்னிலும் மோசமாயிற்று.

வரவைவிட செலவு எப்படி விறுவிறுப்பாக ஏறியது என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து விளங்கும். இப்படி 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' வளர்ந்துவந்த பற்றுக் குறையை (Deficit) ஈடுசெய்ய, அரசாங்கம் மேன்மேலும் அச்சகத்தின் ஆதரவை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் காரணமாக விலைவாசிகள் விஷம்போல் ஏறின. இப்படித் தாவிப்பாய்ந்த (galloping) பணவீக்கத்தின் காரணமாக ரூபிளின் வாங்கும் சக்தி புரட்சிக்கு முன்னால் இருந்ததில் நூறில் ஒரு பகுதி யாகக் குறைந்தது!

பணவீக்கத்தால் பாதிக்கப்படாதவரே இல்லை எனலாம். ஆனால் அரசாங்கத்தின் முதுகெலும்பாகிய தொழிலாளர் அதிகமாகப் பாதிக்கப்படாதபடி பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கம் அவர்களது கூலியைக் கூடியமட்டும் பொருள் வடிவாகவே கொடுக்க முயன்றது. இந்தச் சலுகை ஏனையோருக்குக் கிட்டவில்லை, குறிப்பாகக் கடன் கொடுத்து வட்டி வாங்கும் கூட்டத் தினரும் விவசாயிகளும் பணவீக்கத்தால் பெரிதும் பாதிக்கப பட்டனர்.

### விவசாயிகளின் இன்னல்கள்

விவசாயிகள் இருவகையான தொல்லைகளுக்கு உள்ளாயினர். முதலாவது, விவசாயப் பொருள்களை விற்பதன்மூலம் கிடைக்கும் பணத்தைச் சிலகாலம் கையிருப்பாக வைத்திருப்பது விவசாயி களின் வழக்கம். விலைவாசிகள் மூச்சுவிடாமல் ஏறிய காரணத் தால் அத்தகைய கையிருப்பின் மதிப்பு நாளுக்கு நாள் குறைய

லாயிற்று. இரண்டாவது, விவசாயப் பொருள்களின் விலை பெரும் பாலும் அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே ஆலைப்பொருள்களின் விலைதான் பணவீக்கத்தால் பெரிதும் பாதிக் கப்படலாயிற்று. அதன் காரணமாக விலை விகிதம் (price-ratio) அல்லது வாணிப மாற்று விகிதம் (terms of trade) விவசாயி களுக்குப் பாதகமாகத் திரும்பியது. எப்படி இக் குறைகளைத் தீர்த்து விவசாயிகளின் ஆதரவைப் பெறுவது என்பது அரசாங் கத்தின் முக்கியக் கவலையாக இருந்தது.

### அரசாங்கத்தின் தலைவலி

இராணுவத்தின் துணையின்றி அரசாங்கம் உள்நாட்டுப் போரிலிருந்து மீளுவது இயலாத காரியம். ஆகவே, ராணுவத்துக்கு வேண்டிய உணவளித்து அதைப் பாதுகாக்கவேண்டியது அவசிய மாயிற்று. உணவுக்காக அரசாங்கம் விவசாயிகளை நாடியது. ஆனால், எப்படி உபரி பொருள்களை விவசாயிகளிடமிருந்து சேகரிப்பது என்பது பெரும் பிரச்சினையாக இருந்தது. விவசாயப் பொருள்களின் விலை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டது. விலைவாசிகள் ஏறிவந்த காலத்தில் இத்தகைய விலைநிர்ணயம் விவசாயிகளுக்குப் பாதகமாக இருந்தது. எனினும் அந்த விலையில் விற்குமாறு அரசாங்கம் விவசாயிகளைப் பலவந்தப்படுத்தியது; பலாத்காரத்தை உபயோகிக்கவும் தயங்கவில்லை. இதை விவசாயிகள் எதிர்த்தனர். தானியங்களைப் பதுக்கினர். நிலங்களைத் தரிசாக் கினர். 1920-ல் பயிரிடக்கூடிய நிலத்தில் பாதிக்குமேல் தரிசாகக் கிடந்தது. ஆக்கசக்தியும் குறைவுபட்ட காரணத்தால் விவசாயப் பொருள் உற்பத்தி போருக்கு முன் இருந்ததில் ஐந்தில் இரண்டு பங்காகக் குறைந்தது. விவசாயிகளின் எதிர்ப்பை முறியாடிக்க விரும்பிய அரசாங்கம் கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகளை ஒன்றுதிரட்ட முயன்றது. ஏழைக் கிராமவாசிகளின் குழுக்கள் (Committees of village poor) பல அமைக்கப்பட்டன. அவர் களின் உதவியால் பதுக்கல் பேர்வழிகளைத் தாக்க நினைத்தது அரசாங்கம். இத் தாக்குதல்களுக்குக் குலாக்குகள் மட்டுமன்றி, பல நடுத்தர விவசாயிகளும்இலக்காயினர். எனவே, அது விவசாயி தொழிலாளி கூட்டணியைப் (Smytchka) பிளவு படுத்தலாயிற்று.

### மருந்து

கூட்டணி உடைவதால் உண்டாகும் அபாயங்களை நன்கு உணர்ந்த லெனின் நிலைமையைச் சரிக்கட்ட விரும்பினர். அதன் பொருட்டு ஏழைக் கிராமவாசிகளின் குழுக்களைக் கலைத்தார். நடுத்தர விவசாயிகளுடன் ஒப்புரவு ஆகவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். 'நடுத்தர விவசாயிகளைக் குலாக்குகள் என்று

எண்ணுவது தவறு. குலாக்குகளை ஒழித்துக் கட்ட வேண்டுமாயின், அவர்களைத் தனிமைப்படுத்தவேண்டும். நடுத்தர விவசாயிகளைக் குலாக்குகளுடன் சேரவிடக்கூடாது. அவர்களுடன் ஒப்புரவாகி குலாக்குகளுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டத்தில் நடுநிலைமை வகிக்கும்படி அவர்களைத் தூண்ட வேண்டும்' என்று லெனின் போதித்தார்.

லெனினது கருத்துக்கிணங்க அரசாங்கம் விவசாயிகளிடம் தாராள மனப்பான்மை காட்டலாயிற்று. அதன்படி விவசாயப் பொருள்கள் இரு கூருகப் பிரிக்கப்பட்டன. சிலவற்றை அரசாங்கம் நிர்ணயிக்கும் விலையில் விவசாயிகள் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். மீந்தவற்றை அங்காடியிலுள்ள விலையில் விற்கலாம். ஆனால், குறிப்பிட்ட சில பொருள்களை வாங்குவதில் அரசாங்கத்துக்கே ஏகபோக உரிமை உண்டு, ஏனைய பொருள்களைத் தங்கள் விருப்பம்போல் அரசாங்கத்திடமோ, கூட்டுறவுச் சங்கங்களிடமோ, தனிப்பட்ட வணிகரிடமோ, விற்கும் உரிமை விவசாயிகளுக்கு இருந்தது. ஆனால், அதில் ஈடுபட்ட கூட்டுறவுச் சங்கங்களும், தனிப்பட்ட வணிகர்களும் அரசாங்கத்தின் அநுமதி பெற வேண்டும். அந்த ஏற்பாட்டின்படி விவசாயிகள் பலர் முதலிரண்டு வகைப் பொருள்களில் உற்பத்தியைக் குறைத்து மூன்ருவதைப் பெருக்க முற்பட்டனர். இம் முயற்சியைத் தடுக்கும் பொருட்டு அரசாங்கம் தனது ஏகபோக உரிமையைக் கொஞ்சம் கொஞ்சமாக விரிவாக்கியது. கூட்டுறவுச் சங்கங்களையும், தனது கட்டுப்பாள்டின் கீழ்க்கொண்டுவர முயன்றது. மேலும், விவசாயப் பொருள்களைக் கொடுத்து அதற்குப் பதிலாகப் தங்களுக்குத் தேவையான ஆலைப் பொருள்களைப் பண்டமாற்றுச் செய்யும் வழக்கமும் மெதுவாகப் புகுத்தப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால் அரசாங்கம் தனக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களை விவசாயிகளிடமிருந்து பெற முடிந்தது. நடுத்தர விவசாயிகளும் அரசாங்கத்தை எதிர்க்கும் வேலையில் ஈடுபடமால் ஒதுங்கலாயினர். இந்த மனமாற்றம் அரசாங்கம் உள்நாட்டுப் போரில் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் துணை செய்தது.

**ஆலைப் பிரச்சினைகள்**

ஆலைகளின்மீது அரசாங்கத்துக்கு இருந்த பிடிப்பு கொஞ்சங் கொஞ்சமாக இறுகியது. ஏற்கெனவே பல பெரிய ஆலைகள் அரசாங்கத்துக்குச் சொந்தமாயின. நாளடைவில் நடுத்தரமான ஆலைகளும் சிறிய ஆலைகளும்கூட நாட்டுடைமையாக்கப்பட்டன. 1920 ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட சட்டத்தின்படி பல சின்னஞ்சிறு ஆலைகள் அரசாங்கத்தின் வசமாயின. அவ்வாண்டு

முடிவதற்குள் கிட்டதட்ட 37,000 ஆலைகளும், தொழிற்சாலைகளும் நாட்டுடைமையாயின. இவற்றில் பாதிக்குமேல் இயந்திரசக்தியைப் பயன்படுத்தவில்லை.

உடமை மாறியதோடு ஆலைப்பொருள்களின் பரிவர்த்தனையும் வினியோகமும் மாறின. முன்னால் இருந்ததுபோல் பொருள்களைத் தங்களிட்டம்போல் விற்கவும் வாங்கவும் ஆலைகளுக்கு உரிமை இல்லை; ஆலைகளிடையே ஏற்பட்ட பொருள் பரிவர்த்தனை பணத்தின் துணைகொண்டு நடைபெறவில்லை. ஆலைப்பொருள் விநியோகமும் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாயிற்று. உணவு அமைச்சவை அதை ஏற்று நடத்தியது. இத் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்துக்குத் துணையாக நின்றன. இருப்பினும், அரசாங்கத்தின் கையில் அகப்படாமல் கள்ளச் சந்தை ஒன்று உருவாகி வளர்ந்தது. அரசாங்கத்தின் தலையீட்டை விரும்பாத ஒரு சிலர் இத்தகைய சட்ட விரோதமான நடவடிக்கை களில் ஈடுபடலாயினர்.

ஆலைகளில் ஒழுங்கீனம் அதிகரித்தது என்று கண்டோம். அவற்றை ஒழித்துக்கட்டுவதிலும், அரசாங்கம் முனைந்து நின்றது. ஆலைகளை விட்டு ஓடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஆலைகளின் ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்கள் தண்டனைக் குள்ளாயினர். தொழிலாளரிடையே இராணுவக் கட்டுப்பாடுகளை நிலைநாட்ட விரும்பியது அரசாங்கம்.

**ஆலை நிருவாகம்**

ஆலை நிருவாகத்தில் ஏற்பட்ட அராஜகத்தையும் அரசாங்கம் களைந்தெறிய முன்வந்தது. இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டது. பெரும்பாலான ஆலைகள் தனிப்பட்ட நிருவாகிகளிடம் ஒப்படைக் கப்பட்டன. சில பெரிய ஆலைகளில் இரண்டு மூன்று பேர்கொண்ட நிருவாகக் குழுக்கள் (Directorate) நிறுவப்பட்டன. நிருவாகிகளை நியமித்து அவர்களது வேலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு தலைமைப் பொருளாதாரக் குழுவின் கையில் இருந்தது. அக் குழுதான் ஆலை நிருவாகத்தின் தலைமைப் பீடமாகத் திகழ்ந்தது. 10 அல்லது 12 பேரைக்கொண்ட தலைமைக் குழு (Presidium) அதை நிருவகித்தது. அந்த நிருவாகிகள் பலர் கிளாவ்கி, தொழிற்சங்கங்கள், மாகாணப் பொருளாதாரக் குழுக்கள் (Gubsovnarhozy) முதலியவற்றின் பிரதிநிதிகளாவர். தலைமைப் பொருளாதாரக் குழுவின்கீழ்ப் பல கிளைகள் இருந்தன. இவை கிளாவ்கி என்று வழங்கப்பட்டன. நாட்டுமயமாக்கப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை உயர உயர கிளாவ்கியின் எண்ணிக் கையும் உயர்ந்தது.

பல பெரிய தொழில்களின் நிர்வாகம் நேரடியாகக் கிளாவ்கியின் பொறுப்பில் இருந்தது. தனிப்பட்ட ஆலைகளின் நிருவாகத்தை அவை கூர்ந்து கவனித்துவந்தன. ஆலைப்பொருள்களை உணவு அமைச்சவையிடம் பரிவர்த்தனை செய்து தங்களுக்கு வேண்டிய விவசாயப் பொருள்களை வாங்குவதும், அவற்றை ஆலைகளிடையேயும் தொழிலாளரிடையேயும் வினியோகம் செய்வதும் கிளாவ்கியின் முக்கிய வேலைகளில் ஒன்றாக இருந்தது. ஆனால் 1918-க்குப் பின்னர் ஏற்பட்ட பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக, கிளாவ்கி பொருள்களைப் பயன்படுத்தும் தலைமைக்கமிஷனின் (Supreme Utilisation Commission) ஆணைக்கு உட்பட்டு இயங்க வேண்டியதாயிற்று. துணி உற்பத்தி போன்ற பல தொழில்கள் சிறிது பரந்த அடிப்படையில் அமைக்கப்பட்ட குழுக்களின்மூலம் கண்காணிக்கப்பட்டன. இக் குழுக்களை மையங்கள் (Centres) என்று வழங்கினர். எனவே, தொழில் நிருவாகத்தில் கிளாவ்கியும் மையமும் தலைமைப் பொருளாதாரக் குழுவின்கீழ்ச் செயலாற்றி வந்தன.

நிருவாகத்தின் பொருட்டு ஆலைகள் பலவகையாகப் பிரிக்கப்பட்டன. பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கும் பெரிய ஆலைகள் கிளாவ்கியின் பொறுப்பில் இருந்தன. நடுத்தரமான பல ஆலைகள் மாகாணப் பொருளாதாரக் குழுக்களிடம் விட்டு வைக்கப்பட்டிருந்தன. ஆனால், முக்கியமான ஆலைகளாதலால் அவை கிளாவ்கியின் கண்காணிப்பின்கீழ் வைக்கப்பட்டன. இவை தவிர, ஆங்காங்கே பல சின்னஞ்சிறு ஆலைகள் சிதறிக் கிடந்தன. இவை பெரும்பாலும் சில குறிப்பிட்ட பகுதிகளையே சார்ந்திருந்ததால் அவை மாகாணப் பொருளாதாரக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

**குறைபாடுகள்**

நாட்டுடைமை ஆக்கப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. ஆனால், அவற்றை 'ஜீரணிக்கும்' சக்தி அரசாங்கத்திடமில்லை. அஜீரணத்தால் வயிற்றுக் கோளாறு ஏற்படுவது இயல்புதானே! தன் கையில் இருந்த பெரிய ஆலைகளையே சரிவரக் கவனிக்க முடியாத நிலையில் மாகாணப் பொருளாதாரக் குழுக்களிடம் இருந்தவற்றை எப்படி மேற்பார்வை செய்வது? மாகாணக் குழுக்களோ கிளாவ்கியின் ஆலோசனைகளைச் செவிமடுப்பதாக இல்லை. ஆணைகளை மதிப்பதாகவும் இல்லை. எனவே, தொழில்களின் நிருவாகம் மேன்மேலும் சீர்குலையலாயிற்று. தலைமைப் பொருளாதாரக் குழுவால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. பொருளாதாரத்தின் பல பகுதிகளையும் ஒருங்கே இணைக்கும் திறனுமில்லை. அத்தகைய

தகுதி வாய்ந்த ஸ்தாபனம் இடைக்காலத்தின் இறுதியில்தான் தோன்றியது. அதற்குப் பெயர் தொழிலாளர் பாதுகாப்புக் குழு (Council of Labour and Defence or S I O). இத்தனை குறைபாடுகள் இருந்தபோதிலும் இக் குழுக்கள்தாம் பின்னால் வந்த திட்டக் கமிஷன்களின் முன்னோடிகளாக விளங்கின.

நிருவாகத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் பொருளுற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. பொதுவாக நிருவாகிகளும் நிபுணர் களும் சோவியத் ஆட்சியை விரும்பவில்லை. பலர் பொறுப்பற்ற முறையில் நிருவாகம் செய்தனர். நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கத்துக்கு எதிரான பல சதிவேலைகளில் பங்குகொண்டனர். நிருவாகத்தின் பல் பகுதிகளும் சுமுகமாக இயங்க வழியில்லை. தலைமைப் பொருளாதாரக் குழுவும் செயலற்றுக் கிடந்தது. இந்த நிலையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு அத்தியாவசியமான ஒரு சில தொழில்களில் மட்டும் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தியது. இவை அதிர்ச்சித் தொழில்கள் (Shock Industries) என்று வழங்கப்பட்டன. இத்தகைய அதிர்ச்சித் தொழில்களில் வேலைசெய்ய டிராட்ஸ் கியின் தலைமையில் ஓர் அதிர்ச்சித் தொழிலாளர்படை நிறுவப் பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டுடன் அவை பல கடினமான வேலைகளில் முனைந்திருந்தன.

ஆனால், பொதுவாகத் தொழிலாளரிடையேயும் அதிருப்தி வளரலாயிற்று. ஆலைகளில் அவர்கள் செலுத்திவந்த அதிகாரம் பிடுங்கப்பட்டது. பலவகையான கட்டுப்பாடுகளும் ஒழுங்குகளும் அமுல் நடத்தப்பட்டன. அதே சமயத்தில் பெரும்பாலான ஆலைகளில் தொழிலாளருக்குப் போதிய உணவு கிடைக்க வழியில்லை. எனவே, தொழிலாளர் பலர் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளம்பினர். கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான கோஷங்களை எழுப்பவதும் கூட்டங்கள் போட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்று வதும் ஆர்ப்பாட்டங்கள் செய்வதும் வழக்கமாயிற்று. 1920ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வேலைநிறுத்தங்கள் பெருகின. அதன் காரணமாகச் சோவியத் ஆட்சியின் ஆணிவேர் அசைந்தது.

விவசாயிகளிடையேயும் அதிருப்தி என்ற நோய் பரவலாயிற்று. உபரிப் பொருள்களைச் சேகரிப்பதில் பலாத்காரம் பயன்படுவதை அவர்கள் கொஞ்சமும் விரும்பவில்லை. எனவே பதுக்கல், கள்ளச் சந்தை முதலியன பெருகின. மேலும், பணவீக்கத்தின் காரணமாக வாணிபமாற்று விகிதம் விவசாயிகளுக்குப் பாதகமாகப் போய்க் கொண்டிருந்தது. எனவே, விவசாயிகளும் கம்யூனிஸ்ட் கட்சியி லிருந்து விலகிப்போக ஆரம்பித்தனர். அடித்தளம் இவ்வாறு

ஆட்டங்கொடுத்த காரணத்தால் சோவியத் ஆட்சி சரியும்தருவாயில் இருந்தது. நல்லவேளையாக, 1920ஆம் ஆண்டு இறுதிக்குள் உள்நாட்டுப்போர் ஒரு வகையாக ஓய்ந்தது. அதன் காரணமாக அரசாங்கம் கடைப்பிடித்து வந்த பொருளாதாரக் கொள்கைகளை மாற்றி அமைக்க அவகாசம் கிடைத்தது. அதன் பயனாகப் போர்க் காலப் பொது உடைமைக் கொள்கைகள் கைவிடப்பட்டன. புதுப் பொருளாதாரக் கொள்கை (New Economic Policy) உருவாகியது.

### புதுப் பொருளாதாரக் கொள்கை ஏன்?

போர்க்காலப் பொது உடைமையைப்பற்றிப் பலர் பலதரப்பட்ட அபிப்பிராயம் கொண்டுள்ளனர். ஒரு சாரார், 'அது மார்க்சீயக் கோட்பாடுகளுக்குக் கம்யூனிஸ்டுகள் அளித்த கொள்கை வடிவம்; ஆனால், நடைமுறைக்கு ஒவ்வாத காரணத்தால் அது களைந்தெறியப்பட்டது' என்று கருதுகின்றனர். கம்யூனிஸ்டுகளிடையேயும் பல கருத்து முரண்பாடுகள் நிலவின. இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் பலர் அவற்றைப் போற்றி வரவேற்றனர். உள்நாட்டுப் போரின் போது சோவியத் அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கைகளில் பல பொது உடைமை அம்சங்கள் இருக்கத்தான் செய்தன. பெரும்பாலான ஆலைகளும், வாணிபமும் நாட்டுடைமை ஆயின. பொருள் பரிவர்த்தனையில் பணத்தின் பயன் குறுகியது; பெரும்பாலும் பண்டமாற்றுமுறையே கையாளப்பட்டது. பாங்குகள் நிதி அமைச்சவையின் (Commissariat of Finance) கருவியாக மாறின. லேவாதேவியைக் கைவிட்டுத் தன்னுடன் தொடர்பு கொண்டிருந்த தொழில்களின் கணக்குகளைப் பதிவுசெய்வதே அதன் முக்கியமான வேலையாயிற்று. வரிகள் பெரும்பாலும் பொருள் வடிவிலேயே பெறப்பட்டன. தண்ணீர், மின்சாரம், போக்கு வரத்து, உணவு முதலிய பொருள்கள் பணமின்றியே பங்கீடு செய்யப்பட்டன. இன்ன பல அம்சங்களினால் கம்யூனிஸம் மலர்ந்து விட்டதாகப் பலர் கனவுகண்டனர். இவர்களில் டிராட்ஸ்கியும் ஒருவராவார். ஆனால், அக் கொள்கைகள் வேரூன்ற வழியின்றி வாடி மடிவதை அவர் கூர்ந்து கவனிக்கவில்லை. நிரந்தரமான புரட்சி (Permanent Revolution) யில் நம்பிக்கைகொண்டவர் டிராட்ஸ்கி. ஆதலின், கிராமங்களிலும், ஆலைகளிலும் பரவிய அராஜகத்தை அவர் குறைத்து மதிப்பிடலானார்.

ஆனால், லெனின் போன்ற தலைவர்கள் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தனர். 'போரும் பொருளாதாரச் சீரழிவும்தான் போர்க் காலப் பொது உடைமைக்கு அடிப்படைக் காரணங்கள்' என்பது அவர்களின் நம்பிக்கை. 'உள்நாட்டுப் போரும் வெளியாரின் தலையீடும் ஏற்பட்டிராவிடில், அக் கொள்கைகளுக்கு அவசியமே

இருந்திருக்காது; அன்றிருந்த சூழ்நிலையில் தற்காலிகமாக அத்தகைய கொள்கை அவசியமாயிற்று. போர் முடிந்துவிட்டதால் போர்க்காலப் பொது உடைமைக் கொள்கையையும் கைவிட வேண்டியதுதான்' என்பது லெனினது கருத்து. இக் கருத்தின் உருவம்தான் புதுப் பொருளாதாரக் கொள்கை.

## மேற்கொண்டு படிக்க

Baykov (A), 'Soviet Economic System', Section 1.,

Dob (M), 'Soviet Economic Development Since, 1917.' Chs-4 and 5.

Day (C), 'Economic Development in Europe' Ch, XXVII.

Podkoizin (A), 'A Short Economic History of the USSR,' Ch. IV.

Scwartz (H), 'Russia's Soviet Economy, Ch. 4.

Stalin (J), 'Problems of Leninism.'

# 6. புதுப் பொருளாதாரக் கொள்கை

1. பொது அம்சங்கள்.
2. விவசாயப் பிரச்சினை: புத்துயிர்பெற்ற குலாக்குகளின் எதிர்ப்பு—கட்டுப்பாடு—விவசாய முறை—விற்பனைக்குரிய உபரிப் பொருள்—குலாக்குகளின்மீது தாக்குதல் 15ஆம் காங்கிரஸ்.
3. தொழிற்கொள்கை — தொழில் நிருவாகம் — டிரஸ்டுகள் — அவற்றின் சீரமைப்பு—ஆலை நிருவாகம் — மேற்பார்வை — சிண்டிகேட்டுகள் — தொழில் சீரமைப்பு—உற்பத்தி—உற்பத்திச் செலவுகள் — அயல்நாட்டு மூலதனம்.
4. வாணிபக் கொள்கை—தனி வணிகர்—அரசாங்கக் கூட்டுறவு வாணிபம் — கத்தரிப் போக்கு — அரசாங்கத் தலையீடு — தரகர்களைக் கட்டுப் படுத்தல் — வெளிநாட்டு வாணிபம் — சர்வாதீனத்தால் விளைந்த நன்மைகள்—வாணிபச் சீரமைப்பு.
5. நிதிப் பிரச்சினை — 1924-க்கு முன் இருந்த நிலை, அரசாங்கத்தின் வரவு செலவு — பாங்குகள் — பண வீக்கம் — 1924-க்குப் பின் பணச் சீர்த் திருத்தம் — வரவு செலவு சீரமைப்பு — பாங்குச் சீர்திருத்தம்.
6. வெற்றியா? தோல்வியா?

## பொது அம்சங்கள்

புதுப் பொருளாதாரக் கொள்கையைப் போற்றி வரவேற்றவர் களுமுண்டு; தூற்றி வெறுத்தவர்களுமுண்டு. பொதுவாகத் தனி உடைமையில் நாட்டங்கொண்டவர்கள் போர்க்காலப் பொது உடைமை தோல்வியுற்றுத் தனி உடைமை புத்துயிர் பெறுவதைக் கண்டு மகிழ்ந்தனர். புத்துயிர் பெற்ற முதலாளித்துவ சக்திகள் நாளடைவில் வளர்ந்து, பலமுற்று சமதர்ம சக்திகளை முறியடிக்கும் என்று அவர்கள் கனவு கண்டனர். இத்தகைய நம்பிக்கையில் பங்கு கொண்டவர்கள் பலர் ரஷ்யாவுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்தனர். அதற்கு மாறாக, போர்க்காலப் பொது உடைமைக் கொள்கையால் ரஷ்யாவில் பொது உடைமை மலர்ந்துவிட்டதாக மனப்பால் குடித்தவர்கள் சமதர்மம் பின்வாங்குவதைக் கண்டு பொறுமை இழந்தனர். 'சமதர்மம் முதலாளித்துவத்துக்கு அடிபணிகிறது' என்று அங்கலாய்த்தனர். ரஷ்ய இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் பெரும்பாலும் இந்த அடிப்படையிலேயே அரசாங் கத்தைத் தாக்கினர்.

அரசாங்கத்தின் கருத்து வேறு. முதலாளித்துவ, சமதர்ம அம்சங்கள் ஒருங்கே பொருந்தியதுதான் புதுப் பொருளாதாரக்

கொள்கை. இந்தக் கலப்புப் பொருளாதாரத்தை (Mixed Economy) அரசாங்க முதலாளித்துவம் (State Capitalism) என்றும் வழங்கலாம். ஆயினும் பொருளாதாரத்தின் உயர்நிலைகளைத் தன் கையில் வைத்துக்கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாகச் சமதர்ம சக்திகளைப் பலப்படுத்த விரும்பியது அரசாங்கம். விவசாயக் கூட்டுறவு, விரைவான ஆலை வளர்ச்சி, அரசாங்க வாணிபம் முதலியன சமதர்ம சக்திகள் வளர உதவி செய்யும் என்பது அரசாங்கத்தின் நம்பிக்கை.

கூர்ந்து நோக்கினால், புதுப் பொருளாதாரக் கொள்கைக்கும் சோவியத் அரசாங்கம், முதல் எட்டு மாதங்களில் கடைப்பிடித்து வந்த கொள்கைகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நன்கு புலனாகும். 'சோவியத் ஆட்சி இன்றேல் பொது உடைமை இல்லை; ஆயின் அன்றிருந்த சூழ்நிலையில் பொது உடைமைக் கோட்பாடுகளை உடனடியாக அமுல் நடத்துவதால் பாட்டாளி வர்க்ககதின் சர்வாதிகாரத்துக்குப் பாதகம் விளையும்' என்பது லெனினது கருத்து. இக் கருத்துக்கிசையவே, உள்நாட்டுப் போருக்கு முந்திய 8 மாதங்களில் சோவியத் அரசாங்கம் முதலாளித்துவத்தைச் சுற்றிவளைக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. புதுப் பொருளாதாரக் கொள்கையையும் அடிப்படையில் அதே குறிக்கோளையே கொண்டிருந்தது.

உலகப் போராலும் உள்நாட்டுப் போராலும் சிதைந்து போன பொருளாதாரத்தைச் சீரமைத்துப் பொருளுற்பத்தியைப் பெருக்குவது அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக அமைந்தது. அதன் பொருட்டு அரசாங்கம் தன்னிடமுள்ள மூலதனத்தைப் பெருக்கவேண்டும். அதைக்கொண்டு சீர்குலைந்து போயிருந்த ஆலைகளைப் புனர்நிர்மாணம் செய்யவேண்டும். தொழிலாளரிடையே அரசாங்கத்தின் செல்வாக்குப் பெருக வேண்டும். அவர்களது ஒத்துழைப்பால் பொருள் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். பெருக்கியப் பொருளைக் கொண்டு வாணிபம் செய்யவேண்டும். கிராமத்துக்கும் நகரத்துக்குமிடையே உள்ள வாணிப உறவு சீர்பட்டால் அவர்களிடையே உள்ள பகைமை உணர்ச்சி மறைந்து நட்புறவு வளர ஏதுதாகும். நிலத்திலும் வாணிபத்திலும் முதலாளித்துவ சக்திகளைத் தற்காலிகமாக வாழவிட வேண்டும். ஆனால், அவை ஆழமாக வேரூன்றி விடாத படியும் பார்த்துக்கொள்ளவேண்டும். பாட்டாளி வர்க்கம் கொலு வீற்றிருக்கும்வரை அரசாங்கம் முதலாளித்துவத்தை வளைத்து முற்றுகையிட முடியும். ஆனால், இம் முனையில் வெற்றி பெற வேண்டுமாயின் அரசாங்கம் விழிப்புடன் இருந்து தனது சக்திகளை எல்லாம் திறமையான வகையில் கையாளவேண்டும். வாணிபத்

துறையில் ஈடுபட்டு, தனி வணிகரின் வலிமையைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்கி ஒடுக்கவேண்டும். விவசாயிகளின் மனத்தை மாற்றுவதும் அவசியம். ஆனால், அது எளிதான காரியமன்று. தனி உடைமையில் பற்றுக்கொண்டவர்கள் விவசாயிகள். எனினும், அவர்களது ஆதரவு சோவியத் ஆட்சி நின்று நிலவுவதற்கு இன்றியமையாதது. ஆதலின், அவர்களது உடைமை வேட்கையை உலுக்கக்கூடிய எந்தச் செயலிலும் ஈடுபடுவது அபாயகரமானது. எனவே, விவசாயி மாறவேண்டுமாயின் விவசாயத்தின் அடிப்படை மாறவேண்டும். இயந்திரங்களின் துணைகொண்டு விவசாயத்தைப் பெருக்கவேண்டும். கூட்டுறவு உணர்ச்சியை விவசாயிகளிடையே பரப்பவேண்டும். இன்னபிற மாற்றங்களால் நாளடைவில் முதலாளித்துவ சக்திகள் நசித்து சமதர்ம சக்திகள் மேலோங்க முடியும் என்று அரசாங்கம் நம்பியது. இக் குறிக்கோள்களை நடைமுறையில் கொண்டுசெலுத்த வேண்டி, சோவியத் அரசாங்கம் பல சோதனைகளை நடத்தியது. அந்தச் சோதனைகளுக்குச் சூழ்நிலையால் வந்த சிக்கல்கள் எவை? அவற்றைப் போக்குவதில் எந்த அளவுக்கு அரசாங்கம் வெற்றி கண்டது என்று காண்போம்.

## விவசாயப் பிரச்சினை

புரட்சியை ஒட்டி நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதலாகிப் பின்னர் நாட்டுடைமை ஆயின. எனினும் அனுபோகம் விவசாயிகளின் கையிலேயே இருந்தது. இந்த நிலப்பங்கீடு அரசாங்கத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒழுங்கான முறையில் நடைபெறாத காரணத்தால் நிலத்தில் ஏற்றத்தாழ்வுகள் நிலவின. பல பணக்கார விவசாயிகள் புரட்சிக்குத் தப்பிப் பிழைத்தனர். நடுத்தர விவசாயிகள் பிரபுக்களின் நிலத்தைப் பிடுங்கி ஒரு பகுதியைத் தமதாக்கினர். பல ஏழை விவசாயிகளும் நிலப்பங்கீட்டால் பயனடைந்தனர். நிலமற்ற விவசாயக் கூலிகளும் இல்லாமலில்லை. கால்நடைகள், விவசாயக் கருவிகள் முதலிய உற்பத்திச் சாதனங்களும் பெரும்பாலும் பணக்கார விவசாயிகளிடமே குவிந்து கிடந்தன. போதுமான நிலமோ இதர சாதனங்களோ இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள் சிறப்புற விவசாயம் நடத்த இயலவில்லை. உழவுமுறையை மாற்றி உற்பத்தியைப் பெருக்குவதும் எளிதாக இல்லை. ஆதலின், குறைந்த வருவாயைக் கொண்டே குடித்தனம் நடத்த வேண்டியதாயிருந்தது. உண்டு, உடுத்து, மிஞ்சியது கொஞ்சமாக இருந்தது. போதிய முதல் திரள வழி இல்லை. முதலின்றி முன்னேற்றம் காண்பது எப்படி? வருவாயின்றி முதல் திரட்டுவது எங்ஙனம்?

அனுவசியமாக நிலத்தில் குவிந்து கிடக்கும் உபரியான விவசாயிகளை வெளியேற்றுவதன்மூலம் எஞ்சியவர்களின் வருவா

யைப் பெருக்க முடியும். ஆனல், அவர்களை எப்படி வெளி யேற்றுவது? புரட்சிக்கு முன்னராவது பலர் அமெரிக்காவில் போய்க் குடிபுக முடிந்தது. புரட்சிக்குப் பின்னல் ஏற்பட்ட சூழ்நிலை அதற்கு இடந்தரவில்லை. உள்நாட்டிலேயே தரிசாகக் கிடக்கும் செழுமை மிக்க நிலங்களைத் திருத்திப் பண்படுத்த வேண்டுமாயின் அதற்கும் முதல் வேண்டும்; புது வாழ்வை நாடிச் செல்லும் துணிவுள்ள மக்கள் வேண்டும்; போக்குவரத்து வசதிகள்வேண்டும். அன்றிருந்த நிலையில் இவைகள் போதிய அளவில் கிடைக்க வழி இல்லை. கிராமங்களை விட்டுவிட்டு நகரங்களுக்குச் செல்லலாம் என்ருலோ, அவர்களை வாவென்று வரவேற்று வேலை வழங்கப் போதிய தொழில் வளர்ச்சி இல்லை. எனவே, போதிய நிலமோ முதலோ இல்லாத நடுத்தர ஏழை விவசாயிகளைக் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்குவது என்பது பகீரதப் பிரயத்தன மாகப் பட்டது. கூட்டுறவு விவசாய முறையும் வேரூன்றவில்லை. அரசாங்கப் பண்ணைகளும் (State Farms), கூட்டுப் பண்ணைகளும் (Collective Farms) அபூர்வமாக இருந்தன. இந் நிலையில் விவசாயத்தை வளர்ப்பது எப்படி என்று அரசாங்கம் கவலை கொண்டிருந்தது.

ஆனல் அதே சமயத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் ஆற்றலும், தகுதியும் பணக்கார விவசாயிகளிடம் இருந்தது. போதிய நிலம், வேண்டிய கருவிகள், கணிசமான உற்பத்தி, விற்பனைக்குரிய உபரிப் பொருள் சேமிப்பு, முதல் திரட்சி முதலிய வசதிகள் படைத்தவன் பணக்கார விவசாயி. அவனைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமாயின் அவனுக்காகச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். விவசாயப் பொருள்களின் விலை உயர வேண்டும்; வாணிபமாற்று விகிதம் அவனுக்குச் சாதகமாக அமையவேண்டும்; கடன் வசதிகள், வரி விதிப்பு முதலியவற்றில் தாராளம் காட்டவேண்டும். இத்தகைய சலுகை களால் அவனது வருவாய் பெருகும்; முதல் திரளும். எனவே, விவசாயம் துரிதமாக வளர முடியும்.

பணக்கார விவசாயிகளை இப்படி வளர விடுவதில் பல அபாயங்கள் இருந்தன. விலை உயர்வால் எல்லா விவசாயிகளும் ஒருங்கே பயனடைய முடியாது. யாரிடம் உபரிப்பொருள் மிகுந் திருக்கிறதோ அவர்கள்தாம் அதிகப் பயனடைய முடியும். விற்கக் கூடிய உபரிப் பொருளே இல்லாதவர்களுக்கு விலை உயர்வால் எவ்விதப் பயனுமில்லை. பாதகமே உண்டு. எனவே விலை உயர்வால், உள்ளவனுக்கு மேலும் மேலும் கிடைக்கும்; இல்லாதவனுக்கு இருப்பதும் குறைந்து போகும். சமதர்மத்தை நோக்கி முன்னேற வேண்டிய சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை எப்படி

அனுமதிக்க முடியும்? விவசாய உற்பத்திக்காக வேண்டி, தொழிலாளரின் கூட்டாளிகளான ஏழை விவசாயிகளை வறியராக்க முதலாளித்துவத்தின் ஆணி வேராகிய 'குலாக்கு' களை வளரவிடலாமா? மேலும், வாணிப மாற்று விகிதம் ஆலைகளுக்குப் பாதகமானால் ஆலைகளில் முதல் திரளுவது கடினம். விவசாய உற்பத்திக்காக ஆலைகளின் வளர்ச்சியைப் பலி கொடுக்கலாமா? ஆலைகள் இன்றேல் சமதர்மம் ஏது? இப்படிப் பல கேள்விகள் அரசாங்கத்தைத் திகைக்க வைத்தன. அதே சமயத்தில் 'குலாக்கு' களின் துணையின்றி விவசாயம் துரிதமாக வளர முடியாது. ஏழை–நடுத்தர விவசாயிகளின் உதவியை நாடினால் வளர்ச்சி ஆமை வேகத்தில் தான் செல்லமுடியும். வேகம் தடைப்பட்டால் ஆலை வளர்ச்சிக்கு வேண்டிய உணவும் கச்சாப் பொருள்களும் கிடைப்பது அரிது. எனவே, குலாக்குகளின் உதவியும் வேண்டும்; அவர்களை அத்துமீறி வளரவும் விடக்கூடாது என்ற நிலை இருந்தது. விவசாயத்தைப் பொறுத்தமட்டில் புதுப்பொருளாதாரக் கொள்கை பெரும்பாலும் இக் கருத்தையே பிரதிபலித்தது.

**புத்துயிர் பெற்ற குலாக்குகள்**

நாட்டுடைமையாக்கப்பட்ட நிலங்களை எவரும் விற்கவோ, வாங்கவோ முடியாது. எனினும், நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிடும் உரிமை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதேபோல் விவசாயக் கருவிகளையும் இயந்திரங்களையும், கால்நடைகளையும் வாடகைக்கு அமர்த்தும் உரிமை விவசாயிகளுக்குக் கிடைத்தது. அத்துடன் விவசாயிகள் சில வரம்பிற்கு உட்பட்டு விவசாயத் தொழிலாளிகளைக் (Agricultural labourers) கூலிக்கு அமர்த்தவும் அனுமதிக்கப்பட்டனர். இத்தகைய சலுகைகளைக் 'குலாக்கு'களும், பல நடுத்தர விவசாயிகளும் தங்களுக்குச் சாதகமான வகையில் பயன்படுத்தினர். ஏழை விவசாயிகளின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தனர்; தங்களிடமுள்ள உற்பத்திச் சாதனங்களை வாடகைக்கு விட்டனர்; நிலமற்ற ஏழை விவசாயிகளைக் கூலிக்கு அமர்த்தினர்; அதன் காரணமாக அவர்களது இலாபம் பெருகியது. விவசாய உற்பத்தியில் அரசாங்கம் தலையிடாததால், உற்பத்திசெய்த பொருள்களையும் தங்கள் விருப்பம்போல் விற்கமுடிந்தது. முதலில் இச் சலுகைகள் 1925 ஆம் ஆண்டுவரை அமுலில் இருந்தன. ஆனால், அவை முடியுந்தருவாயில், மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டன.

**எதிர்ப்பு**

பணக்கார விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இந்தச் சலுகைகளைக் கண்டு பலர் வெகுண்டு எழுந்ததில் ஆச்சரியமில்லை. குறிப்பாக

டிராட்ஸ்கியும் அவரைச்சார்ந்த இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும் ‘குலாக்கு’களுக்கு அரசாங்கம் அடிபணிகிறது’ என்று குறை கூறினர். அதேசமயத்தில், இந்தச் சலுகைகள் போதா. தங்கு தடையின்றித் தங்கள் செல்வத்தைப் பெருக்கும் வாய்ப்பு விவசாயி களுக்குக் கிடைக்கவேண்டும் என்று புகாரின் (Buharin), ரைகாவ் (Rykov) போன்றவர்கள் வாதாடினர். இவர்களை எல்லாம் இணைத்துக்கொண்டு செல்லும் ஆற்றல் படைத்த லெனின் 1924ஆம் ஆண்டு ஜனவரியில் புகழுடம்பு எய்தினர். எனினும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிய ஸ்டாலின் (Stalin), ‘தற்காலிகமாக இந்தச் சலுகைகள் தவிர்க்கமுடியாதன; நடுத்தர விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அவை இன்றியமையாதன’ என்று கருதினர். அதற்கேற்ப, ‘தொழிலாளரின் தலைமையின்கீழ், ஏழை விவசாயிகளின் ஆதரவுடன், நடுத்தர விவசாயியோடு உறவு கொண்டு, குலாக்குகளுக்கு எதிராகப் போராடவேண்டும்’ என்ற அரசியல் கோஷத்தை அவர் உருவாக்கினர்.

### கட்டுப்பாடு

விவசாய உற்பத்தி குன்றியிருந்த காலத்தில் குலாக்குகளை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் அதிகமாக ஈடுபடவில்லை. ஆனால் உற்பத்தி பெருகப் பெருக, பல கட்டுப் பாடுகளை அவர்கள்மீது அமுல்நடத்த முயன்றது. குறிப்பாக 1925-26-க்குப் பின் பணக்கார விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய பல வரிகளை அரசாங்கம் விதித்தது. அவற்றுள் விவசாய வளர்வீத வரி (Progressive Agricultural Tax) முக்கியமானது. புதுப் பொருளாதாரக் கொள்கை முடியும் தருவாயில் இவ்வரிகள் மேலும் உயர்ந்தன. குலாக்குகள் பலர் கூட்டுறவுச் சங்கங்களில் அனுமதிக்கப்படவில்லை. அதே சமயத்தில், அரசாங்கம் ஏழை விவசாயிகளுக்குப் பல சலுகைகளை அள்ளி வழங்கியது. குறைந்த வரி, கடன்வசதிகள், கூட்டுறவுச் சங்கங்களில் உயர் பதவிகள் முதலிய சலுகைகளின்மூலம் ஏழை விவசாயிகளை முன்னேற்ற முயன்றது. அதன் பயனுகச் சில ஏழை விவசாயிகள் நடுத்தர விவசாயிகளாக மாறினர். ஆனல் தங்கள் நிலங்களைக் குலாக்கு களிடம் குத்தகைக்கு விட்டுவிட்டுக் கூலிவேலைசெய்துவந்தவர்கள் இச் சலுகைகளால் அதிகப் பயன் பெருது வறியருயினர்.

### விவசாய முறை

விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இல்லை. தொன்றுதொட்டுக் கையாளப்பட்டு வந்த ‘மூன்று-வயல்-சாகுபடி’ முறையே பெரும்பாலும் வழக்கிலிருந்தது. ஆயின் மூன்றிலொரு பகுதியைத் தரிசாகப் போடும் முறை கொஞ்சங்கொஞ்சமாகக்

கைவிடப்பட்டது. மாற்றி மாற்றிப் பயிரிடும் முறையை ஒரு சிலர் மேற்கொண்டனர். 'பல-பயிர்' விவசாயத்திலும் சிலர் ஈடுபடலா யினர். எனவே, 1925-26-ல் விவசாய உற்பத்தி போருக்கு முன்னுல் இருந்த அளவை எட்டிப் பிடித்தது. ஆனல், அதன் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 2 சதவிகிதம்கூட இல்லை. இது வேகமாக வளர்ந்துவந்த நகரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. இயந்திரங்கள், செயற்கை உரம் முதலியவற்றின் உதவியால் உற்பத்தியைப் பெருக்கலாம் என்ருல், அவை உள்நாட்டில் போதுமான அளவில் உற்பத்தி செய்யப்பட வில்லை. இறக்குமதி செய்யவும் வசதி இல்லை, கூட்டுப் பண்ணை களும் கூட்டுறவு விவசாயமும் வளராத நிலையில், விவசாயத்தில் இயந்திரங்களைப் பெரிதும் பயன்படுத்த முடியவில்லை. இந் நிலையில் விவசாய உற்பத்தி விறுவிறுப்பாக வளர வழி இல்லை.

**விற்பனைக்குரிய உபரிப் பொருள்**

போருக்கு முன்னுள் நில உடமையில் பெரிய ஏற்றத்தாழ்வுகள் இருந்தன என்று கண்டோம். அதன் காரணமாக நிலமில்லா ஏழைகளும். சிறு நிலம் படைத்தோரும் அரை வயிராய் வாடினர். ஆனல், பெருநிலம் படைத்த பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும் தாங்கள் வயிருர உண்டது போக எஞ்சியதைப் பெரிய அளவில் நகரங்களுக்கு அனுப்பவும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் முடிந்தது. ஆனல், புரட்சியின் விளைவாக நிலைமை முற்றிலும் மாறியது. போர்க்காலத்தில் சீர்குலைந்த விவசாயம் புதுப் பொரு ளாதாரக் கொள்கையின்கீழ்த் துரிதமாகச் சீரமைக்கப்பட்டது. ஆனல், விற்பனைக்குரிய உபரிப் பொருள் (Marketable surplus) மிகவும் குறைந்துபோயிற்று. போருக்கு முன்னர் மொத்த விவசாய உற்பத்தியில் 26 சதவீதம் விற்பனையாயிற்று. இது நாளுக்கு நாள் குறைந்து 1926-27-ல் 13·3 சதவிகிதமாயிற்று. கச்சாப் பொருள்களின் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. உணவுப் பொருள்களுக்குப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. உணவு ஏற்று மதியைக் குறைப்பதின்மூலம் இந்தப் பற்ருக்குறை ஓரளவு ஈடு செய்யபபட்டது. எனினும், பிரச்சினை தீர்ந்தபாடில்லை. மாருக, நிலைமை மேன்மேலும் மோசமாயிற்று. ஆலை வளர்ச்சிக்கான பெரிய திட்டங்களை முன்வைத்து முனைந்து நின்ற அரசாங்கத்துக்கு இது மாபெரும் முட்டுக்கட்டையாக அமைந்தது. போதுமான கச்சாப் பொருள்களும் உணவும் இன்றி எப்படி ஆலைகளை வளர்ப் பது? ஏற்றுமதி குறைந்தால் எப்படி ஆலைகளுக்கும், விவசாயத் துக்கும் வேண்டிய இயந்திரங்களை இறக்குமதி செய்வது?

**காரணம்**

குலாக்குகள்தான் இச் சிக்கலுக்குக் காரணம் என்று சிலர் சீறினர். ஆனல் முழுப்பொறுப்பும் அவர்களைச் சேராது என்பது பின்வரும் அட்டவணையிலிருந்து தெரியவரும்.

அட்டவணை 4

விவசாய உற்பத்தியும் விற்பனைக்குரிய உபரிப் பொருளும்

| உற்பத்தி யாளர்கள் | மொத்த தானிய உற்பத்தி மில்லியன் பூட் (Pood) | சத விகிதம் | கிராமங்களுக்கு வெளியில் விற்பனையான மில்லியன் பூட் | சத விகிதம் | மொத்த உற்பத்தியில் விற்பனை செய்யப்பட்ட தானிய பகுதி (சத விகிதம்) |
|---|---|---|---|---|---|
| **போருக்கு முன்னால்** | | | | | |
| நிலப் பிரபுக்கள் | 600 | 12 | 281 | 21·6 | 47 |
| குலாக்குகள் | 1900 | 38 | 650 | 50·0 | 34 |
| ஏழை—நடுத்தர விவசாயிகள் | 2500 | 50 | 369 | 28·4 | 14·7 |
| மொத்தம் | 5000 | 100 | 13000 | 100·0 | 26 |
| **1926—27-ல்** | | | | | |
| அரசாங்க, கூட்டுப் பண்ணைகள் | 80 | 1·7 | 37·8 | 6 | 47·3 |
| குலாக்குகள் | 617 | 13·0 | 126·0 | 20 | 20·0 |
| ஏழை—நடுத்தர விவசாயிகள் | 4052 | 85·3 | 466·2 | 74 | 11·2 |
| மொத்தம் | 4749 | 100·0 | 630·0 | 160 | 13·3 |

Source = Dobb (M), opt. cit., p. 217

குறிப்பு: 1 பூட் (Poop) = 36·1 பவுண்டு (lbs).

அட்டவணையில் கண்டபடி, போருக்கு முன்னர் மொத்தத் தானியத்தில் பாதி பெரு நிலக்காரரின் (நிலப்பிரபுக்களும், குலாக்குகளுக்கும்) கையில் இருந்தது. அதில் கிட்டத்தட்ட 37 சதவிகித்தை அவர்கள் விற்பனை செய்தனர். ஆனால், 1927-27-ஆண்டிலோ மொத்தத்தானிய உற்பத்தியில் 13 சதவிகிதமே குலாக்குகளின் கையில் இருந்தது. 85 சதவிகிதத்துக்கு மேற்பட்ட தானியம் சிறுநிலக்

காரரிடம் (ஏழை-நடுத்தர விவசாயிகளிடம்) சிக்கி இருந்தது. விவசாயிகளின் எண்ணிக்கையும் 65 சதவிகிதம் அதிகரித்தது. இவர்களில் பெரும்பாலோர் வயிறுர உண்டு அறியாதவர்களாதலால் உற்பத்தியின் பெரும் பகுதியை உண்டு களித்தனர். தாங்கள் உற்பத்தி செய்தவற்றில் 11 சதவிகிதத்தையே அவர்களால் விற்க முடிந்தது. குலாக்குகளும் தங்கள் சக்திக்கேற்ற வகையில் உபரித் தானியங்களை விற்க முன்வந்தனர் என்று சொல்ல இயலாது. போருக்கு முன்னர் தாங்கள் உற்பத்தி செய்த தானியத்தில் 35 சதவிகிதத்தைக் குலாக்குகள் விற்பனை செய்தனர். ஆனால், 1926-27-ல் இந்த விகிதம் 20 ஆகக் குறைந்துவிட்டது. எனவேதான் உணவுத் தட்டுப்பாட்டுக்குக் குலாக்குகளே காரணம் என்று கூறினர் போலும்.

வாணிப மாற்று விகிதம் விவசாயிகளுக்குப் பாதகமாக இருந்ததால் அவர்கள் தானியங்களை விற்பதற்குத் தயங்கினர். சிலர் தானியங்களைப் பதுக்கி அதன்மூலம் ஏற்படும் விலை உயர்வைக்கொண்டு இலாபம் அடைய விரும்பினர். அதன் காரணமாக விற்பனைக்குரிய உபரிப்பொருள் மேலும் குறைந்தது. 1928 கோடையில் 128 மில்லியன் பூட் தானியம் பற்றுக்குறை இருந்ததாக ஸடாலின் அறிவித்தார்.

### குலாக்குகளின்மீது தாக்குதல்

உணவு நெருக்கடியைத் தவிர்க்க வேண்டி அரசாங்கம் குலாக்குகளின்மீது பல பாணங்களைத் தொடுத்தது. அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் தங்கள் உபரித் தானியங்களை விற்கவேண்டுமென்று அரசாங்கம் குலாக்குகளை வற்புறுத்தியது. இதற்கு இணங்க மறுத்துத் தானியங்களைக் கள்ளத்தனமாகப் பதுக்க முற்படுபவர்களைக் காட்டிக்கொடுப்பதற்கென்று அரசாங்கம் பல ஏழை விவசாயிகளை ஏவியது. அவர்களது உதவியால் பதுக்கல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பதுக்கல் பேர்வழிகளைக் காட்டிக் கொடுத்தவர்களுக்குப் பறிமுதலில் நாலில் ஒருபகுதி பரிசாகக் கிடைத்தது. பதுக்கியவர்கள் தண்டனைக்கு உள்ளாயினர். இத்தகைய தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விடுவதன்மூலம் அரசாங்கம் குலாக்குகளை அடக்கி ஒடுக்க நினைத்தது. இந்தச் சூழ்நிலையில்தான் 15ஆம் காங்கிரஸ் கூறியது.

### 15ஆம் காங்கிரஸ்

ஏற்கெனவே குமுறிக் கொண்டிருந்த கருத்து முரண்பாடுகள் 15ஆம் காங்கிரஸில் மறுபடியும் தலைதூக்கின. வலதுசாரிகள் குலாக்குகளுக்கு வக்காலத்து வாங்கினர்; குலாக்குகளைத்

தாக்குவது தவறு; விலை நிர்ணயம் கூடாது; உணவை இறக்குமதி செய்; அரசாங்கக் கூட்டுப்பண்ணைகள் அமைப்பதில் அவசரம் வேண்டாம்' என்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் வாதாடினர். ஆனால், இடதுசாரிகளோ குலாக்குகளின்மீது வசைமாரி பொழிந்தனர். 'முதலாளித்துவத்தின் ஆணிவேராகிய குலாக்குகள்தான் உணவு நெருக்கடிக்குக் காரணம்; எனவே, அவர்களைக் கிள்ளி எறிய வேண்டும்' என்பது அவர்களது கருத்து. அரசாங்கத்தின் கொள்கை இவ்விரண்டிங்கும் இடைப்பட்டதாக இருந்தது. 'விவசாயக் கூட்டுறவு, கூட்டுப்பண்ணைகள் முதலிய வற்றைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பரப்பவேண்டும். விவசாயப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தவேண்டும். அவசிய மானால் பலவந்தமாகத் தானியங்களைச் சேகரிக்கவேண்டும். இயந்திரங்களைப் பெருக்கவேண்டும்; அதன்பொருட்டு, தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவேண்டும்; இயந்திரங்களின இறக்கு மதியையும் அதிகரிக்கவேண்டும்' என்பவை ஸ்டாலின் முன்வைத்த கொள்கைகள். இவை பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றதால் அரசாங்கம் அவற்றை அமுல் நடத்து வதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. கூட்டுப்பண்ணை களுக்குக் கடன், உற்பத்திச் சாதனங்கள் முதலியன கொடுத்து உதவியது. பெரிய பண்ணைகளால் விளையும் நன்மைகளைப்பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தது. பெரிய தானிய தொழிற் சாலைகளை (grain factories) நிறுவி, அவற்றின்மூலம் 100 மில்லியன் பூட் உபரித் தானியம் பெறுவதென அரசாங்கம் திட்டமிட்டது. கிராமங்களிலுள்ள விவசாயிகளில் பெரும்பாலோர் நிலத்தையும், உற்பத்திக் கருவிகளையும் பொதுவில் பயன்படுத்துவது என்று முடிவு செய்ததால் அனைவரும் அம் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று அரசாங்கம் சட்டம் இயற்றியது. இக் கொள்கைளை அமுல் நடத்தும் பொறுப்பு பெரும்பாலும் ஸ்டாலினது கையில் இருந்தது.

## தொழிற்கொள்கை

'தொழில்களின் உயிர்நாடிகளை அரசாங்கம் தன் கையில் வைத்துக்கொண்டு எஞ்சியவற்றில் தனி நபர் முயற்சியை நாட வேண்டும்' என்பது புதுப் பொருளாதாரக் கொள்கையின் அடிப் படைக் குறிக்கோள்களுள் ஒன்று. அதன்படி பொருளாதாரத்தின் முக்கிய ஸ்தானங்களான பல பெரிய தொழில்கள் மட்டும் அரசாங்கத்தின் கையில் இருந்தன. நாட்டுடைமையாக இருந்த பல சின்னஞ்சிறு ஆலைகளை அரசாங்கம் கைவிட்டது. 1920 ஆம் ஆண்டு நவம்பரில் இயற்றப்பட்ட நாட்டுடைமைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. இருபதுக்குக் குறைந்த தொழிலாளரைக் கொண்ட

ஆலைகளும் கைவிடப் பட்டன. இவற்றுள் பல தனிப்பட்ட முதலாளிகளின் கைக்கு மாறின. இவை கூட்டுறவு ஆலைகளிடம் குத்தகைக்கு விடப்பட்டன. சிலவற்றில் அரசாங்கம் அயல்நாட்டு மூலதனத்தை வரவேற்றது. சில துறைகளில் கலப்பு உடைமையும் கையாளப்பட்டது.

அரசாங்கம் தன்னிடமிருந்த ஆலைகள் அனைத்தையும் சிக்கன மான முறையில் நிர்வகிக்க விரும்பியது. நட்டத்தில் ஓடிய பல ஆலைகளைத் தற்காலிகமாக மூடியது. தனி உடைமைக்கும் புத்துயிர் அளித்த போதிலும் அதைத் தலைமைப் பொருளாதாரக் குழுவின் கண்காணிப்பிலும், கட்டுப்பாட்டிலும் வைத்திருக்க விரும்பியது. இக் கொள்கை மாற்றத்தின் தலைப்பாரம் குறைந்தது. ஆனால், பொருளாதாரத்தின் மீதிருந்த பிடிப்பு அவ்வளவாகத் தளரவில்லை.

அட்டவணை 5

**ஆலைகளும் ஆலைத் தொழிலாளரும் (1923)**

| உடைமை யாளர்கள் | ஆலைகளின் எண்ணிக்கை | சத விகிதம் | வேலைசெய்த தொழிலாளரின் சதவிகிதம் | மொத்த உற்பத்தியில் பங்கு (சதவிகிதம்) |
|---|---|---|---|---|
| தனி நபர் | 147,471 | 88·5 | 12·4 | 5 |
| அரசாங்கம் | 12,697 | 8·5 | 84·1 | 95 |
| கூட்டுறவு | 4,613 | 3·5 | 3·5 | |
| மொத்தம் | 163,781 | 100·0 | 100·0 | 100 |

Source: Baykov (A), Opt. Cit., P. 107

அரசாங்கத்திடம் இருந்த ஆலைகள் எண்ணிக்கையில் குறைந் திருப்பினும் உற்பத்தியில் பெரும்பகுதி அரசங்கத்தின் பிடியில் இருந்தது என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து எளிதில் விளங்கும். எனவே, புதுப் பொருளாதாரக் கொள்கையால் புத்துயிர் பெற்ற முதலாளித்துவம் 'பல் பிடுங்கப்பட்ட நாகப் பாம்பாக' விளங்கியது என்றால் மிகையாகாது.

### தொழில் நிருவாகம்

'நிருவாகம் பரவலாக இருத்தல் வேண்டும்; ஆலைகள் அனைத்தும் ஒருமுகமாகக் கொண்டு செலுத்தப்படவேண்டும்' என்பதே புது நிருவாக முறையின் சாரம். அதற்கிணங்க அரசாங்கத்தைச் சேர்ந்த பல ஆலைகள் தலைமைப் பொருளாதாரக்

குழுவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டன. நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சில ஆலைகளே இக் குழுவின் நேரடி நிருவாகத்தில் இருந்தன. அத்துடன் ஆலைகள் தங்கள் விருப்பம் போல் விற்கவும் வாங்கவும் உரிமை பெற்றன. ஆனால் நாட்டிலுள்ள ஆலைகள் அனைத்தையும் ஒருமுகமாக அனைத்து இழுத்துச் செல்லும் பொறுப்பு அக் குழுவிடம் இருந்தது. நேரடி நிருவாகத்திலிருந்த ஆலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கிளாவ்கியின் எண்ணிக்கையும் 52-லிருந்து 16 ஆகக் குறைக்கப்பட்டது.

**டிரஸ்டுகள் (Trusts)**

விடுதலை பெற்ற ஆலைகள் கொஞ்சகாலம் தான்தோன்றித்தன மாக இயங்க ஆரம்பித்தன. ஆனால், நளாடைவில் உரிமை பெற்ற பல தொழில் இணைப்பு (டிரஸ்டு)கள் தோன்றுவதற்கு இவ் விடுதலை அடிகோலியது. 1923 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்குள் கிட்டத்தட்ட 480 டிரஸ்டுகள் உருவாயின. 3560 ஆலைகள் அவற்றில் அங்கம் வகித்தன. சுமார் ஒரு மில்லியன் தொழிலாளர் அவற்றில் பணியாற்றினர். இத் தொகை மொத்தத்தில் முக்கால் பகுதியாகும். 1923 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்குப்பின் இத் தொழில் இணைப்புகள் (டிரஸ்டுகள்) சட்டபூர்வமாக்கப்பட்டன.

ஆரம்பத்தில் டிரஸ்டுகள் ஒருபகுதி அல்லது வட்டாரத்திலுள்ள ஒரேவிதமான தொழில்களைக் கொண்டவை, ஒரே வட்டாரத்திலுள்ள பலதரப்பட்ட தொழில்களால் ஆனவை, நாட்டின் பொருளாதாரத் துக்கு இன்றியாமையாத தொழில்களைக் கொண்டவை என மூன்று வகையாகப் பாகுபடுத்தப்பட்டன. இத்தகைய டிரஸ்டுகளால் வீண் செலவுகள் குறைந்தன. சிக்கனம் பெருகியது. பின்னர் (டிசம்பர் 1922-ல்) ரஷ்யா பல குடியரசுகளைத் தாங்கிய ஒரு யூனியனாக மாறிய போது இந்த டிரஸ்டுகள் யூனியன் முக்கியத்துவம் உடையன, குடியரசு முக்கியத்துவம் உடையன, மாவட்ட முக்கியத்துவம் உடையன, ஒரு குறிப்பிட்ட பகுதியின் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. டிரஸ்டுகள் இருந்த இடம், உற்பத்தி செய்த பொருளின் அளவு அப் பொருளின் முக்கியத்துவம் முதலியவற்றின் அடிப்படையிலே ஆலைகள் பாகு படுத்தப்பட்டன. மொத்த ஆலைப்பொருள் உற்பத்தியில் 60 சத விகிதம் யூனியனைச்சார்ந்த டிரஸ்டுகளில் குவிந்து கிடந்தது. அதேபோன்று மொத்தத் தொழிலாளரில் 62 சதவிகிதத்தினர் 41 பெரிய டிரஸ்டுகளில் வேலை செய்து வந்தனர். துணி, உலோகம் சீனி, மரம், என்ஜினீயரிங் முதலியன மிகப் பெரிய டிரஸ்டுகளாகத் திகழ்ந்தன.

அளவில் சிறிய பல டிரஸ்டுகளும் இருந்தன. நாலைந்து சிறு ஆலைகளைக் கொண்டவை அவை. உள்நாட்டுப் பேரரின்போது அரசாங்கம் கையாண்ட கடுமையான கட்டுப்பாடுகளை வேரறுத்த காரணத்தால் அவை அவ்வாறு தனித்து இயங்க விரும்பின. பெரிய டிரஸ்டுகளுக்குக் கிடைத்த சிக்கன நலன்கள் அவற்றிற்குக் கிடைக்கவில்லை.

**அவற்றின் சீரமைப்பு**

சில காலம்வரை டிரஸ்டுகள் விரும்பிய அளவு வெற்றி பெற வில்லை. போதுமான முதல் (Working capital) இல்லாததே அதற்கு மூலகாரணம். முதலின்மையால் ஆலைகளின் முழு சக்தியையும் பயன்படுத்த முடியவில்லை. எனவே, பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகமாக இருந்தது. மார்க்கெட்டும் சுருங்க ஆரம்பித்தது. இக் குறைபாடுகளை 1924-ல் கூடிய பன்னிரண்டாம் காங்கிரஸ் அலச ஆரம்பித்தது. முடிவில் டிர்ஸ்டுகளின் சீரமைப் புக்கென்று ஒரு குழுவை நிறுவியது. அதன் பயனாகச் சின்னஞ்சிறு டிரஸ்டுகள் பல உடைத் தெறியப்பட்டன; பெரிய டிரஸ்டுகளுடன் சில இணைக்கப்பட்டன; சில மூடப்பட்டன. எஞ்சியவை இலாபகர மான வகைகளில் திருத்தி அமைக்கப்பட்டன: இத்தகைய சீரமைப்புக்கு 1923 ஆம் ஆண்டு ஏப்பிரலில் இயற்றிய சட்டம் பெரிதும் உதவியது.

டிரஸ்டு என்பது ஒரு நிருவாக அமைப்பே அன்றி வேறில்லை. ஆலைகளில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் முழுவதும் அரசாங்கத்தின் உடைமையாகும். அதைச் சிக்கனமான முறையில் நிருவாகம் செய்து இலாபம் காண்பதே டிரஸ்டுகளின் வேலை. இப் பொறுப்பை நிறைவேற்றுவதில் அவற்றுக்குப் போதிய சுதந்திரம் அளிக்கப் பட்டிருந்தது. டிரஸ்டுகளின் பொறுப்பில் உள்ள முதலை இருகூறுகப் பிரிக்கலாம். நிலையுறுமுதல் (Fixed capital), நடை முதல் (Working capital) என்பன நடை முதலைப் பயன்படுத்துவதில் டிரஸ்டுகளுக்குப் போதிய உரிமை இருந்தது. ஆனால், நிலையுறு முதலைக் கையாளும் விஷயத்தில் மேலதிகாரிகளின் அனுமதி அவசியமாக இருந்தது. தங்கள் பொறுப்பிலுள்ள சொத்துகளை அழிக்காமல் இருக்கும்பொருட்டே இத்தகைய கட்டுப்பாடு ஏற்படுத் தப்பட்டது. திறமையான நிருவாகத்தின் காரணமாக விளையும் இலாபத்தில் ஐந்திலொரு பகுதியை டிரஸ்டுகளே சேமித்துவைக்க உரிமை இருந்தது. மீந்ததில் ஒரு பகுதி தொழிலாளரின் நலன் களுக்காகச் செலவிடப் பட்டது. எஞ்சியது அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

டிரஸ்டு சட்டபூர்வமான ஸ்தாபனம். அவற்றில் அங்கம் வகித்த ஆலைகள் பெரும்பாலும் டிரஸ்டின்மூலமாகவே செயலாற்றின.

தங்களுக்கு வேண்டிய உற்பத்திக் காரணிகளைப் பெறுவதாயினும், உற்பத்தி செய்த பண்டங்களை விற்பதாயினும் டிரஸ்டுகளின் மூலமாகவே செயலாற்ற முடியும். இவ்வாறு மார்க்கெட்டுடனும், அரசாங்கத்துடனும் தொடர்புகொள்ளும் உரிமை டிரஸ்டிகளுக்கு மட்டுமே இருந்தது.

**ஆலை நிர்வாகம்**

ஆனால், ஆலை நிருவாகத்தின் பொறுப்பு இயக்குநரிடம் (Director) இருந்தது. அவரை வேலையில் அமர்த்துவதும் தள்ளுவதும் டிரஸ்டின் பொறுப்பு. ஆனால், ஆலைக்குச் சொந்தமான சொத்துகளைப் பாதுகாப்பது, சிக்கனமான முறையில் அவற்றை நிருவாகம் செய்வது, கொடுக்கப்படும் கடன் முதலிய வசதிகளைத் தக்கமுறையில் பயன்படுத்துவது முதலியன இயக்குநரின் வேலை. கடமையில் தவறியவர்களைத் தண்டிப்பதற்கெனப் பல சட்டங்கள் இருந்தன. இதுபோக ஆலைகளிலுள்ள தொழிற்சங்கங்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் நிருவாகத்தைக் கண்காணிக்கும் உரிமை பெற்றிருந்தனர். அதன்விளைவாக ஆலைகளில் இயக்குநர், தொழிற்சங்கம், கட்சி என்ற மும் மூர்த்திகளின் ஆட்சி நடைபெற்றது என்னலாம். இதை ஒழித்து ஒன்றுபட்ட நிருவாகத்தை நிலைநாட்ட வேண்டுமென்று அரசாங்கம் முயன்றது. குறிப்பாக 1928ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இயக்குநர்களின் கையைப் பலப்படுத்தும் பொருட்டு அவர்களது அலுவல்களை நிர்ணயம் செய்ய நினைத்தது. ஆனால், அன்றிருந்த சூழ்நிலையில் அம் முயற்சி தக்க பயனளிக்கவில்லை. புரட்சியின் போதும், அதற்குப் பின்னரும் பெரும்பாலான நிருவாகிகளும், தொழில் நிபுணர்களும் கம்யூனிஸ்ட் ஆட்சியை உள்ளூர வெறுத்தனர். அரசாங்கத்தைத் தகர்த்தெறியும் நாசவேலையிலும் அவர்கள் ஈடுபட்டதுண்டு. இத்தகைய காரணங்களால் அரசாங்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் அவர்களைச் சந்தேகக் கண்கொண்டே நோக்கின. எனவேதான், நிருவாகத்தின் முழுப்பொறுப்பையும் அவர்கள் கையிலேயே விட்டுவைப்பது சாத்தியமாகவில்லை.

**மேற்பார்வை**

டிரஸ்டுகளைக் கண்காணிப்பதற்கென்று இரண்டு ஸ்தாபனங்களிருந்தன. ஒன்று தொழிலாளர் பாதுகாப்புக் குழு (Council of Labour and Defence or S. T. O.); மற்றது தலைமைப் பொருளாதாரக் குழு (Supreme Economic Council or Vesenkha). டிரஸ்டுகள் சம்பந்தப்பட்ட சட்டங்களை வகுப்பது, அவற்றிற்குச் சேரவேண்டிய நிலையுறு முதலை நிர்ணயம் செய்வது, ஒவ்வொரு தொழிலிலும் உள்ள பல்வேறு ஆலைகளின் உற்பத்தித் திட்டங்களை

இணைத்து ஒன்றுபடுத்துவது, அவசியமேற்படும்போது டிரஸ்டுகளைக் கலைப்பது முதலிய வேலைகள் தொழிலாளர் பாதுகாப்புக் குழு விடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதேசமயத்தில், டிரஸ்டுகளை நிருவகிக்கும் இயக்குநர்களின் சபையை நியமிப்பது, அவர்களது வேலைகளை மேற்பார்வை செய்வது போன்ற அலுவல்களைத் தலைமைப் பொருளாதாரக் குழு மேற்கொண்டிருந்தது. அத்துடன் டிரஸ்டுகள் சரிவர வேலை செய்கின்றனவா என்று கவனிக்க ஒரு சோதனைக் குழுவும், அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஒரு தணிக்கைக் குழுவும் தலைமைப் பொருளாதாரக் குழுவின்கீழ்ச் செயலாற்றின. சோதனைக் குழு வெசங்காவின் 'கண்' என்று அழைக்கப்பட்டது.

**சிண்டிகேட்டுகள்** (Syndicates)

விற்பதும் வாங்குவதும் டிரஸ்டுகளின் முக்கியமான வேலைகளுள் ஒன்றாக இருந்தது. டிரஸ்டுகளில் அங்கம் வகித்த ஆலைகளுக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள், மூலப்பொருள்கள் முதலியவற்றை வாங்குவதும், அவை உற்பத்தி செய்த பொருள்களை விற்பதும் பொறுப்புமிக்கதொரு வேலையாக அமைந்தது. இதைச் செவ்வனே செய்வதற்கென டிரஸ்டுகளின்கீழ்ப் பல சிண்டிகேட்டுகள் நிறுவப் பட்டன. விற்பதிலும் வாங்குவதிலும் ஆலைகள் ஒன்றோடொன்று அனாவசியமாகப் போட்டியிட்டு நட்டமடையாமல் தடுப்பதுதான் இந்த ஏற்பாட்டின் அடிப்படை நோக்கமாகும். சில சிண்டி கேட்டுகள் தாமாகவே தோன்றின. ஒரு சில அரசாங்கத்தால் நிறுவப்பட்டவை. இவற்றுள் எண்ணெய், நிலக்கரி முதலிய சிண்டிகேட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

சிண்டிகேட்டுகள் இருவகைப்பட்டன. ஒன்று சம்பிரதாய சிண்டிகேட் (Convention Syndicate); மற்றது வாணிப சிண்டிகேட் (Trade Syndicate). டிரஸ்டுகள் எங்கே தங்கள் பொருள்களை விற்க வேண்டும், எங்கிருந்து தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற வேண்டும், என்ன விலையில் விற்கவேண்டும் என்பவற்றை நிர்ணயம் செய்வதும், ஆலைகளின் உற்பத்தியும் பரிவர்த்தனையும் ஒன்றுக்கொன்று முரண்பாடின்றி நடைபெறுகின்றனவா என்று கண்காணிப்பதும் சம்பிரதாய சிண்டிகேட்டின் வேலை. டிரஸ்டு களின் சார்பில் உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தை (Wholesale Trade) முன்னின்று நடத்தும் பொறுப்பு வாணிப சிண்டிகேட்டிடம் இருந்தது. வாணிப சிண்டிகேட்டுகளை அமைப்பதும், கலைப்பதும், நிருவாகிகளை நியமிப்பதும் தொழிலாளர் பாதுகாப்புக் குழுவின் பொறுப்பு. சம்பிரதாய சிண்டிகேட்டைக் கண்காணிப்பது தலைமைப் பொருளதாரக் குழுவின் வேலை.

இவ்வாறு புதுப் பொருளாதாரக் கொள்கையின்படி அரசாங்கத்தின் கையில் இருந்த ஆலைகளின் உற்பத்தி, நிருவாகம் பொருள் பரிவர்த்தனை முதலிய அனைத்தையும் முன்னின்று நடத்திய பெருமை தொழிலாளர் பாதுகாப்புக் குழுவையும், தலைமைப் பொருளாதாரக் குழுவையும் சேரும். இவற்றுள் முன்னையதில் அதிகாரமும், பின்னையதில் நிருவாகப் பொறுப்பும் குவிந்திருந்தது என்னலாம். அரசாங்க ஆலைகளை மட்டுமின்றி நாட்டின் ஆலைகள் அனைத்தையுமே கண்காணிக்கும் பொறுப்பு தலைமைப் பொருளாதாரக் குழுவிடம் இருந்தது. ஆலைகளின் பாகுபாட்டிற்கேற்ப வெசங்காவும் யூனியன், குடியரசு, மாவட்டம், பகுதி என்ற நிலையில் இயங்கக்கூடிய பல கிளைகளைத் தாங்கி நின்றது. அவற்றின் துணைகொண்டே நாடு முழுவதும் உள்ள ஆலைகளை அது மேற்பரர்வை செய்ய முடிந்தது.

வட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் சோவியத் அரசாங்கத்துக்கு இருந்த நம்பிக்கை வளர வளர, தலைமைப் பொருளாதாரக் குழுவின் அதிகார வரம்புகளை விரிவாக்க வேண்டியதும் அவசியமாயிற்று. நாட்டிலுள்ள ஆலைகளின்மீது அதற்குள்ள ஆதிக்கத்தை அதிகரிக்கும் வகையில் 1927 ஆம் ஆண்டு ஜூலையில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி டிரஸ்டுகளின் சுதந்திரம் பாதிக்கப்படவில்லை. அவை தங்கள் விருப்பம்போல் சிக்கனமான முறையில் உற்பத்தியைப் பெருக்க உரிமை இருந்தது. ஆனால், வெசங்கா வகுக்கும் உற்பத்தித் திட்டங்களுக்கு உட்பட்டே அவை இயங்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக டிரஸ்டுகளும், சிண்டிகேட்டுகளும் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைமைப் பொருளாதாரக் குழுவின் ஆதிகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. டிரஸ்டுகளின் விடுதலையை இவ்வாறு விலங்கிடுவது திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருந்தது.

**தொழிற் சீரமைப்பு**

விவசாயத்தைப் போன்று ஆலைகள் அவ்வளவு வேகமாகச் சீரமைக்கப்படவில்லை. 1923-24-ல் விவசாய உற்பத்தி போருக்கு முன்னிருந்ததில் முக்கால் பகுதியாக இருந்தது; ஆனால், ஆலைப் பொருள் உற்பத்தியோ மூன்றிலொரு பகுதிகூட இல்லை. போதுமான நடை முதல் இல்லாதது அதற்கு ஒரு காரணம். சக்திக்கு அதிகமான ஆலைகளைக் கட்டியாள முயன்றது மற்றொரு காரணம். இக் குறைகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டன. எனினும், 1925-26 வரை புதிய ஆலை எதுவுமே எழும்பவில்லை எனலாம்.

அட்டவணை 6

**ஆலைப் பொருள் உற்பத்தி**

(மில்லியன் ரூபிள்கள்)

| பொருள்கள் | 1913 | 1923 | 1925 | 1926 | 1927 |
|---|---|---|---|---|---|
| முதற் கருவிப் பொருள்கள் (Capital goods) | 4,290 | 1,785 | 3,125 | 4,304 | 5,372 |
| நுகர்வுப் பொருள்கள் (Consumer goods) | 5,961 | 2,044 | 5,963 | 5,973 | 6,679 |
| மொத்தம் | 10,251 | 3,729 | 7,436 | 10,277 | 12,051 |

Source: Baykav (A), opt. cit., P. 121

அட்டவணையில் கண்டபடி, 1926-27-ல் ஆலைப்பொருள் உற்பத்தி போருக்கு முன்னிருந்த நிலையை எய்தியது. அதன் பின்னர் ஆலைகள் துரிதமாக முன்னேறத் தொடங்கின. ஏற்கெனவே இருந்த ஆலைகள் பல புதுப்பிக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டன. புத்தம் புது ஆலைகளும் நிர்மாணிக்கப்படலாயின. 1925-26 முதல் 1927-28 முடிய சுமார் 3120 மில் லியன் ரூபிள் ஆலைகளில் முதலீடு செய்யப்பட்டது. அதில் கிட்டத் தட்ட 2380 மில்லியன் (முக்கால் பகுதி) ஆலை அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்டது.

**உற்பத்தி**

ஆலைப் பொருள்களின் மொத்த உற்பத்தி போருக்கு முன்னிருந்ததைவிட அதிகமானபோதிலும் தனி நபர் உற்பத்தி சற்றுக் குறைவாகவே இருந்தது. மக்கள்தொகை உயர்ந்ததே அதற்குக் காரணம். 1913-ல் 139 மில்லியனாக இருந்த அத் தொகை 1926-ல் 147 மில்லியனாக உயர்ந்தது. ஆலைப் பொருளுற்பத்தி அதற்கேற்ற விகிதத்தில் வளரவில்லை. பெரிய ஆலைகள் சீக்கிரமாகச் சீரமைக்கப்பட்டன; எண்ணெய், நிலக்கரி முதலியவற்றின் உற்பத்தி போருக்கு முன்னிருந்ததை மிஞ்சியது. ஆனால், ஆலைகளின் ஜீவ நாடிகள் சில தளர்ந்துபோயிருந்தன. இரும்புத் தொழில் இவற்றுள் முதன்மையானது. உள்நாட்டுப் போரின்

போது பான்பஸ் பகுதியிலிருந்த பெரும்பாலான இரும்புச் சுரங்கங் களும் ஆலைகளும் அடியோடு அழிக்கப்பட்டன. அவற்றுக்குப் புத்துயிரளித்துச் சீரமைப்பது எளிதாக இல்லை. எனவே, 1927-ல் இரும்புக் கனிகளின் உற்பத்தி போருக்கு முன்னிருந்ததில் பாதியாகவும், இரும்பு உற்பத்தி முக்கால் பகுதியாகவும் குறைந் தன. அதன் காரணமாகத் தொழில் வளர்ச்சியின் அடிப்படை பலவீனம் அடைந்தது. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான சின்னஞ்சிறு ஆலைகள் சீக்கிரமாகச் சீரமைக்கப்படவில்லை. அரசாங்கம் கடைபிடித்து வந்த ஒருதலைப்பட்சமான கொள்கைகளே அதற்கு மூலகாரணம்.

விற்பனைக்குரிய நுகர்வுப் பொருள்களின் மொத்த அளவு முன்னிலும் குறைவாக இருந்தது. போருக்கு முன்னுல் செய்யப் பட்ட இறக்குமதியும், பெரும்பாலும் நின்றுபோயிற்று. எனவே, பொருள் தட்டுப்பாடு இருந்தது. அதேசமயத்தில் தொழிலாளரின் கூலி உயர்ந்தது. அதன் பொருள்களின் தேவை அதிகரித்தது; விலைவாசிகள் உயர்ந்தன. தொழிலாளரின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது.

### உற்பத்திச் செலவுகள்

ஆலைகளின் உற்பத்திச் செலவுகள் குறைந்தபாடில்லை. பெரும் பாலான ஆலைகள் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக இருந்தன. ஆதலின் சிக்கனத்தின் அவசியத்தை அவை நன்கு உணர்ந்தபாடில்லை. மேலும், விலைவாசிகள் உயரும்போது செலவினங்கள் சுருங்காவிடினும் இலாபம் காண்பது எளிது. அப்படி இலாபம் காட்டும் ஓர் ஆலையைத் திறமையற்றது என்று சொல்லமுடியுமா? எனவே, ஊதாரித்தனம் மூடி மறைக்கப் பட்டது. பொருள்களின் தரமும் நாளுக்கு நாள் குறைந்தது.

### அயல்நாட்டு மூலதனம்

தொழில் வளர்ச்சியில் அயல்நாட்டு மூலதனத்தின் பங்கு மிகக் குறைவு. பல கம்பெனிகள் சோவியத் அரசாங்கத்தின் சலுகைகளை நாடி வந்தன. ஆனுல், பெரும்பாலானவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. தொழில்நுணுக்க உதவிக்காக ஒரு சில அனுமதிக்கப்பட்டன. ஆனுல், அவற்றின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆலைப்பொருள் உற்பத்தியில் அவற்றின் பங்கு 0·4 சத விகிதமேயாகும். எனவே, இக் காலத்தில் ஆலைவளர்ச்சிக்கென்று சோவியத் அரசாங்கம் தனது சுயபலத்தையே முழுவதுமாக நம்பி இருந்தது என்பது வெளிப்படை.

அயல்நாட்டு மூலதனத்துக்கு ஆசைகாட்டி வரவேற்க வேண்டும் என்பது வலதுசாரிக் கம்யூனிஸ்டுகளின் வாதம். ஆலை வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது மூலதனம். அதை உள் நாட்டிலேயே திரட்டுவது கடினம். எனவே, அயல்நாட்டு மூலதனத்தின் ஆதரவை நாடுவது அவசியம் என்பது அவர்களது கருத்து. தொழில் வளர்ச்சியின் அவசியத்தைச் சோவியத் அரசாங்கம் நன்கு உணர்ந்திருந்தது. அதிலும் கனரகத் தொழில் களைப் பெருக்கிச் சோவியத் பொருளாதாரத்தின் இயந்திர அடிப் படையைப் பலப்படுத்த விரும்பியது. நாட்டின் பாதுகாப்புக்கும் அது இன்றியமையாததாக இருந்தது. ஆனால், அதற்குவேண்டிய மூலதனத்துக்காக அயல்நாட்டவரை நம்பி இருத்தல் அபாயகர மானது. 'தன் கையே தனக்கு உதவி' என்ற கொள்கையே இவ் விஷயத்தில் விரும்பத்தக்கது என்று எண்ணியது. அதற்கான திட்டங்களை வகுப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டது.

## வாணிபக் கொள்கை

போர்க்காலப் பொது உடைமையின்போது சோவியத் அரசாங்கம் விவசாயத்தில் பலவாறாகத் தலையிட்டது. விவசாயப் பொருள்களின் விலையை நிர்ணயம் செய்தது. தங்களிடமுள்ள உபரிப் பொருள்களை அவ் விலையில் விற்குமாறு விவசாயிகளை வற்புறுத்தியது. இத்தகைய தலையீட்டால் வாணிபமாற்று விகிதம் விவசாயிகளுக்குப் பாதகமாகத் திரும்பியது. அதன்பயனாக விவசாய உற்பத்தி குறைந்தது. விவசாயிகளிடையே அதிருப்தி பெருகியது. விவசாயி—தொழிலாளி கூட்டணியில் பெரிய பிளவு ஏற்பட்டது. கிராமத்துக்கும் நகரத்துக்குமுள்ள உறவு முறியலாயிற்று. இத்தகைய நெருக்கடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் தனது வாணிபக் கொள்கையை மாற்றி அமைத்தது. தனியாரின் வாணிபத்தை உயிர்ப்பித்தது. அதை யொட்டி விலைப் பிரச்சினையிலும் புதிய கண்ணோட்டம் வேண்டிய தாயிற்று. இத்தகைய மாற்றங்கள் தத்துவரீதியிலும் கொள்கை ரீதியிலும் பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பின.

### தனி வணிகர் (Nepmen)

புதுக்கொள்கையின்கீழ் விவசாயிகள் பொருள்வடிவில் அரசாங் கத்துக்குச் செலுத்தவேண்டிய வரி போக மீந்தபொருளைத் தங்கள் விருப்பம்போல் சந்தையில் விற்கும் உரிமை பெற்றனர். ஆலைகளும் தங்கள் உற்பத்தியை இஷ்டம்போல் பரிவர்த்தனை செய்ய முடிந்தது. ஆலைகள் ஒன்றோடொன்று நேரடித் தொடர்பு கொண்டு விற்கவோ வாங்கவோ செய்யலாம்; அல்லது தனிப்பட்ட

வணிகரிடம் வாணிபம் செய்யலாம்; இவ் வணிகர் மொத்த வியாபாரத்திலும் சில்லறை வியாபாரத்திலும் பங்குகொள்ளும் உரிமை பெற்றனர். இவர்கள்தாம் 'நெப்மென்' என்று அழைக்கப் பெற்றனர்.

தனி வணிகரின் ஆதிக்கம் ஒரு குறிப்பிட்ட எல்லேக்குள் ஒடுங்கியதாக இருக்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் ஆவல். ஆனல், நடந்தது வேறு. ஓரிரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அவர்களது ஆதிக்கம் நாடெங்கும் பரவலாயிற்று. வாணிபம் செய்ய அவர்களிடம் முதல் ஏது? என்ற கேள்வி எழுவது இயல்பு. புரட்சிக்கு முன்னல் இருந்த பல பணம் படைத்தவர்கள் பறிமுதலுக்கும், வரிகளுக்கும் தப்பிப் பதுக்கிவைத்திருந்த பணம் வாணிபத்துக்கு முன்னின்று உதவியது. அன்றிருந்த சூழ்நிலேயில் இம் மூலதனம் வெகு விரைவில் வளரும் வாய்ப்பு இருந்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான ஆலேகளிடம் போதிய நடைமுதல் இல்லாமலிருந்தது. அதன்காரணமாகப் பொருளுற்பத்தி தடைப் பட்டது. இத்தகைய முதல் பஞ்சத்தைப் போக்கும் பொருட்டுப் பல ஆலேகள் தங்களிடமிருந்த பொருள்களேயும் இதர சொத்துக் களேயும் வந்த விலேக்கு விற்கத் தலேப்பட்டன. பொறுப்பற்ற இந்த நடவடிக்கையால் ஆலேகள் நட்டமடைந்தன. வணிகர்கள் இலாப மடைந்தனர். இங்ஙனம் ஈட்டிய முதலேக்கொண்டு மேலும் வாணிபத்தைப் பெருக்குவது எளிதாக இருந்தது.

**அரசாங்கக் கூட்டுறவு வாணிபம்**

தனி வணிகரின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்துவதில் ஆரம்பத் திலிருந்தே அரசாங்கம் கண்ணுயிருந்தது. அதன்பொருட்டுப் பல கூட்டுறவு, அரசாங்க வாணிப ஸ்தாபனங்களேப் பலப்படுத்த முன்வந்தது. 1921ஆம் ஆண்டு ஏப்பிரலில் கூட்டுறவு வியாபார ஸ்தாபனங்கள் உணவு அமைச்சவையிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தாமாகவே வாங்கி விற்கும் உரிமை பெற்றன. நாட்டுடைமை யாக்கப்பட்ட பல சொத்துகள் கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டன. நிதி விஷயத்திலும் அவை சுதந்திரமாக இயங்கமுடிந்தது. ஆனல் போதுமான முதல் வசதியும், கடன் வசதியும் இல்லாததால் 1923 வரை அதன் வளர்ச்சி மெதுவாகவே இருந்தது.

அரசாங்க வாணிபத்தில் இருவகை அமைப்புகள் இருந்தன. அவை டிரஸ்டுகளின்கீழுள்ள சிண்டிகேட்டுகளும் நாட்டுப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மாகாணக் குழுக்களின்கீழ் இருந்த டார்கி அல்லது காஸ்டார்கி (Torgi or Gostorgi) களு

மாகும் சிண்டிகேட்டுகள் பெரும்பாலும் மொத்த வியாபாரத்திலேயே கவனம் செலுத்தின. ஆனால் சில்லறை வியாபாரம் தனி வணிகர், கூட்டுறவு ஸ்தாபனங்கள், டார்கி முதலியவற்றின் உதவியால் நடைபெற்றது. டார்கி பெரும்பாலும் குறிப்பிட்ட பகுதியிலுள்ள வியாபாரத்திலேயே கவனம் செலுத்தியது. மொத்த வியாபாரத்துக்கும் சில்லறை வியாபாரத்துக்குமிடையே பொருள்கள் பலமுறை கைமாறியதன் காரணமாகச் சில சமயங்களில் சில்லறை விலை மொத்தவிலையைக் காட்டிலும் ஐந்தாறு மடங்கு அதிகமாக இருந்தது. இதனால் இடைப்பட்ட தரகர்கள் பெரிதும் இலாபமடைந்தனர்.

அரசாங்க வணிக ஸ்தாபனங்களுக்கு வேண்டிய மூலதனத்தை அரசாங்கத்துக்குச் சொந்தமான ஆலைகளும் நிலையங்களும் கொடுத்து உதவின. ஆரம்பத்தில் பாங்குகளின் பங்கு மிகவும் குறைவாக இருந்தது, மேலும் பாங்குகள் கொடுக்கும் கடனுக்கு 12—18 சதவிகிதம் வட்டி வாங்கின, இவ்வளவு வட்டி கொடுத்து வியாபாரம் செய்வது கஷ்டமாக இருந்தது. எனவேதான், அரசாங்க ஸ்தாபனங்கள் மொத்த வியாபாரத்தில் கவனம் செலுத்தி சில்லறை வியாபாரத்தைப் பெரும்பாலும் தனிவணிகரின் கையில் விட்டு வைக்கவேண்டியதாயிற்று. அதன்காரணமாக 1922-23-ல் நடந்த சில்லறை வியாபாரத்தில் கிட்டத்தட்ட முக்கால்பகுதி தனி வணிகரின் உதவியால் நடைபெற்றது. அரசாங்க, கூட்டுறவு ஸ்தாபனங்களின் பங்கு முறையே 14·4, 10·3 சதவிகிதமாகும்.

### கத்தரிப் போக்கு (Scissors Crisis)

இத்தகைய சூழ்நிலையில்தான் விலைவாசிகளில் குழப்பமிக்க ஏற்றத்தாழ்வுகள் தோன்றலாயின. விவசாயப் பொருள்களுக்கும் ஆலைப்பொருள்களுக்கும் இடையே சமத்துவ மதிப்பு (Parity) ஏற்படுத்துவது விவசாயி-தொழிலாளி ஒற்றுமைக்கு இன்றியமையாததாக இருந்தது. போர்க்காலத்தில் விலைகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் அரசாங்கம் ஒருதலைப்பட்சமான கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. அதனால் வாணிபமாற்று விகிதம் விவசாயிகளின் ஆதரவைத் திரும்பப் பெற முயன்ற அரசாங்கம் இவ் விகிதத்தைச் சீர்படுத்த முயன்றது. ஆயின், அம்முயற்சி வெற்றி தருவதாக இல்லை. சமமதிப்புக்குப் பதிலாக விலை விகிதத்தில் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாயின. 1922 ஆம் ஆண்டு ஆகஸ்டுவரை விவசாயப் பொருள்களின் விலை ஆலைப்பொருள்களின் விலையை விட அதிகமாக இருந்தது. ஆனால், அதற்குப்பின் அவ்விகிதம் தலைகீழாக மாறியது. விவசாயப் பொருள்களின் விலை கீழே சரிந்த வண்ணமிருந்தது. ஆலைப்பொருள்களின் விலை மேலே ஏறிக்

## 'கத்தரி போக்கு'




Source : Dobb (M), "Soviet Economic DEVELOPMENT Since 1917"

கொண்டே இருந்தது. விலைவாசியில் ஏற்பட்ட இந்த ஏற்றத்தாழ்வு தான் கத்தரிப்போக்கு என்று அழைக்கப்படுவது. விலைகளின் இந்தப் போக்கைக் குறிக்கும் வரைபடம் திறந்த தாடை (அலகு) களையுடைய கத்தரிக்கோலை ஒத்திருப்பதால், இதற்குக் கத்தரிப் போக்கு என்ற பெயர் வழங்கலாயிற்று. விலைவாசிகள் என் இவ்வாறு மேலும் கீழுமாக ஏறி இறங்கின என்று இனி நோக்குவோம்.

புதுப் பொருளாதாரக் கொள்கையின் அடியாகப் பொருளாதாரத் தின் ஒரு சில பகுதிகள் துரிதமாகச் சீரமைக்கப்பட்டன. போக்கு வரத்தைச் செம்மைப்படுத்தி அதன்மூலம் ஆலைகளுக்கு வேண்டிய எரிபொருளும், மூலப்பொருள்களும், கச்சாப்பொருள்களும் கிடைப்பதற்கான முற்சிகள் நடந்தன. ஆனால், போதுமான கச்சாப் பொருள்களும் உணவும் கிராமங்களிலிருந்து கிடைத்த பாடில்லை. போர்க்காலத்தில் விளைவில் ஒரு பகுதியைப் பலவந்தமாக அரசாங்கம் கைப்பற்றியது. புதுப் பொருளாதாரக் கொள்கையின் கீழ் இம் முறை கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாகப் பொருள் வடிவில் வரி விதிக்கப்பட்டது. இவ் வரியின் வாயிலாகக் கிடைத்த விவசாயப்பொருள்கள் போர்க்காலத்தில் கிடைத்ததில் பாதிகூட இல்லை. இதற்கு அதிகமாக எதையும் அவர்கள் அரசாங்கத்திடம் விற்கவேண்டிய கடமையோ கட்டாயமோ இல்லை. எனவே, விவசாயப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன் காரணமாக ஆலைகளின் உற்பத்திப் பெருக்கம் தடைப்பட்டது. எனினும், போதிய நடை முதல் இல்லாததால் ஆலைகள் தங்களிடமுள்ள பொருள்களை ஆத்திரப்பட்டு வந்த விலைக்கு விற்க ஆரம்பித் தன. ஆனால், அவற்றை விரும்பி வாங்குவாரில்லை. எனவே, ஆலைப்பொருள்களை விற்க வழியில்லை; விவசாயப் பொருள்கள் கிடைக்க வழியில்லை. அதன்விளைவாக விவசாயப் பொருள் களின் விலை ஏறியது; ஆலைப்பொருள்களின் விலை படுத்தது. எனவே, வாணிபமாற்று விகிதம் விவசாயிகளுக்குச் சாதகமாயிற்று. விவசாயப் பொருள்களின் மதிப்பைக் கொண்டு கணிக்கும்போது ஆலைப்பொருள்களின் மதிப்பு போருக்கு முன்னிருந்ததில் 65 சத விகிதமாகக் குறைந்து போயிற்று. இதுதான் 1922-ல் இருந்த நிலை.

ஆனால், 1922ஆம் ஆண்டுக்குப்பின் நிலைமை தலைகீழாக மாறியது. வாணிகமாற்று விகிதம் விவசாயிகளுக்குப் பாதக மாயிற்று. 1922ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலிருந்து 'கத்தரியின் அலகு' திறக்கலாயிற்று. இப் போக்கு 1923ஆம் ஆண்டு கோடையில் உச்சநிலையை அடைந்தது. அப்போது வாணிபமாற்று விகிதம் 3·1 விவசாயிகளுக்கு எதிராக இருந்தது.

இத்தகைய மாறுபாட்டுக்குக் காரணம் என்ன என்று அறிவது அவசியம். உற்பத்தி வேகத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் அடிப்படைக் காரணங்களுள் ஒன்ருகும். 1923-க்குள் விவசாய உற்பத்தி பெரும்பாலும் போருக்கு முன்னிருந்த நிலையை எய்தியது. ஆனல், ஆலைப்பொருள் உற்பத்தி மூன்றிலொரு பகுதிக்கு மேலில்லை. விவசாய உபரிப்பொருள் விற்பனையும் கொஞ்சங் குறையப் பழைய விகிதத்தை எட்டியது. எனவே, விவசாயப் பொருள்களுக்கு இருந்த தட்டுப்பாடு போய் ஆலைப் பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. ஒரு கணக்குப்படி, விவசாயப் பொருள்கள் ஆலைப்பொருள்களைவிட 70 சதவிகிதம் அதிகமாகக் கிடைத்தன. அதேசமயத்தில் ஆலைப்பொருள்களின் உற்பத்திச் செலவும் (உழைப்பு நேரத்தைக் கொண்டு கணிக்கும் போது) விவசாயத்தைவிட 80 சதவிகிதம் அதிகமாக இருந்தது.

உற்பத்தியும் உற்பத்திச் செலவுகளும் மட்டும் விலை விகிதத்தை இவ்வளவுதூரம் பாதிக்க முடியுமா? என்று பலர் ஐயுற்றனர். அதன்பயனுக வேறு சில விளக்கங்களும் வெளிவந்தன. பணப் பெருக்கமே இந் நிலைக்குக் காரணம் என்பது ஒருசாராரின் கருத்து. எனினும், அஃது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. பணப் பெருக்கத்தால் விலைவாசிகள் உயரமுடியும் என்பது உண்மை. ஆனல், அத்தகைய விலை உயர்வு ஆலைப்பொருள்களை மட்டும் பாதிக்கும் என்று எண்ணுவது தவறு. பேராசிரியர் டாப் வேருெரு காரணமும் காட்டுகிருர்:, 'உற்பத்தி, செலவுகள் முதலியவற்றில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளோடு ஆலைகள் அனுபவித்துவந்த சர்வாதீன உரிமைகளும் சேர்ந்துதான் விலைவிகிதத்தில் ஏற்பட்ட இந்த வேறுபாட்டுக்குக் காரணம் ஆயின' என்பது அவரது துணிபு. டிரஸ்டுகள் தங்கள் சிண்டிகேட்டுகளின்மூலம் விற்கவும் வாங்கவும் முற்பட்டன என்று கண்டோம். இவை தங்கள் ஏகபோக (சர்வாதீன) சக்திகளைப் பயன்படுத்தி விலைவாசிகளை ஆலைகளுக்குச் சாதகமாகத் திருப்ப முடிந்தது.

**அரசாங்கத் தலையீடு**

விலைகளின் இந்த விபரீதப் போக்கைத் தடுத்துக் கத்தரியின் அலகுகளை மூடுவதில் அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டியது. ஆலைப்பொருள்களின் விலையை உயர்த்துவதற்கான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டது. தானியங்களின் ஏற்றுமதியை அதிகரிப்பது, விவசாயப் பொருள்களை வாங்கிச் சேமித்துவைக்கும் வணிகருக்குக் கடன் வசதி அளிப்பது முதலியவற்றின்மூலம் விவசாயப் பொருள்களின் விலை உயர வழிவகுத்தது. அதேசமயத்தில் ஆலைப்பொருள்களின் அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்வது, சிண்டிகேட்டு

களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளைக் குறைப்பது, ஆலைப் பொருள்களை அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது போன்ற ஏற்பாடுகளின் உதவியால் ஆலைப்பொருளின் விலையை மட்டுப் படுத்த முயன்றது. இத்தகைய முயற்சிகளின் பயனாக 1923ஆம் ஆண்டு இறுதிக்குள் 'கத்தரியின் அலகுகள்' நெருங்கி வரலாயின. ஆலைப்பொருள்களின் விலை குறைந்து விவசாயப் பொருள்களின் விலை உயரலாயிற்று. இப் போக்கை விவசாயிகள் வரவேற்றனர். ஆனால், தொழிலாளர் வரவேற்கவில்லை.

விலைகளில் விரும்பத்தக்க மாற்றங்கள் இருந்தபோதிலும் விலை விகிதம் சமநிலை எய்தியது என்று சொல்வதற்கில்லை. உற்பத்திச் செலவுகளில் போதிய சிக்கனம் ஏற்படாததே அதற்குக் காரணம். ஆலைகள் தங்கள் முழுச் சக்திகளையும் பயன்படுத்தமுடியவில்லை. எனவே, சராசரிச் செலவுகள் குறைய வழியில்லை. இதன்காரணமாக விலை விகிதம் விவசாயிகளுக்குப் பாதகமாகவே இருந்துவந்தது. இந் நிலை நெடுநாள் நீடித்ததால் விவசாயிகளும் அவர்களுக்குப் பரிந்து பேசியவர்களும் 'தொழிற்சாலைகளின் சர்வாதிகாரம்' ஒழிந்தபாடில்லை என்று முணுமுணுத்து வந்தனர்.

### தனிவணிகரைக் கட்டுப்படுத்தல்

மொத்த விலைக்கும் சில்லறை விலைக்குமுள்ள வேறுபாட்டைக் குறைக்க வேண்டுமாயின் தரகர்களை ஒழிக்க வேண்டுமென்று அரசாங்கம் நம்பியது. இந்தத் தரகர்கள் பெரும்பாலும் தனிவணிகராதலால், அவர்களைக் கட்டுப்படுத்திக் கூட்டுறவு, அரசாங்க வாணிபத்தைப் பெருக்கவேண்டுமென 13ஆம் காங்கிரஸில் முடிவு செய்யப்பட்டது. அத்துடன், பொதுப்படையானதொரு திட்டத்தின் அடிப்படையில் வாணிபத்தை நடத்துவதும் இன்றியமையாதது என்று அரசாங்கத்துக்குப்பட்டது. இவற்றை மனத்திற்கொண்டு 1924-ல் உள்நாட்டு வாணிப அமைச்சவை (Commissariat of Internal Trade) நிறுவப்பட்டது.

வியாபாரத் தந்திரங்களை நன்கு தெரிந்து நாட்டின் வாணிபம் முழுவதையும் கொஞ்சங் கொஞ்சமாக அரசாங்கத்தின் கையில் கொண்டு வருவதும், அதை ஒரு திட்டத்துக்கு உட்படுத்தி ஒழுங்கான முறையில் நடத்துவதும் வாணிப அமைச்சவையின் முக்கிய வேலை. அதற்கிணங்கச் சில்லறை வியாபாரத்தில் கூட்டுறவு முறையை அரசாங்கம் ஆதரித்தது. விவசாயப் பொருள் விற்பனையை ஏற்று நடத்துவதற்கெனச் சில பிரத்தியேகமான அரசாங்க அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. அதன்பயனாக 1926-27-ல் கிடைத்த விவசாய உபரிப் பொருள்களில் கிட்டத்தட்ட

76-78 சதவிகிதம் இத்தகைய ஸ்தாபனங்களின் கையில் வந்தது. அவற்றின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக அரசாங்கம் பல சலுகைகளைக் காட்டியது. கடன், போக்குவரத்துவசதி ஆகிய வற்றில் தாராளங்காட்டி ஆதரித்துத் தனிவணிகரைப் பல வகை களிலும் புடமிட்டது. எனவே, 1927-28-க்குள் பெரும்பாலான விவசாயப் பொருள்கள் அரசாங்க சொல்வாக்கின்கீழுள்ள ஸ்தாபனங்களின் வழியாகவே விற்பனையாயின. கச்சாப்பொருள்களை வாங்குவதில் உயர்ந்த பட்சவிலையும் (Maximum limit price), குறைந்தபட்ச விலையும் (Minimum limit price) நிர்ணயம் செய்யப் பட்டன. அதன்பயனாக விவசாயிகளின் நலன்களும் ஒருவாறு பாதுகாக்கப்பட்டன; ஆலைகளும் நியாயமான விலையில் தங்களுக்கு வேண்டிய கச்சாப் பொருள்களை வாங்க முடிந்தது. தனிவணிகரின் ஆதிக்கம் நாளடைவில் குன்றியது. 1928-ல் மொத்த வாணிபத்தில் 5 சதவிகிதமும், சில்லறையில் 20-25 சதவிகிதமும் தனிவணிகரின் கையில் இருந்தது. மீந்தவற்றில் அரசாங்க, கூட்டுறவு ஸ்தாபனங் கள் ஆதிக்கம் செலுத்தின. மொத்த வியாபாரத்தில் சிண்டிகேட்டு களும், சில்லறையில் கூட்டுறவு ஸ்தாபனங்களும் மேலோங்கி நின்றன.

### வெளிநாட்டு வாணிபம்

வெளிநாட்டு வாணிபத்தில் புதுக்கொள்கை எதுவும் உருவாக வில்லை. போர்க்காலத்தில் இருந்தது போலவே புதுக்கொள்கையின் காலத்தும் அரசாங்கம் இத் துறையில் தனது ஏகபோக உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை. வெளிநாட்டு வாணிபத்தில் முழு ஆதிக் கமும் இல்லாவிடில் சோவியத் அரசாங்கம் தனது ஆலைகளையும் பொருளாதாரத்தையும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் போட்டி யிலிருந்தும் தலையீட்டிலிருந்தும் பாதுகாப்பது இயலாது என்பது லெனினது கருத்து.

### சர்வாதீனத்தால் விளைந்த நன்மைகள்

திட்டமிட்ட பொருளாதர வளர்ச்சியில் நம்பிக்கைகொண்டது சோவியத் யூனியன். எனவே, அயல்நாட்டு வாணிபத்தில் அதற்கு இருந்த ஏகபோக உரிமை அத்தகைய பொருளாதாரக் கொள் கைக்குப் பக்கபலமாக அமைந்தது. தொழில்களைப் பாதுகாப்பதில் காப்புவரியைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது வாணிபச் சர்வாதீனம். எவ்வளவுதான் காப்புவரிகள் விதித்தாலும் பிறநாடுகள் அவற்றை எதிர்த்துத் தாக்கி முறியடிக்க முடியும். ஆனால், ஏகபோக உரிமையின் மூலம் பிறநாடுகளுடன் பரஸ்பரம் உடன்பாடுகள் செய்துகொண்டு பயனடையலாம். மேலும், ஏற்றுமதியும் இறக்கு மதியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல; நெருங்கிய உறவு

கொண்டவை. பொருளாதாரத்தின் நிலைமைக்கேற்ப இந்த இரு அம்சங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே கண்ணோட்டத்தில் காணும் தகுதி அரசாங்கத்துக்கே உண்டு. எனவேதான், விலை விகிதம் விவசாயிகளுக்குப் பாதகமான போது உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தது. பின்னர் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டபோது பெரும்பாலும் இயந்திரங்களே இறக்குமதி செய்யப்பட்டன.

இலாப நட்டக் கணக்குப் பார்க்கும் முறையும் வேறு எல்லா வற்றிலும் இலாபம் கிடைக்கவேண்டிய அவசியமில்லை. மொத்தத்தில் வாணிபம் இலாபகாரமானதாகவும் பயனுள்ளதாகவும் இருந்தால் போதுமானது. ஆனால், ஏகபோக உரிமை இருப்பதால் சாதகமான வகையில் பேரம் பேசி இலாபமடைய முடியும். மேலும், அயல் நாட்டு வாணிபத்தை அரசியல் கொள்கையின் கைக்கருவியாகக் கையாளுவதும் சோவியத் யூனியனுக்கு அவசியமாக இருந்தது. அத்துடன் அயல்நாட்டுச் செலாவணியில் (Foreign Currency) ஏற்படும் மாறுதல்கள் உள்நாட்டுச் செலாவணியைப் (Internal Currency) பாதிக்காமல் பாதுகாப்பதும் எளிதாக இருந்தது. இத்தகைய வன்மைகளின் காரணமாகவே சோவியத் அரசாங்கம் அயல்நாட்டு வாணிபத்திலுள்ள சர்வாதீனத்தைக் கொஞ்சமும் விட்டுக்கொடுக்கவில்லை.

போர்க்காலத்தில் சோவியத் யூனினியன்மீது திணிக்கப்பட்ட பொருளாதார முற்றுகை 1921-க்குப் பின் நீங்கலாயிற்று. அதன் காரணமாக சோவியத் யூனியன் பிரிட்டன் போன்ற நாடுகளுடன் பரஸ்பர வாணிப ஒப்பந்தம் செய்யத் தொடங்கியது. இந்த உடன்பாடுகள் அயல்நாட்டு வாணிப அமைச்சவையின் (Commissariat of Foreign Trade) மூலம் செய்யப்பட்டன. தனிப்பட்ட நாடுகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கேற்ற தனிஸ்தாபனங்களும், தனிப் பொருள்களில் கவனம் செலுத்தக்கூடிய ஸ்தாபனங்களும் அயல் நாட்டு வாணிப அமைச்சவையின்கீழ் இயங்கிவந்தன. ஏற்றுமதிப் பொருள்களைச் சேகரிப்பதிலும், இறக்குமதியானவற்றை விநியோகம் செய்வதிலும் அரசாங்க, கூட்டுறவு வணிக ஸ்தாபனங்கள் பெரிதும் துணைசெய்தன. உள்நாட்டு வாணிபத்துக்கும், வெளி நாட்டு வாணிபத்துக்கும் ஏற்பட்ட இந்த நெருங்கிய உறவின் காரணமாக 1925 ஆம் ஆண்டு உள்நாட்டு-வெளிநாட்டு வாணிப அமைச்சவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு வாணிப அமைச்சவை (Commissariat of Trade) ஒன்று உருவாக்கப்பட்டது.

**வாணிபச் சீரமைப்பு**

இத்தகைய ஏற்பாடுகளின் காரணமாக வெளிநாட்டு வாணிபம் பெருகியது. (பின்வரும் அட்டவணை காட்டுவது போன்று).

அட்டவணை 7

வெளிநாட்டு வாணிபம்

(மில்லியன் ரூபிள்கள்)

| ஆண்டு | ஏற்றுமதி | இறக்குமதி | மிச்சம் |
|---|---|---|---|
| 1913 | 1520·1 | 1574·0 | + 146·1 |
| 1914 | 835·6 | 1109·0 | — 274·0 |
| 1915 | 274·0 | 870·0 | — 596·0 |
| 1916 | 237·0 | 862·0 | — 625·0 |
| 1917 | 137·9 | 802·0 | — 665·0 |
| 1918 | 7·5 | 61·1 | — 53·6 |
| 1919 | 0·1 | 3·0 | — 2·9 |
| 1920 | 1·4 | 28·7 | — 27·3 |
| 1921 | 20·2 | 208·3 | — 188·1 |
| 1922 | 81·6 | 269·8 | — 188·2 |
| 1923—24 | 373·2 | 233·5 | + 139·7 |
| 1924—25 | 558·6 | 723·5 | — 164·9 |
| 1925—26 | 676·6 | 756·3 | — 79·7 |
| 1926—27 | 780·2 | 713·6 | + 66·6 |
| 1927—28 | 777·8 | 945·5 | — 167·7 |
| 1928—29 | 877·6 | 836·3 | + 41·3 |
| 1929—30 | 1002·3 | 1068·6 | — 66·3 |

Source: Baykov (A), opt. cit. p. 75.

போர்க்காலத்தில் அயல்நாட்டு வாணிபம் அடியோடு நின்று விட்ட தென்னலாம். ஆனுல், புதுப் பொருளாதாரக் கொள்கையின் காலத்தில் வாணிபம் மெதுவாக வளரலாயிற்று. ஆயினும், இலாபகர மாக இருந்ததென் று சொல்ல முடியாது. இலாபம் பெறுவதும் முக்கிய நோக்கமாக இல்லே. சில சமயங்களில் நட்டப்பட்டாவது ஏற்றுமதி செய்வதென்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர். இது பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாக இருந்தது. ஏற்றுமதியில் பெரும்பகுதி உணவுப் பொருள்களும் கச்சாப் பொருள்களுமாக இருந்தது. இறக்குமதியில் வரவரக் கச்சாப் பொருள்களும், இயந்தி ரங்களும் பெரும்பங்கு வகித்தன.

## நிதிப் பிரச்சினே

### 1924-க்கு முன்னிருந்த நிலே

போர்க்காலப் பொது உடைமையின்போது நாணய முறை நாட்டுடைமையாக்கப்பட்டது. பொருள் பரிவர்த்தனேயில் பணத்தின் பயன் குன்றியது. பெரும்பாலும் பண்டமாற்று முறையே கையாளப்

பட்டது. வரிகளும் பொருள் வடிவிலேயே வசூலிக்கப்பட்டன. ஆனால், புதுப் பொருளாதாரக் கொள்கையால் இவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

பொருள் பரிவர்த்தனை, வரி வசூலிப்பு முதலிய விவகாரங்களில் பணப் பிரயோகம் பெருகியதே புதுப் பொருளாதாரக் கொள்கையின் போது ஏற்பட்ட அடிப்படை மாறுதலாகும். சிக்கலின்றிப் பணம் பயன்படுத்தப்பட வேண்டுமாயின், அதற்கு நிலையான மதிப்பு இருக்கவேண்டும் என்பதை லெனின் நன்கு உணர்ந்தார். அதற்கேற்ப அரசாங்கம் பல சீர்திருத்தங்களைச் செய்ய ஆவல் கொண்டிருந்தது. ஆனால், 1924ஆம் ஆண்டு வரை திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் காணமுடியவில்லை.

### அரசாங்கத்தின் வரவு-செலவு

போர்க்காலத்தில் ஏற்பட்ட வரவுக்கு மிஞ்சிய செலவின் காரணமாகப் பணவீக்கம் ஏற்பட்டது என்று கண்டோம். தனது வரவைப் பெருக்கிச் செலவைச் சுருக்குவதன்மூலம் சோவியத் அரசாங்கம் இப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண விரும்பியது. அதன்பொருட்டு வரவைப் பெருக்கிச் செலவைக் குறைக்கும் பல நடவடிக்கைகளை எடுத்தது. நட்டத்தில் ஓடிய பல ஆலைகளை முடியது; ஊதாரித்தனமாகச் செலவு செய்தவற்றைக் கண்டித்தது; பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டவர்களைத் தண்டித்தது; வீண் செலவு செய்பவர்களைக் கண்டுபிடிக்க மத்தியக் கட்டுப்பாடு கமிஷன் (Central Control Commission) ஒன்றை நிறுவியது. மாகாணங்களும், பகுதிகளும், தங்கள் தங்கள் வரவுக்குத்தக்க செலவுசெய்ய வேண்டும் என்று வற்புறுத்தியது. அதன் பயனாகச் செலவு ஓரளவு சுருங்கலாயிற்று.

அதேசமயத்தில் வரவைப் பெருக்க வேண்டிய வரிகளையும், வரிவசூல் முறையையும் திருத்தி அமைத்தது. 1921ஆம் ஆண்டு மார்ச்சிலிருந்து விவசாயிகள்மீது விதிக்கப்பட்ட வரிகளைத் தானிய வடிவில் வசூலித்தது. அவ் ஆண்டு இறுதிக்குள் சுமார் 18 விவசாயப் பொருள்கள் வரி செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன. வரிகள் பொதுவாகக் கோதுமை, ரை முதலிய பொருள்களின் அளவைக்கொண்டு கணிக்கப்பட்டன. 1922-ல் பொருள் வடிவாய் வசூலிக்கப்பட்ட வரிகள் அனைத்தும் ஒன்றுபடுத்தப்பட்டன. 1924ஆம் ஆண்டு வரை வரிகள் பொருள் வடிவிலும், பணமாகவும் செலுத்தப்பட்டன. ஆனால், பணத்தின் மதிப்பு குன்றிவரவே இத்தகைய இரட்டை வரி முறையை அமுல் நடத்துவது கடினமாக இருந்தது. எனவே, 1924-ல் எல்லா வரிகளையும்

பணமாகவே வசூலிக்க ஏற்பாடாயிற்று. விவசாய வரிபோக விவசாயிகள் வாங்கிய ஒயின், புகையிலை, நெருப்புப்பெட்டி, உப்பு, சீனி, தேயிலை முதலிய பொருள்களின்மீதும் வரி விதிக்கப்பட்டது. வாணிபம், தொழில் முதலியவற்றில் ஈடுபட்டவர்களும் வரிவிதிப்புக்கு உள்ளாயினர். 1922-ல் வருமான வரி, சொத்து வரி ஆகியனவும் விதிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இது தனிப்பட்டவர்களின்மீது மட்டும் சுமத்தப்பட்டது. பின் அரசாங்க ஆலைகளும் வரிவிதிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

பொதுவாக வரிக்கொள்கை இரு நோக்கங்களைக் கொண்டிருந்தது. அரசாங்கம் முன்வைத்திருந்த சமதர்மக் கொள்கைகளை நிலைநாட்டுவதற்கு வரி ஒரு கருவியாகக் கருதப்பட்டது. அதே சமயத்தில் அரசாங்கத்துக்குத் தேவையான வருமானம் கிடைக்கவும் அது வழிவகுக்கவேண்டும். 1923-24-ல் மொத்த வருவாயில் (Total revenue) 30-40 சதவிகிதம்தான் வரிகளின் வாயிலாக வந்தது.

வரி தவிர வேறு பல வழிகளிலும் அரசாங்கம் தனது வரவைப் பெருக்கியது. இவற்றுள் அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில்களில் கிடைத்த இலாபமும் அரசாங்கக் கடன்களும் முக்கியமானவை. 1922-ல் அரசாங்கம் தானியக் கடன் வாங்கத் தலைப்பட்டது. இக் கடன்களைப் பணமாகவோ பொருளாகவோ திருப்பிக் கொடுக்க இசைந்தது. அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய வரிகளையும் கடன் பத்திரங்களின்மூலம் செலுத்த வசதியளிக்கப்பட்டது. இதுபோக, பணவடிவாகவும், 100 மில்லியன் தங்க ரூபிளை 10 ஆண்டுத் தவணையில் கடனாகவும் பெற முயன்றது. இக் கடன் பத்திரங்களை விற்பதில் பலவந்தமும் பயன்படுத்தப்பட்டது. எனினும், அரசாங்கம் விரும்பிய அளவு வெற்றி கிட்டவில்லை. 1922-ல் அரசாங்கம் மேற்கொண்ட மொத்தச் செலவில் 2·7 சதவிகிதம் வரியாகவும், 10·6 சதவிகிதம் அரசாங்கத் தொழில்களிலிருந்து கிடைத்த இலாபமாகவும், கடனாகவும் கிடைத்தது. எஞ்சிய 86·7 சதவிகிதத்தை ஈடுசெய்ய அரசாங்கம் அச்சகத்தின் உதவியையே நாடியது. அதன்பயனாகப் பணவீக்கம் ஏற்பட்டது. இத்தகைய நெருக்கடியின் காரணமாகத்தான் சீக்கிரமாகப் பணச் சீர்திருத்தம் செய்ய வழி இல்லாதிருந்தது.

**பாங்குகள்**

அரசாங்க பாங்கு 1921ஆம் ஆண்டிலேயே வேலை செய்ய ஆரம்பித்தது. தொழில், விவசாயம், வாணிபம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதும், நாட்டில் பணமுறை சிக்கலின்றி இயங்குகிறதா

என்று கண்காணிப்பதும் அதன் முக்கிய வேலை. ஆரம்பத்தில் 2 டிரில்லியன் காகித ரூபிள் (1 trillion = 1000 billion) முதலுடன் இப் பாங்கு தொடங்கப்பட்டது. 1922ஆம் ஆண்டு இறுதிக்குள் அம் முதல் 130·75 டிரில்லியனுகை உயர்த்தப்பட்டது. அரசாங்கம், கூட்டுறவு ஸ்தாபனங்கள், தனி நபர்கள் முதலானவர்களுக்குச் சொந்தமான தொழில்களுக்கும், விவசாயத்துக்கும், வாணிபத்துக்கும் வேண்டிய குறுகிய கால, நீண்ட கால‌க் கடனுதவி செய்வதே அரசாங்க பாங்கின் முக்கியக் கடமையாக இருந்தது. 1922ஆம் ஆண்டு அக்டோபர்வரை காகிதச் செலாவணி (Paper currency) வெளியிடும் உரிமையை அரசாங்கமே பெற்றிருந்தது. பின்னர் இவ் உரிமை அரசாங்கப் பாங்குக்கு அளிக்கப்பட்டது. அத்துடன் தங்கமும் அயல்நாட்டுச் செலாவணியும் (Foreign exchange) அரசாங்க பாங்கின் வசமே இருந்தன.

ஆரம்பத்தில் பொருளாதாரத்தின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்க பாங்கு ஒன்றே போதும் என்று எண்ணினர். ஆனால், நாளடைவில் பொருளாதாரத்தின் பல பகுதிகளுக்கும் பயனளிக்கும் வகையில் பல தேர்ச்சிபெற்ற பாங்குகள் தோன்றலாயின. சான்ருக, ஏழை நடுத்தர விவசாயிகளுக்கும், கைத்தொழிலாளருக்கும், கடனுதவி செய்வதற்காகக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (Cooperative Credit Association), விவசாயக் கடன் சங்கங்கள் (Agricultural Credit Societies) முதலியன நிறுவப்பட்டன. இவற்றை மேற்பார்வை செய்யும்பொருட்டு 1924-ல் மத்திய விவசாய பாங்கு (Central Agricultural Bank) ஒன்றும் அமைக்கப்பட்டது. வாங்குவோரின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுவதற்காக வாங்குவோரின் கூட்டுறவு பாங்கு (Consumers' Co-operative Bank) ஒன்று உருவாக்கப்பட்டது. இவை குறுகிய காலக் கடனும் கொடுத்து உதவ முன்வந்தன. அத்துடன் டிரஸ்டுகளுக்கு வேண்டிய நீண்ட காலக் கடன்களைக் கொடுக்க ஒரு வியாபாரத் தொழில் பாங்கும் (Commercial Industrial Bank or Prombank), நாட்டை மின்சார மயமாக்குவதற்கு உதவியாக ஒரு மின்சார பாங்கும் (Electro bank), அயல்நாட்டு வாணிபத்துக்கு உதவ ரஷ்ய வியாபார பாங்கும் (Russian Commerial Bank), நகரங்களில் பல சேமிப்பு பாங்குகளும் (Savings Banks) நிறுவப்பட்டன. இவற்றுள் ரஷ்ய வியாபார பாங்கின் மூலதனத்தில் வெளிநாட்டவரும் பங்குகொண்டிருந்தனர். எனவே, பணச் சீர்திருத்தத்துக்கு முன்னர் (1923 ஆம் ஆண்டு இறுதிக்குள்) 150 முக்கியமான பாங்குகளும், 750 கிளை பாங்குகளும், 2500 சேமிப்புப் பாங்குகளும் ரஷ்யாவில் இயங்கிவந்தன.

பணவீக்கத்தின் காரணமாக விலைவாசிகள் 'விர்விர்' என்று தாவித்தாவி ஏறிக்கொண்டே இருந்தன. விலைகாட்டி (Price index) போருக்கு முன்னிருந்ததைவிட (1913) 21 மில்லியன் மடங்கு அதிகரித்தது. இந்தப்போக்கைத் தடுத்து நிறுத்தவேண்டி அரசாங்கம் இரு முறை பணத்தின் மதிப்பைக் குறைக்க (devalue) முயன்றது. அதன்படி 1922-ல் ஒரு புதிய ரூபிள் 10,000 பழைய ரூபிள்களுக்குச் சமம் என அறிவிக்கப்பட்டது; 1923-ல் ரூபிளின் மதிப்பு மேலும் மாறியது. இப் புதிய ரூபிள், 1922-ல் வெளியிடப்பட்ட 100 ரூபிள்களுக்குச் சமமாக்கப்பட்டது. எனவே, 1923-ல் அமுலிலிருந்த ஒரு ரூபிள் ஒரு மில்லியன் பழைய ரூபிள்களுக்குச் சமம் என்றுயிற்று. 1923-ல் வெளியான பாங்கு நோட்டுகள் செர்வானெட்ஸ் (Chervanetz) என்று அழைக்கப்பட்டன. இந் நோட்டுகளுக்குத் தக்க காப்புநிதி இருந்தது. இத்தகைய நடவடிக்கைகள் மேற்பூச்சாக அமைந்த போதிலும் பின்னுல் ஏற்பட்ட பணச் சீர்திருத்தங்களுக்கு அடிகோலின. ஆயினும், உடனடியாகப் பணத்தின் மதிப்பை நிலவரப்படுத்தவில்லை. இந்தப் பிரச்சினையை 13ஆம் காங்கிரஸ் பரிசீலனை செய்தது. அதன் பயனுகவே 1924-ல் பணச் சீர்திருத்தத்துக்கான 5 சட்டங்கள் இயற்றப்பட்டன.

## 1924-க்குப் பின் பணச் சீர்திருத்தம்

அவற்றின்படி ஒரு ரூபிள், 3 ரூபிள், 5 ரூபிள் மதிப்புள்ள தங்க நாணயங்களைக் கருவூலம் (Treasury) வெளியிட்டது. இவை செர்வானெட்ஸ் (Chervanetz) உடன் ஒருங்கே பயன்படுத்தப்பட்டன. பழைய நோட்டுகளை அச்சிடுவதை நிறுத்திக் கொஞ்சங் கொஞ்சமாக அவற்றின் புழக்கத்தைக் குறைத்தனர். ரூபிளின் உட்பிரிவுகளான 1, 2, 3, 5, 10, 15, 20 காப்பெக்ஸ் (Copecks) நாணயங்கள் வெள்ளியிலும், செம்பிலும் வெளியிடப்பட்டன. அத்துடன் அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்ட அச்சகத்தின் உதவியை நாடும் பழக்கம் கைவிடப்பட்டது. எனவே, பணத்தின் மதிப்பு நிலைபெறலாயிற்று.

## வரவு-செலவுச் சீரமைப்பு

பணச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து வரவு-செலவும் சீரமைக்கப்பட்டது. பொருள்வடிவில் வரி வசூலிக்கும் வழக்கம் 1924-ல் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக 1924-27 வரை வளர்வீத விவசாய வருமானவரி (Progressive Agricultural Income tax) விதிக்கப்பட்டது. வருமான—சொத்துவரிக்குப் பதிலாக வளர்வீத வருமான வரி (Progressive Income tax) விதிக்கப்பட்டது. இதன் மூலம் வெவ்வேறு தொழில்களின்மீதும் வெவ்வேறு விதமாக வரி விதிக்க முடிந்தது. 1926-லிருந்து தனி முதலாளிகளின்மீது

அமிதலாப வரி (excess profit tax) விதிக்கப்பட்டது. ஆய வரி (excise tax) யும் பணம் படைத்தவர்களைப் பாதிக்கக்கூடிய முறையிலேயே அமைந்தது. அத்துடன் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன் அதிகரித்தது. அரசாங்கத் தொழிலின் மூலம் கிடைத்த வருவாயும் அதிகரித்தது. எனவே, அரசாங்கத்தின் மொத்த வருவாய் பெருகியது.

செலவினங்களில் பல ஒழுங்குமுறைகளும் சிக்கனங்களும் அமுலாயின. ஒவ்வொரு குடியரசும், மாவட்டமும் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யக்கூடாது என்ற கொள்கை நிலைநாட்டப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கான செலவில் பெரும்பகுதியை அரசாங்க பாங்கு மேற்கொண்டது. அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில்களில் சிக்கனம் ஏற்படுத்துவதற்கான பல இயக்கங்கள் நடைபெற்றன. பலவீனமான ஆலைகள் மூடப்பட்டன. இத்தகைய சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக வரவுக்கு மிஞ்சிய செலவு என்ற நிலைமாறி, செலவு போக, வரவில் மிச்சம் ஏற்படலாயிற்று. அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை இதைத் தெளிவு படுத்தும்.

சோவியத் பொருளாதாரம் சீரமைக்கப்பட்ட காலத்தில் அரசாங்கத்தின் வருவாய் நாட்டுவருவாயில் கிட்டத்தட்ட நாலிலொரு பங்காக இருந்தது. இது போருக்கு முன்னிருந்ததைவிட 5 சதவிகிதமே அதிகமானது. ஆனால், பெரிய அளவில் தொழில் வளர்ச்சி தொடங்கியபோது நாட்டுவருவாயில் கணிசமான பகுதியை அரசாங்கம் பொருளாதார வளர்ச்சிக்கென்று ஈடுபடுத்த முன்வந்தது. 1929-30-ல் இருந்த நிலை பின்னால் வரப்போகும் மாறுதல்களுக்கு முன்னோடியாக விளங்கியது என்னலாம். பக்கம் 110-ல் உள்ள அட்டவணையிலிருந்து இது நன்கு விளங்கும்.

### பாங்குச் சீர்திருத்தம்

பாங்கு முறையிலும் ஒரு சில முன்னேற்றங்கள் தோன்றின. நாளடைவில் அரசாங்க பாங்கு குறுகிய காலக் கடனிலேயே கவனம் செலுத்தியது. நீண்ட காலக் கடன்களைத் தொழில் பாங்கு போன்றவை மேற்கொண்டன. பாங்குமுறை செவ்வனே வேலை செய்கின்றதா என்று கண்காணிக்கப் பாங்குச் சபை (Committee of Banks) ஒன்று நிறுவப்பட்டது. இதில் நிதி அமைச்சவை, தலைமைப் பொருளாதாரக் குழு, வாணிப அமைச்சரவை, காஸ்பிளான் (Gosplan) முதலியவற்றிற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது இச்சபை வகுக்கும் திட்டங்களைக் காஸ்பிளானுக்கும் அதன் தொழிலாளர் பாதுகாப்புக் குழுவுக்கும் அனுப்பி அவற்றின் அங்கீகாரத்தைப் பெறுவது அவசியமாயிற்று.

## அட்டவணை 8

### அரசாங்கத்தின் வரவு செலவு

செலவு (மில்லியன் ரூபிள்கள்)

| | விபரம் | 1924—25 | 1925—26 | 1926—27 | 1927—28 | 1928—29 | 1929—30 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேசியப் பொருளாதாரச் | 1629 | 2245 | 3067 | 3796 | 4784 | 7681 |
| | செலவுகள் ... | 151 | 220 | 448 | 650 | 972 | 2045 |
| | அதில் அ. தொழில்கள் ... | 52 | 68 | 103 | 136 | 179 | 229 |
| | ஆ. மின்சாரம் ... | 171 | 210 | 204 | 279 | 548 | 1099 |
| | இ. விவசாயம் ... | 1074 | 1567 | 2045 | 2335 | 2669 | 3421 |
| | ஈ. போக்குவரத்து ... | | | | | | |
| | உ. உணவும் | 1 | 29 | 91 | 177 | 258 | 689 |
| | வாணிபமும் ... | 199 | 276 | 356 | 426 | 482 | 764 |
| 2. | சமூக, கலாசாரசேவை ... | | | | | | |
| 3. | அரசாங்க நிர்வாகமும் பாது | 686 | 900 | 1002 | 1109 | 1207 | 1397 |
| | காப்பும் ... | 66 | 118 | 101 | 300 | 317 | 406 |
| 4. | அரசாங்கக் கடன் ... | | | | | | |
| 5. | குடியரசுகளுக்கும் ஸ்தல | | | | | | |
| | ஆட்சிகளுக்கும் உதவி ... | 325 | 441 | 615 | 669 | 1299 | 1744 |
| 6. | இதர செலவுகள் ... | 63 | 72 | 192 | 164 | 151 | 313 |
| | மொத்தச் செலவு ... | 2969 | 4051 | 5335 | 6465 | 8241 | 12335 |
| | வரவில் செலவு போக மிச்சம் | 32·7 | 15·3 | 56·0 | 205·4 | 187·8 | 651·5 |

வரவு (மில்லியன் ரூபிள்கள்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | வரி மூலம் வருவாய் | ... | 1328 | 1791 | 2491 | 2962 | 4004 | 6084 |
| | அதில் அ. வாணிபமும் கைத்தொழிலும் | | 157 | 229 | 348 | 373 | 1056 | 1941 |
| | ஆ. வருமானவரி | ... | 94 | 151 | 192 | 231 | 285 | 615 |
| | இ. விவசாய வரி | ... | 326 | 252 | 358 | 354 | 449 | 406 |
| | ஈ. ஆயம் | ... | 508 | 842 | 1210 | 1491 | 1803 | 2643 |
| 2. | வரியற்ற வருவாய் | ... | 1476 | 2096 | 2559 | 2922 | 3461 | 5402 |
| | அ. போக்குவரத்து | ... | 992 | 1427 | 1712 | 1948 | 2336 | 3100 |
| | ஆ. தொடர்பு வசதிகள் | ... | 9[illegible] | 137 | 159 | 174 | 202 | 300 |
| | இ. அரசாங்கத் தொழில்களில் இலாபத்தில் பங்கு | ... | 123 | 172 | 308 | 382 | 418 | 1004 |
| | ஈ. அரசாங்கச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருவாய் | ... | 126 | 257 | 287 | 326 | 407 | 594 |
| 3. | அரசாங்கக் கடன் | ... | 130 | 146 | 319 | 725 | 125 | 1278 |
| 4. | இதர வருவாய் | ... | 68 | 33 | 22 | 60 | 238 | 222 |
| | மொத்த வருவாய் | ... | 3002 | 4066 | 5391 | 6670 | 8428 | 12986 |

Source: Baykov (A), opt. cit. p. 95.

அட்டவணை 9

**நாட்டு வருவாயும் அரசாங்க வருவாயும்**

| ஆண்டு | நாட்டு வருவாய் மில்லியன் ரூபிள் | அரசாங்க வருவாய் மில்லியன் ரூபிள் | நாட்டு வருவாயில் அரசாங்க வருவாயின் பங்கு (சதவிகிதம்) |
|---|---|---|---|
| 1913 (ரஷ்ய சாம்ராஜ்யம்) | 16400 | 3434 | 20·9 |
| 1925—26 | 21230 | 4066 | 19·1 |
| 1926—27 | 22937 | 5391 | 23·5 |
| 1927—28 | 25342 | 6670 | 26·3 |
| 1928—29 | 30009 | 8428 | 28·1 |
| 1929—30 | 33962 | 12986 | 38·2 |

Source: Baykav (A), opt. cit., p. 98

அரசாங்க பாங்கு கடன் முறையின் மையமாக மாறியது. இதர பாங்குகளின் நிருவாகத்திலும், தணிக்கையிலும் தலையிடும் உரிமை அதற்கு அளிக்கப்பட்டது. பாங்குகளிடமிருந்த காப்பு நிதிகளும் இதர சேமிப்புகளும் அரசாங்க பாங்கிடம் ஒப்படைக்கப் பட்டன. 1928-ல் மின்சார பாங்கு தொழில் பாங்குடன் இரண்டறக் கலந்தது. தொழில் பாங்கும் விவசாயக் கூட்டுறவு பாங்குகளும் குறுகிய காலக் கடன் விவகாரங்களை அரசாங்கப் பாங்கிடம் ஒப்படைத்துவிட்டு நீண்டகாலக் கடனில் கவனம் செலுத்தலாயின. ஒவ்வோர் ஆலையும், சிண்டிகேட்டும் எந்தெந்தப் பாங்குடன் உறவு கொள்ளவேண்டும் என்பதை அரசாங்கப் பாங்கு நிர்ணயம் செய்தது. இத்தகைய மாறுதல்களால் பாங்கு நிருவாகம் சிக்கனமாக நடைபெற வழிபிறந்தது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியால் ஏற்படும் பொறுப்புகளை ஏற்றுநடத்தும் தகுதியும் திறனும் அவற்றுக்குக் கிடைத்தன.

**வெற்றியா ? தோல்வியா ?**

புதுப் பொருளாதாரக் கொள்கை எந்த அளவுக்கு வெற்றி பெற்றது என்று காண்போம். சிதைந்துபோன பொருளா தாரத்தைச் சீரமைப்பதும், பொருளாதாரத்தின் அச்சாணிகளைக்

கையில்கொண்டு சமதர்ம சக்திகளை வளர்ப்பதுமே புதுப் பொருளாதாரக் கொள்கையின் நோக்கம். இவற்றுள் முன்னையதில் முழுவெற்றி கிட்டியது என்னலாம். விவசாயமும் தொழிலும் சீரமைக்கப்பட்டன. நாட்டு வருவாய் பெருகியது. வாணிபம் புத்துயிர்பெற்றது. நிதி அமைப்பு புதுப்பிக்கப்பட்டது. ஆலை நிருவாகத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலைநாட்டப்பட்டன. பாங்குகள் புதிய பொறுப்புகளைத் தாங்கத் தயாராயின. எனவே, பெரிய அளவில் தொழில்களைக் கட்டி வளர்ப்பதற்கான அடிப்படை அமைக்கப்பட்டது.

சமதர்ம சக்திகளும் ஓரளவு பலம் பெற்றன. பாங்குகளிலும் அயல்நாட்டு வாணிபத்திலும் அரசாங்கத்துக்கிருந்த பிடி தளரவில்லை. தொழிலிலும் உள்நாட்டு வாணிபத்திலும் உயிர்ப்பிக்கப்பட்ட முதலாளித்துவம் நாளடைவில் புடமிடப்பட்டது. அயல்நாட்டு மூலதனம் வேரூன்ற இடங்கொடுக்கவில்லை. இவற்றின் காரணமாகச் சமதர்ம சக்திகள் பலமுற்றன. ஆனால், விவசாயப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை: உற்பத்தி சீரமைக்கப்பட்டது. ஆனல், போதிய உபரிப் பொருள் கிடைக்கவில்லை. குலாக்குகளின் பலம் அதிகரித்தது. சில நடுத்தர விவசாயிகள் அவர்களுக்குப் பக்க பலமாக இருந்தனர். அரசாங்கத்தின் தாக்குதல்களுக்குக் குலாக்குகள் அடிபணிவதாக இலலை. அதன்காரணமாக விவசாயத்தில் முதலாளித்துவம் பலம் பெற்று விளங்கியது.

அத்துடன் விவசாயம் இயந்திரமயமாகவில்லை; கூட்டுறவும் கூட்டுப்பண்ணைகளும் வளரவில்லை; தொழில் வளர்ச்சி திருப்திகரமாக இல்லை; கனரகத் தொழில்கள் சில பின்தங்கிப் போயிருந்தன. பொருள்களின் தரம் குன்றியது. உற்பத்திச் செலவுகள் எதிர் பார்த்ததுபோல் குறையவில்லை. ஆலை நிருவாகத்தில் ஒருமைப்பாடு ஏற்படவில்லை. இக் குறைகளைப்போக்கி, துரிதமான தொழில் வளர்ச்சியையும், சமுகமான விவசாய-தொழில் உறவையும் ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் உடனடி வேலையாக அமைந்தது.

## மேற்கொண்டு படிக்க

Baygov (A), opt. cit., Section-II.

Dobb, (M), opt. cit., Chapters 6, 7 & 9.

Podkolzin (A), 'A Short Economic History of the USSR,' Ch. V.

Schwartz, (H), opt. cit., Ch. IV.

Stalin (J), Problems of Leninism.

# 7. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்

1. தொழில்மயமாக்குவதேன்? பிரச்சினைகள் — விவாதம் — இடதுசாரிக் கருத்துகள் — கோட்பாடுகள் — குறைபாடுகள் — வலதுசாரிக் கருத்துகள் — 15ஆம் காங்கிரஸ்.

2. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம். அதிகபட்சத் திட்டம் — கனரகத் தொழில்—நுகர்வுப் பொருள்கள்—முதலிரண்டு ஆண்டுகள்—சிக்கல்கள் —தொழில் தொகுப்புகள் — ஆலை நிருவாகத்தில் ஒருமைப்பாடு — குறைபாடுகள் — கூட்டுப்பண்ணை இயக்கம் — குலாக்குகளின் எதிர்த் தாக்குதல்—அரசாங்கம் பின்வாங்கல்—கவர்ச்சி—அரசாங்கப் பண்ணைகள் — அயல் நாட்டு வாணிபம் — உள்நாட்டு வாணிபம் — உபரிப் பொருள் சேகரிப்பு — விநியோகம்.

புதுப் பொருளாதாரக் கொள்கையின்போது முதலாளித்துவமும் சமதர்மமும் ஒருமித்து வாழ்ந்து வந்தன. தொழிலிலும் வாணிபத்திலும் சமதர்ம சக்திகள் வளரலாயின. ஆனால், அதே சமயத்தில் நிலத்தில் பணக்கார விவசாயிகள் பலம் பெற்று விளங்கினர். கைத்தொழில்களிலும், சிறு தொழில்களிலும் முதலாளித்துவ மனப்பான்மை மேலோங்கி நின்றது. இத்தகைய கலப்புப் பொருளாதாரம் இடைப்பட்ட காலத்தில் இனறியமையாததாயிற்று. ஆனால், சமதர்ம சக்திகளை வளர்ப்பதன்மூலம் கலப்புப் பொருளாதாரத்திலிருந்து சமதர்மத்தை நிர்மாணிக்கலாம் என்பது புதுப் பொருளாதாரக் கொள்கையை வடித்தெடுத்த லெனினின் நம்பிக்கை.

## தொழில் மயமாக்குவதேன்?

‘சமதர்ம சக்திகள் வளர வேண்டுமாயின் பொருளாதார அடிப்படை மாற வேண்டும். அதன் பொருட்டு நவீன இயந்திரங்களின் துணை கொண்டு நாட்டைத் தொழில்மயமாக்க வேண்டும்; நிலத்தில் கூட்டுறவு முறைகளைப் புகுத்தி விவசாயத்தை இயந்திர மயமாக்க வேண்டும். சமதர்மத்தின் அடிப்படை தொழில். தொழில்கள் வளராவிடின் சமதர்ம சக்திகள் நசித்து முதலாளித்துவம் மேலோங்க ஏதுவாகும். எனவே, நாடு தொழில் மயமாக்கப்பட வேண்டும்’ என்பது லெனினின் கருத்து. ஆனால், டிராட்ஸ்கி போன்றவர்கள் ரஷ்யாவில் மட்டும் சமதர்மத்தை நிலைநாட்டுவது என்ற கருத்தை ஆதரிக்கவில்லை. ‘தொழில் மயமானாலும்கூட

தனியொரு நாட்டில் சமதர்மம் நிலைக்காது; உலகப் புரட்சி என்பது அவர்களின் துணிவு.

**பிரச்சினைகள்**

முதலைத் திரட்ட வேண்டும், தொழில்மயமாக்கவேண்டும்; சமதர்மத் திட்டுகளைப் பலப்படுத்த வேண்டும்; மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்ற குறிக்கோள்களை ஏற்றுக்கொள்ளுவது எளிதாக இருந்தது. ஆனால், இக் குறிக் கோள்களை அடைவது எப்படி என்ற கேள்விக்கு விடை காண்பது அவ்வளவு எளிதாக இல்லை.

தொழில்களுக்கு வேண்டிய சாதனங்களைப் பெறுவதெப்படி? நகரங்களில் பல தொழிலாளிகள் வேலை இல்லாதிருந்தனர். கிராமங்களிலும் தேவைக்கதிகமான மக்கள் நிலத்தில் குவிந்து கிடந்தனர். இவர்களைப் பயன்படுத்தித் தொழில்களை நிர்மாணிக் கலாம் என்றால் அவர்களுக்கு உணவளிக்க வேண்டாமா? ஆலைகளின் உற்பபத்திக்கு அடிப்படையான கச்சாப்பொருள்கள், எரிபொருள், சக்தி முதலியன எங்கிருந்து வரும்? இயந்திரங்களை நிறுவுவதானால் அவற்றை உற்பத்தி செயயவேண்டுமா?—இறக்குமதி செய்யலாமா? உற்பத்தி செய்வதானால் அதற்கு வேண்டிய கனரகத் தொழில்களை அமைப்பது அவசியமல்லவா? கனரகத் தொழில்களை அமைப்பதற்கு வேண்டிய இரும்பு, எஃகு முதலியன எங்கிருந்து வரும்? உற்பத்தி குன்றிப்போயிருந்த நிலையில் போதிய இரும்பு எஃகும் கிடைக்குமா? பொருள்களைக்கொண்டு செல்லுவதற்கு வேண்டிய போக்குவரத்துச் சாதனங்களுண்டா? இப்படிக் கனரகத் தொழில்களில் கவனம் செலுத்தினால் நுகர்வுப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்குமா? இயந்திரங்களை இறக்குமதி செய்வதானால் அதற்கு வேண்டிய அயல்நாட்டுச் செலாவணியைப் பெறுவ தெப்படி? ஏற்றுமதியைப் பெருக்கலாமா? எந்த அளவுக்குத் தானியங்களை ஏற்றுமதி செய்ய முடியும்? நகரங்களுக்கும் ஏற்று மதிக்கும் போதுமான பொருள்களை விவசாயிகளிடமிருந்து பெறுவதெப்படி? குலாக்குகளை எவ்வளவுதூரம் வளர விடுவது? அயல்நாட்டு மூலதனம் கிடைக்குமா? கிடைத்தாலும் அதை அனுமதிக்கலாமா?—என்ற பல பிரச்சினைகள் ஒன்றையொன்று பின்னிக் கிடந்தன. இவற்றிற்கு விடைகண்டால் தொழில் வளர்ச்சி எந்த வேகத்தில் நடைபெறும் என்று ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

காலம் ஒரு கடினமான பிரச்சினை. கனரகத் தொழில்களை நிறுவ வேண்டுமாயின் காலம் பிடிக்கும். ஆனால், எதிர்காலம் வளம் பொருந்தியதாக இருக்கும் எனினும், பெரிய அளவில்

அவற்றைக் கட்டி வளர்ப்பதானுல் பொருளுற்பத்தியில் பெரும் பகுதியை அவைகளுக்கு ஒதுக்குவது அவசியம். எதை முக்கியமாகக் கருதுவது? இன்றைய வாழ்வையா? எதிர்கால வளத்தையா? எதிர் காலக் கண்ணேட்டம்தான் முக்கியம் என்றுல் எந்த அளவுக்கு மக்களின் வயிற்றைக் கட்டுவது? எவ்வளவுகாலம் அவர்கள் பொறு மையைச் சோதிப்பது என்ற கேள்விகளுக்குப் பதிலளிப்பது எளிதான காரியமல்ல. எனவேதான் தொழில் மயமாக்கும் பிரச்சினை விவாதிக்கப்பட்டபோது முரண்பட்ட பல கருத்துகள் மோதி நின்றன. பொதுவாக டிராட்ஸ்கியும் அவரை ஆதரித்து வந்த இடதுசாரிகளும் தொழில்களே விவசாயத்தின்மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்று வாதாடினர். ஆனுல், புகாரின் (Bukharin) போன்ற வலதுசாரிகள் 'தொழிலுக்கு அடிப்படை விவசாயம்; எனவே இரண்டும் சுமுகமான உறவுகொள்ள வேண்டியது அவசியம்' என்று வலியுறுத்தினர். 1923-ல் ஆரம்பித்த இந்த விவாதம் 1958-ல் நடந்த 15ஆம் காங்கிரஸ்வரை நீடித்தது.

1923-ல் சோவியத் பொருளாதாரம் மிகவும் நெருக்கடி யானதொரு கட்டத்தை அடைந்தது என்று கண்டோம். விலைவாசி களில் ஏற்பட்ட கத்தரிப் போக்கால் விவசாயிகள் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாயினர். விவசாயி-தொழிலாளி கூட்டணி உடைந்து நொறுங்கும் தருவாயில் இருந்தது. இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்தது. விவசாயிகளுக்கும், விவசாயப் பொருள்களை வாங்கி விற்றவர் களுக்கும் பல சலுகைகளை வழங்கியது. அதேசமயத்தில் டிரஸ்டு களும் சிண்டிகேட்டுகளும் அனுபவித்துவந்த சர்வாதீனத்தை மட்டுப்படுத்தி ஆலைப்பொருள்களின் விலைகளைக் குறைக்க விரும்பி யது. விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்து ஆலைப்பொருள்களை இறக்குமதி செய்தது. ஆனுல், இத்தகைய முயற்சிகளில் பலவற்றை இடதுசாரிகள் பலமாக எதிர்த்தனர்.

**விவாதம்—இடதுசாரிக் கருத்துகள்**

1923 ஆம் ஆண்டு அக்டோபரில் இடதுசாரித் தலைவர்க ளெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டறிக்கை விடுத்தனர். அதற்கு நாற்பத்து அறுவரின் பிரகடனம் (Declaration of the Forty Six) என்று பெயர். அதையொட்டி (டிசம்பரில்) ஆசின்ஸ்கி (Osinsky) என்பவர் 'பொருளாதாரக் கொள்கையின் உடனடி வேலைகள்' (The Immediate Tasks of Economic Policy) என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டார். சமதர்மத்தின் அடித்தளமாகிய தொழில்களை மட்டந்தட்டி முதலாளித்துவத்தின் கோட்டைகளாக விளங்கிய குலாக்குகளுக்கும் தனிவணிகருக்கும் தாராளம் காட்டு

வதை இடதுசாரிகள் கொஞ்சமும் வரவேற்கவில்லை. எனவேதான், 'ஆலைப் பொருள்களின் விலையைக் குறைப்பது கூடாது. அரசாங் கத்துக்குச் சொந்தமான தொழில்களில் எப்போதும் அதிகபட்ச இலாபம் காண்பதிலேயே கண்ணுயிருக்க வேண்டும்' என்று அவர்கள் வற்புறுத்தி வந்தனர். மேலும், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின்றிப் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் காண்பதரிது என்பது அவர்கள் கருத்து.

அவசியமானல் விலைவாசிகளைக் குறைக்கும் நோக்குடன் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வருவிக்கலாம். குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதற்கருவிப் பொருள்களையும் (Capital goods) போதுமான அளவில் இறக்குமதி செய்யவேண்டும். அயல்நாட்டு வாணிபத்தில் மிச்சம் காணவிழைவது தவறு. அதிகமான இறக்குமதியின் காரணமாக அயல்நாட்டு வாணிபத்தில் துண்டு விழுந்தாலும் பரவாயில்லை. அவற்றை ஈடுசெய்ய அயல் நாட்டவரிடம் கடன் வாங்கலாம் என்பதும் இடதுசாரிகளின் கருத்து. இதே கருத்துகளை டிராட்ஸ்கியும் பலமுறை பிராவ்தா (Pravda) வில் விளக்கி வந்தார். பின்னர் 13 ஆம் காங்கிரஸின் போது (1924) டிராட்ஸ்கியும் அவருக்குப் பக்கபலமாக நின்ற பொருளாதார நிபுணர் பிரியோபிரஷன்ஸ்கியும் (Preobrazhensky) இடதுசாரிக் கருத்துகளைத் தெள்ளத் தெளிய எடுத்துரைத்தனர்.

### கோட்பாடுகள்

இடதுசாரிகள் குருட்டுத்தனமாக வறட்டு வாதம் செய்தார்கள் என்று சொல்லிவிட முடியாது. மார்க்ஸீயக் கோட்பாடுகளை ஒட்டியே அவர்களது கருத்துகளும் எழுந்தன. பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை முதல் திரட்சி (Capital accumulation). முதலாளித் துவ சமுதாயத்தில் முதன் முதலாக (ஆதியில்) முதலாளிகளின் கையில் இம் முதல் திரண்டது. எனவே, மார்க்ஸ் இதை ஆதித் திரட்சி (Primitive Accumulation) என்று அழைத்தார். அதைப் போன்றே சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்லும் பொருளா தாரத்தில் அத்தகைய முதல் சமதர்ம சக்திகளின் கையில் திரளுதல் அவசியம் என்பது இடதுசாரிகளின் கருத்து. இதை பிரியோபிரஷன்ஸ்கி (Preobrezhensky) ஆதி சமதர்மத் திரட்சி (Primitive Socialist Accumulation) என்று வழங்கினர்.

இம் முதலை எப்படித் திரட்டுவது என்ற கேள்விக்கு அவர்கள் தெளிவான விடை அளித்தனர். 'அயல் நாட்டு உதவியை நாடாமல் உள்நாட்டிலேயே முதலைத் திரட்டுவதாயின், அதற்கு இரண்டே வழிகளுண்டு. ஒன்று, ஆலைகளின் ஆக்கச்சக்தியைப் பெருக்குவது.

ஆனல் அதற்கேற்பக் கூலியையோ சம்பளத்தையோ உயரவிடாமல் அதன்பயனுகக் கிடைக்கும் உபரி உற்பத்தியைக்கொண்டு தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது. மற்றது, தொழிலைக் கொண்டு, பொருளாதாரத்தின் இதர பகுதிகளைச் சுரண்டுவது. தொழில்கள் மிகவும் வளராத நிலையில் இருந்த இரண்டாவது முறையைத்தான் இடதுசாரிகள் கையாள விரும்பினர். அதன்பொருட்டு விவசாயத் தின்மீதும், இதர சிறு தொழில்களின்மீதும் தொழில்களின் பொருளாதாரச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டவேண்டும். ஏகாபதி பத்தியங்கள் தங்கள் காலனிகளைச் சுரண்டுவதுபோல் அரசாங்கத் தொழில்கள் விவசாயத்தைச் சுரண்ட வேண்டும். கடுமையான வரிச்சுமைகளை நேரடியாக விவசாயிகளின்மீது திணிப்பதைக் காட்டிலும் பலமான ஆயுதம் வாணிபமாற்று விகிதம். தொழில் களில் சர்வாதீனத்தைத் ஏற்படுத்துவதன்மூலம் வாணிபமாற்று விகிதத்தைத் தொழில்களுக்குச் சாதகமாகத் திருப்பமுடியும். அப்படித் திருப்புவதால் நாளடைவில் விவசாயத்தைச் சுரண்டித் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனத்தைச் திரட்டமுடியும் என்பது பிரியோபிரஷென்ஸ்கியின் கருத்து. அதன் அடிப்படையில் தான் இடதுசாரிகள் தொழில்களைப் பாதிக்கக்கூடிய எல்லாக் கொள்கைகளையும் பலமாக எதிர்க்கலாயினர்.

### குறைபாடுகள்

இடதுசாரிக் கருத்துகள் கோட்பாட்டு ரீதியில் எவ்வளவுதான் ஆணித்தரமாக இருந்தபோதிலும் அன்றிருந்த சூழ்நிலைக்கு ஏற்றவைகளாக இருக்கவில்லை என்பது எளிதில் விளங்கும். பொருளாதார உற்பத்தி சீர்குலைந்து போயிருந்த நிலையில், சோவியத் அரசாங்கம் உயிர் வாழ்வதற்கு விவசாயிகளின் ஆதரவு இன்றியமையாததாக இருந்தது. இத்தகைய நெருக்கடியில் மேலும் விவசாயத்தைச் சுரண்டுவது சோவியத் ஆட்சிக்கே உலை வைப்பது போலாகும்.

இதுடசாரிகளின் பொருளாதாரக் கருத்துகளும் அடிப் படையில் பலவீனமாக இருந்தன. சுரண்டலின்மூலம் விவசாயி களைக் கசக்கிப் பிழிவதாயின் அவர்களிடம் ஆலைப்பொருள்களை விற்பது எங்ஙனம்? போர்க்காலப் பொது உடைமைக் கொள்கை யின்போது விவசாயி பலவிதமான பலவந்தங்களுக்கு உட்படுத்தப் பட்டான். அதன்பயனுக உற்பத்தி குறைந்தது; விற்பனைக்குரிய உபரிப் பொருள் போதிய அளவில் கிடைக்கவில்லை. இடதுசாரிக் கொள்கை இந் நிலைக்குத்தான் மறுபடியும் இழுத்துச் செல்லும் என்று அஞ்ச இடமிருந்தது. அதுமட்டுமின்றி, தொழில்களின் ஆக்கசக்தியை இடதுசாரிகள் மிகவும் குறைத்து மதிப்பிட்டனர்

என்னலாம். மேலும் விவசாயத்தின் அடிப்படையை மாற்றி, கூட்டுப்பண்ணைகளை அமைக்கமுடியும் என்று அவர்கள் நம்ப வில்லை. எனவேதான், இத்துணை ஒருமுகமான கொள்கைகளுக் காகப் போராடினர் போலும்!

**வலதுசாரிக் கருத்துகள்**

வலதுசாரிகளான புகாரின் (Bukharin), ரைகாவ் (Rykov) போன்றவர்கள் தொழில்களின் சர்வாதிகாரத்துக்கு இடங்கொடுப் பதாக இல்லை. வேகமான தொழில்வளர்ச்சிக்காக விவசாயத்தின் நலன்களைப் பலிகொடுக்க அவர்கள் தயாராக இல்லை. அதற்கு மாறாக, விவசாயிகளைத் திருப்திசெய்து அவர்களின் ஒத்துழைப் பைப் பெறுவதன் அவசியத்தை வலதுசாரிகள் வற்புறுத்தி வந்தனர். தொழில்களின் சர்வாதீனப் போக்கால் விவசாயிகள் ஒட்டாண்டிகள் ஆவார்கள். விவசாயம் நசிப்பதுடன் அவர்களது வாங்கும் சக்தியும் குன்றும். அதன்பயனாக ஆலைப்பொருள்களை மேன்மேலும் விற்பது இயலாது. எனவே, விலையைக் குறைத்துப் பரிவர்த்தனையைப் பெருக்குவதே சிறந்தது. பொருள் பரிவர்த்தனை பெருகினால் தொழில்களுக்குக் கிடைக்கும் மொத்த இலாபமும் பெருகமுடியும் என்பது அவர்களது கருத்து. ‘விலை குறைய வேண்டுமாயின் ஆக்கசக்தி பெருகவேண்டும்; ஆக்கச்செலவுகள் சுருங்கவேண்டும். ஆதலின், அரசாங்கம் அம் முனையில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இத்தைய கொள்கைகளைக் கடைப் பிடிப்பதால் உள்நாட்டில் போதிய முதல் திரள வழியில்லை என்றால், அயல்நாட்டுமூலதனத்துக்குச் சலுகை காட்டி வரவேற்கவேண்டும். அதுவும் போதவில்லையாயின் ‘தொழில்வளர்ச்சியின் வேகத்தைக் குறைப்பதே நல்லது’ என்பது வலதுசாரிகளின் வாதம்.

13ஆம் காங்கிரஸில் இத்தகைய கருத்துகளைப் பெரும்பாலும் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றன. ஆனால், இடதுசாரிகளின் தாக்குதல் மேன்மேலும் அதிகரித்தது. 14ஆம் காங்கிரஸி (1925)ல் சினோவியவ் (Zinoviev), காமனெவ் (Kamanev) போன்றவர்கள் டிராட்ஸ்கியின் அணியில் சேர்ந்தனர். அதன்காரணமாகக் கருத்துப் போராட்டம் கடுமையாயிற்று.

**14ஆம் காங்கிரஸ்**

பொதுவாக, 14 ஆம் காங்கிரஸில் தொழில்வளர்ச்சியின் அவசி யத்தை அனைவரும் உணர்ந்தனர். கனரகத் தொழில்களைப் பெரும்பாலோர் வரவேற்றனர். அயல்நாட்டு மூலதனத்தையும் இடதுசாரிகளும்-வலதுசாரிகளும் ஒருங்கே வரவேற்றனர். (அர சாங்கம்தான் இதில் நிதானம் காட்ட வேண்டியதாயிற்று.) ஆனால்,

விவசாயப் பிரச்சினையில் பெரிய முரண்பாடுகள் காணப்பட்டன. இடதுசாரிகள் விவசாயிகளின் நலன்களை முற்றிலும் புறக்கணித் தனர். வலதுசாரிகளோ விவசாயிகளின் நலன்களை விட்டுக்கொடுப் பதாக இல்லை. அரசாங்கம் பொருளாதாரத்தைத் துரிதமாகச் சீரமைத்துச் சோவியத் ஆட்சியை நிலைபெறச் செய்வதிலேயே கண்ணுயிருந்தது. அன்றிருந்த சூழ்நிலையில் ஸ்டாலின் இடதுசாரி களுக்குச் செவிசாய்ப்பதாக இல்லை. அதற்கு மாருகப் பொருத்த மான பல வலதுசாரிக் கருத்துகளை அரசாங்கம் தழுவியது. அதன் பயனுக எழுந்ததுதான், 'கிராமத்தைக் கண்ணேக்கு' (The Face to the Village) என்ற கோஷம். அதிருப்தியுற்றிருந்த நடுத்தர விவசாயிகளைக் கவர்ந்து குலாக்குகளை எதிர்ப்பதே அரசாங்கத்தின் உடனடி நோக்கமாக இருந்தது. அதற்கேற்பப் புதுப் பொருளா தாரக் கொள்கையின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகை கள் 1925-ல் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டன. இச் சலுகைகளால் நடுத்தர விவசாயிகளும், குலாக்குகளும் ஒருங்கே பயனடைந்தனர். குலாக்குகளிடம் உபரித்தானியம் இருந்தது. ஆனுல், அவர்கள் அதை அரசாங்கத்திடம் விற்க முன்வரவில்லை. தானியங்களை கள்ளத்தனமாகப் பதுக்குவதன்மூலம் அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டனர். இதை முறியடிப்பதன் பொருட்டு அரசாங்கம் குலாக்குகளைத் தாக்குவது அவசியமாயிற்று.

### 15 ஆம் காங்கிரஸ்

15 ஆம் காங்கிரஸில் குலாக்குகளின் பிரச்சினை காரசாரமாக விவாதிக்கப்பட்டது. குலாக்குகள் வளர்ந்து பலம் பெற்றதற்கு அரசாங்கமே பொறுப்பு என்று இடதுசாரிகள் குற்றம் சாட்டினர். 15-25 சதவிகிதப் பண்ணைகளும், பயிரிடப்பட்ட நிலத்தில் 25-40 சதவிகிதமும், உபரித்தானியத்தில் 50-66 சதவிகிதமும் குலாக்கு களிடம் குவிந்துகிடந்ததாக இடதுசாரிகள் புள்ளிவிவரம் காட்டினர். இதற்கு 'எதிர்க் கருத்து' (Counter thesis) என்ற பெயர் வழங்கலா யிற்று. இந்தப் புள்ளிவிவரங்கள் உண்மையை மிகவும் மிகைப் படுத்திக் காட்டின. 10 டெசியாட்டின் (1 dessiatine = 2·7 acres) களுக்கு அதிகமான நிலம் வைத்திருந்தவர்களை எல்லாம் இடது குலாக்குகள் என்று கருதினர். உண்மையில் அவர்களில் பெரும் பகுதியினர் நடுத்தர விவசாயிகளே என்பது அரசாங்கத்தின் அபிப்பிராயம். எனினும் பயிரோடு வளர்ந்த களையைப் பிடுங்கி எறிவதெனக் கங்கணம் கட்டியது—அரசாங்கம். 1928-க்குப்பின் குலாக்குகளின்மீது பல பாணங்களைத் தொடுத்தது. குலாக்கு களுக்கு வக்காலத்து வாங்கிய வலதுசாரிகளின் போக்கை வன்மை யாகக் கண்டித்தது. குலாக்குகளை ஒடுக்குவது, பெரிய அளவில் தொழில்களைக் கட்டி வளர்ப்பது என்ற இடதுசாரிக் கோரிக்கைகளை

அரசாங்கம் மேற்கொண்டது. மாறிய சூழ்நிலையில் இத்தகைய கொள்கை மாற்றம் பொருந்துவதாயிற்று.

## முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்

தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான உருவம் கொடுப்பது எளிதான காரியமன்று. எனினும், இவ் வேலையை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் திட்டக் கமிஷனைப் (Planning Commission or Gosplan) பணித்தது. பேராசிரியர் ஸ்டுருமுலின் (Prof. Strumulin) தலைமையில் திட்டம் தயாரிக்கப்பட்டது. முன்கூட்டியே நிர்ணயிக்கப்படும் இலக்குகளை (targets) நோக்கி முன்னேறுவதுதான் திட்டம் எனப்படுவது. இதற்கேற்ப திட்டக் கமிஷன் ஒரு நீண்டகாலத் திட்டத்தையும், ஒரு குறுகியகாலத் திட்டத்தையும் வகுக்கமுற்பட்டது. 15 ஆண்டுகளில் பொருளாதாரத்தின் பல பகுதிகளும் என்னென்ன இலக்குகளை எய்தமுடியும் என்று பொதுப்படையாகக் குறிப்பதே நீண்டகாலத் திட்டம். நீண்டகாலமாதலால் பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளிலும் கணிசமான மாறுதல்கள் ஏற்படுவது இயல்பு. எனவே, 15 ஆண்டுகளுக்குப்பின் என்ன நடக்கும் என்று தெளிவாகக் கணிப்பது கடினம். ஆனால், தெளிவற்ற இந்த நீண்டகால இலக்குகளை ஒர் எலும்புக்கூடாகக் கருதி அதில் சதையும், தோலும் போர்த்தி ஒரு தெளிவான உருவம் கொடுப்பதுதான் குறுகியகாலத் திட்டத்தின் வேலை.

கனரகத் தொழில்களை நிறுவிப் பொருளாதார அடிப்படையை உயர்த்துவது முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள். கனரகக் தொழில்களை நிர்மாணித்து அமைப்பதற்குக் காலம் பிடிக்கும். அதேசமயத்தில் பலதரப்பட்ட கனரகத் தொழில்களையும் நிறுவுவதற்குக் கணிசமான முதலீடு அவசியம். இத்தகையதொரு பெருமுயற்சிக்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்டுவது எப்படி? பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சி வேகங்களை நிர்ணயம் செய்வதெப்படி? ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவுகொண்ட பல்வேறு துறைகளில் முரண்பாடுகளோ சிக்கல்களோ தோன்றுதபடி இணைத்துச் செல்வது எங்ஙனம்...? என்ற பலகேள்விகளுக்கு விடைகாண்பது திட்டம் வகுப்பவர்களின் முக்கியமான பொறுப்பாயிற்று.

இத்தகையதொரு திட்டத்தை 1926-27 முதல் 1930-31 வரை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே அரசாங்கத்தின் அவா. ஆயின், திட்டம் வகுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. 1926 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் எண்களைத் (Control figures) திட்டக்கமிஷன் வெளியிட்டுவந்தது. ஆனால், பல்வேறு தொழில்களும் மாகாணங்

களும் அவற்றுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக இல்லை. மேலும், இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் ஏற்பட்ட மோதல்களால் அனைவரின் ஆதரவையும் பெறக்கூடிய திட்டம் ஒன்றை வகுப்பது கடினமாக இருந்தது. திட்டக்கமிஷன் எதிர்காலத்தில் மிகவும் அவநம்பிக்கை கொண்டிருந்ததாக இடதுசாரிகள் குறை கூறினர். அவர்களது கருத்துக்கிசைந்த மாற்றுத் திட்டம் ஒன்றை தலைமைப் பொருளாதாரக் குழு வெளியிட்டது. ஆனால், திட்டக் கமிஷனும் வலதுசாரிகளும் அதை, 'ஆகாயக் கோட்டை' என்றும், 'காலில்லாப் பந்தல்' என்றும் வர்ணிக்கலாயினர். முடிவில் 1928-ல் திட்டக்கமிஷன் முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தை (1928-33) வெளியிட்டது. இதில் அதிகபட்சத் (maximum or optical) திட்டம் ஒன்றும் குறைந்த பட்சத் (minimum or initiai) திட்டம் ஒன்றும் ஒருங்கே இடம் பெற்றன. 'விளைச்சலில் அபாயகரமான தீர்வுகள் எதுவும் ஏற்படாது; உலகப் பொருளாதாரத்துடன் சுமுகமான உறவு ஏற்படும்; பாதுகாப்புக்கான செலவுகளைக் கணிசமான அளவில் குறைக்க முடியும்; முதலிரண்டு ஆண்டுகளில் பொருளாதார நிர்மாணத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணமுடியும்' என்ற பல சாதகமான முதற்கோள்களை ஆதார மாகக்கொண்டு கட்டப்பட்டதே அதிகபட்சத் திட்டம். அதற்கு மாறாக, 'விளைச்சலில் ஏமாற்றம் ஏற்படலாம்; அயல்நாட்டுத் தொடர்பில் விரும்பத்தக்க மாற்றம் காண்பது கடினம்; நிர்மாண வேலைகள் நினைப்பதுபோல் அவ்வளவு துரிதமாக நடைபெறுவதற் கில்லை. பாதுகாப்புச் செலவும் குறையாது' என்ற பல பாதகமான முதற்கோள்களின் அடியாக எழுந்ததே குறைந்தபட்சத் திட்டம். இவ்விரண்டில் அதிகபட்சத் திட்டம்தான் 1929-ல் அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பெற்றது. எனவே 1928-லிருந்தே அமுலாக்கப் பட்ட திட்டம் 1929-ல்தான் இறுதியான உருவம் பெற்றது.

**அதிகபட்சத் திட்டம்**

அதிபட்சத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க சில முக்கியமான அம்சங்கள் உண்டு. அட்டவணை காட்டுவதுபோன்று, நாட்டு வருவாயில் கால்பகுதி முதல் மூன்றில் ஒருபகுதிவரை நிகர முதலீடு (net investment) செய்வதற்கு இத் திட்டம் இடமளித்தது. இவ் விகிதம் போருக்கு முன்னுல் ரஷ்யாவில் இருந்ததைக் காட்டிலும் இரண்டரை மடங்கு அதிகமாகும். இவ் விகிதம் போருக்கு முன்னுல் இங்கிலாந்தில் இருந்ததைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1927-28-லிருந்த நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆண்டுதோறும் செய்யப் படும் நிகர முதலீடு மும்மடங்காக அதிகரித்தது. (நிலையான மதிப்பின்படி—in real terms).

**கனரகத் தொழில்கள்**

மொத்த நிகர முதலீட்டில் (total net investment) மூன்றில் ஒருபகுதி தொழில் வளர்ச்சிக்கென்று ஒதுக்கப்பட்டது. அத் தொகையில் முக்கால் பகுதியைக் கனரகத் தொழில்களில் ஈடுபடுத்துவதெனத் திட்டம் முடிவுசெய்தது. கனரகத் தொழில் களைக் கட்டி வளர்ப்பதென்றால், ஏராளமான உழைப்பையும் இதர சாதனங்களையும் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அத்துடன் இத் தொழில்களை நிர்மாணிப்பதற்கு நீண்டகாலம் பிடிக்குமாதலின் அவற்றில் செலவிடப்படும் உழைப்பும் இதர சாதனங்களும் நீண்ட காலத்துக்குப் 'பூட்டி' வைக்கப்படும். ஆதலின், உடனடியாகப் பலனை எதிர்பார்க்க இயலாது. இவ் வகையில் பார்க்கும்போது திட்டத்தின் முதுகெலும்பாகிய தொழில்வளர்ச்சி எவ்வளவு பிரமாண்டமானது என்பது என்பது நன்கு விளங்கும்.

**நுகர்வுப் பொருள்கள்**

இப்படி முதலீடு செய்ததால் மக்களின் வயிற்றைக் கட்டினார்கள் என்று ஆகிவிடாது. மாறாக, மக்கள் அதிகமாக உண்டு உடுக்துத் துய்ப்பதற்கும் திட்டம் இடம்கொடுத்தது. அதன் பொருட்டு நுகர்வுப் பொருள்களின் மொத்த உற்பத்தியை 40 சதவிகிதம் அதிகரிப்பதென ஏற்பாடு செய்யப்பட்டது. அதுமட்டுமன்றி, மெய்த்துய்ப்பு அல்லது நிலையான நுகர்வை ((real consumption) 75 சதவிகிதமாக உயர்த்துவது எனவும் ஒழுங்கு செய்யப்பட்டது- அதன்பொருட்டுச் சில்லரை விலையை 20 சதவிகிதம் குறைப்பதெனத் திட்டம் முடிவு செய்தது.

**முதலிரண்டு ஆண்டுகள்**

திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகள் மிகவும் சுமுகமாக இருந்தன. முதல் ஆண்டில் கொஞ்சம் தானியத் தட்டுப்பாடு இருந்தது. அதன் காரணமாக விலைவாசிகளும் சற்று உயர்ந்தன. ஆனால், கூட்டுப்பண்ணைகள் அமைக்கும் விஷயத்தில் எதிர்பார்த்த தற்கு அதிகமான வெற்றி கிடைத்ததால் விற்பனைக்குரிய உபரித் தானியம் தாராளமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க இடமிருந் தது. ஆலைப்பொருள் உற்பத்தியும் எதிர்பார்த்ததற்கு அதிகமாக இருந்தது. தொழிலாளர்களின் ஆக்கசக்திகளிலும் திருப்திகரமான முன்னேற்றம் காணமுடிந்தது. ஆரம்பத்தில் கிடைத்த இவ் வெற்றிகளால் அரசாங்கத்தின் நம்பிக்கையும் தெம்பும் அதிகரித் தன. எனவே, வளர்ச்சியின் வேகத்தை ஏற்கெனவே திட்டமிட்ட தைக் காட்டிலும் துரிதப்படுத்தியது. மொத்த முதலீட்டை மூன்றி லொரு பகுதியாக அதிகரிப்பதென முடிவுசெய்து, திட்டத்தில் இல்லாத பல புதிய தொழில்களை மேற்கொண்டது. இயந்திரக்

அட்டவணை 10

**முதலாவது ஐந்தாண்டு திட்டம்**

| மாற்றுத் திட்டங்களும் ஆண்டுகளும் | நாட்டு வருவாய் | பயனற்ற துய்ப்புகள் 2-ன் சதவிகிதம் | | மொத்த முதலீடு | தேய்மான மதிப்பீடு | முதல், நிலை முதலும் சேர்ந்து | திரட்சி நடை முதலும் 2-ன் சதவிகிதம் | நிலை முதலின் வளர்ச்சி 2-ன் சதவிகிதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1927—28 | 24·7 | 20·0 | 80·1 | 7·99 | 3·33 | 4·66 | 18·9 | 3·72 | 15·1 |
| குறைந்தபட்சத் திட்டம் | | | | | | | | | |
| 1928—29 | 27·5 | 21·3 | 77·4 | 9·70 | 3·48 | 6·22 | 22·66 | 4·64 | 16·9 |
| 1929—30 | 30·5 | 22·8 | 74·9 | 11·37 | 3·70 | 6·67 | 25·1 | 5·84 | 19·1 |
| 1930—31 | 33·5 | 24·5 | 73·0 | 13·04 | 4·00 | 9·04 | 27·0 | 6·87 | 20·5 |
| 1931—32 | 36·9 | 26·1 | 72·4 | 14·58 | 4·38 | 10·20 | 27·6 | 7·68 | 20·8 |
| 1932—33 | 40·6 | 29·6 | 73·0 | 15·76 | 4·81 | 10·95 | 27·0 | 8·54 | 21·0 |
| ஐந்து ஆண்டுகளும் சேர்ந்து அதிகபட்சத் திட்டம் | 169·0 | 124·9 | 72·9 | 64·45 | 20·37 | 44·08 | 26·1 | 33·57 | 19·9 |
| 1928—29 | 27·5 | 21·3 | 77·4 | 9·70 | 3·48 | 6·22 | 22·6 | 4·64 | 6·9 |
| 1929—30 | 30·9 | 22·2 | 71·8 | 12·41 | 3·70 | 8·71 | 28·2 | 6·47 | 20·9 |
| 1930—31 | 34·8 | 23·6 | 67·9 | 15·22 | 4·04 | 11·18 | 32·9 | 8·23 | 23·6 |
| 1931—32 | 38·7 | 25·8 | 66·8 | 17·34 | 4·49 | 12·85 | 33·2 | 9·39 | 24·3 |
| 1931—23 | 43·3 | 28·8 | 66·4 | 19·55 | 5·01 | 14·54 | 35·6 | 10·96 | 25·3 |
| ஐந்து ஆண்டுகளும் சேர்ந்து | 175·2 | 121·7 | 350·3 | 74·22 | 20·73 | 53·50 | 150·5 | 39·69 | 101·0 |

குறிப்பு: தொகைகளெல்லாம் மில்லியார்ட் ரூபிளில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Source: Dobb (M), opt. cit., p. 217.

1 மில்லியார்ட்—1000 மில்லியன்.

கலப்பைகளையும் அறுவடை இயந்திரங்களையும் செய்யக்கூடிய ஆலை ஒன்று கார்கோவில் (Kherkov) நிறுவப்பட்டது. மேலும் மாக்னிட்டோ கோர்ஸ் (Magnitogorsk), குஸ்னெட்ஸ்க் (Kusnetsk), சப்போரோஷே (Zaporozhe) முதலிய இடங்களில் கட்டப்பட்ட இரும்பு ஆலைகளைச் சீக்கிரமாகக் கட்டி முடிப்பதென முடிவு செய்யப்பட்டது. ஜப்பானியரின் நாடு பிடிக்கும் ஆசையும் ரஷ்யத் தொழில் வளர்ச்சியைத் தூண்டியது. எனவேதான் 'ஐந்தாண்டுத் திட்டத்தை நாலாண்டுகளில் முடிப்போம்' எனும் கோஷத்தின் அடியாகக் கனரகத் தொழில்களின் வளர்ச்சிவேகம் பெரிதும் துரிதப்படுத்தப்பட்டது.

**சிக்கல்கள்**

கனரகத் தொழில்கள் இவ்வாறு மேம்பட்டு வருகையில் பொருளாதாரச் சூழ்நிலையில் பல மாற்றங்கள் ஏற்படலாயின. கூட்டுப்பண்ணைகள் அமைப்பதை எதிர்த்துவந்த குலாக்குகள் தங்களிடமுள்ள ஆடுமாடுகளைக் கொன்று தின்ன ஆரம்பித்தனர். அதன்பயனுக இறைச்சியும், பாலும் போதிய அளவில் கிடைக்க வழியில்லை. நிலத்துக்கு வேண்டிய உரமும், உழைப்புக்கு வேண்டிய கால்நடைகளும் குறைவுபட்டன. எனவே விவசாய உற்பத்தி குறைந்துபோயிற்று. இப்படிப்பட்ட நிலையில் உலகப் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. அதன்காரணமாக வாணிப மாற்று விகிதம் ரஷ்யாவுக்குப் பாதகமாகத் திரும்பியது. ஏனெனில், உலக மார்க்கெட்டில் விவசாயப் பொருள்களின் விலை 20-30 சதவிகிதம் குறைந்து போயிற்று. ஆனுல், ஆலைப்பொருள்களின் விலை 10-20 சதவிகிதமே குறைந்தது. பிரமாண்டமான தொழில் வளர்ச்சியில் முனைந்துநின்ற ரஷ்யா ஏராளமான இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. அதற்கு ஈடாக விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டியிருந்தது. ஆலைப்பொருள்களைவிட விவசாயப் பொருள்களின் விலை குறைந்துபோகவே விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியதாயிற்று. அயல் நாடுகளிலிருந்து கடன் உதவி கிடைக்காத நிலையில் இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியைப் பெருக்க வேண்டியதாயிற்று. அதன்காரணமாகப் பெரும்பாலும் நுகர்வுப் பொருள்களின் இறக்குமதி குறைந்துவிட்டது. புகையிலை தீப்பெட்டி, பால்பண்ணைப் பொருள்கள், இனிப்புப் பண்டங்கள் முதலிய நுகர்வுப் பொருள்களின் இறக்குமதி அதிகரித்தது. அதன்பயனுக உள்நாட்டில் இந்த நுகர்வுப் பொருள்களின் தட்டுப்பாடு அதிகரிக்கலாயிற்று.

விளைச்சலிலும் பல ஏமாற்றங்கள் ஏற்பட்டன. 1930-ல் விவசாயத்தில் மாசூல் மிகுதியாக இருந்தது. ஆனுல் 1931-32-ல்

விளைச்சல் குறைந்து போயிற்று. குறிப்பாகப் பருத்தி உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. அதேசமயத்தில் கச்சாப் பருத்தியின் இறக்குமதியையும் குறைக்கவேண்டியதாயிற்று. எனவே, பருத்தி ஆலைகள் முழுநேரம் வேலைசெய்ய முடியவில்லை. கனரகத் தொழில்களின் முக்கியத்துவம் அதிகரித்த காரணத்தால் நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்குப் போதுமான முதலீடு செய்ய முடியவில்லை. ஆக்கசக்தியும் எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைவாக இருந்தது. ஆக்கசக்தியை ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக்க வேண்டும் என்பது திட்டம். ஆனால் உண்மையில் அது 41 சதவிகிதத்துக்கு மேல் அதிகரிக்கவில்லை. எனவே மொத்த விலையையோ, சில்லறை விலையையோ குறைக்க வழியில்லாது போயிற்று.

நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியும் ஆக்கசக்தியும் இப்படி எதிர்பார்த்ததற்குக் குறைவாக இருந்தபோது வாங்கும் சக்தி கணிசமான அளவில் அதிகரித்தது. திட்டம் அமுலுக்கு வருமுன்னர், கிராமங்களில் 8-9 மில்லியன் மக்கள் உபரியாக இருந்தனர்; நகரங்களில் ஒரு மில்லியன் தொழிலாளர் வேலை இல்லாதிருந்தனர். ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்க் கூலிக்கும் சம்பளத்துக்கும் வேலை செய்தவர்களின் எண்ணிக்கையை 40 சதவிகிதமாக உயர்த்துவதென ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1932-ன் இறுதிக்குள் அவர்களின் தொகை இரண்டு மடங்கானது; கட்டடத்தொழிலில் மட்டும் 4 மடங்காகப பெருகியது. அதன் பயனாக வேலை யில்லாத் திண்டாட்டம் தீர்ந்தது. நாட்டுவருவாயில் தொழிலாளரின் பங்கும் எதிர்பார்த்ததற்கு அதிகமாக உயர்ந்தது. அதுமட்டுமன்றி, பணக்கூலியை (Money wage) ஐந்தாண்டுகளில் 50 சதவிகிதமாக உயர்த்துவதென்று திட்டமிடப்பட்டது. ஆமூல் உண்வையில் அது இரண்டு மடங்கானது. எனவே பணக்கூலி ஆக்கசக்தியைக் காட்டிலும் 2½ மடங்கு அதிகரித்தது. இதன் விளைவாக வாங்கும் சக்தி அதிகரித்தது.

நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி அதற்கேற்ப வளரவில்லை. எனவே, நுகர்வுப் பொருள்களுக்குப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. இருப்பினும் கனரகத் தொழில்களில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியின் காரணமாக ரஷ்யா பின்தங்கிய நாடு என்ற நிலைபோய் தொழில் வளமிக்க நாடாகப் பரிணமித்தது.

**தொழில் தொகுப்புகள்**

தொழில் நிருவாகத்தைத் திருத்தி அமைப்பதற்கெனப் 16ஆம் காங்கிரஸில் (1929 மே) சில முடிவுகள் செய்யப்பட்டன, அதன்படி ஆலைகள் (நிறுவனங்கள்—Enterprises) தான் தொழில் நிருவாகத்தின் அடிப்படை. எனவே, தக்க நிருவாகிகளை அதற்கெனத் தெரிந்

தெடுத்து உற்பத்தித் திட்டங்களைச் சிக்கனமான முறையில் நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கவேண்டும். தொழில்களின் பல பகுதிகளையும் நிருவகிக்கும் பொறுப்பை நாளடைவில் சிண்டி கேட்டுகள் தங்களின் கைவசப்படுத்திய காரணத்தால் கிளாவ்கிகள் (Glavki) பயனற்றவையாகிவிட்டன. எனவே, அவற்றிற்குப் பதிலாகத் தொழில் தொகுப்புகள் (Industrial combines) அமைக்கப்பட்டன. உற்பத்தித் திட்டங்களை வகுப்பது, தொழில் நிர்மாணக்கைத் திட்ட மிட்டு நிருவகிப்பது, விற்றலையும் வாங்கலையும் சீர்பட அமைப்பது, வாணிப நிதி விவகாரங்களைக் கட்டுப்படுத்துவது, தொழிலாளர், தொழில் நிபுணர்கள், நிருவாகிகள் முதலானோரை வேலையில் அமர்த்துவது முதலிய பல பொறுப்புகளைத் தொழில் தொகுப்புகள் வகித்துவந்தன. இத் தொகுப்புகள் மூவகைப்பட்டன. நாட்டு முக்கியத்துவமும் வாய்ந்த ஆலைகளையும் டிரஸ்டுகளையும் கொண்ட தொகுப்புகள் ஒருவகை. நாட்டு முக்கியத்துவமும், ஒரு பகுதி முக்கியத் துவமும் ஒருங்கே படைத்த ஆலைகளும், டிரஸ்டுகளும் அடங்கியவை மற்றொருவகை. மாகாண முக்கியத்துவமும் ஒரு குறிப்பிட்ட பகுதியின் முக்கியத்துவமும் வாய்ந்தவை மூன்றாவது வகை. தொகுப்புகள் இவ்வாறு பலதரப்பட்ட நிருவாகப் பொறுப்பு களைச் சிரமேற்கொண்டதன் பயனாக டிரஸ்டுகள் தொழில் நிர்மாணத்தின் வினைநுட்பங்களை மட்டும் நிருவகித்து நடத்துவதில் கவனம் செலுத்தின. விற்பதும் வாங்குவதும் தொகுப்பின் வேலையாக அமைந்தது.

தலைமை பொருளாதாரக் குழுதான் தொழில் நிருவாகத்தின் தலைமைப் பீடமாகத் திகழ்ந்தது. திட்டத்துக்கு முன்னர் அது பெரும்பாலும் ஒரு திட்டம் வகுக்கும் நிலையமாகவே இருந்தது. ஆனால், திட்டம் அமுலுக்கு வந்தகாலத்தில் அது தொழில் நிருவாகத்தின் மையமாக மாறியது. தொழிலின் பல்வேறு பகுதிகளையும் ஒருங்கே இணைத்து அவற்றின் உற்பத்தி, நிதித் திட்டங்களை வகுப்பதும், தொழில் நிருவாகத்துக்காக அடிப்படைக் கொள்கைகளை வகுப்பதும், தொழில் நிருவாகத்தைக் கண்காணிப் பதும், திட்டம் ஏற்றவகையில் அமுல் நடத்தப்படுகின்றதா என்று மேற்பார்வை செய்வதும், தொழில் தொகுப்புகளின் நிருவாகிகளை நியமிப்பதும் வேலையிலிருந்து தள்ளுவதும், அவற்றின் கணக்கு களைப் பரிசிலனை செய்வதும், இலாப நஷ்டங்களைப் பங்கிடுவதும், மூலதனம் கொடுப்பதும், விற்பனை விலையை நிர்ணயம் செய்ததும் தலைமைப் பொருளாதார முக்கியமான பொறுப்புகளாகும்.

### ஆலை நிருவாகத்தில் ஒருமைப்பாடு

ஆலைகளில் ஒன்றுபட்ட நிர்வாகத்தை அமைக்கும் பிரச்சி னையும் கவனத்துக்கு வந்தது. 1929 ஆம் ஆண்டு இறுதியில் கம்யூ

னிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி (Central Committee of the Communist Party) விடுத்த சுற்றறிக்கை ஒன்றில் இதுபற்றிய கொள்கை தெளிவாக வலியுறுத்தப்பட்டது. ஆலை நிருவாகத்தில் 'திரித்துவத்தை' ஒழித்து 'ஏகத்துவத்தை' நிலைநாட்டுவது அக் கொள்கையின் அடிப்படை நோக்கம். அதன்படி ஆலை நிருவாகத் தில் முழுப்பொறுப்பும் ஆலை நிருவாகியின் கையில் ஒப்படைக்கப் பட்டது. உற்பத்தி, நிதி, தொழில் முறை முதலிய சகல துறை களிலும் நிருவாகியின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது. நிருவாகி களை நியமிக்கும்போதும், வேலையிலிருந்து நீக்கும்போதும் மேலதி காரிகள் ஆலைகளிலுள்ள தொழிற்சங்கங்களையும், கட்சியின் அடித் தளத்திலுள்ள சிறு பிரிவையும் (Cell) கலக்கவேண்டும். ஆனால், நியமிக்கப்பட்டபின் கட்சியோ, தொழிற்சங்கமோ, நிருவாகத்தில் தலையிடுதல் கூடாது. தொழிலாளரின் பொருளாதார, கலாசார மேம்பாட்டைக் கவனிப்பது தொழிற்சங்கத்தின் வேலை. எனவே கூலி, வேலைக்கான நிபந்தனைகள் முதலிய பிரச்சினைகளில் நிருவாகம் தொழிற்சங்கத்தைக் கலக்கவேண்டும். ஆனால் தொழிற் சங்கத்தின் கோரிக்கை நிருவாகத்தைக் கட்டுப்படுத்தாது. அதைப் போலவே ஆலையின் அரசியல் பொருளாதார வாழ்க்கையைக் கண் காணிப்பது கட்சியின் வேலை. அத்துடன் ஆலையில் வேலைக்கு அமர்த்தப்படும் ஆள்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கண்கா ணிப்பதும் கட்சியின் கடமையாக இருந்தது. ஆனால் நிருவாகத் துக்கும், தொழிற்சங்கங்களுக்கும், கட்சிக்கும் இடையே ஏற்படும் தகராறுகளை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து அவர்கள் தீர்ப்புக் கிணங்கச் செயல்படவேண்டும். மேலும், பல்லாண்டுகளாகக் கட்சியும் அரசாங்கமும் தொழில் நிருவாகிகளின்பால் கொண் டிருந்த சந்தேக மனப்பான்மையைக் கைவிட்டு அவர்களது ஒத்துழைப்புடன் ஆக்கவேலையில் ஈடுபடவேண்டுமென்று ஸ்டாலின் கம்யூனிஸ்டுகளை வேண்டிக்கொண்டார். நிர்வாகம் சுமுகமாக நடப்பதற்கு இத்தகைய மனமாற்றம் இன்றியமையாததாக இருந்தது.

### குறைபாடுகள்

நிருவாகத்தில் ஏற்பட்ட இந்த மாறுதல்களால், விரும்பிய பலன் உடனடியாகக் கிட்டியது என்று சொல்ல இயலாது. போதுமான நிருவாகிகள் இல்லாதது அதற்கு ஒரு காரணம். போதிய அனுபவம் இல்லாத பலர் நிருவாகப் பொறுப்பைச் சுமந்து வந்தனர். அதன் காரணமாக உற்பத்தியில் சிக்கனம் ஏற்பட வழியில்லை. பொருள் களின் தரமும் மட்டமாக இருந்தது. ஆக்கவேலைகள் சிக்கலின்றி நடைபெறவேண்டுமாயின் தொழிலாளர் நிருவாகப் பயிற்சியும் தொழில்நுணுக்கத் தேர்ச்சியும் பெற்று, தொழில்களைக் கட்டி

ஆளும் தகுதி உடையவர்களாக வேண்டும் என்று ஸ்டாலின் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

**கூட்டுப்பண்ணை இயக்கம்**

ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வருமுன்னர் 5·6 மில்லியன் ஏக்கர் நிலம் கூட்டுப்பண்ணைகளின் கீழும், 3·4 மில்லியன் ஏக்கர் நிலம் அரசாங்கப் பண்ணைகளின்கீழும் இருந்தன. இரண்டும் சேர்ந்து, பயிரிடக்கூடிய மொத்த நிலத்தில் ஒரு சதவிகிதமே ஆகும். அதேபோல் மொத்த தானியத்தில் 2 சதவிகிதம் மட்டுமே கூட்டுப் பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும் உற்பத்தியாயிற்று, 1933-ல் விற்பனைக்குரிய உபரிப்பொருளில் 50-40 சதவிகிதத்தைக் கூட்டுப்பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலுமிருந்து பெறுவது என்பதுதான் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம். இயந் திரக் கலப்பை நிலையங்களை (Machine Tractor Siations or MTS) நிறுவி அவற்றின் துணைகொண்டு கூட்டுப்பண்ணைகளுக்கும், உதவு வதென முடிவு செய்யப்பட்டது. கருவிகளுக்காக ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு 80 ரூபிளும், நடை முதலுக்கென ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு 70 ரூபிளும் சராசரியாகச் செலவு செய்வதெனத் திட்டமிடப்பட்டது. அதேசமயத்தில் அரசாங்கம் தாக்குதல் நடத்தியது. குலாக்குகளைச் சுற்றிவளைப்பதென்ற கொள்கை போய் அவர்களைப் பூண்டோடு வேரறுப்பது என்ற கொள்கை இடம் பெற்றது. குலாக்குகளுக்கு வழங்கப்பட்ட உரிமைகளும் சலுகை களும் பிடுங்கப்பட்டன. அரசாங்கத்தின் அனுமதி கொண்டு குலாக்குகளின் கால்நடைகளையும், விவசாயக் கருவிகளையும் பறிமுதல் செய்யும் உரிமை சோவியத்துக்களுக்கு வழங்கப்பட்டது.

**குலாக்குகளின் எதிர்த்தாக்குதல்**

குலாக்குகள் சும்மா விடுவதாக இல்லை. அரசாங்கத்தை எதிர்த்துத் தாக்கினர். நடுத்தர விவசாயிகளிலும் பலர் குலாக்கு களைப் பின்பற்றினர். பறிமுதலுக்குத் தப்புவதற்காகக் கால்நடை களில் கணிசமான பகுதியைக் கொன்று தள்ளினர். 1929–31 ஆம் ஆண்டுவரை மாடுகளில் மூன்றிலொரு பகுதியும், ஆடுகளில் சரிபாதியும், குதிரைகளில் நாலிலொரு பகுதியும் கொல்லப்பட்டன. அதனால் உணவு குறைந்தது; உரம் குறைந்தது; கலப்பையை இழுக்கக்கூடிய கால்நடைகள் குறைந்தன. இயந்திரக் கலப்பை களாலும், செயற்கை உரத்தாலும் இந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியவில்லை. எனவே, தானிய உற்பத்தி குறைந்தது. 1929-32-ல் இருந்த சராசரி உற்பத்தி 1925-28-லிருந்த சராசரியைக் காட்டிலும் குறைவாக இருந்தது. 1933ஆம் ஆண்டுவரை விளைச்சலில் திருப்தி கரமான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை, எனவே, திட்டத்தில்

கண்டதுபோல் தானிய உற்பத்தியை 35 சதவிகிதமாக அதிகரிப்பது இயலாது போயிற்று.

ஆனால், விற்பனைக்குரிய உபரிப்பொருளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமிருந்தது. 1932-33-ல் கிடைத்த உயரிப்பொருள் 1926-27-ல் இருந்ததைக் காட்டிலும் இரட்டிப்பானது. (மொத்த உபரியில் அர்சாங்க, கூட்டுப்பண்ணைகளின் பங்கு 84 சதவிகித மாகும்) பருத்தி, சணல், கம்பளி முதலியவற்றின் நிலைமை அதைவிடத் திருப்திகரமாக இருந்தது. இது வேகமான தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக அமைந்தது.

### அரசாங்கம் பின்வாங்கல்

கால்நடைகளில் ஏற்பட்ட தேசத்துக்குக் கம்யூனிஸ்டுகளும் ஓரளவு காரணம்தான். தீவிர கம்யூனிஸ்டுகள் பலர் அரசாங் கத்தின் அனுமதி இன்றியே குலாக்குகளின் கால்நடைகளையும் இதர உற்பத்திச் சாதனங்களையும் பரிமுதல் செய்து அவர்களது நிலங்களைக்கொண்டு கூட்டுப்பண்ணைகள் அமைக்க முற்பட்டனர். பல நடுத்தர விவசாயிகளும் இத்தகைய பலாத்காரத்துக்கு இலக்கா யின்ர். அதன்பயனாகக் கூட்டுப்பண்ணைகள் பெருகியது உண்மை. ஆனால், அத்துடன் உற்பத்திச் சாதனங்களும் பெரிதும் நாச மடைந்தன. இதைக்கண்ட ஸ்டாலின் 'வெற்றியால் வந்த தலைக் கிரக்கம்' (dizzy with success) என்ற தலைப்பில் தீவிரவாதிகளைத் தாக்கினார். கூட்டுப்பண்ணைகள் அமைப்பதானால் அவற்றில் விவசாயிகள் தாமாகவே வந்து அங்கத்தினராகச் சேரவேண்டும். பலாத்காரத்தின்மூலம் கூட்டுப்பண்ணைகளை அமைக்க முற்படுவது தவறு என்று கண்டித்தார், அத்துடன் பலாத்காரமாக அமைக்கப் பட்ட கூட்டுப்பண்ணைகளைக் கலைத்துவிடுமாறும் கட்சிக்குக் கட்டளை யிட்டார். அதன்பயனாகக் கூட்டுப்பண்ணைகளின் எண்ணிக்கை குறைந்தது. 1930ஆம் ஆண்டு மார்ச் 1-ல் கிட்டத்தட்ட 14 மில்லியன் விவசாயக் குடும்பங்கள் கூட்டுப்பண்ணைகளில் அங்கம் வகித்தன. அதே ஆண்டு மே மாதத்தில் அக் குடும்பங் களின் எண்ணிக்கை 5 மில்லியனாக குறைந்தது.

### கவர்ச்சி

ஆனால், கூட்டுப்பண்ணைகளைப் பரப்புவதற்கு ஸ்டாலின் பல்வேறு பொருளாதாரச் சலுகைகளைக் காட்டலானார். கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த கால்நடைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டது; கடன் வசதிகளில் தாராளம் காட்டப்பட்டது; அபூர்வமான ஆலைப்பொருள்களின் பங்கீட்டில் கூட்டுப்பண்ணைகளுக்கு முக்கி யத்துவமளிக்கப்பட்டது. கூட்டுப்பண்ணைகளின் வசமுள்ள நிலம்

நிரந்தரமான குத்தகையாகக் கருதப்பட்டது. மேலும், உற்பத்தியில் அரசாங்கத்துக்குச் செலுத்தியதுபோக எஞ்சியதைத் தங்கள் விருப்பம்போல் விற்கும் உரிமையும் கூட்டுப்பண்ணைகளுக்கு வழங்கப்பட்டது. அதில் அங்கம் வகித்தவர்களும் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் விளைவிக்கும் பொருள்களைத் தங்கள் விருப்பம்போல் விற்கும் உரிமை பெற்றனர். இத்தகைய சலுகைகளால் கூட்டுப் பண்ணைகள் வேகமாகப் பரவ ஆரம்பித்தன; 1932 ஆம் ஆண்டு இறுதிக்குள் 2,00,000 கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்பட்டன. பயிரிடக்கூடிய நிலத்தில் மூன்றில் இரண்டு பகுதி அவற்றின் கையி லிருந்தது. சுமார் 14 மில்லியன் குடும்பங்கள் அவற்றில் அங்கம் வகித்தன. இது மொத்தக் குடும்பங்களில் 60 சதவிகிதமாகும். எனவே, கூட்டுப் பண்ணைகளின் விஷயத்தில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு வெற்றி கண்டது. (பயிரிடும் நிலத்தில் ஏழில் ஒரு பகுதியைக் கூட்டுப் பண்ணைகளின்கீழ்க் கொண்டுவருவதே திட்டம்) டிராக்டர்களின் எண்ணிக்கையும் 6-7 மடங்காகப் பெருகியது. அவற்றில் மூன்றி லொரு பகுதி உள்நாட்டிலேயே உற்பத்திசெய்யப்பட்டது.

### அரசாங்கப் பண்ணைகள்

தானியத் தொழிற்சாலைகள் (Grain factories) என்று வழங்கப்பட்ட அரசாங்கப் பண்ணைகளிலும் கவர்ச்சிகரமான முன் னேற்றம் காணப்பட்டது. 1958-ல் மொத்தம் 3·4 மில்லியன் ஏக்கர் நிலங்களைக் கொண்ட 3,000 பண்ணைகள் இருந்தன. இப் பரப்பை மும்மடங்காக அதிகரித்து விற்பனைக்குரிய உபரி தானியத்தில் அவற்றின் பங்கை 17 சதவிகிதமாக உயர்த்துவதெனத் திட்டத்தில் கண்டிருந்தது. அதன்படி பல பிரமாண்டமான தானிய டிரஸ்டுகள் (Grain trusts) அமைக்கப்பட்டன. சிலவற்றில் நூறாயிரம் ஏக்கருக்கு அதிகமான நிலம் இருந்தது. ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர் அவற்றில் கூலி வேலை செய்தனர். ஆரம்பத்தில் வெற்றியின் காரணமாக, அரசாங்கப்பண்ணைகளின் பரப்பைத் திட்டக் காலத்தில் 8 மடங்காகப் பெருக்குவதென 1929-ல் முடிவு செய்யப்பட்டது. அதை வெற்றிபெறச் செய்வதன் பொருட்டு 16,000 இயந்திரக் கலப்பைகளும், 5,000 அறுவடை இயந்திரங்களும் அவற்றின் வசம் கொடுக்கப்பட்டிருந்தன. மொத்தத்தில் பாதிக்கு மேற்பட்ட இயந்திரக் கலப்பைகள் அவற்றிடம் இருந்தன. சுருங்கக் கூறின் அரசாங்கப் பண்ணைகளில் கணிசமான மூலதனம் ஈடுபடுத்தப்பட்டது. ஆனால், முதலுக்கேற்ற வருவாயில்லை. பண்ணை கள் அளவுக்கு மிஞ்சிப் பெரிதாக இருந்தன. எனவே, திறமையுடன் பயிர்செய்ய முடியவில்லை. ஸ்டாலினும், மாலடோவும் (Molotov) இக் குறைகளைச் சுட்டிக்காட்டினர். அதன் பயனாகப் பண்ணைகளின்

பரப்பு குறைக்கப்பட்டது. அதிகபட்ச அளவு 50000-60000 ஏக்கரா கவும், குறைந்தபட்ச அளவு 5000-6000 ஏக்கராகவும் ஆயிற்று. ஒரே பண்ணையில் பலதரபட்ட பயிர்களை வளர்க்கும் பழக்கமும் பரவியது. இத்தகைய மாற்றங்களால் நாளடைவில் ஆக்கச்சக்தி அதிகரிக்கலாயிற்று; அதிலும் தரிசான நிலங்களைத் திருத்திப் பண்படுத்துவதற்கு அரசாங்கப் பண்ணைகள் மிகவும் உதவியாக இருந்தன. அதன் பயனாகவே வால்கா, மேற்கு சைபிரியா, காகஸஸ் முதலிய பகுதிகளில் பல பிரமாண்டமான அரசாங்கப் பண்ணைகள் தோன்றின.

### அயல்நாட்டு வாணிபம்

வெளிநாட்டு வாணிபத்தில் அரசாங்கத்துக்கு இருந்த சர்வாதீனம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் உதவியது. உள்நாட்டு உற்பத்தி போதிய அளவு பெருகாத நிலையில் கனரகத் தொழில்களின் முக்கியத்துவம் உயர்த்தப்பட்டது. உலக மார்க்கெட்டோ மந்தமாயிற்று. வாணிப மாற்று விகிதம் ரஷ்யாவுக்குப் பாதகமாக மாறிற்று. மனமார ரஷ்யாவுக்குக் கடன் கொடுத்து உதவவும் யாரும் முன்வரவில்லை. இப்படி நெருக்கடியான கட்டத்தில், தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய இயந்திரங்களையும் கச்சாப் பொருள்களையும் இறக்குமதி செய்து, அதற்கு ஈடான ஏற்றுமதியை உள்நாட்டில் திரட்டி அனுப்புவதற்கு அரசாங்கத்தின் சர்வாதீனம் இன்றியமையாத ஒரு கருவியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

### உள்நாட்டு வாணிபம்

உள்நாட்டிலும் 1930-க்குப் பின்னர் தனி வாணிபம் சட்ட விரோதமாக்கப்பட்டது. அதன்பயனாக மொத்த, சில்லறை வாணிபமனைத்தும் அரசாங்கக் கூட்டுறவு வணிக ஸ்தாபனங்களின் கைக்கு மாறலாயின. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் அமுலில் இருந்தபோது பொருள்களுக்குப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டது எனக் கண்டோம். அதன் காரணமாக விற்பனைக்குரிய உபரிப் பொருள்களைத் திட்டமிட்ட வகையில் வினியோகம் செய்யவேண்டு வது அவசியமாக இருந்தது. எனவே, நுகர்வுப் பொருள்களை வினியோகிக்கும் பொருட்டுப் பங்கீட்டுமுறை (Rationing) அமுலுக் குக் கொண்டுவரப்பட்டது. கிடைக்கும் பொருள்களைச் சரிசம மாகப் பங்கிடுவது அதன் நோக்கமல்ல. பொருள் உற்பத்தியின் அவசியத்துக்கேற்ப நுகர்வுப் பொருள்களையும் பங்கிட்டு அளிப்பதே அதன் நோக்கம். அத்துடன் மக்களின் கையில் உபரியாக இருந்த வாங்கும் சக்தியை உறிஞ்சக்கூடிய வகையில் விலைகள் நிர்ணயம்

செய்யப்பட்டன. இப்படி உறிஞ்சப்பட்ட சக்தியைக் கொண்டு தொழில் வளர்ச்சிக்கான மூலதனத்தைச் சேர்ப்பது எளிதாக இருந்தது.

**உபரிப் பொருள் சேகரிப்பு**

திட்டத்தின் இறுதிக்குள் ஆலைப்பொருள்கள் அனைத்துமே அரசாங்க, கூட்டுறவு ஸ்தாபனங்களின் வாயிலாக வினியோக மாயின. விவசாய உபரிப் பொருள்களிலும் 95·4 சதவிகிதம் இவ் வழியாகவே வினியோகம் செய்யப்பட்டது. கூட்டுப்பண்ணைகளின் வளர்ச்சி இதற்குப் பெரிதும் உதவியது. ஆரம்பத்தில் அரசாங்கம் நிர்ணயித்த விலையில் கூட்டுப் பண்ணைகள் தங்கள் உபரியில் ஒரு குறிப்பிட்ட அளவை அரசாங்கத்திடம் விற்கவேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1933-ல் இந்த ஒப்பந்த முறையை மாற்றி பொருள் வடிவில் வரி விதிக்கப்படலாயிற்று. இவ் வரி போக எஞ்சிய உபரியில் பெரும்பகுதியை அரசாங்கம் உயர்ந்த விலை கொடுத்து வாங்கியது. ஆனால், தனிவணிகர் இல்லாத நிலையில் ஒரு சிலர் கள்ளமார்க்கெட்டில் தங்கள் உபரியை விற்க முயன்றனர். இதைத் தடுக்கவேண்டி அரசாங்கம் 1933-ல் உபரி தானியங்களைத் தங்குதடையின்றி விற்கக்கூடிய கூட்டுப்பண்ணைச் சந்தை (Kolkhoz market) ஒன்றை அமைத்தது.

**வினியோகம்**

நுகர்வுப் பொருள்கள் விற்கக்கூடியவை; விற்கக்கூடாதவை என்று இருவகையாப் பாகுபடுத்தப்படடன. தொழில், இராணுவம், ஏற்றுமதி முதலியவற்றுக்கு அவசியமான பொருள்களை விற்காமல் அப்படியே ஒதுக்கினர். எஞ்சியவை விற்கப்பட்டன. அவற்றுள் கிடைப்பதற்கரிய பொருள்களைத் திட்டமிட்ட முறையில் வினி யோகம் செய்தனர். தாராளமாகக் கிடைப்பவற்றின்மீதுள்ள கட்டுப்பாடு சற்றுத் தளர்த்தப்பட்டது. விற்கப்பட்ட பொருள்கள், ஆலைத் தொழிலாளருக்குத் தேவையானவை, விவசாயிகளுக்குத் தேவையானவை, அயல்நாட்டவருக்குத் தேவையானவை, உயர்ந்த விலையில் வெளிப்படையாக விற்கத்தகுந்தவை என்று பலவாருகப் பிரிக்கப்பட்டன. பெரும்பாலான விவசாயப் பகுதிகளில் ரொட்டிப் பங்கீடு நடைபெறவில்லை. ஆனால், நகரங்களில் ரொட்டிப் பங்கீடு முக்கியமாக இருந்தது. சில முக்கியமான தொழில்களுக்கு அதிகமான பொருள் பங்கிட்டு அளிக்கப்பட்டது. கடின உழைப்பு ஈந்து உடல்நலத்தைப் பாதிக்கக்கூடிய வேலைகள் முதலியவற்றில் ஈடுபட்டவர்களுக்கும் தனிச் சலுகைகள் காட்டப்பட்டன. அயல் நாடுகளிலிருந்து வந்த தொழில் நிபுணர்களுக்கும் சிறப்பான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன. இதுபோக, சில ஆலைகளில்

தொழிலாளருக்குக் குறைந்தவிலையில் உணவு முதலிய வசதிகள் அளிக்கப்பட்டன. அதன்பயனுகப் பலதரப்பட்ட விலைவாசிகளும் வினியோக முறைகளும் நாட்டில் நிலவின. அன்றிருந்த நிலையில் தொழில்களை ஊட்டி வளர்ப்பதற்கு இத்தகைய வினியோக முறை இன்றியமையாததாக இருந்தது.

ஆகவே, எதிர்பாராத பல நெருக்கடிகள் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்நோக்கின. குறைவுபட்ட மாசூல், பாதகமான வாணிபமாற்று விகிதம், கடன் வசதி இன்மை, இன்ன பல இடையூறுகளையும் மேற்கொண்டு தொழில்வளர்ச்சியில் (குறிப்பாக கனரகத் தொழில்களில்) திட்டத்துக்கும் மிஞ்சிய முன்னேற்றம் கண்டது சோவியத் யூனியனின் மிகப்பெரிய சாதனை யாகும். நிலத்தில் வேரூன்றியிருந்த முதலாளித்துவத்தைக் கிள்ளி எறிந்து கூட்டுப்பண்ணைகளையும், அரசாங்கப் பண்ணைகளையும் அமைப்பதிலும் அரசாங்கம் அபரிமிதமான வெற்றிகண்டது. அதன்பயனுக உடைமைப் பிரச்சினை ஒருவாறு தீர்ந்தது; ஆனுல் வயிற்றுப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. நுகர்வுப் பொருள்களுக்குப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. வாணிபத்தையும், பொருள் வினியோகத்தையும் தன்வயப்படுத்துவதன்மூலம் அரசாங்கம் நிலைமையை ஒருவாறு சமாளித்தது. ஆயினும், எத்தனைகாலம் பங்கீட்டு முறையைக் கையாளுவது? உற்பத்தி பெருகவேண்டாமா? ஆனுல், அன்றிருந்த நிலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல முட்டுக்கட்டைகளிருந்தன. ஆக்கச்சக்தி குன்றியிருந்தது. பொருள்களின் தரம் குறைந்தது. போதிய நிருவாகிகளோ திறம் பட்ட நிருவாகமோ இல்லை. இத்தனை குறைபாடுகளையும் போக்கி, பொருளாதாரத்தின் இயந்திர அடிப்படையை மேன்மேலும் வளர்த்துப் பலப்படுத்திப் பொருள் வளத்தைப் பெருக்கிச் சமதர்மத்தை நோக்கி விரைவதுதான் பிந்திய திட்டங்களின் பிரதானமான வேலையாக அமைந்தது.

## மேற்கொண்டு படிக்க


Baygov (A), 'Soviet Economic System,' Section-III.

Dobb (M), opt. cit., Chs., 8, 10.

Podkolzin (A), 'A Short Economic History of the USSR,' Ch. VI.

Schwartz, (H), 'Russias' Soviet Economy,' Chs. 6-11.

Stalin (J), Problems of Leninism.

# 8. சமதர்மத்தின் அடித்தளம் பலம்பெறுதல்

1. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1933-1937): குறிக்கோள்கள்—தொழில் வளர்ச்சி—போக்கு வரத்தும் தொழில்களின் இடப் பெயர்ச்சியும்—தொழில் திருவாகம்—கூட்டுப் பண்ணைகளின் அபிவிருத்தி—உலகச் சூழ்நிலையால் ஏற்பட்ட மாற்றங்கள்—நுகர்வுப் பொருளுற்பத்தியில் ஏற்பட்ட சிக்கல்கள்—வாழ்க்கைத்தர உயர்வு.

2. முற்றுப்பெருத மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் (1938-1941)—சோவியத் பொருளாதாரத்தின் பலவீனம்.

சமதர்மத்தை நோக்கிப் பயணம் செய்துவந்த சோவியத் யூனியன் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் துணைகொண்டு வேகமாக முன்னேற முயன்றது. துரதிருஷ்ட வசமாக அப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்ததாக இருந்தது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் தட்டுத் தடுமாறி ஓரளவு முன்னேற முடிந்தது. அத் திக்கை நோக்கி மேலும் முனைந்து செல்லுகையில் அடிவானம் கறுத்துப் போர் மேகங்கள் மூண்டன. அதைத்தடுத்து நிறுத்தத் தக்க பாதுகாப்பைத் தேடுமுன்னரே கோடை இடியும் மின்னலும் எதிர்ப்பட்டன. புயலும் சூருவளியும் சுழன்று அடித்தது. அதன் பயனுகச் சமதர்மத்தின் கோட்டைக் கொத்தளங்கள் பல சரிந்தன. மாடிகள் பல தகர்ந்து தரைமட்டமாயின. ஆயின், சமதர்மத்தின் அடித்தளம் அசைந்து கொடுக்கவில்லை. மாருக, அது மேலும் உறுதிப்பட்டது. சமதர்ம ஸ்தாபனங்கள் பலவற்றின் ஆணிவேர் ஆழமாகப் பதிந்தது. சோவியத் மக்களுக்குச் சமதர்மத்தில் இருந்த பற்று பலம் பெற்றது. அவர்களது வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது. இருப்பினும் ஜெர்மன் ஆக்கிரமிப்பை உடனடியாக முறியடித்து அவர்களது முதுகெலும்பை உடைத்து நொறுக்கக் கூடிய திண்மையும் தோள் வலியும் சோவியத் பொருளாதாரத்துக்கு இல்லை.

## இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம்(1933-1937): குறிக்கோள்கள்

சமதர்மத்தைக் குறிக்கோளாகக் கொண்ட சோவியத் மக்கள் அத் திக்கில் எடுத்து வைத்த முதலடிதான் முதலாவது ஐந்தாண்டுத் திட்டமாகும். ஒரே எட்டில் சமதர்மத்தின் கொடுமுடிகளை யெல்லாம்

தாவிப்பிடித்து விட முடியா தென்றாலும் அத் திக்கில் அடைந்த வெற்றிகள் சோவியத் மக்களுக்கு மிகவும் பூரிப்பூட்டியது. ஐந்தாண்டுத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களை நாலேகால் ஆண்டுகளில் சாதித்து விட்டோம் என்ற உணர்ச்சி சோவியத் மக்களுக்கு ஊக்கமுடன் உள்வலியும் ஊட்டியது. எனவே, சமதர்ம சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையிலுள்ள முட்டுக்கட்டைகளைக் களைந்தெறிந்து மேலும் பல படிகள் வேகமாக முன்னேற முடியும் என்ற நம்பிக்கை அவர்களது முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருந்தது.

குறிப்பாக, எஞ்சியுள்ள முதலாளித்துவத் திட்டுகளை அகற்றிச் சுரண்டலுக்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டும். ஏற்றத் தாழ்வுகளையும் மட்டுப் படுத்தவேண்டும் என்பது அவர்களது அரசியல் குறிக்கோளாக அமைந்தது. எனவே, விவசாயத்தில் கூட்டுப் பண்ணைகளை மேலும் வளர்க்கவும் பலப்படுத்தவும் விரும்பினர். முதல் திட்டத்தில் உருவான கூட்டுப் பண்ணைகள் சிறியவை; பலவீனமானவை; போதிய இயந்திரங்கள் கிடையாது. விற்பனைக்குரிய உபரிப் பொருளும் கால்நடைகளும் கொஞ்சமாக இருந்தன. எனவே, கூட்டுப்பண்ணைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் அவற்றின் அளவையும் பெருக்கவேண்டும் என்பது ஒரு முக்கியமான குறிக்கோளாக அமைந்தது.

அதைப்போலவே கைத்தொழிலாளர் பலரையும் ஒருங்கே கூட்டி இணைத்துக் கூட்டுறவுகள் ஏற்படுத்த விரும்பினர். அத்துடன், தனி உடைமையை அடியோடு அகற்றிப் பொது உடைமைதான் ஒப்பற்றதோர் உற்பத்தி முறை என்பதை நிலை நாட்டவேண்டும் என்பது மற்றொரு குறிக்கோளாக அமைந்தது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் தூண்டப்பட்ட தொழில் வளர்ச்சியைப் பரந்த அடிப்படையில் கட்டிவளர்த்து, சோவியத் பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளையும் இயந்திரமயமாக்குவது தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சிறப்பான நோக்கமாகும். ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்ட பல்வேறு கனரகத் தொழில்களையும் கட்டிமுடிப்பது, புத்தம்புதுத் தொழில்கள் பலவற்றைத் தோற்றுவிப்பது, அத் தொழில்களை அடக்கியாண்டு அவற்றின் வினைநுட்பங்களை ஆய்ந்தறியும் ஆற்றலைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தைத் தொழிலாளரிடையே ஊட்டி அதன்மூலம் ஆக்கச் சக்தியைப் பெருக்குவது, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது, பொருள்களின் தரத்தை உயர்த்துவது, நுகர்வுப் பொருள்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற பல உயர்ந்த குறிக்

கோள்களேயும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்முன் வைத் திருந்தது.

நாட்டுவருவாயில் சுமார் 24 சதவிகிதம் முதல் திட்டத்தின்கீழ் முதலீடு செய்யப்பட்டது. இரண்டாது திட்டத்தில் அவ் விகிதம் சற்றுக் குறைந்தது. ஆனல், நாட்டுவருவாய் கணிசமாக அதிகரித்த தன் பயனுக மொத்த முதலீடு முதலாவது திட்டத்தைக் காட்டிலும் கொஞ்சங் குறைய இரண்டு மடங்காக இருந்தது.

புள்ளி விவரங்களின் வாயிலாகப் பார்த்தால், முதலாவது திட்டத்தில் கிட்டத்தட்ட 64·6 பில்லியன் ரூபிள் முதலீடு செய்யப் பட்டது. இரண்டாவது திட்டத்தில் அத் தொகை 133·4 பில்லியனுக உயர்ந்தது. இதில் பாதிக்குமேல் (69·5 பில்லியன்) தொழில்துறை யில் ஈடுபடுத்தப்பட்டது. 15·2 பில்லியன் விவசாயத்துக்கென ஒதுக் கப்பட்டது. போக்குவரத்தைப் பெருக்குவதற்காக 26·3 பில்லியன் செலவிட எண்ணினர்.

தொழில் வளர்ச்சியில் கனரகத் தொழில்கள் முதலிடம் பெற்றன. குறிப்பாக, இயந்திரங்களே உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரத் தாய்களேப் (Mother machines) போற்றி வளர்ப்பதுடன், மின்சார இயந்திர நுணுக்கத் தொழில்களும், இரும்புத் தொழில் களும் முக்கியத்துவம் பெற்றன. மின்சார உற்பத்தியும் இரும்பு— எஃகு உற்பத்தியும்தான் தொழில் வளர்ச்சிக்கு மூலாதாரமானவை என்பதை அவர்கள் நன்குணர்த்திருந்தனர். இரசாயனத் தொழில் களும் ஓரளவு முக்கியத்துவம் பெற்றன. குறிப்பாக இரசாயன உரங்களின் முக்கியத்துவத்தைச் சோவியத் தலைவர்கள் நன்குணர்ந் திருந்தனர். தொழில்களே வேகமாகக் கட்டி வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் அவர்களே உந்தியது. எனவே, கட்டிடத் தொழிலுக் கும் ஊக்கமளிக்கப்பட்டது. இலகு தொழில்களேயும் உணவுத் தொழில்களேயும் வளர்ப்பதன்மூலம் நுகர்வுப் பொருள்களின் உற் பத்தியைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுவும் இரண்டாவது திட்டத்தில் முக்கிய இடம் வகித்தது.

தொழில் வளர்ச்சியைப் பெருக்கி விஞ்ஞநுட்ப அறிவைப் பரப்பு வதன்மூலம் ஆக்கச்சக்தியை 63 சதவிகிதமாக அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்பயனுக உற்பத்திச் செலவு களே 26 சதவிகிதம் குறைக்கலாம்; பொருள்களின் தரத்தையும் உயர்த்தலாம் என எண்ணினர்.

கூட்டுப்பண்ணே இயக்கத்தை முழுமைப் படுத்தி, அதன் இயந்திர அடிப்படையைப் பலப்படுத்துவன்மூலம் விவசாய உற்பத்

தியை 13·1 பில்லியன் ரூபிளிலிருந்து 26·2 பில்லியன் ரூபிளாக இரட்டிக்க விரும்பினர். அதேபோல் இரயிலமூலம் கொண்டு செல்லப்பட்ட பொருள்களின் மதிப்பையும் கொஞ்சங்குறைய இரண்டுமடங்காக்க விரும்பினர். இயந்திர நுணுக்க அறிவைப் பரப்பும்பொருட்டு 5 மில்லியன் தொழிலாளரையும், 0·85 மில்லியன் தொழில் நுட்பப் பணியாளரையும், 03·4 மில்லியன் பொறியாளரையும், பயிற்றுவிக்கத் திட்டமிட்டனர். பொருளாதாரத்தில் பின் தங்கிப்போயிருந்த கிழக்கத்திய மாநிலங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் கனரகத் தொழில்களுக்கென ஒதுக்கப்பட்ட மூலதனத்தில் பாதியை அப் பகுதியில் ஈடுபடுத்த விரும்பினர்.

### தொழில் வளர்ச்சி

தொழில் உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 16·5 சதவிகிதமாக வளர்ப்பதன்மூலம் 2 ஆண்டுகளில் இரட்டிக்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது. ஏற்கெனவே நிர்மாணிக்கப் பெற்ற கனரகத் தொழில்கள் பயன்கொடுக்கத் தொடங்கியதால் நுகர்வுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பும் இருந்தது. அதன் பயனாக, முதற்கருவிப் பொருள்களை ஆண்டொன்றுக்கு 14·5 சதவீதமும் நுகர்வுப் பொருள்களை 18·5 சதவீதமும் அதிகரிப்பதெனத் திட்டம் முடிவு செய்தது. பருத்தி, கம்பளித் துணிகளின் உற்பத்தியையும் செருப்பு, சப்பாத்து போன்ற காலணிகளின் உற்பத்தியையும் இரட்டிப்பது, பள்ளி மாணவருக்கு வேண்டிய பொருள்களின் உற்பத்தியை மும்மடங்காக்குவது போன்ற இலக்குகளும் இரண்டாம் திட்டத்தில் இடம் பெற்றன. பல்வேறு நிலைகளிலுமுள்ள தொழில்களுக்கிடையே இருந்த செங்குத்துத் தொடர்புகளையும் (Vertical relationships) அவற்றின் உற்பத்தியில் முரண்பாடுகளின்றிச் சமநிலை ஏற்படவேண்டியதன் அவசியத்தையும் திட்டம் நன்கு உணர்ந்திருந்தது. எனவேதான், இயந்திர வளர்ச்சிக்கு அடிப்படையான இரும்பு–எஃகுத் தொழிற் சாலைகளுக்கும், இதர கனரகத் தொழில்களுக்கும் இரும்பு சம்பந்த மற்ற (non-ferrous) உலோகத் தொழில்களுக்கும் இத் திட்டம் முக்கிய இடம் அளித்தது. இரும்பை உருக்குவதற்காகப் பல ஆலைகளை நிறுவி, எஃகு உற்பத்தியை 2½ மடங்காகப் பெருக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. அதையொட்டி 45 ஊதுலைகளும் (Blast furnaces) 164 திறந்த அடுப்புகளும் (Open hearths), 107 இரும்பு உலோகம் உருட்டும் ஆலைகளும் (Rolling mills) நிறுவ ஏற்பாடாயிற்று. பல்வேறு வகைப்பட்ட இயந்திரங்களையும் இயந்திரக் கருவிகளையும் உற்பத்தி செய்யவும் நினைத்தனர். இயந்திரங்களை உற்பத்தி செய்யக்கூடிய பிரமாண்டமான இயந்திரங்களை நிறுவுவதன்மூலம்

இத்துறையில் சுயதேவைப் பூர்த்தியை எய்துவதென முடிவாயிற்று. 200 புதுமாதிரிகளை உருவாக்கி இயந்திரக் கருவிகளின் உற்பத்தியை 2½ மடங்காகப் பெருக்கவும் திட்டமிடப்பட்டது.

செம்பு, துத்தநாகம், அலுமினியம், தகரம் முதலிய பல இரும்பு சம்பந்தமற்ற உலோகங்களின் உற்பத்தியும் முக்கியத்துவமும் வகித்தது. இந்த உலோகங்கள் யூரல் மலைச்சாரலிலும், அதற்கும் கிழக்கேயுள்ள சைபீரியப் பகுதியிலும் செறிந்து கிடந்தன. உதாரணமாக, யூரலிலும் காசாக்கியஸ்தானிலுள்ள பால்காஷ் (Balkhash) குளக்கரையிலும் செம்பு மிகுதியாகக் காணப்பட்டது; யூரலிலும் சைபீரியாவைச் சேர்ந்த காமரோவோ (Kamerovo) பகுதியிலும் நிறையத் துத்தநாகம் கிடைத்தது; நீப்பர், வால்கா நதி தீரங்களில் ஏராளமான அலுமினியம் கிடைத்தது; காசாக்கிஸ்தானிலுள்ள சிம்கெண்டில் (Chimkent) நிறைய ஈயம் கிடைத்தது. ஆனால், இந்த உலோகங்களை உருக்கி எடுப்பதற்கு 25,000 கிலோ வாட் மணி (KWH) மின்சார சக்தி தேவையாக இருந்தது. ஆனால், முதலிரண்டு திட்டங்களின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட பல பெரிய மின்சாரத் திட்டங்களின்மூலம் யூரல், மத்திய ஆசியா, சைபீரியா, பாய்க்கால் பகுதிகளும் அதற்கும் கிழக்கேயுள்ள சில பகுதிகளும் பெரிதும் பயன்பெற்றன. இர்டிஷ் (Irtysh) நதியின் மேற்பகுதியிலுள்ள செமிபிளான்டின்ஸ்க் (Semiplantinsk)-ல் 2 மில்லியன் கிலோ வாட் (KW) மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் ஒன்றும், அங்காரா நதியின்மேல் 13 மில்லியன் கிலோவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டமொன்றும் நிர்மாணிக்கப்பட்டன. பின்னர் மூன்றுவது திடடத்தின்போது வால்காவில் மிகப் பெரிய தொரு மின்சாரத் திட்டம் அமைக்கப்பட்டது. இத் திட்டங்களிலிருந்து கிடைத்த மின்சாரச் சக்தியினல் உலோகத் தொழில் செழித்து வளரலாயிற்று. மேலும், சைபீரியாவிலுள்ள குஸ்னெட்ஸ்க் பகுதியிலும், பாய்க்கால் பகுதியிலும் நல்ல நிலக்கரி கிடைத்ததால் அங்கே இரும்பு இயந்திரங்கள், இரசாயனம் முதலியனவும் அவற்றைச் சார்ந்த வேறு பல தொழில்களும் ஓங்கலாயின. எனவே, இப் பகுதிகள் மிகவும் தொழில் முக்கியத்துவம் நிறைந்தவையாக மாறி வந்தன.

### போக்குவரத்தும், தொழில்களின் இட நிர்ணயமும்

துரிதமான தொழில் வளர்ச்சியின் பயனகப் போக்குவரத்துச் சாதனங்களின்மீது தாங்கொணுப் பளு சுமத்தப்பட்டது. உதாரணமாக யூரலில் கிடைத்த இரும்பை உருக்க குஸ்னெட்ஸ்க்கிலுள்ள நிலக்கரியைக் கொண்டுவரவேண்டியதிருந்தது. மேலும், யூரலிலுள்ள

கனரகத் தொழில்களுக்கு டோனட்ஸ் பகுதியிலுள்ள உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. இங்ஙனம் மூலப் பொருள்களுக்காக ஒரு பகுதி மற்றொன்றின்பால் சார்ந்ததால் போக்குவரத்துச் சாதனங்கள் சக்திக்கு மிஞ்சிய பொறுப்புகளை ஏற்கவேண்டியதாயிற்று. அதுமட்டுமின்றித் தானியங்களும் முன்னைவிட அதிகமாக இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லவேண்டிய அவசியம் இருந்தது. புரட்சிக்கு முன்னர் ஏற்றுமதியான உபரிப் பொருள்கள் பெரும்பாலும் ஐரோப்பிய ரஷ்யாவிலிருந்து கருங்கடல் கரையிலுள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. உபரியில் பெரும் பகுதி யுக்ரெயினிலிருந்து கிடைத்தது; 10 சதவிகிதமே யூரலுக்குக் கிழக்கே இருந்து வந்தது. முதலிரண்டு திட்டங்கள் அமுலுக்கு வந்தபோது தானிய ஏற்றுமதி குறைந்தது. ஆனால், உள்நாட்டில் தானியங்கள் வெகுதூரம் பயணம் செய்யவேண்டியதிருந்தது. உபரியில் சுமார் 40 சதவிகிதம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப் பாலுள்ள ஆசியப் பகுதிகளிலிருந்து வரவேண்டியதிருந்தது. இத்தகைய மாறுதல்களால் இருப்புப் பாதைகளின் வாயிலாக நடைபெற்ற போக்குவரத்து 5 மடங்காக அதிகரித்தது. ஆனால், இருப்புப் பாதைகள் 50 சதவிகிதமே வளர்ந்தன. எனவே, இருப்புப் பாதைகளின்மீது ஏறிய சுமை மும்மடங்குக்கும் அதிமாகயிற்று. இதை ஈடு செய்யும் பொருட்டு இரண்டாவது ஐத்தாண்டுத்திட்டம் 2500 மைல் புதிய இருப்புப் பாதைகளை அமைத்தது. என்ஜின்களிலும் மின்சார சக்தியையும், டிசல் எண்ணெயையும் (Diesel oil) பயன்படுத்த ஆரம்பித்தனர். கால்வாய்களுக்கும் ரோடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. எனினும், போக்குவரத்துக்கான தேவைகள் பூர்த்தியாகவில்லை. அதன் காரணமாகப் பளுவான மூலப்பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு ஏற்றுமதி செய்வதைக் குறைத்து அம் மூலப்பொருள்கள் கிடைக்கும் இடத்திலேயே அவற்றை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குஸ்னெட்ஸ்க் பகுதியிலிருந்து யூரலுக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வது குறைக்கப்பட்டது. பதிலாக யூரலிலுள்ள தொழிற்சாலைகள் பெரும்பாலும் மின்சார சக்தியைப் பயன்படுத்தத் தொடங்கின. குஸ்னெட்ஸ்க் பகுதி ஒரு தொழில் கேந்திரமாகப் பரிணமித்தது. அப் பகுதியிலுள்ள டோம்ஸ்க் (Tomsk), ஸ்டாலின்ஸ்க் (Stalinsk) முதலிய நகரங்களில் கனரகத் தொழில்கள் வேரூன்றின. அதைப் போலவே பால்காஷ், பாய்க்கால் பகுதிகளும் அதற்கப்பாலுள்ள பகுதிகளும் தொழில் வளம் பெற்று விளங்கின. சுருங்கக்கூறின் முன்னொரு காலத்தில் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் காலனிகளாக விளங்கிய ஆசியப் பகுதிகள் ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ்த் தொழில் மயமாகி வந்தன. நாட்டின் பல தொழில்கள் நாளடைவில் இப் பகுதிகளை நோக்கி நகரலாயின.

**தொழில் நிருவாகம்**

தொழில் நிருவாகத்திலும் பல விரும்பத்தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டன. ஆலைகளை அடிப்படையாகக்கொண்டு கீழிருந்து மேலாகத் தொழில் நிருவாகம் திருத்தி அமைக்கப்பட்டது. மேலதிகாரிகள் அனுவசியமாக ஆலை நிருவாகத்தில் தலையிட அனுமதிக்கப்படவில்லை. மாகாணங்களிலும் குடியரசுகளிலுமுள்ள நிருவாக ஸ்தாபனங்களுக்கு அதிக உரிமைகள் வழங்கப்பட்டன. தொகுப்புகள் கைவிடப்பட்டன; டிரஸ்டுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது; ஆலைகளுக்கும் தொழில் நிருவாகத்தின் தலைமைப் பீடங்களுக்கும் கூடியமட்டும் நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. திட்டங்களை நிறைவேற்றுவதில் தொழில் நிருவாகிகள் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அதற்கான பொறுப்புகளையும் யாரும் தட்டிக்கழிக்க இடமளிக்கப்படவில்லை. நிருவாகிகளையும், நிபுணர்களையும் நியமிக்கும் பொறுப்பு தலைமை ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் ஆலையிலும் நிருவாகப் பொறுப்பு வகித்தவர்கள் ஒரு குறைந்தபட்சத் தொழில் விஞ்ஞானுட்ப அறிவைப் பெறவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர்.

தொழிலாளரிடையேயும் பல புதிய குணநலன்கள் தோன்றலாயின. முன்னர் கட்சியில் பற்றுக்கொண்டிருந்த இளந்தொழிலாளர் பலர் கடின உழைப்பு நல்கும் அதிர்ச்சிப் படையில் (Shock Brigade) அங்கம் வகித்து உற்பத்தியைப் பெருக்க முயன்றனர். ஆனால், இப் பெருக்கம் விஞ்ஞானுட்பத் திறனால் ஏற்பட்டதன்று; கடின உழைப்பால் உண்டாகியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்த் தொழிலாளரிடையே பரவிவந்த விஞ்ஞானுட்ப அறிவு வேரூன்றி வளர்ந்து கனி கொடுக்க ஆரம்பித்தது. குறிப்பாக ஸ்டாக்கனேவின் தலைமையின்கீழ் உருவான இயக்கத்தின் காரணமாகத் தொழிலாளரின் ஆக்கச்சக்தி எதிர்பார்த்ததற்கும் அதிகமாக வளர்ந்தது. அதே சமயத்தில் ஸ்டாக்கனேவ் இயக்கத்தில் (Stakhanov movement) பங்குகொண்டவர்களுக்குக் கணிசமான கூலி உயர்வு கொடுத்ததன் பயனாக மொத்தக் கூலிப் பட்டியல் (Total wages bill) 150 சதவிகிதமாக உயர்ந்தது. ஆனால், திட்டத்தில் 55 சதவிகித உயர்வு மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

**கூட்டுப் பண்ணைகளின் அபிவிருத்தி**

பல துறைகளில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்தான் முன் வைத்த இலக்குகளை எட்டிப் பிடிக்க முடிந்தது. கூட்டுப் பண்ணைகள் நாடெங்கும் பரவியதால் விவசாய உபரிப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கலாயின. உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட அளவைக் கூட்டுப்பண்ணைகள்

அரசாங்கத்திடம் ஒப்படைப்பதென்று முன் கூட்டியே ஒப்பந்தம் செய்யும் வழக்கமிருந்தது. 1933-லிருந்து இது கட்டாய வசூலாக மாறியது. விலையையும் அரசாங்கமே நிர்ணயம் செய்தது. கட்டாய வசூல் போக மேற்கொண்டு விற்கப்படும் உபரிப் பொருள்களை அரசாங்கம் அதிக விலைகொடுத்து வாங்கியது. அரசாங்கத்திடம் மட்டுமின்றிக் கூட்டுப்பண்ணைகளை ஒட்டிய சந்தைகளிலும் உபரிப் பொருள்கள் விற்பனையாயின். இத்தகைய ஏற்பாடுகளால் விற்பனைக்குரிய உபரிப் பொருள் தாராளமாகக் கிடைத்தது. உற்பத்தியைச் சார்ந்திராமல் ஒரு குறிப்பிட்ட அளவு உபரிப் பொருள் கட்டாயமாகக் கிடைக்க வசதி இருந்தது. 1938-ல்கிடைத்த உபரிப் பொருள் 10 ஆண்டுகளுக்கு முன்னால் கிடைத்ததைவிட $2\frac{1}{2}$ மடங்கு அதிகமாக இருந்தது. ஏற்றுமதியும் குறைந்து போனதால் உணவுப்பொருள்கள் தாராளமாகக் கிடைத்தன. ஆதலின் உணவுப் பங்கீட்டுக்கு அவசியமில்லாமற் போயிற்று. அத்துடன் நாடெங்கணும் படர்ந்திருந்த அரசாங்க, கூட்டுறவு வணிக ஸ்தாபனங்கள் திறமையுடன் பொருள்களை வினியோகம் செய்யும் அனுபவம் பெற்றிருந்ததால் தயக்கமின்றி உணவுப் பொருள் பங்கீட்டைக் கைவிட முடிந்தது. இரண்டாவது உலகப் போர் தொடங்கும்வரை உணவுப் பங்கீட்டுக்கு அவசியமில்லாது போயிற்று. உணவுப் பொருள்களின் விலை இறங்க ஆரம்பித்தது.

கூட்டுப் பண்ணைகளால் விளைந்த வேறு சில நன்மைகளும் உண்டு. விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்தியதன்மூலம் விவாசாயிகள் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த கிராமங்களிலிருந்து கணிசமான அளவில் விடுதலைபெற முடிந்தது. கிட்டத்தட்ட 20 மில்லியன் பேர் தரிசாகக்கிடந்த நிலங்களில் போய்க் குடியேறி அரசாங்கத்தின் சலுகைகளுடன் அவற்றைத் திருத்திப் பண்படுத்திப் புத்தம் புதிய கூட்டுப்பண்ணைகளை அமைத்தனர். ஆனால், பெரும்பான்மையோர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வந்த தொழில்களிலும் போய்க் குடி யேறினர். அதன் பயனாக மக்கள்தொகையில் நகரவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. 1929 முதல் 1939 வரையுள்ள காலத்தில் சோவியத் யூனியனின் மக்கள் தொகை 129 சதவிகிதம் அதிகரித்தது. ஆனால், கிராமவாசிகளின் தொகை 2 சதவிகிதம் குறைந்தது. நகரவாசிகளின் எண்ணிக்கையோ இரண்டு மடங்காயிற்று.

**உலகச் சூழ்நிலையால் ஏற்பட்ட மாறுதல்கள்**

தொழில் வளர்ச்சியிலும் விவசாயத்திலும் இவ்வாறு விறுவிறுப்புத் தோன்றியபோதிலும், சூழ்நிலை சோவியத் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் குந்தகம் விளைவித்தது. ஜெர்மனியில்

ஹிட்லரின் தலைமையின்கீழ் நாஸிஸமும் (Nazism) இத்தாலியில் முஸலோனியின் தலைமையில் (பாஸிஸமும்) விசுவரூபம் எடுத்தன. ஆயுதக்குறைப்புக்கான உருப்படியான திட்டங்கள் எவையும் உருவாகவில்லை. இந் நிலையில் சோவியத் யூனியன் தனது பாதுகாப்புக்கான தேவைகளை நாடியதில் வியப்பொன்றுமில்லை. சூழ்நிலையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தின் காரணமாகத் தொழில்களின் தராதரம் மாறுபட்டது. கனரகத் தொழில்களின் வளர்ச்சியை ஏனைய தொழில்களைக் காட்டிலும் அதிவேகமாக முடுக்கவிட வேண்டியதாயிற்று. அதன்விளைவாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கனரகத் தொழிலுற்பத்தி இரட்டித்தது. எரி பொருளுற்பத்தி சற்றுப் பின்தங்கியது. எஃகு உற்பத்தித் திட்டத்தை மிஞ்சியது. இயந்திரங்களின் உற்பத்தி மும்மடங்காக அதிகரித்தது (இரண்டுமடங்காக்குவதே திட்டம்). மோட்டார் வண்டி உற்பத்தி எதிர்பார்த்ததுபோல் எண்மடங்காகப் பெருகியது. தொழிலாளருக்குக் கிடைத்த சராசரி மின்சார சக்தி இரண்டுமடங்குக்கும் அதிகமானது. 1928 முதல் 1938 வரையுள்ள பத்து ஆண்டுகளில் எஃகு உற்பத்தி நான்கு மடங்காகவும், நிலக்கரி $3\frac{1}{2}$ மடங்காகவும், எண்ணெய் மும்மடங்காகவும், மின்சாரச்சக்தி ஏழு மடங்காகவும் பெருகியது. அத்துடன் ஆகாய விமானங்கள், இரசாயனப் பொருள்கள், அலுமினியம், நிக்கல் போன்ற பல புதுப்பொருள்களும் உற்பத்தி செய்யப்படலாயின. இயந்திரக் கலப்பை, இரயில் என்ஜின்கள் முதலியவற்றின் உற்பத்தியில் உலகிலேயே முதலிடத்தையும், எண்ணெய், தங்கம், பாஸ்பேட்டுகள் முதலியவற்றில் இரண்டாவது இடத்தையும் சோவியத் யூனியன் எட்டிப் பிடித்தது. எனினும், இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சோவியத் யூனியன் எவ்வளவு பின்தங்கிப்போயிருந்தது என்பது தெரியவரும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் சோவியத் யூனியன் சராசரி மின்சார உற்பத்தி ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் இருந்ததில் மூன்றில் ஒன்றாகவும் அமெரிக்காவில் இருந்ததில் ஐந்தில் ஒன்றாகவும் இருந்தது. எஃகில் தனிநபர் உற்பத்தி இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் இருந்தது போல $\frac{1}{3}$ முதல் $\frac{1}{2}$ ஆகவும், அமெரிக்காவில் இருந்ததுபோல் மூன்றில் ஒரு பகுதியாகவும் இருந்தது. நிலக்கரி உற்பத்தி இங்கிலாந்தின் உற்பத்தியில் ஆறிலொரு பகுதியாகவும், ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இருந்ததில் $\frac{1}{5}$ முதல் $\frac{1}{4}$ பங்காகவும் இருந்தது.

### நுகர்வுப் பொருளுற்பத்தியில் ஏமாற்றம்

நுகர்வுப் பொருள் உற்பத்தியில் திட்டத்துக்கும் சாதனைக்கும் பெரிய இடைவெளி இருந்தது. பருத்தி, கம்பளித் துணிகளின் உற்பத்தியை இரண்டு மடங்காகப் பெருக்குவது என்பது திட்டம்,

ஆனல் உண்மையில் அவை முறையே 40, 22 சதவிகிதமே அதிகரித்தன. தனிநபர் துணி உற்பத்தி இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்ததில் மூன்றில் ஒரு பகுதியாக இருந்தது. செருப்பு, சப்பாத்து முதலிய காலணிகளின் தனிநபர் உற்பத்தியும் இங்கிலாந்தில் இருந்ததில் பாதியாக இருந்தது. உணவுப் பொருள்களின் நிலையும் அவ்வளவு உற்சாகம் ஊட்டுவதாக இல்லை. சீனி உற்பத்தி இரண்டு மடங்கானது ஆனல், தனிநபருக்கு கிடைத்த தானியம் போருக்கு முன்னல் இருந்ததைவிட 50-60 சதவிகிதமே அதிகமாக இருந்தது. காய்கறிகளின் நுகர்ச்சியும் 20-25 சதவிகிதமே உயர்ந்தது. இறைச்சியும் பால்பண்ணை உற்பத்தியும் 1928-ல் இருந்ததைவிடக் குறைவாகவே இருந்தன. பொதுவாக நகரங்கள் கிராமங்களைக் காட்டிலும் செழிப்புற்று விளங்கின. ஆனல், சோவியத் யூனியன் முழுவதையும் எடுத்துக்கொண்டால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை. ஹிட்லர் முழக்கிய போர் முரசு அதற்கு மூலகாரணமாக இருந்தது என்பது உண்மை. காரணம் எதுவாயினும் அன்றைய நிலையில் சோவியத் பொருளாதாரம் ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் கீழான நிலையில் இருந்தது என்பது தெளிவு. ஆனல், தனது வளர்ச்சி வேகத்தைத் துரிதப்படுத்துவதன் மூலம் விரைவில் ஐரோப்பிய நாடுகளை மிஞ்சிவிடலாம் என்ற நம்பிக்கை சோவியத் யூனியனிடம் குடிகொண்டிருந்தது.

### வாழ்க்கைத் தர உயர்வு

நுகர்வுப் பொருளுற்பத்தியில் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லையெனினும், மொத்தத்தில் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. இவ்வுண்மையைப் பல புள்ளி விவரங்களின் வாயிலாகக் காணலாம். முதலாவது, நாட்டு வருவாய் இரண்டுமடங்குக்கு மேல் அதிகரித்தது. 1932-ல் 46 மில்லியன் ரூபிளாக இருந்த அவ்வருவாய் 1937-ல் 96 மில்லியனுக உயர்ந்தது. (அடிப்படை: 1926-27 விலை காட்டி). ஏற்கெனவே வேலையில்லாத திண்டாட்டம் பழங்கதையாயிற்று. இரண்டாவது திட்டத்தில் புதிதாக 6 மில்லியன் மக்கள் உழைப்பாளர் படையில் சேர்ந்தனர். தொழிலாளரின் கூலி இரட்டித்தது. 1932-ல் 1434 ரூபிளாக இருந்த அவர்களது சராசரிக் கூலி 1937-ல் 3005 ரூபிளாக உயர்ந்தது. அதேகாலத்தில் விலைவாசிகள் குறைந்தன. எனவே, சராசரி மெய் வருவாய் இரண்டு மடங்குக்கும் அதிகமாக இருந்தது. கூட்டுப்பண்ணையில் பணியாற்றிய விவசாயிகளின் வருவாயிலும் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டது.

1932-ல் கூட்டுப் பண்ணை விவசாயக் குடும்பத்தின் சராசரி வருவாய் ஆண்டொன்றுக்கு 2132 ரூபிளாக இருந்தது. 1937-ல் அது 5843ஆக உயர்ந்தது. அதாவது ஐந்தே ஆண்டுகளில் அவர்களது வருவாய் 170 சதவிகிதம் அதிகரித்தது. அத்தியாவசியமான உணவுப் பொருள்களிலும் போதிய முன்னேற்றம் காணப் பட்ட தால் உணவுப்பங்கீடு அவசிய மில்லாது போயிற்று.

பொது நல வசதிகளிலும் பொதுச் சேவைகளிலும் அரசாங்கம் செலவிட்ட பணமும் கணிசமாக அதிகரித்தது. உதாரணமாக, கலாசாரம் பொதுநல வசதிகளுக்கான வகையில் அரசாங்கச் செலவு 370 சதவிகிதம் அதிகரித்தது. வீட்டு வசதியைப் பெருக்கு வதற்காக மட்டும் இரண்டாவது திட்டத்தில் 16·3 மில்லியன் ரூபிள் செலவிடப்பட்டது குழந்தைகளுக்கு ஏழாண்டுகள் கட்டாயக் கல்வி புகட்டப் பட்டது. பள்ளிக்குழந்தைகளின் எண்ணிக்கை (ஆரம்ப உயர் நிலைப் பள்ளிகள் உட்பட) 8 மில்லியன் அதிகரித்தது. மருத் துவ வசதிகளும் பெருகின. இவ்வாறு பல முனைகளிலும் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.

**முற்றுப்பெருத மூன்ருவது திட்டம் (1938-1941)**

சோவியத் பொருளாதாரம் திட்டமிட்ட பொருளாதார வளரச் சியின் வாயிலாக வீறுநடைபோட்டு சமதர்மத்தை நோக்கி முன்னேறி வந்தபோது முதலாளித்துவப் பொருளாதாரங்கள் மந்தச்சேற்றில் சிச்கிச் சீரழிந்து வந்தன. அதிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளுவதெப்படி என்று தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்தபோது சோவியத் பொருளாதாரம், அவற்றில் பல வற்றைப் பின்ஞல் விட்டுவிட்டு விறுவிறுப்பாக வளர்ந்து வந்தது. இருந்தாலும் மேற்கத்திய வல்லரசுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரரன்சு, ஜெர்மனி ஆகியவற்றேடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சோவியத் யூனியன் ஒரு பின்தங்கிய பொருளதார மாகவே காட்சியளித்தது. ஜப்பானும் சோவியத் யூனியனைவிட பொருளாதாரத்தில் பலம்பெற்று விளங்கியது. எனவே, வேகமான வளர்ச்சியின்மூலம் பொருளாதாரத்தைப் போட்டியால் இந் நாடு களைத் தோற்கடித்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான குறிக்கோளாக அமைந்தது. இக் குறிக்கோளை மனத்திற் கொண்டு முதலீட்டை முதல் இரண்டு திட்டங்களில் இருந்ததைக் காட்டிலும் இரண்டு மடங்காக்க வேண்டுமெனத் திட்டமிட்டனர். தொழில் மயமாக்கும் முயற்சியில் மேலும் முனைவது; கூட்டுப் பண்ணைகளைப் பலப்படுத்துவது; மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது; கலாசாரத்தை மேம்படுத்துவதும் போன்ற பல குறிக்கோள்களை முன்வைத்திருந்தனர். கனரகத் தொழில்கள் பல எதிரிகளின்

கையில் சிக்காதவாறு யூரல் மலைக்குக் கிழக்கே நிறுவலாயினர். அத்துடன் இயந்திர நுணுக்க அறிவைக் கணிசமான அளவில் பெருக்க முயன்றனர். ஆக்கச்சக்தியைப் பெருக்கக்கூடிய ஊக்க முயற்சிகளையும் பரப்பினர். சமதர்ம சமுதாயத்தில் அசைக்க முடியாத பற்றுக் கொண்ட தொழிற்படை இன்றியமையாததாக இருந்தது.

அதே சமயத்தில் உலக அரங்கில் நடந்துவந்த முக்கியமான நிகழ்ச்சிகளைக் கண்டு அவர்கள் வாளாவிருக்கவில்லை. குறிப்பாக, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி முதலிய எதேச்சாதிகார நாடுகள் தங்கள் இராணுவ பலத்தைப் பெருக்குவதன்மூலம் அண்டை அயல் நாடுகளை ஆக்கிரமிக்கக் கூடிய ஓர் அணியாக உருவெடுத்தது. ஐரோப்பாவில் ஜெர்மனியும் ஆசியாவில் ஜப்பானுமாகத் தங்கள் ஆக்கிரமிப்பு வேலைகளில் இறங்கிச் சின்னஞ்சிறு கபளீகரம் செய்துவந்தன. ஆஸ்டீரியாதான் முதன்முதலாக ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்குப் பலியானது. அதன்பின் செக்கோஸ்லோவேக்கியாவைக் கைப்பற்றிப் போலந்தையும் தாக்கியது. அதன் பின் அதன் கண் மேற்குஐரோப்பிய நாடுகளின்மீது திரும்பியது. பிரான்ஸின் ஒரு பகுதியும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது. ஹிட்லருக்கு முன்னரே ஜப்பான் ஆசியாவில் தனது ஆக்கிரமிப்பு வேலையை ஆரம்பித்தது. மக்கள்தொகையில் தன்னைவிடப் மிகப் பெரிய சீனாவின்மீது படையெடுத்து மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. இத்தாலியும் அபிசினியாவை ஆக்கிரமித்தது. இவ்வாறு மேற்கிலும் கிழக்கிலுமிருந்து வந்த அபாயங்களைத் தடுத்து நிறுத்துவது அவசியமாயிற்று. மேற்கத்திய வல்லரசுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் விரைவில் ஓர் அணிவகுத்து ஹிட்லருக்கு எதிராகக் கச்சை கட்டுவதாக இல்லை. தன்னந்தனியே இரு பெரும் எதிரிகளை எதிர்த்து முறியடிக்கக்கூடிய பலம் சோவியத் யூனியனுக்கு இல்லை. எனவே, ஒரு சில ஆண்டுகளாவது ஹிட்லரை சோவியத் யூனியன் பக்கம் திரும்பாமல் இருக்கச் செய்வது இன்றியமையாததாக இருந்தது. எனவே, 1939-ல் ஹிட்லருடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டது. இருப்பினும், வெகு விரைவில் ஹிட்லர் தனது மிருக பலத்தைச் சோவியத் யூனியனின் மீது திருப்புவான் என்பது ஸ்டாலின் போன்ற சோவியத் தலைவர்களுக்கு வெட்டவெளிச்சமாக இருந்தது. எனவே, அதற்கேற்ப தங்கள் பொருளாதார வளர்ச்சியை மாற்றி அமைக்க முயன்றனர்.

போர் மேகங்கள் மூன்றுவது திட்டத்தின்மீது நிழலிட்டன. அதன் விளைவாகப் பாதுகாப்புச் செலவுகள் மும்மடங்காயின. இராணுவத்தின் உயிர்நாடிகளாக விளங்கிய போக்குவரத்து

இயந்திரங்கள், கருவிகள், எண்ணெய் முதலிய தொழில்களின் முக்கியத்துவம் அதிகரித்தது. அப் பொருள்களைப் பண்டக சாலைகளில் நிரப்பிவைக்க வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்தனர். மூன்ருவது திட்டத்தை இரசாயனத் திட்டமாக்க வேண்டும் என்ற ஆவலும் திட்டத்தில் பிரதிபலித்தது. கிட்டத்தட்ட 7000 மைல் நீளமுள்ள புதிய இருப்புப் பாதைகளை அமைக்க ஏற்பாடாயிற்று. கால்வாய்களும் சாலைகளும் மிகவும் முக்கியத்துவம் பெறலாயின. வால்கா நதித் தீரத்துக்கும் யூரல் மலைத்தொடருக்குமிடையில் பல எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. அதன் காரணமாக இப் பகுதி 'இரண்டாவது பாகு' என்று வழங்கப்படலாயிற்று. இராணுவத் தேவைகளைப் பூர்த்திசெய்வதிலேயே கவனம் செலுத்தியதால் நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி பெரிதும் தடையுற்றது. மொத்த முதலீட்டில் 15 சதவிகிதமே நுகர்வுப் பொருள்களுக்கென ஒதுக்கப்பட்டது.

எனவே, போருக்குத் தயாரான காரணத்தால் அத் துறையில் செலுத்தப்பட்ட முதலீடு அதிகரித்தது. ஏனைய முதலீடும் உற்பத்தியும் போரின் தேவைகளை அனுசரித்தே மேற்கொள்ளப்பட்டன. எனவே, நுகர்வுப் பொருள்களின் முக்கியத்துவம் குறைந்தது. இருப்பினும், 1938-41வரை தொழிலுற்பத்தியின் சராசரி வளர்ச்சி ஆண்டுக்கு 13 சதவிகிதமாக இருந்தது. ஆனல், போருக்கான தொழில்களின் உற்பத்திச் சராசரி ஆண்டுக்கு 39 சதவிகிதமாக இருந்தது. மொத்தத்தில் 3000 புத்தம்புது தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. ஆனல், மூன்ருவது திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்கள் பெரும்பாலும் அளவில் சிறியனவாக இருந்தன. மின்சாரமும் அவ்வளவு பிரமாண்டமான நிலையங்களிலிருந்து உற்பத்தியாகவில்லை. எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்புவது ஒரு காரணம். விரைவில் கட்டிமுடித்து உற்பத்தியைத் தொடங்குவது மற்ருெரு காரணம். மொத்தத்தில் போருக்கு முந்திய மூன்றரை ஆண்டுகளில் தொழிலுற்பத்தி 52 சதவிகிதம் அதிகரித்தது. இயந்திர நுணுக்கத் தொழில்களின் உற்பத்தி 76 சதவிகிதம் அதிகரித்தது. தொழிலாளரின் ஆக்கச்சக்தி 33 சதவிகிதம் உயர்ந்தது.

விவசாயத்தில் வியக்கத்தக்க வெற்றி எதுவும் கிடைக்கவில்லை. ஆனல், கிராமத்தில் சமதர்மத்தின் திட்டுகள் விரிவடைந்தன. 1940-ல் இயந்திரக் கலப்பைகளின் எண்ணிக்கை 683, 800 ஆக அதிகரித்தது; 182,000 இணைக்கப்பட்ட அறுவடை இயந்திரங்கள் வேலை செய்துவந்தன. சமதர்ம சக்திகளின் பலத்துக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. அரசாங்கத்தின் கையில் ஒப்படைக்கப்பட

வேண்டிய விற்பனைக்கான உபரிப்பொருளை வசூலிக்கும் முறையும் மாற்றி அமைக்கப்பட்டது. பயிரிடப்பட்ட நிலத்தில் ஏக்கருக்கு இவ்வளவு என்ற முறையை மாற்றிக் கூட்டுப்பண்ணைகளிடமிருந்து மொத்த நிலப்பரப்பில் ஏக்கருக்கு இவ்வளவு என்று நிர்ணயித்தனர். அதன்பயனாக நிலத்தைத் தரிசாகப் போடாமல் பயிரிடும்படி கூட்டுப்பண்ணை விவசாயிகள் தூண்டப்பட்டனர். சோவியத் யூனியனின் கிழக்குப் பகுதிகளில் தரிசாகக் கிடந்த நிலங்கள் பல பக்குவப்படுத்தப்பட்டுப் பயிரிடப்பட்டன. இருப்பினும், 1940-ல் உணவு உற்பத்தி 1913-க்கு முன்னால் இருந்ததைவிட 11 சதவிகிதமே அதிகரித்திருந்தது. இருந்தாலும் விற்பனைக்குரிய உபரிப் பொருள் விவேகமான முறையில் வசூலிக்கப்பட்டதால், உணவுப் பற்றுக்குறை எதுவும் சோவியத் யூனியனைப் பயமுறுத்தவில்லை.

மொத்தத்தில் இரண்டாவது உலகப் போருக்கு முன்னாலுள்ள மூன்றரை ஆண்டுகளில் சோவியத் யூனியனின் நாட்டுவருவாய் 96·3 பில்லியன் ரூபிளிலிருந்து 128·0 பில்லியன் ரூபிளாக உயர்ந்தது. கூலிப்பட்டியல் 50 சதவிகிதம் அதிகரித்தது. பொதுநல வசதிகளும் 16 சதவிகிதம் பெருகியது. பள்ளியில் படித்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமாகவே இருந்தது. இரயில் பாதைகளின் நீளம் 84,900 கிலோமீட்டரிலிருந்து 106,100 கிலோமீட்டராக அதிகரித்தது. சில்லறை வியாபாரமும் 143·7 பில்லியனிலிருந்து. 175·1 பில்லியனாக உயர்ந்தது. புள்ளி விவரங்கள் சிலவற்றை அட்டவணை 11-ல் காணலாம். எனவே, மூன்றாவது திட்டத்தின்கீழ்ச் சோவியத் யூனியனின் தொழில் பலமும், இராணுவ பலமும் ஹிட்லரையும் அவனது ஏவலாள்களையும் முறியடிக்கும் வகையில் மாற்றிமைக்கப்பட்டது என்றால் மிகையாகாது.

**சோவியத் பொருளாதாரத்தின் பலவீனம்**

1941 ஜூன் மாதம் 22ஆம் தேதி ஹிட்லர் சோவியத் யூனியனின் மீது படையெடுத்தான். போர்ப் பிரகடனம் செய்யாமலே ஜெர்மன் படைகள் சோவியத் யூனியனின்மீது பாய்ந்தபோது, சோவியத் பொருளாதாரம் ஜெர்மன் பொருளாதாரத்தைக்காட்டிலும் பலவீனமாக இருந்தது. நிலக்கரி, இரும்பு, எஃகு இயந்திரக் கருவிகள் முதலிய பொருள்களின் உற்பத்தியில் ஜெர்மனியின் கை மேலோங்கி நின்றது. 1938-க்குப் பின்னர் ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்கு ஆளான ஆஸ்டிரியா, செக்கோஸ்லோவேக்கியா முதலிய பகுதிகளையும் சேர்த்துக் கணக்குப்பார்த்தால், மேற்கண்ட தொழில்களில் ஜெர்மனியின் உற்பத்திச் சோவியத் யூனியனைவிட இருமடங்காக இருந்தது. அதேபோன்று ஜெர்மன் நாட்டு வருவாயும் ரஷ்யாவைவிட இரட்டிப்பாக இருந்தது. இந் நிலையில்

ஜெர்மனியை எதிர்த்துத் தாக்குவது என்பது எளிதாக இல்லை. எனவேதான், ஸ்டாலின் காலத்தைக் கடத்துவதற்கான உபாயங்களைக் கையாண்டார் போலும்.

ஒருசில துறைகளில் ரஷ்யா, ஜெர்மனியைக் காட்டிலும் மேம் பட்டு விளங்கியது. இரும்புக் கனிகள், எண்ணெய், செம்பு, ஈயம், அலுமினியம் முதலிய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பொருள் களில் ரஷ்யா பலம்பெற்று விளங்கியது. அத்துடன், இயந்திரக் கலப்பைகள் செய்வதில் முன்னணியில் நின்ற சோவியத் யூனியன், கலப்பைகளுக்குப் பதிலாக டாங்கி (tank) களைச் செய்து குவிப்பது அவ்வளவு கடினமாக இல்லை. மேலும், திட்டமிட்ட பொருளாதார மாகையால் மக்களின் வயிற்றைக்கட்டி நாட்டிலுள்ள உற்பத்திச் சாதனங்களை ஒருமுகமாகத் தாய்நாட்டின் பாதுகாப்புக்கெனச் செலவிடுவதும் எளிதாக இருந்தது. அதேசமயத்தில் சமதர்மப் போதையில் ஊறிய சோவியத் மக்களிடையே கட்டுப்பாடும் தியாக உணர்ச்சியும் ததும்பி நின்றன.

## மேற்கொண்டு படிக்க


Baykov (A), op. cit., Section IV.

Dobb (M), op. cit. (4th Edition, 1957) Chs. 11, 12, 14, & 15.

Pod Kolzin (A), op. cit., Ch. VII.

Schwartz (H), op. cit., 6—11.

Stalin (J), 'Problems of Leninism.'

Stalin (J), 'Economic Problems of Socialism in the USSR.'

## அட்டவணை 11

**குறிப்பிட்ட சில பொருள்களின் உற்பத்தி வளர்ச்சி**

| பொருள் | அளவை | 1913 | 1928 | 1932 | 1937 | 1940 |
|---|---|---|---|---|---|---|
| இரும்பு | மில்லியன் டன் | 4·2 | 3·3 | 6·2 | 14·5 | 14·9 |
| எஃகு | ,, | 4·2 | 4·3 | 5·9 | 17·7 | 18·3 |
| உருட்டிய உலோகம் (rolled metal) | ,, | 3·5 | 3·4 | 4·4 | 13·0 | 13·1 |
| நிலக்கரி | ,, | 29·1 | 35·5 | 64·4 | 128·0 | 165·9 |
| எண்ணெய் | ,, | 9·2 | 11·6 | 21·4 | 28·5 | 31·1 |
| மின்சார சக்தி | பில்லியன் kwh | 1·9 | 5·0 | 13·5 | 36·2 | 48·3 |
| கனிப்பொருள் உரம் (mineral fertilizers) | '000 டன் | 69·0 | 135·0 | 921·0 | 3240·0 | 3027·0 |
| உலோகம் வெட்டும் இயந்திரம் (metal cutting lathes) | '000 உருப்படி | 1·5 | 2·0 | 19·7 | 48·5 | 58·4 |
| சிமெண்டு | மில்லியன் டன் | 1·5 | 1·8 | 3·5 | 5·5 | 5·7 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ரயில் எஞ்சின்கள் - டீசல், மின்சார எஞ்சின் களுட்பட | உருப்படி | 477 | 479 | 829 | 1208 | 928 |
| சாமான் ஏற்றும் வண்டிகள் | '000 | 9·7 | 7·9 | 15·2 | 29·8 | 30·9 |
| இயந்திரக் கலப்பைகள் | '000 | — | 1·3 | 48·9 | 51·0 | 31·6 |
| மோட்டார் வண்டிகள் | '000 | — | 0·7 | 23·9 | 199·9 | 145·4 |
| தானியம் | மில்லியன் டன் | 80·82 | 73 | 95 | 95 | 119 |
| சீனி | '000 டன் | 1347 | 1283 | 828 | 2421 | 2151 |
| காகிதம் | '000 டன் | 197 | 284 | 471 | 832 | 812 |
| பருத்தித் துணி | மில்லியன் மீட்டர் | 2582 | 2678 | 2694 | 3448 | 3954 |
| கம்பளித் துணி | " | 103·0 | 86·8 | 88·7 | 168·3 | 119·7 |
| தோலாலான காலணி | மில்லியன் ஜோடி | 60·0 | 58·0 | 86·9 | 182·9 | 211·0 |
| ரப்பராலான காலணி | " | 38·9 | 36·3 | 64·7 | 84·6 | 69·7 |

(Source: National Economy of the USSR Statistical Returns, Moscow 1957, p. 50—57)

# 9. தாய்நாட்டுப் பாதுகாப்புக்கேற்ற பொருளாதார மாற்றம்

[ஜெர்மன் ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட அழிவு—போருக்குகந்த தொழிலுற்பத்தி—விவசாயத்தின் நிலையும் உணவளிப்பும் — போர்க்காலப் போக்குவரத்து — போருக்கான நிதியாக்கம்.]

ஹிட்லர் சோவியத் யூனியனை ஆக்கிரமித்தபோது 190 டிவிஷன் தரைப்படையினரும், 3500 டாங்குகளும் 5000 விமானங்களும் பயன்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் ஜெர்மன் படை சூறுவளி வேகத்தில் சோவியத் யூனியனை ஊடுருவிப் பாய்ந்தது. அதை உடனடியாகத் தடுத்து நிறுத்தக்கூடிய பலம் சோவியத் யூனியனிடம் இல்லை. முதலாவது, ஹிட்லர் தனது படைப்பலத்தையும் தளவாடங்களையும் பெருக்கியபோது சோவியத் யூனியன் சமதர்ம சமுதாயத்தின் அஸ்திவாரங்களைப் பலப்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தது. எனவே, ஜெர்மனியைப்போல் ஒத்ததோர் இராணுவ இயந்திரம் அதனிடம் இல்லை. இரண்டாவது, ஆக்கிரமிப்புக்குள்ளான நாடுகளின் பொருள்வளத்தையும் ஹிட்லர் தனது இராணுவ முயற்சிகளுக்குப் பக்கபலமாகப் பயன்படுத்தினன். சோவியத் யூனியன் தனது பலத்தையே முழுவதுமாகச் சார்ந்திருக்க வேண்டியதிருந்தது. மூன்ருவது, ஹிட்லரது ஆக்கிரமிப்பு அணியில் சேர்ந்திருந்த ஜப்பான் சோவியத் யூனியனைக் கிழக்குப் பகுதியிலிருந்து தாக்கலாம் என்ற பயம் இருந்தது. எனவே, சோவியத் யூனியன் தனது படைப்பலம் முழுவதையும் ஹிட்லருக்கு எதிராகப் பயன்படுத்த முடியவில்லை. எனவே, எவ்வளவுதான் மும்முரமாகச் சண்டையிட்டபோதிலும் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. எனவே, பால்டிக்கிலிருந்து கருங்கடல்வரையுள்ள நிலப்பரப்பில் பெரும்பகுதி ஜெர்மனியின் கைவசமாகியது. தானியக்களஞ்சியமான உக்ரெய்ன் எதிரிகளின் வசமாயிற்று. தொழில்களின் முதுகெலும்பாக விளங்கிய டோனட்ஸ் பகுதியும் ஹிட்லரின் கையில் சிக்கியது. கிரிமியா, டான், வடக்கு காக்கஸஸ் முதலிய பகுதிகளும் விரைவில் விழுந்துபட்டன. ஆனுல் லெனின் கிராடையும், மாஸ்கோவையும் கைப்பற்றுவது அவ்வளவு எளிதாக இல்லை. எனினும், 40 சதவிகித மக்கள் இப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். 63 சதவிகித நிலக்கரியும், 58 சதவிகித எஃகும், 60 சதவிகித

இரும்புக் கனிகளும், 38 சதவிகித தானியங்களும், 81 சதவிகித பீட் கிழங்குகளும், 40 சதவிகித இரயில் பாதைகளும் எதிரிகளின் கையில் சிக்கின. அதன் விளைவாக 1940 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1941 இறுதியில் பொருளுற்பத்தி அடிமட்டத்தை அடைந்தது. தொழிலுற்பத்தி பாதியாகக் குறைந்தது. அதன் விளைவாக, சோவியத் யூனியனின் இராணுவ பலம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஆயினும், காஸ்பியன் கடற்கரையில் இருந்த எண்ணெய்க் கிணறுகள் எதிரிகளிடம் சிக்காமல் தப்பின. தொழில்களில் பல யூரல் மலைச்சாரலிலும் அதற்குக் கிழக்கேயுள்ள ஆசியப் பகுதி களிலும் தஞ்சம் புகுந்தன. பல சிறு தொழில்கள் வால்கா நதித் தீரத்தில் நிறுவப்பட்டன. டாங்குகளும், ஆகாய விமானங்களும், இதர தளவாடங்களும் யூரல் மலைச்சாரலில் உற்பத்தியாயின. சைபீரியாவிலுள்ள குஸ்னட்ஸ்க் பகுதியில் பல ஆலைகள் குடிபுகுந் தன. கார்க்கோவ், கீயவ் முதலிய நகரங்கள் விழுந்துபட்டபோது அங்கிருந்த தொழிலாளர் பலர் சைபீரியாவை நோக்கிப் பயண மாகி, அங்கே நிர்மாணிக்கப்பெற்ற தொழிற்சாலைகளில் பணியாற்ற லாயினர். இத்தகைய ஏற்பாடுகளின் விளைவாக டாங்குகள், ஆகாயவிமானங்கள் முதலியவற்றின் உற்பத்தியில் ரஷ்யா, ஜெர்மனியைக் காட்டிலும் மேலோங்கி நின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு பலம்பெற்ற காரணத்தால் ஹிட்லரின் தாக்குதல்களை முறியடித்து இழந்த பகுதிகளைச் செம்படை ஜெர்மனியரிடமிருந்து மீட்க முடிந்தது. ஜெர்மன் ஆக்கிரமிப்பை எதிர்த்து வீறுகொண்டு போராடிய செம்படைகள் நாளடைவில் எதிர்த்தாக்குதல்களை ஆரம் பித்தனர். 1942ஆம் ஆண்டு நவம்பரில் ஸ்டாலின்கிராடை விடுவிக்கும் முயற்சியில் செம்படைகள் ஜெர்மன் படைகளைச் சுற்றி வளைத்தன. விரைவில் லெனின்கிராட் முற்றுகையிலும் ஓட்டை விழுந்தது. 1943ஆம் ஆண்டு மார்ச்சில் வடகாக்கஸஸ் பகுதி விடுவிக்கப்பட்டது. வால்காநதித் தீரத்தில் நடந்த மாபெரும் சண்டை போரின் திருப்பம் என்று சொல்லலாம். 1943ஆம் ஆண்டு முடிவிற்குள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் பாதிக்குமேல் விடுவிக்கப்பட்டன. அத்துடன் சோவியத் பொருளாதாரத்தின் பலம் அளவிலும் தரத்திலும் உயர்ந்துவந்தது. எனவே, 1944 ஆம் ஆண்டு முதல் செம்படையினர் ஜெர்மன் படைகளை முறியடித்து விரட்டலாயினர். இச் சமயத்தில்தான் நேசநாடுகள் ஐரோப்பாவில் இரண்டாவது முகாமைத் திறந்தனர். அதன்பின் ஹிட்லரின் படைகளால் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. குறிப் பாக சோவியத் முகாமில் ஹிட்லரின் பேயாட்டம் ஒடுங்கியது.

செம்படை, கிழக்கு ஐரோப்பாவில் விடுதலைக்காகப் போராடிய மக்களின் துணைகொண்டு ஜெர்மன் படைகளை விரட்டியடித்தது. 1945ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் தேதி ஜெர்மன் படைகள் சரணடைந்தன. ஒருசில மாதங்களுக்குப்பின் ஜப்பானியப் படைகளும் சரணடைந்தன. செம்படைகள் தாய்நாட்டை மட்டுமன்றிக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும், சீனவையும், வட கொரியாவையும் விடுவித்து வெற்றிவாகை சூடின.

இவ் வெற்றிக்குச் சோவியத் மக்களின் இடையருத உழைப்பும், தியாக உணர்ச்சியும், விடுதலை வேட்கையும், நாட்டுப் பற்றும், சமதர்மத்தில் கொண்ட நாட்டமும் மூலகாரணங்களாகும். செம்படைகள் இக் குணதிசயங்களின் சிகரமாக விளங்கின. அத்துடன் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலுள்ள மக்களின் விடுதலை வேட்கையும் போராட்டமும் செம்படைகளுக்கு உறுதுணையாக இருந்தன. நேசநாடுகளின் ஆதரவும், நேர்முகமான தலையீடும் ஆரம்பத்திலேயே கிடைத்திருந்தால் ஹிட்லரை முறியடிப்பதில் சோவியத் மக்களும், செம்படையும் சுமந்த பளு சற்றுக் குறைவாக இருந்திருக்கும். ஹிட்லரின் பேயாட்டங்களும் ஒருசில ஆண்டுகளுக்கு முன்னரே ஒடுங்கியிருக்கும். எனவே, ஹிட்லரின் தோல்விக்குச் சோவியத் மக்களும் செம்படையுமே மூலகாரணம் என்ருல், மிகையாகாது. அதேசமயத்தில் செம்படைக்குப் பக்கபலமாக இருந்தது சோவியத் பொருளாதாரம். எனவே, போருக்குகந்த வகையில் எவ்வாறு அப் பொருளாதாரம் மாற்றியமைக்கப்பட்டது? சோவியத் மக்களுக்கும் படைகளுக்கும் வேண்டிய உணவுப் பொருள்கள் எப்படிக் கிடைத்தன? போக்குவரத்து போருக்கு எவ்வகையில் உதவியது? பொருளாதார வளர்ச்சிக்கும் போருக்கும் தேவையான நிதி எப்படித் திரட்டப்பட்டது? என்ற கேள்விகளுக்கு இனி விடை காண்போம்.

**போருக்குகந்த தொழிலுற்பத்தி**

சமதர்ம சமுதாயத்தை நோக்கிய யாத்திரையே மூன்ருவது திட்டத்தின் முக்கியமான குறிக்கோளாக இருந்தது. ஆனல், ஹிட்லர் முழக்கிய போர்முரசின் எதிரொலியாக அத் திட்டம் இடையிலே கைவிடப்பட்டுப் போருக்குத் தயாராகும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. ஹிட்லரின் ஆக்கிரமிப்புப் படைகள் சோவியத் மண்ணில் காலெடுத்துவைத்ததும் அத்திட்டம் இராணுவப் பொருளாதாரத் திட்டமாக மாறியது. எதிரிகளின் கொட்டத்தை அடக்குவதே அத் திட்டத்தின் அடிப்படையான குறிக்கோளாக அமைந்தது.

போரின் தேவைகளுக்கேற்பப் பொருளாதாரத்தை இயக்கும் பொருட்டு 'பாதுகாப்புக் குழு' (Defence Committee) ஒன்று

உருவாக்கப்பட்டது. சோவியத்துகளின் தலைமைக் குழுவையும் (Presidium of the Supreme Soviet), கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் கமிட்டியையும், மக்களின் மந்திரிசபையையும் ஒருங்கே இணைத்து உருவாக்கப்பட்டதே பாதுகாப்புக் குழுவாகும். அதனடியில் புதிய பல மந்திராலயங்கள் உருவாயின. அவற்றுள் டாங்குத் தொழிலையும், வெடிமருந்துத் தொழில்களையும் கண் காணிக்கும் மந்திராலயங்கள் முக்கியமானவை.

முக்கியமான தொழில் நிறுவனங்களை மேற்கிலிருந்து சைபீரி யாவுக்கும், மத்திய ஆசியப் பகுதிகளுக்கும் மாற்றுவது அத்தியா வசியமாக இருந்தது. அபாயகரமான சூழ்நிலையில் இவ் வேலையைச் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. எதிரிகள் குண்டு மாரி பொழிந்தனர்; பீரங்கிகள் குண்டுகளைச் சொரிந்தவண்ண மிருந்தன; இரயில் பாதைகள் பல எதிரிகளின் கைவசமாயின; இரயில் வண்டி தங்குநிலையங்கள் பல தவிடுபொடியாயின; தொழி லாளருக்குப் பெரிய தட்டுப்பாடு இருந்தது. இத்தகைய சூழ்நிலையில் கிட்டதட்ட 1300 பெரிய தொழில் நிறுவனங்களை இடம்விட்டு இடம் பெயர்க்க வேண்டியதாயிற்று. அது மட்டுமன்றி, அவற்றை நிறுவ வேண்டிய புதிய இடங்களிலே போதிய வீட்டுவசதியோ, மின்சார வச தியோ, பட்டறைகளோ கிடையாது, தூர இடங்களிலிருந்து மணிக் கணக்கில் கால் நடையாக வந்து குளிரிலும், மழையிலும், பனியிலு மாக வேலை செய்ய வேண்டியதாயிற்று. இவ்வளவு கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் வீராவேசத்துடன் சோவியத் தொழிலாளர் இரவு-பகலாக உழைத்துப் போருக்கு வேண்டிய தொழில்களை நிறுவி உற்பத்தியைப் பெருக்கியது மாபெரும் சாதனையாகும். அவர்களது இடையறுத உழைப்பின் பயனாக 1942ஆம் ஆண்டு டிசம்பரில் அதற்கு முந்திய டிசம்பரைக்காட்டிலும் 230 சதவிகிதம் அதிக விமானங்களை உற்பத்தி செய்தனர். சிறிய பொறித் துப்பாக்கிகளின் உற்பத்தி 440 சதவிகிதம் பெருகியது; டாங்குகளின் உற்பத்தி இரட்டித்தது; டாங்குக்குரிய டீசல் எண்ணெய் 530 சதவிகிதம் அதிகரித்தது; குண்டுகள் 530 சதவிகிதம் கூடியது... இவ்வாறு, ஒரே ஆண்டில் போருக்குத் தேவையான தளவாடங்களின் உற்பத்தி அமோகமாக அதிகரித்தது ஆச்சரியகரமானது. யூரலுக்குக் கிழக்கே உள்ள பகுதிகள்தாம் சோவியத் யூனியனின் போர்க்களஞ்சியமாக விளங்கியது. போருக்கு அடிப்படையான கனரகத் தொழில்களில் பலவும் யூரலுக்குக் கிழக்கேயே தஞ்சம் புகுந்தன.

1943-லும் மொத்தத்தில் தொழில் உற்பத்தியில் 17 சதவிகித முன்னேற்றம் காணப்பட்டது. பழைய தொழில்களைப் புதிப்பித்து விரிவாக்குவதுடன் புதிய பல தொழில் நிறுவனங்களை உருவாக்கு

வதன் மூலமாகவே உற்பத்தியைத் தொடர்ந்து பெருக்க முடிந்தது. 1943ஆம் ஆண்டில் முதலீட்டுச் சொத்துகளைப் பெருக்கும் வகையில் 13 பில்லியன் ரூபிள்கள் செலவிடப்பட்டன. 1944-ல் இத் தொகை 18·9 பில்லியனாக உயர்ந்தது. 1942-44 வரை இவ்வகையில் மொத்தம் 79 பில்லியன் ரூபிள்களை அரசாங்கம் செலவிட்டது என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதன் விளைவாகக் கிட்டத்தட்ட 2250 பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

1943-லிருந்து எதிரிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளி லிருந்த தொழில்கள் பலவற்றைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாயிற்று. அதன்பொருட்டு 1943, 1944-ல் கிட்டதட்ட 16 பில்லியன் ரூபிள் செலவிடப்பட்டது. இது சோவியத் யூனியனில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த முதலீட்டில் 30·5 சதவிகித மாக இருந்தது. கிட்டத்தட்ட 6000 நிறுவனங்கள் இவ்வாறு புதுப் பிக்கப்பட்டன. இவற்றுள் கனரகத் தொழில்கள் பல இருந்தன. சோவியத் மக்களின் இடையறாத உழைப்பினால் 1945-ல் மொத்த தொழிலுற்பத்தி 1940-ஐ விட 8 சதவிகிதமே குறைவாக இருந்தது. அதேசமயத்தில் போருக்குரிய உற்பத்திச் சாதனங்கள் 12 சத விகிதம் அதிகரித்தன. பொறியியல், உலோகத் தொழில்கள் 29 சதவிகிதம் அதிகரித்தன. போரின் இறுதி மூன்று ஆண்டு களில் ஆண்டுதோறும் 40,000 விமானங்களும், 30,000-க்குமேல் டாங்குகளும், தானாக இயங்கும் பீரங்கிகளும், 120, 000 சிறிய பீரங்கிகளும், 450,000 பொறித் துப்பாக்கிகளும், 100,000 வெடித் துப்பாக்கிகளும், 5 மில்லியன் துப்பாக்கிகளும், நூற்றுக்கணக்காக மில்லியன் குண்டுகளும், ஆயிரக்கணக்கான மில்லியன் சிறிய துப்பாக்கி ரவைகளும் குண்டுகளும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், 1944-ல் நுகர்வுப் பொருளுற்பத்தி போருக்கு முந்திய நிலையில் 54 சதவிகிதமே இருந்தது. அவற்றுள் முக்கியமான உணவு, உடை, காலணிகள் போன்றவை பெரும்பாலும் செம்படைக்கு அளிக்கப்பட்டன.

தொழிலாளரின் ஆக்கச்சக்தி அதிகரித்து வந்தது தொழிலுற் பத்தி பெருகியதற்கு ஒரு முக்கியமான காரணமாகும். தொழி லாளர், பொறியியல் வல்லுநர்கள், இயந்திர நுணுக்கம் தெரிந்த வர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் புத்தம்புது வினைசெய் முறைகளை வகுப்பதன்மூலம் ஆக்கச்சக்தி அதிகரிப்பதற்கு ஆதரவளித்தனர். பொருள்களின் தரமும், ரகமும் உயர்ந்தன. தொழிலாளர் பலர் உற்பத்தியைப் பெருக்கும் செயல்முறைகளை வகுத்துச் சமதர்மப் போட்டியில் இடையறாது ஈடுபட்டு வந்தனர். குறிப்பாக, இளங் கம்யூனிஸ்ட்டுக் கழகத்தார் சமதர்மப் போட்டியில் மும்முரமாக ஈடுபட்டு ஊக்கமளித்து வந்தனர். 'போர் முனைக்குத் தேவையான

பொருளை இராணுவ ஆணையாகக் கொண்டு செயற்படுவோம்' என்பது அவர்களது கோஷமாக இருந்தது. இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கத்தில் இரும்பு, விமானம், டாங்கு, இரயில், பருத்தி ஆலை போன்ற பல தொழில்களில் வேலை செய்து வந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர் இழுக்கப்பட்டனர்.

போர்க்காலத்தில் தொழிலாளருக்கு ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்குவது பெரும் பிரச்சினையாக இருந்தது. உழைப்பாளர் பலர் எதிரிகளின் கைவசமான பகுதியில் சிக்கிக் கொண்டனர். உடல் வலிவுமிக்க உழைப்பாளர் பலர் மில்லியன் கணக்கில் செம்படையில் சேர வேண்டியதாயிற்று. எனவே, தொழில்களிலும் ஏனைய பணிமனைகளிலும் வேலை செய்து வந்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது. 1943-ல் இத் தொகை 1940-ல் இருந்ததைவிட 38 சதவிகிதம் குறைவாக இருந்தது. இத்தகைய தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டுப் பெண்களும் இளைஞர்களும் உழைப்பாளர் படையில் பேரளவில் சேரலாயினர். அதன் காரணமாக, உழைப்பாளரில் பெண்கள், இளைஞர்களின் விகிதம் கணிசமாக அதிகரித்தது. போருக்குமுன் உழைப்பாளரின் எண்ணிக்கையில் 39 சதவ்கிதமே பெண்கள். போர் ஆரம்பித்ததும் இவ்விகிதம் 53 ஆக உயர்ந்தது. இதேகாலத்தில் இளைஞரின் விகிதமும் 6 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக அதிகரித்தது. புதிதாகச் சேர்ந்த உழைப்பாளரில் பலர் தொழிற்பயிற்சியோ, அனுபவமோ இல்லாதவர்கள். இருப்பினும், புத்தம் புது இயந்திரங்களையும், கருவிகளையும் கையாள வேண்டியதிருந்தது. அதற்கான அறிவையும் பயிற்சியையும் அளித்து அவர்களது ஆக்கச்சக்தியை அதிகரிப்பது முக்கியமானதொரு பொறுப்பாக அமைந்தது.

போருக்கான தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். போக்குவரத்துச் சாதனங்களில் ஈடுபட்டிருந்தவர்களும் அப்படியே கருதப்பட்டனர். எனவே, அவர்களது வேலை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியதாக இருந்தது. இத்தகைய கட்டுப்பாட்டின் காரணமாகவும், புத்தம்புதிய தானாக இயங்கும் கருவிகளும், இயந்திரங்களும் புகுந்ததன் காரணமாகவும், தொழிலாளரின் ஊக்கமிக்க உழைப்பின் பயனாகவும் 1942-லிருந்து 1945-க்குள் சோவியத் தொழிலாளியின் ஆக்கச்சக்தி 40 சதவிகிதம் அதிகரித்தது. உலோகத் தொழிலைமட்டும் எடுத்துக்கொண்டால் இந்த மூன்றே ஆண்டுகளில் ஆக்கச்சக்தி 80 சதவிகிதம் அதிகரித்தது. அதன் விளைவாக, செம்படைக்கு வேண்டிய ஆயுதங்களும் தளவாடங்களும் தாராளமாகக் கிடைத்தன. போர் ஆரம்பித்த

போது ஜெர்மன் படையினரின் ஆயுதங்கள் செம்படையினரைக் காட்டிலும் மேம்பட்டதாக இருந்தன. போர் முடியும்போது இந் நிலை தலைகீழாக மாறியது. உண்மையில் செம்படை பெர்லினைத் தாக்கியபோது 8400 விமானங்களும், 6300 டாங்குகளும், 41,000 பீரங்கிகளும் பயன்படுத்தப்பட்டன. அவர்களது தளவாடங்கள் பலவற்றின் தரமும் இணையற்றதாக இருந்தது.

**விவசாயத்தின் நிலையும் உணவளிப்பும்**

போரின்போது விவசாயத் துறையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் காணப்பட்டன. நாடெங்கணும் பரவிய கூட்டுப் பண்ணைகள் ஆணிவேர் ஊன்றி நிலைபெற்று நின்றன. 1940-ல் 4159 அரசாங்கப் பண்ணைகளும், 235, 500 கூட்டுப்பண்ணை (artel) களும், 7069 இயந்திரக் கலப்பைகளையும் ஏனைய விவசாய இயந்திரங் களையும் கொண்ட நிலையங்களும் இருந்தன. தனிவுடைமை மருந்துக்குக்கூட இல்லை என்னலாம். புதிய விவசாய முறைகளும் புதிய பல இயந்திரங்களும், உழைப்பாளரின் ஆக்ககரமான அமைப்புகளும் உணவுப் பெருக்கத்துக்கு அடிகோலின; கால் நடைகளின் எண்ணிக்கையும் பெருகுவதற்கு ஏதுவாயிற்று.

கூட்டுப் பண்ணை முறையின்கீழ் உற்பத்திசெய்த உணவுப் பொருள்களில் கணிசமான பகுதியை விற்பனைக்குரிய உபரிப் பொருளாக அரசாங்கம் கைவசப்படுத்துவது எளிதாக இருந்தது. உதாரணமாக, முதல் உலகப்போரின்போது அரசாங்கம் 1914-17 வரையுள்ள மூன்று ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து 1399 மில் லியன் பூட் தானியங்களை வாங்க முடிந்தது. ஆனால், கூட்டுப் பண்ணை முறையின்கீழ்ச் சோவியத் அரசு 1941-44 வரையுள்ள மூன்று ஆண்டுகளில் 4264 மில்லியன் பூட் தானியங்களை விற்பனைக் குரிய உபரிப் பொருளாகப் பெறமுடிந்தது. பயிரிடக்கூடிய நிலத்தில் 40 சதவிகிதம் எதிரிகளின் கைவசமான காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படாமல் தடுப்பதற்கு விற்பனைக்குரிய உபரிப் பொருள் மிகமிக உதவியாக இருந்தது.

கிராமங்களிலிருந்து வலிமையும் திடகாத்திரமும் உள்ள உழைப்பாளர் பலர் செம்படையில் சேர்க்கப்பட்ட காரணத்தால் விவசாய உழைப்பாளருக்குக் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அத்துடன் விவசாய இயந்திரங்கள் பல இராணுவ உபயோகத் துக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இயந்திரங்களைப் பழுதுபார்ப் பதற்குள்ள பதில் பகுதிகளுக்கும் (spare - parts) தட்டுப்பாடு ஏற் பட்டது. அவற்றை இயக்குவதற்கு வேண்டிய எண்ணெயும் எரி பொருளும் கிடைப்பது அரிதாக இருந்தது. இத்தனை நெருக்கடி

களுக்கு நடுவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவது கடினமான வேலையாக இருந்தது. இக் கஷ்டங்களை மேற்கொள்ளுவதற்குச் சோவியத் தலைவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியமாயிற்று. முதலாவது, கிழக்குப்பகுதிகளில் தரிசாகக்கிடந்த கன்னி நிலங்களைப் பண்படுத்திப் பேரளவில் பயிரிடத் தொடங்கினர். அதன்பயனாக, 1942-ல் 5 மில்லியன் ஹெக்டாரும், 1943-ல் 6·4 மில்லியன் ஹெக்டாரும் புதிதாகப் பயிரிடப்பட்டன. பீட் கிழங்கும், பேரளவில் இர்கிஸியா, உஸ்பேகிஸ்தான் ஆகிய மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. கால்நடைகளையும் மத்திய ஆசியப் புல்வெளிகளில் பெருக்குவது எளிதாக இருந்தது. இயந்திரக் கலப்பைகளையும், ஏனைய விவசாய இயந்திரங்களையும், கருவிகளையும் பேரளவில் செய்து குவிக்கக்கூடிய தொழில்நிலையங்களும் கிழக்குப் பகுதியில் நிறுவப்பட்டன. எனவே, விவசாய உற்பத்தியை அதிகரிப்பது அவ்வளவு கஷ்டமாக இல்லை. உழைப்பாளரின் ஆக்கச்சக்தியும் அதிகரித்தது.

உழைப்பாளருக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு விவசாய அபிவிருத்தியைப் பெரிதும் பாதித்தது. எனவே, தொழிற்சாலைகளில் செய்ததுபோல பெண்களையும் இளைஞர்களையும் உழைப்பாளர் படையில் சேர்க்க வேண்டியது அவசியமாயிற்று. புதிதாகச் சேர்ந்தவர்களுக்கென்று கூட்டுப் பண்ணைகளிலும், இயந்திர நிலையங்களிலும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. குறிப்பிட்ட வேலைகளைச் செய்வற்கான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்பயனாக, இயந்திரக் கலப்பைகளையும், இணைக்கப்பட்ட விவசாய இயந்திரங்களையும் ஓட்டக்கூடிய வகையில் இரண்டு மில்லியன் பேர்கள் பயிற்சி பெற்றனர். அதில் 70 சதவிகிதம் இளைஞர்கள். இயந்திரங்களை இயக்கிய பெண்களின் எண்ணிக்கையும் பெருகியது. 1940-ல் இயந்திரக் கலப்பையை ஓட்டியவர்களில் 4 சதவிகிதத்தினரே பெண்கள். 1942-ல் அவ் விகிதம் உயர்ந்து 45 சதவிகிதமாகியது. இணைக்கப்பட்ட இயந்திரங்களை ஓட்டிய பெண்களின் விகிதமும் 6 சதவிகிதத்திலிருந்து 43 சதவிகிதமாக மாறியது. லாரி ஓட்டிய பெண்களின் விகிதமும் 6 சதவிகிதத்திலிருந்து 36 சதவிகிதமாக உயர்ந்தது.

ஆலைத் தொழிலாளிகளைப்போலவே விவசாயத் தொழிலாளர்களும் ஒப்பற்ற தியாகமும், உழைப்பும் நல்கி விவசாயத்தை வளர்த்து வந்தனர். 1943-க்குப்பின் எதிரிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட நிலத்தைத் திருத்திப் பண்படுத்துவதும் அவசியமாயிற்று. போர் முடிவதற்குள்ளாகவே கிட்டத்தட்ட 85,000 கூட்டுப்பண்ணைகளும், 1000 அரசாங்கப் பண்ணைகளும், 3000 இயந்திர நிலையங்களும் இவ்வாறு செப்பனிடப்பட்டன. அதன்பயனாக, 1944-ல் மேலும் 1100 மில்லியன் பூட் தானியங்கள் கிடைத்தது. விவசாயச்

சீரமைப்புக்கென 1945-ல் அரசாங்கத் தரப்பில் 9·2 மில்லியன் ரூபிள் செலவிடப்பட்டது. அதைக்கொண்டு 6500 புதிய இயந்திரக் கலப்பைகளும், 9900 லாரிகளும், 62,8000 டன் இரசாயன உரமும் வாங்கமுடிந்தது. இருப்பினும், எதிரிகளால் சுட்டுப்பொசுக்கப் பட்ட நிலபுலங்களைச் சீரமைத்துப் போருக்கு முன்னுலுள்ள நிலைக்குக் கொண்டுவர பல்லாண்டுகளாயின.

உணவுப் பொருள்களின் அளிப்பு பெரும்பாலும் அவற்றின் உற்பத்தியையே சார்ந்திருக்கும் என்பது உண்மை. ஆனுல் விற்பனைக்குரிய உபரிப் பொருளை அரசாங்கம் கைவசப்படுத்துவதன் மூலம் எப்படி உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க முடிந்தது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். அத்துடன் உணவுப் பொருள்களைச் சிக்கனமாக விநியோகம் செய்த காரணத்தால் உணவுப் பஞ்சம் என்பதே இல்லாமற் போய்விட்டது. உபரிப் பொருள் மையமாகக் கையாளப்பட்டது. அவற்றை விநியோகம் செய்வதற்காக விளக்கமானதொரு முறையை வகுப்பதில் மிகவும் கவனஞ் செலுத்தி அக்கறையோடு அமலாக்கினர். போர்க்காலம் முழுவதும் உணவுப் பொருள்களையும், ஏனைய அத்தியாவசிமான நுகர்வுப் பொருள்களையும் விநியோகம் செய்வதற்குப் பங்கீட்டு முறையைக் கையாண்டுவந்தனர். அதன்படி போர்க்களத்தில் சண்டையிட்டுவந்த செம்படையினருக்கு மற்றெல்லாரையும்விட அதிகப் பொருள்கள் கிடைத்தன. போருக்கான தொழில்களிலும், கனரகத் தொழில்களிலும், போக்குவரத்துச் சாதனங்களிலும் பணியாற்றியவர்களுக்கும் அதிக ரேஷன் கிடைத்தது. கர்ப்பிணிகள், பால் வார்க்கும் தாய்மார், குழந்தைகள், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கும் போதிய ரேஷன் வழங்கப்பட்டது. போரின்போது கிட்டத்தட்ட 77 மில்லியன் அத்தியாவசியப் பொருள்களைப் பங்கீட்டு முறையின் மூலம் பெற்றுவந்தனர். அத்துடன் பொதுவான உணவுச் சாலைகளும் விடுதிகளும் மிகவும் முக்கியத்துவம் பெறலாயின.

தொழிலாளர்கள் தங்கள் விடுநேரங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கும்படி தூண்டப்பட்டனர். அதற்கென தொழிற்சாலைகளுக்கும் ஏனைய நிலையங்களுக்கும் கிராமங்களில் நிலம் ஒதுக்கப்பட்டது. அந் நிலத்தில் தனிப்பட்ட தொழிலாளர் தங்கள் சொந்த உபயோகத்துக்கான காய்கறிகளைப் பயிரிட்டுப் பலனை அனுபவிக்க அனுமதி கிடைத்தது. அவர்களுக்கு வேண்டிய விவசாயக் கருவிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. அத்துடன் தொழிலாளரின் மெய் வருவாய் குன்றுமல் தடுக்கும்பொருட்டு அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசிகள் கட்டுப்படுத்தப்

பட்டன. அதன்பயனுகப் போர் மும்முரமாக நடந்த காலத்தில் கூட அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசிகள் அதிகரிக்காமல் தடுக்கமுடிந்தது. அதேசமயத்தில் சல்லாபப் பொருள்களை உயர்ந்த விலைக்கு விற்று அரசாங்கம் நிதி திரட்டியது. அப் பொருள்களுக்குப் பங்கீடும் கிடையாது. அதைப்போலவே, விற்பனைக்குரிய உபரிப் பொருள்போக எஞ்சிய பொருள்களை விவசாயிகள் கிடைத்த விலைக்கு விற்கும்படி அனுமதிக்கப்பட்டார்கள். அதன்பயனுக விவசாயிகள் நிறைய சம்பாதிக்க முடிந்தது.

உள்நாட்டில் உணவுப் பொருளுற்பத்தியைப் பெருக்கியதோடு சோவியத் யூனியன் போர்க்காலத்தில் நேசநாடுகளிடமிருந்து ஓரளவு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தது. இதன் அளவும் மதிப்பும் ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டே போனது. 1940-ல் 1446 மில்லியன் ரூபிளாக இருந்த அம்மதிப்பு 1943-ல் 8460 மில்லியன் ரூபிளாக உயர்ந்தது. ஆனுல், அதற்கேற்ப ஏற்றுமதியைப் பெருக்கும் சக்தி சோவியத் யூனியனிடம் அப்போது இருக்கவில்லை. இருப்பினும், மொத்தத்தில் இறக்குமதியான பொருள்களின் மதிப்பு சோவியத் நாட்டு வருவாயில் நான்கு சதவிகிதம்கூட இல்லை.

**போர்க்காலப் போக்குவரத்து**

முதல் மூன்று திட்டங்களின்கீழ் இரயில் பாதைகளின் நீளம் 1913ஆம் ஆண்டில் இருந்ததைப்போல் இரண்டுமடங்காக இருந்தது. ஆனுல், 5 மடங்கு சாமான்களைச் சுமந்து சென்றன. ஜெர்மன் ஆக்கிரமிப்பால் இரயில் பாதைகளின் சுமக்கும் சக்தி குன்றியது; ஆனுல், சுமக்கவேண்டிய பொருள்களின் அளவு அதிகரித்தது. 1941-4-ல் கிட்டத்தட்ட 400,000 டன் குண்டுகளை ஜெர்மனியர் வீசி இரயில் பாதைகளை உடைத்துப் போக்குவரத்தின் நரம்புக் கூட்டங்களைச் சிதைத்துச் சின்னுபின்னமாக்கினர். மேலும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள இரயில் பாதைகள் எதிரிகளின் கைவசமாயின. அதன் காரணமாக, 1943-ல் இருந்த இரயில் பாதையின் நீளம் போருக்குமுன் இருந்ததைக்காட்டிலும் 40 சதவிகிதம் குறைவாக இருந்தது. இரயில் எஞ்சின்களின் எண்ணிக்கை 15 சதவிகிதம் குறைந்தது. சாமான் சுமக்கும் பெட்டிகளின் எண்ணும் 20 சதவிகிதம் குறைந்தது. அதன்பயனுக, இரயில் பாதைகளின் சுமக்கும் சக்தி பாதியானது. ஆனுல், இரயில் பாதைகள் போரின் உயிர்நாடிகளாக விளங்கின. ஒருபுறம் செம்படைகளுக்குவேண்டியஎல்லாத்தேவைகளையும் கொண்டு செல்லுவது இரயில் பாதைகளின் தலையாய பொறுப்பாக இருந்தது. மறுபுறம் இடம்பெயர்ந்து சென்ற தொழில்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இழுத்துச் செல்லுவதும் அத்தியாவசியமாக இருந்தது.

பொதுவாக, இராணுவத்துக்கான தேவைகள் மேற்கு நோக்கிப் பயணமாயின; இடம்பெயர்ந்து சென்ற தொழில்கள் கிழக்கு நோக்கிப் பயணமாயின.

இரயில் பாதைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த சோவியத் அரசாங்கங்கள் அதை இராணுவப் பொருளாதாரத்தின் ஒரு பகுதி யாகக் கருதியது. எனவே, அதில் பணியாற்றியவர்கள் இராணுவக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

போரின் இரண்டாம் பருவத்தில், செம்படைகள் ஜெர்மானி யரை விரட்டியடித்து முன்னேறியபோதும் இரயில் பாதைகள் கடுமையாக வேலைசெய்து இராணுவத்துக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதிருந்தது. அத்துடன், எதிரிகளின் கையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழில்களையும் இரயில் பாதைகளையும் சீரமைப் பதற்கு வேண்டிய இயந்திரங்களையும் தளவாடங்களையும் கொண்டு செல்லும் பொறுப்பையும் இரயில் பாதைகள் தாங்கவேண்டியதா யிற்று. 1943-ல் 19,000 கிலோமீட்டர் நீளமுள்ள இரயில் பாதைகள் செப்பனிடப்பட்டு சீரமைக்கப்பட்டன. புதிதாக 2000 இரயில் எஞ்சின்களும், 56000 பெட்டிகளும் இரயில் பாதைகளுக்குக் கிடைத்தன. அவற்றைக் கொண்டு அதிகப் பொருள்களைச் சுமந்து செல்ல முடிந்தது.

ஏனைய துறைகளில் ஏற்பட்டதுபோலவே இரயில் பாதைகளை இயக்குவதற்கும் போதிய ஆட்பலம் இல்லாமலிருந்தது. எனவே, இளைஞர் பலரை எஞ்சின்களை ஓட்டுவதற்கும் ஏனைய வேலைகளைச் செய்வதற்கும் ஈடுபடுத்த வேண்டியதிருந்தது. இத் துறையில் இளைஞர் காட்டிய ஈடுபாடும் இடையறாத உழைப்பும் ஒப்பற்றது. இரயில் பாதைகளைப் போலவே, கப்பல்களும், விமானங்களும், லாரிகளும் பல்வேறுப் பகுதிகளிலும் இடையறாது உழைத்து, செம்படைகள் வெற்றிவாகை சூடுவதற்குப் பெரிதும் உதவின.

**போர்க்கால நிதியாக்கம்**

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம், கடன் பணம் ஆகிய வையும் போர்க்காலத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டன. முதற்கண், நாட்டுவருவாயைப் போர்க்காலத் தேவைகளுக்கேற்ப மறுபங்கீடு செய்யப்பட வேண்டியதிருந்தது. இரண்டாவது, உற்பத்திச் சாதனங்களை கனரகத் தொழில்களையும், போருக்கு அவசியமான தொழில்களையும் கட்டிவளர்ப்பதற்கென பயன்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. மூன்றாவது, பொருளுற்பத்தியின் மீதும், விநியோகத்தின் மீதும் கண்டிப்பான கட்டுப்பாட்டை அமல் நடத்த வேண்டியதிருந்தது,

அட்டவணை 12.

**சோவியத் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம்**

(எண்கள் பில்லியன் ரூபிளில்)

| | 1940 | 1943 | 1944 | 1945 |
|---|---|---|---|---|
| மொத்த வரவு | 180.2 | 202.7 | 268.7 | 302.0 |
| அதில் : | | | | |
| விற்பனை வரியும் தொழில்களின் இலாபமும் | 127.6 | 91.1 | 116.3 | 140.0 |
| ஏனைய வரிகள் | 9.4 | 28.6 | 37.0 | 39.8 |
| அரசாங்கக் கடன்களும் குலுக்குச் சீட்டு வரவும் | 11.5 | 29.0 | 32.6 | 29.0 |
| மொத்தச் செலவு | 174.3 | 210.0 | 263.9 | 298.6 |
| அதில் : | | | | |
| பாதுகாப்பு | 56.7 | 125.0 | 137.7 | 128.2 |
| தேசீயப் பொருளாதாரம் | 58.3 | 33.1 | 63.7 | 74.4 |
| சமூகக் கலாச்சாரச் செலவுகள் | 40.9 | 37.7 | 51.3 | 62.7 |
| வரவில் மிச்சம் | 5.9 | — | 4.8 | 3.4 |

(மூலம் : Podkolzin, A. opt. ci., p. 207)

1941, 1942ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தின் வரவினங்கள் சுருங்கின. ஹிட்லரது மிருகத்தனமான தாக்குதலால் சோவியத் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட அழிவே இதற்குக் காரணம். ஆனால் பின்னைய ஆண்டுகளில் அரசாங்க வருவாய் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வந்தது. அதன் பயனாக, 1945-ல் அரசாங்க வருவாய் 1940ஐக் காட்டிலும் 80 சதவிகிதம் அதிகமாக இருந்தது. முன்போலவே வரவில் பெரும்பகுதி அரசாங்கத் தொழில் நிறுவனங்

களிலிருந்து கிடைத்தது. ஆனால், அதன் பங்கு விகிதம் குறைந்தது. வருமான வரி 5 சத விகிதத்திலிருந்து 13-14 சதவிகிதமாக உயர்ந்தது.

அரசாங்கக்கடன் முக்கியமானதொரு வரவினமாக வடிவெடுத்தது. போர்க்கால கடன் பத்திரங்களில் கிட்டத்தட்ட 93 பில்லியன் ரூபிள்களைச் சோவியத் மக்கள் ஈடுபடுத்தினர்கள். குலுக்குச் சீட்டு மூலமாகவும் 12 பில்லியன் ரூபிள் திரட்டப்பட்டது.

பணவடிவிலும். ஆபரணங்கள், அரசாங்கக் கடன் பத்திரங்கள் விலையேறப் பெற்ற உலோகங்கள் போன்றவற்றின் வாயிலாகவும் சோவியத் மக்கள் அரசாங்கத்துக்கு இனமாகக் கொடுக்கவும் முன்வந்தனர். அவற்றின் மதிப்பு 18 பில்லியன் ரூபிள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

வரவினங்களைப் போலவே செலவினங்களிலும் பல அடிப்படை மாற்றங்கள் பட்டப் பகல் போலப் புலப்படும். குறிப்பாகப் பாதுகாப்புச் செலவு 1941ஆம் ஆண்டின் பின் பகுதியில் திடீரென 21·6 பில்லியன் ரூபிள் அதிகரித்தது. அடுத்த மூன்று ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 10-15 பில்லியன் ரூபிள் அதிகரித்து வந்தது. 1945-ல் தான் அச் செலவு 9·5 பில்லியன் குறைந்தது. போர்க்காலம் முழுவதையும் எடுத்துக்கொண்டால் மொத்தத்தில் 582 பில்லியன் ரூபிள் போல் பாதுகாப்புக்காகச் செலவிடப்பட்டது. இது 1940-ல் வசூலான மொத்த அரசாங்க வருவாயைக் காட்டிலும் மும்மடங்காகும். வேறுவிதமாகக் கூற வேண்டுமாயின் இரண்டாவது உலகப்போரின் ஒவ்வொரு நாளும் பாதுகாப்புக்காகச் சராசரி 400 மில்லியன் செலவிடப்பட்டது. அச் செலவை ஈடு செய்வதற்காகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும், பொதுநல—கலாச்சார வசதிகளைப் பெருக்குவதற்காகவும் செலவிடப்பட்ட தொகையைக் குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 1945-ல் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், அவ்வகையில் செலவிடப்பட்ட தொகை அதிகரித்து வந்ததே தவிர குறையவில்லை. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற கதைதான்.

போர் ஆரம்பித்தபின் கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகள்—அதாவது 1943 முடியும்வரை—சோவியத் அரசாங்கத்தை எதிர் நோக்கிய அசாதாரணமான செலவுகளை அத்போதிருந்த வரவினங்களைக் கொண்டு ஈடு செய்ய முடியவில்லை. இப் பற்றுக்குறையை ஈடு செய்யச் சோவியத் அரசாங்கம் அச்சகத்தின் உதவியை நாட வேண்டியதாயிற்று. அதன் விளைவாக போர்க்காலத்தில் வங்கி நோட்டுகள் மூன்று மடங்காக அதிகரித்தது. ஆனால், முதல

ளித்துவ நாடுகளில் உள்ளதுபோல் கண்மூடித்தனமான பணவீக்க முறைகளைச் சோவியத் யூனியன் கையாளவில்லை. முதலாவது உலகப் போரில் சார் அரசாங்கம் கூட அச்சிடப்பட்ட பணத்தின் அளவை 14 மடங்கு அதிகரித்தது. அதன் விளைவாக விலைவாசிகள் எக்கச்சக்கமாக உயரலாயிற்று. ஆனால், சோவியத் யூனியன் அத்தியாவசியப் பொருள்களின்மீது கண்டிப்பான விலைக் கட்டுப் பாட்டை அமல் நடத்துவதன்மூலம் தொழிலாளரின் மெய் வருவாய் குன்றாமல் பாதுகாத்தது. அத்தியாவசியப் பொருள்கள் பாமர மக்களுக்குப் போதிய அளவில் கிடைக்கும் வகையில் நல்ல தொரு பங்கீட்டு முறையையும் அமல் நடத்தியது. வரவு செலவுத் திட்டத்தைப்போலவே நாட்டு வங்கி போர்க்காலத் தேவைகளுக் கேற்பத் தனது கடன் கொள்கைகளை மாற்றியமைத்தது. போருக் கான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முனைந்திருந்த தொழில் களுக்குக் கடன் வழங்குவதில் மற்ற எல்லாத் தொழில்களையும் விட முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மேற்கிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற தொழில்களும் கிழக்கில் தஞ்சம் புகுவதற்கு வேண்டிய கடன்களைத் தயங்காமல் கொடுத்துதவியது. செம்படைகளுக்கு அளிக்கப்பட்ட பொருள்களின் கணக்கு விவரங்களையும், கொடுக்கல் வாங்கல்களையும் நாட்டு வங்கி மேற்கொண்டது. பணத்துக்கான தேவைகளை அப்போதைக்கப்போது ஈடு செய்யும் பொருட்டு வர வேண்டிய பணத்தைக் கவனமாக வசூலித்து வந்தது. போருக்கான நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெற்றதால் பொருளாதார வளர்ச் சிக்கான முயற்சி போதிய கடன் வசதியின்றி வாடியதில் வியப் பொன்றுமில்லை. ஆனால், அதே சமயத்தில் போர்க்காலப் பொருளாதார வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டதாகக் கூறமுடியாது. உண்மையில் பொருளாதார வளர்ச்சிக்கென்று போருக்கு முன்னால் நாட்டு வங்கியின் வாயிலாக வழங்கப்பட்ட கடனைக்காட்டிலும் போர் முடியும்போது 8·2 சதவிகிதம் அதிகமாக இருந்தது. போர்க் காலத்தில் ஏற்பட்ட பயங்கரமான நெருக்கடிகளின் மத்தியிலும் பொருளாதார வளர்ச்சியைக் கைவிடாமல் முனைந்து முயன்று வந்தது. சமதர்மத்தை நோக்கி முன்னேறிவந்த சோவியத் சமுதா யத்தின் சிறப்புகளுள் ஒன்றாகும் என்றால் மிகையாகாது.

## மேற்கொண்டு படிக்க

Baykov (A), op. cit., Section IV.
Dobb (M), op. cit. (4th Edition, 1957) Chs. 11, 12, 14, & 15.
Podkolzin (A), op. cit., Ch. VIII.
Schwartz (H), op. cit., chs 6—11.
Stalin (J), 'Problems of Leninism.'
Stalin (J), 'Economic Problems of Socialism in the USSR.'

# 10. பொருளாதாரச் சீரமைப்பும் சமதர்மத்தின் இறுதி வெற்றியும் (1946 - 1958)

*சமதர்மத்தின் வெற்றியும் உலகச் சூழ்நிலையும்—சீரமைப்புப் பிரச்சினையும் ஆரம்ப முயற்சிகளும்—ஓங்கி வளர்ந்து வந்த சோவியத் தொழிற் துறைகள்—விவசாயத் துறையில் ஏற்பட்ட வெற்றி தோல்விகள்—விஞ்ஞான வளர்ச்சியும் மக்களது வாழ்க்கைத் தரமும்.*

### சமதர்மத்தின் வெற்றியும் உலகச் சூழ்நிலையும்

இரண்டாவது உலகப் போர் உலகச் சூழ்நிலையை அடியோடு மாற்றியது. அழிவுச் சக்திகளின் சின்னமான ஹிட்லரும் அவனது கால் வருடிகளும் அடியோடு முறியடிக்கப்பட்டனர். அவனை முறியடித்து வெற்றிவாகை சூடிய பெருமை செம்படையையும் அதைத் தாங்கி நின்ற சோவியத் சமுதாயத்தையும் சாரும். போருக்கு முன்னுல் சோவியத் யூனியனேடு ஒடுங்கியிருந்த சமதர்ம சமுதாயம் போரின் முடிவில் பல்வேறு ஐரோப்பிய—ஆசிய நாடுகளைப் பற்றிப் படர்ந்தது. கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மன் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட அல்பேனியா, புல்கேரியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, செக்கோஸ்லோவேக்கியா, போலந்து, ருமானியா, யுகோஸ்லேவியா ஆகிய நாடுகள் சமதர்ம சமுதாயத்தின் உறுப்பினராயின. அதேபோல், ஆசியாவில் ஜப்பானியரின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்ட சீனு, வடகொரியா, வடக்கு வியத்னும் ஆகிய நாடுகளும் பிற்போக்கான சமுதாய அமைப்புகளைக் களைந்து சமதர்ம சமுதாயங்களை உருவாக்க முன் வந்தனர். போருக்கு முன்னுல் உலக நில பரப்பில் 17 சத விகிதமும், 9 சதவிகிதம் மக்கள் தொகையும் சமதர்மப் பொருளாதார முறையைத் தழுவிக் கடைப்பிடிக்க முயன்றது. போருக்குப் பின் 26 சதவிகித நிலப்பரப்பும் 35 சதவிகித மக்களும் சமதர்மக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கலாயின. அதுமட்டுமன்றி, இரண்டாவது உலகப் போர் சுமத்திய பளுவைத் தாங்க முடியாமல் முன்னுல் மாபெரும் சாம்ராஜ்யங்களென கருதப்பட்ட பிரிட்டன், பிரான்ஸ் ஹாலந்து போன்ற நாடுகள் மிகவும் பலவீனமடைந்தன. எனவே, அவற்றின் கைப்பிடிப்பிலிருந்து ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் பல அரசியல் விடுதலை பெற்று சுதந்தரமான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் முன்

னேறுவதற்கான சூழ்நிலை உருவாகியது. இதனுல் உலக அரங்கில் முதலாளித்துவ நாடுகளின் கை ஓரளவு தாழ்ந்தது; சமதர்ம சக்தி களின் கை ஓங்கியது எனலாம். இத்தகைய சூழ்நிலையில்தான் சோவியத் யூனியன் தனது சமதர்ம யாத்திரையைத் தொடர்ந்தது. சமதர்மத்தின் தாயகமாக விளங்கியதாலும், சமதர்ம சமுதா யத்தை நிர்மாணிப்பதில் அதற்கிருந்த அனுபவத்தினுலும், பொரு ளாதார வளர்ச்சியில் கண்ட மாபெரும் வெற்றிகளின் காரணமா கவும் சோவியத் யூனியன் உலக வல்லரசுகளில் உரியதோர் இடத்தை அடைந்தது மட்டுமன்றி சமதர்ம நாடுகளிலே மூத்ததாகவும், ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராடிய விடுதலை இயக்கங்களின் தோழனுகவும் கருதப்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

### சீரமைப்புப் பிரச்சினையும் ஆரம்ப முயற்சிகளும்

செம்படைகள் எதிர்த் தாக்குதலைத் தாங்கமுடியாமல் பின் வாங்கிய ஜெர்மன் படைகள் தாங்கள் கைவிட்ட பகுதிகளைச் சுட் டுப் பொசுக்க முயன்றன. தொழிற்சாலைகள் பல இடித்து நொறுக்கப் பட்டன. தண்டவாளங்கள் பிடுங்கப்பட்டு இருப்புப் பாதைகள் சிதைத்துச் சின்னுபின்னமாக்கப்பட்டன. சுரங்கங்களிலுள்ள இயந் திரங்கள் உடைத்தெறியப்பட்டுத் தண்ணீரால் நிரப்பப்பட்டன. 1710 பட்டினங்களும் 70,000 கிராமங்களும் அழித்துத் தரைமட்ட மாக்கப்பட்டன. 32,000 தொழில் நிறுவனங்கள் அறைகுறையாக அல்லது முழுவதுமாக அழிக்கப்பட்டன. 65,000 கிலோமீட்டர் நீளமான இருப்புப் பாதைகள் சிதைக்கப்பட்டன. 100,000 கூட்டு அரசாங்கப் பண்ணைகளும் இயந்திர நிலையங்களும் சேதமடைந் தன. மொத்தத்தில் 20 மில்லியன் மக்கள் உயிரிழந்தனர். அங்க வீனமடைந்தவர்களின் எண்ணிக்கை அதைவிட இரண்டுமடங்காக இருந்தது. கிட்டத்தட்ட 25 மில்லியன் மக்கள் வீடு வாசலகளை இழந்தனர். ஜெர்மானியர் அழித்த சொத்துக்களின் மதிப்பு 679 பில்லியன் ரூபிள்களாகும். இது நாட்டின் மொத்த சொத்தில் 30 சதவிகிதமாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அழிக்கப்பட்ட சொத்துக்களுடன் போரில் செலவிடப்பட்ட பணத்தையும் சேர்த் தால் பொருள் வடிவில் சோவியத் யூனியன் இரண்டாவது உலகப் போரால் 2600 பில்லியன்ரூபிள் நஷ்டமடைந்ததாகக் கூறலாம். போரின் இறுதிக் கட்டத்திலேயே மீட்டகப்பட்ட சொத்துகளைச் செப்பனிட்டுச் சீரமைப்பதற்குச் சோவியத் யூனியன் பகீரதப் பிரயத் தனம் எடுத்தது என்று கண்டோம். அச் சீரமைப்புப் பணியை முற்றுப் பெறச் செய்வது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1946-1950) முக்கியமான குறிக்கோளாக அமைந்தது. போர் முயற்சிகளை முதன்மையாகக் கொண்டு இயங்கி வந்த சோவியத் பொருளாதாரத்தைச்சமாதானமான வளர்ச்சிப் பாதைக்குத்திருப்பி

விடுவதும் இன்றியமையாததொரு வேலையாக இருந்தது. எனவே, அழிவுக்குட்பட்ட சொத்துக்களுக்குப் புத்துயிரூட்டி, தொழில் துறையிலும் விவசாயத்திலும் போருக்கு முன்னுலிருந்த நிலையை அடைந்து அதைக் கடந்து செல்லுவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையான குறிக்கோளாக அமைந்தது.

சீரமைப்பு வேலையில் கனரகத் தொழில்களுக்கும் இருப்புப் பதைகளுக்கும் முதலிடமளிக்கப்பட்டது. அவையின்றி பொருளாதார வளர்ச்சியை மேன்மேலும் தூண்டுவதெப்படி? அத்துடன், பொருளாதாரத்தின் தொழில் நுட்ப அடிப்படையைப் பலப்படுத்துவது; விவசாயத்துக்கு வேண்டிய சாதனங்களை வழங்குவது; நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது; உழைப்பாளரின் ஆக்கச்சக்தியைப் பெருக்குவது; நாட்டு வருவாயையும் அயல்நாட்டு வாணிபத்தையும் அதிகரிப்பது போன்ற குறிக்கோள்களும் நாலாவது திட்டத்தில் இடம் பெற்றன. உண்மையில் நாலாவது திட்டம் முழுவதையும் சீரமைப்புக்காகச் செலவிடுவதாக இல்லை. முதலிரண்டு மூன்று ஆண்டுகளில் பொருளாதாரத்தைச் சீரமைத்து வளர்ச்சிப் பாதையில் மீண்டும் தொடர்ந்து முன்னேறுவதே நாலாவது திட்டத்தின் கண்ணோட்டமாக இருந்தது. அதை மனத்திற் கொண்டு சோவியத் மக்கள் சமதர்மப் போட்டியில் உற்சாகத்துடனும் மிடுக்குடனும் ஈடுபட்டு உழைக்கலாயினர்.

தொழிலுற்பத்தியை மேலும் 70 சதவிகிதம் உயர்த்துவது ஐந்தாவது திட்டத்தின் (1951-1955) குறிக்கோளாக இருந்தது. இத் திட்டத்திலும் கனரகத் தொழில்களே முக்கியத்துவம் பெற்றன. இயந்திரங்கள், உலோகங்கள், மின்சாரம் ஆகியவற்றின் உற்பத்தி சக்தியை இரண்டு மடங்காக்க விரும்பியது திட்டம். பொருளாதாரத்தின் தொழில் நுட்ப அடிப்படையை பலப்படுத்துவதே அதன் நோக்கம். விவசாயப் பொருள்களையும், கால்நடைகளையும் பெருக்குவதும் அவற்றின் விற்பனைக்குரிய உபரிப் பொருளை அதிகரிப்பதும் அவசியமாக்கப்பட்டது. மொத்தத்தில் நாட்டு வருவாயை 60 சதவிகிதம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுவும் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியிருந்தது. இத் திட்டம் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே முற்றுப் பெற்றது.

ஆறுவது திட்டம் சோவியத் பொருளாதாரத்தையும் நாட்டுப் பாதுகாப்புக்கான அடிப்படையும் பலப்படுத்த விரும்பியது. அத் திட்டம் முற்றுப் பெறுமுன்னரே சோவியத் மக்கள் சமதர்மப் பரிசோதனையில் வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணிப் பெருமிதம் அடைந்தனர். இனி எதிரிகள் யாரும் சமதர்ம அடிப்படையில் கட்டி வளர்க்கப்பட்ட சோவியத் சமுதாயத்தைத் தட்டி வீழ்த்த

முடியாது என்ற தன்னம்பிக்கை அவர்களிடையே பிறந்தது. எனவே, இனி பொது உடைமை சமுதாயத்தை உருவாக்கும் பணியை மேற்கொள்ளலாம் என முனைந்தனர். பின்னைய திட்டங்கள் இந்த அடிப்படையில் வகுக்கப்பட்டன.

போர்க்காலத்தில் முடுக்கிவிடப்பட்ட தொழில்களின் உற்பத்தி போருக்குப் பின் தயங்கத் தொடங்கியது. 1940உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது போரின் இறுதிக் கட்டத்தில் தொழிலுற்பத்தி 92 சதவிகிதமாக இருந்தது. ஆனால், 1946 உற்பத்தியினளவு 77 சதவிகிதமாயிற்று. தயங்கிநின்ற அத் தொழில்களுக்குப் புத்துயி ரூட்டுவது மிகமிக அவசியமாயிற்று. சீரமைப்பு முயற்சிகள் விரைவில் பலன் தரலாயின. 1947-ல் தொழிலுற்பத்தி 22 சதவிகிதம் அதிகரித்தது. 1948-ல் அவ் விகிதம் 27 சதவிகிதமாக உயர்ந்தது. எனவே, அவ்வாண்டில் தொழிலுற்பத்தி போருக்கு முன்னுலிருந் ததைவிட 18 சதவிகிதம் அதிகமாக இருந்தது. அக்காலத்தில் தொழில் வளர்ச்சியை 1 சதவிகிதம் அதிகரிப்பதன் மூலம் தொழி லுற்பத்தியின் மதிப்பை 32-34 பில்லியன் ரூபிள்வரை உயர்த்தக் கூடிய வாய்ப்பு இருந்தது.

சீரமைப்பு முயற்சியில் கனரகத் தொழில்களுக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டது என்று கண்டோம். சான்ருக, தொழில் வளர்ச்சிக்கு எரி பொருள் இன்றியமையாததாக இருந்தது. போருக்கு முன்னல் டோன்பாஸ் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து உயர்ந்த ரக நிலக்கரி கிடைத்தது. துரதிருஷ்டவசமாக போர்க் காலத்தில் அது எதிரிகளின் கை வசமாகியது. அப் பகுதியைக் கைவிட்டு எதிரிகள் பின்வாங்கும்போது டோன்பாஸ் சுரங்கம் சுட்டுப் பொசுக்கப்பட்டது ; அதிலிருந்து பிரம்மாண்டமான இயந் திரங்கள் வெடிவைத்து உடைத்தெரியப்பட்டன ; நிலக்கரிச் சுரங்கம் ஒரு தண்ணீர்த் தடாகமாக காட்சியளித்தது. எனவே, அதைச் சீரமைப்பது சஞ்சீவி மலையைப் பெயர்த்து மூலிகை கொண்டுவந்த கதையாக இருந்தது. உண்மையில் டோன்பாஸ் சுரங்கத்தைச் சீரமைக்கும் பொருட்டு 650 மில்லியன் கன மீட்டர் தண்ணீரை வடிக்கவேண்டியதிருந்தது—அத் தண்ணீரைக்கொண்டு 65 சதுர கிலோ மீட்டர் ஆழமுமுள்ள மாபெரும் தடாகமொன்றை நிர்மாணித்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதே போல் மாஸ்கோவுக்கும் பாரீஸுக்கும் 200-700 மீட்டர் ஆழத்தில் ஒரு சுரங்கவழி தோண்டினுல் எவ்வளவு கல்லும், மண்ணும், சகதி யும் தோண்ட வேண்டுமோ அவ்வளவு டோன்பாஸ் சுரங்கத்தி லிருந்து தோண்டி எடுக்கவேண்டியதாயிற்று. இத்தகைய பகீரத முயற்சியில் வெற்றி பெற்றது சோவியத்து மக்கள் சீரமைப்பு வேலை யில் கண்ட மகத்தான வெற்றியாகும்.

அதைப்போலவே, இரும்புத் தொழிற்சாலைகளையும், பொறி இயற்கூடங்களையும், மின்சார உற்பத்தி நிலையங்களையும் புனர் நிர்மாணம் செய்வது கடினமான வேலையாக இருந்தது. அப்படி செப்பனிடப்பட்டவற்றுள் நீப்பர் நீர் மின்சார நிலையமும், ஸாப்போ ரோஷே இரும்புத் தொழிற்சாலைகளையும், கார்க்கோவ் இயந்திரக் கலப்பைத் தொழிற்சாலையும், செர்ப்-இ-மாலோட் விவசாய இயந்திர சாலையும் முக்கியமானவை.

போக்குவரத்துச் சாதனங்களைச் செம்மைப்படுத்தும் பொருட்டு 48·1 பில்லியன் ரூபிள் ஒதுக்கப்பட்டது. அதன் பயனாக 1948-க்குள் போக்குவரத்தின் விறுவிறுப்பைக் காட்டும் அட்டவணைகள் போருக்கு முன்னுள்ளதை விட மேம்பட்ட நிலையைக் காட்டின. உண்மையில் லாரிகளின்மூலம் கொண்டு செல்லப்பட்ட சாமான் களின் அளவு 20 சதவிகிதம் அதிகரித்தது.

முதலாவது உலகப் போருக்குப்பின் சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட சீரமைப்பு வேலைகளுக்கும் இரண்டாவது உலகப் போருக்குப்பின் மேற்கொண்ட சீரமைப்பு வேலைகளுக்கும் முக்கிய மான வேறுபாடுகள் உண்டு. முதலாவது, இரண்டாவது உலகப் போருக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு வேலை மிகப் பிரமாண்டமானது. இருப்பினும் முன்னையதைக் காட்டிலும் வெகு வேகமாகப் போரால் சிதைந்திருந்த சோவியத் பொருளாதாரம் செப்பனிடப்பட்டது. மேலும், சீரமைக்கும் போதே தொழில்கள் பலவற்றில் புத்தம் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டன. எல்லா வற்றுக்கும் மேலாக முன்னைய சீரமைப்பு அரசாங்கத்தின் பொறுப் பாக மட்டுமன்றி தனியாரின் முயற்சிகளையும் நம்பியிருந்தது. ஆனால், பின்னைய முயற்சி முழுவதும் சோவியத் அரசாங்கத்தின் பொறுப்பாக அமைந்தது.

போருக்குப் பின்னரும் சோவியத் விவசாயம் விறுவிறுப்பாக வளர்ந்ததாகச் சொல்ல இயலாது. 1946-ல் ஏற்பட்ட வறட்சி இச் சுணக்கத்துக்கு ஒரு காரணமாகும். அதே சமயத்தில் உற்பத்திச் சாதனங்கள் தொழில் துறைகளில் பேரளவில் புகுத்தப்பட்டதால் விவசாயத்தில் வாட்டம் தோன்றியது. இருப்பினும் 1947-ல் விவ சாய உற்பத்தி போருக்கு முன்னுவுள்ள நிலையைப் பெரும்பாலும் எட்டிப் பிடித்தது. எனவே, உணவுப் பங்கீட்டு முறை கைவிடப் பட்டது. அதன் மூலம் உள்நாட்டு வாணிபமும் சீரமைக்கப்பட்ட தாகக் கூறலாம்.

நுகர்வுப் பொருளுற்பத்தியும் அதிகரித்து வந்ததால் அப பொருள்களின் விலை கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டது. 1947-ன் இறுதியில் விலைவாசிகள் 17 சதவிகிதம் குறைக்கப்பட்டது,

அத்துடன் புதியதோர் பணச் சீர்திருத்தத்தின் மூலம் பண வீக்கம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. 1957-ல் புதிய ரூபிள் வெளியானது. 10 பழைய ரூபிள் புதிய 1 ரூபிளுக்கு இணையாகக் கருதப்பட்டது. ஆனால் தொழிலாளர் விவசாயிகள் ஆகியோரின் கூலி குறையவில்லை. கூட்டுப் பண்ணைகள் நாட்டு வங்கியில் போட்டு வைத்திருந்த சேமிப்புகளுக்கும் சலுகைகள் காட்டப்பட்டன. ஆனால், தனியாரின் சேமிப்பைப் பொறுத்த அளவில் ஏற்றத் தாழ்வுகள் காட்டப்பட்டன. 3000 ரூபிள் வரையுள்ள சேமிப்புக்கு ரூபிளுக்கு ரூபிள் வழங்கப்பட்டது. 3000—10,000 வரை 3 பழைய ரூபிளுக்கு இரண்டு புதிய ரூபிள் கிடைத்தது. 10,000-க்குமேல் இரண்டு பழைய ரூபிளுக்கு ஒரு புதிய ரூபிள்தான் ஈடாக மாற்றப்பட்டது. அதைப்போலவே அரசாங்கப் பத்திரங்களின் மதிப்பும் மூன்றிலொன்றாகக் குறைக்கப்பட்டது. இத்தகைய பணச் சீர்திருத்தத்தால் மக்களின் வாங்கும் சக்தி பெருகியது. எனவே, வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

புழக்கத்திலிருந்த பணத்தினளவைக் குறைக்கும் பொருட்டு அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் வந்த வரவை யெல்லாம் செலவிடாமல் மிச்சப்படுத்த முயன்றனர். 1946-ல் வரவு செலவைக் காட்டிலும் 17·9 பில்லியன் ரூபிள் அதிகமாக இருந்தது. இத்தொகை 1947-ல் 24.7 பில்லியனாகவும் 1948-ல் 39.6 பில்லியனாகவும் உயர்ந்தது. இவ்வாறு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளிலேயே போரால் சீரழிந்த சோவியத் பொருளாதாரம் சீரமைக்கப்பட்டுப் புத்துயிரளிக்கப்பட்டது.

### ஓங்கி வளர்ந்து வந்த சோவியத் தொழிற்துறைகள்

போருக்குப் பின்னால் அமலான திட்டங்களின்கீழ்ச் சோவியத் தொழில்கள் ஓங்கி வளரலாயின. நாலாம் திட்டத்தில் மட்டும் 6000 பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. ஐந்தாவது திட்டத்தின்கீழ் மேலும் 3000 தொழில் நிறுவனங்கள் பொருளுற்பத்தியில் இறங்கின. ஆறாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளிலும் ஆண்டொன்றுக்கு 800 புதிய நிறுவனங்கள் முளைத்தன. இவற்றுள் வால்கா, நீப்பர், அங்காரா போன்ற மாபெரும் மின்சாரத் திட்டங்களும், உலகிலேயே முதலான அணுசக்தி நிலையமும் அடங்கியிருந்தன. காக்கஸஸுக்கு அப்பாலுள்ள செரப்போவெட்ஸிலும் சைபீரியாவிலும் கட்டப்பட்ட இரும்புத் தொழிற்சாலைகள் பிரம்மாண்டமானவை. வால்வுக்குக் கிழக்கே தோண்டப்பட்ட எண்ணெய்க் கிணறுகளும் சுரப்புமிக்கவையாக இருந்தன. அங்கிருந்து மாஸ்கோவுக்கு 1300 கிலோ மீட்டர் நீளக்குழாய்களின் மூலம் எண்ணெய் கொண்டு செல்லப்பட்டது. அதைப்போலவே

வெள்ளை பால்டிக், கஸ்பியன், அசௌவ், கருங்கடல்களை இணைத்த 101 கிலோமீட்டர் நீளமான வால்காடின் கால்வாயும் அதன் அணைத் திட்டங்களும் இணையற்றதொரு சாதனையாகும். பிரம் மாண்டமான பொறியியல் கூடங்களும் பேரளவில் இயந்திரங் களைச் செய்து குவிக்கும் ஆற்றல் பெற்று விளங்கின.

இயந்திரங்களின் எண்ணிக்கையும், சக்தியும் பெருகப் பெருக உழைப்பாளரின் ஆக்க சக்தியும் பெருக்கெடுத்தது. புத்தம் புதிய தொழில் முறைகள் ஆக்கச் சக்தியை உரமிட்டு வளர்த்தது. அதன் பயனாக 1950-ல் தொழிலாளரின் ஆக்கச் சக்தி போருக்கு முன்னு லிருந்ததைக் காட்டிலும் 45 சதவிகிதம் அதிகமாக இருந்தது. 1958-ல் அது 180 சதவிகிதமாக உயர்ந்தது. இவ்வாறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையும் உழைப்பாளரின் ஆக்கச் சக்தியும் அதிகரித்ததால் எப்படித் தொழிலுற்பத்தி ஓங்கி வளர்ந் ததுஎன்பதை அட்டவணை 13-ல் காணலாம்.

தொழிற்துறையில் அடைந்த அபரிமிதமான வெற்றிகளால் தூண்டப்பட்ட சோவியத் யூனியன் புத்தம் புதிய பல துறைகளில் கவனஞ் செலுத்தலாயிற்று. அவற்றுள் இரசாயனத் துறை முக்கிய மானது. அதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், இயந்திரங் களையும் கருவிகளையும் நிர்மாணித்துப் படைக்கவும், அவற்றை இயக்குவதற்கான வல்லுநர்களைப் பயிற்றுவிக்கவும் வேண்டியமுயற்சி களில் சோவியத் அரசாங்கம் பேரளவில் முனையலாயிற்று. எரி வாயு உற்பத்தியைப் பன்மடங்காகப் பெருக்கவும் 15 ஆண்டுத் திட்ட மொன்றை தீட்டியது. நிலக்கரி-எண்ணெய் ஆகிய எரி பொருள் களைக் கொண்டு இயக்கப்பட்ட மின்சார நிலையங்களை நிறுவுவதிலும் அக்கறை காட்டப்பட்டது. இவற்றைக் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் நிறுவமுடியும். எனவேதான், சோவியத் அரசாங்கம் தனது திட்டங்களில் இவற்றுக்கு உரிய இடம் வழங்கலாயிற்று. இதனால் நீர் மின்சாரம் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறமுடியாது. அவற்றின் முக்கியத்துவம் குறையவே இல்லை.

தொழில் நிருவாகத்திலும் ஒரு புதிய பரிசோதனை ஆரம்ப மாயிற்று. அதன்படி தனித்தனி தொழில்களைக் கண்காணித்து வந்த மந்திரி சபைகள் கைவிடப்பட்டன. அவற்றுக்குப் பதிலாகப் பல்வேறு பகுதிகளிலும் அங்கங்கே உள்ள நிறுவனங்களைக் கண் காணிப்பதற்கென ஸ்தல பொருளாதார குழுக்கள் (Local Economic Council) அமைக்கப்பட்டன. ஆனால், இக்குழுக்கள் விரும்பிய வெற்றியளிக்கவில்லை. இக்குழுக்கள் தேசியக் கண்ணோட்டத்தைக் கைவிட்டுத் தங்கள் தங்கள் இடத்தைப்பற்றி மட்டும் எண்ணத் தொடங்கின, இக் குறுகிய மனப்பான்மையால் தொழில் வளர்ச்

## அட்டவணை 13.

### குறிப்பிட்ட சில பொருள்களின் உற்பத்தி வளர்ச்சி

| பொருள் | அளவை | 1940 | 1950 | 1955 | 1958 |
|---|---|---|---|---|---|
| இரும்பு | மில்லியன் டன் | 14.9 | 19.2 | 33.3 | 39.6 |
| எஃகு | ,, | 18.3 | 27.3 | 45.3 | 54.9 |
| உருட்டிய உலோகம் (rolled metal) | ,, | 13.1 | 20.9 | 35.3 | 43.1 |
| நிலக்கரி | ,, | 165.9 | 261.1 | 391.0 | 496.1 |
| எண்ணெய் | ,, | 31.1 | 37.9 | 70.8 | 113.2 |
| மின்சார சக்தி | பில்லியன் kwh | 48.3 | 91.2 | 170.1 | 235.3 |
| கனிப்பொருள் உரம் (mineral fertilizers) | '000 டன் | 3027.0 | 5492.0 | 9629.0 | 1240.0 |
| உலோகம் வெட்டும் இயந்திரம் (metal cutting lathes) | '000 உருப்படி | 58.4 | 70.6 | 117·8 | 138.3 |
| சிமெண்டு | மில்லியன் டன் | 5.7 | 10.2 | 22.5 | 33.3 |
| இரயில் எஞ்சின்கள் டீசல், மின்சார எஞ்சின்களுள்பட | உருப்படி | 928 | 1212 | 982 | 2180* |
| சாமான் ஏற்றும் வண்டிகள் | '000 | 30.9 | 50.8 | 34.4 | 52.0* |
| இயந்திரக் கலப்பைகள் | '000 | 31.6 | 116.7 | 163.4 | 219.7 |
| மோட்டார் வண்டிகள் | '000 | 145.4 | 362.9 | 445.3 | 511.1 |
| தானியம் | மில்லியன் டன் | 119 | 125 | 129 | 134.7 |
| சீனி | '000 டன் | 2151 | 2523 | 3419 | 5400.0 |
| காகிதம் | '000 டன் | 812 | 1193 | 1862 | 2235.9 |
| பருத்தித்துணி | மில்லியன் சதுர மீட்டர் | 3954 | 3899 | 5904 | 4308 |
| கம்பளித்துணி | ,, | 119.7 | 155.2 | 251.0 | 385 |
| தோலாலான காலணி | மில்லியன் ஜோடி | 211.0 | 203.4 | 274.0 | 356.4 ரப்பரால் ஆனவையும் இதில் அடங்கியுள்ளன |
| ரப்பராலான காலணி | ,, | 69.7 | 110.4 | 131.1 | |

(Source: National Economy of the USSR Statistical Returns, Moscow 1957 P. 50—57)

Also, Clarke Roger A, "Soviet Economic Facts: 1917-1970"

*ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகள்.

சிக்குக் குந்தகம் விளையும் என்று அரசாங்கம் அஞ்சியது. எனவே, பின்னல் அவற்றுக்குப் பதிலாகப் புதியதொரு நாட்டுப் பொருளாதாரக் கண்காணிப்பு முறையை நிறுவலாயினர்.

தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவை போக்கு வரத்துச் சாதனங்களாகும். பல்வகைச் சாதனங்களும் முன்னேறி வந்தனவென்றுலும் இருப்புப் பாதைகளின் முக்கியத்துவம் குறைய வில்லே. மாருக 1958-ல் இருப்புப்பாதைகளின் நீளம் 1940-ல் இருந் ததை விட 16,700 கிலோ மீட்டர் அதிகமாக இருந்தது. கொண்டு சென்ற சாமான்களின் அளவு மூன்று மடங்குக்கும் அதிகமாக அதிகரித்தது. 1940-ல் மொத்தம் 415 பில்லியன் டன்—கி. மீட்டர் சாமான்கள் இருப்புப் பாதைகளின்மூலம் கொண்டு செல்லப் பட்டன. 1958-ல் அவ்வளவு 1300 பில்லியன் டன்—கிலோ மீட்ட ராக உயர்ந்தது. இத்துறையில் சோவியத் யூனியன் அமெரிக் காவைத் தோற்கடித்து உலகத்திலேயே முதல் இடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது. இருப்புப் பாதைகள் பயன்படுத்திய கருவிகளின் தொழில் நுட்பத்தரமும் உயர்ந்துகொண்டே வந்தது. சான்ருக, என்ஜின்களில் கால் பகுதிக்கு மேல் டீசல் அல்லது மின்சாரத்தால் இயங்கின. பயணிகளேயும். பொருள்களேயும் இழுத்துச் செல்லும் பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. வண்டிகளும் நீளமாகின. கனமும் அதிகரித்தன. இருப்பினும் பலமிக்க என்ஜின்களாதலால் அதிகச் சுமையை எளிதில் வேகமாக இழுத்துச் செல்ல முடிந்தது. இத்தகைய மாறுதல்களால் இருப்புப் பாதைகளில் வேலே செய்துவந்த உழைப்பாளரின் ஆக்கச் சக்தி பெருகியது. இருப்புப் பாதைகளேப் போலவே, கப்பல், விமான சாலேப் போக்குவரத்துகளிலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. அத்துடன் எண்ணெயையும், எரிவாயுவையும் கொண்டு சென்ற குழாய்களேயும் ஒரு நவீனப் போக்குவரத்துச் சாதனமாகவே கருதவேண்டும்.

**விவசாயத் துறையின் வெற்றி-தோல்விகள்**

தொழில்கள் இவ்வளவு மிடுக்கோடு வளர்ந்து வரும்போது விவ சாயம் அவ்வளவு விறுவிறுப்பாக இல்லே. தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய விவசாயப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்க வில்லே. எனவே, தொழிலுக்கும் விவசாயத்துக்குமுள்ள சமநிலே கெட்டு வந்தது. இச் சீர்கேட்டைச் சரிக்கட்டி விவசாயத்தை ஊக்கு விப்பது இன்றியமையாத வேலேயாயிற்று.

தொழில்துறைகள் உற்பத்திச் சாதனங்களே உறிஞ்சியது விவசாயத்தின் தயக்கத்துக்கு ஒரு மூல காரணமாகும். விவசாயத்

துறையில் மேலாண்மையில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றென்றாகும். உற்பத்திச் சாதனங்களுக்கு இருந்துவந்த தட்டுப்பாடு ஓரளவு தவிர்க்க முடியாததென்றாலும் மேலாண்மைத் தகராறுகள் ஏற்படாதவண்ணம் தடுத்திருக்க முடியும். முதலாவது, விவசாயிகளுக்குப் போதிய பொருளூக்கம் (material incentives) ஊட்டப்படவில்லை. உழைப்பின் பலனில் உரிய பங்கு தங்களுக்குக் கிடைக்கிறதென்ற திருப்தி கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு இல்லாமலிருந்தது. இதைப் போக்கும் பொருட்டு விவசாயப் பொருள்களுக்கு உயர்ந்த விலைகொடுத்து வாங்க அரசாங்கம் முன் வந்தது. இரண்டாவது, விவசாயத்தில் சக்திவாய்ந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், அவை பழுதுபடாமல் பாதுகாக்கவும் அவற்றைக் கவனமாக இயக்கவும் போதிய தொழிலறிவு படைத்தவர்கள் நிரந்தரமாகக் கூட்டுப்பண்ணைகளிலும் இயந்திரக் கூடங்களிலுமில்லை. குறிப்பாக, சிறிய பண்ணைகள் நவீன இயந்திரங்களையும் ஏனைய கருவிகளையும் சாதனங்களையும் பயன்படுத்தக் கூடிய நிலையிலில்லை. இக் குறையைப் போக்குவதற்காகச் சின்னஞ் சிறு பண்ணைகளைப் பெரியவற்றோடு இணைத்துப் பெரும் பண்ணைகளாக மாற்றியமைத்தனர். மூன்றாவது, 1946-58 வரையுள்ள காலத்தில் கிட்டத்தட்ட 135 பில்லியன் ரூபிள் விவசாயத்தில் முதலீடு செய்யப்பட்டது. அதன் பயனாக, இயந்திரக் கலப்பைகளின் எண்ணிக்கை போருக்கு முன்னாலிருந்ததைப் போல் இரண்டு மடங்குகளுக்கு மேலாயிற்று. இணைக்கப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை 182.000-லிருந்து 502.090ஆக அதிகரித்தது. லாரிகளும் 228,000-லிருந்து 700,000ஆகப் பெருகியது. அத்துடன் விவசாயக் கருவிகளின் தரமும் சக்தியும் கணிசமாக உயர்ந்தது. நான்காவது, போரின்போதே ரஷ்யாவின் கிழக்குப் பகுதியிலுள்ள தரிசு நிலங்கள் பேரளவில் பண்படுத்தப்பட்டுப் பயிரிடப்படலாயின. போருக்குப் பின்னரும் கசாக்ஸ்தான், சைபீரியா போன்ற பகுதிகளில் விவசாயம் பரவியது. குறிப்பாக, கசாக்ஸ்தானின் அபிவிருத்தியில் ஆயிரக்கணக்கானவர் அக்கறை காட்டினர். இளங் கம்யூனிஸ்டுகள் பலர் இப் பகுதியில் புகுந்து விவசாயத்தில் ஈடுபடலாயினர். கிட்டத்தட்ட 200,000 புது இயந்திரக் கலப்பைகள் பயன்படுத்தப்பட்டன. புதிய விவசாய முறைகளும் பேரளவில் புகுந்தன. அதன் பயனாக, கால்நடை உற்பத்தியில் கசாக்ஸ்தான் சோவியத் யூனியனிலேயே இரண்டாவது இடத்தை அடைந்தது. உணவு உற்பத்தியிலும் கிழக்குப் பகுதி மிகவும் முக்கியத்துவம் பெறலாயிற்று. ஐந்தாவது, கூட்டுப்பண்ணை விவசாயிகள் தங்கள் சொந்த நிலத்தில் விளைவித்த விவசாயப் பொருள்களிலும் கால்நடைகளிலும் ஒரு பகுதியை அரசாங்கத்திடம் விற்க வேண்டும் என்ற நிபந்தனை கைவிடப்பட்டது. ஆறாவது, விவசாய அபிவிருத்தித்

திட்டங்களை வகுப்பதில் கூட்டுப் பண்ணைகளுக்கு அதிகப் பங்கு அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட பகுதிகளின் தேவைகளுக்கேற்ப கூட்டுப் பண்ணைச் சட்டதிட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டன. ஏழாவது, கூட்டுப் பண்ணைகளின் உபயோகத்திலிருந்து விவசாயக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்ததோடு அவற்றைத் திறம்பட இயக்கக்கூடிய வல்லுநர்களும் பேரளவில் பயிற்றுவிக்கப்பட்டனர். உதாரணமாக, இயந்திரக் கலப்பைகள், இணைக்கப்பட்ட இயந்திரங்கள், லாரிகள் ஆகியவற்றை இயக்கியவர்களின் எண்ணிக்கை 1953-லிருந்து 1957-க்குள் 1,705,000-லிருந்து 2,331,000 ஆக அதிகரித்தது. 1958-ன் இறுதியில் கிட்டத்தட்ட 500,000 விவசாய வல்லுநர்கள் கூட்டுப் பண்ணைகளில் பணியாற்றி வந்தனர். மொத்தத்தில் கூட்டுப் பண்ணைகளில் பணியாற்றி வந்தவர்களின் கல்வியின் தரம் உயர்ந்து வந்தது. எட்டாவது, இயந்திரக்கூடங்களிடமிருந்த விவசாய இயந்திரங்கள் பல கூட்டுப் பண்ணைகளிடம் விற்கப்பட்டன. அவற்றை வாங்கவும் ஏனைய விவசாயப் பணிகளைச் செவ்வன செய்யவும் வேண்டிய கடன் வசதியும் தாராளமாக வழங்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு போருக்குப் பின் 45.2 மில்லியன் ஹெக்டார் அதிகரித்தது. மொத்தத்தில் 1958-ல் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 195.6 மில்லியன் ஹெக்டாராயிற்று. நிலத்தின் ஆக்கச் சக்தியும் போருக்கு முன்னுலிருந்ததைவிட 39 சதவிகிதம் அதிகமாக இருந்தது. கால்நடைகளின் எண்ணிக்கை கணிசமாகக் கூடியது. மொத்தத்தில் 1958-ல் அரசாங்க—கூட்டுப் பண்ணைகளின் வருவாய் போருக்கு முன்னுலிருந்ததைக் காட்டிலும் 130 பில்லியன் ரூபிள்—அதாவது ஆறு மடங்கு அதிகமாக இருந்தது. அவற்றின் பொதுச் சேமிப்பும் இரட்டித்தது. இருப்பினும், அன்றுள்ள நிலையில் சோவியத் பொருளாதாரம் வனப்புடன் விளங்கவில்லை. இக்காலத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விரிப்பே விவசாய உற்பத்தி பெருகியதற்கான மூலகாரணமாகும். ஆக்கச் சக்தியில் அவ்வளவு சோபை இல்லை. இப் பிரச்சினை சோவியத் அரசாங்கத்தின் கவனத்தை இழுத்தது.

**விஞ்ஞான வளர்ச்சியும் வாழ்க்கைத்தர உயர்ச்சியும்**

பாமர மக்கள் பயன் பெறும் வகையில் பொருளாதாரத்தை இயக்குவதே சமதர்ம சமுதாயத்தின் முக்கியமான கடமைகளில் ஒன்றுகும். பொருள் வளத்தைப் பெருக்கி மக்களது கலாச்சார—சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அக் கடமையின் செயல் முறையாகும். சோவியத் பொருளாதாரம் இத் திக்கில் திறம்பட இயங்கி வந்தது என்பதைச் சில புள்ளி விவரங்களின்மூலம் காணலாம்.

நாட்டு வருவாயை எடுத்துக்கொண்டால் 1950-ல் பத்தாண்டு களுக்கு முந்தி இருந்ததைக் காட்டிலும் 64 சதவிகிதம் அதிகம் இருந்தது. இவ் விகிதம் 1955-ல் 181 ஆகவும், 1958-ல் 276 ஆகவும் உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டுவருவாய் அதிகரித்து வந்ததன் பயனாக பாமர மக்களின் மெய்வருவாயைக் கணிசமான அளவில் உயர்த்த முடிந்தது. விலைக் குறைப்பின் வாயிலாக மெய் வருவாயை நேரடியாக உயர்த்த முடிந்தது. 1947-ன் கடைசி மூன்று மாதங்களில் 100 ஆக இருந்த விலை காட்டிப் படிப்படியாகக் குறைந்து, 1950 மார்ச் முதலாம் தேதி 57 புள்ளிகளாகியது. 1954 ஏப்ரல் முதலாம் தேதி அது 43 புள்ளிகளாகியது. உணவுப் பொருள்களை மட்டும் எடுத்துக்கொண்டால் இக் காலத்தில் 61.5 சத விகிதம் குறையலாயிற்று. பின்னைய ஆண்டுகளில் விலைக் குறைப்பை விடக் கூலி உயர்வே மேல் எனக் கண்டனர். குறிப்பாகப் பின் தங்கிப் போயிருந்த துறைகளிலுள்ள உழைப்பாளரும் பணியாள ரும் கணிசமான கூலி உயர்வு பெற்றனர். அவர்கள்மீது விதிக்கப் பட்ட வரிச்சுமையும் குறைக்கப்பட்டது. இரண்டாவது, சமூகச் சேவைகள் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்மூலம் பாமர மக்களின் வாழ்க்கைத் தரம் உயரலாயிற்று. சமூக—கலாச்சாரத் துறைகளில் அரசாங்கம் மேற்கொண்ட செலவு 1940-ல் 42 பில் லியன் ரூபிளாக இருந்தது. ஆனால், 1958-ல் அத் தொகை 215 பில்லி யன் ரூபிளாக அதிகரித்தது. மூன்றாவதாக, உழைப்பாளர்—பணி யாளரின் வேலை நேரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. குறிப் பாகக் கடின உழைபபாளர், தாய்மார், இளைஞர்கள் ஆகியோரின் வேலை நேரம் அதிகமாகக் குறைக்கப்பட்டது. கடின உழைப்பாள ருக்கு ஆறு மணி நேர வேலை அமலாக்கப்பட்டது. ஏனையோர் ஏழுமணி நேரம் வேலை செய்து வந்தனர். வாழ்க்கைத்தரம் இவ் வாறு உயர்ந்து வந்ததால் அவர்களது நுகர்வு அதிகரித்தது. குறிப் பாக வசதிப் பொருள்கள் பேரளவில் நுகரப்படலாயிற்று. மேலும், இருக்கைக்களின் வசதிகளும பெருகின. அரசாங்கங்கள் குடி யிருப்புக்களுக்கு கட்டிய வீடுகளோடு தனியார் கட்டிய வீடுகளுக்கும் அரசாங்கம் போதிய கடன் வசதி கொடுத்து உதவியது. அத் துடன், கல்வி, மருத்துவ வசதிகள் பெருகின. 1958-59-ல் கிட்டத் தட்ட 50 மில்லியன் மக்கள் கல்வி கற்று வந்தனர். அவர்களில் 31.5 மில்லியன் பள்ளி இறுதி வகுப்புகளில் படித்து வந்தனர். தொழிலறிவும் ஏனைய வினைத்திறனும் படைத்தவர்களின் எண் ணிக்கை 1958-ல் 7.5 மில்லியனாக உயர்ந்தது. இத்தகைய உன்னத

மானதொரு நிலைக்குச் சோவியத் யூனியனின் அணுசக்திச் சாதனை, விண்வெளி ஆராய்ச்சி ஆகியவை சிகரமாக விளங்கின என்றால் மிகையாகாது.

## மேற்கொண்டு படிக்க

1. Hutchings (Raymond) "Soviet Economic Development". Blackwell, Oxford, 1971, Part II.
2. Nove. Alec "Introduction to Soviet Economy."
3. Podkolzin (A) opt. cit. Ch. IX.

# 11. பொது உடைமைச் சமுதாயத்தை நோக்கிய பயணம்

ஏழாண்டுத் திட்டத்தின் (1958-1965) பொது அம்சங்கள்—தொழிற்றுறை அடைந்த வெற்றிகள்—விவசாயத் துறையில் ஏற்பட்ட தயக்கம்—மேம்பட்ட வாழ்க்கை.

*அடுத்த பத்தாண்டுகள் (1966-1975) வாழ்க்கைத்தர உயர்வு—தொழில் வளர்ச்சி—விவசாய அபிவிருத்திக் குறைபாடுகள்.*

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1976-1980)—வளமிக்க சமுதாயம்—தொழில் துறையில் முன்னேற்றம்—விஞ்ஞான வளர்ச்சியும் தொழிலறிவும்—விவசாய முன்னேற்றம்—போக்குவரத்து வசதிகளின் பெருக்கம்—திட்டமுறையும் முதலீடும்—சமன்பட்ட வளர்ச்சியும் மேம்பட்ட பொருளாதார மேலாண்மையும்.

ரஷ்யப் புரட்சியின் பயனாகப் பிறந்தது சோவியத் பொருளாதாரம். குழந்தைப்பருவத்தில் அது முதலாளித்துவ நாடுகளின் முற்றுகைக்கு ஆளானது. அதிலிருந்து விடுபட்டுத் தட்டுத்தடுமாறி நடந்து புதுப் பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கலந்த பொருளாதாரத்தைக் கடைப் பிடித்தது. அதன் பின்னர் தான் சமதர்ம சமுதாயத்தை நோக்கிய பயணம் தொடங்கியது. தொழில் துறையில் சமதர்மப் பொருளாதாரம் எளிதில் உரம் பெற்று வளர்ந்தது. விவசாயத்திலும் கூட்டுப் பண்ணை தனி உடைமையை மேற்கொண்டது. இவ்வாறு சமதர்ம சக்திகள் பலம்பெற்று வரும்போது இரண்டாவது உலகப்போர் மூண்டது. சோவியத் பொருளாதாரம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி ஹிட்லரின் அழிவுக் கரங்களால் தீண்டப்பட்டது. போரில் சிதைந்து சீரழிந்த பொருளாதாரத்தைச் சீரமைத்து மேலும் மிடுக்குடன் சமதர்மப் பாதையில் வீறுநடைபோட்டது. ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக அமலாகிக் கொண்டிருக்கும்போது சமதர்மப் பரிசோதனையில் கண்ட வெற்றியால் தூண்டப்பட்ட சோவியத் மக்கள் பொது உடைமைச் சமுதாயத்தைச் சமைப்பதில் கவனம் செலுத்தலாயினர். அதற்கென ஒரு 20 ஆண்டுத் திட்டத்தை வகுத்து 1980-ல் பொது உடைமை என்ற நிலையை அடைய வேண்டு

மெனக் கங்கணங் கட்டினர். சமதர்மக் கோட்பாட்டின்படி "சக்திக் கேற்ற உழைப்பு; உழைப்புக் கேற்ற கூலி" என்றிருந்தது. ஆனால் பொது உடைமைச் சமுதாயத்தில் "சக்திக் கேற்ற வேலை; தேவைக் கேற்ற கூலி; என்ற கருத்தை நடைமுறைக்குக்கொண்டு வரவேண்டியதிருந்தது. பொருள் வளமே இம்முயற்சிக்கு இன்றியமையாததாக இருந்தது. எனவே, அதைப் பெருக்கும் வரையில் உற்பத்திச் சாதனங்களையும் தொழிலறிவையும் ஆக்கச் சக்தியையும் பெருக்க வேண்டியதிருந்தது. இத் திக்கில் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிதான் ஏழாண்டுத் திட்டமாகும் 1958—1965).

பொருள் வளத்தைப் பேரளவில் பெருக்குவதுடன் அதைச் சமுதாய முழுவதும் அனுபவிக்கக் கூடிய வகையில் பரப்புவதே பொது உடைமைச் சமுதாயத்தின் அடிப்படை அம்சமாகும். பொருள் வளத்துக்கு இன்றியமையானவை விஞ்ஞான அபிவிருத்தியும் அதனடிப்படையில் பொங்கியெழும் தொழிலறிவுமாகும். மேம்பட்ட அறிவைப் பொருளாதார முழுவதும் பரப்பி உழைப்பாளரின் ஆக்கச் சக்தியைப் பெருக்குவதே வளமிக்க பொருளாதாரத்தின் மூலமந்திரம் என்பதைச் சோவியத் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இரண்டாவது, பாமர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கலாச்சார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்று சோவியத் தலைவர்கள் நம்பினர். எனவே ஏழாண்டுத் திட்டத்தில் கனரகத் தொழில்களோடு நுகர்வுப் பொருள்களுக்கும் அதிக முக்கியத்துவமளிக்கப்பட்டது. மக்களது கூலி உயர்ந்தது; பின் தங்கிய துறைகளிலுள்ள கூலியில் அதிக முன்னேற்றம் காணப்பட்டது; தொழிலுக்கும் விவசாயத்துக்குமுள்ள இடைவெளி குறுகியது; ஓய்வு அதிகரித்தது; அதை அனுபவிக்கக் கூடிய கலாச்சார வசதிகள் பெருகின; கையால் வேலை செய்பவர்களுக்கும் மூளையைக் கொண்டு உழைப்பவர்களுக்குமுள்ள வேறுபாட்டைக் குறைக்கக் கூடிய வகையில் கல்வி அறிவும் தொழில் முறையும் அமைந்தது. இன்ன பல முயற்சிகளின்மூலம் பொது உடைமைப் பாதையில் வேகமாக முன்னேறலாம் என்று சோவியத் மக்கள் நம்பினுர்கள். அதற்கேற்ற வகையில் ஏழாண்டுத் திட்டம் அமைந்தது.

இத் திட்டத்தின் பொதுவான அம்சங்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவது பயன் தருவதாகும். முதலாவது, ஏழாண்டுகளில் தொழிலுற்பத்தியை 80 சதவிகிதமாக உயர்த்த விரும்பினர். அதாவது, முன்னைய ஆறு திட்டங்களில் எவ்வளவு தொழிலுற்பத்தி இருந்ததோ அவ்வளவு உற்பத்தியை ஏழே ஆண்டுகளில் சாதிக்க

வேண்டும் என்பது அக் குறிக்கோள். உற்பத்திச் சாதனங்களை 85—88 சதவிகிதமும் பெருக்கலாம் என்று எண்ணினர். அதிலும் இயந்திர உற்பத்தியை இரட்டிக்க வேண்டும்; உணவு உற்பத்தியை 70 சதவிகிதம் உயர்த்த வேண்டும்; ஆக்கச் சக்தியை 40—50 சதவிகிதம் உயர்த்தவேண்டும்; ஆக்கச் செலவு களை 11.5 சதவிகிதம் குறைக்க வேண்டும் என்ற குறிக் கோள்களும் முன்னால் வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது, விவசாயத்துக்கு அதிக உற்பத்திச் சாதனங்களை வழங்குவதன் மூலமாகவும் அதன் இயந்திர அடிப்படையை விரிப்பதன் மூலமாகவும் உணவு உற்பத்தி யையும் கால் நடைகளின் எண்ணிக்கையையும் பெருக்கலாம் என எண்ணினர். இவ்வகையில் கிட்டதட்ட 100 மில்லியன் ரூபிள்கள் செலவிட எண்ணினர். (புதுநாணயத்தில்—1 புது ரூபிள் 10 பழைய ரூபிளுக்குச் சமமாக இருந்தது. புது ரூபிள் 1961 ஜனவரி முதல் தியதியிலிருந்து அமலுக்கு வந்தது). மூன்றாவது, பழைய தொழில்களைப் புதுப்பிக்கவும் புதியவற்றை நிறுவவும் கிட்டத்தட்ட 200 பில்லியன் ரூபிள் செலவிட விரும்பினர். இதில் 40 சதவிகிதம் சோவியத் யூனியனின் கிழக்குப் பகுதியில் செலவிடப்பட்டது. நான்காவது, நாட்டு வருவாயை 62—65 சதவிகிதம் அதிகரிக்க விரும்பினர். அதன் பயனாக மெய்வருவாயை 40 சதவிகிதம் உயர்த்தத் திட்டமிட்டனர். கல்வி, பொது நலவசதிகளையும் பேரளவில் பெருக்கிப் பாமர மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த விரும்பினர்.

### தொழில் துறையிலும் போக்குவரத்துச் சாதனங்களிலும் சாதித் தவை

பல துறைகளில் சாதனைகள் திட்டத்தின் இலக்குகளை மிஞ்சின. சான்றாக, தொழிலுற்பத்தித் திட்டத்தைவிட 4 சதவிகிதம் அதிக மாக இருந்தது. இயந்திரங்களின் பெருக்கம் தொழிலறிவின் பரவல், உழைப்பாளர் காட்டிய ஆர்வம் ஆகியவை உற்பத்திப் பெருக்கத் துக்கு உறுதுணையாக இருந்தன. கிட்டதட்ட 20,000 புதிய இயந் திரங்களும், கருவிகளும், தொழில் முறைகளும் புகுந்தன. பழையன கழிதலும் புதியன புகுதலும் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன. கிட்டதட்ட 26 மில்லியன் புதிய கண்டுபிடிப்புகளும் ஆலோசனைகளும் ஏழாண்டுக் காலத்தில் அமலுக்கு வந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றின் பயனாக ஆக்கத்திறன் உயர்ந்து 10 மில்லியன் ரூபிள் மிச்சப்படுத்த முடிந்தது. இரண் டாவது, அரசாங்கத்தின் முதலீடும் திட்டத்தை மிஞ்சியது. உண்மையில் ஏழாண்டுத் திட்டத்தில் தொழிற்துறையில் அரசாங்கம் முதலீடு செய்த தொகை அதற்கு முந்திய 13 ஆண்டு களின் முதலீட்டைக் காட்டிலும் 50 சதவிகிதம் அதிகமாக

இருந்தது. வேறுவிதமாகக் கூறவேண்டுமாயின் 1946—58 வரை தொழிற்துறையில் அரசாங்க முதலீடு ஆண்டொன்றுக்கு சராசரி 11.25 மில்லியன் ரூபிளாக இருந்தது. ஆனல் ஏழாண்டுத் திட்டத்தின்கீழ் சராசரி 31·86 பில்லியன் செலவிடப்பட்டது. கிட்டதட்ட 5500 பெரிய தொழிற்சாலைகள் புதிதாக நிறுவப் பட்டன. மாபெரும் மின்சார நிலையங்கள் சில நிர்மாணிக்கப் பட்டன. அவற்றில் உற்பத்தியான சக்தி வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டது. இவற்றுள் வால்காகேராடிலிருந்து மாஸ்கோ வுக்குச் சைபீரியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரைக்கும் பேரளவில் மின்சாரம் கொண்டு செல்லப்பட்டது. பிரமாண்ட மான இரும்பு உருக்குச் சாலைகள் நிறுவப்பட்டன. அவற்றில் 90 சதவிகித உற்பத்தித் தாஞக இயங்கும் முறைகளின் மூலம் கையாளப்பட்டன. இம்முறைகளால் உற்பத்திச் செலவுகள் குறைந்தன; ஆக்கச் சக்தி உயர்ந்தது.

இரசாயனத் தொழில்களின் ஆக்க வல்லமை ஏனைய தொழில் களைக் காட்டிலும் அதிக வேகமாகப் பெருகியது. செயற்கை இரப்பர், துணி வகைகள், உரம் ஆகியவை இரசாயனத் தொழில்களில் முக்கியமானவை.

பொறியியல் தொழில்கள் சோவியத் பொருளாதாரத்தில் மூல ஸ்தானம் வகித்து வந்தது. ஏனைய தொழில்களின் வளர்ச்சிக் கான சாதனங்களையும் கருவிகளையும் இயந்திர நுணுக்க அறி வையும் அவற்றை அமலாக்குவதற்கான அடிப்படையையும் வழங் கியது இத்தொழில். எனவே, மொத்த தொழிலுற்பத்தியில் அது முதலிடம் வகித்ததில் வியப்பொன்றுமில்லை. தொழில் துறைகளில் பணியாற்றி வந்த உழைப்பாளரில் மூன்றிலொரு பகுதியினர் பொறியியற் தொழிலில் பணியாற்றி வந்தனர். நிலையுறு சொத்துக் களில் கால்பகுதி இத்தொழிலைத் தாங்கி நின்றது. ஏழாண்டுத் திட்டத்தின்கீழ் பொறிஇயற் தொழில்களின் உற்பத்தி 140 சத விகிதம் அதிகரித்தது. பல்வேறு துறைகளுக்கு வேண்டிய இயந் திரங்களை வழங்கிய தோடல்லாமல் விண்வெளிப் பயணம், அணு ஆராய்ச்சி ஆகியவற்றுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களையும் உருவாக்கி வந்தது.

நுகர்வுப் பொருளுற்பத்தி ஏழாண்டுத் திட்டத்தில் அதற்குமுன் என்றுமில்லாத முக்கியத்துவம் பெற்றது. குறிப்பாக, நிலையுறு நுகர்வுப் பொருளுற்பத்தியில் விறுவிறுப்புக் காணப்பட்டது.

போக்குவரத்து வசதிகளில் விரும்பிய வெற்றி கிடைத்தது. மின்சாரமயமாக்கப்பட்ட இருப்புப் பாதையின் நீளம் 20,000 கிலோ

மீட்டரிலிருந்து 79,700 கிலோமீட்டராக அதிகரித்தது. கொண்டு சென்ற சாமான்களின் அளவு 50 சதவிகிதம் போல் அதிகரித்தது. மின்சார டீசல் என்ஜின்களின் எண்ணிக்கை பெருகியது. சக்தி வாய்ந்த பல புதிய என்ஜின்கள் நிர்மாணிக்கப்பட்டன. பெட்டி களின் அளவும் பெருத்தது. இருப்புப் பாதைகளைப் போல ஏனைய போக்குவரத்துச் சாதனங்களும் வேகமாக முன்னேறின.

எனவே, மொத்தத்தில் தொழில் வளர்ச்சி திட்டத்தை மிஞ்சி நின்றது. ஆயின், ஒரு சில குறைபாடுகளும் சோவியத் தலைவர் களின் கவனத்துக்கு வந்தன. முதலாவது, இரசாயனத் தொழில்கள், பொறிஇயற்தொழில்கள், எரிபொருள் ஆகிவற்றில் சாதனை இலக்குகளைக் காட்டிலும் குறைவாக இருந்தது. இரண் டாவது, முதலீட்டின் பயனும் முதலினச் சொத்துகளின் திறப் பாடும், உழைப்பாளரின் ஆக்கச் சக்தியும் சற்றே தயங்கி நின்றன. புதிய தொழில்களை நிறுவதிலும் காலதாமதம் காணப்பட்டது. பொருளாதார மேலாண்மையிலுள்ள குறைபாடுகளே இத் தயக்கத் துக்கு முக்கியக் காரணம் எனக் கருதப்படுகிறது. அத்துடன் 1963-லும் 1965-லும் ஏற்பட்ட வறட்சியின் காரணமாகவும் விவசாயமும் அதை அடிப்படையாகக் கொண்ட தொழில்களும் சோர்வுற்றன. உலக அரங்கில் ஏற்பட்ட கெடுபிடியின் காரண மாகவும் உற்பத்திச் சாதனங்கள் சிலவற்றைப் பாதுகாப்புத் துறை களுக்குத் திரும்பவேண்டியதாயிற்று. மேலாண்மையிலுள்ள குறை களைப் போக்கும் பொருட்டு 1964 இறுதியில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1965 இறுதியில் உழைப்பாளரை உற்சாகப் படுத்தி ஊக்குவிக்கக் கூடிய பொருளாதாரத் தூண்டுதல்களையும் மனோதர்ம சாதனங்களையும் வகுக்கலாயினர். அத்துடன் பொருளாதார மேலாண்மை கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப் பட்டது. முதலாவது, அரசாங்கத் திட்டங்களின் விஞ்ஞான அடிப்படையை மேம்படுத்த முயன்றனர். இரண்டாவது தொழில் களைத் திறம்பட நடத்துவதற்கான முயற்சிகளில் தொழில் நிறுவனங்களுக்கும் அதிகமான சுதந்திரம் வழங்கப்பட்டது. மூன்றுவது, செலவினங்களைச் சுருக்கிச் சிக்கனத்தை ஏற்படுத்து வதற்கு உதவியாக நிறுவனங்களிலே செலவுக் கணக்கு முறைகளைப் (Cost Accounting system) புகுத்தினர். விலைவாசிகள், இலாபம், அதிகப்படி ஊதியம் (bonus), கடன் வசதிகள் ஆகிய பொருளா தாரத் தூண்டுதல்களை அதிகரிப்பதன் மூலமாகவும் தொழிலுற் பத்தியைப் பெருக்க முயன்றனர். ஒவ்வொரு நிறுவனத்தின் வினைத் திறமைக்கும் அங்குப் பணியாற்றிவரும் தொழிலாளருக்கும் மேலாண்மையாளரில் ஒரு குறிப்பிட்ட ஒருவர் மேலிடங்களுக்குக் கணக்கை ஒப்புவிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் என்

வலியுறுத்தப்பட்டது. எனவே, மேம்பட்ட மையத் திட்டங்கள், திறம்பட்ட நிறுவன நிருவாகம், ஊக்குவிக்கப்பட்ட உழைப்பு ஆகியவற்றின் துணைகொண்டு தொழில் வளர்ச்சியில் காணப்பட்ட தயக்கத்தைப் போக்கி விறுவிறுப்பை ஏற்படுத்த விரும்பினர்.

**விவசாயத் துறையில் ஏற்பட்ட தயக்கம்**

ஏழாண்டுத் திட்டத்தின்கீழ்த் தொழிலுற்பத்தி 84 சதவிகிதம் அதிகரித்தது என்று கண்டோம். ஆனால், விவசாய உற்பத்தி 14 சதவிகிதமே அதிகரித்தது. உணவு உற்பத்தியில் மிகவும் ஏற்றத் தாழ்வு காணப்பட்டது. ஓரிரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியே அதற்கு அடிப்படைக் காரணமாகும். கால்நடை உற்பத்தி அவ்வளவு மோசமாக இல்லை. விவசாய உற்பத்தியின் மேலாண்மையில் காணப்பட்ட குறைபாடுகளும் நிலவளத்தைப் பெருக்கக் கூடிய புதிய முறைகளைப் புகுத்துவதில் ஏற்பட்ட சுணக்கமும் விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றத்துக்குரிய மற்ற காரணங்களாகும். இவற்றைப் போக்குவதற்கு ஒரு சில திட்டங்கள் தீட்டப்பட்டன. நிலத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 1966-ல் பத்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. நீர்ப்பாசனம், வடிகால்வசதி, புல்வெளிகளையும் மேய்ச்சல் தரைகளையும் அபிவிருத்தி செய்தல், பயிருக்கு இடைஞ்சலான கல், களை, காட்டுச் செடிகள், மரங்கள் ஆகியவற்றை அகற்றுதல், குளங் குட்டைகள் வெட்டுதல் போன்ற பல அம்சங்கள் அடங்கியிருந்தன, இவ்வகையில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 15 பில் லியன் ரூபிள் செலவிட முன்வந்தனர்.

விவசாய அபிவிருத்திக்கான கொள்கையிலும் அடிப்படையான மாறுதல் காணப்பட்டது. முதல் ஆறு திட்டங்களில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பை அதிகரிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தனர். இயந்திரங்களின் துணைகொண்டு, பரந்த விவசாய முறைகளைக் கையாண்டு தரிசாகக் கிடந்த கன்னி நிலங்களை உழுது பயிரிடலாயினர். எனவே, இக்காலத்தில் விவசாயத் துறையில் அதிகரித்து வந்த உற்பத்தியில் எண்பது சதவிகிதம் புதிய நிலங்களைத் திருத்திப் பண்படுத்துவதால் ஏற்பட்டது எனக் கணக்கிட்டுள்ளனர். ஏழாண்டுத் திட்டத்தின்கீழ் இருக்கிற நிலப்பரப்பில் அதிகமான உரம், உழைப்பு, மின்சாரம், இயந்திரங்கள், கருவிகள் ஆகிய வற்றைப் பயன்படுத்துவதன்மூலம் வளமூட்டுவது அவசியம் எனக் கருதலாயினர். குறிப்பாக, இரசாயன உரம் பேரளவில் பயன் படுத்தப்பட்டது. ஏழாண்டுத் திட்டத்தின் முடிவில் கிட்டத்தட்ட 31 மில்லியன் டன் செயற்கை உரம் உற்பத்தி செய்யப்பட்டது. அடுத்த திட்டத்தில் அதை இரண்டு மடங்காக்க விரும்பினர்.

விவசாய இயந்திரங்களின் எண்ணிக்கையும், தரமும், சக்தியும் அதிகரித்தது. அதன் மூலம் விவசாயத்தின் இயந்திர அடிப்படை பலப்படுத்தப்பட்டது. கிராமாந்தரங்களில் மின்சாரத்தைப் பேரளவில் பயன்படுத்தலாயினர். அத்துடன் உழைப்புக்கு வேண்டிய ஊக்கமும் ஊதியமும் வழங்கி அவர்களது முனைப்பை மேம்படுத்த முன்வந்தனர். குறிப்பாக, கூட்டுப் பண்ணை உற்பத்தியில் முதல் பங்கு அதில் உழைத்தவர்களின் கூலி, சம்பளம் ஆகியவற்றை ஈடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை உறுதிப்படுத்தப்பட்டது. ஊதியம் பாதுகாப்பு உழைப்புக்கு இன்றியமையாதது என்ற எண்ணமே இம் மாற்றத்திற்குக் காரணமாகும். விவசாயப் பொருள்களுக்குக் கிடைத்த விலை அவற்றை வாங்கிய முறை, கூட்டுப் பண்ணைகளின் அவசியங்களுக் கேற்ற கடன் வசதிகள் போன்றவற்றிலும் சாதக மான பல மாறுதல்கள் தோன்றின.

### மேம்பட்ட வாழ்க்கை

ஏழாண்டுத் திட்டம் நுகர்வுப் பொருளுற்பத்திக்கு உயரியதோர் இடமளித்தது எனக் கண்டோம். அதன்படி துணிமணிகள் காலணிகள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமின்றி வசதிப் பொருள்களும், இத் திட்டத்தின்கீழ் முக்கியத்துவம் பெற லாயின. விவசாயத்தில் காணப்பட்ட சுணக்கம் ஓரளவு நுகர்வுப் பொருள் உற்பத்தியைப் பாதித்ததென்றாலும் மொத்தத்தில் சில்லரையாக வாங்கப்பட்ட நுகர்வுப் பொருள்களின் அளவு 50 சதவிகிதம் அதிகரித்தது. அதாவது, 1958-ல் 67.7 பில்லியன் ரூபிளாக இருந்த சில்லரை வியாபாரம் 1965-ல் 103.5 பில்லியனாக உயர்ந்தது.

ஆலைகளில் வேலை செய்துவந்த தொழிலாளருக்கும், பணியா ளருக்கும் ஊதிய உயர்வு கிட்டியது. 1958-ல் 78 ரூபிளாக இருந்த அவர்களது சராசரி ஆண்டுக்கூலி 1965-ல் 95 ஆக உயர்ந்தது. அரசாங்கத்தால் பொது நுகர்வுக்கான வகையில் மேற்கொள்ளப் படும் செலவையும் கணக்கில் சேர்த்தால் அவ் வருவாய் முறையே 104 ரூபிள் 128 ரூபிளாகும். ஆசிரியர், மருத்துவர், பொதுநலப் பணியாளராக வேலை செய்துவந்த 20 மில்லியன் பேருக்கு 1964-65ல் கிட்டத்தட்ட 25 சதவிகித ஊதிய உயர்வு கிட்டியது. உழைப்பி லிருந்து ஓய்வுபெற்ற வயோதிகரின் உபகாரச் சம்பளமும் உயர்ந் தது. கூட்டுப்பண்ணையில் வேலை செய்தவர்களுக்கும் இச் சலுகை கிடைக்கலாயிற்று. 1965-ல் 32 மில்லியன் பேர் உபகாரச் சம்ப ளத்தைக் கொண்டு சீவனம் நடத்திவந்தனர். கல்வி, மருத்துவம்,

கலாச்சாரம் போன்ற பொதுவான நுகர்வினங்களில் அரசாங்கம் செலவிட்டு வந்த பணம் ஏழாண்டுத் திட்டத்தின்கீழ் இரட்டித்தது. 1958-ல் 21·5 பில்லியன் ரூபிளாக உயர்ந்தது. வீட்டு வசதியும் 40 சதவிகிதம் அதிகரித்தது.

வேலை நேரத்தைக் குறைத்து விடுநேரத்தைப் பெருக்கியதன் பயனாகப் பாமரமக்கள் கலாச்சாரத் துறைகளில் ஈடுபட்டுத் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்த ஏதுவாயிற்று. ஏற்கெனவே 1960-ல் ஆறு முதல் ஏழுமணி நேர வேலை அமலாக்கப்பட்டது. கூலிமட்டும் குறைக்கப்படவில்லை. ஒரு சில துறைகளில் கூலி கூடியது.

கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை ஏழாண்டுகளில் 50 மில்லியனிலிருந்து 71 மில்லியனாக உயர்ந்தது. உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் 48 மில்லியன் பேர் படித்துவந்தனர். 7·5 மில்லியன் பேர் உயர்ந்த கல்வி கற்று வந்தனர். 1965-ல் 1 மில்லியன் பேருக்கு பாண்டித்யம் பெற்றவர்கள் என்ற பட்டம் கிடைத்தது. அமெரிக்காவில் உள்ளதைக்காட்டிலும் இரண்டு மடங்கு பொறி இயல் வல்லுநர்கள் சோவியத் யூனியனில் உண்டு. விஞ்ஞானம் இயந்திர நுணுக்கம் பொதுப்படையான சுகாதாரம் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தும் வசதிகள் ஆகிய துறைகளில் சோவியத் யூனியனுக்கு இணையான நாடு என்ற நிலை ஏழாண்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பட்டது.

## அடுத்த பத்தாண்டுகள் (1966-1975)

சமதர்ம சமுதாயத்தின் அஸ்திவாரத்தை உறுதியாக அமைத்த சோவியத் யூனியன் எப்படி ஏழாண்டுத் திட்டத்தின் மூலம் பொது உடைமைச் சமுதாயத்தை நோக்கி அடியெடுத்து வைத்தது என்று கண்டோம். அச் சமுதாயத்தின் பல்வேறு அம்சங்களையும் கூறுகளையும் விஞ்ஞான ரீதியில் அலசி ஆராய்ந்து அதற்கேற்ப உற்பத்திச் சாதனங்களையும் தொழிலறிவையும் பெருக்கிப் பயன்படுத்திப் புதியதோர் மனிதனை உருவாக்குவதே பின்னைய திட்டங்களின் மூல மந்திரமாக இருந்தது.

ரஷ்யப் புரட்சியை அடுத்துப் பொது உடைமைக்கு இலக்கணம் கூற முற்பட்ட லெனின் சோவியத்தும் மின்சார மயமும் சேர்ந்தால் கம்யூனிஸமாகும் என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது. அதைச் சிரமேற்கொண்ட சோவியத்து மக்களும் அவர்களது தலைவர்களும் பிரமாண்டமான மின்சாரத் திட்டங்களை உருவாக்குவதில் தங்களுக்கு ஈடு-இணை கிடையாது என்று சொல்லக்கூடிய வகையில் செயற்பட்டு வந்தனர். ஆரம்ப காலத்தில் சமதர்மத்தின்

எதிரிகள் சிலர் பின் தங்கிப் போயிருந்த சோவியத் யூனியன் மின்சார மயமாவது எப்படி என்று லெனினது கருத்தை எள்ளிநகையாடுவது போல் (Electrification)—அதாவது கற்பனை அல்லது பகற்கனவு என்று வருணித்தனர். ஆனால், சோவியத் பொருளாதாரத்தைக் கட்டி வளர்த்த மேதைகள் எட்டாம்—ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டங்களில்கூடப் பிரமாண்டமான மின்சாரத் திட்டங்களை நிர்மாணிக்க முன்வந்தனர். நகரங்களும் கிராமங்களும் ஒருங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பது அவர்களது விருப்பம். இரண்டாவது, தொழிலறிவின் அடிப்படையைக் கணிசமான அளவில் பலப்படுத்தித் தானாக இயங்கும் இயந்திரங்களின் துணை கொண்டு உழைப்பின் ஆக்கச் சக்தியை அதிகரிப்பதன்மூலம் பொருளுற்பத்தியைப் பெருக்க எண்ணினர். மூன்றாவது இரசாயனத் தொழில்களின் முக்கியத்துவம் திட்டத்துக்கு திட்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது. நான்காவது தொழிலுற்பத்தியில் நுகர்வுப் பொருள்களுக்கு என்றுமில்லாத முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வளர்ச்சி வேகத்தில் நுகர்வுப் பொருள்கள் மூலதனப் பொருள்களைக் காட்டிலும் சிறிதளவே குறைந்திருந்தது. பொதுத் துறை வழங்கிய நுகர்வுகளும் அதிகரித்த வண்ணமிருந்தன. அத்துடன் கூலி உயர்வு, வேலை நேரக் குறைப்பு, கலாச்சார வசதிகளின் அபரிதமான பெருக்கம் ஆகியவற்றின் வாயிலாகப் பாமர வாழ்க்கை வளமிக்கதாக்க முயன்றனர். ஐந்தாவது, நகருக்கும் நாட்டுப்புறத்துக்குமுள்ள வேறுபாடுகளைக் குறைக்க முயன்றனர். அதேபோல் உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்குமுள்ள வேறுபாட்டையும் குறைக்கும் பொருட்டுக் கல்வியறிவையும் தொழிலறிவையும் பரந்த அடிப்படையில் கணிசமான அளவில் வளர்க்க விருப்பினர். ஆறாவது, பொருள்களின் ஏழாவது பொருளாதாரத் திட்ட முறையை விஞ்ஞான ரீதியில் திருத்தியமைத்து அதன் மேலாண்மையைச் செம்மைப்படுத்த முயன்றனர். உழைப்பாளர் மனங்கொண்டு உழைக்கும்படித் தூண்டக் கூடிய வழிவகைகளையும் அமலுக்குக் கொண்டுவர முயன்றனர். எட்டாவது, அன்று உலகச் சூழ்நிலை, இருந்த நிலையில் பாதுகாப்புச் செலவுகளை மேலும் அதிகரிக்க வேண்டியதாயிற்று. குறிப்பாக வியத்னும் போர் கவலை தருவதாக இருந்தது. அராபிய நாடுகளுக்கும் இஸ்ரவேலுக்குமிடையே நடந்த போர்களும் சோவியத் யூனியனின் கவனத்தை இழுத்தன. சீனாவின் நடத்தையும் அவர்களுக்குக் கோபமூட்டுவதாக இருந்தது. ஒன்பதாவது, சோவியத் விவசாயத்தை விறுவிறுப்பை உண்டாக்குவது இன்றியமையாததாக இருந்தது. பத்தாவது, உலக அரங்கில் சமதர்மக் குடும்பத்தில் உறுப்பினராக இருந்த சகோதர நாடுகளின் நலனில் அக்கறை காட்டுவதோடு அவர்களது பொது

நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பொருளாதாரக் கூட்டுறவை வளர்ப்பது அவசியமாயிற்று. ஏகாதிபத்திய நாடு களின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களுக்கு உதவுவதுடன் விடுதலை பெற்ற நாடுகள் பின் தங்கிய தங்களது பொருளாதாரத்தைச் சுதந்திரமான வகையில் வேகமாக வளர்ப்பதற்கு வேண்டிய உதவிகளை வழங்குவதும் சோவியத் சமுதாயத்தின் கடமையாயிற்று. எனவே, உள்நாட்டில் பொது உடைமைச் சமுதாயத்தைச் சமைப்பதுடன் உலக அரங்க நண்பர்களுக்கு உற்ற உதவி வழங்கி முதலாளித்துவ நாடுகளுடன் சமாதானப் போட்டியில் இறங்குவது இன்றியமையாததாயிற்று. சுருங்கக் கூறின், பொதுஉடைமைச் சமுதாயத்தை உருவாக்கு வதில் சோவியத் யூனியன் ஏற்கெனவே சிரமேற்கொண்ட வேலை களைப் பேரளவில் திறம்படத் தொடர்ந்து செய்து பொருள் வளத்தைப் பெருக்குவதுடன் உள் நாட்டிலும் உலக அரங்கிலும் புத்தம் புதிய பல பொறுப்புகளையும் கடமைகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று.

#### வாழ்க்கைத்தர உயர்வு

எட்டாவது—ஒன்பதாவது திட்டங்களடங்கிய பத்தாண்டுகளில் (1966—1975) சோவியத் யூனியன் நாட்டு வருவாய் கிட்டதட்ட 90 சதவிகிதம் அதிகரித்தது. இத்துணை வேகமான வளர்ச்சியின் காரணமாக தனிநபர் மெய்வருவாய் கிட்டதட்ட 15 ஆண்டுகளுக் கொருமுறை இரட்டித்து வருகிறது என்னலாம். நாட்டுவருவாயில் கிட்டதட்ட முக்கால்பகுதி நுகர்வுக்காகவும், கால்பகுதி முதலாக்கத் துவத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டது. நுகர்வுக்கான முதலீட் டையும் கணக்கிலெடுத்தால் இன்றுள்ள நிலையில் நாட்டுவருவாயில் கிட்டதட்ட 80 சதவிகிதம் நுகர்வுக்கான துறைகளில் செலுத்தப் படுகிறது என்னலாம். பாமர மக்களின் வாழ்க்கையை வளப் படுத்துவதற்கு நுகர்வுப்பொருளுற்பத்திக்கு இவ்வளவு முக்கியத் துவம் வழங்குவது இன்றியமையாததாகும். வேறு விதமாகப் பார்ப்போமாயின் 1965-க்குப் பின்னுள்ள பத்தாண்டுகளில் சில்லரை வியாபாரத்தினளவு இரட்டித்துள்ளது. இதில் தொலைக் காட்சி, சலவை இயந்திரங்கள் ஆகிய நிலையுறு நுகர்வுப் பொருள்களின் முக்கியத்துவம் வேகமாக அதிகரித்து வருகிறது. ஆண்டொன் றுக்குக் கிட்டதட்ட 1 மில்லியன் கார்கள் விலையாகின்றன. அத்துடன் பத்தாண்டுகளில் கிட்டதட்ட 22 மில்லியன் குடும்பங் களுக்கு இருக்கை வசதி கிடைத்தது. அதே காலத்தில் உலகில் வேறெந்த நாடுகளிலும் இத்தனை வீடுகள் கட்டப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. வேறுவிதமாகக் கூறவேண்டுமாயின், கடந்த

20 ஆண்டுகளில் (நான்கு திட்டங்களின்கீழ்) கிட்டதட்ட 2 பில்லியன் சதுர மீட்டர் தரையளவு கொண்ட வீடுகள் சோவியத் யூனியனில் கட்டப்பட்டுள்ளன. இது வரலாறு கண்டிராத சாதனையாகும்.

பொது நல வசதிகளும் பேரளவில் பெருகி வருகிறது. எல்லாக் குழந்தைகளுக்கும் உயர்நிலைக் கல்வி வழங்குவது ; மருத்துவ விடுதிகள், ஆரோக்கியாசிரமங்கள் ஆக வாசஸ்தலங்கள், விடுமுறை வீடுகள், இளங் குழந்தைகளுக்கான பள்ளிகள், பெற்றோர் வேலைக்குப் போகும்போது பச்சிளம் பாலர்களின் பரிபாலிப்புக்கான கூடங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை பலுகிப் பெருகியது.

பின்தங்கிய தொழில்களின் ஊதியம் அதிகரித்தது. வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டவர்கள், அங்கவீனர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட உபகாரச் சம்பளம் உயர்ந்தது. உழைப்பாளருக்குக் கூலி உயர்வு பெருகியது. "ஐந்து நாள் வாரம்; ஆறு மணி நேர நாள்" என்ற கொள்கை படிப்படியாக அமலுக்கு வந்தது. பொதுநல வசதிகள் உட்பட உழைப்பாளரின் சராசரி ஊதியம் ஆண்டொன்றுக்கு 200 ரூபிளை எட்டிப்பிடித்தது. இவ்வாறு வாழ்க்கைத்தரம் மளமளவென உயர்ந்து வந்தது.

**தொழில் வளர்ச்சி**

கடந்த இரண்டு திட்டங்களில் தொழிலுற்பத்தி சுமார் 110 சதவிகிதம் அதிகரித்தது. கனரகப் பொறியியற் தொழில்களிலும் இரசாயனத் துறையிலும் உற்பத்தி மும்மடங்குக்குமேல் அதிகரித்தது. கணிக்கும் இயந்திரங்களின் (Computers) எண்ணிக்கைச் சற்றேறக்குறைய பத்து மடங்காகியது. உடலுழைப்பையும் மூளையின் கலைப்பையும் குறைப்பதற்கு இத்தகைய இயந்திரங்கள் பெரிதும் உதவமுடியும்.

சோவியத் யூனியனின் கனிவளமிக்கதொரு நாடு. எனவே, ஆண்டாண்டுதோறும் புதிய பல உலோகச் செறிவுகளைக் கண்டு பிடித்தவண்ணமாகவே இருக்கின்றனர். அச் செறிவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் சோவியத் தொழில்களின் அடிப்படைப் பரந்த அளவில் பதப்படுத்தப்பட்டு வருகிறது. சான்றாக, எரிவாயுச் செறிவுகளின் அளவு ஆண்டாண்டுதோறும் அதிகரித்தவண்ணமிருக்கிறது. அதைக் குழாய்களின்மூலம் பல்வேறு இடங்களுக்கும் அனுப்புவதன்மூலம் எரிபொருளுக்கான அவசியம் பேரளவில் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எரிவாயு எரி பொருள்களின் விகிதத்தையே மாற்றி வருகிறது. எரிவாயுவில் பெரும்பகுதி

சோவியத் யூனியனின் சைபீரியா போன்ற கிழக்கத்திய பகுதிகளில் கிடைத்து வருகிறது.

பிரமாண்டமான தொழில்களுக்கு எப்போதுமே சோவியத் திட்டங்களில் இடமுண்டு. பிரமாண்டமான அணைத் திட்டங்கள், மின்சார நிலையங்கள், இரும்பாலைகள், பொறியியற்கூடங்கள் ஆகியவை இன்றுவரை முக்கியத்துவம் வகித்து வருகின்றன. ஆனால், இன்று மாபெரும் இரசாயனத் தொழிற்சாலைகள், உரத் தொழிற் சாலைகள் போன்ற பல புதுத் தொழில்களும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. பலதரப்பட்ட புத்தம் புதிய நுகர்வுப் பொருளுற்பத் திக்கான தொழில்களும் பரவி வருகின்றன. தோகலியாட்டி (Togliatti) கார் தொழிற்சாலை இவற்றுள் பிரமாண்டமானது. போக்குவரத்துச் சாதனங்களும் வேகமாக முன்னேறி வருகின்றன. அவற்றுள் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றை ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் கொண்டு செல்லக்கூடிய பெரிய குழாய்கள் போக்குவரத்துச் சாதனங்களுள் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

உழைப்பின் ஆக்கத்திறன் நாளுக்கு நாள் அதிகரித்து வரு கிறது. கடந்த பத்து ஆண்டுகளில் ஆக்கச்சக்தி கிட்டதட்ட 70 சத விகிதம் அதிகரித்துள்ளது. இதற்கு ஒரு சில காரணங்கள் உண்டு. முதலாவது, தொழிலாளிக்கு உபகாரமாக இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் தரமும் சக்தியும் அதிகரித்து வருகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. பத்து ஆண்டுகளில் மட்டும் கிட்டதட்ட 850 பில்லியன் ரூபிள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. (1969 விலைவாசிகளைக் கொண்டு கணக்கிட்டால்). இம் முதலீட்டால் பழைய இயந்திரங்கள் ஆயிரக்கணக்கில் புகுத்தப்பட்டுள்ளன. இவை உழைப்பின் சக்தியை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளன. இவற்றுள் பல இயந்திரங்கள் தானாக இயங்கக் கூடியவை இரண் டாவது, கடந்த பத்து ஆண்டுகளில் உழைப்பாளர் பயன்படுத்தி வந்த சராசரி சக்தி இரட்டித்துள்ளது. இதனால் ஆக்கச்சக்தி அதிகரிப்பது இயல்பு. மூன்றாவது, ஊதிய முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாகத் தொழிலாளி உற்பத்தி பெருக்கத் திலும் இலாபத்திலும் கவனம் செலுத்தி வருகிறான். அதன் பயனா கவும் உழைப்பாளரின் ஆக்கச்சக்தி உயர்ந்து வருகிறது.

**விவசாய அபிவிருத்தி**

விவசாயத் துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியும் பரவாயில்லை. எட்டாவது திட்டத்தில் (1966—1970)

விவசாயத்தின் சாதனை திட்டத்தை மிஞ்சி நின்றது. ஒன்பதாவது திட்டத்திலும் சராசரி உற்பத்தி முந்திய திட்டத்தைவிட 13 சத விகிதம் அதிகமாக இருந்தது. ஆனால், திட்டத்தில் இலக்குகளை அடைந்துவிட்டதாகக் கூறமுடியாது. அதே சமயத்தில் விவசாயத் துறையின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. முதலாவது, முதலீட்டில் கிட்டத்தட்ட கால்பகுதி விவசாயத்தில் செலுத்தப்பட்டது. அதனால் விவசாயத்தில் இயந்திரங்களின் பிரயோகம் 80 சதவிகிதம் அதிகரித்தது. இரண்டாவது நாட்டுப்புறங்களில் பயன்படுத்தப்பட்ட மின்சார சக்தி பத்தாண்டுகளில் 250 சத விகிதம் அதிகரித்தது. அதன் பயனாகக் கூட்டுப் பண்ணைகளில் வேலை செய்துவந்த உழைப்பாளர் ஒவ்வொருவரும் சராசரி இரண்டு மடங்கு அதிக மின்சாரம் பயன்படுத்த முடிந்தது. மூன்றாவது, ஊதியத்தில் விவசாயத்துக்கும் தொழிலுக்குமிருந்த வேறுபாடு குறைந்து வந்தது. ஒய்வு பெற்ற கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கும் வயோதிக கால உபகாரச் சம்பளம் கிடைக்கலாயிற்று. கல்வியறிவு பரவியது. கலாச்சாரம் மேம்பட்டது. வாழ்க்கைத்தரத்தில் தொனிப்பான முன்னேற்றம் காணப்பட்டது. சுருங்கக்கூறின், விவசாய உற்பத்தியில் விரும்பிய வெற்றி கிட்டவில்லையாயினும் விவசாய மக்களின் வாழ்க்கையில் வளப்பமும் வனப்பும் காணப் பட்டன.

### குறைபாடுகள்

சாதனைகள் மகத்தானவைதானென்றாலும் திட்டங்களை அமல் நடத்துவதில் பல சிக்கல்களும் குறைபாடுகளும் இல்லாமலில்லை. முதலாவது, முதலீட்டில் பல சிக்கல்கள் காணப்பட்டன. புத்தம்புது முதலினச் சொத்துக்களை உருவாக்குவதன்மூலம் பெருக்கவேண்டிய தொழிலுற்பத்தியில் 60-80 சதவிகிதமே சாதிக்க முடிந்தது. கட்டிடங்கள், கனரகத் தொழில்கள், உணவுத் தொழில்கள், இலகு தொழில்கள் போன்ற பல துறைகளிலும் இத்தகைய குறைபாடுகள் தென்பட்டன. முதலீட்டில் இத்தகைய சுணக்கம் ஏற்படாதிருந்தால் பொருளுற்பத்தி மேலும் பெருக்கெடுத்திருக்கும் என்பது தெளிவு. இரண்டாவது, ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்ட பல தொழில்களின் நிருவாகமும் மேலாண்மையும் அவ்வளவு சிறப்பாக இல்லை. தரங்குறைந்த பொருள்களை உற்பத்தி செய்வது ஒரு பெருங் குறையாக இருந்தது. நவீன யந்திரங்களையும் முறைகளைக் கொண்ட தொழில்கள்கூட கவைக்குதவாத, பத்தாம் பசலிப் பொருள்களை உற்பத்தி செய்யலாயின. பொறியற் பொருள்கள், கருவிகள், விவசாய இயந்திரங்கள் ஆகியவற்றில் தரக்குறைவு காணப்பட்டது. நுகர்வுப் பொருள்களான துணிமணிகள், வீட்டுப் பணிமூட்டுகள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றிலும் தரத்தின்

அளவு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. மூன்றாவது தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்கள் அவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்தப்படவில்லை. உற்பத்திச் சாத னங்கள் பல வீண் விரயம் செய்யப்பட்டன. இயந்திரங்களும் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை. ஏனைய தொழில்களுக்கு வேண்டிய பொருள்களைக் காலதாமதமின்றிக் குறித்த காலத்தில் அளிக்கும் பழக்கம் கெட்டுவந்தது. உழைப்பாளரின் ஆக்கச்சக்தி யும் எதிர்பார்த்த அளவு அளிக்கவில்லை. நான்காவது, தொழில் நிருவாகத்திடம் குறுகிய மனப்பான்மை தலை தூக்கலாயிற்று. சமுதாய நோக்குச் சற்றுத் தளர்ந்ததாக அறிகுறிகள் தென்பட்டன. ஐந்தாவது, விஞ்ஞான அறிவையும் தொழிலறிவையும் நடைமுறை யில் அமலாக்குவதில் காலதாமதம் காணப்பட்டது. எனவே, இத் துறைகளில் ஈடுபடுத்தப்பட்ட சாதனங்கள் விரும்பிய பலனைத் தருவதாக இல்லை. இத்தகைய குறைபாடுகளின் மத்தியிலும் சோவியத் யூனியன் முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் பன் மடங்கு வேகமாக வளர்ந்துவருவது போற்றுதற்குரியது.

### பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1976-1980)

முன்னைய திட்டங்களில் காணப்பட்ட குறைபாடுகளைக் களைந்து பொது உடைமைப் பாதையில் மேலும் பல படிகள் ஏறு வதே பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொதுவான குறிக்கோ ளாகும். மக்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவது; அவர் களது கலாச்சார அடிப்படையைப் பலப்படுத்தி நிலையை உயர்த் துவது; சமநிலை வாய்ந்த சுமுகமான பொருளுற்பத்தி வினைத்திற னபிவிருத்தி; விஞ்ஞான வளர்ச்சி; தொழிலறிவுப் பெருக்கம்; ஆக்கச்சக்தியின் அதிகரிப்பு; தரமான பொருளுற்பத்தி போன்ற குறிப்பிட்ட குறிக்கோள்களும் பத்தாண்டுத் திட்டத்தில் பொறிக்கப் பட்டன. தொழிலறிவிலும் ஏற்பட்டுவரும் புரட்சிகரமான மாறு தல்களைப் பயன்படுத்திச் சமூக—பொருளாதாரத்தின் அடிப்படை களை உறுதிப்படுத்திப் பொருள் வளத்தைப் பெருக்குவதே இக் குறிக்கோள்களின் பொதுவான அம்சமாகும். பொது உடைமைச் சமுதாயத்தின் அடித்தளத்தைப் பலப்படுத்தி வனப்புமிக்க மாட மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் எழுப்புவதுடன் அச் சமு தாயத்தின் திட்டங்கள் என்றுமே வைரிகளின் வாய்க்கு எட்டாமல் பாதுகாப்பதும் அவசியமாயிற்று.

### வளமிக்க சமுதாயம்

முன்னைய திட்டங்களில் முதலீட்டுக்கு முக்கியத்துவம் அளித் ததுபோல் இன்று வாழ்க்கைத்தர உயர்வுக்கும் கலாச்சார வாழ்வின் வளப்பத்துக்கும் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. நாட்டு வரு

வாயில் முக்கால் பாகத்தை நுகர்வுக்காக ஈடுபடுத்துவது; தொழிலாளரின் கூலியை மேலும் 16-18 சதவிகிதம் அதிகரிப்பது; கூட்டுப் பண்ணை விவசாயிகளின் வருவாயை 24-27 சதவிகிதம் அதிகரிப்பது; பொதுப்படையான நுகர்ச்சியை 28-30 சதவிகிதம் அதிகரிப்பது; வயோதிகருக்கு அதிக உபகாரச் சம்பளம் வழங்குவது; நுகர்ச்சியால் நிலையுறு பொருள்களின் அளவைக் கணிசமான அளவில் அதிகரிப்பது; சில்லரை வியாபாரத்தை 27-29 சதவிகிதம் அதிகரிப்பது; வீட்டு வசதியை மேலும் 545-550 மில்லியன் மீட்டர் அதிகரிப்பது; வீடுகளுக்கு வேண்டிய பொது வசதிகளை ஏற்ற அளவில்—உரிய வேளையில் கிடைக்கச் செய்வது போன்ற இலக்குகள் வாழ்க்கைத்தரத்தை வளப்படுத்தும் பொருட்டுப் பத்தாண்டுத் திட்டம் மேற்கொண்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், கலாச்சாரம் ஆகிய துறைகளிலும் பத்தாண்டுத் திட்டத்தின்கீழ் அதிகப்பணம் செலவிடப் போகின்றனர். கல்வி, மருத்துவ வசதி ஆகியவற்றின் தரத்தையும் உயர்த்தத் திட்டமிட்டுள்ளனர். பொழுதுபோக்குக்கான வசதிகளும் பேரளவில் பெருகவிருக்கின்றன. தொழில்களில் தானாக இயங்கும் சாதனங்களைப் புகுத்துவதன்மூலம் உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்குமுள்ள இடைவெளியைக் குறுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

**தொழில் துறையில் முன்னேற்றம்**

பத்தாவது திட்டத்தில் நாட்டு வருவாய் முந்திய திட்டத்தை விட 24-28 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (1973ஆம் ஆண்டின் விலைக்காட்டியின்படி). அதில் 71-78 சதவிகிதம் நுகர்வுக்கும் எஞ்சியது முதலாக்கத்துக்கும் பகிரப்போவதாகத் திட்டம். மொத்தத்தில் தொழிலுற்பத்தி 1967 ஜூலை 1-ன் விலைப்படி 35-39 சதவிகிதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதில் மூலதனப் பொருள்கள் 38-42 சதவிகிதமும் நுகர்வுப் பொருள்கள் 30-32 சதவிகிதமும் அதிகரிக்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயப் பொருள்கள் (1965-ன் விலைப்படி 14-17 சதவிகிதம் மட்டுமே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கனரகத் தொழில்களில் உலோகங்கள், கருவிகள், இரசாயனம், எரிபொருள்கள் ஆகியவை மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. கனரகப் பொறியியற் தொழில்களின் உற்பத்தியை 60 சதவிகிதம் உயர்த்தவேண்டும் என்பது திட்டம். புத்தம் புது கண்டுபிடிப்புகளுக்கு உருவமளித்து அவற்றை ஆக்ககரமாகப் பயன்படுத்துவது பொறியியற் துறையின் தலையாய பொறுப்பாகும்.

மின்சாரத்தின் மூலமாகவும் அணுசக்தியின் மூலமாகவும் தானுக இயங்கக்கூடிய இயந்திரங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டு வருகிறது. விவசாய இயந்திரங்களும் 50 சதவிகிதம் அதிகரிப் பதாக உள்ளது. இரும்புத் தொழில்களுக்கு வேண்டிய கருவிகளை 140 சதவிகிதம் அதிகரிப்பதாகத் திட்டம். இரசாயன—எண் ணெய்த் தொழிலுக்கு வேண்டிய கருவிகளும் இயந்திரங்களும் 50-60 சதவிகிதம்போல் அதிகரிக்க முயலுகின்றனர். 1980-ல் 143 மில் லியன் டன் செயற்கை உரம் உற்பத்தி செய்ய நினைக்கின்றனர். இது 1975ஐக் காட்டிலும் 60 சதவிகிதம் அதிகம். இலகு தொழில்கள் உணவுத் தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களையும் கருவி களையும் 50-60 சதவிகிதம் அதிகரிக்க விரும்புகின்றனர். காகிதம், காலணிகள், துணிமணிகளுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட் டுள்ளது.

**விறுவிறுப்பான விஞ்ஞான வளர்ச்சியும் ஆக்கப் பெருக்கமும்**

அணுச்சக்தி, விண்வெளிப் பயணம், சிக்கலான கணக்கு களுக்கும், நொடிப்பொழுதில் விடையளிக்கக்கூடிய கம்புயூட்டர் கள், தானுக இயங்கக்கூடிய இயந்திரங்கள் போன்ற பல புரட்சிகர மான முன்னேற்றங்களால் தொழிலறிவு பெருகி பொருளுற்பத் தியைப் பெருக்கெடுத்து ஓடும்படிச் செய்யக்கூடிய வாய்ப்புகளைப் பெருக்கி வருகின்றன. எனவே, விஞ்ஞானத்தின் அடிப்படையை நன்கு புரிந்து அவற்றைக் கையாண்டு இயற்கை உவந்தளித்துள்ள உற்பத்திச் சாதனங்களைப் பாமர மக்களின் பொருள்வளத்தைச் சொரிந்து சமுதாயத்தின் நன்வாழ்வைச் சுரக்கும் அட்சய பாத்திர மாக மாற்றுவதே சோவியத் மக்களின் இடையருத முயற்சியாக இருந்துவருகிறது. பத்தாண்டுத் திட்டத்தில் இம் முயற்சி தொனித்து நிற்கின்றது.

தானுக இயங்கக்கூடிய உற்பத்திக் கருவிகளைப் பெருக்குவது, சாதனச் சிக்கனமும் ஆக்கத்திறனும் வாய்ந்த தொழில் முறைகளை வகுத்துப் பல்வேறு துறைகளிலும் புகுத்துவது, தொழில்களுக்கு சக்தி ஊட்டும் சாதனங்களைப் பெருக்குவது போன்ற முயற்சிகள் விஞ்ஞான—தொழிலறிவுப் புரட்சியின் எதிரொலிகளாக விளங்கு கின்றன. இம் முயற்சிகளால் நிலையுறு சொத்துகளிலிருந்து சுரக்கும் பொருள்களின் அளவு பெருகுகிறது. சாதனங்களைச் சிக்கனப்படுத்த முடிகிறது. சுருங்கக்கூறின், உழைப்பின் ஆக்கச் சக்தி பெருகி வருகிறது. சான்ருக, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உழைப்பின் ஆக்கச்சக்தி 23 சதவிகிதமே அதிகரித் தது. ஆனால், பத்தாவது திட்டத்தின்கீழ் அது 27 சதவிகிதமாக உயரப் போகிறது.

**விவசாய முன்னேற்றம்**

பத்தாவது திட்டத்தின்கீழ் முதலீட்டில் கணிசமான பகுதி விவசாயத்துறையில் ஈடுபடுத்தப்போகின்றனர். 1961—1970 வரையுள்ள பத்தாண்டுகளில் சராசரி ஆண்டொன்றுக்கு 110 பில்லியன் ரூபிள் விவசாயத்தில் முதலீடு செய்யப்பட்டது. ஆனால், 1971-1980 வரையுள்ள பத்தாண்டுகளின் சராசரி முதலீடு 260 பில்லியனாக உயரப்போகிறது. மொத்த முதலீட்டில் 18 சதவிகிதமாக இருந்த விவசாயத்தின் பங்கு ஒன்பதாம், பத்தாம் திட்டங்களில் 23 சதவிகிதமாக உயரப்போகிறது. விவசாய இயந்திரங்களையும், கருவிகளையும் இவ்வாறு பெருக்குவதன்மூலம் விவசாயத்தில் உழைப்பாளர் ஒவ்வொருவரும் பயன்படுத்திவந்த நிலையுறு சொத்துகளின் விகிதத்தை 59 சதவிகிதம் அதிகரிக்கவேண்டும் என்பது பத்தாவது திட்டத்தில் காணக்கிடக்கிறது.

பத்தாவது திட்டத்தின் மொத்த முதலீட்டில் காலப் பகுதிக்கு மேல் விவசாயத்துறை கவர்ந்தது என்று கண்டோம். அதனால் புதிய பல இயந்திரங்களையும், விவசாயக் கருவிகளையும், போக்குவரத்துக்கான வசதிகளையும் பெருக்க முடிந்தது. அதன் பயனாக, கால்நடைகளுக்கு வேண்டிய தீவனத்தின் அளவை 45 மில்லியன் டன்னிலிருந்து 80 மில்லியன் டன்னாக உயர்த்தவேண்டும் என்று முடிவு செய்துள்ளனர். சத்துள்ள தீவனத்தின் மூலமாகவே கால்நடைகள் வழங்கக்கூடிய பால், இறைச்சி ஆகியவற்றின் அளவைப் பெருக்கமுடியும் என்பது திட்டத்தில் கண்ட கருத்தாகும்.

நிலத்தின் வளத்தைப் பெருக்குவதிலும் பத்தாவது திட்டம் பெரும் அக்கறை காட்டியுள்ளது. இன்று ஒரு ஹெக்டார் நிலத்திலிருந்து சராசரி 2·5 டன் தானியங்களே கிடைக்கின்றன. இதைக் கணிசமான அளவில் அதிகரிக்கமுடியும் என அவர்கள் நம்புகின்றனர். குறிப்பாக நீர்ப்பாசன வசதியுள்ள நிலத்தின் உற்பத்தியைப் பெருக்குவது எளிதாக இருக்கும். பத்தாவது திட்டத்தில் கிட்டத்தட்ட 465 மில்லியன் டன் இரசாயன உரத்தை சோவியத் விவசாயம் விஞ்சப்போகிறது. இது ஒன்பதாவது திட்டத்திலுள்ளதைக்காட்டிலும் 50 சதவிகிதம் அதிகமாகும். திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் முயற்சிகளின் பயனாகச் சராசரி உற்பத்தி முந்திய திட்டத்தைக்காட்டிலும் 14-17 சதவிகிதம் அதிகமாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், உணவு உற்பத்தி 15-21 சதவிகிதம் அதிகரித்தாலன்றி 215-220 மில்லியன் டன் தானியங்கள் உற்பத்தி செய்ய முடியாது என்பதும் பத்தாவது திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. விவசாயத்தில் காணப்படும் சோர்வுக்குப் பொதுவாக வருணபகவானையோ, இயற்கையின் ஏமாற்று வித்தை

களேயோ பழிப்பது வழக்கம். மாருக, விஞ்ஞானத்தின் துணை கொண்டு விவசாயத்துறையில் விரும்பிய வெற்றிகளை அடைய முடியும் என்று சோவியத் தலைவர்கள் நம்பிவருகிருர்கள்.

### போக்குவரத்து வசதிகளின் பெருக்கம்

கொண்டு செல்லப்படும் சாமான்களின் அளவை 30 சதவிகிதமும், பயணிகளின் எண்ணிக்கையை 23 சதவிகிதமும் அதிகரிக்கவேண்டும் என்பது பத்தாவது திட்டத்தின் இலக்குகளுள் ஒன்ருகும். உற்பத்திப் பெருக்கத்திற்கேற்பப் போக்குவரத்துச் சாதனங்களைத் திருத்தியமைப்பதன்மூலம் பெரும்பாலும் இக் குறிக்கோளை அடைய விரும்பினர்.

அத்துடன் 3,000 நீளம் புதிய இருப்புப்பாதைகள் அமைப்பது, பெட்டிகளைப் புதுப்பாணியில் அமைப்பது ஆகியவற்றின்மூலம் இருப்புப்பாதைகளின் இழுக்கும் சக்தியை அதிகரிக்க எண்ணினர். புதிய சாலைகள், செப்பனிடப்பட்டவை ஆகியவற்றின் நீளத்தைப் பத்தாவது திட்டத்தில் 62,000—65,000 கிலோ மீட்டர் அதிகரிக்க விரும்பினர். புதிய வசதிகரமான விமானங்கள் பலவும் பயன்படுத்தப்பட்டன. கப்பல்களினளவும் அதிகரிக்கவேண்டிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. எண்ணெய் எரிவாயுவைக்கொண்டு செல்லும் குழாய்களின் நீளத்தையும் அதிகரிக்கப் போகின்றனர். தொலை பேசி, தொலைக்காட்சி, வானெலி ஆகியவற்றின்மூலம் செய்திகளைப் பரப்பும் வேகமும் அதிகரித்து வருகிறது.

### முதலீட்டுப் பிரச்சினைகள்

வளர்ச்சி வரலாற்றிலே முதலீட்டுக்கு சோவியத் யூனியன் வழங்கிவரும் முக்கியத்துவம் முதலாளித்துவ நாட்டின் பரம்பரையில் காண்பதரிது. பத்தாவது திட்டத்தின்கீழ் நாட்டு வருவாயில் கால்பகுதியே முதலீடு செய்யப்பட்டதென்ருலும் முந்திய திட்டத்தைக்காட்டிலும் அளவில் அது 25 சதவிகிதம் அதிகமாக இருந்தது. ஆனல், முற்றுப்பெருத முதலீடுகள் பல திட்டத்துக்குத் திட்டம் கவலைக்கிடமளித்து வந்தன. ஆனல், பத்தாவது திட்டத்தின்கீழ் முற்றுப்பெருத முதலீடுகளின் சராசரி அளவைப் பத்து சதவிகிதம் குறைக்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதன்மூலம் ஆண்டொன்றுக்கு 13 பில்லியன் ரூபிள் மிச்சம் பண்ணலாம் என எதிர்பார்க்கின்றனர். இரண்டாவது, கட்டிடச் செலவை 3-5 சதவிகிதம் குறைக்கவேண்டும் என முடிவு செய்துள்ளனர். இதன் மூலம் குறைந்த மூலதனச் சொத்துக்களைக் கொண்டு பொருளுற்பத்தியைப் பெருக்க முயன்றனர்.

**மேம்பட்ட திட்டமுறையும் பொருளாதார மேலாண்மையும்**

திறம்பட்ட பொருளாதார மேலாண்மையின்மூலம் திட்டத்தின் சாதனைகளை மேம்படுத்தலாம் என்பது சோவியத் தலைவர்களின் நம்பிக்கை. இன்றுள்ள நிலையில் பொருள்களின் தரத்தை உயர்த்துவதில் சோவியத் யூனியன் மிகவும் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. எனவே, தரத்தை நிர்ணயம் பண்ணக்கூடிய அட்டவணைகளைத் தயாரிப்பதில் திட்டம் வகுப்பவர்கள் மிகவும் கவனம் செலுத்திவருகிறார்கள். ஒரு பொருளின் தரம் உயர்ந்திருக்கவேண்டுமாயின், அதில் பயன்படுத்தப்படும் கச்சாப்பொருள், கனிப்பொருளின் தரம் உயர்ந்திருக்கவேண்டும்; தொழில்முறைச் சிறப்பாக இருக்கவேண்டும்; இயந்திரங்கள் திறம்பட்டவையாக இருத்தல் வேண்டும்; உழைப்பாளர் மனங்கொண்டு தங்கள் வினைத்திறனை வெளிப்படுத்தவேண்டும்; மேலாண்மை மேம்பட்டிருக்கவேண்டும். தரத்தை நிர்ணயம் செய்வதில் மேற்கண்ட எல்லா அம்சங்களிலும் அக்கறை காட்டவேண்டும். இரண்டாவது, விஞ்ஞானத்தில் பொங்கிவரும் அறிவு வளர்ச்சியை வெகுவிரைவில் மக்களது வாழ்வை வளப்படுத்துவதில் அவர்கள் விழிப்பாக இருக்கவேண்டும். அடிப்படை ஆராய்ச்சியிலிருந்து சுரக்கும் அரிய பெரிய கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய வகையில் ஆராய்ச்சி, தொழிலறிவு, முதலீடு இயந்திர நிர்மாணம், சிக்கனமான வினைமுறைகள் ஆகிய பல்வேறு பருவங்களிலும் ஆக்ககரமான செயல்முறைகளைப் புகுத்தித் தூண்டிவருவதும் திட்டம் வகுப்பவர்களின் கடமையாகும். மூன்றாவது பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் உறுப்பும் ஒன்றோடொன்று முரண்பட்டிராமல் பொருந்தி, இசைந்து, இணைந்து முன்னேறுகின்றனவா என்பதைத் திட்டக் குழுவினர் கூர்ந்து கவனித்து வரவேண்டும். அதேபோல் நாட்டின் பல்வேறு பகுதிகளும் சமன்பட்ட முறையில் வளர்ந்து வருகின்றனவா என்பதுவும் அவர்களது கவனத்தைக் கவருவதாகும். ஏற்கெனவே தொழில்களை மையமான நிலையிலிருந்து நிருவகிக்கும் மந்திராலயங்கள் கைவிடப்பட்டன. தொழில் நிறுவனங்களின் மேலாண்மையில் இருந்துவந்த பல்வேறு படிகளும் குறைக்கப்பட்டன. அவற்றிற்குப்பதிலாக தொழில்களின் சங்கங்கள் (Industrial Associations) பல அமைக்கப்பட்டன. பத்தாவது திட்டத்தில் இந்த அமைப்பு முறை முழுமை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விஞ்ஞான அடிப்படையில் தொழிலுற்பத்தியை மாற்றி அமைப்பதே அவர்களது முக்கிய வேலை. முதலீட்டிலும் அவை முக்கியக் கவனம் செலுத்தி வருகின்றன. கட்டிடங்கட்டுதல், இயந்திரங்களைப் பொருத்தி நிர்மாணித்தல், விவசாயத் தொழில்கள் போன்ற பல துறைகளிலும் தொழிற்சங்கங்கள் தோன்றி வருகின்றன.

முன்னரெல்லாம் ஒவ்வொரு தொழிலிலும் தனக்கு வேண்டிய சாதனங்களையும் பொருள்களையும் ஏனைய தொழில்களிடமும், நிறுவனங்களிடமுமிருந்து குறுகிய கால உடன்பாட்டின்படி பெற்று வந்தன. இம் முறையின்கீழ்ச் சாதனங்களைப் பெறுவதில் கால தாமதம் காணப்பட்டது. புதிய நிறுவனங்களைக் கட்டிமுடிப்பதிலும் சிக்கல்கள் தோன்றின. உற்பத்திச் சாதனங்களையும் பணம், கடன் போன்ற வசதிகளையும் திறமையாகப் பயன்படுத்துவதிலும் இடையூறுகள் இருந்துவந்தன. இவற்றுள் காலதாமதத்தைப் போக்குவது இன்றியமையாததாக இருந்துவருகிறது. இதைச் சாதிக்கும் பொருட்டுத் தொழிற்சங்கங்கள் ஒன்றோடொன்று நெடுங் கால ஒப்பந்தங்கள் செய்துகொண்டு முதலீட்டையும், பொருளுற் பத்தியையும் சிக்கலின்றிச் சுமுகமாக நடத்த முயலுகின்றன. உற்பத்திச் சாதனங்கள் இயந்திரங்கள் ஆகியவற்றின் அவசியத் தையும் அளிப்பையும் மேற்பார்வை செய்துவந்த அமைப்புகளும் மந்திராலயங்களும் நீண்ட கால ஒப்பந்தங்களை நிறைவேற்றும் வகையில் தங்கள் செயல்முறைகளை மாற்றிக்கொள்ளுவது அவசிய மாயிற்று.

தொழிற்சங்கங்களின் துணைகொண்டு முதலீடு, பொருள்கள், சாதனங்களின் தரத்தையும், விலையையும் நிர்ணயிப்பது எளிதாக உள்ளது. அதன்மூலம் தொழில்களும் நிறுவனங்களும் எவ்வளவு தூரம் இலாபகரமாக இயங்கிவருகின்றன என்றும் கணக்கிட முடி கிறது. ஒன்பதாவது திட்டத்தில் கிட்டத்தட்ட 500 பில்லியன் ரூபிள் தொழில்களின் இலாபமாகக் கிடைத்தது. இது எட்டாவது திட்டத்தைவிட 50 சதவிகிதம் அதிகமாக இருந்தது. இதில் 100 பில் லியன் தொழில் துறைகளில் பொருளாதார ஊக்கத்தைத் தூண்டுவ தற்குப் பயன்படுத்தப்பட்டது. தொழில்களின் இயந்திரங்களைப் புதுப்பிக்கவும், தொழிலாளரின் பொதுவான தேவைகளை அதிகரிக் கவும், உழைப்பாளருக்குக் கூடிய ஊதியம் அளிக்கவும் இத் தொகை பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலான தொழில்கள் இலாபகரமாகப் பணியாற்றிய போதிலும் 1975-ல் கிட்டத்தட்ட 18 சதவிகித நிறுவ னங்கள் தங்கள் இலாபத்திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் திணறின. மொத்தத்தில் பொருளாதார ஊக்கத்தின் பயனுகை உழைப்பின் ஆக்கச்சக்தி பெருகுவதுடன் பொருள்களின் தரமும் உயருவதாக நம்பப்படுகிறது. இத்தகை ஊக்கங்களின் உபயோகம் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

நிறுவனங்களின் நிருவாகத்தில் செலவுச் சிக்கனம் முக்கியத் துவம் பெற்று வருகிறது. செலவுக் கணக்குகளைக் கணிக்கும் முறை களைப் (Cost accounting techniques) புகுத்துவதன்மூலம் உற்பத்திச் சாதனங்களும் பணமும் கடனும் சிக்கனமாகப் பயன்படுத்தப்படு

அட்டவணை 14.

**பொது உடைமையை நோக்கிய பயணத்தில் சில மைல் கல்கள்**

| | 1958 | 1965 | 1970 | 1975 | 1980 |
|---|---|---|---|---|---|
| இரும்புக்கனிகள் (மில்லியன் டன்) | 39·6 | 66·2 | 85·9 | N.A. | N.A. |
| எஃகு ,, | 54·9 | 91·0 | 116·0 | 141 | 160-170 |
| உருட்டிய உலோகம் ,, | 43·1 | 70·9 | 92·4 | 98·6 | 115-120 |
| நிலக்கரி ,, | 496·1 | 578 | 624 | 701 | 790-810 |
| எண்ணெய் ,, | 113·2 | 243 | 353 | 491 | 620-640 |
| எரிவாயு (மில்லியன் கன மீட்டர்) | N. A. | 129·2 | 198 | 289 | 400-435 |
| மின்சாரம் (பில்லியன் KWH) | 235·3 | 507 | 741 | 1038 | 1340-1380 |
| கனிப் பொருள் உரம் (மில்லியன் டன்) | 1·2 | 31·3 | 55·4 | 90 | 143 |
| இயந்திரங்களும் உலோக வேலையும் (அட்டவணை : 1940=100) | N.A. | 1622 | 2831 | N.A. | N.A. |
| உலோகம் வெட்டும் இயந்திரம் ('000) | N.A. | 186·1 | 202·3 | 232 | 245 |
| சிமென்டு (மில்லியன் டன்) | 33·3 | 72·4 | 95·2 | 121 | 143-146 |
| இயந்திரக் கலப்பைகள் ('000) | 219·7 | 355 | 459 | 1700 | 1900 |
| அறுவடை இயந்திரங்கள் ('000) | N.A. | 85·8 | 99·2 | 449 | 538 |
| மோட்டார் வண்டிகள் ('000) | 511·1 | 616·4 | 916·1 | 2100 | N.A. |
| தானியம் (மில்லியன் டன்) | 134·7 | 121·1 | 186·8 | 195 | 215-220 |
| தானிய வசூல் ( ,, ) | | | | N.A. | N.A. |
| சீனி ( ,, ) | 5·4 | 68·3 | 73·3 | | |
| காகிதம் ( '000 டன் ) | 2235·9 | 3231 | 4185 | 5564 | N.A. |

| | 1958 | 1965 | 1970 | 1975 | 1980 |
|---|---|---|---|---|---|
| செல்லுலோஸ் அட்டைகள் ('000 டன்) | 2235·0 | 3234 | 5109 | 6840 | 9230 |
| பருத்தித் துணி (மில்லியன் சதுர மீட்டர்) | 4308 | 5500 | 6152 | | |
| கம்பளித் துணி ( ,, ) | 385 | 466 | 643 | N.A. | N.A. |
| பட்டுத்துணி ( ,, ) | N.A. | 801 | 1146 | N.A. | N.A. |
| செயற்கைத்துணி ( ,, ) | N.A. | 7·5 | 9·0 | 11·1 | N.A. |
| காலணி (மில்லியன் ஜோடி) | 356·4 | 486 | 676 | 8·30 | N.A. |
| கந்தகாமிலம் (மில்லியன் டன்) | N.A. | 8·5 | 12·1 | N.A. | N.A. |
| செயற்கைப் பிசின், பிளாஸ்டிக் ('000 டன்) | N.A. | 803·1 | 1673 | 2840 | 5396-5964 |
| இரசாயன நார் ('000 டன்) | N.A. | 407·3 | 623 | 955 | 1450-1500 |
| மீன் ('000 டன்) | 2936 | 5774 | 7900 | N.A. | N A, |
| இறைச்சி (மில்லியன் டன்) | 7·7 | 10·0 | 12·3 | 15·6 | 15-15·6 |
| பால் ( ,, ) | 58·7 | 72·6 | 83·0 | 98·0 | 94-96 |
| முட்டை (பில்லியன்) | 23 | 29·1 | 40·7 | 46·7 | 58-61 |
| இருக்கை (தனி நபர் - சதுர மீட்டர்) | N.A. | 8·9 | 11·0 | 11·6 | N.A. |
| படிப்பவர்களின் எண்ணிக்கை (மில்லியன்) | N.A. | 52·7 | 79·6 | 80·8 | N.A. |
| பொதுப்பள்ளி (மில்லியன்) | N.A. | 36·2 | 49·4 | 49·2 | N.A. |
| உயர்தரப்பள்ளி ( ,, ) | N.A. | 2·4 | 4·6 | 4·7 | N.A. |
| பாலர் பள்ளி (மில்லியன் குழந்தைகள்) | N.A. | 4·4 | 9·3 | 11·0 | N.A. |
| சராசரி வயது | N.A. | 6·9 | 70 | 70 | N.A. |
| ஆஸ்பத்திரி (மில்லியன் படுக்கைகள்) | N.A. | 1·7 | 2·7 | 2·9 | N.A. |
| வானொலி (மில்லியன்) | 3·9 | 5·2 | 7·8 | N.A. | N.A. |
| தொலைக்காட்சி (மில்லியன்) | 1·0 | 3·7 | 6·7 | N.A. | N.A. |
| சலவை இயந்திரம் (மில்லியன்) | 0·5 | 3·4 | 5·2 | N.A. | N.A. |
| குளிரூட்டி (மில்லியன்) | 0·4 | 1·7 | 4·1 | 6·9 | N.A. |
| சூன்ய துடைப்பம் (Vaccuum Cleaner) (மில்லியன்) | 0·3 | 0·8 | 1·4 | N.A. | N.A. |

கின்றன. அதன் பயனாக ஆக்கத்திறன் மேம்பட்டுத் தொழில்கள் இலாபகரமாக இயங்கமுடிகிறது.

*நிறுவனங்களிலுள்ள உழைப்பாளரும் பணியாளரும் மேலாண் மையாளர்களும் பொருளுற்பத்தியில் மனமுவந்து ஈடுபட்டு வருகின் றனர். விஞ்ஞான அடிப்படை, தொழிலறிவு வளர்ச்சி, ஆக்கப் பெருக்கம், முன்னேற்றகரமான தொழில் முறைகள், தரமான பொருள்கள் ஆகியவற்றில் அவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர். சமதர்மப் போட்டியும் பல்வேறு துறைகளிலும் பரவி வருகிறது. தொழிலாளர், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அறிஞர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்கள் பொருள் பெருக்கத்திலும், தரமான உற்பத்தி யிலும், பாமர மக்களின் நல்வாழ்விலும் என்றுமில்லாத ஆர்வமும் ஈடுபாடும் காட்டிவருகின்றனர். அவர்களது இடையறாத உழைப்பே சோவியத் சமுதாயத்தின் உயர்வுக்கு அடிப்படை என்றால் மிகை யாகாது.*

## மேற்கொண்டு படிக்க


1. Podkolzin (A) op. cit. Ch. X.
2. USSR, 24th. Congress of the CPSU. 1971 pp. 133-155.
3. USSR, 25th Congress of the CPSU, 1976, No. 12.

# 12. திட்ட அமைப்பு முறை

1. உற்பத்தித் திட்டம்—திட்டக் கமிஷன்—கட்டுப்படுத்தும் எண்கள்—உற்பத்தித் திட்ட அமைப்பு முறைகள்—குறைபாடுகள்—வழக்கிலுள்ள முறை--செயற்பாடு—திட்டக் கமிஷனின் சீரமைப்பு.
2. நிதித் திட்டம்—அவசியமேன் ?—விலை நிர்ணயமும், விற்பனை வரியும்—நுகர்வோருக்குள்ள உரிமைகள்—கடன் திட்டம்—பணத் திட்டம்.

## உற்பத்தித் திட்டம்

கார்ல் மார்க்ஸின் கால முதலாகக் கம்யூனிஸத்துக்கும் திட்டமிட்ட பொருளாதாரத்துக்குமுள்ள உறவு இலைமறை காய்போல் உணரப்பட்டு வந்தது. சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டுமாயின் உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமையாக்கி, உற்பத்தி, பரிவர்த்தனை, விநியோகம் முதலியவற்றை ஒரு திட்டத்துக்கு உட்படுத்தி ஒழுங்கான முறையில் இயக்குவது அவசியம் என்ற நம்பிக்கை பொதுவாகக் கம்யூனிஸ்டுகளின் கருத்தில் குடிகொண்டிருந்தது. போல்ஷவிக் புரட்சி வெற்றி பெற்ற உடனேயே பொருளாதார அமைப்பில் இத்தகைய அடிப்படையான மாறுதல்கள் புகுத்தப்படும் என்று ஒரு சிலர் கனவு கண்டனர். ஆனால், லெனின் அத்தகையதோர் கனவுலகில் சஞ்சரிக்கவில்லை. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டுமாயின் சமதர்ம சக்திகள் தக்கபலம் பெற்றுப் பொருளாதாரத்தின் மூல ஸ்தானங்களைக் கைப்பற்றவேண்டும். அத்துடன் அவற்றை ஒழுங்குபட அமைத்து இயக்கும் தகுதிவாய்ந்த செயற்குழு ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்று அவர் நன்கு உணர்ந்தார். அதற்கேற்ப, புரட்சியாலும் போராலும் சீர்குலைந்த பொருளாதாரத்தைச் சீரமைத்து அதைத் திறம்பட நிர்வகித்து நடத்தும் தகுதி பெற்ற நிர்வாக இயந்திரத்தை நிர்மாணிக்கும் வேலையில் முனைந்து நின்றார்.

### திட்டக் கமிஷன்

போர்காலப் பொருளாதாரம் அமுலிலிருந்தபோது கூடிய ஒன்பதாவது காங்கிரஸ் ஒன்றுபட்டதொரு பொருளாதாரத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்தது. அதற்கேற்பத் தொழில்களைக் கண்காணித்து நடத்தத் தலைமைப் பொருளாதாரக் குழுவும், பொருளா

தாரத்தில் பல்வேறு பகுதிகளையும் இணைத்து ஒருமுகப்படுத்தத் தொழிலாளர் பாதுகாப்புக் குழுவும் அமைக்கப்பட்டன. இருப்பினும் இக்காலத்தில், 'திட்டம் திட்டம்' என்ற பேச்சு பலமாக இருந்ததே தவிர உண்மையான திட்டம் எதுவும் உருவாகவில்லை.

சோவியத்துகளும் மின்சாரமும் சேர்ந்தால் கம்யூனிஸமாகும். (Soviets Plus Electrification equal Communism) என்பது லெனினது கணக்கு. இக்கருத்துக்கு உருவம் கொடுப்பதன் பொருட்டு 1920 மார்ச்சில் அரசாங்க மின்சாரக் கமிஷன் (State Commission for Electrification or Goelro) ஒன்று நிறுவப்பட்டது. விரைவில் அக்கமிஷன் 30 மின்சார நிலையங்களை நிறுவி, 10 அல்லது 15 ஆண்டுகளில் $1\frac{1}{2}$ மில்லியன் கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்திச் செய்வதென ஒரு திட்டம் வகுத்தது. இதை மின்சாரக் கனவு (Electric-Fiction) என்று பலர் கேலி செய்தனர். எனினும், இத்திட்டம் 10 ஆண்டுகளில் நிறைவேறியது என்பது குறிப்பிடத் தக்கது.

1921 பெப்ருவரியில் மின்சாரக் கமிஷன் அரசாங்கத் திட்டக் கமிஷனோடு (State Planning Commission or Gosplan) இணைக்கப்பட்டது. மின்சாரத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தின் கூறுகள் முழுவதையுமே இணைத்து ஒன்றுபடுத்தக் கூடியதொரு திட்டத்தை வகுப்பதும், அது ஒழுங்கான முறையில் அமுல் நடத்தப்படுகிறதா என்று கண்காணிப்பதும் கமிஷனின் வேலை என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், திட்டக் கமிஷனின் அதிகார வரம்பைப்பற்றி முரண்பட்ட கருத்துகளிருந்தன. திட்டத்தை நிர்வகிக்கும் உரிமையும் திட்டக் கமிஷனிடமே இருக்க வேண்டும் என்பது டிராஸ்கியின் வாதம். ஆனால், திட்டக்கமிஷன் நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு. எனவே, அதனிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைப்பது தவறு என்பது லெனினது கருத்து. இக் கருத்துக்கேற்பத் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு தொழிலாளர் பாதுகாப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் திட்டக்கமிஷன் ஒரு தலைவரையும் 40 பொருளாதார—தொழில் நிபுணர்களையும் கொண்டிருந்தது. 1923-ல் நிபுணர்களின் தொகை முந்நூறாக உயர்ந்தது. நாளடைவில் ஆயிரக்கணக்கான நிபுணர்கள் திட்டக் கமிஷனின்கீழ்ப் பணியாற்றலாயினர். சிறிதாகத் தோன்றிய திட்டக்கமிஷன் காலப்போக்கில் நாடெங்கணும் பரவி, பல பிரிவுகளையும் கிளைகளையும் கொண்ட ஆலாக நிமிர்ந்து பரந்து நின்றது. ஒவ்வொரு குடியரசிலும், மாகாணத்திலும், அவற்றின் உட்பிரிவுகளிலும் கமிஷனின் விழுதுகள்

இறங்கின. ஆனால், பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளையும் இணைத்து ஒருமுகமாக இயக்குவது எளிதாக இல்லை.

### கட்டுப்படுத்தும் எண்கள்

1925-26-ல் முதன் முதலாகத் திட்டக் கமிஷன் 100 பக்கங்கள் கொண்ட ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தது. அதற்குக் 'கட்டுப்படுத்தும் எண்கள்' என்று பெயர். பொருளாதரத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையே உள்ள தொடர்புகளை மனத்திற்கொண்டு அவற்றுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய ஒரு சில இலக்குகளை முன் வைப்பதுதான் 'கட்டுப்படுத்தும் எண்கள்' எனப்படுவது. திட்டத்தில் பிரேமை கொண்ட டிராட்ஸ்கி அவற்றை 'வளர்ந்து வரும் சமதர்மத்தின் மகத்தான இன்னிசை' என்று போற்றி வரவேற்றார். ஆனால், அத் திட்டத்தை வகுத்தவர்கள் அதை ஒரு ஒத்திகையாகவே கருதினார்கள், திட்டத்துக்கு அடிப்படையான புள்ளி விவரங்கள் திருப்திகரமாக இல்லை. எனவே, திட்டக் கமிஷன் தனது இலக்குகளைப் பல்வேறு இலாகாக்களுக்கும் சமர்ப்பித்து அவற்றின்மூலம் தொழில்களுக்கும் ஆலைகளுக்கும் அனுப்பி, அவற்றின் அபிப்பிராயங்களுடன் திருப்பிப் பெற்று அவற்றின் துணை கொண்டு நடைமுறைக்கேற்ற திட்டமொன்றை வகுக்கவேண்டும் என்பது திட்டக் கமிஷனின் நோக்கம். ஆனால், சம்பந்தப்பட்ட இலாகாக்கள் ஒத்துவரவில்லை. நாட்டின் பொதுப்படையான தேவைகளைப் புறக்கணித்துத் தான்தோன்றித்தனமாகத் தங்கள் குறுகிய நோக்குகளை நிறைவேற்றுவதிலேயே அவை கண்ணும் கருத்துமாயிருந்தன. எனினும் கமிஷனது கிளைகள் பரந்த அடிப்படையில் அமைக்கப்பட்டதன் பயனாக, பிந்திய ஆண்டுகளில் உருவான 'கட்டுப்படுத்தும் எண்கள்' நடைமுறைக்கு ஏற்றதாக அமைந்தது. இருப்பினும், அன்று நிலவிய கருத்து வேறுபாடுகளின் காரணமாக 1928-29 வரையிலும் தெளிவானதொரு திட்டத்தை வெளியிட முடியவில்லை.

### உற்பத்தித் திட்ட முறைகள்

கட்டுப்படுத்தும் எண்களை நிர்ணயம் செய்வதில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தன. பொதுவாகத் திட்டக்கமிஷன் தேக்க நிலை, இயக்கநிலைக் குணகங்கள் (Static and dynamic coefficients), நிபுணர்களின் தோராய மதிப்பீடு (expert estimates), போருக்கு முன்னிருந்த நிலையோடு ஒப்பீடு முதலிய மூன்று முறைகளைக் கையாண்டது. கடந்த சில ஆண்டுகளின் அனுபவத்தின் அடியாகப் பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளிடையே உள்ள உறவைச் சில சமநிலைச் சமன்பாடுகளைக் (equations of equili-

brium) கொண்டு விளக்க முற்படுவதே முதலாவது முறை. இன்றுள்ள நிலையில் பொருளாதாரத்தின் உருவ அமைப்பைத் தராதரக் குணகங்களின் (coefficients of proportionality) துணைகொண்டு வருணிப்பது தேக்க நிலைக் குணக (static coefficient) முறை எனப் படுவது. இவ்வுருவ அமைப்பில் காலப்போக்கில் ஏற்படக்கூடிய மாறுதல்களைக் கணிக்கவும், ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதிலுள்ள தராதர மாற்றங்களை நிர்ணயிக்கவும் உதவுவதே இயக்க நிலைக்க குணக (dynamic coefficients) முறை. தொழில் நிபுணர்கள் பல்வேறு தொழில்களின் ஆக்கச் சக்தியைப் பற்றி வெளியிடும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரம் முழுவதற்கும் பொருந்தக்கூடிய இலக்குகளை நிர்ணயம் செய்வது இரண்டாவது முறை. போருக்கு முன்னுலிருந்த நிலையுடன் தற்கால நிலையை ஒப்பிட்டு அதன் அடிப்படையில் எதிர் காலத்தை நிர்ணயிக்க முற்படுவது மூன்ருவது முறை.

**குறைபாடுகள்**

இம் முறைகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. எனினும், அவற்றில் ஒரு சில குறைபாடுகளும் காணப்பட்டன. நிகழ்காலத்தைக் கடந்த காலத்தோடு ஒப்பிட்டு அதைக்கொண்டு எதிர் காலத்தை நிர்ணயிப்பது புரட்சிகரமான மாறுதல்களை முன் வைத்து இயங்க விரும்பும் சமுதாயத்துக்கு அவ்வளவு பொருத்த மானதன்று என்பது தெளிவு. அதேபோன்று நிபுணர்களின் மதிப்பீடுகளை ஆதாரமாகக் கொண்டு திட்டங்கள் வகுப்பதிலும் பல இடர்ப்பாடுகள் உண்டு. இன்றுள்ள உற்பத்திக் கருவிகள் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியும் என்று கணிப்பது எளிதல்ல. அவற்றைக் கையாளும் தொழிலாளர், அவர்களது திறமை, கச்சாப் பொருள் களின் அளவு, அவற்றின் தரம் முதலியவற்றுக்கேற்ப உற்பத்தியின் அளவும் தரமும் மாறுபடுவது இயல்பு. மேலும், புதிதாக நிர்மாணிக் கப்படும் உற்பத்திக் கருவிகள் எத்தனை ? அவற்றின் திறப்பாடுகள் என்ன ?—என்று தெரியாத நிலையில் வருங்காலத்துக்கான உற் பத்தித் திட்டங்களை வகுப்பது கடினம்.

தேக்கநிலை—இயக்கநிலைக் குணக முறைகளும் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாயின. பொருளரதார வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய எல்லைகளையும், விதிகளையும் வகுத்து அவற்றை மீறுவதால் வரும் அபாயங்களைச் சுட்டிக்காட்டியது இம் முறை. உதாரணமாக, இம் முறையை ஆதரித்தவர்கள் தொழிலுக்கும் விவசாயத்துக்கும் உள்ள உறவை விளக்குகையில் விற் பனைக்குரிய உபரிப் பொருளுக்கு ஏற்பத் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் அமையவேண்டும் என்று வலியுறுத்தினர். ‘உபரிப்

பொருள் போதுமான அளவில் கிடைக்காத நிலையில் பிரமாண்ட மான தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது தவறு; அங்ஙனம் ஈடுபடு வதால் பொருளாதாரத்தின் சமநிலை தவறிக் கெட்டுப் பலவிதச் சிக்கல்களையும், பற்றுக்குறைகளையும், முட்டுக்கட்டைகளையும் விளைவிக்கும் என்பது அவர்களது வாதம். அடிப்படையில் பெரும் பாலான வலதுசாரிகள் இதே கருத்தைத்தான் கொண்டிருந்தனர்.

இக் கருத்தில் அமைந்த உண்மையைப் பொதுவாக எவரும் கொள்வர். எனினும் தொழில் வளர்ச்சியின் வேகத்தை விவசாய வளர்ச்சிக்கு உட்படுத்துவதைப் பலர் விரும்பவில்லை. ஏனெனில், 'விவசாய உபரிப் பொருள் குறைந்தால் தொழில்களுக்கு வேண்டிய உணவும் கிடைக்காது; ஏற்றுமதி செய்யவும் முடியாது. எனவே, தொழில்களை நிர்மாணிப்பதற்கான இயந்திரங்களை இறக்குமதி செய்வதோ அவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதோ இயலாது. ஆதலின் 'தொழில் வளரவேண்டுமாயின் விவசாயம் வளரவேண்டும்' என்பன போன்ற முடிவுகளுக்கு இவ்வாதம் வழிநடத்தியது. விவசாயத்தில் முதலாளித்துவ மனப்பான்மை மேலோங்கி நின்ற காலத்தில் சமதர்மத் திட்டுகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமையை விவசாயத்திடம் ஒப்படைப்பது என்ற கருத்தைப் பலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும், தொழில்களின் எதிர்காலம் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டது போன்ற ஒரு நம்பிக்கை இக் கருத்தில் தொனித்தது. இத்தகைய சோர்வு மனப் பான்மைக்கு இடங்கொடுக்கப் பலர் தயாராக இல்லை. விவசாயத் தின் உற்பத்தி முறைகளும் அமைப்பும் மாறாது என்று ஏன் நினைக்கவேண்டும்? கூட்டுப் பண்ணைகளை அமைத்து, இயந்தி ரங்கள், செயற்கை உரம் முதலியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க முடியாதா? விவசாய உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்று ஒப்பந்தம் செய்வதன்மூலம் விவசாயத்தின் அடிமைத்தனத் திலிருந்து தொழில்களை மீட்க முடியாதா?—என்ற பல எண்ணங் கள் மனத்தில் எழுந்தன.

எனவேதான் தொழில்களின் வளர்ச்சி வேகத்தைக் கொள்கை பூர்வமாக நிர்ணயிக்க முடியும் என்று அவர்கள் வற்புறுத்தி வந்தனர். இதுவும் விவாதத்துக்குரிய ஒரு பிரச்சினையாகவே அமைந்தது. அரசாங்கம் தன் விருப்பம்போல் பொருளாதார வளர்ச்சியின் போக்கையும், வேகத்தையும், அமைப்பையும் நிர்ண யிக்க முடியுமா? அல்லது விலக்கமுடியாத சில பொருளாதார விதி களுக்குக் கட்டுப்பட்டு இயங்கவேண்டுமா? என்ற கேள்விகள் எழுந்தன. உண்மையில் இக்கேள்விகளுக்கு 'ஆம்' என்ற ஒரே

சொல்லில் விடை அளிப்பது இயலாது. இரண்டு அம்சங்களும் ஒருங்கே பொருந்தியதுதான் திட்டம். குறுகிய காலத்தில் பொரு ளாதாரத்தின் உருவ அமைப்பைக் கொள்கையின் வாயிலாக மாற்றுவது கடினம். ஆனால், நீண்ட காலத்தில் பொருளா தாரத்தின் பல்வேறு உறுப்புகளையும் விரும்பியவாறு மாற்றி அமைப்பது எளிதாக இருக்கும். இவ்வாறு காலம் நீள நீளக் கொள்கையின் அடியாகச் செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிக மாகும் என்ற உண்மை, 'அரசாங்கம் செயலற்றுப் பொருளாதார விதிகளுக்கு அடிபணிய வேண்டும்' என்று கூறியவர்களுக்குத் தக்க தொரு மறுமொழியாக அமைந்தது.

**வழக்கிலுள்ள முறை**

இதற்கிணங்கவே பிற்காலத்தில் வகுக்கப்பட்ட திட்டங்களில் சமநிலை முறை (Method of balances) பெரிதும் பயன்படுத்தப் பட்டது. இது தேக்க நிலை - இயக்க நிலைக் குணகமுறை போன்று விதியின்பாற்பட்டதல்ல. எனவே, அவ்வளவு விறைப்பாக இல்லாமல் கூடியமட்டும் இணக்கமாக இருந்தது. பொருளாதாரத்தின் உருவ அமைப்புக்கு உட்பட்ட திட்டங்களை அமைக்காமல் திட்டங்களுக்கு ஏற்ப உருவ அமைப்பை மாற்றி அமைக்க முயன்றது இம் முறை. ஆதலின் முதலில் பல அடிப்படை இலக்குகள் பொறிக்கப்பட்டன. பின்னர் அதற்கு வேண்டிய சாதனங்களைப் பெறுவதற்கான வழி வகைகள் வகுக்கப்பட்டன. அப்படி வகுக்குங்கால் பல்வேறு உறுப்பு களிடையேயும் சிக்கல்களோ முரண்பாடுகளோ தோன்றுமல் சுமுக மான சமநிலையை ஏற்படுத்துவதே திட்டக் கமிஷனின் வேலை. உதாரணமாக, 10,000 மைல் நீள இருப்புப் பாதைகள் அமைக்க வேண்டுமாயின் அதற்கு வேண்டிய இரும்பு, நிலக்கரி, எஞ்ஜின் கள், அவற்றை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், தொழில் நிபு ணர்கள், தொழிலாளர் முதலிய சாதனங்கள் எந்த அளவில் தேவைப்படும் என்று கணக்கிட்டு அதற்கேற்ப அச் சாதனங்களைப் பெருக்குவதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் வேண்டிய வழிவகைகளை வகுக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு தொழிலின் உடன்பாட்டு— வெளிப்பாட்டு (Input-output) உறவுகளை நன்கு உணர்ந்து அதற் கேற்ப சமநிலை கொண்டதோர் திட்டத்தை உருவாக்குவதே இன்று வரை வழக்கில் இருந்து வருகிறது. இம் முறையில் அடிப்படையான கோட்பாடுகள் என்று அதிகமாக எதுவுமில்லை. கார்ல் மார்க்ஸின் சாதாரண உற்பத்தியும் விரிவான உற்பத்தியும் (simple and expanded reproduct) என்ற கோட்பாட்டைத் தழுவிப் பேராசிரியர் ஸ்ட்ருமுலின் (Strumulin) 'ஒன்று சேர்க்கப்பட்ட பொருளாதார சமநிலை' (Synthetic balance of the economy) என்றதொரு கோட் பாட்டை அமைக்க முயன்றார். ஆனால், அதில் அவர் விரும்பிய

அளவு வெற்றி பெறவில்லை. இன்றுவரை அத்தகையதொரு கோட்பாடு தோன்றியதாகக் காணோம்.

இம் முறையின்படி பொருளாதாரத்தை இயக்குவதில் அரசாங்கத்துக்கு அதிகமான வாய்ப்புகள் இருந்தன. உதாரணமாக, நாட்டு வருவாயில் எவ்வளவு முதலீடு செய்யவேண்டும்? எந்தெந்த துறைகளில் ஈடுபடுத்தவேண்டும்? எங்கெங்கே தொழில்களை நிறுவ வேண்டும்?—என்பன போன்ற முடிவுகள் பெரும்பாலும் அரசாங்கத்தைச் சார்ந்தன. இதைப் பொறுத்தே நாட்டிலுள்ள பல்வேறு தொழில்களின் வளர்ச்சி வேகமும் நிர்ணயம் செய்யப்படும். அதைப் போன்றேதான் கூலிக் கொள்கையையும் நுகர்வுப் பொருள் உற்பத்தியும். அதனால் அரசாங்கம் கண்மூடித்தனமாக செயலாற்ற முடியும் என்று அர்த்தமல்ல. போதுமான உற்பத்திச் சாதனங்கள் இல்லாத நிலையில் அவற்றை ஈடுபடுத்துவது இயலாது. ஆனால், கிடைக்கும் சாதனங்களைப் பயன்படுத்துவதில் அரசாங்கத்துக்கு நிறைய வசதிகள் உண்டு. உதாரணமாக, இன்றுள்ள பொருளுற்பத்தி இன்றிருக்கும் ஆக்க ஆற்றலை (productive capacity)ப் பொறுத்தது. நாலைந்து ஆண்டுகளுக்குப் பின் வரப்போகும் உற்பத்தி பெரும்பாலும் இன்று அத்துறையில் எவ்வளவு முதலை ஈடுபடுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது. கணக்கு வழக்கில்லாது முதலீடு செய்வது முடியாது. எனினும் இன்று எவ்வளவு, எப்படி, எங்கே முதலீடு செய்கிறோம் என்பதைச் சார்ந்தே எதிர்கால உற்பத்தி இருக்கமுடியும். ஆகவே, நீண்ட காலத்தில் கொள்கையின் வாயிலாக நிர்ணயம் செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பது இம் முறையால் வலியுறுத்தப்பட்டது.

**செயற்பாடு**

திட்டங்களை வகுப்பதோடு வேலை முடிந்துவிடுவதில்லை. அவற்றைச் செவ்வனே அமுல் நடத்துவது அவசியம். திட்டம் என்பது ஒரு கிட்டிய மதிப்பே அன்றி வேறில்லை. திட்டத்தை அமுல் நடத்துவதால் ஏற்படும் அனுபவத்தின் வாயிலாக அதை வளப்படுத்தித் தெளிவுறத் திருத்தி அமைத்துத் திட்டவட்டமாக்குவது இன்றியமையாததாகும். நடைமுறைக்கு ஒவ்வாத திட்டம் ஏட்டுச் சுரைக்காயாகவே அமையும். திட்டம் என்பது வளரும் ஓர் அமைப்பு. சூழ்நிலைக்கு ஏற்ப அதன் வளர்ச்சி மாறும் திட்டத்துக்கும் உண்மையான நிலைக்கும் முரண்பாடு இருப்பின் அதற்கேற்பத் திட்டம் மாற்றி அமைக்கப்படவேண்டும். இன்றேல் திட்டம் பயனற்றதாகிவிடும். அதனால் திட்டத்தின் இலக்குகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு மனம் போன போக்கில் செயற்படுவது என்று பொருளல்ல. அதே சமயத்தில் எக்கேடு கெட்டாலும் திட்டத்தில் குறித்தது குறித்ததே

என்று அதை நிறைவேற்ற முற்படுவதும் விவேகமாகாது. எதிர் பாராத சிக்கல்கள் எதிர்ப்படுவது இயல்பு, அவற்றை மேற்கொள்ளு வதில் வணங்காமுடியாக இருக்காமல் இணக்கம் காட்டுவது அவ சியம். மாறிய சூழ்நிலையில் பல கொள்கை மாற்றங்களும் ஏற்பட லாம். திறமையுடன் அவற்றைச் சமாளிப்பதன் மூலம்தான் பொரு ளாதாரம் சுமுகமாக இயங்குவதற்கு உதவமுடியும். சூழ்நிலையில் அப்போதைக்கப்போது ஏற்பட்டு வரும் மாற்றங்களைத் தக்க முறை யில் கிரகித்து அதற்கேற்ப நிதானமான வகையில் திட்டத்தின் குறிக்கோள்களையும், கொள்கைகளையும் மாற்றி அமைக்கவேண்டும். எனவே, வெறுமனே புள்ளி விவரங்களைக் குவிப்பதும் அட்டவணை களை வகுப்பதும் திட்டமாகிவிடாது. அதை அமுல் நடத்துகையில் திட்டத்தில் குறித்த இலக்குகளையும் காலவரையறைகளையும் பிரத்தி யட்ச நிலைமைக்கு ஏற்றவாறு திருத்தி அமைத்து உயிருள்ள ஒரு திட்டமாக மாற்றுவது திட்டக் கமிஷனின் கடமையாகும்.

இக்கடமையைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமாயின் பொருளாதாரத்தின் கைநாடியை எப்போதும் உணர்ந்தவண்ண மிருக்கவேண்டும். ஒவ்வொரு ஆலையிலும் ஒவ்வோர் கூட்டுப் பண்ணையிலும் திட்டக் கமிஷனின் கண் இருக்கவேண்டும். திட்டம் வகுப்பது ஓர் இரு வழிப்பாதை போன்றது. முதலீடு, உற்பத்தி, கூலி முதலிய பிரச்சினைகளைப் பற்றித் திட்டக் கமிஷன் செய்யும் சில முக்கியமான முடிவுகள் மேலிருந்து கீழே உள்ள பல்வேறு உறுப்புகளுக்கும் செல்லும். அங்கே செய்யப்படும் மாறுதல் களுடன் அவை திரும்பத் திட்டக் கமிஷனிடம் வந்து சேரும். அதன் துணைகொண்டு திட்டக் கமிஷன் ஒன்றுபடுத்தப்பட்ட ஒரு திட்டத்தை வகுக்கும். அத் திட்டம் ஒழுங்காகச் செயல்படுகிறதா என்பதைக் கண்ணும் கருத்துமாக இருந்து கவனித்து அதைச் சாத னைக்குரிய ஒரு திட்டமாக மலரச் செய்வது திட்டக் கமிஷனின் வேலை.

### திட்டக் கமிஷனின் சீரமைப்பு

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பின்னர் திட்டக் கமிஷனின் நிர்வாக இயந்திரம் பலமுறை திருத்தி அமைக்கப் பட்டது. 1935-ல் ஒன்று சேர்க்கப்பட்ட திட்டங்களை உருவாக்கும் நோக்குடன் 5 இலாகாக்கள் நிறுவப்பட்டன. பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளையும் இணைப்பதில் உதவி செய்யும் பொருட்டு மேலும் 16 இலாகாக்கள் இருந்தன. இவை எரிபொருள், மின் சாரம், சுரங்கம், உலோகம் முதலிய பல முக்கியமான தொழில் களைக் கண்காணித்து வந்தன. திட்டக் கமிஷனின் தலைவரையும்

அவருக்குக் கீழ் இருந்த 70 பேர் கொண்ட மத்தியக் குழுவையும் மக்கள் அமைச்சவை நியமனம் செய்தது.

1938-ல் மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்படி திட்டக்கமிஷன் நிரந்தரமான ஒரு ஸ்தாபனமாக நிலைபெற்றது. அதன் தலைவரும், அவரோடு கூடிய போர்டும் (11 பேர் கொண்டது) மக்கள் அமைச்சவையால் நியமனம் பெற்றனர். அத்துடன் 90 நிபுணர்களைக் கொண்ட மத்தியக் குழுவும் செயலாற்றி வந்தது. திட்டங்கள், மையமாக அமைந்த போர்டின்மூலம் வகுக்கப்பட்ட போதிலும் அவற்றை வகுப்பதிலும் அமுலாக்குவதிலும் உதவி செய்யும் பொருட்டுப் பல்வேறு குடியரசுகளிலும் அவற்றின் உட்பிரிவுகளிலும் கமிஷனின் கிளைகள் நிறுவப்பட்டன. இவற்றின்கீழ் ஆயிரக்கணக்கான நிபுணர்கள் பணியாற்றி வந்தனர்.

திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஆணைகளைப் பிறப்பிப்பதோ, கடமையில் தவறியவர்களைத் தண்டிப்பதோ கமிஷனின் வேலை அல்ல. அத்தகைய நிர்வாக அதிகாரங்கள் பெரும்பாலும் அமைச்சவையிடம் குவிந்து கிடந்தன. ஆனால், திட்டங்களை வகுப்பதிலும் அவற்றை நிறைவேற்றுவதிலும் பல்வேறு அமைச்சவைகளையும் ஒன்றாக இணைத்துச் செல்வது கமிஷனின் கடமை. 1950-க்குப் பின் இவ்வேலைகளில் பெரும்பாலும் பரவல் முறை புகுத்தப்பட்டது.

## நிதித் திட்டம்

பொருளுற்பத்தியில் அமைந்த உட்பாட்டு வெளிப்பாட்டு உறவுகளை நன்கு உணர்ந்து அவற்றிடையே சுமுகமான சமநிலையை ஏற்படுத்துவதுதான் உற்பத்தித் திட்டம் எனக் கண்டோம். முதற் கருவிப் பொருள்களின் வளர்ச்சியே இத்தகைய உற்பத்தித் திட்டங்களின் முதுகெலும்பாகும் என்பதும் தெளிவு. எனினும், திட்டம் என்பது உற்பத்தித் திட்டத்தை மட்டும் குறிப்பதன்று; நிதித் திட்டமும் அதன்பாற்பட்டதே. விற்கக்கூடிய பொருள்களின் விலைகளை நிர்ணயம் செய்து, அதனடியாக வாங்கும் சக்திக்கு விற்கப்படும் பொருள்களின் மதிப்புக்கும் சமநிலையை ஏற்படுத்துவதே நிதித் திட்டத்தின் சாரம். கடன் திட்டம், ரொக்கத் திட்டம், அரசாங்க வரவு செலவுத்திட்டம் அனைத்தும் அதனுள் அடங்கியனவே.

**அவசியமென்ன?**

நிதித் திட்டம் ஏன் என்ற கேள்வி எழாமல் இல்லை. சமதர்மம் நிலைநாட்டப்பட்டால் நிதி, கடன், வட்டி, விலை என்பனவெல்லாம்

பழங்கதைகளாகிவிடும் என்ற பொருள்படும்படி கார்ல் மார்க்ஸ் மூலதனம் என்ற தமது நூலில் குறிப்பிட்டார். அதை அரைகுறையாகப் புரிந்துகொண்ட ஒரு சிலர் கடன் முறை என்பது, முதலாளித்துவத்தின் பீடை; எனவே, சோவியத் யூனியனில் அதற்கு இடமில்லை என்று வாதாடினர். அதற்கு மாருக, மற்றொரு சாரார் நிதித் திட்டமே உற்பத்தித் திட்டத்தின் அடிப்படை; நிதியின்றி முதல் திரட்சியோ, பொருளுற்பத்தியோ நடைபெற இயலாது என்று வலியுறுத்தி வந்தனர்.

நாட்டின் ஆக்கச்சக்திகளை ஒரு திட்டத்துக்குட்பட்டு ஈடுபடுத்தும் பொருளாதாரத்தில் நிதி இன்றி உற்பத்தி நடைபெறுது என்று கூறுவது பொருத்தமற்றதாகும். அதே சமயத்தில், தனி நபர் முயற்சிகள் மறையாத நிலையில் விலை நிர்ணயம், தேவைக்கும் அளிப்புக்குமிடையே உள்ள சமநிலை ஆகியவற்றைப் புறக்கணிப்பது அபாயகரமானது. சோவியத் பொருளாதாரத்தில் கூலி முறை ஒழியவில்லை; விற்பனைக்குரிய விவசாயப் பொருள்கள் விலை கொடுத்து வாங்கப்பட்டன. நுகர்வுப் பொருள்கள் பங்கிட்டு அளிக்கப்படவில்லை. தங்களிடமுள்ள வாங்கும் சக்தியைத் தங்கள் விருப்பம்போல் பயன்படுத்தும் உரிமையும் மக்களிடமிருந்து பறிக்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில் மக்களின் கையிலுள்ள வாங்கும் சக்திக்கும் நுகர்வுப் பொருள்களின் அளிப்புக்குமிடையே சமநிலை ஏற்படுவது அவசியம். வாங்கும் சக்தி விற்பனைக்குரிய பொருள்களின் மதிப்பை மிஞ்சி இருந்தால், சில்லறை விலையை உயர்த்துவதன்மூலமாகவும், வரி விதிப்பு, சேமிப்புத் திட்டங்களின் மூலமாகவும் அந்த மிஞ்சிய மதிப்பை உறிஞ்சுவது அவசியம். உற்பத்தித் திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மக்களது வருவாயும், வாங்கும் சக்தியும் மாறுவது இயல்பு. எனவே, உற்பத்தித் திட்டங்களுக்கு ஏற்ப நிதித் திட்டங்களையும் மாற்றி அமைத்தாக வேண்டும்.

**விலை நிர்ணயமும் விற்பனை வரியும்**

விலை நிர்ணயம் நிதித் திட்டத்தின் அச்சாணி எனலாம். முதலாவது உற்பத்திச் செலவுகளை அதில் ஈடுபடுத்தப்படும் உழைப்பு, மூலப் பொருள்கள், தேய்வு (depreciation), நிர்வாகம் முதலிய உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு கணிப்பது. பின்னர் அச் சாதனங்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைக் கொண்டு அவற்றின் பண மதிப்பைக் கணக்கிடலாம். இதைத் திட்டமிட்ட உற்பத்திச் செலவு (planned cost) என்று அழைக்கலாம். உண்மைச் செலவுகள் திட்டமிட்ட செலவுகளுக்கும் குறைவாக இருந்தால் அதனுல் கிடைக்கும் இலாபத்தைத் தொழில்களும் அரசாங்கமும்

பகிர்ந்து கொள்ளுவதுண்டு. தொழில்களுக்குக் கிடைக்கும் இலாபத்தால் பயனடைந்த தொழிலாளர், 'திட்டத்தைத் தோற்கடிப் போம் என்று முனைந்து செயல்படலாயினர். திட்டமிட்ட செலவுடன் திட்டமிட்ட இலாபத்தையும் சேர்த்தால் நிறுவனங்களின் மொத்த விற்கும் விலை (selling price) கிடைக்கும். இவ் விலையுடன் வண்டிச் சத்தம், களஞ்சியப் பாதுகாப்புச் செலவு முதலிய வற்றையும் சேர்த்தால் பொருள்களின் சில்லறை விலை கிடைக்கும். இந்த விலையைவிட நுகர்வோர் கொடுத்து வாங்கும் விலை அதிகமாக இருப்பதுண்டு. உற்பத்திச் செலவுகளைக் கொண்டு நிர்ணயம் செய்யும் சில்லறை விலைக்கும் வாங்குவோர் கொடுத்து வாங்கும் சில்லறை விலைக்கும் உள்ள வித்தியாசத்தை விற்பனை வரி (turnover-tax) யைக் கொண்டு ஈடு செய்வது வழக்கம். எனவே, வாங்கும் சக்திக்கும் பொருள்களின் மதிப்புக்குமிடையே சம நிலையை ஏற்படுத்துவதற்கு மூலாதாரமாக இருப்பது விற்பனை வரி. பொருளுற்பத்தியிலும், வாங்கும் சக்தியிலும் ஏற்படும் ஏற்றத்தாழ்வு களுக்கு ஏற்ப விற்பனை வரியைக் கூட்டியோ குறைத்தோ அமைப்பது நிதித் திட்டத்தின் அடிப்படை அம்சமாகும். இத் தகைய முறையால் மிஞ்சி நிற்கும் வாங்கும் சக்தியை அப்படியே வடித்து அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டங்களுக்குள் எளிதில் கொண்டு வந்து சேர்க்கமுடியும். விற்பனை வரி இல்லாவிடில் வாங்கும் சக்தியிலுள்ள இந்த உபரியை மக்களின் சேமிப்பு, அரசாங்கக் கடன் முதலியவற்றின் வாயிலாகவே வசப்படுத்த முடியும். ஆனால், சமதர்மத்தை நிர்மாணிக்க முயலும் ஒரு சமுதாயத்தில் இத்தகைய முறைகளைக் கையாளுவதால் மக்களது வருவாய், செல்வம் முதலியவற்றில் ஏற்றத் தாழ்வுகள் வளருவது திண்ணம். எனவே திட்டமிட்ட உற்பத்தியால் ஏற்படும் முரண் பாடுகளை விலக்குவதற்கு விற்பனை வரி ஒரு கைக்கமைந்த கருவி யாக இருந்தது.

புதுப் பொருளாதாரக் கொள்கை அமுலில் இருந்த காலத்தில் அரசாங்கத்தின் வரவினங்களில் விற்பனை வரி முக்கிய இடம் வகிக்கவில்லை. ஆனால் தொழில் வளர்ச்சியின் காரணமாகவும், பாதுகாப்பின் காரணமாகவும் நாட்டின் செலவினங்கள் பெருகிய போது பெரும்பாலும் விற்பனை வரியின் துணை கொண்டே அதை ஈடு செய்ய வேண்டியதிருந்தது.

பின்வரும் அட்டவணை காட்டுவது போன்று அரசாங்கத்தின் மொத்த வருவாயில் பெரும்பகுதி விற்பனை வரியின் வாயிலாகவே வந்தது. நாட்டின் பொருளாதார நிர்மாணம், பாதுகாப்பு முதலிய செலவுகள் எந்த அளவுக்கு விற்பனை வரியின் மூலமாக ஈடு

செய்யப்பட்டன என்பதும் அட்டவணையிலிருந்து தெரியவரும். ஆனால் இரண்டாவது உலகப் போரின்போது விற்பனை வரி அளவிலும், விகிதத்திலும் குறைந்துபட்டதைக் காணலாம். நுகர்வுப் பொருள் தட்டுப்பாடும் பங்கீட்டு முறையுமே அதற்குக் காரணங்கள்.

எல்லாப் பொருள்களின்மீதும் வரிவிகிதம் ஒரே அளவாக இருந்தது என்பதற்கில்லை. வரிவிகிதம் பொருளின் மதிப்பில் ஒரு சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை மாறுபட்டது. பொதுவாக நுகர்வுப் பொருள்களின் மீதே இவ்வரி விதிக்கப்பட்டது. குறிப்பாக

அட்டவணை 15.

**விற்பனைவரியும் அரசாங்க வரவு செலவுகளும்**

| ஆண்டுகள் | மொத்த (அரசாங்க) வருவாய் (பில்லியன் ரூபிள்கள்) | விற்பனை வரி (பில்லியன் ரூபிள்கள்) | 3ஆவது பத்தியை 2ஆவதன் சதவிகிதமாகக் கூறல் | நாட்டுப் பொருளாதாரப் பாதுகாப்புச் செலவுகள் (பில்லியன் ரூபிள்கள்) | 3ஆவது பத்தியை 5ஆவது பத்தியின் சதவிகிதமாகக் கூறல் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1932 | 30.0 | 17.5 | 58.3 | 25.0 | 70.0 |
| 1938 | 127.5 | 80 4 | 63.2 | 74.8 | 107.5 |
| 1940 | 180.2 | 105.9 | 58.8 | 115.1 | 92.0 |
| 1944 | 268.7 | 94.9 | 35.3 | 191.6 | 49.5 |
| 1946 | 325.4 | 190.9 | 58.7 | 179.8 | 106.2 |
| 1950 | 433.0 | 239.2 | 55.2 | 243.8 | 98.1 |

Source: (A) Schwartz opt. cit. p. 415.
(B) Dobb opt. cit. p. 384.

ஆடம்பரப் பொருள்களின்மீது கடுமையான வரி சுமத்தப்பட்டது. உணவுப் பொருள்கள் இதற்கு விதி விலக்காக இருந்தன. விவசாயப் பொருள்களை அரசாங்கம் வாங்கிய விலைக்கும் விற்ற விலைக்குமுள்ள

வேறுபாட்டைப் பேராசிரியர் மாரிஸ்டாப் பேதவாரம் (differential rent) என்று அழைக்கிறர். ஒரு பொருளின் மொத்த மதிப்புக்கும் அதன்மீது செலவிடுவதற்காக ஒதுக்கப்படும் வாங்கும் சக்திக்கும் உள்ள வேறுபாடு அப் பொருளில் எவ்வளவு பற்றுக்குறை உள்ளது என்பதைச் சுமாராக அளவிட உதவுகிறது. அதாவது ஒரு பொருளின் சில்லறை விலைக்கும் அதன்மீது விதிக்கப்படும் விற்பனை வரிக்குமுள்ள விகிதாச்சாரத்தைக் கொண்டு அப் பொருளில் எவ்வளவு பற்றுக்குறை இருக்கிறது என்று சுமாராகக் கணிக்கலாம். அதற்கேற்ப அப்பொருளின் உற்பத்தியைக் குறைக்கவோ கூட்டவோ செய்யலாம். மாருக, வாங்கும் சக்திக்கு மிஞ்சிய பொருளுற்பத்தி இருப்பின் விலையைக் குறைத்துப் (அல்லது விற்பனை வரியைக் குறைத்து) பொருள்கள் தேங்கிக் கிடக்காமல் விற்பனை செய்வது எளிதாகும்.

### நுகர்வோருக்குள்ள உரிமைகள்

என்னென்ன நுகர்வுப் பொருள்களை எந்தெந்த அளவில் உற்பத்தி செய்வது என்று முடிவு செய்வதில் நுகர்வோருக்கு எந்த அளவுக்கு உரிமை உண்டு என்ற கேள்வி எழுவதுண்டு. பொதுவாக முதலீடு, அதன் பங்கீடு, இட நிர்ணயம் முதலியவை அரசாங்க மேலிடத்தில் மையமாக முடிவு செய்யப்படுவன. முதற் கருவிப் பொருள்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்ட காரணத்தால் நுகர்வுப் பொருள் உற்பத்திக்கென்று ஒதுக்கப்பட்ட முதல் கொஞ்சமாக இருந்தது. அதன் பயனாக அன்ருட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சில பொருள்கள் மட்டும் ஓரளவு உற்பத்தி செய்யப்பட்டன. பங்கீட்டு முறை அமுலில் இருந்த காலத்தில் இக் குறுகிய எல்லைக்கு உள்ளேகூட நுகர்வோர் தங்கள் உரிமைகளை அனுபவிக்க முடியவில்லை. ஆனால், பங்கீட்டு முறை கைவிடப்பட்ட போது அவ்வுரிமைகளை அனுபவிக்க ஓரளவு இடமிருந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் அத்தகைய உரிமைகள் பெருகியுள்ளன. அதற்கேற்ப நுகர்வுப் பொருள்களின் எண்ணிக்கையும், அளவும் அதிகரித்து வருவதும் கண்கூடு.

### கடன் திட்டம் (Credit Plan)

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்த் தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு வேண்டிய நடை முதலை அரசாங்க பாங்குகளிடமிருந்து பெற்றன. நட்டத்தில் வேலை செய்த நிறுவனங்கள் தங்கள் பற்றில் பாங்கில் கடனைக் குவித்து வைத்திருந்தன. அதைக் கொடுக்க முடியாதபோது அரசாங்கம் உதவிக் கொடை (Subsidy) கொடுத்து உதவி வந்தது. ஆனல், பிந்திய திட்டங்களின்கீழ் நிறுவனங்கள் தங்கள் அன்ருட நடை முதல் தேவைகளைத்

தாங்களே பூர்த்தி செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், திட்டத்தின்கீழ் விரிவுபடுத்தப்படும் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அதிகப்படியான நடைமுதலை அரசாங்க பாங்குகள் முன் பணமாகக் கொடுத்துதவும். அத்தகைய தேவை தொழிலுக்குத் தொழில் மாறுபடுவதுண்டு. உதாரணமாக, முதற் கருவிப் பொருளுற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மொத்த முதலில் ஒரு சிறு பகுதியே நடை முதலாகும்; நுகர்வுப் பொருளுற்பத்தியிலோ, ஈடுபடுத்தப்படும் முதலில் நடை முதலின் விகிதம் அதிகமாக இருப்பதுண்டு.

இதைப் போலவே தொழில் நிர்மாணத்துக்கு வேண்டி நீண்ட காலக் கடன்களைத் தொழில் பாங்குகள் முன் பணமாகக் கொடுத்துதவின. இக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட நிர்மாண அல்லது உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அக் கடன் தானாகவே தீர்ந்ததாகக் கொள்ளப்பட்டது. அதாவது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பைப் பாங்குகள் அத் தொழில்களின் கணக்கில் வரவு வைத்தன. இவ்வாறு அந்தந்தத் தொழில்களுக்குத் தேவையான முதலை முன் கூட்டியே கணக்கிடுவதைத்தான் திட்டமிட்ட கடன் வசதி (planned credit) என்று அழைக்கின்றனர்.

எதிர்பாராத சில சிக்கல்கள் தொழில்களை எதிர் நோக்குவதுண்டு. போக்குவரத்து முட்டுக்கட்டை, வெள்ளம் முதலிய இடையூறுகளின் காரணமாகச் சில அவசரக் கடன்கள் தேவைப்படலாம். இது திட்டத்துக்கு உட்பட்டதன்று. எனவே, இக் கடன்களைத் தற்காலிகமாக ஒரு மாதத்தவணைக்கு உட்பட்ட காலத்துக்கெனக் கொடுப்பது வழக்கம்.

**பணத் திட்டம் (Cash Plan)**

செலாவணியின் தொகையைப் பெருக்குவதும் சுருக்குவதும் அரசாங்க பாங்கின் வேலைகளுள் ஒன்று. இவ்வேலையைச் செய்வதற்குப் பணத் திட்டம் பெரிதும் உதவுகின்றது. தொழில்களிலும், அரசாங்கப் பண்ணைகளிலும் வேலை செய்பவர்களுக்குரிய கூலியும் சம்பளமும் பெரும்பாலும் பண வடிவாகவே கொடுக்கப்பட்டன. விவசாய உபரிப் பொருள்களும் ரொக்கப் பணம் கொடுத்தே வாங்கப்பட்டன. இவ்வாறு வினியோகிக்கப்படும் பணம்தான் மக்களின் வருவாயாகிறது. அந்த வருவாய் எவ்வளவு? அதில் வரி, கடன், சேமிப்பு முதலியவற்றின் கணக்கில் அரசாங்கத்திடம் திருப்பி வரக்கூடியது எவ்வளவு? எஞ்சி, அவர்கள் கையில் வாங்கும் சக்தியாக நிற்கும் பணம் எவ்வளவு-என்ற பல கணக்கு

களை வகுப்பதுதான் பணத்திட்டம். இத் திட்டத்திற்கேற்பவே அரசாங்க பாங்கு செலாவணியை வெளியிடும். அத்துடன் நுகர்வுப் பொருளுற்பத்தி, அவற்றின் விலை நிர்ணயம் முதலியவற்றுக்கும் பணத் திட்டத்துக்கும் நெருங்கிய உறவு உண்டு. உற்பத்தித் திட்டங்களைத் தழுவியே கடன் திட்டமும் பணத் திட்டமும் இருப்பதால் உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப இத் திட்டங்களை அப்போதைக்கப்போது மாற்றி அமைத்தல் அவசியம். பின்னைய திட்டங்களின்கீழ்த் திட்ட அமைப்பு முறையிலும் நிதித் திட்ட அமைப்பிலும் ஏற்பட்ட மாறுதல்களை அத்தியாயம் பதினொன்றில் காணலாம்.

## மேற்கொண்டு படிக்க


Baykov (A), opt. cit., chs. 2, 6. & 20.

Dobb (M), opt. cit. chs. 14, & 15. (4th Edition)

Kursky (A), "The planning of the National Economy of the USSR" Moscow, 1949.

Schwartz (H), op. cit., chs, 5 & 12

Stalin (J), Problems of Leninism.

# 13. தொழிற்சங்கங்கள்

புரட்சிக்குப் பின்—தொழிலாளர் சட்டங்கள் தொகுப்பு - மாறிய சூழ்நிலையும் தொழிற் சங்கங்களின் - கடமைகளும் - ஐந்தாண்டுத் திட்டம் - தொழிற் சங்க உரிமைகளுக்கு ஏற்பட்ட பங்கம் - தொழிற் சங்க அமைப்பு - கூலிக் கொள்கை - ஸ்டாக்கனோவைட் இயக்கம் - சமூக இன்சூரன்ஸ் முறை - அதன் வரலாறு - இன்றுள்ள முறை - சிறப்பான அம்சங்கள்.

கம்யூனிஸக் கருத்துகளால் கவரப்பட்ட தொழிலாளர்கள் போல்ஷவிக் புரட்சியை முன்னின்று நடத்துவதில் பெரும்பங்கு கொண்டனர். சரிந்து வந்த ஸார் ஆட்சிக்குப் பக்க பலமாக விளங்கிய நிலப் பிரபுத்துவத்தையும் அதன் இளங்கூட்டாளியான முதலாளித்துவத்தையும் தட்டி வீழ்த்துவதற்கான போராட்டங்களில் தொழிலாளர் முன்னணியில் நின்றனர். சுரண்டலையும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் ஒழித்துக் கட்டி சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிப்பதே அவர்கள் நோக்கம். இப்போராட்டத்தில் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், பலாத்காரம் போன்ற கருவிகள் மிகவும் தாராளமாகக் கையாளப் பட்டு வந்தன. இவ்வாறு புரட்சி வெறியால் போதையுற்றிருந்த தொழிலாளி வர்க்கத்தின் மனோபாவத்தை மாற்றி ஒழுங்கு, கட்டுப்பாடு, பொறுப்புணர்ச்சி முதலிய பண்புகளை வளர்ப்பது சோவியத் அரசாங்கத்தை எதிர்நோக்கிய பெரும் பிரச்சினைகளில் ஒன்றாக அமைந்தது.

### புரட்சிக்குப் பின்

புரட்சியை ஒட்டி இருவிதமான மனோபாவங்கள் தலை தூக்கின. பல இடங்களில் உள்ள தொழிலாளர், அரசாங்கத்தின் அனுமதியின்றித் தாங்களாகவே பல ஆலைகளைக் கைப்பற்றித் தான் தோன்றித்தனமாக அவற்றை நிருவாகம் செய்ய ஆரம்பித்தனர். நிருவாக அனுபவம் சிறிதும் இல்லாத நிலையில் இத்தகைய 'சிண்டிகலிஸ்ட்' மனோபாவத்தால்* ஆலைகளில் அராஜகம் நிலவியது. டிராட்ஸ்கி போன்ற தலைவர்கள் இத்தகைய போக்குக்குத் தூபமிட்டனர். அதே சமயத்தில் 'தொழிலாளர் சங்கங்களை

---

* தொழிலாளர் தாங்களாகவே நிருவாகத்தைக் கைப்பற்றித் தங்கள் மனம் போன போக்கில் நடத்த முற்படுவதையே 'சிண்டிகலிச மனோபாவம்' என்றழைக்கிறோம்.

நாட்டு மயமாக்கி அரசாங்கத்தின் கைக் கருவியாக்க வேண்டும்; கட்டுப்பாடமைந்த தொழிலாளர் படைகளை நிறுவிப் பலவந்தமாக அவற்றைப் பல அவசர வேலைகளில் ஈடுபடுத்தல் வேண்டும்' என்று சிலர் வற்புறுத்தினர். ஆனால் லெனின் இத்தகைய அபிப் பிராயங்களுக்கு இடங் கொடுக்கவில்லை. 'தொழிற் சங்கங்களைப் பலாத்காரத்தின் கருவியாகப் பயன்படுத்துவது தவறு. மாறாக, புதிதாக ஏற்பட்ட நிருவாகப் பொறுப்புகளை ஏற்று நடத்தக்கூடிய பயிற்சியளிக்கும் பள்ளிகளாக அவை பணியாற்ற வேண்டும்; தொழிலாளரின் மனோபாவத்தை மாற்றி அவர்களது சக்திகளை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தவேண்டும்; அதே சமயத்தில் அவர்கள் அதிகார வர்க்கத்தின் கொடுமைகளுக்கு ஆளாகாமலும் பாதுகாக்க வேண்டும்' என்பது லெனினது கருத்து. அத்துடன் 'தொழிற் சங்கங்கள் ஜனநாயக முறையில் அமைக்கப்படவேண்டும்; அங்கத் தினர் சேர்ப்பதில் கட்டாயம் கூடாது; பிரதிநிகள் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும்; ஆலைகளைக் கண்காணிப்பதிலும், தொழிலா ளரின் நலன்களைப் பாதுகாப்பதிலும் தக்க உரிமைகள் அவற்றுக்கு வழங்கப்படவேண்டும்' என்று லெனின் வலியுறுத்தி வந்தார்.

### தொழிலாளரின் சட்டங்களின் தொகுப்பு

லெனின் கருத்துகளுக்கிணங்க 1922-ல் கூடிய தொழிற் சங்கக் காங்கிரஸில் ஒரு சில தொழிலாளர் சட்டங்கள் தொகுக்கப் பட்டன. இத்தொகுப்பு, தொழிலாளரின் உரிமைகளையும் கடமை களையும் வரையறுத்துக் கூற முயன்றது. தொழிலாளர் தாமாகவே மனமுவந்து தொழிற்சங்கங்களில் உறுப்பினராதல் வேண்டும்; அங்கத்தினர் சேர்ப்பதில் எவ்விதமான பலவந்தமும் கூடாது என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது. பொதுவாகத் தொழிலா ளரின் நலன்களைப் பாதுகாப்பது, தொழிற் சட்டங்கள் சரிவர அமுல் நடத்தப்படுகின்றனவா என்று கண்காணிப்பது, ஆலைகளில் வேலை நியமனம், வெளியேற்றம், ஒழுங்கு, வேலை நிபந்தனைகள், கூலி முதலிய பிரச்சினைகளில் நிருவாகத்துக்கு வேண்டிய ஆலோ சனைகள் கூறி அவை நன்கு மதிக்கப்படுகின்றனவா என்று மேற் பார்வை செய்வது போன்ற உரிமைகள் தொழிற் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. நிருவாகத்தில் தலையிடும் உரிமை அவைகளுக் கில்லை. எனினும், நாட்டின் தலையாய ஸ்தாபனங்களான தலைமைப் பொருளாதாரக் குழு, திட்டக் கமிஷன், தொழிலாளர் பாதுகாப்புக் குழு முதலியவற்றில் தொழிற் சங்கங்களுக்குத் தக்க பிரதிநிதித் துவம் அளிக்கப்பட்டது. நாட்டின் பொருளுற்பத்தியில தொழிற் சங்கங்களின் மனமுவந்த ஒத்துழைப்பைப பெறுவதே அதன

அடிப்படை நோக்கம். சோவியத் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் தொழிலாளர் தங்கள் உரிமைகளைப் பெருக்க விரும்புவதை அரசாங்கம் வரவேற்கவில்லை. தொழிற் சங்கங்களுக்கும் ஆலை நிருவாகத்துக்குமிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கக்கூடிய சமரச போர்டுகளும் மத்தியஸ்த நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. இத்தகைய செயல்முறைக்கு அடைபடாத பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு வேலை நிறுத்தங்களில் ஈடுபடும் உரிமை தொழிற் சங்கங்களுக்கு இருந்தது. ஆனால், பொறுப்பற்ற முறையில் கையாளுவதன் மூலம் இக்கருவி சோவியத் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதில் பயன்படுத்தப்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

புதுப் பொருளாதாரக் கொள்கையின்போது நிரந்தரத் தொழிலாளர் மட்டுமின்றி நிருவாகிகளும், தற்காலிகமாக வேலை செய்து வந்தவர்களும் தொழிற்சங்கங்களில் அனுமதிக்கப்பட்டனர். அதன் பயனாக 1921-ல் தொழிற் சங்க உறுப்பினரின் எண்ணிக்கை 8 மில்லியனாக உயர்ந்தது. இத் தொகை 1924-ல் 6 மில்லியனுக்குக் குறைவாக இருந்தது. 1929 வரையில் தொழிலாளரின் எண்ணிக்கையிலும் தொழிற் சங்க உறுப்பினரின் தொகையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எதுவும் காணப்படவில்லை. தொழிலாளரின் மனோபாவத்திலும் எதிர்பார்த்த மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

**மாறிய சூழ்நிலையில் தொழிற் சங்கங்கள்**

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் தொழிற் சங்கங்களின் பங்கு என்ன என்ற பிரச்சினை கடுமையாக விவாதிக்கப்பட்டது. பொதுவாகத் தொழிற் சங்கங்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனவேயன்றி பொருளாதார வளர்ச்சிக்கான தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. 1926-லிருந்து கூடிய தொழிற் சங்க காங்கிரஸ்களிலெல்லாம் கூலி உயர்வு வேண்டும்; தொழிலாளரின் ஊதியங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் குறையவேண்டும் என்ற கோரிக்கைகள் பெரிதும் அடிபட்டன. ஆனால், ஆக்கச் சக்தியைப் பெருக்குதல், கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவற்றுக்கு உட்பட்டுப் பொருளுற்பத்தியை அதிகரித்தல் போன்ற ஆக்க வேலைகள் புறக்கணிக்கப்பட்டன. புதிதாக வேலைக்கு அமர்ந்தவர்கள் பலர் ஆலைத்தொழில் அனுபவம் சிறிதும் இல்லாதவர்கள். ஆகவே, திறம் குன்றியிருந்தனர். அனுபவம் வாய்ந்த தொழிலாளர் வேலையை அலட்சியம் பண்ணினர். ஒழுங்காக வேலைக்குச் செல்வதில்லை;

சென்றாலும் ஏனோதானோவென்று மெதுவாக வேலை செய்வது; குடிவெறி, ஒழுங்கீனம் முதலியன மலிந்தன; பலாத்காரமும் ஆங்காங்கே தலைகாட்டியது. இன்ன பல குறைபாடுகளைக் கண்டும் தொழிற்சங்கம் வாளாவிருந்தது. அதன் விளைவாக ஆக்கச்சக்தி குன்றியது. கூலிமட்டும் உயர்ந்துகொண்டே இருந்தது. எனவே, உற்பத்திச் செலவுகள் அதிகரித்தன. சுருங்கக்கூறின், குறைந்த உழைப்பில் அதிக வருவாய் ஈட்டும் மனோபாவம் தொழிலாளரிடையே மிகுந்து காணப்பட்டது. தொழிற் சங்கங்களும் அவற்றின் தலைவர்களும் இத்தகைய போக்கைத் தட்டிக் கொடுத்து ஆதரித்து வந்தனர். அதன் காரணமாக 1929 மே மாதம் சோவியத் யூனியன் தொழிற் சங்கத் தலைவரான டோம்ஸ்கி (Tomsky) அப் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். 'சிண்டிகலிஸ்ட்' பாதையில் தொழிலாளரை வழி நடத்தினர் என்பது அவர்மீது சாட்டப்பட்ட குற்றம்.

### ஐந்தாண்டுத் திட்டம்

தொழிலாளரின் ஆக்கச்சக்தியை இரண்டு மடங்காக்க வேண்டும் என்பது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள். தொழிலாளரின் பழைய போக்கை மாற்றி ஆக்க வேலைகளில் அவர்களை ஊக்குவிப்பதன்மூலம் எளிதில் அக் குறிக்கோளை அடையலாம் என்பது ஸ்டாலினது நம்பிக்கை. பொருளுற்பத்தியில் ஆலைகளிடையே போட்டி மனப்பான்மையை வளர்ப்பது (சமதர்மப் போட்டி-Socialist Competition), கடின உழைப்பின்மூலம் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அதிர்ச்சிப்படைகளை (Shock brigades) அமைப்பது, தொழிலாளருக்குத் தொழில் நுணுக்க அறிவைப் புகட்டுவது, வேலைக்குத் தக்க கூலியளிப்பது (piece wage), ஊதாரித்தனத்தை விடுத்துச் சிக்கனத்தை மேற்கொள்ளுவது முதலியவற்றின் மூலம் எளிதில் ஆக்கச்சக்தியைப் பெருக்கி உற்பத்திச் செலவுகளைச் சுருக்கலாம் என்பது ஸ்டாலினது கருத்து. அதற்கிணங்கவே 1931-ல் ஸ்டாலின் வெளியிட்ட ஆறு குறிப்புகள் கொண்ட பேச்சில் (Six point Speech) கூலியில் ஏற்றத்தாழ்வுக்கு இடமளிப்பது, பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது, பொறுப்பு உணர்ச்சியைப் புகுத்துவது, நிருவாகிகளின்மீது இருந்த வெறுப்புணர்ச்சியைப் போக்குவது, தொழிலறிவைப் பெருக்குவது, வரவு செலவுக் கணக்குகளைச் சரிவர அமைப்பது என்ற கொள்கைகள் இடம் பெற்றன. இருப்பினும், தொழிலாளரின் மனோபாவம் உடனடியாக மாறிவிடவில்லை. ஒழுங்கீனம், அலட்சியம் முதலிய குறைபாடுகள் இருந்தே வந்தன. எனவே, முதல் ஐந்து ஆண்டுத் திட்டக் காலத்தில் தொழிலாளரின் ஆக்கச்சக்தியை 41 சதவிகிதமே அதிகரிக்க முடிந்தது. பொருள்களின் தரமும் குறைந்திருந்தது.

**தொழிற்சங்க உரிமைகளுக்கேற்பட்ட பங்கம்**

உற்பத்தியில் கவனம் செலுத்தியதால் தொழிற் சங்கங்களின் உரிமைகள் பல அலட்சியம் செய்யப்பட்டன. தொழிற் சங்கங்களில் நிலவிய ஜனநாயக முறை பெரிதும் பாதிக்கப்பட்டது; தொழிற்சங்க பிரதிநிதிகள் பலர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக நியமனம் பெற்றனர். சில இடங்களில் வேலையில் பலவந்தம் பயன்படுத்தப்பட்டது. வேலையை அலட்சியம் செய்தவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாயினர்; வேலை செய்யும் இடங்களில் தக்க பாதுகாப்போ, வசதிகளோ இருக்கவில்லை; குடியிருக்கப் போதிய வீடு கிடையாது; தொழிலாளரின் கலாச்சாரத் தேவைகள் சரியானபடி கவனிக்கப்படவில்லை என்ற பல புகார்கள் ஆங்காங்கே கிளம்பின. 1937-ல் கூடிய தொழிற் சங்க மத்தியக் குழுவின் கூட்டத்தில் அதன் செயலாளரான ஷ்வர்னிக் (Shvernik) என்பவர் மேற்கண்ட பல குறைகளை எடுத்து இயம்பினர். அதன் பயனாக, அவ்வாண்டில் இரகசிய வாக்குமுறையின் அடிப்படையில் புதிய தேர்தல் நடைபெற்றது. தொழிலாளரின் உரிமைகள் அதிகரிக்கப்பட்டன. தொழிலாளர் கண்காணிகள் பலர் நியமிக்கப்பட்டனர். சமூக இன்சூரன்ஸ் திட்டத்தின் நிருவாகமும் தொழிற் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதே சமயத்தில் சம்பளம் பெற்ற தொழிற் சங்க ஊழியர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டது. அதிகபட்சம் இத்தனை பேரைத்தான் சம்பளத்துக்கு அமர்த்துவது என்ற வரையறையை அரசாங்கம் ஏற்படுத்தியது. மனமுவந்த உழைப்பு நல்குபவர்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. அத்துடன் தொழிற்சங்கங்கள் யாவும் பரவல் முறையில் திருத்தி அமைக்கப்பட்டன.

**தொழிற்சங்க அமைப்பு**

ஆலைகளே தொழிற் சங்கங்களின் அடித்தளம். அதன் அடிப்படையில் ஸ்தல, மாவட்ட, பகுதி, குடியரசுக் கமிட்டிகளும், காங்கிரசும் அமைந்தன. இவை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை கூடிவந்தன. சோவியத் யூனியன் முழுவதற்கும் ஒரு மத்திய கமிட்டி உண்டு. அது தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழிற்சங்க காங்கிரஸ் கூடி ஒரு மத்தியக் குழுவைத் தெரிந்தெடுத்து வருகிறது. இக் குழுவில் தலைமைக் குழுவும் செயலாளர் காரியாலயமும் உண்டு.

**கூலிக் கொள்கை**

வேலையின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்பக் கூலி கொடுக்க வேண்டும் என்பது லெனினது கருத்து. இதைச் 'சக்திக்கேற்ற வேலை; வேலைக்கேற்ற கூலி' என்றும் கூறலாம். ஆனால், டோம்ஸ்கி போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் இக்கொள்கையை வரவேற்க வில்லை. மாறாக, கூலியில் சமத்துவத்தை நிலைநாட்ட விரும்பினர். ஆனால், முதல் திட்டத்தின்போது ஸ்டாலின் டோம்ஸ்கியின் கருத்தைப் பொருத்தமற்றது என்று ஒதுக்கி, கூலி விகிதத்தில் ஏற்றத் தாழ்வுகளைப் புகுத்துவதன் மூலம் ஊக்கமளிக்க முயன்றார். அதற்கேற்ப அவர் வளர் வீதக் கூலி முறையொன்றை வகுத்தார். அதன்படி ஒவ்வோர் ஆலையிலும் பொதுவானதொரு உற்பத்தி அளவைத் திட்டத்தைத் (Standard) தொழிற் சங்கமும் நிருவா கமும் சேர்ந்து நிர்ணயித்தன. அதற்கும் அதற்குக் குறைந்த உற்பத்திக்கும் ஒரு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப் பட்டது. ஆனால், அப்பொது அளவை மிஞ்சிய உற்பத்திக்கு வளர் வீதத்தில் ஊதியமளிக்கப்பட்டது. உற்பத்தி அளவைத் திட்டத் தைக் காட்டிலும் 10 சதவிகிதத்துக்கும் அதிகமானால் அந்த உபரி யில் 50 சதவிகிதம் உழைப்புக்கு ஊதியமாகவும் அளிக்கப்பட்டது. உற்பத்தி 20 சதவிகிதத்துக்கு அதிகமானால் உபரி முழுவதுமே ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. இம்முறையால் கடின உழைப்பு நல்கியவர்கள் தங்கள் கூலியைக் கணிசமான அளவில் பெருக்க முடிந்தது. அதே சமயத்தில் சாதாரண உழைப்பாளிகளுக்கு ஒரு குறைந்தபட்சக் கூலி கிடைத்தது. எனினும், இம்முறையால் கூலி விகிதத்தில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றலாயின. 1934-ல் கனரகத் தொழில்களில் 8 தரப்பட்ட கூலியும் அமுலில் இருந்தது. அதன் பயனாக, கூலிகள் 3 : 1 என்ற விகிதத்தில் வேறுபட்டிருந்த தாகப் பேராசியர் ஆபிரகாம் பெர்க்சன் (Abraham Bergson) கணித்தார். அத்துடன் உயர்ந்தபடியில் இருந்த 20 சதவிகிதத் தொழிலாளர் மொத்தக் கூலிப் பட்டியலில் 37 : 3 சதவிகிதத்தைப் பெற்றனர் என்பதும் அவரது மதிப்பீடு. இந்த வேறுபாடு போருக்கு முன்னர் இருந்ததை விடக் குறைந்ததே எனினும் புதுப் பொருளா தாரக் கொள்கையின்போது இருந்ததைவிட அதிகமாக இருந்தது. 1935-ல் பங்கீட்டு முறை கைவிடப்பட்டபோது மெய்க்கூலியிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் மேலும் அதிகரித்தன. உற்பத்தியின் அளவை அதிகரிப்பதில் கவனம் செலுத்திய இக்கூலி முறையால் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பொருள்களின் தரம் பெரிதும் குறைந்துபட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது தொழிலாளர் களின் வருவாயில் இருந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரித்தன. தொழில் நிபுணர்கள் ஆலை நிர்வாகிகள் முதலியோரின் ஒத்துழைப்

பைப் பெறுவதற்காக அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப் பட்டது. 1940-ல் சாதாரண ஒரு தொழிலாளி மாதமொன்றுக்கு 200-300 ரூபிள் கூலி பெற்ருன். அதே சமயத்தில் நாட்டின் தலை யாய விஞ்ஞானிகள் 2500 ரூபிள்வரை ஊதியம் பெற்றனர்.

**ஸ்டாக்கனேவைட் இயக்கம் (Stakhnovite Movement)**

கூலி விகிதத்தால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் ஸ்டாக்க ஞேவைட் இயக்கத்தால் மேன்மேலும் அதிகரித்து வந்தன. ஸ்டாக் கனேவ் என்பவர் உக்ரெயினிலுள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி. நிலக்கரியை வெட்டி எடுப்பதில் அவர் ஒரு புதிய முறையைப் புகுத்திஞர். அதன் பயஞக நேரத்தை வீணுக்காமல் நிலக்கரித் தோண்டும் கருவிகளைத் தக்க முறையில் பயன்படுத்தி உற்பத்தியைக் கணிசமான அளவில் பெருக்கமுடிந்தது. அர சாங்கம் இப் புது முயற்சியை வாழ்த்தி வரவேற்றுப் பொருளாதாரத் தின் பல பகுதிகளிலும் இத்தகைய புது முறைகளைப் பரப்புவதற் கான வகையில் ஊக்கமளித்தது. 'தொழிலறிவைப் பெற்றுத் தொழில்களை ஆட்கொள்க' என்பன போன்ற கோஷங்கள் ஆலைக ளெங்கும் எதிரொலித்தன. புது முறைகளை வகுத்தவர்களின் ஊதியம் 2-4 மடங்கு அதிகரிக்கப்பட்டது. அதன் பயஞகப் பலர் இவ் வியக்கத்தில் பங்கு கொண்டனர். விரைவில் அத்தகையவர் களின் எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் அதிகமாயிற்று. அத்தனை பேரும் புதிய முறைகளை வகுத்தவர்களல்லர். பிறர் கண்டுபிடித்த முறைகளை விரைவில் தங்கள் தங்கள் துறைகளில் புகுத்தியவர்களும் ஸ்டாக்கனேவைட்டுகளாகவே கருதப்பட்டனர்.

வேலைகளை ஏற்றவகையில் பாகுபடுத்தி, வேலை செய்யும் இடத்தைத் தக்கவிதமாக அமைத்துத் தொழில் முறைகளைச் சீரிய முறையில் ஒழுங்குபடுத்துவதுதான் ஸ்டாக்கனேவ் இயக்கத்தின் மூல மந்திரம். சுருங்கக்கூறின் இதைத் தொழில் சீரமைப்பு (rationalisation) என்னலாம். ஆனல், முதலாளித்துவப் பொரு ளாதாரங்களில் இத்தகைய சீரமைப்பைத் தொழிற் சங்கங்கள் எதிர்த்துப் போராடுவது வழக்கம். மாருக, சோவியத் யூனியனில் சீரமைப்புத் தொழிலாளரின் இயக்கமாக மலர்ந்தது; ஏராளமான தொழிலாளர் தங்கள் விடு நேரங்களைத் தொழிற் பள்ளிகளில் செல விட்டுத் தங்கள் தொழிலறிவைப் பெருக்கினர். அதன் பயஞகத் தொழிலாளரின் வருவாயில் ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்தது உண்மை. ஆனல், இவ்வியக்கத்தில் பங்கு கொண்டவர்களில் பெரும்பான்மையோர் சாதாரணத் தொழிலாளர்களாதலால் அவர் களில் பலர் அடிமட்டத்திலிருந்து உயர எழும்ப முடிந்தது. மேலும் உயர்ந்த ஊதியம் பெற்றவர்கள் வருமான வரி, வளர்வீத வீட்டு வாடகை முதலியன செலுத்தி வந்ததால் மெய் வருவாயிலுள்ள வேறுபாடு ஓரளவு குறைக்கப்பட்டது.

வருவாயில் ஏற்றத்தாழ்வுகள் வளர்ந்தபோதிலும் ஆக்கச் சக்தியில் எதிர்பார்த்ததற்கு அதிகமான வெற்றி கிடைத்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்த் தொழிலாளரின் ஆக்கச் சக்தி 62 சதவிகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், 1937-க்குள் அச் சக்தி 78 சதவிகிதம் உயர்ந்தது. எனவே, புதிய கூலிக் கொள்கையின் பயனுக மக்கள் உற்பத்தியில் முனைந்தனர்; தொழில் நுட்பங்களை ஆவலுடன் கற்றுணர்ந்தனர். அதன் பயனுக அவர்களது வருவாய் பெருகியது. எனினும், போதுமான நுகர்வுப் பொருள்கள் இல்லாததால் அவர்களது வாழ்க்கைத்தரம் வருவாய்க்கொப்ப உயரமுடியாமல் இருந்தது.

### சமூக இன்சூரன்ஸ் முறை

பொதுவாக மக்களது வருவாயில் மூன்றில் ஒருபகுதி சமூக இன்சூரன்ஸ் திட்டங்களின் வாயிலாக வருகிறது என்னலாம். கூட்டுறவு ஸ்தாபனங்களில் வேலை செய்வோருக்குக் கட்டாய இன்சூரன்ஸ் கிடையாது. உதாரணமாக, கூட்டுப்பண்ணைகளில் இன்சூரன்ஸ் முறையைக் கொண்டு வரவேண்டுமாயின் அதற்குப் பெருவாரியானவர்களின் ஆதரவு வேண்டும். பின்னர், அதில் அங்கத்தினராகச் சேர விரும்புபவர்கள் தாங்களாகவே மனமுவந்து முன்வர வேண்டும். இன்சூரன்ஸின் நிருவாகம் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நடைபெறுகிறது. கிராம சோவியத்தும், சமூக நல அமைச்சவையின் ஸ்தல நிருவாகிகளும் அதைக் கண்காணித்து வருகின்றனர். கூட்டுப் பண்ணையைச் சார்ந்தவர்கள் தனித்தும், கூட்டாகவும் செலுத்தும் தொகையுடன் அரசாங்கம் அளிக்கும் மான்யங்களையும் சேர்த்து இன்ஸ்சூரன்ஸுக்கு வேண்டிய நிதி திரட்டப்படுகிறது.

### அதன் வரலாறு

1922-ல் வெளியிடப்பட்ட தொழிற் சட்டத் தொகுப்பின் 175ஆவது பிரிவின்கீழ் நாட்டில் வேலை செய்துவரும் எல்லாருக்கும் பொதுவானதொரு சமூக இன்சூரன்ஸ் திட்டம் வகுக்கவேண்டும் என்று கண்டிருந்தது. ஆனல், அன்று சோவியத் யூனியனிலிருந்த மக்களில் ஏழில் ஒரு பகுதியினர் மட்டுமே வேலை செய்து வந்தனர். இவர்களிலும் சமூக விரோதிகள் என்று கருதப்பட்டவர்களும், மூளை உழைப்பு நல்கியவர்களில் பலரும் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, இன்சூரன்ஸ் ஒரு சிலருக்கு மட்டுமே சிறிதளவு பயனளித்தது. 1927-ல் ஒரு சில தொழில்களில் முதிர்ந்த வயதினருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது. அதேபோல் நெடுங்காலமாக வேலை செய்து பின்னர் வேலை கிடைக்காமல் திண்டாடிய ஒரு சிலருக்கும் உதவியளிக்கப்பட்டது. ஆயினும், இது அவர்களது கூலியில் மூன்றிலொரு பகுதியினர்

கூட இல்லை. மேலும், வேலையில்லாதவர்களில் மூன்றிலொரு பகுதியினர்கூட இத் திட்டத்தால் பயன் பெறவில்லை. எனவே, புதுப் பொருளாதாரக் கொள்கையின் காலத்தில் இன்சூரன்ஸ் திட்டம் திருப்திகரமான வகையில் அமையவில்லை.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின்மூலம் வேலை அதிகரித்தது. அதே சமயத்தில் இன்சூரன்ஸ் முறையும் பரவி வேரூன்றியது. 1937-ல் கூலியும், சம்பளமும் பெற்ற எல்லாரும் முதுமைக் கால உபகாரச் சம்பளத்துக்கான திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப் பட்டனர். ஒரு சில தற்காலிகத் தொழிலாளர் மட்டுமே அதற்கு விதிவிலக்காயினர். இவ்வாறு இன்சூரன்ஸ் திட்டம் சமுதாயம் முழுவதையும் பற்றிப் படர்ந்ததை வெப் (Webb) போன்றவர்கள் மிகவும் பாராட்டியுள்ளனர். இத்தகைய திட்டத்தின்மூலம் நாட்டின் சொத்துக்களை எல்லோருமே பொதுவில் அனுபவிக்கிறோம் என்ற உணர்ச்சி சோவியத் மக்களிடையே உருவாகியுள்ளது என்பது அவர்களின் கருத்து.

**இன்றுள்ள முறை**

இன்று சோவியத்யூனியனில் மூன்று வகைப்பட்ட இன்சூரன்ஸ் முறைகள் உள்ளன. ஒவ்வொரு குடியரசும் தனது சுகாதார அமைச்சவையின்மூலம் வைத்திய வசதிகள் அளிக்கிறது. அதனால் ஏற்படும் செலவுகளை மத்திய அரசாங்கமும் ஸ்தல ஸ்தாபனங்களும் மேற்கொள்ளுகின்றன. இத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் நாட்டின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களின் உதவியும், மருந்து, கருவிகள் முதலியனவும் இலவசமாகக் கிடைக்கின்றன. இரண்டாவது, வயோதிகருக்கு அளிக்கப்படும் உபகாரச் சம்பளத்தைக் குடியரசுகளிலுள்ள சமூக நல அமைச்சவைகள் தங்கள் கிளை ஸ்தாபனங்களின்மூலம் கண்காணித்து வருகின்றன. இத் திட்டத்தின்மூலம் வயோதிகரும், அங்கவீனரும் பயனடைகின்றனர். மூன்றாவது, தொழிற்சங்கங்களால் நிருவகிக்கப்படும் இணைக்கப்பட்ட இன்சூரன்ஸ் திட்டங்களின்மூலம் தற்காலிகமாக வேலை செய்ய முடியாதவர்கள், கர்ப்பிணிகள், வயோதிகர், குழந்தைகள் முதலியோர் பயன் பெறுகின்றனர். அத்துடன் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கான செலவுகளையும் இன்சூரன்ஸ் திட்டம் ஏற்றுக்கொள்ளுகிறது. மேலும், தொழிலாளர் பிரயாணம் செய்வதற்கும், விடுமுறைகளில் ஓய்வு பெறுவதற்கும் வரும் செலவுகளையும் இன்சூரன்ஸ் திட்டம் ஈடு செய்கிறது. வயோதிகருக்கு அளிக்கப்படும் உபகாரச் சம்பளம் சாதாரணக் கூலியில் 50-100 சதவிகிதமாக இருக்கும். ஆண்கள் 60 வயதிலும் பெண்கள் 55 வயதிலும் வேலையிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். 1935-க்கு முன்னர் சுகவீனமான தொழிலாளருக்கு

முழுச் சம்பளம் கிடைத்தது. ஆனல், 1938 டிசம்பருக்குப்பின் ஒரே தொழிலில் குறைந்தது 6 ஆண்டுகளாவது பணியாற்றினல் தான் சுகவீன காலத்தில் முழுச்சம்பள உதவி கிடைக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. 6 ஆண்டுகளுக்குக் குறைந்த காலமே பணியாற்றியிருந்தால், அவர்கள் வேலே செய்துள்ள காலத்திற் கேற்ப உதவி மாறுபட்டது. இத் திட்டங்களுக்கு ஆகும் செலவுகளே ஆலேகள் அதனதன் கூலிப் பட்டிக்கேற்பக் கொடுக்கின்றன.

**சிறப்பான அம்சங்கள்**

சோவியத் சமூக இன்சூரன்ஸில் சில குறிப்பிடத்தக்க அம்சங் களுண்டு. முதற்கண், இது இங்கிலாந்திலுள்ள பெவரிட்ஜ் அறிக் கையைப் போன்று பிறப்பிலிருந்து இறப்பு வரையுள்ள எல்லா அபாயங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. இரண்டாவது, இன்சூ ரன்ஸ் திட்டத்துக்கான செலவுகள் முழுவதையும் மத்திய, குடியரசு அரசாங்கங்களும் ஆலேகளும் ஏற்கின்றன. செலவுகளில் தொழி லாளர் பங்கு கொள்ளவில்லே. மூன்ருவது, நாட்டிலுள்ள எல்லாத் தொழிலாளரும் இத்திட்டங்களால் பயன் பெறுகின்றனர். நான் காவது தொழிற்சங்க உறுப்பினருக்கு ஏனேயோரைக் காட்டிலும் அதிக உதவி அளிக்கப்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுலுக்கு வந்த பின்னர் வேலேயில்லாத் திண்டாட்டம் அடியோடு மறைந்தது. அதன் பயனுக வேலேயில்லாதோருக்கு அளிக்கப்பட்ட உதவி ரத்தாயிற்று. இரண்டாவது உலகப் போருக்கு முன்னர் வயோதிகருக்கும், முடமானவர்களுக்கும் உயர்ந்தபட்சமாக 300 ரூபிள் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. போர்க்காலத்தில் ஏற்பட்ட விலே உயர்வின் காரணமாக அச்சம்பளங்கள் பெறு வோரின் வாங்கும் சக்தி குறைந்து போயிற்று. எனவே, 1956 ஜுலே முதல் குறைந்தபட்ச உதவி 300 ரூபிளாகவும், அதிகபட்ச உதவி 1200 ரூபிளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1971-ல் இன்சூரன்ஸ் நிதி கிட்டத்தட்ட 15·6 பில்லியன் ரூபிளாக உயர்ந்துள்ளது.

**பொருளாதார அபிவிருத்தியில் தொழிற்சங்கங்களின் பங்கு**

சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சோவியத் ஜனநாய கத்தில் தொழிற்சங்கங்கள் மிகவும் முக்கியத்துவம் வகித்து வரு கின்றன. அரசாங்கத்தையும் சமுதாயத்தையும் நிருவாகம் செய் வதில் அவற்றின் பங்கு அதிகரித்து வருகிறது. பொருளாதார மேம்பாட்டிலும் ஆலே நிருவாகத்திலும் ஏற்படும் சிக்கல்களேயும் பிரச்சினேகளேயும் தீர்ப்பதிலும் முக்கியமான பொறுப்புகளே அவை மேற்கொண்டுள்ளன.

1971 ஜுலே 1-ல் கிட்டத்தட்ட 96 மில்லியன் பேர் தொழிற் சங்க உறுப்பினராக இருந்தனர். தொழிலாளர், விவசாயிகள்,

மூளை உழைப்பாளர் ஆகிய பலதரப்பட்டவர்களும் அவற்றில் அங்கம் வகித்துவருகின்றனர். மேலும் உற்பத்தியைப் பெருக்குவ தெப்படி? பொதுச் சொத்துகளைப் பாதுகாத்து ஆக்ககரமாகப் பயன்படுத்திச் சமுதாயத்தின் நலன்களுக்கேற்ற வகையில் இலாப கரமாக இயக்குவதெப்படி? என்ற பல கேள்விகள் அவர்களது கருத்தைக் கவர்ந்து வருகின்றன.

தொழிலாளரைப் பாதிக்கக்கூடிய சட்டங்களை வகுப்பதில் தொழிற் சங்கங்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. அங்கத் தினரின் ஊதியம், பொதுநல வசதிகள், கலாச்சாரம் போன்ற பிரச்சினைகளிலும் தொழிற் சங்கங்கள் கவனம் செலுத்திவரு கின்றன. சமூக இன்சூரன்ஸ் முறையைக் கண்காணிப்பது, தொழிலாளர் விடுமுறைகளை அனுபவிக்கக்கூடிய சுகவாசஸ்தலங் களைப் பேணுதல், விடுதிகளை நிருவகித்தல் போன்ற பணிகளிலும் தொழிற் சங்கங்களுக்குப் பங்கு உண்டு.

நாட்டின் பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதிலும் தொழிற் சங்கத்தலைமை பங்கு கொள்ளுகிறது. தொழிற்சங்கங்களின் அபிப் பிராயங்களை ஒட்டியே பல்வேறு துறைகளின் திட்டங்களும் முடிவு செய்யப்படுகின்றன. என்னென்ன இயந்திரங்களைப் புதுப்பிப்பது? எத்தகைய இயந்திரங்களைப் புகுத்துவது? தொழில் முறைகளை மாற்றியமைப்ப தெப்படி? தொழிற்சாலைகளின் சூழ்நிலை எப்படி அமையவேண்டும்? ஆக்கச் சக்தியைப் பெருக்குவதெப்படி? என்ற பல கேள்விகளுக்கு விடை காண்பதில் தொழிற் சங்கங்களுக்கும் உரிய பங்கு உண்டு.

கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு தொழில்களிலும் தொழிற் சாலைகளிலும் பொருளுற்பத்தி எந்த அளவில் அமையயேண்டும்? அதற்கேற்ற சட்டதிட்டங்களையும் நடைமுறைகளையும் வகுப்ப தெப்படி? என்பவற்றை நிர்ணயிப்பதிலும் தொழிற்சங்கங்களின் மத்தியக்குழு பங்குகொண்டு வருகிறது. பல்வேறு நிறுவனங்களிலும் காணப்படும் ஆக்ககரமான முறைகளை அவற்றை ஒத்த பல நிறுவனங்களு...ன் பரிமாறிப் பரப்பும்வகையில் தொழிற்சங்கம் மகா நாடுகள் நடத்திவருகின்றன.

மேலாண்மையாளரை வேலையில் அமர்த்துதல், அவர்களை ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுதல், அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து வருகிறார்களா என்று கண்காணித்தல் ஆகியவற்றிலும் தொழிற்சங்கங்களின் அபிப் பிராயங்கள் கணக்கிலெடுக்கப் படுகின்றன. அதன் பொருட்டு ஒவ்வோர் ஆலையிலும் தொழிலாளர்—பணியாளர் குழுக்கள்

(Factory and Office Committees) அமைக்கப்பட்டுள்ளன. தொழிலாளருக்கும் மேலாண்மைக்குமிடையில் எழக்கூடிய தகராறுகளையும் சிக்கல்களையும் தீர்த்துவைப்பதிலும் இக் கமிட்டிகள் முக்கியப் பங்கு கொள்ளுகின்றன.

உழைப்பாளரின் ஆக்கச்சக்தியை அதிகரிக்கும் பொருட்டுப் பொருளாதார—ஆத்மீகப் பிரகாரமான ஊக்கங்கள் (Economic and Spiritual incentives) எவ்வாறு ஊட்டப்பட்டு வருகின்றன என்று கண்டோம். இலாபகரமாக இயங்கிய தொழில்களில் பணியாற்றி வருகிறவர்களின் ஊதியம், பொதுவசதிகள், கலாச்சார அடிப்படைகள் எவ்வாறு அதிகரிக்கப் படுகின்றன என்று கண்டோம். இத்தகைய உற்பத்தி, பங்கீட்டுப் பிரச்சினைகளில் உதவும் பொருட்டு 1921-லிருந்தே உற்பத்தி மகாநாடுகள் கூட்டப் பட்டு வந்தன. அவை இன்று நிலைபெற்று நிலையான உற்பத்தி மகாநாடுகள் (Standing Production Conferences) என்று அழைக்கப் படுகின்றன. 100 பேருக்கு அதிகமான உழைப்பாளரைக் கொண்ட நிறுவனங்களிலெல்லாம் அத்தகைய குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. 1958-ல் இக் குழுக்களுக்குச் சட்டபூர்வமான அந்தஸ்து வழங்கப்பட்டது. அவற்றின் பொறுப்புகளும் அச் சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டன. ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 160,000 உற்பத்தி மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. உழைப்பாளரையும், பணியாளரையும் பிரதிபலிக்கும் பல்வேறு ஸ்தாபனங்களும் உற்பத்திக் குழுக்களில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. நிறுவனங்களைச் செவ்வனே இயக்குவதிலுள்ள சிக்கல்களைப் போக்குவதெப்படி? உழைப்பாளரின் ஆக்கத் திறனை உயர்த்துவதெப்படி? புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில் முறைகளையும் நடைமுறைக்குக் கொண்டு வருவதெப்படி? நீண்டகாலத் திட்டங்களுக்கேற்ற நிறுவனங்களின் திட்டங்களை வகுப்பதெப்படி? உற்பத்தியின் தேவைகளுக்கேற்ப உழைப்பாளரைப் பயிற்றுவிப்பதெப்படி? பெற்ற பயிற்சியைப் பயன்படுத்துவதெப்படி? உழைப்பின் தரத்தை உயர்த்துவதெப்படி? உழைப்பாளரின் ஒழுங்குக் கட்டுப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதெப்படி? என்ற கேள்விகள் இம் மகாநாடுகளில் முக்கியமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. நிறுவனங்களின் மேலாண்மையை மேம்படுத்துவதெப்படி? தொழில் முறைகளை ஆக்ககரமாக மாற்றியமைப்பதெப்படி? கூலி, உற்பத்தி ஆகியவற்றை நிர்ணயிப்பதெப்படி? உற்பத்திச் சாதனங்களை ஆக்ககரமாகப் பயன்படுத்திச் செலவைச் சுருக்கி இலாபத்தை அதிகரிப்பதெப்படி? என்ற பல நடைமுறைப் பிரச்சினைகளும் இம் மகாநாடுகளின் முன்னால் எழுவதுண்டு. சுருங்கக்கூறின், தொழில் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளும் தொழில் மகா

நாடுகளில் இடம் பெற்றுவருகின்றன. எனவே, தொழில் நிருவாகத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் அம் மகாநாடுகளில் கலந்து கொள்ளுகின்றனர். இம் மகாநாடுகளிலிருந்து சுரக்கும் ஆலோசனைகள் ஆண்டொன்றுக்கு 1·6 மில்லியனுக்கும் அதிகமானவை. அவற்றை அமலாக்குவதால் தொழில் நிறுவனங்களின் செயல் முறைகள் செம்மைப்படுத்தப்படுகின்றன. அவற்றின் ஆக்கத்திறன் மேம்படுகிறது. திறம்பட்ட முறையில் இலாபகரமாக அவை இயங்க முடிகிறது.

தொழில் நிருவாகத்தின் பல்வேறு அம்சங்களையும்பற்றிய ஒப்பந்தங்களை ஆண்டுதோறும் மேலாண்மையும் தொழிற்சங்கங்களும் மேற்கொள்ளுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் சரிவர அமலாக்கப்படுகின்றனவா என்பதையும் உற்பத்தி மகாநாடுகள் கண்காணித்து வருகின்றன. இந்த ஒப்பந்தங்கள் சட்டபூர்வமானவை என்பதுமட்டுமல்லாமல், தொழிலமைப்பு உற்பத்தி, ஒழுங்கு, விஞ்ஞான முன்னேற்றம், தொழிலறிவின் வளர்ச்சி, பொருள்களின் தரம், இலாபம், உற்பத்தியைத் தூண்டும் ஊக்கங்கள், ஊதியம் உற்பத்திக்கான சூழ்நிலை, தொழிலாளரின் கலாச்சார வாழ்க்கை, பொதுநல வசதிகள் போன்ற பல்வேறு அம்சங்களையும் அடக்கி இருப்பதால் திட்டங்களை நிறைவேற்றும் ஒப்பற்றதொரு கருவியாய் விளங்குகின்றன. ஒப்பந்தங்களைப் பதிவு செய்வதற்கான சட்டத்தையும் அதன் உட்பிரிவுகளையும் 1971 மார்ச்சில் மிகவும் சுலபமாக்கிச் சுருக்கியுள்ளனர். இந்த ஒப்பந்தங்களைச் சரிவர அமலாக்குவதில் தொழிற்சங்கங்கள் முக்கியமான பொறுப்பு வகித்து வருகின்றன.

புதியவற்றைக் கண்டுபிடிப்பதிலும் புதிய முறைகளை வகுப்பதிலும் தொழிற் சங்கங்கள் ஆர்வங்காட்டி வருகின்றன. அதற்கென அகில சோவியத் யூனியனின் அடிப்படையில் புதியவற்றைக் கண்டுபிடிப்போர் நடைமுறைக்குக் கொண்டுவருவோர் (All Union Society of Inventors and Innovators) சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஐந்து மில்லியனுக்கு அதிகமான பொறியியல் வல்லுநர்கள் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள், பொருளாதாரப் பண்டிதர்கள், ஆராய்ச்சியாளர், விவசாய நிபுணர்கள் கிட்டத்தட்ட 23 விஞ்ஞான பொறியியல் சங்கங்கள் அமைத்துப் புதியவற்றைக் கண்டுபிடிப்பதிலும் புதிய முறைகளை வகுப்பதிலும் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலும் அதிகமான அக்கறை காட்டி வருகின்றனர். பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் எத்தகைய புதுமைகளைப் புகுத்தவேண்டும் என்பதில் அவர்களது கருத்துகள் நன்கு மதிக்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் இச் சங்கங்கள்தான் சோவியத் பொருளாதார

வளர்ச்சியின் சுனைகள் அல்லது சுரப்பிகள் என்றால் மிகையாகாது. 1966—70 வரை இச் சங்கங்கள் கிட்டத்தட்ட 100,000 கண்டு பிடிப்புகளையும் 12·6 மில்லியன் புத்தம் புது ஆலோசனைகளையும் வழங்கியுள்ளன. அவற்றை அமல் நடத்துவதன் பயனாக 1970 வரை கிட்டத்தட்ட 12·6 பில்லியன் ரூபிள் மிச்சமாயிற்று. இத் தொகையை ஒரு நிதியாக்கிப் புதியவற்றைக் கண்டுபிடிப்போரின் இயக்கத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிதியினளவு நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து வருகிறது. அதைக்கொண்டு சோவியத் யூனியன் முழுவதும் கண்டுபிடிப்புப் போட்டிகள் நடத்தப் பரிசுகள் வழங்கி வருகின்றனர். அப் போட்டிகளின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட மில்லியனாக இருந்துவருகிறது.

புதிதாகக் கண்டு பிடித்தவற்றைப் பரந்த அடிப்படையில் அமலாக்குவதில் சமதர்மப் போட்டி மிகவும் உதவியாக இருந்து வருகிறது. சோவியத் பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு பருவத்தில் இவ்வியக்கம் பல்வேறு வடிவங்களை எடுத்து வந்த போதிலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருத்துகளையும் நடைமுறைகளையும் இரகசியமாக வைத்துத் தனிப்பட்டோரின் இலாபத்தைப் பெருக்குவதிலே பயன்படுத்தாமல் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக்கி அவற்றின் பலன் நாடெங்கும் படர்ந்து பரவும்படி செய்வதே இவ்வியக்கத்தின் சாரமாகும். சோவியத் யூனியனின் குழந்தைப் பருவத்தில் இந்த இயக்கம் ஒரு சிலரிடையே மட்டும் ததும்பி நின்றது. இன்று இது மாபெரும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. சோவியத் பொருளாதாரத்தின் வெற்றிக்கு இந்த இயக்கமே உயிர் நாடியாக விளங்குகின்றது. ஒரு காலத்தில் சமதர்ம வீரன் என்ற பெயருக்காகவும் புகழுக்காகவும் உழைப்பாளரின் முன்னணியில் சிலர் வீறுநடை போட்டு வந்தனர். இன்று புதியவற்றைக் கண்டுபிடிப்போருக்குப் போதிய பரிசுகளும் ஊக்கங்களும் வழங்கப்படுகின்றன. இவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்கி உழைப்பாளரை ஊக்குவித்து நடத்திச் செல்லும் பெருமை சோவியத் தொழிற்சங்கங்களையே சாரும்.

## மேற்கொண்டு படிக்க

Baykov (A), opt. cit, Ch. II chs IX, XIII, XVIII.

Bergson (A). The Structure of Wages.

Dobb (M), opt. cit , Ch. 17.

Vladychenko (Ivan), "Soviet Trade Unions Ensure The Workers' Participation in Socialist Production management," Novosti Press Agency Publishing House, Moscow, 1972.

Webb (Sidney Beatrice), "Soviet Communism : A New Civilization," Third Edition, Ch, III, Section I Ch. X.

# 14. உலகப் பொருளாதார உறவுகள்

முதலாளித்துவ நாடுகளோடு வாணிபம்—இரண்டாவது உலகப் போருக்கு முன்னல்—சமாதான சகவாழ்வும், போட்டியும்.

பின்தங்கிய நாடுகளுடன் தொடர்பு—சுதந்தரமான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு—இந்திய—சோவியத் பொருளாதார உறவுகள்.

சமதர்ம சகோரத்துவம்—ஒருவருக்கொருவர் உதவும் பொருளாதாரக் குழு.

புரட்சிக்கு முன்னல் ரஷ்யப் பொருளாதாரம் மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரங்களோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. சாராட்சியின்கீழ் ரஷ்யாவே ஒரு சாம்ராஜ்யமாக இருந்துவந்ததெனினும், அதன் பொருளாதாரத்தின் உயிர்நாடிகள் பல அயல்நாட்டு மூலதனத்தில் சிக்கியிருந்தன. ரஷ்யாவும் தனது பிற்போக்குத் தன்மைக்கேற்பக் கச்சாப் பொருள்களையும் தானியங்களையும் ஏற்றுமதி செய்வதும் இயந்திரங்களையும் சல்லாபப் பொருள்களையும் இறக்குமதி செய்வதுமாக இருந்தது. உலகப் போரில் வாணிப உறவுகள் தடையுற்றன. போர் முடியுந்தறுவாயில் புரட்சியும் வெடித்தது. சோவியத் சமுதாயம் பிறந்தது. முதலில் அதைத் திணரவைத்துச் சாகடிக்கும் வகையில் முதலாளித்துவத்தின் முன்னணியில் நின்ற மேற்கத்திய வல்லரசுகளும் ஜப்பானும் சோவியத் யூனியன்மீது பொருளாதார முற்றுகையை நடத்தியது. ஆனல், அம் முற்றுகை தோற்றது. எனவே, அந் நாடுகள் சோவியத் யூனியனின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும்வகையில் ஆக்கிரமிப்புப் போரை நடத்தி நாலா பக்கங்களிலும் சுற்றிவளைக்க முயன்றன. அதுவும் முடியவில்லை. புரட்சி, அயலாரின் தலையீடு உள்நாட்டுப் போர்போல பல இன்னல்களுக்கு ஆளாயின. சோவியத் யூனியனின் உலகம் பொருளாதார உறவு "உலகெங்கணுமுள்ள உழைப்பாளரே ஒன்றுபடுங்கள்" என்ற கோஷத்திலேயே பெரும்பாலும் ஒடுங்கிக்கிடந்தது. உண்மையில் இவ்வுறவு தான் சோவியத் யூனியனை அயலாரின் கைப்பிடியிலிருந்து விடுவிக்க முடிந்தது. சோவியத் தலைவர்கள்—குறிப்பாக லெனின்—சமாதான சகவாழ்வு என்ற அடிப்படையில், உலக அரங்கில் உறவு கொள்ள விரும்பினர். ஆனல், முதலாளித்துவ வல்லரசுகள் பல அக் கொள்கையை வரவேற்பதாக இல்லை. எனவே, சோவியத் யூனியனின் அயல்நாட்டு வாணிபமும் பெருகவில்லை.

### முதலாளித்துவ நாடுகளோடு வாணிப உறவு

பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனப் பொருள்களோ, கடன் வசதிகளோ எளிதில் கிடைப்பதாக இல்லை. இந்நிலையில் முதலாளித்துவ உலகத்தை மாபெரும் பொருளாதார மந்தம் கவ்வியது. சோவியத் யூனியனே திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் திடமாக முன்னேறி வந்தது. திட்டங்களுக்கு மூலதனப் பொருள்கள் மிகவும் தேவையாக இருந்தன. அதே சமயத்தில் முதலாளித்துவ நாடுகளின் கனரகத் தொழில்களில் எச்சவல்லமை மிகுந்து காணப்பட்டது. இவ்வேளையில் அமெரிக்காவுடன் சோவியத் யூனியன் கொண்ட உறவு உறைபனியில் அகப்பட்டு உயிர் குறைந்துவந்த ஒருவனுக்கு அனலூட்டும் துணையாக அமைந்தது என்றால் மிகையாகாது. இருப்பினும், மொத்தத்தில் முதலாளித்துவ நாடுகளோடு சோவியத் யூனியன் கொண்டிருந்த உறவு சப்பென்றிருந்தது. இதைச் சில புள்ளி விவரங்களின்மூலம் காணலாம். 1913-ல் 2·3 பில்லியன் ரூபிளாக இருந்த அயல்நாட்டு வாணிபம் 0·2 பில்லியனாகக் குறைந்தது.

### இரண்டாவது உலகப் போருக்கு முன்னால்

முதலாவது உலகப் போருக்குப் பின் மேற்கத்திய வல்லரசுகள் பல போரால் சிதைந்துபோன தங்கள் பொருளாதாரங்களைச் சீரமைக்க முடியாமல் திக்கித் திணறி மேல் மூச்சு வாங்கிக்கொண்டிருந்தன. இந்நிலையில் சோவியத் யூனியனுடன் வாணிப உறவு கொள்ளுவது நல்லது என்று ஒருசில முதலாளித்துவ நாடுகள் நம்பின. எனவே, ஒருபுறம் கோபம், பொருமை, சந்தேகம் ஆகிய உணர்ச்சிகள் அப்போதைக்கப்போது தலைதூக்கி வந்தபோதிலும் இன்னொருபுறம் நேரடியாகவும் மறைமுகமாகவும் சோவியத் யூனியனுடனும் வாணிபத் தொடர்பு கொள்ளலாயின. அதன் பயனாக, மட்டத்திலிருந்த வாணிபம் சற்றே உயர்ந்தது. 1922-23-ல் 0·2 பில்லியன் ரூபிளாக இருந்த சோவியத் வாணிபம் 1924-25-ல் 1·0 பில்லியனாகவும் 1930-ல் 1·6 பில்லியனாகவும் உயர்ந்தது. அதன் பின்னால் மாபெரும் பொருளாதார மந்தத்தின்போது அயல்நாட்டு வாணிபம் மேலும் தயங்கத் தொடங்கியது. ஹிட்லர் பதவியைக் கைப்பற்று முன்னர் ஜெர்மனி சோவியத் யூனியனுடன் வாணிப ஒப்பந்தம் செய்திருந்தது. ஆனால், அவன் பதவிக்கு வந்தபின் ஐரோப்பிய நாடுகளோடு செய்துவந்த வாணிபம் குன்றி வரலாயிற்று. எனவே, 1930-ல் 1·6 பில்லியன் ரூபிளாக இருந்த அயல் நாட்டு வாணிபம் 1932-ல் மறுபடியும் 1 பில்லியனாகி 1939-ல் 0·2 பில்லியனை அடைந்தது.

மொத்தத்தில் இரண்டு உலகப் போர்களுக்கும் இடைப்பட்ட காலத்திலுள்ள சோவியத் அயல்நாட்டு வாணிபம் புரட்சிக்கு முன்னு

லிருந்ததைவிடக் குறைவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனல், வாணிபத்தில் அடங்கிய பொருள்களின் விகிதங்களும் மாதிரியும் மாறிவந்தன. புரட்சிக்கு முன்ஞல் ரஷ்ய இறக்குமதியில் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சல்லாபப் பொருள்களும் வசதி களுமே முக்கியத்துவம் பெற்றுவந்தன. ஆனல், புரட்சிக்குப்பின், குறிப்பாக வளர்சிக்கான திட்டங்கள் அமலுக்கு வந்தபோது, இயந் திரங்கள், விவசாயக் கருவிகள், உலோகம் வெட்டும் இயந்திரங்கள், மின்சார நிலையங்களுக்கு வேண்டிய இயந்திரங்கள், கருவிகள் ஆகியவை முக்கிய இடம் பெற்றுவந்தன. அதே சமயத்தில் ஏற்றுமதி செய்வதற்குரிய பொருள்களும் அதிகமாக இல்லை. குலாக்குகளின் தில்லுமுல்லுகளால் விவசாய உற்பத்தி குன்றியது. எனவே, புரட்சிக்கு முன்ஞலிருந்ததுபோல் உணவுப் பொருள் களையோ கச்சாப் பொருள்களையோ பேரளவில் ஏற்றுமதி செய்ய இயலவில்லை. இரண்டாவது, சோவியத் யூனியனின் ஆலை அபி விருத்தி ஆரம்ப நிலையிலிருந்ததால் தங்களுக்கு வேண்டிய இயந் திரங்களையும் கருவிகளையும் படைப்பதே கஷ்டமாக இருந்தது. இந் நிலையில் அவற்றை ஏற்றுமதி செய்வது எங்கே? கடனுதவி கிடைத்திருந்ததால் ஒருவேளை தனக்குத் தேவையான இயந்திரங் களையும் கருவிகளையும் பேரளவில் இறக்குமதி செய்திருக்கமுடியும். ஆனல், அவ்வாறு உவந்து கடன் கொடுப்பார் அதிகம்பேரில்லை. எனவே, அமெரிக்கா போன்ற ஒருசில நாடுகள் சோவியத் இறக்கு மதிகளால் கனரகத் தொழில்களிலிருந்து வந்த எச்சவல்லமையைப் பயன்படுத்த முடிந்தது.

இரண்டாவது உலகப்போருக்கு முன்ஞல் நடந்த ஒத்திகையும் சோவியத் யூனியனின் வெளிநாட்டு வாணிபத்துக்குக் குந்தகம் விளை விப்பதாகவே இருந்துவந்தது. இரண்டாவது உலகப்போர் ஆரம் பித்தபோது ஹிட்லரின் பிடியிலிருந்த ஆஸ்டிரியா, செக்கோஸ்லோ வேக்கியா போன்ற நாடுகளுடன் இருந்த தொடர்பு அறவே அற்றுப் போயிற்று. மேற்கு ஐரோப்பாவை ஹிட்லர் ஆக்கிரமித்தபோது மேலும் பல தடைகள் முளைத்தன. கடல் பாதைகளிலும் ஹிட்லரது படைகள் இடையூறுகளையும் தடைகளையும் ஏற்படுத்திவந்தன. நேச நாடுகளாவது தன் வாணிபத்தைப் பெருக்கி இருக்கலாம். ஆனல், போர் ஆரம்பித்தபோது அவர்களது மனம் பேதலித்து நின்றதே ஒழிய சோவியத் யூனியனுடன் பலமான உறவு கொள்ளு வதாக இல்லை. ஹிட்லர் தனது அறிவுச் சக்திகளைச் சோவியத் யூனியனுக்கு எதிராக முடுக்கிவிட்டால் நல்லதாயிற்றே என்று நேச நாட்டுத் தலைவர்கள் எண்ணலாயினர். குறிப்பாக, அமெரிக்க,

சோவியத் வாணிபத்தில் உடனடியாக அவ்வளவு அக்கறைக் காட்ட வில்லே. எனவே, போரின் முதற் பகுதியில்—அதாவது 1943 வரை சோவியத் அயல்நாட்டு வாணிபத்தினளவு குறைந்துவந்தது. 1940-ல் 5·0 பில்லியனுக இருந்த சோவியத் அயல்நாட்டு வாணிபம் 1943-ல் 0·2 பில்லியனுகக் குறைந்தது. ஆனல், போரின் பிற்பகுதியில் நேச நாடுகள் சோவியத் யூனியனுக்கு வேண்டிய உணவு மற்றும் தளவாடங்கள் கொடுத்து உதவ முன்வந்தன. அதன் பயனுக சோவியத் அயல்நாட்டு வாணிபம் விழிப்படைந்தது. வாணிபத்தைத் தவிர அமெரிக்காவும் நேச நாடுகளும் கொடுத்துதவிய கடன்களும் அதிகரிக்கலாயிற்று. இதைப்பற்றி ஏற்கெனவே அத்தியாம் 9-ல் குறிப்பிட்ளோம்.

### சமாதான சகவாழ்வும் போட்டியும்

இரண்டாவது உலகப்போர் உலகச் சூழ்நிலேயை அடியோடு மாற்றியது. ஆக்கிரமிப்புப்படைகள் முறியடிக்கப்பட்டன. கிழக்கு ஐரோப்பாவில் பெரும்பகுதி சமதர்மத்தைத் தழுவியது. சீனு, வட கொரியா, வட வியத்னும் ஆகிய நாடுகளிலும் சமதர்மம் வேரூன் றியது. அதே சமயத்தில் சாம்ராச்சியங்கள் பல உடைந்தன. ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற கண்டங்களில் ஏகாதிபத்தியங்களின் பிடிப்பிலிருந்து விடுபட்ட பல நாடுகள் சுதந் திரமான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்தன. இருப்பினும், இந் நாடுகள் பலவற்றில் பழைய ஏகாதி பத்தியங்கள் புதிய முறைகளேக் கையாண்டு தங்கள் அரசியல்—பொருளாதார ஆதிக்கத்தை நீடிக்க விரும்பின. இச் சூழ்நிலே முதலாளித்துவ நாடுகள் சோவியத் யூனியனேடு நட்பு கொள்ளவோ தயக்கமற்ற வகையில் பொருளாதார உறவு கொள்ளவோ இடந் தரவில்லே.

அமெரிக்காவும் மேற்கத்திய வல்லரசுகளும் சோவியத் யூனியனுக்கு எதிராகத் தொடுத்த கெடுபிடிப் போரின் காரண மாகவும் வியத்னுமிலும் மேற்கு ஆசியாவிலும் (மத்திய கிழக்கிலும்) நடந்த ஆக்கிரமிப்புப் போர்களின் காரணமாகவும் முதலாளித்துவ நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கு மிடையே நடந்த வாணிபம் ஒருவாறு தடையுற்றது. இருந்தாலும் துரிதமாக முன்னேறிவந்த சோவியத் பொருளாதாரத்துடன் தொடர்பு கொண்டால் தங்களது பொருளாதாரங்களும் பயன் பெற முடியும் என்பது அவைகளுக்குத் தெரியாமலில்லே. மொத்தத்தில், 1946-ல் 1·3 பில்லியன் ரூபிளாக இருந்த அயல்நாட்டு வாணிபம் 1965-ல் 14 6 பில்லியனுகி 1970-ல் 22·1 பில்லியன் ரூபிளே எட்டிப் பிடித்தது. மேன்மேலும் இத்தொகை அதிகரித்து வருகிறது. இதில் முதிர்ச்சியுற்ற

முதலாளித்துவப் பொருளாதாரங்களுடன் செய்த வாணிபம் கால் பகுதிகூட இல்லை. இருந்தாலும் 1950-ல் 0·4 பில்லியன் ரூபிளளவில் இருந்த இவ்வாணிபம் 1955-ல் 0·9 பில்லியனாகவும் 1960-ல் 4·7 பில்லியனாவும் உயர்ந்து வந்திருக்கிறது என்பது கவனிக்கற்பாலது.

இந்நாடுகளிடமிருந்து இறக்குமதியான பொருள்களில் மூன்றிலொரு பகுதிக்குமேல் இயந்திரங்களும் தொழிற்கருவிகளுமாக இருந்தது. ஏனைய இறக்குமதிப் பொருள்களில் இரசாயனப் பொருள்கள், மோட்டார் வண்டி, காகிதம், உணவுப் பொருள்கள் ஆகியவை முக்கியத்துவம் பெற்றிருந்தன உருட்டிய எஃகு, செயற்கை நார்கள், கச்சாக்கம்பளி ஆகிய சாதனங்களும் ஓரளவு இறக்குமதியாயின. கனிவர்க்கங்களும், மீனும் இறக்குமதியான உணவுப் பொருள்களில் முக்கியமானவை. தானியங்களும் அப்போதைக்கப்போது இறக்குமதியாயின. இயந்திரத்தாலான நுகர்வுப் பொருள்களும் இறக்குமதியில் இடம் பெற்றுள்ளன.

சோவியத் யூனியன் ஏற்றுமதி செய்துவந்த பொருள்களுள் எரிபொருள், இரும்பு, மரம் எஃகு, ஏனைய உலோகங்கள், பருத்தி போன்றவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. எரிவாயுவும் தற்போது ஏற்றுமதி செய்யப்படுகிறது. சோவியத் பொறியியற் பொருள்கள் இயந்திரங்கள், கருவிகள், வீட்டில் பயன்படுத்தக்கூடிய நிலையுறு நுகர்வுப் பொருள்கள் ஆகியவையும் ஏற்றுமதியில் அடங்கியுள்ளன. மொத்தத்தில், இரண்டாவது உலகப்போருக்குப் பின்னால் சோவியத் யூனியன் நடத்திய வாணிபத்தில் 80 சதவிகிதம் போல் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் நடைபெற்றது. இவற்றுள் இங்கிலாந்தும் பின்லாந்தும் முக்கியமானவை. நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப்படையில் இவ்வாணிபம் வளர்ந்து வருகிறது. முன்னாள் எதிரிகளான மேற்கு ஜெர்மனியும் ஜப்பானுங்கூட இத்தகைய ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளன. கெடுபிடிப் போன்ற முன்னின்று நடத்திய அமெரிக்காவும் இன்று சோவியத் வாணிபத்தில் அக்கறை காட்டிவருகிறது. வாணிபம் நட்புறவை வளர்த்து வலுப்படுத்தவில்லையாயினும், சகவாழ்வில் இருந்துவந்த நம்பிக்கையைப் பலப்படுத்தி ஒருவருக்கொருவர் பயன்தரத்தக்க உறவுகளில் ஒத்துழைக்கவும், ஒருவரோடொருவர் சமாதானமான வகையில் போட்டியிடவும் அடிகோலியது என்றால் மிகையாகாது.

ஏகாதிபத்திய நாடுகளின் பிடியிலிருந்து விடுப்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க, லாட்டின் அமெரிக்க நாடுகள் பல ஏகாதிபத்தியங்களின் பரம எதிரியாக விளங்கிய சோவியத் யூனியனிடம் தொடர்பு கொண்டு சுதந்தர அடிப்படையில் தங்கள் பொருளாதாரத்தைக்

கட்டி வளர்க்க விரும்பியதில் வியப்பொன்றுமில்லை. அதன்பயனுக, அந் நாடுகளுடன் சோவியத் யூனியன் கொண்ட வாணிப உறவில் விறுவிறுப்புக் காணப்பட்டது. 1960-ல் 0·8 பில்லியன் ரூபிளாக இருந்த வாணிபம் பத்தே ஆண்டுகளில் 2·9 பில்லியனுக உயர்ந்தது. இது சோவியத் யூனியன் அயல் நாடுகளுடன் நடத்திய மொத்த வாணிபத்தின் வளர்ச்சி வேகத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இருதரப்பினரும் பயன் பெறத்தக்க வகையில் இவ்வாணிப உறவு அமைந்தது. ஏகாதிபத்திய நாடுகளோடு உறவு கொண்டிருந்தபோது இப் பொருளாதாரங்கள் சுரண்டல், பாதகமான வாணிப மாற்று விகிதம், பின்போக்கு ஆகியவற்றுக்கு ஆளாகின. ஆனுல், சோவியத் யூனியனேடு இந்நாடுகள் கொண்டிருந்த உறவு இந்நிலைகளிலிருந்து விடுவித்துச் சுதந்திரம் சமத்துவம் தன்னிறைவு ஆகிய பாதைகளில் திருப்பி விடுவதாக அமைந்தது. அத்துடன் கிட்டத்தட்ட 5 பில்லியன் ரூபிளுக்கதிகமாக நெடுங்காலக் கடனுகக் கொடுத்துதவியுள்ளது. அத் தொகையில் கிட்டத்தட்ட 70 சதவிகிதம் அவற்றின் தொழில் வளர்ச்சிக்கேற்ற வகையில் செலவிடப்பட்டு வருகின்றன. இவ் வளர்ச்சியில் கனரகத் தொழில்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், பின்தங்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சியைத் தூண்டும் வகையில் 1969 ஜனவரி 1 வரை சோவியத் யூனியன் அந்நாடுகளில் ஆண்டொன்றுக்கு 8·7 மில்லியன் டன் உற்பத்தி செய்யக்கூடிய எஃகு ஆலைகளையும், 6·8 மில்லியன் டன் இரும்புக் கனிகளையும், 10·5 மில்லியன் டன் நிலக்கரியையும் தோண்டி எடுக்கக்கூடிய சுரங்கங்களையும், 11·5 டன் சுத்தம் செய்து வடித்தெடுத்த எண்ணெயையும் 0·15 மில்லியன் டன் எடையுள்ள இயந்திரங்களை உருவாக்கக்கூடிய உலைக்கூடங்களையும் 6 மில்லியன் டன் மின்சாரத்தை உருவாக்கக்கூடிய மின்சார நிலையங்களையும் கட்டி முடித்து உதவியுள்ளது. தொழில் நிறுவனங்களை ஆதியிலிருந்து அந்தம் வரை நிர்மாணித்து அளிப்பதுடன் அவற்றைத் திறமையாக இயக்கக்கூடிய உழைப்பாளரையும் பொறியியல் நுணுக்க நிபுணர்களையும் பயிற்றுவித்து உதவியுள்ளனர். ஆயிரக்கணக்காண மாணவர்கள் சோவியத் பல்கலைக் கழகங்களிலும் உயர்நிலைத் தொழிற் பயிற்சிக் கூடங்களிலும் படித்துவருகின்றனர்.

கிட்டத்தட்ட 700 ஆலைகளையும் கூடங்களையும் திட்டங்களையும் சோவியத் யூனியன் இத்நாடுகளில் நிர்மாணித்துள்ளது. இவற்றுள் 300 போல் 1969-ல் முற்றுப் பெற்றன. எகிப்திலுள்ள அஸ்வான் அணைக்கட்டு, பிலாயிலுள்ள எஃகு ஆலை போன்ற பல

பிரமாண்டமான திட்டங்களும் இவற்றுள் அடங்கியுள்ளன. பெரும்பாலும் இத் திட்டங்களுக்கு வேண்டிய சாதனங்களில் ஒரு பகுதியைக் கடனுகக் கொடுத்து உதவி வருகின்றது. கடனை வசூலிக்கும் முறையும் சுலபமானது; பின் தங்கிய நாடுகளுக்குச் சாதகமானது. கடனுக்கு அதிகவட்டி வழங்குவதில்லை. டாலரில் அல்லது ஏனைய கடினமான செலாவணிகளில்தான் கடனைத் திருப்பித் தரவேண்டும் என்ற கட்டாயமுமில்லை.

பின் தங்கிய நாடுகளில் 50-க்கு அதிகமானவை சோவியத் யூனியனோடு வாணிபத் தொடர்பு கொண்டுள்ளன. இந்நாடுகளிலுள்ள ஒரு சில தனிப்பட்ட வாணிபக் கம்பெனிகளும் சோவியத் வாணிபத்தில் ஈடுபட்டுள்ளன. இவ்வாணிபம் சமத்துவம், ஒவ்வொருவருடைய அரசாங்கத்துவத்துக்கு மற்றவர் மதிப்பளித்தல், இரு சாராருக்கும் பயனளித்தல், சுதந்தரமானதொரு பொருளாதார வளர்ச்சி ஆகிய கொள்கைகளின் அடிப்படையாக அமைதல், ஒருவரையொருவர் சுரண்டுவது என்ற எண்ணத்துக்கே இடமளிக்கப் படவில்லை. சிலசமயங்களில் சோவியத் யூனியனுக்கு இந் நாடுகளில் வியாபாரச் சலுகைகள் கிடைக்கின்றன. அதேபோல் சோவியத் யூனியனும் சில நாட்டுப் பொருள்களின்மீது சுங்கவரி விதிப்பதில்லை. இறக்குமதிகளுக்கு ஈடாக இந் நாடுகள் தங்கள் பொருள்களை ஒரு சில ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யும்படித் தூண்டப்படுகின்றன. அதன்பயனுக, இந்நாடுகளின் தொழில் வளர்ச்சி தூண்டப்படுகிறது.

பின் தங்கிய நாடுகளுடன் கொண்டுள்ள வாணிபத் தொடர்பும் பெரும்பாலும் நீண்டகால ஒப்பந்தங்களின் பேரில் அமைக்கப் பட்டுள்ளன. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு இது பெரிதும் உதவியாக உள்ளது.

இரண்டாவது உலகப் போருக்குப்பின் இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. பொருளாதாரத்தில் அயல் நாட்டு மூலதனத்தின் பிடிப்பு அடியோடு அகலவில்லையெனினும் நடுநிலையான அயல் நாட்டுக் கொள்கை என்ற அடிப்படையில் சுதந்தரமானதொரு பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. இம்முயற்சிக்குச் சோவியத் உதவி உறைமோராக இருந்து உதவி வருகிறது.

வாணிபத் துறையில் இந்தியா சோவியத் யூனியனேடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஆசிய நாடுகளுடன் ஏற்பட்டுள்ள வாணிபத்தில் பாதிபோல் இந்தியாவுடன் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1955-ல் 10·6 மில்லியன் ரூபிளாக

யிருந்த இந்தோ-சோவியத் வாணிபம் 1969-ல் 35·35 மில்லியனாக உயர்ந்தது. அதற்குப் பின்னுள்ள வாணிபத்தினளவை அட்டவணை 15-ல் காணலாம். இந்த அளவு கோடி ரூபாயில் கணிக்கப் பட்டுள்ளது. சோவியத் யூனியனிலிருந்து இறக்குமதி செய்த பொருள்களில் மூன்றிலிரண்டு பகுதிக்கு மேல் இயந்திரங்களும் கருவிகளும் இடம் பெற்றிருந்தன. இந்தியா இறக்குமதி செய்த மொத்த இயந்திரங்களிலும் கருவிகளிலும் சோவியத் யூனியனின் பங்கு கொஞ்சங் கொஞ்சமாக உயர்ந்துவருகிறது. 1960-61-ல் இக் கணக்கில் 1·5 சதவிகிதமே சோவியத் யூனியனிலிருந்து இறக்குமதி யானது. ஆனால், 1967-68-ல் இவ் விகிதம் 10-12 சதவிகிதமாக உயர்ந்தது. இன்று கிட்டத்தட்ட 20 சதவிகித இயந்திரங்களும் கருவிகளும் சோவியத் யூனியனிடமிருந்து கிடைக்கிறது. அத்துடன் பெட்ரோலியப் பொருள்கள், உலோகங்கள், பத்திரிகைக்கான காகிதம், இரசாயன உரம் ஆகிய பொருள்களும் சோவியத் யூனிய னிலிருந்து பேரளவில் இறக்குமதியாகிறது.

அட்டவணை 15.

**இந்தோ-சோவியத் வாணிபம்**

| ஆண்டு | இறக்குமதி | ஏற்றுமதி | கோடி ரூபாயில்) மிச்சம் |
|---|---|---|---|
| 1967-68 | 212·79 | 111·22 | + 10·57 |
| 1968-69 | 191·70 | 148·31 | — 43·39 |
| 1969-70 | 171·33 | 176·37 | + 5·04 |
| 1970-71 | 106·18 | 209·85 | +103·77 |
| 1971-72 | 87·3 | 208·7 | +121·4 |
| 1972-73 | 114·4 | 304·8 | +190·4 |
| 1973-74 | 254·7 | 286·0 | + 31·3 |
| 1974-75 | 402·5 | 418·2 | + 15·7 |

மூலம்: Report on Currency and Finance, Reserve Bank of India, 1971-72 to 1974-75.

அதே சமயத்தில் இந்தியாவின் ஏற்றுமதியில் கொல்லாமைப் பருப்பு, கொட்டைகள், காப்பி, தேயிலை, மிளகு, புகையிலை, காலணிகள், தோல், கம்பளி, பருத்தித் துணிமணிகள், சணலாலான பொருள்கள் ஆகியவை முக்கிய இடம் பெற்றுள்ளன. ஆலைப் பொருள்களும் இந்திய ஏற்றுமதியில் இடம் பெற்று வருகின்றன. ஒரு சில பொருள்களின் ஏற்றுமதியை அட்டவணை 16-ல் காண லாம்.

வாணிபத்தின் மூலமாக மட்டுமன்றிச் சோவியத் யூனியன் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத பல உதவிகளை நேரடியாக வழங்கியுள்ளது. பிலாய் எஃகு ஆலை சோவியத் உதவியால் எழுந்தது. ராஞ்சியிலுள்ள பிரமாண்டமான பெறியியற் கூடத்தை உருவாக்கியது. துர்காபூரிலுள்ள சுரங்க இயந்திரங் களையும் கருவிகளையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, ஹரித் துவாரிலுள்ள மின்சார நிலையங்களுக்கு வேண்டிய மாபெரும் கருவிகளை நிர்மாணிக்கும் நிறுவனம் ஆகியவை சோவியத் உதவி யின் சிகரங்களாக விளங்குகின்றன.

இந்தோ-சோவியத் வாணிபம் நீண்டகால ஒப்பந்தங்களினடி யாக அமைந்துள்ளது. 1956-1959 சோவியத் தலைவர்களான குருஷ்சவ் புல்கானின் இந்தியாவுக்கு வருகை தந்தபோது ஏற்பட்ட இந்த நெருங்கிய பொருளாதார உறவு இன்று பலுகிப் பெருகி வருகிறது. 1971-75-க்காக ஒரு புதிய ஒப்பந்தம் ஒன்று கையெழுத் தானது. 1976-ல் இந்தியப் பிரதமர் சோவியத் யூனியனுக்கு விருந் தாளியாகச் சென்றபோது இந்தோ சோவியத் உறவைப் பலப்படுத்தி மேலும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் வழிவகைகளை வகுத்துள்ளனர். இத்தகைய ஒப்பந்தங்களின் பயனாக இந்தோ-சோவியத் வாணிபம் அளவிலும் பொருள்களின் எண்ணிக்கை யிலும் அதிகரித்த வண்ணமாக உள்ளது.

சோவியத் உதவி தொழில் வளர்ச்சியோடு ஒடுங்கியதல்ல. இந்தியாவின் இராணுவ பலத்துக்கு அடிப்படையான பல தொழில் நிறுவுவதிலும் சோவியத் உதவி ஒப்பற்றதாக உள்ளது. இராணு வதுக்கு வேண்டிய விமானங்கள், டாங்கிகள், தானாக இயங்கிச் சுடக்கூடிய குண்டுகள் ஆகியவற்றைப் பேரளவில் கொடுத்துதவிய துடன் அப் பொருள்களை இந்திய மண்ணில் உற்பத்திச் செய்யக் கூடிய தொழிற்சாலைகளையும் நிர்மாணித்து உதவியுள்ளது.

இந்தோ-சோவியத் உறவு அளவிலும் தரத்திலும் இவ்வளவு வேகமாக வளர்ந்துவந்த போதிலும் இன்றுவரை மொத்த வாணிபத் தில் சோவியத் யூனியனின் பங்கு அவ்வளவு அதிகமாக இல்லை. இன்றும் இந்திய வாணிபம் பெரும்பாலும் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஐரோப்பா, ஜப்பான் போன்ற முதலாளித்துவ வல்லரசு களுடனேயே நடந்துவருகிறது. இருப்பினும், சோவியத் யூனியனின் பங்கை வெறும் அளவைக்கொண்டு மட்டும் கணிக்க இயலாது. முதற்கண், மேற்கத்திய வல்லரசுகள் பொதுவாகப் பின்தங்கிய நாடுகளுடன் தொழில் வளர்ச்சியின் அடிபடையைப் பலப்படுத்த அக்கறை காட்டவில்லை. மாறாக, சோவியத் யூனியன் இத் துறையில் எவ்விதமான தயக்கமுமின்றி ஆர்வத்துடன் ஆதர

அட்டவணை 16.

**இந்திய சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதிசெய்யும் பொருள்களில் சில**

(இலட்ச ரூபாயில்)

| | 1960-61 | 1965-66 | 1969-70 | 1970-71 | 1971-72 | 1972-73 | 1973-74 | 1974-75 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. தேயிலை | 7,95 | 12,36 | 23,88 | 26,39 | 32,99 | 32,42 | 32,64 | 59,57 |
| 2. பிண்ணாக்கு | — | 3,02 | 4,08 | 4,36 | 3,44 | 10,15 | 9,47 | 11,12 |
| 3. கொல்லாமைப் பருப்பு | 2,25 | 6,34 | 24,71 | 14,68 | 18,01 | 23,99 | 29,42 | 72,76 |
| 4. புகையிலை | 68 | 5,79 | 6,43 | 5,54 | 15,28 | 29,40 | 18,60 | 17,23 |
| 5. பருத்தித்துணிகள் | — | 4,08 | 6,49 | 10,29 | 7,37 | 28,88 | 14,58 | 23,49 |
| 6. சாக்குகள் | 2,39 | 19,25 | 13,97 | 23,15 | 22,21 | 33,2[illegible] | 26,35 | 41,15 |
| 7. சணல் துணிகள் | 1,58 | 6,23 | 7,94 | 11,27 | 8,96 | 19,39 | 6,11 | 17,89 |
| 8. காலணிகளும், தோலாலான பொருள்களும் | — | 59 | 19,66 | 18,05 | 16,69 | 25,77 | 42,99 | 32,34 |
| 9. இரும்பும்-எஃகும் | — | — | 5,05 | 17,68 | 7,77 | 9,42 | 8,24 | 1,69 |

மூலம்: Report on **C**urrency and Finance, 1971-72 and 1974-75,

வளித்து வந்தது. அதன் விளைவாக, முதலாளித்துவ நாடுகளும் கனரகத் தொழில்களை வளர்க்கும் முயற்சியை அடியோடு புறக்கணிக்க முடியாமற் போனது. இரண்டாவது சோவியத் யூனியன் சமத்துவத்தினடிப்படையில் பின்தங்கிய நாடுகளுடன் தனது பொருளாதார உறவை அமைத்துக்கொள்ள விரும்பியது. பாதகமான வாணிபமாற்று விகிதத்தை அந்நாடுகளின்மீது சுமத்த விரும்பவில்லை. மேலும், செலாவணி நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய நாடுகளிடமிருந்து அந்நாடுகளில் எளிதாகக் கிடைக்கக்கூடிய பொருள்களின் வாயிலாகவே அவற்றின் இறக்குமதியை ஈடு செய்யக்கூடிய வழிவகைகளை வகுக்கலாயின. இது இந்தியா போன்ற நாடுகளுக்குக் கைத்தாங்கலாக இருந்தது. மூன்றாவது, சோவியத் யூனியனோடு செய்துவந்த வாணிபம் கொஞ்சமாக இருந்தபோதிலும் அது வளர்ந்துவரும் வேகத்தைக் கண்ட மேற்கத்திய வல்லரசுகள் அப்படியே இந்தியா சோவியத் யூனியனின் அணியில் சேர்ந்துவிடுமோ என்று அஞ்சலாயின. எனவே, பொருளாதார உதவியைப் பெருக்கும் பொருட்டு மேற்கத்திய நாடுகளின் அணி ஒன்றை அமைத்தது. உலக வங்கி போன்ற ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களும் இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டலாயின. சமதர்ம நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே நடந்த இத்தகைய சமாதானப் போட்டி இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளுக்குப் பெரிதும் பயன் தருவதாக அமைந்துள்ளது. நான்காவது, சோவியத் பொருளாதார உதவியின் சாராம்சங்கள் பின்தங்கிய நாடுகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளன. நெடுங்காலக் கடன், குறைந்த வட்டி, இலகுவில் கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய வசதிகள் ஆகியவை பின்தங்கிய நாடுகளின் நலன்களுக்கு உகந்தவையா இருந்தன. இதைக்கண்ட முதலாளித்துவ நாடுகளும் தாங்கள் அளித்துவந்த கடன் வசதிகளைப் பின்தங்கிய நாடுகளின் நலன்களுக்கேற்ற வகையில் மாற்றியமைக்கத் தொடங்கியுள்ளன. இதுவும் சோவியத் உறவால் கிடைத்த மறைமுகமானதொரு நன்மை என்னலாம். ஐந்தாவது, இந்தோ-சோவியத் உறவு நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதால் அவற்றைத் தங்கள் ஐந்தாண்டுத் திட்டங்களின் அம்சமாக மாற்ற முடிகிறது. வேறுவிதமாகக் கூறவேண்டுமாயின் திட்டங்களை நிலையான அடிப்படையில் அமைப்பதற்கு இந்த ஒப்பந்தங்கள் உதவி செய்கின்றன. சுருங்கக்கூறின், கடுகு சிறுத்தாலும் காரங் குறையாது என்பதுபோல் அமைவது சோவியத் உதவி. உறை மோரைப்போல் சோவியத் உதவி இந்திய தொழில் வளர்ச்சியைத் தூண்டி வருகிறது என்றும் கூறலாம்.

**சமதர்ம சகோதரத்துவம்**

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னுல் எப்படி சமதர்ம நாடுகளின் எண்ணிக்கையும் அவற்றுள் அடங்கிய மக்கள் தொகையும் அதிகரித்து வந்துள்ளன என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். இனி இந் நாடுகள் எப்படி சமத்துவத்தின் அடிப் படையில் இரு சாராருக்கும் பயனளிக்கத்தக்க வகையில் தாங்கள் பொருளாதார உறவுகளை அடைந்து வந்துள்ளனர் என்பதைச் சுருக்கி வரையலாம்.

சோவியத் யூனியனின் மொத்த வாணிபத்தில் மூன்றிலிரண்டு பகுதிகளுக்குமேல் இந் நாடுகளுடன் நடந்துவருகிறது. 1952-ல் 2·7 பில்லியன் ரூபிளாக இருந்த வாணிபத்தினளவு 1970-ல் 14·4 பில்லியனுக உயர்ந்துள்ளது. இவ் வாணிபத்தின்மூலம் சோவியத் யூனியன் ஏனைய சமதர்ம நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பொருள்கள் பெரும்பாலும் அந் நாடுகளின் தொழில் வளத்துக்கு இன்றியமையாத இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் வடிவாக அமைந்தன. மேலும், இவ்வுதவி நீண்டகாலக் கடன் ஒப்பந்தங்களின் அடிப் படையில் வழங்கப்பட்டது. 1946-1969 வரை சோவியத் யூனியன் கிட்டத்தட்ட 13 பில்லியன் ரூபிள்களைக் கடனுகக் கொடுத்து உதவியுள்ளது. கிட்டத்தட்ட 1,600 தொழில் நிறுவனங்களையும் இக் காலத்தில் நிர்மாணித்து அளித்தது. இத்தகைய பரஸ்பர உதவியின் காரணமாகச் சமதர்ம நாடுகளின் பொருளுற்பத்தி பெருகலாயிற்று.

**ஒருவருக்கொருவர் உதவும் பொருளாதாரக் குழு** (Council for Mutual Economic Assistance)

'உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள்' என்ற கோஷத்தை எழுப்பியது கார்ல் மார்க்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் அறிக்கை. உலகத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட இயக்கத்துக்கு இக் கோஷம் எவ்வளவு உணர்ச்சியூட்டி வந்துள்ளது என்பதை விளக்கத் தேவையில்லை. இரண்டாவது உலகப் போருக்குப்பின் தோன்றிய பல்வேறு நாடுகளும் உலகச் சமதர்ம சமுதாயத்துக்கு உருவ மளிக்கும் வாய்ப்பை உருவாக்கியது. அவ்வாய்ப்பினைப் பயன் படுத்திப் படிப்படியாகச் சமதர்ம சகோதரத்துவத்தை வளர்ப்பது அவசியமாயிற்று. இம் முயற்சியின் முதல் மைல் கல்லே சமதர்ம நாடுகளாலான பொருளாதாரக் குழுவாகும். இக் குழுவில் ஏனைய நாடுகளும் அங்கம் வகிக்கலாமெனினும் இதுவரை பெரும்பாலும் சமதர்ம நாடுகளே இக் குழுவில் அங்கம் வகித்து வருகின்றன. சமதர்ம நாடுகளிடையே வேலைப்பகுப்பு, வெவ்வேறு துறைகளில் தங்கள் திறமையை வளர்ப்பது, ஒருவரோடொருவர் ஒத்துழைப்பது

ஆகியவை இக் கூட்டுறவுக்கு இன்றியமையாதனவாக உள்ளன. தங்களது பொருளாதாரத் திட்டங்களை ஒன்றோடொன்று பொருந்தியதாக அமைப்பது, தொழில்களைப் பாகுபாடு செய்வது, கூட்டாக முதலீடு செய்வது போன்ற பல அம்சங்கள் இக் கூட்டுறவில் காணப் படுகின்றன. சமதர்ம நாடுகளிடையே உள்ள தடைகளைத் தளர்த்துவதும், கூட்டாக விஞ்ஞான-தொழில் நுணுக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதும், ஒன்றுக்கொன்று ஆதரவான வகையில் போக்குவரவு சாதனங்கள், மின்சார உற்பத்தி ஆகியவற்றை அமைப்பதும், பொருளாதார ஊகங்களையும் புள்ளி விவரங்களையும் பரிமாறிக்கொள்ளுவதும் இத்தகைய பொருளாதார இணைப்புக்கு இன்றியமையாதவையாகும். ஒன்றுபட்ட இம் முயற்சிகளால் வளமான பொருளுற்பத்தி, மேம்பட்ட வினைத்திறன், உன்னதமான வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை எளிதில் அடையலாம் என்பது இக் குழுவின் குறிக்கோள். திட்டமிட்ட பொருளாதாரமே அதன் அடிப்படை. அதன் பயனாக, தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத இயந்திரங்கள், கருவிகள், கச்சாப் பொருள்கள், எரிபொருள்கள் ஆகியவை சமதர்ம நாடுகளிடையே நடக்கும் வாணிபத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. 1965-ல் கிட்டத்தட்ட 15 மில்லியன் டன் பெட்ரோலியப் பொருள்களும், 23 மில்லியன் டன் இரும்பும், 3 பில்லியன் கிலோவாட் மணி மின்சாரமும் சமதர்ம நாடுகள் ஒருவரோடொருவர் பரிமாறிக்கொண்டன. இத்தகைய ஒத்துழைப்பு மேன்மேலும் பலம் பெற்று வருகிறது. இந்த இணைப்பை எப்படி மேலும் உறுதிப்படுத்துவது என்ற முயற்சிக்கு உருவமளிக்கும் வகையில் இருபதாண்டுத் திட்டமொன்றை 1975-ல் இந் நாடுகள் வகுத்துள்ளன. சமதர்மக் கூட்டுறவு முயற்சியில் தற்போது எரிபொருள், மின்சாரம், இரும்பு, எஃகு, பொறியியற் பொருள்கள், இரசாயனத் தொழில்கள் ஆகியவை இந் நாடுகளின் கருத்தைக் கவர்ந்து வருகின்றது. ஏற்கெனவே, இத் துறைகளில் இக் கூட்டுறவின் உற்பத்தி பலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. அமெரிக்காவையும் கூடிய சீக்கிரம் தோற்கடிக்கக்கூடிய வலிமையை வேகமாக வளர்த்து வருகின்றது. முதலாளித்துவ நாடுகளைத் தோற்கடிப்பதோடன்றிச் சமதர்ம நாடுகளிடையே உள்ள பொருளாதார வளர்ச்சியிலுள்ள ஏற்றத்தாழ்வுகளும் குறைந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கொண்டு படிக்க

Belyaer (Yuri) "CMEA Countries Fconomic Cooperation" Novosti Press Agency Publishig House, Moscow, 1970.

Patolicher (Nikolai), "Foreign Trade Yesterday, Today and To-morrow" Norosti Press Agency Publishing House.

Sebastian (M.S), "Soviet Economic Aid to India," N.V. Publications, 1975 U.S.S.R., 25th CPSU Congress No. 12, 1976.

# 15. முடிவுரை

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே' என்பது தமிழ் மரபு. இம் மரபை யொட்டியே ஒரு சமுதாயத்தின் உருவமும் உள்ளடக்கமும் காலப்போக்கில் மாறி வளருகின்றன. சமுதாயத்தின் உள்ளடங்கிய உறுப்புகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப அதன் உருவ அமைப்பில் இணக்க மும் நெகிழ்ச்சியும் காணப்படுமாயின் அதைப் பரிணும வளர்ச்சி எனலாம். இத்தகைய இணக்கமின்றி உள்ளூர உண்டாகும் மாறு தல்களை நெருக்கி ஒடுக்கும் உருவ அமைப்பால் முரண்பாடுகள் தோன்றுவது இயல்பு. இத்தகைய முரண்பாடுகளைப் போக்கும் நோக்குடன் சமுதாய அமைப்பில் ஒரு சில திருத்தங்களைப் புகுத்து வதும் உண்டு. மாருக, மேற்போக்கான திருத்தங்களால் முரண் பாடுகள் முற்றிச் சமுதாயத்தின் அடிப்படையே இடித்து நொறுக் கப்படுவதுமுண்டு. இதையே புரட்சி என்பர். ரஷ்ய சமுதாயம் இத்தகையதொரு வளர்ச்சி விதியையே தழுவி அமைந்தது என்னலாம்.

பண்ணையடிமை முறையும் ஊர்ப் பொதுச்சபையும் ரஷ்ய சமுதாயத்துக்குப் பாதுகாப்பையளித்து ஒழுங்கையும் கட்டுப்பாட் டையும் நிலைநாட்டி வந்தன. ஆனால், பெருகிவந்த மக்கள் தொகைக்கு உணவளிக்கப் போதிய நிலம் விவசாயிகளின் கையில் இல்லை. ஆதலின், பெருவாரியான மக்களது வாழ்க்கைத்தரம் நாளடைவில் சீர்கேடுற்றது. விடுதலைப் பிரகடனம் இந்நிலையை மாற்றுவதற்கு முயன்றது. ஆனுல், நிலப்பசி தணியவில்லை. தொழில் வளர்ச்சியும் போக்குவரத்துச் சாதனங்களும் ரஷ்ய சமுதாயத்தில் ஒருவகைச் சலனத்தை உண்டாக்கின. சமுதாயக் கட்டுப்பாடுகள் அதற்கிணங்கித் தளரவில்லை. பழமைக்கும், புதுமைக்குமுள்ள இந்த முரண்பாடுகள் காலப் போக்கில் முற்றின. காலங்கடந்த நிலையில் ஸடோலிபின் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்போக்காக அமைந்த இச் சீர்திருத்தங்களைச் சரிவர அமுல் நடத்து முன்னரே உலகப் போர் மூண்டது. போரால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஏற்கெனவே மூண்டுவந்த முரண் பாடுகள் முற்றிப் புரட்சியாக வெடித்தன.

புரட்சியால் உடைத்தெறியப்பட்ட சமூக, பொருளாதார அடிப் படைகளுக்குப் பதிலாகப் புதியதோர் அமைப்பை உருவாக்கி நிலை நிறுத்துவது அவ்வளவு எளிதாக இல்லை. போராலும் புரட்சியாலும் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தைச் சீரமைப்பதிலேயே பத்தாண் டுகள் கழிந்தன. இருந்தும் பொருத்தமான அமைப்பு முறைகளை நிர்மாணிப்பதில் முழு வெற்றிக் கிட்டவில்லை. சோவியத் அரசாங்கம் அம் முனையில் பல பரிசோதனைகளை நடத்துவதில் முனைந்து நின்றது. அவற்றின் பயனாக நாம் பயிலும் பாடங்களும் பலவுண்டு.

சோவியத் சமுதாயம் உடைமையில் புரட்சிகரமான மாற் றங்களை மேற்கொண்டது. கம்யூனிஸக் கோட்பாடுகளை முன் வைத்து விரைவில் சமதர்மத்தை அடையும் நோக்குடன் அது இயங்கி வந்தது. அதற்கேற்பத் தொழில்களும் பாங்குகளும் நாட் டுடைமையாயின; அயல்நாட்டு வாணிபம் முழுவதும் அரசாங்கத் தின் சர்வாதீனமாக இருந்தது. உள்நாட்டு வாணிபத்திலும் அரசாங்கமும் கூட்டுறவு நிலையங்களும் பங்கு கொண்டன. நிலத்தில் அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் வேரூன்றின. இத்தகைய, அடிப்படையில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின்மூலம் நாட்டின் தொழில் வளத்தையும் பொருள் வளத் தையும் பெருக்குவதற்கான முயற்சிகளை சோவியத் அரசாங்கம் மேற்கொண்டது. அதற்கேற்ற நிருவாக இயந்திரத்தையும் நிர் மாணித்து அமைத்தது.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் சில சிறப்பான அம்சங்கள் காணப்பட்டன. புரட்சிக்கு முன்னரே ரஷ்யப் பொரு ளாதாரம் வளரத் தொடங்கியது. எனினும், திட்டங்களின்கீழ் அதன் வளர்ச்சி வேகம் பன்மடங்கு அதிகரித்தது. எந்த வேகத்தில் வளருகிறது என்பது பற்றிப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவியபோதிலும்* வேறெங்கும் எக்காலத்தும் இல்லாத வளர்ச்சி வேகம் சோவியத் பொருளாதாரத்தில் காணப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வளர்ச்சிக்கு அயல்நாட்டு மூலதனம் எள்ளளவே உதவியது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வளர்ச்சி தனி உடைமையை ஆதாரமாகக் கொண்ட முதலாளித்துவ சமுதாயங்களில் உள்ளது போன்று வணிகச் சுழல் களால் பாதிக்கப்படுவதன்று. வளம், மந்தம், வளம்...... என்று மாறி மாறிச் சுழலாது ஒரே சீராகக் குறித்த வேகத்தில் முன்னேறு வது சோவியத் பொருளாதாரம்.

---

* Grossman (G), 'National Income' in 'Soviet Economic Growth' Ed. Bergson (A).

'சேமிப்பு இன்றேல் முதல் திரட்சி இல்லை' என்று சொல்வதை இன்றும் கேட்கலாம். வருவாயில் நுகர்வுக்கான செலவு போக எஞ்சியதே சேமிப்பு; எனவே, சேமிப்பை அதிகரிக்கவேண்டுமாயின் துய்ப்பைக் குறைத்து வயிற்றை இறுக்கவேண்டும் என்பர். சோவியத் பொருளாதாரம் இத்தகைய சேமிப்பு வளரும்வரை பொறுத்திருக்கவில்லை. மாறாக, கிராமங்களிலும், நகரங்களிலும் உபரியாகத் தேங்கிக் கிடந்த உழைப்பாளிகளை ஒருங்கே திரட்டிப் பொருளாதார நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கு முன் போலவே உணவும், உடையும் அளிக்க முயன்றது. இம் முறையால் சராசரி உணவு குறைவுபட அவசியமில்லை. அதே சமயத்தில் முன்னைவிட அதிகமான தொழில்களை நிர்மாணிக்க முடிந்தது. ஆதலின் நாட்டு வருவாய் உயர்ந்தது; துய்ப்பு உயரவில்லை. எனவே, முதலாக்கம் அதிகரித்தது. இவ்வாறு உற்பத்தியான முதற் கருவிப் பொருள்களைக் கொண்டு எதிர்காலப் பொருள் வளத்தை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டது. குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கக் கூடிய தொழில்களைத் தெரிந்தெடுத்து அதற்கிசையப் பொருளாதார அமைப்பையும் மாற்றி அமைப்பதனுல் சிக்கலின்றிப் பெரிய அளவில் முதலீட்டைப் பெருக்க முடியும் என்பது சோவியத் அனுபவம். ஆகவே, சேமிப்பின் அளவுக்கு உட்பட்டு முதலீடு செய்ய வேண்டும் என்ற வைதீகம் பொருந்தாததாயிற்று. மாறாக, முதலீட்டுக்கேற்பச் சேமிப்பு வயிற்றைக் கட்டுவதால் ஆவதன்று. புதிதாக ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கமே முதலீடாக மாற்றப்படுகிறது.

விற்பனைக்குரிய உபரிப் பொருளும் பொருளாதார அமைப்பின் பாற்பட்டதே என்பதும் சோவியத் பொருளாதாரத்தில் உண்மையாயிற்று. முன்னேக்கிய ஒப்பந்த முறையின்மூலம் விற்பனைக் குரிய உபரிப் பொருள அதன் உற்பத்தி, விலைவாசி ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டது. ஆனல் கச்சாப் பொருள்கள், போக்கு வரத்து வசதிகள் போன்றவை போதுமானபடி பெருகாவிடில் பொருளாதார வளர்ச்சி பெரிதும் தடைபடும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய அனுபவம் பரம்பரையை ஒட்டிய பொருளாதாரத் துறையினருக்குப் பெரும் புதிராக அமைந்தது. இயங்கும் சமநிலைக் கோட்பாட்டின் துணைகொண்டு பொருளாதார வளர்ச்சியை விளக்கவோ, கணிக்கவோ, திட்டமிடவோ முயலுவோர் பெரும்பாலும் தேவை. மக்கள் தொகை, தொழிலறிவு, மூலதனம் முதலிய பல 'காரணி'களில் ஏற்படும் சிறிய மாற்றங்களுக்கு ஏற்ப அவற்றிடையேயுள்ள சமநிலை எவ்விதம் மாறுதலடைகிறது என்று

கணிப்பதிலேயே கருத்தாயிருந்தனர். இம் முறையின்மூலம் தங்கள் கையிலுள்ள சாதனங்களைக் கொண்டு அதிகபட்ச பலன் பெறுவது எப்படி என்ற ஆராய்ச்சிகளில் பெரும்பாலும் ஈடுபட்டு வந்தனர். ஆனல், விவசாய நாட்டைத் தொழில் மயமாக்குவது பிற்போக்கான தொழில் முறைகளைக் கைவிட்டு நவீன முறைகளைக் கையாளுவது போன்ற காரணங்களால் பொருளாதாரத்தின் கூறுகள் அடியோடு மாறுகையில் அவற்றிடையே ஏற்படக்கூடிய சமநிலை உறவுகளைக் கணிக்க முயலுவது தவறு என்பது சோவியத் அனுபவம். எனினும் உற்பத்திச் சாதனங்களை மையமானதொரு நிலையிலிருந்து இயக்குகையில் அவற்றிடையே சமநிலை இருக்க வேண்டியதின் அவசியத்தை சோவியத் அரசாங்கம் நன்கு உணர்ந் திருந்தது. குறிப்பாக, இரும்பு, நிலக்கரி, போக்குவரத்து, இயந்திரங் கள், தொழிலறிவு முதலிய முக்கியமான சாதனங்களின் தேவை யையும் அவற்றின் அளிப்பையும் சமநிலையில் வைத்திருப்பதில் அர சாங்கம் மிகவும் கவனம் செலுத்தியது.

சேமிப்பைப் பெருக்குவதற்காகத் துய்ப்பைக் குறைப்பது அவசிய மில்லை என்பது வலியுறுத்தப்பட்டு வந்தபோதிலும் முதலாவது திட்டத்தின்கீழ் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததெனத் துணிந்து கூறுவதற்கில்லை. ஏழாண்டுத் திட்டம் வரை சோவியத் பொருளாதாரத்தில் நுகர்வுப் பொருள் உற்பத்தி பின்தங்கிய நிலையில் இருந்தது கண்கூடு. கம்யூனிஸத்தை நோக்கி முன் னேறும் பொருளாதாரத்தில் ஈடுபடுத்தப்படும் முதலீட்டில் முதற் கருவிப் பொருள்களுக்கு முதலிடம் அளிப்பது இன்றியமையாதது என்ற கருத்து நிலவினும், நுகர்ச்சியை ஒடுக்குவதற்கென என்றுமே சோவியத் அரசாங்கம் திட்டமிட்டதில்லை. முதலிரண்டு திட்டங் களும் அதற்குச் சான்ருகும். எனினும், இயற்கையால் விளைந்த இன்னல்களினுலும் அயல் நாட்டவர் காட்டிய பகைமை உணர்ச்சி யினுலும் நுகர்வுப் பொருள் உற்பத்தி பெரிதும் புறக்கணிக்கப் பட்டது. 1950 வரை நுகர்வுப் பொருள் உற்பத்திக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்னலாம்.

முதலீட்டில் பெரும்பகுதி மின்சாரம், கனரகத் தொழில்கள் போன்ற நீண்ட காலத் திட்டங்களில் 'பூட்டி' வைக்கப்பட்டது. ஆனல் முதலுக்கு வட்டி என்ன என்று கணக்கிடும் வழக்கம் அங்கில்லை. பொதுவாகத் தனி உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயங்களில் 'நாளை நடப்பதை யாரறிவார்;— எனவே நிகழ்காலம் வருங்காலத்தை விடச் சிறந்தது' என்ற மனேபாவம் நிலவுகிறது. ஆனல், எதிர்கால நல்வாழ்வையே பிர

தானமாகக் கருதுவதால் சோவியத் சமுதாயம் எதிர் காலத்தைக் தள்ளிக் கணக்குப் பார்ப்பதில்லை. மேலும் 'உழைப்பின் மதிப்பைத் காலப்போக்கில் குவித்து வைப்பதே' முதல் திரட்சி என்பது மார்க்ஸியக் கோட்பாடு. அதன்படி 'நாட்டின் மூலதனம் முன்னோர் பின் சந்ததியாரின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக விட்டுச் செல்லும் பொதுச் சொத்து; அதற்கென வட்டியைக் கணக்கிடுவது தவறு' என்ற கொள்கை சோவியத் யூனியனில் நிலவி வந்தது. இவ்வாறு வட்டியின் அவசியத்தைப் புறக்கணிப்பதால் சோவியத் பொருளுற்பத்தியில் அளவுக்கு மிஞ்சிய மூலதனம் விரயம் செய்யப்படுகிறது என்று பொதுவாக மேல்நாட்டு நிபுணர்கள் குறைகூறி வருகின்றனர். ஆனால், அதன் காரணமாகச் சோவியத் முதலீட்டு முறை ஒரு நங்கூரமில்லாத மரக்கலம் என்று கருதிவிடக்கூடாது. 'வட்டிக்குப் பதிலாக முதலைத் திருப்பிப் பெறும் காலம்' (Period of recovery) என்ற தத்துவத்தைச் சோவியத் திட்ட நிபுணர்கள் கையாளுகின்றனர். ஒரு குறிப்பிட்ட பொருளோட்டத்தை உற்பத்திச் செய்வதற்கு வெவ்வேறு முறைகள் தென்படலாம். ஆனால், ஒவ்வொரு முறையாலும் ஏற்படும் செலவுகளைக் கொண்டு எது சிறந்த முறை என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

முந்திய திட்டங்கள் முதற் கருவிப் பொருள்களில் கவனம் செலுத்தியதால் நுகர்வுப் பொருள் உற்பத்தி போதுமான அளவில் இருக்க முடியவில்லை. ஆனால், உற்பத்திக்கு வேண்டிய உழைப்பு, உணவு மூலப் பொருள்கள் முதலியவற்றை நல்கி உதவியவர்களுக்குப் பண வடிவில் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. அதன் பயனாக வாங்கும் சக்தி நுகர்வுப் பொருள்களின் மொத்த மதிப்பைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருந்து வந்தது. இவ்வாறு உபரியாக உள்ள வாங்கும் சக்தியை விற்பனை வரியின் மூலம் உறிஞ்சி விற்பனைக்குரிய பொருள்களின் மதிப்புக்கும் வாங்கும் சக்திக்குமிடையே சமநிலையை ஏற்படுத்துவதில் சோவியத் யூனியன் திறமையுடன் செயலாற்றி வந்தது. ஏற்றதொரு கட்டுப்பாடு, உணவுப்பங்கீட்டு முறை ஆகியவற்றின்மூலம் வளரும் பருவத்திலும் இத்தகைய பணவீக்கத்தைத் தவிர்க்க முடிவதுடன் பொருளாதாரத்தின் இயந்திர அடிப்படையைக் கட்டி வளர்த்து உன்னதமான் பொருள் பெருக்கத்துக்கான வழிவகுத்த பின்னர் விலைவாசிகளை வெட்டி இறக்குவதும் எளிது என்பது சோவியத் பொருளாதார வளர்ச்சியின் வாயிலாக அறியக் கிடக்கிறது.

தன்னிடமுள்ள படைகள் எண்ணிக்கையில் குறைந்து காணப்படினும் அவற்றைத் திறமையாகக் கையாண்டு வெற்றிவாகை சூடு

ப்வனே சிறந்த தளபதியாவான். அதைப் போலவே சோவியத் யூனியனும் மிகக் குறைந்த சாதனங்களைக் கொண்டு மிகப் பெரிய சாதனைகளை மேற்கொள்ளுவதில் முனைந்து நின்றது. இவ் வெற்றிக்கு வழிகோலிய ஒரு சில போர்த் தந்திரங்களை மனத்தில் இருத்துவது பயன் தருவதாகும்.

பொதுவாகப் பொருளுற்பத்தியில் தனிப்பட்டவர்களின் இலாப் வேட்டைக்குப் பதிலாகச் சமுதாயத்தின் நலன்களையே மேலாகக் கருதினர். அதிலும், நீண்டகாலக் கண்ணோட்டமே மேலோங்கி நின்றது. நுகர்வுப் பொருளுற்பத்தி பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நடைபெறவில்லை. எதை, எவ்வளவில், எங்கே உற்பத்தி செய்வது என்பன போன்ற முடிவுகளை அரசாங்கம் மக்களின் சார்பில் மேற்கொண்டு வருகிறது. ஆனால், அம்முடிவுகள் ஒரு சில அடிப்படைக் கொள்கைகளின் அடியாகப் பிறப்பனவாகும்.

உதாரணமாக, நுகர்வுப் பொருள் உற்பத்திக்கென ஒதுக்கப்பட்ட சாதனங்கள் குறைவான அளவில் இருந்தால் அவற்றைக் கொண்டு ஒரு சில அத்தியாவசியமான பொருள்களை மட்டும் உற்பத்தி செய்வது வழக்கம். புத்தம் புதிய அமெரிக்க இயந்திரங்களைக் கொண்டு ஒரே தரமான பொருள்களைப் பேரளவில் உற்பத்தி செய்வதென்பது நுகர்வுப் பொருள் உற்பத்தியில் கடைபிடிக்கப்பட்டதொரு கொள்கையாகும். அது மட்டுமின்றித் தன் வசமுள்ள இயந்திரங்களின் முழுச் சக்தியையும் பயன்படுத்துவதில் சோவியத் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. எனவே, ஒரு பொருளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமாயின் அதைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யக்கூடிய புதியதொரு இயந்திரத்தை நிறுவுவதே வழக்கம். வருவாயில் அதிகமான ஏற்றத் தாழ்வுகள் இல்லாத ஒரு சமுதாயத்தில் ஒரு புதிய பொருள் விற்பனைக்கு வந்தால் பெரும்பான்மையான மக்கள் அதை வாங்க முன்வருவர் என்பதுக் கண்கூடு. இத்தகைய நெகிழ்ச்சிக்கேற்பப் பொருளுற்பத்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துவது என்பது பொருத்தமற்றது; இலாபகரமானதும் அன்று. மாறாகத் தொடர்பற்ற முறையில் தாவித்தாவி எழுவதே சோவியத் அனுபவம். ஆனால், புதியதொரு இயந்திரத்தை நிறுவும்போது புதிய தினுசான பொருள்களை உற்பத்தி செய்வது எளிது. எனவே, உற்பத்தி குறைத்திருந்த காலத்தில் ஒரு சில தினுசுகளே உற்பத்தியாயின. பொருள் வளம் பெருகப் பெருகத் தினுசுகளின்

எண்ணிக்கையும் அதிகரித்து வந்தது என்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே, என்னென்ன பொருள்கள் உற்பத்தி செய்வது? எத்துணை தினுசுகளைப் புகுத்துவது?—என்பனவெல்லாம் அரசாங்கத்தால் மையமானதொரு நிலையிலிருந்து முடிவு செய்யப்பட்டன. ஆனால், அதற்குட்பட்டு எந்தப் பொருளை எந்த அளவில் வாங்குவது என்று முடிவு செய்வதில் வாங்குவோருக்குப் பரிபூரண உரிமை இருந்தது. (பங்கீட்டுக் காலம் மட்டும் இதற்கு விலக்கு). திட்டமிட்ட பொருளாதாரத்தில் மையமான கட்டுப்பாடுகள் இன்றியமையாதன எனக் கண்டோம். முதலீடு, உற்பத்தி விலை நிர்ணயம் முதலியன பற்றிய அடிப்படையான முடிவுகள் மையமாகவே செய்யப்படுகின்றன. எனினும், அவற்றிற்குச் சதையும் தோலும் போர்த்தி, விரும்பத்தக்க உருவம் அளிப்பது அடித்தளத்திலுள்ள நிருவாகிகளின் வேலை. ஆரம்பத்தில் நிருவாகிகள் மனப்பூர்வமாக அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவில்லை. குடியரசுகளிலும் அவைகளின் உட்பிரிவுகளிலும் பொறுப்பேற்று நடத்தக்கூடிய நிருவாக இயந்திரங்கள் உருவாகவில்லை. தன்னலத்தைப் பொது நலத்துக்கு உட்படுத்தும் மனோபாவமும், போதிய பலம் பெற்று வளரவில்லை. இத்தகைய காரணங்களால் அடித்தளத்தில் நிருவாகப் பொறுப்பை வகித்து வந்தவர்களுக்கு அதிகமான உரிமைகள் வழங்கப்படவில்லை. ஆனால் நாளடைவில், குறிப்பாக 1954-க்குப் பின்னர், நிருவாகம் பரவலாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்பது கவனிக்கத்தக்கது.

கார்ல் மார்க்ஸின் காலத்தில் கம்யூனிஸம் (பொது உடைமை) ஒரு கனவாக இருந்தது. விஞ்ஞான அடிப்படையில் அமைந்த கம்யூனிஸ வித்துக்களை உலகெங்கும் தெளித்த பெருமை மார்க்ஸையும், எங்கல்ஸையும் சாரும். அவ்வித்துக்கள் விழுந்த மண்ணின் தராதரங்கள் வெவ்வேறு. வெப்ப-தட்ப சூழ்நிலையிலும் வேறுபாடுகள் உண்டு. சூழ்நிலைக்கேற்றவாறு விதைகளை ஊன்றி, உரமிட்டு, நீர்ப்பாய்ச்சி முதன் முதலாகச் சமுதாயத்தை அரும்பச் செய்த பெருமை லெனினையே சாரும். இவ்வாறு பிற்போக்குத்தனம் வாய்ந்த சாரரசனது ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சியே மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு முன்னரே புரட்சி முற்றி "வெடித்துச் சோவியத் சமதர்மம் பிறக்குமென்று கம்யூனிஸத்தின் தந்தை கார்ல் மார்க்ஸ்கூட எதிர்பார்க்கவில்லை.

பாதகமானதொரு சூழ்நிலையில் பீரிட்டு அரும்பிய சோவியத் சமுதாயத்தை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும் என்று பல முதலாளித்துவ நாடுகள் கங்கணம் கட்டி அணிவகுத்து ஆக்கிரமித்தன. தலையீடு என்ற தீக்காற்றால் வாடி வதங்கிய சமதர்மப்

பயிர் உள்நாட்டுப் போரால் பொசுங்கிவிடுமோ என்ற பயமிருந்தது. அதன் பிறகு குலாக்குகள் போன்ற களைகளும், தனியுடைமை வேட்கை என்ற நோய்நொடிகளும் சமதர்மத்தின் வளர்ச்சிக்கு இடையூறு அளித்துவந்தன. இவற்றையெல்லாம் மேற்கொண்டு திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின்கீழ் சமதர்மம் சோவியத் மண்ணில் ஆணிவேர் ஊன்றி வந்தது. இந்த ஆணிவேரை அசைத்து பூவும் பிஞ்சுமாக இருந்த சோவியத் சமுதாயத்தை அடியோடு அழிக்கும் முயற்சியாக இருந்தது ஹிட்லரது ஆக்கிரமிப்பு. அதை முறியடித்துப் பொருளாதாரத்தைச் சீரமைத்தது சோவியத் மக்களின் மகத்தான சாதனைகளுள் ஒன்றாகும்.

ஆலமரம் போல சோவியத் மண்ணில் விழுதுவிட்டுப் படர்ந்து வரும் சோவியத் சமுதாயம் இன்று தனித்து நிற்கவில்லை. கிழக்கு ஐரோப்பா, கிழக்காசியா, க்யூபா போன்ற நாடுகளிலும் சமதர்ம சமுதாயங்கள் ஆணிவேர்ப் பாய்ச்சி வருகின்றன. உலக நிலப் பரப்பில் நாலிலொரு பகுதியும், உலக மக்கள் தொகையில் மூன்றி லொரு பகுதியும் சமதர்ம சமுதாயத்தின் பண்ணைகளாக விளங்கு கின்றன. எனவே, அவற்றை வேரறுத்து இல்லாமல் செய்வது என்பது பகற்கனவு. பலமிக்க சமதர்ம சமுதாயங்களின் பாசறை யாக விளங்குவது சோவியத் சமுதாயம். சோவியத் புரட்சி ஏற்பட்டுக் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளில் ஆக்கிரமிப்பு, உள்நாட்டுப் போர் ஆகியவற்றை மேற்கொண்டு சமதர்ம சமுதாயத்தை நிலைநாட்டிப் பொதுவுடைமைப் பாதையில் வீறுநடைபோட்டு வருவது உலக மக்களின் கருத்தைக் கவரும் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது. எனவே, அதன் சாதனைகளையும், பிரச்சினைகளையும் சுருக்கி வரைவது பயன் தருவதாகும்.

தனி உடைமை மட்டுமல்லாமல் பொருளாதார மந்தங்கள், வேலையில்லாத் திட்டங்கள் என்ற பல பீடைகளும், சோவியத் சமுதாயத்தில் பழங்கதைகளாகிவிட்டன. நீண்டகாலக் கண் ணோட்டத்தில் பார்த்தால், பொருளாதார வளர்ச்சியிலும் சமதர்ம நாடுகள் முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் வேகமாக முன் னேறி வருகின்றன. முதலாளித்துவ நாடுகளின் முன்னணியில் இருந்து வருவது அமெரிக்கா. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய முதலாளித்துவ நாடு களின் வளர்ச்சி வேகம் பலரது பாராட்டுதலையும் பெற்றுவந்தது. முதலாளித்துவ முறையின் மிடுக்கான வளர்ச்சிக்கு எடுத்துக்காட் டாகவும் அவற்றைச் சுட்டிக்காட்டி வந்தனர். ஆனால், நீண்ட காலத்தை எடுத்துக்கொண்டால் சமதர்ம நாடுகளின் சிறப்புற்ற வளர்ச்சி தெற்றெனத் தெரியவரும். சான்றாக, 1950-1975 வரையுள்ள

25 ஆண்டுகளில் சமதர்ம நாடுகளின் தொழில் வளர்ச்சி முதிர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் தொழில் வளர்ச்சியைக் காட்டிலும் இரண்டு மடங்காக இருந்தது. அதாவது, முதலாளித்துவ நாடுகளின் தொழில்கள் சராசரி ஆண்டொன்றுக்கு 4·6 சதவிகித வேகத்தில் வளர்ந்து வந்திருந்தபோது, சமதர்ம நாடுகளின் தொழில் வளர்ச்சியின் வேகம் 9·6 சதவிகிதமாக இருந்து வந்திருக்கிறது. உண்மையில் இன்று, உலக முதலாளித்துவம் சன்னஞ்சன்னமாக மந்தச்சேற்றில் பதிந்து வருகின்றது. பணவீக்கம், பணச்சிக்கல்கள், எரிபொருள் நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகள் அவற்றை வருத்தி வருகின்றன. சமதர்மப் பொருளாதாரங்கள் இத்தகைய கொள்ளை நோய்களுக்குத் தப்பி என்றுமிலா வளப்பத்துடன் விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

சோவியத் யூனியனையும், அமெரிக்காவையும் மட்டும் எடுத்துக் கொண்டால் 1971-75 வரையுள்ள ஐந்தாண்டு காலத்தில் சோவியத் தொழில் வளர்ச்சி சராசரி 7·4 சதவிகிதத்தில் வளர்ந்து வந்திருக்கிறது. மாறாக, அமெரிக்கத் தொழில் வளர்ச்சியின் வேகம் 1·2 சதவிகிதத்துக்கு அதிகமாக இல்லை என்பது கவனிக்கற்பாலது. உண்மையில் வரலாறு கண்டிராத வேகத்தில் சோவியத் பொருளாதாரம் முன்னேறி வருகிறது. திட்டங்களின்கீழ்—குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப்பின்—சோவியத் நாட்டு வருவாய் கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்கொருமுறை இரட்டித்து வந்துள்ளது. தனிநபர் மெய்வருவாய் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கொருமுறை இரட்டித்து வருகிறது. இவ்வேகத்தில் தளர்ச்சி எதுவுமில்லை. எனவே, இப்போதுள்ள வளர்ச்சி வேகம் தளராமல் இருக்குமாயின் இன்னும் பத்தே ஆண்டுகளில் சோவியத் பொருளாதாரம் அமெரிக்கப் பொருளாதாரத்தைக் காட்டிலும் மிகவும் பலம் பெற்று விளங்குமென எதிர்பார்க்க இடமுண்டு.

இயற்கை உவந்தளித்துள்ள செல்வங்களை விஞ்ஞானம், தொழிலறிவு ஆகியவற்றின் துணைகொண்டு நீண்டகாலக் கண்ணோட்டத்துக்குட்பட்டு திட்டமிட்ட முறையில் பயன்படுத்தி வருவதே சோவியத் பொருளாதாரம் கண்டுவரும் வெற்றியின் சிறப்பான அம்சங்களாகும். பொது உடைமைப் பரிசோதனையில் சோவியத் கொண்டுள்ள ஈடுபாடும், பற்றும் அதை வெற்றிகரமாக்க வேண்டும் என்ற ஆர்வமும்—அதற்கேற்ற வகையில் வழங்கிவரும் இடையுறாத உழைப்புமே அவ்வெற்றியின் அடித்தளமாகும். பொருத்தமான சமூக—பொருளாதார அமைப்புகளின்மூலம் இயற்கை அள்ளி வழங்கும் வளங்களைத் திறம்பட பெருக்க முடியும் என்பதே சோவியத் பரிசோதனையின் முடிவு என்று துணிந்து கூறலாம்.

கணிசமான முதலீடு, கனரகத் தொழில்களின் முக்கியத்துவம், பொறியியல் துறையின் முன்னேற்றம், மின்சார அபிவிருத்தி, தானுக இயங்கும் தொழில் முறைகள் போன்ற பல துறைகளில் வரலாற்றில் கண்டிராத மிடுக்கை ஊட்டி வந்திருப்பது சோவியத் வளர்ச்சிப்பாதையின் சிறப்பாகும். அதன் பயனுகப் பின்தங்கிய பொருளாதாரம் என்ற நிலை போய் முன்னேற்றத்தின் முன்னணியில் விரைந்து சேர முடிந்தது. கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் தனக்கு யாரும் நிகரில்லை என்பதை ஏற்கெனவே சோவியத் யூனியன் நிலைநாட்டியுள்ளது. இருக்கை வசதி, கலாசார வசதிகளைப் பெருக்கும் வேகத்திலும் வெற்றிவாகை சூடியுள்ளது. பலதரப்பட்ட தொழிற்துறைகளிலும் இணையற்ற முன்னேற்றம் கண்டுள்ளது. சான்ருக இரும்பு, குரோமியம், மாங்கனீஸ், நிலக்கரி போன்ற கனிப் பொருள்களில் சோவியத் உற்பத்தி வேறெந்த நாட்டைக்காட்டிலும் அதிகமாக உள்ளது. சிமெண்ட், பொட்டாசிய உப்புகள், பாஸ்பேட்டுகள், பருத்தி, கம்பளி, சணல், மின்சாரத்தால் இயங்கும் இரயில் எஞ்சின்கள், எஃகு, எண்ணெய், இரசாயன உரம் ஆகியவற்றின் உற்பத்தி உலகில் வேறெந்த நாட்டையும்விட அதிகமாக இருக்கிறது.

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை முதலீட்டுப் பொருள்களின் வளர்ச்சி வேகம் நுகர்வுப் பொருள்களைக்காட்டிலும் அதிகமாக இருந்துவருகிறது. ஆனல், அவ் வளர்ச்சி வேகத்திலுள்ள வேறுபாடு ஏழாண்டுத் திட்டத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. இன்றுள்ள நிலையில் அவ்விரு வகையான பொருள்களின் உற்பத்தியில் அதிக வித்தியாசம் இல்லை. அதன் பயனுக, சமீப காலத்தில் நுகர்வுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கெடுத்து வருகிறது. அன்ருட வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் வளமாகக் கிடைப்பதுடன், வசதிகளும்-சல்லாபங்களும் பேரளவில் பெருகி வருகின்றன. குறிப்பாக நிலையுறு நுகர்வுப் பொருள்களின் எண்ணிக்கை, விதம், மாதிரி, தரம் ஆகியவை அதிவேகமாக அதிகரித்து வருகின்றன. இவற்றுடன் கல்வி, மருத்துவம், சுகாதாரம், ஓய்வு, கலாசார வளம் ஆகிய பொதுநலங்களையும் கணக்கில் எடுத்தால், சோவியத் மக்களது வாழ்க்கைத்தரம் எவ்வளவு வேகமாக முன்னேறி வருகிறது என்பது தெரியவரும். மேலும், உழைக்கக் கூடிய உடல்நலம் படைத்த ஒவ்வொருவருக்கும் வேலை; வயோதிகர் அங்கஹீனர் ஆகியோருக்குப் பாதுகாப்பு; குறைந்தபட்ச ஏற்றத் தாழ்வுகள் போன்ற காரணங்களால் சோவியத் சமுதாயத்தில் எதிர்காலத்தைப்பற்றிய பயம், அநிச்சயமான சூழ்நிலை, விறைப்பு, மோதல், கெடுபிடியான நிலை ஆகிய தீமைகள் குறைவு

இருப்பினும், அவர்களது வாழ்க்கைத்தரம் அமெரிக்காவையோ, மேற்கு ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளையோவிட உயர்ந்தது என்று சொல்வதற்கில்லை.

சோவியத் விஞ்ஞானத்தின் சாதனைகளை இங்கு விவரிக்க அவசியமில்லை. அணுசக்தியின் இரகசியங்களை நன்குணர்ந்தவர்கள் சோவியத் விஞ்ஞானிகள். விண்ணுலக இரகசியங்களை மனிதன் நேரடியாகச் சென்று காண வழிவகுத்தவர்கள் சோவியத் அறிஞர்கள். மாபெரும் இயந்திரங்களையும், கருவிகளையும், சக்திகளையும் மனிதவர்க்கத்தின் வாழ்க்கையை வளப்படுத்தும் பணியில் புகுத்தியவர்கள் சோவியத் தொழிலறிஞர். அதன் பயனாக, சோவியத் உழைப்பாளரின் ஆக்கச் சக்தி பன்மடங்காகப் பெருகி வருகிறது. உழைப்பிலுள்ள களைப்பு, சோர்வு ஆகியவை படிப்படியாகக் குறைந்து வருகிறது. எனினும், பொருளாதாரம் முழுவதையும் எடுத்துக்கொண்டால் சோவியத் உழைப்பாளரின் ஆக்கச் சக்தி அமெரிக்கா உழைப்பாளரைக்காட்டிலும் குறைவாகவே உள்ளது. குறிப்பாகக் கூட்டுப்பண்ணைகளில் வேலை செய்வோரின் ஆக்கச்சக்தி அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள விவசாயிகளைவிடக் குறைவாகவே இருந்து வருகிறது. குலாக்குகளின் தில்லுமுல்லுகள், பாதகமான வெப்ப தட்பநிலை, ஹிட்லர் கட்டவிழ்த்துவிட்ட அழிவுச்சக்திகள், சோவியத் இளைஞர்கள் தொழிலறிவிலும் நகர வாழ்க்கையிலும் கொண்ட நாட்டம் ஆகியவை சோவியத் விவசாயத்தின் தயக்கத்துக்கு ஓரளவு காரணமாக இருந்து வந்தன என்பது உண்மை. ஆயின், மாபெரும் விவசாய இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் துணைகொண்டு மில்லியன் கணக்கான ஏக்கர் கன்னி நிலங்களைக் கலப்பையின்கீழ்க் கொண்டுவந்தனர். ஏழாவது திட்டத்துக்குப்பின் இரசாயன உரம், சிறப்பான சாகுபடி முறை ஆகிய முன்னேற்றங்களும் புகுத்தப்பட்டன. உலகப் பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனத் திட்டங்களும் சோவியத் யூனியனில் உண்டு. சமீப காலத்தில் மின்சாரத்தின் பயனும் நாட்டுப்புறங்களில் பெருகிவருகிறது. இருப்பினும், இன்றுவரை சோவியத் விவசாயம் வானம் பார்த்த விவசாயமாகவே இருந்து வருகிறது. மாரி பொய்த்த ஆண்டுகளில் விவசாய உற்பத்தி 'குப்'பென்று குறைகிறது. அதன் காரணமாக அப்போதைக்கப்போது அமெரிக்கா, கானடா போன்ற முதலாளித்துவ நாடுகளிடமிருந்து உணவு தானியங்களைப் பேரளவில் இறக்குமதி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே, விவசாயப் பிரச்சினை சமதர்ம அடிப்படையில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் ஈடுபட்டு வரும் சோவியத் யூனியன் சாதிக்கத் தவறியவற்றுள் முக்கியமான தொன்றாகும் என்பது தெளிவு.

'சக்திக்கேற்ற வேலே; வேலைக்கேற்ற கூலி' என்ற சமதர்மச் சட்டத்திலிருந்து, 'சக்திக்கேற்ற வேலே; தேவைக்கேற்ற கூலி' என்ற பொது உடைமைச் சட்டத்தைச் சமீபகாலச் சோவியத் திட்டங்கள் சிரமேற் கொண்டுள்ளன. எனவே, ஊதியத்தில் நாட்டுப்புறத்துக்கும் நகருக்குமுள்ள வேறுபாடு; பின்தங்கிய துறைகளுக்கும் முன்னேற்றகரமான துறைகளுக்குமுள்ள ஏற்றத் தாழ்வு; மூளை உழைப்புக்கும் உடலுழைப்புக்குமிடையே உள்ள இடைவெளி ஆகியவற்றைக் குறைக்கவேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்துச் சமீபகாலத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதே சமயத்தில் திட்டங்களைத் திறம்பட அமல் நடத்தும்பொருட்டும், தொழில் நிறுவனங்களின் செயல்வன்மை, சிக்கனம், இலாப வேட்கை ஆகியவற்றைத் தூண்டும்பொருட்டும் ஊக்கங்கள் பல அளிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் ஆத்மார்த்தமான தூண்டுதல் களையும், சமதர்மப் போட்டியையுமே சோவியத் உற்பத்தி பெரிதும் சார்ந்திருந்தது. சமதர்மப் போட்டி நாளடைவில் பலம்பெற்று மாபெரும் இயக்கமாக மலர்ந்தது. அதற்கு உரமிடுவதுபோல் அமைந்தது பொருளாதார ஊக்கங்கள். ஆத்மார்த்த முறைகளை அதிகமாகக் கையாண்ட ஸ்டாலின்கூடத் திட்டங்கள் வெற்றி பெறு வதற்குக் கூலியில் ஏற்றத்தாழ்வுகள் இன்றியமையாதது என்று நம்பினர். 'வேலைக்கேற்ற கூலி' என்ற கொள்கை நிலவிய காலமது. ஆனால், 'தேவைக்கேற்ற கூலி' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க முயலும் இந்தக் காலத்தில் பொருளாதார ஊக்கங் களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவது கவனத்துக்குரியது. பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளும் நிதிப் பிரச்சினைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. அதன் விளைவாகக் குறைந்தபட்ச வருவாய் போதுமானதாக இருப்பினும், அதற்கும் உயர்ந்தபட்ச வருவாய்க்குமிடையே கணிசமான வேறுபாடு இருந்துவருகிறது. இத்தகையப் போக்குச் சோவியத் சமுதாயத்தில் ஒருவிதமான முரண்பாட்டை உருவாக்கி வருகிறது. ஒருபுறம் கூலியிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகின்றன. மறுபுறம் பொருளாதார ஊக்கங்களின்மூலம் ஊதியத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருவதாக எண்ண இடமுண்டு. எனவே, ஒரு 'புது வர்க்கமே' உருவாகி வளருவதாகப் பலர் பழிக்க ஏதுவாகிறது. ஆனல், தனி உடைமையின் காரணமாகத் தோன்றுவதல்ல இவ் வர்க்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமதர்ம சகோதரத்துவத்திலும் பல சிக்கல்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. இச் சமதர்மப் பொருளாதாரக் கூட்டுறவின் பலம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியு மாக வளர்ந்துவருவது கண்கூடு. ஆயின், அக் கூட்டுறவில் சீனு

அங்கம் வகிக்கவில்லை. அதன் காரணமாகக் கூட்டுறவின் அடிப் படை பலவீனப்பட்டுள்ளது. இரண்டாவது சமதர்மக் கூட்டுறவி லுள்ள பல்வேறு உறுப்புகளின் வளர்ச்சி ஒரே சீராகஇல்லை. செக்கோஸ்லோவேக்கியா, கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகள் தொழில்வளமிக்கவை. தொழிற்றுறையின் சில பகுதிகளில் இந் நாடுகள் சோவியத் யூனியனைக்காட்டிலும் மேம்பட்ட நிலையில் உள்ளன. அதே சமயத்தில் ஹங்கேரி, புல்காரியா போன்ற நாடுகள் அவ்வளவு தொழில்வளம் பொருந்தியனவல்ல. மேலும், சோவியத் யூனியனிடம் தொழில் வளர்ச்சிக்கான சகலவிதமான மூலப் பொருள்களும் பேரளவில் கிடைக்கின்றன. ஏனைய நாடுகளின் இயற்கைவளம் அவ்வளவு சிறப்பாக இல்லை. இவ்வாறு, இயற்கை வளத்திலும் தொழில் வளர்ச்சியிலும் வேறுபட்ட பல சமதர்ம நாடுகள் கூட்டுறவாக இயங்க முயலுகின்றன. கணிச மான ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள இப்பொருளாதாரக் கூட்டுறவு சகோதர நாடுகளிடையே சமத்து வத்தை நிலைநாட்ட உதவுமா? அல்லது ஏற்கெனவே உள்ள ஏற்றத் தாழ்வுகள் மேலும் அதிகரிக்குமா? என்பது ஒருவகைக் கேள்வி. மூன்றாவது, சமதர்ம நாடுகள் தங்களிடையே ஒரு வேலைப் பகுப்பை வகுக்க முயலுகின்றன. நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இப்பகுப்பை அமலாக்க விரும்புகின்றன. அதன் பயனாகத் தொழிலிலே மேம்பட்டுள்ள நாடுகள் வேகமாக வளரவும், பின் தங்கிய நாடுகள் மேலும் தயக்கமுறவும் ஏதுவாகுமா? இத்தகைய ஏற்றத்தாழ்வுகள், ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் பிடிப்பி லிருந்த காலனிகளுக்கு மிடையே இருந்துவந்த உறவைப் போலல்லாமல் சமத்துவ அடிப்படையில் அமைப்பதெப்படி என்பது மற்றொரு கேள்வி. மேலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் பல சோவியத் யூனியனிடமிருந்து கிடைக்க வேண்டியதிருக்கிறது. ஆனால், அப் பொருள்களில் சிலவற்றை உற்பத்தி செய்வதிலுள்ள ஆக்கச் செலவு அப் பொருள் களுக்கு உலகச் சந்தையிலுள்ள விலையைக்காட்டிலும் அதிகமாக இருந்து வருகிறது. உலக மார்க்கெட்டிலுள்ள விலையை வசூலிப்பது, 'நாம் சுரண்டப்படுகிறோம்' என்ற எண்ணத்தைச் சகோதரத்துவ நாடுகளின் மனத்திலே எழுப்பலாம். குறைந்த விலைக்குக் கொடுத் தால் சோவியத் யூனியன் நஷ்டப்பட ஏதுவாகும். இத்தகைய குறை பாடுகளைப் போக்கிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு எப்போது சோவியத் யூனியனும் அதன் சகாக்களும் பொது உடைமைக் குறிக்கோளை அடையும் என்று உலகெங்குமுள்ள பாட்டாளி மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பது இயல்பு.

# கலைச்சொற்கள்

## A

Administration — நிருவாகம்
Advalorem duty — பெறுமான விகித வரி
Agricultural proletariat — நிலமற்ற விவசாயி
Anti-thesis — எதிர்க் கருத்து
Artel — கூட்டுறவுக் கைத்தொழில்

## B

Backward economy — பின்தங்கிய பொருளாதாரம்
Balance — சமநிலை
Black market — கள்ளச் சந்தை

## C

Capital — மூலதனம்
Capital accumulation — முதல் திரட்சி
Capital formation — முதலாக்கம்
Capital goods — முதற் கருவிப்பொருள்
Cash plan — பணத் திட்டம்
Class struggle — வர்க்கப்(வகுப்புப்) போராட்டம்
Classical Economists — தொன்மைப் பொருளாதாரத் துறையினர்
Coefficients of Proportionality — தராதரக் குணகங்கள்
Collective farm — கூட்டுப் பண்ணை
Commissariat of Finance — நிதி அமைச்சவை
Commissariat of Food — உணவு அமைச்சவை
Commissariat for Foreign Trade — அயல்நாட்டு வாணிப அமைச்சவை
Commissariat of Internal Trade — உள்நாட்டு வாணிப அமைச்சவை
Commissariat of Trade — வாணிப அமைச்சவை
Communist Ideology — கம்யூனிஸ தத்துவம்
Commutation — பரிவர்த்தனை
Control figures — கட்டுப்படுத்தும் எண்கள்
Conventional syndicate — சம்பிரதாய சிண்டிகேட்

Consumer goods — நுகர்வுப் பொருள்
Co-operative society — கூட்டுறவுச் சங்கம்
Costs of production — உற்பத்திச் செலவுகள்
Council of Labour and Defence (STO) — தொழிலாளர் பாதுகாப்புக் குழு
Counter-thesis — எதிர்க்கருத்து
Credit plan — கடன் திட்டம்
Customs duty — சுங்கவரி

## D

Deficit — பற்றுக்குறை
Depreciation — தேய்வு
Dialectical Materialism — முரண்நிலைத் தருக்கச் சடவாதம்
Dialectical method — தருக்க முறை
Dictatorship of the industries — தொழில்களின் சர்வாதிகாரம்
Dictatorship of the proletariat — பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்
Differential rent — பேதவாரம்
Director — இயக்குநர், டைரக்டர்
Directorate — நிருவாகக் குழு
Distribution — பங்கீடு (விநியோகம்)
Dynamic coefficients — இயக்கநிலைக் குணகங்கள்

## E

Economic depression — பொருளாதார மந்தம்
Economic reconstruction — பொருளாதாரச் சீரமைப்பு
Economic system — பொருளாதார முறை
Economic theory — பொருளாதாரக் கோட்பாடு
Edict of Emancipation — விடுதலைப் பிரகடனம்
Equations of Equilibrium — சமநிலைச் சமன்பாடு
Estate factory — பண்ணைத் தொழிற்சாலை
Expenditures — செலவினங்கள்
Expert estimates — தோராய மதிப்பீடு
Exploitation — சுரண்டல்

## F

Factors of production — உற்பத்திக் காரணிகள்
Factory — ஆலை
Feudalism — படைமான்ய முறை

Finance Plan — நிதித் திட்டம்
Firm — நிறுவனம்
Fixed capital — நிலைமுதல்
Foreign currency — அயல்நாட்டுச் செலாவணி
Free trade — தங்குதடையற்ற வாணிபமுறை

**G**

Galloping inflation — தாவிப்பாயும் பணவீக்கம்
Glavki — கிளாவ்கி
Gosplan — திட்டக் கமிஷன்
Grain factory — தானியத் தொழிற்சாலை
Grain trusts — தானிய டிரஸ்டு
Gubsovnarhozy — மாகாணப்பொருளாதாரக்குழு

**H**

Heavy industry — கனரகத் தொழில்
Historical Materialism — வரலாற்றில் சடவாத விளக்கம்

**I**

Idealism — கருத்து முதல்வாதம்
Imperialism — ஏகாதிபத்தியம்
Imperial Economic Society — அரசாங்கப் பொருளாதாரக் குழு
Industry — தொழில்
Industrial combine — தொழில் தொகுப்பு
Industrial development — தொழில் வளர்ச்சி
Industrial reconstruction — தொழில் சீரமைப்பு
Industrial technique — தொழில்நுட்ப வினைமுறை
Inflation — பணவீக்கம்
In real terms — நிலையான மதிப்பின்படி
Input–output relationship — உட்பாட்டு வெளிப்பாட்டு உறவு
Internal currency — உள்நாட்டுச் செலாவணி
Investment — முதலீடு

**J**

Joint Stock Company — கூட்டுப் பங்குக் கம்பெனி

**K**

Kolkhoz market — கூட்டுப் பண்ணைச் சந்தை
Kulak — பணக்கார விவசாயி
Kustar industry — குடிசைக் கைத்தொழில்

## L

| | | |
|---|---|---|
| Labour | — | உழைப்பு |
| Labour power | — | உழைப்பின் சக்தி |
| Landless peasants | — | நிலமற்ற விவசாயிகள் |
| Landlordism | — | நிலப்பிரபுத்துவம் |
| Laws of Motion | — | இயக்க விதிகள் |
| Location | — | இட நிர்ணயம் |
| Logic | — | அளவை இயல் |

## M

| | | |
|---|---|---|
| Machine Tractor Station (M T S) | — | இயந்திரக் கலப்பை நிலையம் |
| Marketable surplus | — | விற்பனைக்குரிய உபரிப் பொருள் |
| Marxian Economics | — | மார்க்ஸீயப் பொருளாதாரம் |
| Materialism | — | சடவாதம் |
| Materialist Interpretation of History | — | வரலாற்றில் சடவாத விளக்கம் |
| Maximum or Optimal Plan | — | அதிகப்பட்சத் திட்டம் |
| Maximum limit price | — | உயர்ந்தபட்ச விலை |
| Method of balances | — | சமநிலை முறை |
| Middle peasant | — | நடுத்தர விவசாயி |
| Migration | — | இடப்பெயர்ச்சி |
| Mining industry | — | சுரங்கத் தொழில் |
| Minimal or Initial Plan | — | குறைந்தபட்சத் திட்டம் |
| Minimal limit price | — | குறைந்தபட்ச விலை |
| Mixed economy | — | கலப்புப் பொருளாதாரம் |
| Money wage | — | பணக் கூலி |
| Monopoly | — | ஏக போக (சர்வாதீன) உரிமை |

## N

| | | |
|---|---|---|
| Narcomposed | — | உணவு அமைச்சவை |
| Nationalisation | — | நாட்டுடைமையாக்கல் |
| National income | — | நாட்டு வருவாய் |
| Nepmen | — | தனி வணிகர் |
| Net investment | — | நிகர முதலீடு |
| New Economic Policy | — | புதுப் பொருளாதாரக் கொள்கை |

## O

| | | |
|---|---|---|
| Organisation | — | அமைப்பு |

## P

| | | |
|---|---|---|
| Peasant revolt | — | விவசாயிகளின் புரட்சி |
| Per capita income | — | தனிநபர் வருவாய் |
| Period of recovery | — | முதலைத் திருப்பிப்பெறும் காலம் |
| Price–wage | — | வேலைக்கேற்ற கூலி |
| Planning Commission | — | திட்டக் கமிஷன் |
| Planned costs | — | திட்டமிட்ட உற்பத்திச்செலவுகள் |
| Planned credit | — | திட்டமிட்ட கடன் வசதி |
| Planning technique | — | திட்டங்களின் வினைநுட்பமுறை |
| Poll–tax | — | தலைவரி |
| Possession factory | — | அரசாங்கத் தொழிற்சாலை |
| Presidium | — | தலைமைக் குழு |
| Price-ratio | — | விலைவிகிதம் |
| Primitive accumulation | — | ஆதித் திரட்சி |
| Primitive socialist accumulation | — | ஆதி சமதர்மத் திரட்சி |
| Private Bank | — | தனிப்பட்ட பாங்கு |
| Private ownership | — | தனி உடைமை |
| Production | — | உற்பத்தி (ஆக்கம்) |
| Productivity | — | ஆக்கச் சக்தி |
| Productive capacity | — | ஆக்க ஆற்றல் |
| Production Plan | — | உற்பத்தித் திட்டம் |
| Progressive agricultural tax | — | விவசாய வளர்வீத வரி |
| Protective tariff | — | காப்பு வரி |

## R

| | | |
|---|---|---|
| Rate of growth | — | வளர்ச்சி வேகம் |
| Rate of profit | — | இலாப விகிதம் |
| Rationalisation | — | தொழில் சீரமைப்பு |
| Real consumption | — | மெய் நுகர்வு (மெய்த் துய்ப்பு) |
| Real wage | — | மெய்க் கூலி |
| Reciprocal tariff reduction | — | பரஸ்பர சுங்கவரிக் குறைப்பு |
| Redemption of annuities | — | கடன் மீட்சி ஆண்டுத் தொகை |
| Retail price | — | சில்லறை விலை |
| Revenues | — | வரவினங்கள் |
| Rouble | — | ரூபிள் |

## S

Scissors crisis — கத்தரிப் போக்கு
Serfdom — பண்ணையடிமை முறை
Shock brigade — அதிர்ச்சிப் படை
Shock industries — அதிர்ச்சித் தொழில்
Simple and Expanded Reproduction — சாதாரண உற்பத்தியும் விரிவான உற்பத்தியும்
Small Peasant — சிறுநில விவசாயி
Social Insurance System — சமூக இன்சூரன்ஸ் முறை
Socialism — சமதர்ம வாதம்
Socialism, Utopian and Scientific — கனவுலகச் சமதர்மமும் சாஸ்த்திரீயச் சமதர்மமும்
Socialist competition — சமதர்மப் போட்டி
Socialist society — சமதர்மச் சமுதாயம்
Soviet for Foreign Trade — வெளிநாட்டு வாணிபத்துக்கான சோவியத்து
Stakhanovite movement — ஸ்டாக்கனேவ் இயக்கம்
Standard — அளவை
State Bank — அரசாங்க பாங்கு
State Capitalism — அரசாங்க முதலாளித்துவம்
State farm — அரசாங்கப் பண்ணை
Static Coefficients — தேக்கநிலைக் குணகங்கள்
Subsidy — உதவிக் கொடை
Subsistence income — உயிர் வாழ்வதற்குஇன்றியமையாத குறைந்தபட்ச வருவாய்
Supreme Economic Council or Vesenkha — தலைமைப் பொருளாதாரக் குழு
Syndicate — சிண்டிகேட்
Synthesis — இணைக் கருத்து
Synthetic balance of the economy — ஒன்றுசேர்க்கப்பட்ட பொருளாதாரச் சமநிலை

## T

Take-off — தானாக இயங்கி வளரும் தன்மை
Tax burden — வரிப் பளு
Terms of trade — வாணிப மாற்று விகிதம்
Thesis — கருத்து
Three-field-system — மூன்று வயல் சாகுபடிமுறை
Total wages bill — மொத்தக் கூலிப் பட்டியல்

Trade–cycle — வாணிபச் சுழல்
Trade syndicate — வாணிப சிண்டிகேட்
Trade union — தொழிற் சங்கம்
Trust — டிரஸ்டு, தொழில் இணைப்பு
Turnover-tax — விற்பனை வரி

**V**

Vertical relationship — செங்குத்துத் தொடர்பு
Vesenkha (Supreme Economic Council) — தலைமைப் பொருளாதாரக் குழு

**W**

War Communism — போர்க்காலப் பொது உடைமை
Work load — வேலைப் பளு
Working Capital — நடை முதல்

# பொருட்குறிப்பகராதி


**அ**

அதிகப்பட்சத் திட்டம், 120-127
அதிர்ச்சிப்படை, 139
அயல்நாட்டு மூலதனம், 38, 39 92, 93
அயல்நாட்டு வாணிபம், 40, 100, 102
அரசாங்கப்பண்ணைகள், 129, 130
அரசாங்கப் பொருளாதாரக் குழு, 25
அலெக்ஸாண்டர் பாய்க்காவ், 7

**ஆ**

ஆக்கச்சக்தி, 4, 154
ஆசின்ஸ்கி, 114
ஆறு குறிப்புகள் கொண்ட பேச்சு, 218
ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம், 166, 167
ஆபிரகாம் பெர்க்சன், 220
ஆலைக் கொள்கை, 58, 59
ஆலைப் பிரச்சினைகள், 69, 70
ஆலைப் பொருள் உற்பத்தி, 91, 148-156
ஆலை நிருவாகம், 59, 70, 71, 125-127

**இ**

இடதுசாரிக் கருத்துகள், 114-117
இடதுசாரி சமூகப் புரட்சிக் கட்சியினர், 53
இடைக்கால அரசாங்கம், 53-55
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், 133-143
இருப்புப் பாதைகள், 35, 36. 137-139, 159-160, 194

**உ**

உற்பத்தித் திட்டம், 200-207
உற்பத்தித் திட்ட அமைப்பு முறைகள், 200-208
உற்பத்திச் செலவுகள், 92
உணவு அமைச்சவை, 64
உள்நாட்டுப் போர், 63
உள்நாட்டு வாணிபம், 130
உள்நாட்டு வாணிப அமைச்சவை, 99

**எ**

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம், 186-190
எதிர்க் கருத்து, 118

**ஏ**

ஏகாதிபத்தியம், 52
ஏழாண்டுத் திட்டம், 178-184
ஏழைக் கிராம வாசிகளின் குழு, 68

**ஐ**

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம், 166

**ஒ**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம், 186-190

**க**

கடன் திட்டம், 212, 213
கட்டுப்படுத்தும் எண்கள், 119
கனவுலகச் சமதர்மமும் சாஸ்த்ரீயச் சமதர்மமும், 46

கத்தரிப்போக்கு, 95-97
கம்யூனிஸ்ட் அறிக்கை, 46
கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி, 126
கலாசாரம், 11
கனிப்பொருள்கள், 9-10
கவுண்ட் சொஜியஸ்விட்டி, 37
காமனெவ், 117
காப்பு வரிகள், 37
கார்ல் மார்க்ஸ், 5, 44, 248
கால்ப்ர்ட், 40
காலின் கிளார்க், 7
கிளாவ்கி, 59, 70
கிரிமியப் போர், 19
குலாக்குகள், 69, 79, 83, 84, 127, 128
குறைந்தபட்சத் திட்டம், 120
கூட்டுப்பண்ணைச் சந்தை, 131
கூட்டுப்பண்ணை இயக்கம், 127-129, 131, 139
கூட்டுறவுச் சங்கம், 80
கூட்டுறவு வாணிபம், 94, 95
கெரன்ஸ்கி, 53

ச

சமதர்ம ஜனநாயகக்கட்சி, 51
சமூக இன்சூரன்ஸ் முறை, 222-224
சர் ராபர்ட் ஓவன், 45
சிண்டிக்கேட்டுகள், 89, 95, 98
சினேவியவ், 117
சைபீரிய ரயில் பாதை, 35
சோவியத்துகள், 54
சோவியத் பொருளாதாரத்தின் பலவீனம், 146, 147

ட

டார்கி, 94, 95
டிரஸ்டுகள், 86, 87, 90, 98
டிராட்ஸ்கி, 50, 55, 61, 72, 73, 112, 115, 117
டூரிங்குக்கு எதிர்ப்பு, 46
டோம்ஸ்கி, 218

த

தலைமைக் குழு, 70
தலைமைப் பொருளாதாரக் குழு, 70, 71, 89, 90, 120
தனிநபர் வருவாய், 38, 42, 142, 143
தனிவணிகன், 93, 94,99, 100
தானிய டிரஸ்டுகள், 129
தானியத் தொழிற்சாலைகள், 84, 129
திட்ட அமைப்பில் மாற்றங்கள், 195-199
திட்டக் கமிஷன், 119, 200-203
திட்டக் கமிஷனின் சீரமைப்பு, 207, 208
தேசிய மயமாக்குதல், 69
தொழில் வளர்ச்சி, 136, 137, 152-155, 169-172
தொழில்களின் இடப்பெயர்ச்சி, 137-139
தொழிலாளர் சட்டங்களின் தொகுப்பு, 216, 217
தொழில்களின் சர்வாதிகாரம், 116
தொழிலாளர் குழு, 58
தொழிலாளர் பாதுகாப்புக் குழு, 72,88-90
தொழிலாளர் விடுதலைக் கூட்டம், 51
தொழிலாளர் விடுதலைப் போராட்டக் குழு, 51
தொழிற்சங்க அமைப்பு, 219
தொழிற்சங்க உரிமைகளுக்கு ஏற்பட்ட பங்கம், 219
தொழில் மயமாக்குவதேன்? 112-119
தொழில் நிருவாகம், 85, 86, 139
தொழில் சீரமைப்பு, 87
தொழிற் கொள்கை, 84-85
தொழில் தொகுப்பு, 124, 125

ந

நடைமுதல், 87
நவம்பர் புரட்சி, 3, 55
நாட்டு வருவாய், 4, 42, 122, 175

நாட்டுடைமைச் சட்டம், 64
நார்டோனிக்குகள், 52
நால்வகைத் தொழில் முறைகள், 30-32
நாற்பத்து அறுவரின் பிரகடனம், 114
நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், 165
நிரந்தரமான புரட்சி, 73
நிலப் பங்கீடு, 57-58
நிலவளம், 8, 9
நிதி அமைச்சவை, 73
நிதித்திட்டம், 208-214
நிதிப் பிரச்சினை, 103-111
நிலைமுதல், 87,
நுகர்வுப் பொருள்கள், 4, 121, 124
நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி, 140, 141, 168, 183
நுகர்வுப் பொருள்களின் முக்கியத்துவம், 186, 187
நுகர்வோருக்குள்ள உரிமைகள், 212
நௌல்ஸ், 42

ப

பணத் திட்டம், 213, 214
பணவீக்கம், 67, 106, 107, 160-163
பதினன்காம் காங்கிரஸ், 117, 118
பதின்மூன்றும் காங்கிரஸ், 117
பங்கீட்டு முறை, 131, 132
பண்ணையடிமை முறை, 14-19
பதினைந்தாம் காங்கிரஸ், 118
பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம், 190-199
பாஸிஸம், 141
பாங்குகள், 61, 104, 105, 107, 110, 212, 213
பிரியோ பிராஷன்ஸ்கி, 115, 116
பிரெஸ்ட் லிட்டாவ்ஸ்க் உடன்பாடு, 63
பிரெடரிக் லிஸ்ட், 41
பிரெடரிக் எங்கல்ஸ், 44
பிரெஞ்சுப் புரட்சி, 19, 20
புரட்சிக்குப்பின் முதல் எட்டு மாதங்கள், 56-64
புகாரின், 80, 114, 177
புதுப் பொருளாதாரக் கொள்கை ஏன்? 73, 74, 110
புரோகோ போவிச், 42
பேதவாரம், 212
பேராசிரியர் லியோனேலெவி, 42
பேராசிரியர் ஸ்டுருமுலின், 119, 205
பொருளாதாரக் குழு, 54
பொருள்களைப் பயன்படுத்தும் தலைமைக் கமிஷன், 71
போக்குவரத்தும் தொழில்களின் இடநிர்ணயமும், 137, 138
போரியர், 45
போர்க்காலப் பொருளாதாரம், 64-73
போல்ஷவிக்குகள், 52

ம

மக்கள், 10, 11, 91, 124, 142
மகாபீட்டர், 29
மகாணப் பொருளாதாரக் குழு, 70
மார்க்களீயக் கோட்பாடுகள், 5, 44-50
மாரீஸ்டாப், 5, 7, 98, 212
மாலடோவ், 129
மாஸினி, 19
முதல் உலகப்போரும் பொருளாதாரச் சீர்குலைவும், 52, 53
முதல் திரட்சி, 115, 116
முதலீடு, 120, 121, 180, 194
மூலதனம், 46
மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம், 143-146
மூன்று வயல் சாகுபடிமுறை, 26
மெர்க்கண்டலிஸம், 29, 30, 40
மென்ஷவிக்குகள், 52
மேவர், 16
மைக்கல் பாகுனின், 50

ர

ரஷ்யாவில் கம்யூனிஸக் கருத்துகள் எப்படிப் பரவின? 50-52

ராஸ்டாவ், 42
ரைகாவ், 80, 117

ல

லட்விக் பாயர்பாக், 46
லெனினும் அவரது கருத்துகளும், 51, 52

வ

வலதுசாரிக் கருத்துகள், 117
வாணிபம், 60, 130, 236, 237
வாணிபக் கொள்கை 93
வாணிபச் சீரமைப்பு, 101
வாணிப பரம்பரை, 13, 14
வாணிப மாற்றுவிகிதம்,83,95-98
விவசாய வளர்ச்சி, 139, 140, 156-159, 172-174, 182, 183, 188, 189
விவசாய வளர்வீத வரி, 80
விவசாயப் பிரச்சினை, 77-80, 100, 182
விவசாயத்தின் நிலை, 25-28, 156-159
விவசாய முறை, 80, 81
விவசாயத் தொழிலாளர், 25, 79
விவசாயிகளின் இன்னல்கள், 67-69
விவசாயிகளின் புரட்சி, 27, 53-55
விவசாயி — தொழிலாளி கூட்டணி, 53, 54
விற்பனைக்குரிய உபரிப் பொருள், 97-100
விடுதலை இயக்கம், 19-22
விடுதலைப் பிரகடனம், 20-25
விடுதலை வீரன், 20
விலைவாசிகள், 54, 106
விலை நிர்ணயமும் விற்பனை வரியும், 209-212
வெளிநாட்டு வாணிபம், 40-42, 100, 102

ஸ

ஸ்டாலின், 55, 128, 147, 153
ஸ்டாக்கனேவ் இயக்கம், 221
ஸ்டேலிப்பின் சீர்திருத்தங்கள், 28, 29

ஷ

ஷவெர்னிக், 219

ஜ

ஜியார்ஜ் பிளெக்கனேவ், 50
ஜெர்மன் ஆக்கிரமிப்பு, 64, 150-152

ஹ

ஹாரி ஸ்வாட்ஸ், 7
ஹான்ஸ் வணிகக் குழு, 30
ஹெகல், 44

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

**சென்னை-600 031.**

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

**1978 ஏப்ரல் முடிய 830 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன**

★

**மேலும் விரைவில் வெளிவருபவை**

| | | | |
|---|---|---|---|
| மருத்துவவியல் | — | 2 | நூல்கள் |
| இயற்பியல் | — | 8 | ,, |
| வேதியியல் | — | 3 | ,, |
| விலங்கியல் | — | 6 | ,, |
| கணிதவியல் | — | 6 | ,, |
| வணிகவியல் | — | 9 | ,, |
| பொருளியல் | — | 8 | ,, |
| புவியியல் | — | 5 | ,, |
| வரலாற்றியல் | — | 20 | ,, |
| உளவியல் | — | 2 | ,, |
| புள்ளியியல் | — | 5 | ,, |
| கல்வியியல் | — | 1 | ,, |
| அரசியல் | — | 4 | ,, |
| தாவரவியல் | — | 5 | ,, |
| சட்டவியல் | — | 4 | ,, |

கிடைக்குமிடம் :

**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு**

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,

சென்னை-600 006.

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்